உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

31 MAR 19
MADRAS

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை

---

**1920ஆம்**

ஆறாவது மலர்

---

7 1920-22.

இது

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய

சுவாமிகளுக்குச் சமர்ப்பிக்கப்பெற்றது.

---

பத்திரிகாசிரியர் :

இருக்கம்-ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department.)

நெ. 43, பாளையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.

---

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

விலை ரூபா 1

(தபாற் செலவு உட்பட.)

## அட்டவணை.

162419

உள்ளுறை. பக்கம்.


1. அரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம் 9, 36, 61, 93, 116, 137, 180
2. அர்ச்சாதீபம் 6, 34, 64, 89, 119, 132, 152, 174
3. அறம் 97
4. அன்பு 149
5. ஆலயங்களின் அ[illegible] 157
6. சந்தியா வந்தனம் 57
7. சமயபேதம் 101
8. சரியையாதி நற்பாதங்கள் 122
9. சிவஞானபோதம் 1, [illegible], 49, 82, 105, 130, 145
10. சிவபரத்வம் 24
11. சிவபெருமான் கேழற்கோடும், விடமும், மடங்கலீருரியும் புனைந்தது 13, 14, 15
12. சிவயோக விபூதி 53
13. சிவாசாரியர்கள் 114
14. சிவோபாசனையின் கருத்து 169
15. சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் 67, 69
16. சைவ சித்தாந்த சங்கிரகம் 109
17. சைவ சிராத்த ரகசியம் 28
18. சைவப் பகைவர் சைவர்களே 161
19. திருஞானசம்பந்தர் அஷ்டோத்தர விம்சதி நாமாவளி 100
20. ஷை. பிருதாவளி 99
21. துதி — சிவனடியார்கள் 169
22. „ சுந்தரமூர்த்தி நாயனார் 81
23. „ திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் 25
24. „ திருநந்தி தேவர் 145
25. „ திருநாவுக்கரசு நாயனார் 49
26. „ மாணிக்கவாசக சுவாமிகள் 105
27. „ மெய்கண்டதேவ நாயனார் 129
28. „ விநாயகர் 1
29. தேவார வைப்புத்தல விளக்கம் 165, 191
30. நாட்டுக் கோட்டையாரும் சைவபரிபாலனமும் 127, 143
31. பசு பாசங்களின் அநாதித்வம் 87
32. பதி பசு பாசம் 21
33. பத்திரிகையைப்பற்றிய விஷயங்கள் 103, 141, 164
34. பிறவாநாள் 23
35. புராண சிரவண மகிமை 16
36. மகோதய புண்ணிய காலம் 172
37. வியாதமுனிவர் கையும் நாவும் எழாது நின்றது. 38, 52


உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

மலர்-6 | சித்தார்த்தி௵-தைமீ—1920௵-ஜனவரிமீ | இதழ்-1

## விநாயகர் துதி

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெயச்
சுத்தியாகிய சொற்பொரு ணல்குவ
சித்தியானைதன் செய்யபொற் பாதமே.

(இ-ள்.) சித்தியானைதன் செய்ய பொன்பாதம் = சித்தி விநாயகக்கடவுளுடைய செவந்த பொன்போலும் அரியதிருவடிகள், சத்தியாய் சிவம் ஆகி தனி பரமுத்தி ஆன முதலை துதிசெய = சத்தியுமாகிச் சிவமுமாகி ஒப்பில்லாத பரமுத்தியுமாகிநின்ற பரசிவத்தை வாழ்த்த, சுத்தி ஆகிய சொல்பொருள் நல்குவ = குற்றமற்ற சொல்லையும் பொருளையும் அருளாநிற்கும் (எ-று.)

—— :o: ——

## சிவஞானபோதம்.

(5-வது மலர் 209-வது பக்கத்தொடர்ச்சி.)

### ஒன்பதாஞ் சூத்திரம்.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

(இ-ள்). ஊனக்கண் = பசுஞானத்தாலும்—பாசம் = பாசஞானத்தாலும்—உணரா = அறியப்படாத—பதியை = முதல்வனை—

ஞானக் கண்ணினில் = அம்முதல்வனது ஞானக்கண்ணாலே—சிந்தை = தன் அறிவினிடத்திலே—நாடி = ஆராய்ந்தறிக. (அப்பதி ஞானத்தைப் பெறுவதெப்படி யெனில்)—பாசம் = மலம் முதல் நாதம் ஈறாகிய பாசக் கூட்டமானது—உராத்துனை = நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய—தேர்த்தென = பேய்த்தேரின் இயல்புடையதென்று அறிந்து (அதாவது கானலானது நீர்போலத் தோன்றிப் பொய்யாய்க் கழிவதுபோல் கழிவதென்றறிந்து)—ஒருவ = (அப்பாசக் கூட்டத்தினின்றும்) நீங்கவே—பதி = அப்பதி ஞானம்—தண் நிழலாம் = பிறவித்துயராகிய வெப்பத்துக்கு) குளிர்ந்தநிழலாய் வெளிப்பட்டு விளங்கும்—அஞ்செழுத்தே = (அவ்வாறு விளங்கிய ஞானத்தால் முதல்வனைக் கண்ட காட்சி சலியா திருத்தற் பொருட்டுப் பாசத்தினின்றும் நீங்கி முதல்வனை யடைதலை உணர்த்துவதாகிய) திருவஞ்செழுத்து—விதி = அவ்விதிப்படி (யறிந்து)—எண்ணும் = கணிக்கப்படும் (அதாவது செபிக்கப்படும்) (எ-று)

தம் முதல் குருவுமாய் உணர்த்தக் கேட்டு அதனைச் சிந்தனை செய்துணருமாறு அறிவிக்கு முகத்தான், உயிரானது தான் ஐம்புல வேடரின் வளர்ந்தமையாலாகிய அசுத்தத்தினின்றும் நீங்கித் தன்னைப் பரிசுத்தப்படுத்துமாறு உணர்த்துதல் இச்சூத்திரத்தின் கருத்தாம்.

பாச ஞானமாவது பாசமாகிய கருவிகளால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம். பசு ஞானமாவது தற்போத முனைப்பால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம். பதி ஞானமாவது பதியின் அருளால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம்.

ஊனம் = குறை. ஊனக்கண் = குறையுணர்வு. நாடி = நாடுக. உரா = உலாவல் என்னும் பொருளைத் தரும் முதனிலைத் தொழிற்பெயர். துனை = வேகம். உராத்துனை = உலாவுதற் கண் வேகமுடைமை. ஊரா என்பது உராவெனக் குறுகியதாகக் கொண்டு உராத்துனைத்தேர் என்பதற்கு ஒருவராலும் ஊரப்படாத வேகத்தையுடைய தேர் என்று பொருளுரைத்தலுமாம். தண்ணிழலாம் பதி என்பதில் பதி என்பது பதி ஞானத்தைக் குறிக்கும் ஆகுபெயர்.

———



## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

1-வது—ஊனக்கண் பாச முணராப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி.

2-வது—உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத் தண்ணிழலாம் பதி.

3-வது—விதியெண்ணு மஞ்செழுத்தே.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை.

1-வது—உயிர் அரன் ஞானத்தினாலேயே அரனைக்காணும்.

2-வது—உயிர் பாசத்திலே பற்றற்றால் அரன் வெளிப்படுவன்.

3-வது—பஞ்சாக்ஷர செபம்பண்ணினால் வாசனாமலம் போம்.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்.

1-வது—ஈண்டு அம்முதலை ஞானக் கண்ணினாலே காண்க என்றது—அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான்.

2-வது—இனி அசத்தாயுள்ள வன்ன பேதங்களை அசத்து என்று காண உளதாய் நிற்பது ஞான சொரூபமென்று உணரற்பாற்று.

3-வது—இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க என்றது—இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை, வேம்புதின்ற புழுப்போல, நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கு எனக்கொள்க.

இதின் உதாரண வெண்பா எட்டு.

———

## முதலதிகரணம்.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி.

(இ-ள்.) பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறியப்படாத முதல்வனை அம்முதல்வனது ஞானக் கண்ணினாலே தன் அறிவினிடத்தே ஆராய்ந்தறிக (எ-று).

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்.—உயிர் பதி ஞானத்தாலேயே அரனைக்காணும்.

2-வது—ஐயப்பாடு—முதல்வன் பசு ஞானத்தாற் காணப்படுவனே, பதி ஞானத்தாற் காணப்படுவனே.

3-வது—பிறர் கூறும் பக்கம்—சுட்டியறியும் பசுத்துவம் உள்ளபோது செயற்கையால் ஏகதேசத்தின் விளங்கும் பசு ஞானமானது, அப்பசுத்துவம் நீங்கியபோது சிவஞானத்தோடொப்ப எங்கும் வியாபகமாய் விளங்கும் என்பது சிவாகம நூற்றுணிபாகலின், அவ்வாறு சுட்டிறந்தறிவதாகிய பசுஞானத்தால் முதல்வன் காணப்படுவன் என்பது பெறப்படும். (இவ்வாறு கூறுவோர் சிவசமவாத சைவர்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—குருவருளாலே உணரப்படும் சிவ ஞானத்தாலே சிவனையறிந்தவர் அச்சிவனில் வியாப்பியமாய் நின்று (அதாவது அடங்கி நின்று) அவ்வாறு அறியும் பொருளாகிய தம்மையும் அறிவர். அவ்வாறு தலைவனையறிந்தபின் அறியப்படுவதாகிய தம்மறிவு கொண்டு தலைவனை எங்ஙனம் அறிதல் கூடும்? ஆதலால் முதல்வன் பதி ஞானம் ஒன்றினாலேயே காணப்படுவன் என்பது துணியப்படும.

5-வது இயைபு.—

உதாரண வெண்பா.

நாடியோ வென்போ நரம்புசிக் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை—நாடியரன்
றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணா
ரென்னு மெனவறிவா ரின்று.

(இ-ள்.) நாடியோ என்போ நரம்புசிக் கோழையோ=நான் யார், இடை பிங்கலை முதலிய நாடிகளோ, நரம்போ, சீ எனப்படும் புண்ணீரோ, கோழை யெனப்படும் சிலேட்டுமமோ—தேடி யெனையறியேன் (என்று)= என்னைத்தேடியும் அறிகின்றிலேன் என்று—தேர்ந்தவகை நாடி=இவ்வாறு தேர்கின்ற தேர்ச்சியறிவின் கண்ணே இதனைத் தெளிவிப்பதோர் அறிவு வேறு உண்டென ஆராய்ந்து நோக்கி—அரன் தன்னாலே தன்னையும் கண்டு தமைக் காணார்= (அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றுவதாய) முதல்வனது திருவடி ஞானத்தால் முதல்வனையும் உணர்ந்து (முதல்வனின் வியாப்பியமாய் நின்று அங்ஙனம் அறியும்பொருளாகிய) தம்மையும் உணர்தலைச் செய்யாதார்—என் என அறி



வார் இன்று=மற்றெவ்வியல்பினரென்று தம்மை அறியவல்லுநர் இம்முத்திகாலத்து (எ-று.)

நரம்பு என்றதில் நாடியும் அடங்குமாயினும் தலைமைபற்றி நாடியை வேறாகக்கூறினர்.

நாடியோ என்போ நரம்புசிக் கோழையோ என்ற உபலக்கணத்தால் ஏனைத்தத்துவங்களினும், அவற்றின் காரியமாகிய புறக்கருவிகளினும் அவ்வாறு தெளிதல் கொள்ளப்படும்.

ஓகாரம் தெரிநிலை—தேடியெனை யறியேன் (என்று) என்பதில், என்று என்பது சொல்லெச்சம்—வகையென்பது அறிவைக் குறிக்கும் ஆகுபெயர். ஞானத்திற்கும் அரனுக்கும் உள்ள ஒற்றுமையைநோக்கி அரனது ஞானத்தை அரன் என்று உபசரித்தார். தன்னை=தலைவனை. தமை=உயிரை. ஆம் அசை.

இவ்வெண்பாவினால் முதல்வன் அருளால் (அதாவது சிவ ஞானத்தால) அம்முதல்வனையும் தன்னையும் அறியும் இயல்புடைய உயிர் தன்னறிவால் முதல்வனை யறிதல்கூடாது என்பது விளக்கப்பட்டமை காண்க.

திருக்குறுந்தொகை.

என்னையேது மறிந்தில னெம்பிரான்
றன்னை நானுமுன்னேது மறிந்திலேன்
என்னைத் தன்னடியா னென்றறிதலுந்
தன்னைநானும் பிரானென் றறிந்தேனே.

உதாரண வெண்பா.

காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணா—காட்டிய
வுள்ளந் தனைக்காணா துள்ளத்தின் கண்ணாய
கள்வன்றா னுள்ளத்திற் காண்.

(இ-ள்.) காட்டிய கண்ணே=(உயிரால்) காட்டப்பட்டு ஒரு விடயத்தைக்காண்கின்ற கண்ணானது (அதாவது ஒருவிடயத்தை உயிர்காட்டக் காணுங்கண்ணானது)—தனைக்காணா = தன்னியல்பைக் காணமாட்டாது.—கண்ணுக்குக்காட்டு ஆய உள்ளத்தைக் கண்காணா=தனக்கு அவ்விடயத்தைக் காண்பித்து முதலாயிருக்கும் உயிரையும் அது காணமாட்டாது—(அதுபோல்)—காட்டிய உள்ளம் தனைக்காணாது=(முதல்வனால் மறைந்துநின்று) உணர்

பட்டு ஒன்றைத் தேர்ந்துணர்கின்ற உயிர் அவ்வாறே தன்னியல்பையும் அறியமாட்டாது. (தன்னை உணர்த்திநிற்கும் முதல்வனையும் அறியமாட்டாது.)--உள்ளத்தின்கண் ஆய கள்வன்தான் = அத்தேர்ச்சியறிவின் கண்ணும் உடனாய் நிற்குங்கள்வன் அம்முதல்வன், (ஆதலால்)—உள்ளத்தில்காண் = அவனை அவ்வறிவின்கண் வைத்து நாடித் தெளிவாயாக (எ-று.)

இவ்வெண்பாவினால், தன் எதிர்முகத்துள்ள ஒருபொருளைக் கண்ட கண்ணே திரும்பிப்பார்க்குமிடத்து முதுகுப்புறத்துள்ள பொருளையும் காணக்கூடும். அதுபோல நாடி முதலியவற்றைத் தேர்ந்து அறிந்த உயிரே தன்னையும் தலைவனையும் தெளிந்தறியக்கூடும் என்னும் சமவாத சைவரை மறுத்து, எதிர்முகமாகக் காணப்படும்பொருளும், முதுகுப்புறமாகக் காணப்படும்பொருளும் புறத்துள்ள சடப்பொருள்களாதலினால் அவ்விரண்டையும் கண்காணும். அக்கண் தனக்குள்ளிருக்கும் ஒளியையும், உயிரையும் காணமாட்டாது. அதுபோல் உயிரானது தன்னையும் தலைவனையும் தானே அறியமாட்டாது. ஆனால் அது கண்போல் சடமாகாமல் அறிவுப்பொருளாயிருத்தலால் தலைவன் அருளால் தன்னையும் தலைவனையும் அறியும் என்று உணர்த்தியவாறும்.

கண்ணே என்பதில் ஏகாரம் அசைநிலை. காணா = காணாது. இதில் துவ்வீறு விகாரத்தாற்றொக்கது. இறைவன் தோன்றாது நிற்றல்பற்றிக் கள்வன் எனப்பட்டான். "என் உள்ளங்கவர் கள்வன்" என்றருளிச்செய்தனர் திருஞானசம்பந்தப்பெருமானாரும்.

## அர்ச்சாதீபம்.

(5-வது மலர். 192-வது பக்கத்தொடர்ச்சி.)

இதுகாறும் பரனுக்கு உருவங்கிடையாது என்றும், அவனை விக்கிரகமாக வணங்குவது கூடாது என்றும் வேதவேதாந்தங்கள் கூறுவதாக நம்மவர் பிரமித்துப் பேசியதற்கு அவனுக்கு உருவம் உண்டென்றும், அவனை விக்கிரகமாக வணங்குவது கூடுமென்றும் அவர் தேடியபிரமாணம் ஒன்றுக்கு ஒன்பதாக எடுத்து வேதங்களிலிருந்தே உதகரித்து, அவர்கள் காட்டிய வேதவசனங்களால் எமக்கு விரோதமுண்டாகாமையையும், யாம் காட்டிய வேதவசனங்களால்



அவர்களுக்கு விரோத முண்டாகின்றமையையும் பிரகாசம்பண்ணினேம். இனி, அவர்கள் பரனுக்குக்கூறும் அருவம் எம்மட்டில் சாதிக்கப்படு மென்பதையும், அவனை அர்ச்சையிலாராதியாதபோது அவர்களுடைய வழிபாடு எம்மட்டில் நிலைபெறு மென்பதையும் ஒருவாறு நியாயமுகத்தால் விசாரிக்கத் தொடங்குவாம்.

பரனைக் கேவலம் அருவமென்று அவர்கூறுவர். உருவத்தை ஒப்பார். ஏனெனின், (நண்ணிடு முருவமென்னின் நமக்குளவுருவம் போலப் பண்ணிடவொருவன்வேண்டும்) என்னுநியாயத்தால், நமக்குளவுருவம் ஜடம். ஜடம் தானேகாரியப்படாது. காரியத்துக்குக் காரணமும் வேண்டும். காரியமெத்தன்மைத்தோ காரணமுமத்தன்மைத்தாம். காரியமாகியவுடல் ஜடம். இதற்குக்காரணமாகிய பிரகிருதியுஞ்சடம். இந்தக்காரணமாகிய ஜடத்தைச் சித்தாவானொருவன் காரியப்படுத்துவன். பிறப்பு-இருப்பு-இறப்பு என்னு முத்திறத்தால் இப்படியே பரனுருவுங்கொள்ளப்பட்டுத் (தோன்றின மறையும்) என்னு நியாயத்தால் அலக்கண்பெறும். ஆகையால், பரனை உருவெனல்கூடாது. அருவமெனலே தேற்றம் எனச் சாதியாநிற்பர். இந்தச்சாதனையை (உலகினிற்பதார்த்தமெல்லா முருவமோடருவமாகி, நிலவிடுமொன்றொன்றாக நின்றவந்நிலையேபோல, வலகிலாவறிவன்றானு மருவமேயென்னிலாய்ந்து, குலவியபதார்த்தத்தொன்றாய்க் கூடுவன்குறித்திடாயே) என்னுந் திருவாக்கு மறுக்கும்! மறுக்கும்!! பரன் அருவமென்னில், ஆகாயம் அருவம். அந்த அருவம் ஜடம். ஜடம்தானே காரியப்படாது. காரியத்துக்குக் காரணமும் வேண்டும். காரியமெத்தன்மைத்தோ காரணமுமத்தன்மைத்தாம். காரியமாகிய ஆகாயம் ஜடம். இதற்குக் காரணமாகிய பிரகிருதியுஞ்சடம். இந்தக்காரணமாகிய ஜடத்தைச் சித்தாவானொருவன் காரியப்படுத்துவன் பிறப்பு-இருப்பு-இறப்பு என்னு முத்திறத்தால். இப்படியே பரனது அருவுங்கொள்ளப்பட்டு அலக்கண்பெறும். ஆகையால், பரனை அருவெனக் கூடாது. உருவருவல்லவெனலே தேற்றம். உருவென்றபோது ஆன குற்றமே அருவென்றபோதும் ஆயினமையால், உருவும், அருவும் இரண்டுங்கூடிய உருவருவும் ஆகிய மூன்றும் அவன்றன்மையாகாது! ஆகாது!! பூமியைப்போல உருவமும், ஆகாயத்தைப்போல அருவமும், சந்திரனைப்போல உருவருவமும் பரனிலக்கணமாகாமையால், இவற்றைத்தோராது உருவமென்பாரை மறுத்து அ

வமே அது என்று நம்மவர் சாதிப்பது ௪+௫=(௯) என்பவரை மறுத்து, ௪+௫=(௫) என்று சாதிப்பதாக முடிந்தது.

இனி, நம்மவர்பதியினது உருவத்தைப் பசுவினது உருவத்தைப்போலக் கொண்டமையே வினைசங்கைக்கிடஞ்செய்தது. பசுவுக்குத்தான் பாசத்திலுருவங்கூறலாம். பதிக்கும் அப்பாசத்தில் உருவங்கூறுதல்—எங்ஙனம்? (மாயைதான் மலத்தைப்பற்றி வருவதோர்வடிவமாகு-மாயவாணவமகன்ற வறிவொடுதொழிலையார்க்கு நாயகனெல்லா ஞானத் தொழின்முதனண்ணலாலே — காயமோ மாயையன்று கண்பது சத்திதன்னால்) என்னுந்திருவாக்கால் பரனது உருவத்தன்மை வியக்தம். பசுவுக்குக்கூறும் அங்கம் அதற்கு ஸ்வப்ரயோஜனம். பதிக்குக்கூறும் அங்கம் அதற்கு ஸ்வப்ரயோஜனமன்று. அதுபசுவுக்கு உபகரித்தற்கே அதனால், பரப்ரயோஜனார்த்தமான அருண்மேனியெனல் சாலும். மலபத்தரான பசுக்களுருவும், மலமுத்தரான பதியினுருவுமொன்றுதல் யாண்டமையும்? வேதத்தில், "விஸ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:" என்று பரனாகிய உருத்திரனை விஸ்வங்களைக் கடந்தவனென்று விளக்கலால், அவனுக்கு மாயாகனமேனி கூறுதல் மாட்சிபெற்றிலது. "பராஸ்யசக்திர்விவிதைவஸ்ரூயதே" என்னுஞ் சுருதிபரியாலோசனையால் பரனது உருவும், அதிற்றோன்றுந் தொழிலுங் குணமுமாகிய கரமும், கரசரணாதி யுறுப்புக்களும், உபாங்கமாகிய புவனபோகங்களும் ஆகியயாவும் பரனில் வேறாகாத சத்தியேயாம். சத்தி, அருள் என்பது ஒன்றாகலின், யாவுஞ் சத்தியென்றபடியே யாவும் அருள் என்றலும் அமைவுடைத்து. "உருவருள் குணங்களோடு முணர்வருளுருவிற்றோன்றுங், கருமமுமருளரன்றன் கரசரணாதிசாங்கந், தருமருளுபாங்கமெல்லாந் தானருடனக்கொன்றின்றி, அருளுருவுயிருக்கென்றே யாக்கினனசிந்தனன்றே" என்னுந் திருவாக்காலும் அது சிறக்கும். இந்தவிசாரத்தால் பரனுக்குக் கூறுமுருவம் ஆசங்கைக்கிடஞ்செய்யாது நிலைத்தது. உருவம் நிலைத்தமையால், அருவும், உருவருவுங்கூடவே நிலைத்தன. காரியகாரணங்களில் காரணத்தின்றன்மையே காரியத்திற் காண்டலால், மாயாகனங்களாகிய ஜடமேனிகளும், சித்கனங்களாகிய அருண்மேனிகளும் ஒன்றினொன்று தன்மை வேறுபட்டுப் பசுவுக்குக்கூறும் உருவாதிமூன்றும் ஒருபடித்தாயும் முரணின்றி நிலையுதல்பெறும். ஒன்று மற்றொன்றாகாமையால் தன்மைவேறுபட்டுநின்றமையால், (நண்ணிடு



முருவமெண்ணி னமக்குள வுருவம்போலப்-பண்ணிட வொருவன் வேண்டும்.) என்று பூர்வபட்சிகள் பரனுருவத்தை மறுத்தசமாதானம் பறந்தொழிந்தது. என்னை? பசுவுக் குரைத்தல்போலவே பதிக்கு உருவாதி மூன்று முரைத்தலெனின், என்னை? பதிக்கு அருவமாத்திர முரைத்தலென்னு மாசங்கையுண்டாம். அன்றியும், அவை மூன்றுங் கூறுவதால் பரனிடத்து நிகழும் குற்றம்யாது எனவுங் கடாவவரும். மண்ணாலானவுருவமும், பொன்னாலானவுருவமு மொன்றாகாது. மண்ணின்றன்மை மண்ணுக்கும், பொன்னின்றன்மை பொன்னுக்கு முள்ளவாறே பசுவுக்கும் பதிக்கு முள்ள வுருவத்தன்மைகணிலைக்கும். மண்ணின்றன்மைக்குத் தாழ்வுகூறுவதுபோலப் பொன்னின்றன்மைக்குத் தாழ்வுகூறமுடியாது. இப்படியே பசுவுக்கும், பதிக்கும் உருவங்கள் சிறத்தலால், பதிக்கு உருவாதிகள் எற்றுக்கு என்று எழுங்கடா பயனற்றதேயாகும்.

---

## ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

---

(5-வது மலர் 200-வது பக்கத்தொடர்ச்சி.)

வெள்ளிய பல்லும் வெள்ளிய கோவணமும் வெள்ளிய பூணூலு முடையராய், தண்டகமண்டலம் - கிருஷ்ணாசனம்-மௌஞ்சிமாலை-உருத்திராக்ஷம்—தர்ப்பை-பவித்திரம் என்பவைகளைத் தரித்து, அரதத்தாசாரியசுவாமிகள் பிரதமாச்சிரமமாகிய பிரமசரியத்தை அநுஷ்டிப்பாராயினர். காலை மாலைகளிலே சமிதாதானஞ் செய்வார். தமது லோககுருவாகிய தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்திலே எப்பொழுதும் எழுந்தருளியிருந்து, வேதாத்தியயனத்தினாலே முனிவர் கடன் கழித்தார். பிதுர்க்கடன் தீர்க்கும் கிரகஸ்தாச்சிரம விரதந் தொடங்குதற்கு முன்னே கோதானஞ் செய்து பிரமசரியவிரதங்களைச் சமாப்திசெய்தார். இதுநிற்க,

அந்தக் கம்சாபுரத்திலே சதாசாரமுடையரும், சாந்தரும் பஞ்சயக்யம் செய்பவரும், அன்பினோடு திரிகாலமும் சிவபூசை செய்பவரும், வைதிக விபூதியினாலே உத்தூளனஞ் செய்பவரும் உருத்திராக்ஷதாரணஞ் செய்பவரும், பஞ்சாக்ஷரசெபஞ் செய்ப

ரும், சிவசந்நிதியிலே பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்பவரும், சிவனடியார்க்குத் திருத்தொண்டு செய்பவருமாகிய சுப்பிரதீகர் என்னும் பிராமணர் ஒருவர் இருந்தார். வாதூலகோத்திரம் என்னுஞ் சமுத்திரத்துக்குக் கமலாக்ஷி என்னுஞ் சந்திரன் அவருக்கு மனைவியாய் உதித்தது. இக்கமலாக்ஷி என்பார் தமது நாயகரை மிகுதியும் பிரீதிசெய்து, அருந்ததி அனசூயை என்பாரைப்போல் கற்பினிற்சிறந்து அதி சௌந்தரியமுடையராய் நாயகருக்குத் திருத்தொண்டு செய்தலில் மிகு பற்றுடையரா யொழுகினர். பூமிதேவியானவள் இரத்தினந் தரித்தாற்போல, இவ்வம்மையார் திருவயிற்றிலே ஓர் கர்ப்பம் எய்திற்று. இவருடைய லட்சுமீகரமாகிய உதரமானது பெருக்கு மியல்பு பூண்டது; அவர் நாயகரும் சீமந்தாதி வைதிக கன்மங்களைச்செய்தார். பின்னர் மகா சௌந்தரியமான பெண்குழந்தை ஒன்று லட்சுமீகரத்தோடு பிறந்தது. 'அப்பெண்குழந்தை பிறந்ததினத்திலே பிதாவாகிய சுப்பிரதீகர் மங்களோற்சவம் நடத்தினர். சிவபக்தர்களுக்கும் பிராமணர்களுக்கும் தனதான்னியங்களை வேண்டியவாறு அளித்தார். தமதுபுதல்வியாரை வளர்த்துச் சாதகருமம் நாமகரும முதலியன செய்தார். புதல்வியாருக்குக் கமலவல்லி என்று நாமகரணஞ்செய்தார். அக்கமலவல்லியும் பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டுத் தவழ்ந்துசென்றும், சிறுபெண்களோடு மண்விளையாட்டயர்ந்தும், மழலை வார்த்தை பேசியும் தமது தந்தை தாயரைப் பிரீதிசெய்து வந்தாள். இரத்தின மாணிக்க மேகலையினாலும், பலவித சித்திரமாகிய பட்டுவஸ்திரங்களினாலும், புஷ்பமாலைகளினாலும் சிறந்து, கண்டோர் யாரும் அதிசயமுறும்படி அக்குழந்தை விளங்கினாள்

அக்காலத்திலே சிவலிங்கபூபதியானவர் கம்சாபுரத்துக்கு மீட்டும் வந்து ஆசாரியசுவாமிகளை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்து அவர் தந்தையாராகிய வாசுதேவரைநோக்கி, எமது ஆசாரியருக்கு விவாகஞ் செய்தற்குரிய காலஞ் சமீபித்ததே என்று சொல்ல, சமீபத்திலே ஆங்கிருந்த சுப்பிரதீகர் அரசனை நோக்கி, யாம் எமது புத்திரியை விவாகஞ்செய்து கொடுப்போம் என்றும், அதுநோக்கித் தாமசஞ் செய்யவொண்ணாதென்றும் அறிவித்தார். உடனே விவாக மகோற்சவஞ்செய்ய ஆரம்பித்து சோதிடரை வருவித்து, முகூர்த்தஞ் நிச்சயித்து, பிதா முதலாயினாரோடு தமது பந்துக்கள் யாவரும் வரும்பொருட்டு விவாகபத்திரம் அனுப்பிவிட்டு விரதாதி



களையும் கோதானாதிகளையும் நடாத்தி, கம்சாபுரத்து வீதிகளை வாழை·கமுகுகள் நாட்டி, தோரணங்களையும் கொடிகளையும் தூக்கி அலங்கரித்தார். அன்றியும் கம்சாபுரத்தார் தத்தம் கிருகங்களைச் சிறப்பித்துகோலங்களிட்டு சித்திரித்து அலங்கரித்தார்கள். பந்துக்களெல்லாம் பட்டுக்களையும், பீதாம்பரங்களையும் விலையுயர்ந்த மற்றைய பரிசுகளையுங்கொண்டு கல்யாண வீட்டுக்கு வந்தார்கள். நானாதேசங்களினின்றும் போந்துவந்த ஜனங்களினாலே கல்யாணமண்டபம் நிறைந்துபோயிற்று. மகாயாகங்களிலே எவ்வளவு சம்பாரங்கள் வேண்டப்படுமோ அவ்வளவு பொருள்களினாலும் கல்யாண மண்டபத்தைச் சிவலிங்கபூபதி நிறைப்பித்தார். கம்சாபுரத்திலுள்ள கிருகங்களெல்லாஞ் சிறப்பினால் வாய்ந்தன. பிராமணர்களெல்லாம் ஒருங்கு குழுமிய விடத்திலே விவாகத்தின் பொருட்டுப் புத்திரர் அங்குரார்ப்பணஞ்செய்தார். அவர் தந்தையாராகிய வாசுதேவரும் பற்பல இடங்களினின்றும் போந்த பந்துக்கள் முதலாயினோரை யெல்லாம் பற்பல உபசாரங்களினாலே மகிழ்வித்தார்.

சுப்பிரதீகரும் புதல்வியின் விவாகத்தின் பொருட்டுத் தமது கிருகத்தை அலங்காரஞ்செய்து முத்துச்சரங்களினாலும், தீபஸ்தம்பங்களினாலும், பூர்ணகும்பங்களினாலும், சந்தன அகிற்புகைகளினாலும், விவாகசாலையை மேன்மைவாய்ப்பச் சிறப்பித்தார். இவருடைய பந்துக்களெல்லாம் நானாவித வஸ்திராபரணாதிகளால் அலங்கரித்துக்கொண்டு வந்தார்கள். விவாகசாலையின்கண்ணே பலவகை வாத்தியங்களும் வேதங்களும் கோஷிக்க, வேதோக்தமாகப் பிராமணர்கள் புண்ணியாகவாசனஞ்செய்தார்கள்.

விவாகத்துக்கு முதற்றினத்திலே ஆசாரிய சுவாமிகளுக்கு இரக்ஷாபந்தனமும், அங்குரார்ப்பணமும், சமாவர்த்தனமும் விதிப்பிரகாரஞ் செய்து பிரமணர்களுக்குத் திரவியங்களை இறைத்தார்; விவாகசபை மிகவும் பிரகாசித்தது. அக்கினியை ஓம்ப, அது வளர்ந்து வலஞ்சுழித்து ஓங்கிவாய்ந்தது. புஷ்பதூளிகளெல்லாம் மலிந்தன. விபூதி ருத்திராக்ஷ தாரணர்களாகிய சிவபக்தர்கள் பிரகாசித்தார்கள். தென்றல் மந்தமாய் வீசிற்று. பிராமணர்கள் அறுசுவையோடும் போசனஞ் செய்து வந்திருந்து, இதற்கு முன்னர் இப்படிப்பட்ட இனியாசங்களை புசித்ததேயில்லை என்று புகழ்ந்து பாராட்டினார்கள். அவரெல்லாம் மிக திருப்திகரமுடையராய் அர அர அர என்று முழக்கினார்கள். சிவபக்தர்களை உபசரித்தார்கள்.

வதூவரன் என்னும் இருவரும் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்ட பாலிகையைச் சல முதலிய பிரயோகஞ்செய்து வளர்த்தார்கள். வாசுதேவரும் சுப்பிரதீகரும் முறையே தத்தம புதல்வர் புதல்வியருடைய அங்குரார்ப்பண பாலிகையைக்கண்டு மகிழ்ந்தார்கள். வாசுதேவர் தமது புதல்வரை விவாகோற்சவத்திற்கு உசிதமாகிய உயர்ந்த வஸ்திரங்களினால் அலங்கரித்து, கல்யாணவேதி மத்தியிலிடப்பட்ட திவ்ய ஆசனத் திருத்தி, பரிமள திரவியங்கள் கலந்த சந்தனம் பூசி, சுகந்த ஜாதி புஷ்ப மாலைகள் சூட்டி, பாதரசம் கடிசூத்திரம் முத்தாரங் நக்ஷத்திராகாரமாலை என்பனவைகளால் அலங்கரித்து, சுவர்னமும் முத்தும் கலந்து அமைக்கப்பட்ட உருத்திராக்ஷமாலைகளைச் சிரசிலும் உரத்திலும் புயத்திலும் பொருந்த அணிந்து, விரல்களை மோதிரங்களினாலும், காதுகளை இரத்தின குண்டலங்களினாலும் அலங்கரித்து, நெற்றியை நல்ல வெள்ளிய விபூதியினாலே விளங்கச்செய்து, பொன்னாற் செய்து முத்துக்களால் நிருமித்து அமைக்கப்பட்ட கிரீடத்தைச் சிவபெருமானால் ஞானபிஷேகஞ் செய்யப்பட்ட அரதத்தாசாரிய சுவாமிகள் சிரசிலே சூட்டினார்கள். அவ்வாறு மணக்கோலஞ் செய்யப்பட்ட ஞானமூர்த்தி அழகுக்கு அழகு செய்தாலொப்ப விளங்கினமையைப் பந்துக்களானோரெல்லாங் கண்டு மகிழ்ந்தார்கள். சபையினரால் திருஷ்டிதோஷம் விளையாவண்ணம் விபூதியையே அவருக்குப் பின்னும் அணிந்தார்கள். குருமூர்த்திகளாகிய ஆசாரியருடைய திருமேனியைத் தரிசித்துப் பல்லோர் பணிந்தார்; பல்லோர் துதித்தார். இங்ஙனம் நிகழ; ஆசாரியர் அக்கினீசுவரப் பெருமானைத் தரிசிக்குமாறு பாதசாரியாய்ச்சென்று, ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து சுவாமியை நமஸ்கரித்துக்கொண்டு கிருகத்துக்கு மீண்டார். அப்போது அவரைப் பின்னர் முத்துச்சிவிகையில் எழுந்தருளச்செய்து கிராமப்பிரதக்ஷிணஞ் செய்யத் தொடங்கினார்கள். அப்போது பந்துக்களாயினோரெல்லாம் தத்தம் வாகனங்களிலிவர்ந்து சென்றார்கள். சங்கம்-காகளம்-பேரி-மிருதங்கம்-சின்னம் முதலிய வாத்திய கோஷங்களால் திக்குகளெல்லாம் நிறைந்தன; பட்டுக்கொடிகள் ஆகாயத்திலே மலிந்தன; அநேக கோடி சாமரங்கள் யாண்டும் அசைந்தன; சோமயாசிகளெல்லாம் அக்கினிகோத்திர சகிதராய் மனைவியரோடு புறப்பட்டார்கள்; அநேக கானங்கள் யாண்டுமெழுந்து செவிகளிற் புகுந்து சுவைத்தன; புருடரும் பெண்களும்



சிவசோபையோடு விளங்கினார்கள்; சிவலிங்கார்களும் ஆண்டே குழுமினார்கள்; சாமரங்களும் விசிறிகளும் சிறக்க நாகவாகனத்தின் மீது வெண்கொற்றக்குடை விளங்குவது சமுத்திரத்தில் சந்திரோதயம் விளங்கினமையை நிகர்த்தது; வெண்சாமரங்களும் முத்துமாலைகளும் பல்லக்குச் சாளரங்களும் வாயுவினாலே அசைந்து சமுத்திர அலைகளை ஒத்தன; ஆசாரிய சுவாமிகள் வீதியிலே எழுந்தருளும்போது நகரவாசிகள் தத்தம் வீடுகளிலிருந்து பழங்களும் நாளிகேரங்களுங்கொண்டு உபசரித்துச் சிறப்பித்தார்கள்; ஆசாரியர் பந்துக்கள் சிவனடியார் முதலாயினாரோடு சுப்பிரதீகருடைய விவாகசாலையை நோக்கி எழுந்தருளினார். அப்போது சுப்பிரதீகரும் தமது பந்துசனங்களோடு அவரை எதிர்கொண்டு உபசரிக்க, அவர் கிருகத்தினுள்ளே பிரவேசித்து, பூஷணங்களுக்கெல்லாம் அழகை விளைவிக்கும் பிரகாசத் திருமேனியையுடைய அவ்வாசாரியர் முத்துப்பல்லக்கினின்றும் இழிந்தருளி, பட்டுநடைப் பாவாடையின்மீது நடந்து போந்து விவாகமண்டபத்தை அடைந்து, வேதிகையிலிடப்பட்ட சுவர்ணாசனத்தின்மீது எழுந்தருளினார்.

ம. தி. பானுகவி சுவாமிகள்.

## சிவபெருமான் கேழற்கோடணிந்தது.

பொற்கண்ணனாகிய இரணியாக்ஷன் என்னும் அவுணன் பூமியைப் பாயாகச்சுருட்டி வயிற்றுள்வைத்துக்கொண்டு பூமியின் கீழுள்ள பிலத்துவாரத்தில் மறைந்திருக்க, திருமால் வராகவடிவேற்று அவனைக்கொன்று பூமியை முன்போல் விரித்து அலங்கரித்து, சர்வான்மாக்களும் அஞ்சும்படி கோபித்தனர். அதுகண்ட இந்திரன் - பிரமன்முதலானோர் திருக்கயிலையை யடைந்து சிவபெருமானைத் துதிக்க பெருமான் குமாரக்கடவுளை நோக்க, அவர் பன்றிவடிவுற்ற விண்டுவின் பக்கல்சென்று, அவ்வராகத்தி னிறுமாப்பு நோக்கித் தமது திருக்கரத்திலிருந்த வேலாயுதத்தால் நெற்றியிற்குத்தி நிலத்தோடமுழ்க்கிக் கொம்பைப்பறித்துச் சிவபெருமானது திருச்சந்நிதியில் வைத்தனர். தேவர் வேண்டுகோளின்படி பின்

னொரு கால் நாராயணன் செருக்கடையாவண்ணம் எம்பெருமான் அதனைத் திருமேனியில் தரித்துக்கொண்டனர். திருமால் செருக்கொழிந்து காஞ்சிநகரிற் சிவார்ச்சனைசெய்து வராகபுராணம் கூறிப் பண்டையவடிவுடன் வைகுந்தமடைந்தனர்.

உபதேசகாண்டம் - வராகாவதாரச்சருக்கம்.

"பரந்த பாற்கடற் பாப்பணைப் பள்ளியான்
முரண்ட ருந்திறற் பன்றியின் மூதுருக்
கரந்து வையகம் யாவுங் கலக்கலா
லரந்தை பெற்று வெருக்கொண்ட தாருயிர்.

ஆடல் வேல்கொண் டமுக்கலுஞ் சோரிநீர்
பாட கன்றது பாதலஞ் சேர்ந்ததா
லூடு புக்கிழிந் தின்னுத னொண்பிறைக்
கோடு பற்றிப் பிடுங்கினன் கோதிலான்.

மாய மாய வராக வுருக்கழிந்
தாய மாய னரனை யருச்சியாத்
தீய வாணவச் செய்கைச் செருக்கறப்
போயொ ழிந்து தனதுழைப் போயினான்."

## சிவபெருமான் அழல்காலும்விழிபுனைந்தது.

பிரமன் கையிலிருந்த வேதத்தைப் பறித்துக்கொண்டுபோய்ச் சோமுகாசுரன் கடலுக்குள் ஒளிக்க, திருமால் மச்சவடிவேற்று அவனைச் சங்கரித்து இறுமாப்பால் மகாமேருவைப்போன்ற திருமேனியோடு சத்தசமுத்திரங்களையுங் கலக்க, ஜலப் பிராணிகளுஞ் சர்வான்மாக்களுந் துன்புறுதலைக்கண்ட தேவர்கள் திருக்கயிலையடைந்து சிவபெருமான்பால் விண்ணப்பஞ்செய்ய, பெருமான் அருகிருந்த சாத்தாவை நோக்கி "விஷ்ணு மச்சவடிவோடடைந்திருக்குஞ் செருக்கையடக்குக" என்றருள, சாத்தா வலையர்வடிவுடன் சென்று தமது திருக்கரத்திருந்த வலையைச் சத்தசமுத்திரமும் நிரம்பும்படி வீசி, மச்சவடிவாகிய விஷ்ணுவைப்பிடித்து இரு



கண்களையும் பிடுங்கிச் சிவபிரான் திருமுன்வைத்தனர். பின்னொரு கால் விண்டு செருக்கடையாவண்ணந் தேவர் வேண்டுகோளின்படி அதனைத் தமது திருமேனியில்தரித்தனர். திருமால் செருக்ககன்று திருக்காஞ்சியிற் சிவலிங்கார்ச்சனை புரிந்து மச்சபுராணம் ஓதிப் பழையவடிவுடன் வைகுந்தமடைந்தார்.

உபதேசகாண்டம் - மச்சாவதாரப்படலம்.

"அலைத்த வார்புனற் சென்னியோ னாங்கவை யருளக்
கொலைத்த லைக்கொடுஞ் சூற்படைச் சாத்தனுங் குறுகி
வலைக்கு லத்தவ ருருக்கொண் டலைக்கரை வந்தா
னிலைத்த சிந்தையி னொக்கின னதற்கெதிர் நிமிர்ந்தான்.

எடுத்து வீசிய வலைகட லேழையு நிரப்பிப்
படுத்தி மூத்தலும் வலையகப் பட்டது பாரார்
நடுக்க டற்புகுந் திருவிழி பறித்தன னடந்தான்
கடுத்த வெஞ்செருக் கிழந்தது மீனமாக் கடவுள்."

## சிவபெருமான் மடங்கலீருரிபுனைந்தது.

இரணியாக்ஷன் என்னு மசுரன் தானே பிரமமென மதித்து இரணியநமோ வென்னுஞ் சத்தமன்றி வேறொன்றுங் காதிற்படாது அரசுசெய்கையில், அவன் புதல்வன் பிரகலாதனன்பால் திருமால் தன்னொரு கூறுநிறுத்தி எதிர்க்கச்செய்து தூணினின்று நாரசிங்காவதாரஞ்செய்து அவ்வசுரனைக்கொன்று அவனுதிரமுண்டு ஆரவாரிக்கையில் தேவர்கள் துதிக்க, அதனால் கோபந்தணியாது இறுமாந்தனர். முனிவர் தேவர் முதலானோர் திருமகளைத் துதிக்க, அத்தேவியின் பிரார்த்தனைக்கும் இரங்காமை கண்டு பயந்த தேவர்கள் திருக்கயிலையடைந்து சிவபிரான்பால் முறையிட, பெருமான் வீரபத்திரக் கடவுளைப்பார்த்து "திருமால் நாரசிங்காவதாரத்துடன் கொண்டிருக்குஞ் செருக்கையடக்குக" என, வீரபத்திரர் சரபப்பட்சி வடி

வேற்றுச்சென்று நாரசிங்கத்தை இரண்டு சிறகுகளாலே யமுக்கிச் சொண்டினால் மேற்றோலையுரித்துச் சிவபிரான் திருமுன்னிலையில் வைத்தார்; தேவர் வேண்டுகோளின்படி விஷ்ணு இறுமாப்படையாதவிதம் பெருமான் அதனையணிந்தனர். திருமால் மமதைநீங்கிக் காஞ்சியில் சிவலிங்கப்பிரதிட்டை செய்து பூசித்து நாரசிங்கபுராணம் கூறிச் சுயவடிவுடன் வைகுந்தமடைந்தார்.

உபதேசகாண்டம் - நாரசிங்காவதாரப்படலம்.

"சரபப் பேருரு வெடுத்தன னளவொழி தடக்கை
விரவித் திண்சிறை வெள்ளிடை புதைத்துற மீப்பாய்ந்
தரவுத் திண்பத மெட்டினுங் கிளைத்தவெள் ளுகிராற்
கிரணப் பொற்கிரி யெடுப்பினுங் கிழங்கெனக் கிழியும்.
கறித்து மிழ்ந்தது கரங்களைக் கதிர்முடிச் சிரத்தைக்
கொறித்து மிழ்ந்தது குருதிகொப் புளித்தது பஃறேண்
முறித்த முக்கிய திடிக்குர லெழுப்பிய முழக்கிற்
செறித்த புன்செருக் கிழந்துயி ரிழந்ததச் சீயம்."—

## புராணசிரவண மகிமை.

### சிவமஹா புராணம்.

சூத முனிவர், நைமிசாரணிய வாசிகளாகிய சௌநகாதி முனிவர்களே! பூர்வம் புராணசிரவண பலனெத்தகையது? எனக்குச் சொல்லவேண்டுமென ஸனத் குமார முனிவர் தமது தந்தையாகிய பிரமதேவரைக்கேட்க, பிரமதேவர் அதனை ஸநத்குமார முனிவருக் குரைத்தனர். ஸனத்குமார முனிவர் பின்னொருகாலத்தில் அதனையே வியாஸபகவானுக்கு வெளியிட்டனர், அவ்வியாஸபகவான் எனக்குக் கூறியருளிய வகையேயான் உங்களுக்குச் சொல்லுகின்றேன் கேட்பீர்களாகவென்று சொல்லத் தொடங்கினர்.



பிரமதேவர் ஸநத்குமார முனிவரைநோக்கிச் சொல்லுகின்றார். புத்திரனே, யானொருகாலத்தில் இயமலோகத்திற்கு வினோதார்த்தமாகச் சென்றபொழுது இயமதருமன் என்னைப் பலவிதமாகப் பூசித்து அர்க்கியபாத்திய ஆசமனாதிக ளாலுபசரித்தனன். பின்னர் ஓர் திவ்வியமான பீடத்தில் இருவருமிருந்து உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கையில் அற்புதமொன்றனைக் கண்டேன், அஃதென்னெனில் வைடூரிய மணிகளாற் செய்யப்பட்ட வோரமுடையதாய், பலவித ரத்னங்களாலும் முத்தங்களாலும் அலங்கரிக்கப்பட்டதாய் மணிமாலைகள் கட்டப்பட்டுக் கணகணவென்னு மொலியுடையதாகிய திவ்விய விமானத்திலேறியோர் திவ்விய புருஷன் வர, இயமன் அப்புருஷனைக் கண்டு துண்ணென்றெழுந்து சுபகரமான வார்த்தைகளைச்சொல்லி, சுகமாவென்று விசாரித்து, தர்மமுணர்ந்தவனே, உனது தரிசனத்தாற் சந்தோஷமடைந்தனன். உனக்கு இங்கிருக்க விருப்பமுள்ளவரையிலிருந்து பின்னர் நீ பிரமலோகத்திற்குச் செல்லலாம். எனக்கூறினன். அப்பொழுதே மற்றொருவன் அவ்வகைய திவ்வியவிமானமிவர்ந்து இயமதருமனிடம் வந்துசேர இயமதருமன் அவனையும் அன்புடன் பூசித்து முன்வந்தவனுக்குக் கூறியதுபோலவே உபசாரவார்த்தைகள் கூறி க்ஷேமம் விசாரித்தனன். இவ்வண்ண நிகழ்ந்ததுகண் டதிசயித்த யான் இயமனை நோக்கி, உன்னிடம் இப்பொழுது வந்த இருவரும் யாவர்? அவர்கள் செய்துள்ள நற்கருமங்கள் எவை? அவர்களை நீ கனப்படுத்திய காரணம்யாது? இவற்றையறிய விரும்புகின்றேன். தேவர்களாலே யெல்லாம் பூசிக்கப்படும் உன்னாற் பூசிக்கப்பட்டவர்கள் யாவர்? எனக்கேட்க, இயமதருமன் சொல்லலாயினன்.

பூலோகத்தில் வைதிசமென்னும் பட்டணத்தில் தாரபாலனென்னும் அரசன் சிறந்துவிளங்கினன். அந்தச் சமயத்தில் பார்வதிதேவியார் தமக்கு அபசாரஞ்செய்த ஓர் தோழியைப் பன்னிரண்டுவருஷம் நரியாய்த் திரியும்படி சபித்து விதஸ்தா வேத்திரவதி யென்னும் நதிகளின் சங்கமக்ஷேத்திரத்தில் உன்சாப மொழிகவென்றும் சாபாநுக்கிரகமுஞ் செய்தனர். அதனால் அத்தோழி நரிவடி வேற்று உலகத்தில் பன்னிரண்டுவருஷஞ் சஞ்சரித்து ஒருகாலத்தில் விதஸ்தா வேத்திரவதி நதிகளின் சங்கமஸ்தானத்தையடைந்து, அங்கு ஆகாரங்கிடைக்காது உயிர் நீங்கித் திவ்வியமான சரீரத்தை வகித்து விமானத்திலேறிச் சிவசந்நிதியடைந்து பன்

டையபணிவிடையி லிருந்தனள். அதனை யச்சமயத்தருகிருந்து கண்டதராபாலனென்னும் மன்னவன் ஆ! ஆ! அந்நரி உயிர்விட்டவுடனே திவ்வியவிமானமேறிப் பரகதியடைந்ததன்றோ? இஃதுத்தம க்ஷேத்திரமென்று கருதி அங்கேயோர் சிவாலயங்கட்டுவித்து அதிற் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பரிவார தேவர்களையுநிறுத்தி, திவ்வியமான மண்டப கோபுர பிராகாரமுதலியனயாவுமுடித்து யாவரும் பூசித்துப் பணியச்செய்தனன். இவ்வாறிருக்கையில், புராணேதிகாசங்களை நன்றாகக் கற்றுப்பிறருக் குரைத்து, பிரமஞானமுற்ற முநிசிரேஷ்டனை ஒர் வேதியன் வர, அவனைப் பூசித்து அவன்பாலிருந்த புஸ்தகத்தையும் கந்த புஷ்ப தூபதீபங்களால் முறைப்படி பூசித்து, வினயத்துடன் அப்பிராமணனை நோக்கி, யான் சிவாலயமொன்று இங்குக் கட்டுவித்தேன். அச்சிவ சந்நிதியிற் புராணசிரவணஞ் செய்யவேண்டு மென்றுகருதிய நாற்குலத்தவர்களுங் கேட்கும்படி புராணஞ் சொல்லவேண்டும். நீர் புராணஞ் சொல்லுங்கயில் வருஷமொன்றிற்கு நூறு பொன் *நிஷ்கம் ஜீவனத்திற்காகக் கொடுத்துவருகிறேன். உமக்கும் இது நல்ல வுத்தியோகமாமென்று கூறி அவரைச் சம்மதிப்பித்துப் புராணஞ் சொல்லுவிக்க ஆரம்பிப்பித்து ஆறுமாதம் ஊராருடன் புராண சிரவணஞ்செய்து தன் ஆயுள் முடிந்ததால் அரசன் காலகதியாயினன். அப்பொழுதே சிவகடாக்ஷத்தால் திவ்வியமான விமானத்தைக் கொண்டுபோய் அழைத்துக்கொண்டு வந்தேன். இது இவனுடைய சுககர்மபலன். இது புண்ணியசரிதம். புராண சிரவணஞ்செய்வதால் சகல தேவர்களுக்குந் திருப்தி யுண்டாவதுபோல, கந்தபுஷ்பாதி உபகரணங்களாற் செய்த பூஜையாலும், கோதானம் சொர்ணதானம் வெள்ளிதானம் வஸ்திரதானம் முதலியவற்றின் தானத்தாலுந் திருப்தியுண்டாகமாட்டாது. தர்மங்களைச்சொல்லும் புராணசிரவணத்தாலேயே தேவர்கள் பிரீதியடைவார்கள். புராணேதிகாச சிரவணத்தால் யானும் அதிக சந்தோஷமடைகிறேன். அதனையே யானும் புகழ்வேன். இவன் இவ்வாறு புராணசிரவணஞ்செய்த நரசிரேஷ்டன். சத்சாவகாசத்தால் தர்மபுத்தியுண்டாகி, தர்மங்களையெல்லாம் நன்குணரப் புராணசிரவணஞ் செய்யவேண்டுமென்னும் இச்சையால், சிரத்தை பக்திகளுடன் கூடிப் புராணஞ்சொல்லச்செய்து சிரவணஞ்செய்து விசேஷமான பக்தியடைந்தனன். ஆதலின் மாதடன் புராணஞ்சொல்லும் பெரி

* நிஷ்கம் - ஓர் நாணயம். இதுசுமார் மூன்று உளுந்தெடையுள்ளது



யோரிடஞ்சென்று பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து உலோபாதிகளின்றி, சுவர்ணத்தைத் தக்ஷிணையாகக் கொடுத்தால், சாசுவதமாகப் பிரமபதவியை யடைவான். இரண்டாவது விமானத்தில் வந்தவனும் இதேசத்கருமஞ் செய்தவனன்றிப் பிறிதொன்றும் செய்தவனல்லன். இவன் புராணிகனுக்கு விசேஷமான பூசைசெய்துளனாதலின் அதனைக்கருதியே யான் இவனையும் பூசித்தேன். புராணஞ்சொல்பவனைப் பூசித்தலால் யானும் பிரமவிஷ்ணு ருத்திரர்களும் பூசிக்கப்பட்டவர்களாவோம். சிரார்த்தாதி காலங்களில் உத்தமமானபக்ஷிய போஜனங்களுடன் ஒருமுறை பூஜைசெய்கின்றவர்கள் என்னைப்பதினைந்து வருஷங்கள் பூசித்தபலனை யடைவார்கள். புராணப்பிரசங்கியை ஒருமுறை திருப்திசெய்த பக்ஷத்தில் அநேகவருஷங்கள் யான் திருப்தியடைவேன். யான்மட்டுமன்றி, இந்திராதி சகலதேவர்களும் பிரமவிஷ்ணு சிவாதிகளுந் திருப்தியடைவார்கள். புராணப்பிரசங்கி சந்தோஷிப்பானாயின் சமஸ்த தேவர்களும் திரிமூர்த்திகளும் சந்திர சூரியர்களும் கிரகங்களும் சந்தோஷிப்பார்கள். ஸ்நானம் பூஜை ஜபம் ஹோமம் சாஸ்திரம் சவுசம் அஹிம்சை விரதாசரணம் உபவாசம் தைரியம் மௌனவிரதம் இந்திரியநிக்கிரகம் பிரமஞானம் குரோதமின்மை தானம் சாந்தி தயை தவம் வாவி கூப தடாகங்களின் பிரதிஷ்டை சாந்திராயணம் யாகங்கள் தீர்த்தங்கள் ஆச்சிரமங்கள் முதலியனவெல்லாம் தர்மசாதனத்திற்காகவே யிருக்கின்றனவென்று பெரியோர் கூறுவார். தர்மத்தாலேயே பொருளும் காமமும் மோக்ஷமும் உளவாகும். சதுர்வித புருஷார்த்தங்களாலேயே இகபரங்களில் நிரந்தரசுகமுண்டாகும். பாவத்தால் துக்கமுண்டாகுமாதலின் பாவத்தைச்செய்யாமல் தர்மத்தை யாசிரயித்துப்புண்ணிய கருமங்களையே செய்யவேண்டியது.

அவ்வகையதருமமும் ஸத்வமயம் ரஜோமயம் தமோ மயமென மூத்திறப்படும். ஸத்வமயமான தருமம் தவத்தால் பிரமஞானமடைந்த முநிவர் சித்தர்களிடத்தில் எப்பொழுதும் நித்தியமாகவிருக்கும். ரஜோமயமான தருமம் தேவர்களிடத்திலிருக்கும். தமோமயமான தருமம் தானவதைத்தியரிடமிருக்கும். பரிசுத்தமான இவர்களுடைய சத்கருமம் சொல்லப்பட்டது. இதுசத்தியம். அத்திவ்வியபுருஷர்களிருவரும் மகாபுண்ணியர்கள். அவர்களுடைய சரித்திரத்தை நீ கேட்டனையாதலின் நீ புண்ணியபுருஷனென்பதிற் சந்தேகமில்லை. இயமன் கூறியவை யாவும் சத்திய

மென்று யாவரும் நம்பவேண்டும். புத்திரனே, எனக்கு ஐந்தாவது முகமொன்றிருந்தது. அம்முகத்திலிருந்தே புராணங்கள் பல விதமாக வெளிப்பட்டு உலகத்திற்கு இதத்தைச்செய்கின்றன. புராணங்கள் எனக்குப் பிரீதிகரமானவை. வேதவேதாங்கங்களும் எனக்குப் புராணங்கள் போலப் பிரீதிகரமானவையன்று. இப் புராணேதிகாசங்களைச் சிரத்தை பக்திகளுடன் புராணிகனுக்குச் சிவனுபாய விருத்தியையுண்டுசெய்து, எப்பொழுதுஞ் சிரவணஞ் செய்வோர் உத்தமமான கதியை யடைவார்கள். தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பூலோகத்தில் நன்றாக விளக்குவதற்காகவே புராணேதிகாசங்கள் எல்லாவற்றையுஞ் சொன்னேன். இவை வேதார்த்தத்தை விஸ்தீரணமாகச் சொல்லத்தக்கவை. சுலபபாண்டித்திய முடையவர்கள் வேதார்த்தத்தையுணரா ராகையின் அவர்களும் நன்குணருமாறு விஸ்தீரணமான புராணேதிகாசங்களைச் சொன்னேன். தர்மப்பிரதிபாதகமான இவ்வகைய புராணேதிகாசங்களைச் சிரவணஞ் செய்பவனும் பக்தியோடு பாராயணஞ் செய்பவனும உத்கிருஷ்டமான ஸ்தானத்தை யடைவார்கள். புராணசிரவணகாலத்தில் தக்ஷிணைகொடுத்துக் கேட்கும்பக்ஷத்தில் பரமார்த்த ஸ்வரூபத்தில் ஐக்கியமாகின்றான். இஃதொரு ஆச்சரியமல்ல. பாத்திரனுக்குத்தானஞ் செய்தபக்ஷத்தில் அவனுக்குயர்வுங் கைகூடும். தீர்த்தங்களில் கேதாரம், விரதங்களில் மஹாவிரதம், பர்வதங்களில் மேரு, பக்ஷிகளிற் கருடன், நதிகளிற் கங்கை, தேவர்களிற் சர்வேசுவரனாகிய சிவபெருமான், பாத்திரங்களில் வாசகன் [புராணிகன்] சிரேஷ்டமாம். இவ்விஷயத்திற் சிறிதுஞ் சந்தேகமில்லை. புராணஞ் சொல்லுகையில் பக்தியோடு பூஜைசெய்தவன் சகலதேவர்களையும் பூஜை செய்தவனாவான். புராணபாராயணம் சிரவணஞ்செய்தவர்கள் பெறும்புண்ணியம் ஆச்சரியம். விசேஷமான தானங்கொடுத்துச் சிரவணஞ்செய்தவனுடைய பலன் இன்னும் விசேஷமானது. நாடோறும் பக்தி சிரத்தையோடு சிவசந்நிதானத்திலிருந்து சிரவணஞ் செய்தவன் சிவசாயுச்சியத்தை யடைவதிற் சிறிதும் ஐயமில்லை இதுசத்தியம் என்று கூறியருளினர்.

## ஓர் நன்கொடை

வளவனூர் குமாரகுப்பம் ஸ்ரீ சண்முகசுவாமிகள் மடாலயம் ஸ்ரீமத் சுந்தரானந்த சுவாமிகள் இத்திருக்கூட்டத்தினர் செய்யும் சமய பரிபாலனைத்தினிமித்தம் 10 ரூபா நன்கொடையாக மணியார்டர் செய்தனுப்பி உபகரித்தார்கள்.

பத்திராசிரியர்.

## சித்தாந்த நவநீதம்.

சித்தாந்த நவநீதம் என்னும் விடய சம்பந்தமாக இனி பல சிறந்த சிறு வியாசங்கள் வெளிவரும். இவைகளை மந்த புத்தியுடையவர்களும் ஒரு முறைக்குப் பலமுறையாக வாசிப்பார்களாயின் ஞானநெறியிற் றலைப்படலாகும்.

### பதி பசு பாசம்.

இவ்வுலகத்தில் உயிருள்ளனவும் உயிரில்லனவுமாகிய இருவகைப் பொருள்களிருப்பதை நாம் பிரத்தியட்சமாக அறிகிறோம். இவைகளைப் படைத்த சர்வ வல்லமையும் பேரறிவுமுள்ள கடவுள் ஒருவர் உண்டு என்பதை அநுமானத்தாலும் நூல்களாலும் அறிகிறோம். ஆக மூன்று பொருள்களை நாம் அறிகிறோம். எல்லாப் பொருள்களும் இம்மூன்றினுள் அடங்கும். இம்மூன்று பொருள்களின் இலக்கணங்களைக் கூறுவதற்கே உலகில் பல சமய நூல்கள் உண்டாயின. இவற்றுள் கடவுளைப் பதியெனவும், உயிர்களைப் பசுவெனவும், உயிரில்லாதனவாகிய சடப்பொருள்களைப் பாசம் எனவும் சித்தாந்த சாஸ்திரம் கூறும். கடவுளும் உயிர்களும் சித்துப் பொருள்கள்; அதாவது, அறிவுடைப் பொருள்கள். பாசம் அசித்துப் பொருள்; அதாவது அறிவில்பொருள். எல்லாவற்றையும் கடந்தது எதுவோ, அதாவது, பிருதிவிமுதல் நாதமீறாகச் சொல்லப்பட்ட பாசகாரியமாகிய தத்துவங்களனைத்தையுங் கடந்து, மனம் வாக்குக் காயங்களால் அறியப்படாதது எப்பொருளோ, அப்பொருள் கடவுள் எனப்படும். அப்பொருளுக்குப் பசுக்கள் அடிமைகளாகவும், பாசம் உடைமையாகவும் இருத்தலால் அது பதியென்னப்படுகின்றது. உயிர்கள் பாசத்தடையுடையவைகளாயிருப்பதனால் பசு என்னப்படுகின்றன. இவைகள் ஆன்மாக்கள் எனவும் படும். பாசம் என்பது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களை. (பாசம்=கயிறு). இவை உயிர்களைக் கயிறுபோல் பந்தித்திருத்தலால் பாசம் என்னப்பட்டன.

பதி என்றும் ஒன்றே. உயிர்கள் என்றும் அளவிறந்தன. பதியும் பசுவும் பாசமும் அநாதிநித்தப் பொருள்கள். அதாவது, தோற்றமும் ஈறுமின்றி என்றும் உள்ள பொருள்கள். பதி என்று உண்டோ அன்றே பசு பாசங்களும் உண்டு, பதியும் பசுவும் அநாதி நித்தப் பொருள்களாயிருந்தாலும், பதி மலரகிதமாகவும், பசு மலசகிதமாகவும் இருக்கும். அதாவது, பதிக்கு இயல்பாகவே பாசத்

தொடக்கில்லை. பசுவோ இயல்பாகவே பாசத்தோடு கூடியதாயிருக்கும். எப்படியெனில், செம்பானது இயல்பாகவே களிம்போடுகூடியிருத்தல்போலென்ப. பசுவுக்கு மூன்றுவிதமான நிலைகள் உண்டு. அம்மூன்று நிலைகளும் முறையே கேவலாவத்தை, சகலாவத்தை சுத்தாவத்தை எனப்படும். இவற்றுள் கேவலாவத்தையென்பது உயிரானது ஓரறிவுதானும் இன்றி ஆணவம் என்னும் மலத்தாற் கட்டுண்டு கிடக்கும் நிலை. அதாவது ஆன்மாவானது அறிவுப் பொருளாயிருந்தும் ஆணவம் என்னும் மலத்தின் வசப்பட்டுத் தன் அறிவும் ஆற்றலும் அற்பமும் விளங்காமல் கிடந்து துன்புறும் அவசரம். இந்நிலை தாயின் கருப்பாசயத்திற் கட்டுண்டு அறிவும் செயலுமின்றிக் கிடக்கும் ஒரு சிசுவின் நிலைக்குச் சமமாகச் சொல்லப்படும். (இதனைக் காரிட்ட வாணவக் கருவறையிலறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போற் கட்டுண்டிருந்த வெமை வெளியில் விட்டு என்னும் முதலையுடைய தாயுமானசுவாமிகள் திருப்பாடலுக்கு இப்பத்திரிகை முதல் மலரில் வெளியிட்டிருக்கும் விரிவுரையாற்றெளிக). செம்பானது களிம்பினின்று நீங்கப் பொன்னாவது போல் ஆன்மாவானது தன்னை அநாதியாகவே பிணித்திருக்கும் ஆணவமலத்தினின்றும் நீங்கினால் பேரறிவும் பேராற்றலும் பெற்றுச் சிவமேயாக நின்று சிவானந்தத்தை யனுபவிக்கும். இதனையுணர்ந்த பரம கருணாநிதியாகிய இறைவர் அவ்வாணவ மல வலியையடக்கி உயிர்களின் அறிவையும் செயலையும் விளக்குமாறு திருவுளமிரங்கி மற்றொரு மலமாகிய மாயையைக்கொண்டு அவைகளுக்குத் தனு கரண புவனபோகங்களைக் கொடுத்து பல பிறவிகள் எடுக்கச் செய்கிறார். தனுவென்பது பலவகைப்பட்ட சரீரங்கள். கரணமென்பது சரீரத்திலுள்ள அந்தக்கரணங்களும், புறக்கரணங்களும். புவனமென்பது உயிர்கள் பிறக்கும் இடங்கள். போகம் என்பது உயிர்கள் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள். இவ்வாறு உயிர்கள் பிறவிகள் எடுத்துழலும் அவசரம் சகலாவத்தையெனப்படும்.

முதலில் ஓரறிவுதானும் விளங்காதிருந்த உயிர்களுக்குப் புல் பூடு மரம் முதலிய பிறவிகளைக் கொடுத்து ஸ்பரிசம் என்னும் ஓரறிவு விளங்கச்செய்கிறார். பின்னர் இப்பி சங்கு முதலிய பிறவிகளைக்கொடுத்து பரிச உணர்ச்சியோடு இரத உணர்ச்சியும் விளங்குமாறு செய்கிறார். அதன் பின் கறையான் எறும்பு முதலிய பிறவிகளில்விட்டு கந்த உணர்ச்சியும் உணர்த்துகிறார். அதன்பின் தும்பி வண்டு முதலிய பிறவிகளிற் செலுத்தி உருவமும் அறியச் செய்கிறார். அதன்பின் பறவைகளாகவும் விலங்குகளாகவும் பிறக்குமாறு செய்து சத்தத்தையும் உணர்த்துகிறார். இவ்வாறு சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐவகையுணர்வும் நிரம்பிய பின் மனிதப்பிறவியிற் செலுத்தி சித்தத்தாலறியும் அறிவையும் கொடுத்து இதாகிதங்களைப் பகுத்தறியுமாறு செய்து, தீவினையொழித்து நல்வினையே செய்யவேண்டி வேதாகமங்களை யருளிச் செய்கின்றனர். (ஆன்மாக்கள் செய்யும் நல்வினை தீவினைகள் மும்மலங்களுள் ஒன்றாகிய சன்மமலம் எனப்படும். இம்மலத்திலக்கணத்தை முதன்மலரைப் பார்த்தறிக). தீவினை செய்வாரை நரகத்திலிட்டும், கீழான பிறவிகளிற் செலுத்தியும், தண்டித்து மீண்டு மீண்டும் மனிதப்பிறவியில் விடுகிறார். நல்வினை செய்வார்க்குச் சொர்க்காதி போகங்களைக் கொடுத்தும், சரியை கிரியா யோகங்களிற் செலுத்தியும் மல பரிபாகம் உண்டாகும் சமயம் பார்த்து ஞானாசிரியரா யெழுந்தருளி ஞானதீக்கைசெய்து பாசக்ஷயம்பண்ணி பதிஞானத்தை யுணர்த்தி தன்னுடன் இரண்டறக்கூட்டி எல்லையற்ற இன்பமார்ந்திருக்குமாறு செய்கின்றனர்.



## பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே.

இதுவரையிற் கூறியவாற்றால் கேவலாவத்தையிற் கிடந்து அறிவு ஒரு சிறிதுமின்றி ஆணவமலத்தாற் பணிப்புண்டு மிக மோகமாகிய அந்தகாரத்திலிருக்கும் ஆன்மாக்களின் மீது கருணைகூர்ந்து சிவபெருமான் அவைகளுக்குப் பல பிறவிகளைக் கொடுத்து அறிவு விளங்குமாறு செய்து, அவ்வாணவ மல வலியைத் தொலைத்துத் தமது பரமானந்தப் பதமலர் நிழலைத் தந்தருளுகின்றார் என்பது பெறப்பட்டது. சிவபெருமான் தமக்கென ஓர்குறி குணம் செயல் ஒன்றும் இல்லாதிருந்தும் இவ்வாறு ஆன்மாக்களுக்கருள் செய்யும் பொருட்டு அவற்றின் பக்குவங்களுக்கேற்ப எண்ணிறந்த அருளுருவங்களைக்கொண்டு பஞ்ச கிருத்தியங்களைச் செய்தருளுகின்றார். ஆதலால் யாதினும் மிகவரிய இம்மானிடப் பிறவியைப் பெற்றவர்கள் இப்பிறவியிலேயே அவரோடு ஒத்துச்சென்று ஆட்படவேண்டும். இல்லாவிடில், இறைவனார் இவர்களுக்குப் பலபிறவிகளைக் கொடுத்து அறிவை விளக்கியதினால் இவர்களுக்கு யாதொரு பயனுமின்றாய், இவர்கள் அவமேகழிக்கும் நாட்கள் சகலாவத்தையிற் றங்கி பிறவியெடுத்து அறிவு விளங்கப்பெற்ற நாட்களாகாமல், கேவலாவத்தையிற் கிடந்து பிறவியெடாமல் அறிவின்றித் துன்புறும் நாட்களோடொப்பனவாம். ஆதலால் அமிழ்தினுமினிய தமிழ் வேதம் "பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே" என்றருளிச் செய்தது.

பத்திரிகாசிரியர்.

## சிவபரத்துவம்

கடவுள் ஒருவரே சிருட்டி திதி சங்காரம் என்னும்மூன்று தொழில்களைச்செய்ய பிரமா விஷ்ணு உருத்திரன் (எனப்படும் சிவன்) ஆகியமூன்று மூர்த்திகளாயிருக்கிறார் என்பது பலர் அபிப்பிராயம். விஷ்ணுவே பரம்பொருள் என்பதும் பிரமன் விஷ்ணுவினாலும், சிவன் பிரமனாலும் படைக்கப்பட்டவர்கள் என்பது வைணவர்களின் கொள்கை. சிலர் "சிவன் மசானத்தில் வசித்துக்கொண்டு பூதபிசாச பேய்களோடாடும் ஒரு பிசாசத்தலைவன். இவனைத்திராவிடர் தெய்வமென்று வணங்குகிறார்கள்" என்கிறார்கள், இவ்வாறு ஆங்கிலத்தில் சிலநூல்களும் இயற்றி வைத்திருக்கிறார்கள். இவ்வாறு சிவ பரம்பொருளின் இலக்கணந்தெரியாமல் பலர் பலவிதமான விபரீதக்கொள்கைகளை யுடையராய்ப் புத்தகவாயிலாகப்பிறரையும் தம்வயமாக்கி வருகின்றனர். சைவசமயிகளாகிய நம்மவர்களுள்ளும் பலர் தங்கள் சமய நூலுணர்ச்சியில்லாமையால் இவர்கள் சொல்வதைக்கேட்டு மயங்குகிறார்கள். நம்மவர்கள் அனாவசியமான பலவழிகளில் வீணே எவ்வளவாயினும் பொருள் செலவிடுகிறார்களேயன்றி இவ்விபரீதங்களை விலக்கப்பொருள் செலவிடுவதில்லை. எம்போலிகள் இதுபோன்ற பத்திரிகைவாயிலாகக் கூடுமானவரையில் சனங்களுக்கு உணர்த்த முன்வரினும் இவர்களை ஆதரிக்க முன்வருவாரில்லை. ஆதரிப்பாரின்றி பத்திரிகை நடைபெறுதொழியின் குறை கூறுவதற்குமாத்திரம் இவர்கள் பின்னிடுகிறதில்லை. சைவர்கள் என்று பேர் வைத்துக்கொண்டு, விபூதி உருத்திராக்கங்களை யழகுபெற வணிந்துகொண்டிருக்கும், ஆயிரம் பேர்களுள் பதின்மரேனும் இத்தகைய பத்திரிகைகளைவாங்கி வாசிப்பார்களானால் போதுமே. இவர்கள் தங்கள் குழந்தைகள் விளையாடுதற்கும் வேடிக்கைகளுக்கும் பந்து மித்திரர்களைச் சந்தோஷிப்பதற்கும், செலவிடும் தொகையில் ஒரு சிறுகூறு சைவசமய பரிபாலனத்தின் பொருட்டுக் கொடுக்கலாகாதா. கொடுக்க இயலுமாயினும், உண்மையான சைவப்பற்று இல்லாமையால் கொடுக்கமனம் வருகிறதில்லை. வருடம் ஒன்றுக்கு டைட்டில்பேஜ் உட்பட 42 பாரம் கொண்டதாக ஒருபத்திரிகை வெளிவந்தும் ஒரு ரூபா கொடுத்து வாங்கிப்படிக்க மனம் வரவில்லை. சைவர்கள் இவ்வாறிருந்தால் இவர்கள் வழிபடும் கடவுளைப் பேய் பிசாசென்று அயலவர் நிந்திப்பது அதிசயமாமோ. அதிசயமாகாது. ஆகாது. இனி யாம் சிவபரத்துவம் என்னும் விடயத்தின்கீழ் பலசிறு வியாசங்களை வெளியிட்டு வருவோம். உண்மைச் சைவாபிமானிகள் அசட்டையால் இதுவரையில் இப்பத்திரிகையைப் பெறாதவர்கள் இனியேனும் பெறுமாறு நல்லறிவுச் சுடர்கொளுத்திச் சைவர் பல்லாயிரவரும் இப்பத்திரிகையை வாங்குமாறுசெய்யப் பிரார்த்திக்கின்றோம்.

பத்திரிகாசிரியர்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சைவம்.

மலர் 6. | சித்தார்-ஞு மாசிமீ -1920ஞு பிப்ரவரிமீ | இதழ் 2

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் துதி.

(காசிகண்டம்.)

கேழ்கிளர் புனிற்றுத் திங்கள் கிடந்தொளிர் சடையோன் பங்கிற்
றாழிருங் கூந்தற்பேதை தடமுலைத் தீம்பான்மாந்தி
யேழ்பில வரைப்புமுய்ய வீர்ந்தமிழ் மாரிபெய்த
காழிமா முகிலின் செய்ய மலரடி கருத்துள்வைப்பாம்.

(இ-ள்.) ஒளிவீசும் இளம்பிறைச் சந்திரன் இருந்து பிரகாசிக்கும் சடையினையுடைய சிவபெருமானது வாமபாகத்தில் எழுந்தருளியுள்ள நீண்டு மாட்சிமைப்பட்ட அளகபாரத்தையுடைய பிராட்டியாரது பூரித்த திருத்தனங்களினின்றிழிந்த மதுரங்களைப் பாலினை அமுதுசெய்து, சப்தலோகங்களிலுமுள்ள ஆன்மாக்கள் உய்யும்படி குளிர்ந்த தமிழ் வேதமாகிய மழையைப் பொழிந்து, சீகாழிநகரத்தில் திருவவதாரஞ்செய்த பெருமைபொருந்திய மேகமாகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரது சிவந்த மலர்போன்ற பாதங்களை நமது மனத்தில்வைத்து வணங்குவாம். (எ-று.)

---

## சிவஞானபோதம்.

(6-வது பக்கத்தொடர்ச்சி.)

### ஒன்பதாஞ் சூத்திரம்—இரண்டாம் அதிகரணம்.

உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத்
தண்ணிழலாம் பதி.

(இ-ள்.) நிலம்முதல் நாதம் ஈறாகிய பாசக்கூட்டமானது, நின்றுழிநில்லாது பரந்து திரிதலில் அதிவேகமுடைய, பேய்த்தேரின்

இயல்புடைய தென்றறிந்து, அதினின்றும் நீங்கவே, பதிஞான மானது பிறவித்துயராகிய வெப்பத்திற்கு குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். (எ-று.)

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும்பொருள்—உயிர் பாசத் திலே பற்றற்றால் அரன் வெளிப்படுவன்.

2-வது—ஐயப்பாடு—பாசத்தை அசத்தென்று கண்டவிடத்து ஞானசொரூபம் தோன்றுமோ, தோன்றாதோ.

3-வது—பிறர் கூறும்பக்கம்—அசத்தாகிய பிரபஞ்சத்தை அசத்தென்றறிந்து நீங்கியவிடத்து வெறும்பாழாகிய சூனியம் தோன்றுமேயன்றி ஞானசொரூபம் தோன்றாது. (இவ்வாறு கூறுவோர் மாயாவாதிகள்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு—படிக சொரூபத்தைக் காட்டாது மறைத்துநின்ற வேற்றுநிறங்களை இவைநிலையில்லாதனவாகிய வேற்று நிறங்களெனக்கண்டு நீக்கியவிடத்து, படிகத்தின் உண்மைச்சொரூபம் நிலைத்து விளங்கித்தோன்றும். அதுபோல என்றும் நிலைத்திருப்பதாகிய ஞானத்தினுடைய சொரூபத்தைக்காட்டாது மறைத்துநிற்கும் நிலையற்ற பிரபஞ்சத்தை நிலையற்றதென்று விவேகித்தறிந்தவிடத்து, சிவஞானத்தின் சொரூ மானது நிராலம்பமாய் விளங்கித்தோன்றும். ஆலம்பம்=ஆ ரம் — நிராலம்பம்=ஆதாரமில்லாதது — பற்றுக்கோடில்ல அதாவது மலரகிதமாயிருப்பது.

இயைபு—உதாரண வெண்பா—

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லானவறிவா யளவிறந்து தோன்றானே
வானே முதல்களையின் வந்து.

(இ-ள்.) நிற்குணன் ஆய் = அசுத்தப்பிரபஞ்சம்போல குணரூபமாய் அளவிட்டறியப்படுவானும் அல்லனாய்—நின் ஆய்=முக்குணங்களைக்கடந்த மிச்சிரப் பிரபஞ்சம்போல மல காரியரூபமாய் அறியப்படுவானும் அல்லனாய்—நித்தியான ஆய்=மல கன்மங்களையுங்கடந்த சுத்தப்பிரபஞ்சம்போல தியானந்த ரூபனாயறியப்படுவானும் அல்லனாய்—தற்பரம் ஆய்=



இம்மூன்றனோடுங் கூடிப்பொது இயல்புபற்றி அவ்வாறு உணரப்படும் உயிர்போல் அன்றி அதற்குமேலாய்—நின்ற தனிமுதல்வன்=இவ்வாறு நிற்றலால் ஒன்றன் இயல்புபற்றி அறியப்படாத தனிமுதலாகிய இறைவன்—வான்முதல் களையின்=ஆகாயம்முதலிய அசத்தை அசத்து என்று கண்டு நீங்கியவிடத்து—அளவு இறந்து அற்புதம்போல் வந்து=பயின்றறிந்து வரும்தனது சுட்டறிவின் அளவினைக் கடத்தலான் இன்னதென்று அறியவாராத சூனியப்பொருள் போலத்தோன்றி—ஆன அறிவு ஆய்த்தோன்றானோ=பின்னர்ச்சுட்டிறந்து அறியும் தன் அறிவின்கண் நீங்காது நிலைபெற்ற அறிவாய்ச் சோதிக்குட் சோதியாய் விளங்கித்தோன்றான் கொல்லோ (எ-று.)

அசத்தெனப்பட்ட மூவகைப் பிரபஞ்சத்துள், அசுத்தப் பிரபஞ்சமெல்லாம் முக்குணமயமாதலால், சத்துவகுண விருத்தியாகிய பிரகாசரூபம் சாந்தரூபம் சுகரூபமாகத்தான், இராசத குணம் விருத்தியாகிய பிரவிருத்திரூபம் கோரரூபம் துக்கரூபமாகத்தான், தமோகுண விருத்தியாகிய நியமனரூபம் மூடரூபம் மோகரூபமாகத்தான் அளவிட்டறியப்படும். முதல்வன் இம்முக்குணங்களும் கடந்தவனாதலால் இவற்றுளொன்றாக அறியப்படான் என்பார் "நிர்க்குணனாய்" என்றார்.

மிச்சிரப்பிரபஞ்சம் முக்குணங்களைக்கடந்து நிர்க்குணமாய்
கலை ாதொன்றாயினும் மலகன்மங்களோடு விரவி நிற்றலால் மல
யடை மாகிய மோகம் முதலிய எழுவகை ரூபமாகத்தான், கன்ம
மாட்ட ாகிய சுகரூபம் துக்கரூபமாகத்தான் அளவிட்டறியப்
இந்த முதல்வன் மலகன்மங்களையுங்கடந்து நிற்றலான் அவற்றுள்
பரப்புக ியல்புபற்றி அறியப்படான் என்பார் "நின்மலனாய்" என்
சிவலே
பெற்ற
பதத்சுத்தப்பிரபஞ்சம் மலகன்மங்களையுங்கடந்து நின்மலமாயுள்ள
அடை ாறாயினும் காரியப்பட்டு அநித்தமாம் இயல்புடைமையிற்
மாய சயானந்த ரூபமாய் அளவிட்டறியப்படும். முதல்வன் காரி
சிவ ாட்டினது உபகாரத்தையுங் கடந்தவனாதலால் அவ்வாறும்
கிரிய ப்படான் என்பார் "நித்தியானந்தனாய்" என்றார்.

உண ஆன்மாவும் இம்மூவகைப் பிரபஞ்சத்துட்பட்டுச் சகுண ாயும் சமலனாயும் சாதிசயானந்தனாயும் பொது இயல்புபற்றி அறி

யப்படும். முதல்வன் அவ்வாறும் அறியப்படான் என்பார் "தற்பரமாய்நின்ற" என்றனர்.

அங்ஙனம் நின்றநிலை ஒன்றோடு உவமித்து அறியப்படாமை பற்றித் "தனிமுதல்வன்" என்றனர்.

இத்தன்மையனாகிய முதல்வன் நிலம்முதல் நாதம் ஈறாகிய பிரபஞ்சங்களை அசத்தென்று களைந்தவழிப் பயின்றறியாமையின் இன்னதென்றறிய வாராத சூனியம்போலச் சுட்டறிவின் அளவினைக் கடந்துதோன்றிப் பின்னர்ச்சுட்டிறந்தறியும் அறிவின்கண்ணே சோதிக்குட்சோதியாய் வெளிப்பட்டுத்தானே விளங்கித் தோன்றுவன் என்பார் "வானே முதல்களையின் அற்புதம்போல் அளவிறந்து ஆனா அறிவாய்வந்து தோன்றானே" என்றார்.

ஈண்டுக்குணம் என்றது முக்குணங்களை—அவ்வாறன்றி நிற்குணன் என்பது ஒருகுணமும் இல்லான் என்றுரைப்பின் அது தன் வயத்தனாதல் முதலிய எண்குணங்களை இயல்பாக உடைய முதல்வனுக்கு ஏலாமையின், மாயாவாதி முதலியோர் கூற்றாய் முடியுமென்றொழிக — தற்பரம் = தனக்குப்பரம்—தன் என்றது ஆன்மாவை — அற்புதம் = சூனியம். ஆனா அறிவு = தன் அறிவினிடத்து நீங்காது நிலைபெறும் அறிவு.

சாதிசயம் = அதிசயத்தோடு கூடியது

---

# சைவ சிராத்த ரகசியம்.

## தேவிகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கப்பிரசுரம்.

சிராத்தம்-சிரத்தையோடு செய்யப்படுவது. சைவசிராத்தம்-சைவசமயிகளுக்குரிய சிராத்தம். ரகசியம்-அதன் உண்மைக் கருத்து.

சிராத்தம், பிண்டம், தருப்பணம் என்னும் கிரியைகளை அநேகர் இன்னது செய்கின்றோம் என்னும் உணர்வின்றிக் கடமைக்கு மாத்திரம் செய்து வருவதால், அவற்றின் உண்மைக் கருத்துகளை வெளியிடுதல் அவசியமாகும்.



சிராத்தமாவது இறந்துபோன பிதா மாதா, பிதாமஹர் (பாட்டன்), பிதாமஹி (பாட்டி), பிரபிதாமஹர் (முப்பாட்டன்), பிரபிதாமஹி (முப்பாட்டி), முதலானவர்களைக் குறித்துச் செய்யப்படுங் கிரியையாகும்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என இவ்வைந்தனையுந் தலையாய அறம் என எடுத்துக்கொண்டு, இவற்றுள்ளுந் தென்புலத்தார் கடனோம்புதலே தலைமையிற்றலைமை பெற்ற அறமென முதற்கண்வைத்து ஓதுவாராயினர். அதனாலும் ஒருவன் செய்யவேண்டிய கிரியைகளுள் இது மிகச் சிரத்தையோடு தப்பாது செய்யப்படவேண்டுவதென்பது இனிது புலப்படும்.

இனி, ஒருயிர் இத்தூல வுடம்பைவிட்டு நீங்கும்போது அணுவளவாயிருக்குந் தனது சூக்கும உடம்போடு செல்லும். சென்று முன்செய்த கன்மத்துக்கேற்பச் சுவர்க்கம், நரகம், பூமி என்னுமிடங்களில் மீளவும் பிறக்கும். அப்படிப் பிறக்குங்காலத்துச் சுவர்க்கத்திலே பூதசாரவுடம்பையும், நரகத்திலே பூதவுடம்பையும், இப்பூமியிலே பூதபரிணாமவுடம்பையும் அடையும். இது எல்லார்க்கும் பொதுவாயதோர் விதியாம்.

சைவசமயத்திலே பிறந்து சிவதீக்ஷை பெற்றுச் சமயாசாரங்களை விதிப்படி உண்மையாக அனுஷ்டித்தவர் இறந்தபின் நரகத்தையடையார்; இப்பூமியினும் வந்து பிறவார்; சுவர்க்கத்திலும் புகமாட்டார். பிரகிருதி சம்பந்தமான பதினான்கு லோகங்களடங்கிய இந்த அண்டப்பரப்பிலாவது, இதுபோன்ற மற்றெந்த அண்டப்பரப்புகளிலாவது பிறவியடையார். பிரகிருதிக்கு அப்பாற்பட்ட சிவலோகத்தை யடைவர். சிவலோகத்திலும், சமயதீக்ஷை பெற்றோர் உருத்திரபதத்தையும், விசேட தீக்ஷை பெற்றோர் ஈசுரபதத்தையும், நிருவாண தீக்ஷை பெற்றோர் சதாசிவபதத்தையும் அடைவர். நிருவாண தீக்ஷை ஞானவதி, கிரியாவதியென இருதிறமாம். ஞானவதி தீக்ஷைபெற்றோர் சதாசிவ பதத்திலும் மேற்பட்ட சிவசாயுச்சியமான பரமுத்தியை யடைவராதலின், அவரொழிந்த கிரியாவதி தீக்ஷைபெற்றவரே சதாசிவபதத்துக்கு உரியவராவரென உணர்க. இனி, இறந்தவர்க்குரிய இத்தூல உடம்பேயன்றி மற்றை லோகங்களில் வரக்கடவனவாய தூலவுடம்புகளின் சம்பந்தமும்

அவற்றிற்குக் காரணமான சஞ்சிதகன்மமும், சூக்கும உடம்பும், அந்தியேட்டிக் கிரியையினாலும், தகனக்கிரியையினாலும் ஒழியும். சபிண்டீகரணத்தால் அவ்வுயிர் சிவலோகத்தையடையும். சிவலோகத்திலே பிதாவின் உயிர் ஸ்கந்த பதத்தில் ஸ்கந்த சொரூபமாகவும், பிதாமகருடைய உயிர் சண்டபதத்தில் சண்ட சொரூபமாகவும், பிரபிதாமகருடைய உயிர் கணாதீசபதத்தில் கணாதீச சொரூபமாகவும் இருக்கும். இவர்களுக்குத் தலைவராக முறையே ஸ்கந்த சண்ட கணாதீசரென்னும் மூவரும் அதிதெய்வங்களாக இருப்பர். இதனால், பிதிர்ப் பிதாமஹ பிரபிதாமஹர்களாகிய தெய்வங்களாய்ச் சிராத்தாதிகளில் வழிபாடு செய்வதற்குரியவர் ஸ்கந்த சண்ட கணாதீசர்களாவர் என்று அறியத்தக்கதாம்.

இனி, சிராத்தம் ஏற்பதற்குரியவர் சிவதீக்ஷைபெற்ற சைவாசாரியரேயாவர். ஆசாரியரை ஒரு விக்கிரகமாக வைத்து, அவரிடத்து அப்பிதிர்தேவதைகளான ஸ்கந்த சண்ட கணாதீசர்களை ஆவாகனஞ்செய்து அத்தெய்வசொரூபமாயிருக்கும் ஆசாரியர்களுக்கு அன்னம் அளித்துத் திருப்தி செய்வித்தலே சிராத்தக் கிரியையாம். அன்னமாகப் பாவித்து ஆமமளித்தலும் அதற்கொத்ததேயாம். ஆசாரியர் உண்ட அன்னம் அவரிடத்து ஆவாகிக்கப்பட்டுப் பிரசன்னமாய் விளங்கும் பிதிர்கள் உண்டதாகவே கொள்ளப்படும். அதன்பின்பு பிண்டமிடுவது எதன்பொருட்டென்னில், ஒருவேளை அப்பிதிர்கள் சிவபதத்தையடையாது சூரியலோகத்திலிருக்கவுங் கூடுமாதலால், சூரியலோகத்திலிருக்கும் அவர்களுக்குச் சிவலோகத்துக்குரிய சரீரத்தையுண்டாக்கி முந்திய பிதிர்களோடு சேர்ப்பிக்கும் நோக்கமாகவாம். பிண்டம்-சரீரம். பிண்டமிடுதல்-சரீரத்தையுண்டாக்குதல். இக்கிரியையினால் சூரியலோகத்துத் தங்கிய பிதிர்கள் சிவலோகத்தையடைவர். அதன்பின்னும் திலோதகதருப்பணஞ் செய்தல் எதற்காகவெனில், இறந்துபோன உயிர் சூரியலோகத்தையும் அடையாது, இங்குதானே இருக்கவுங்கூடுமாதலால், அவ்வுயிர் சூரியலோகத்தையடையுமாறு அதற்குவேண்டிய உபாயங்களைச் செய்தலாம்.

திலம் என்னும் சொல்லின் பொருள் பிதிர்லோகஞ் செல்வது என்பதாம். சூரியனிடத்துள்ள சில அணுக்கள் எள்ளினிடத்துமிருக்கின்றன. அதனால் சூரியகிரணத்தினால் ஆகரிஷிக்கப்பட்டுச்



சூரியலோகத்தையடையத்தக்க இயற்கை அவ்வெள்ளிலிருக்கிறது. உதகமும் இயல்பாகவே சூரியகிரணத்தால் ஆகரிஷிக்கப்பட்டு மேற்செல்லுந் தன்மையதாம். தருப்பை அதியுஷ்ண பதார்த்தம்; தன்னிடத்தடைந்த பொருளை மேற்செலுத்தும் ஆற்றலுள்ளது.

அதனால், தருப்பையை ஆசனமாக இட்டு, அதன்மேல் முடிந்த தருப்பையைச் சரீரமாக வைத்து, அதில் இறந்தபின் ஓரிடத்தையுமடையாது கிடக்கும் உயிரை ஆவாகனஞ்செய்து திலோதகமளித்தால், அத்திலோதக சம்பந்தமான உயிரும் சூரியகிரணத்தால் ஆகரிஷிக்கப்பட்டுச் சூரியனையடையும். பின்பு அங்கிருந்து சிவலோகஞ்செல்லும்.

இன்னும் சில விஷயங்கள் இங்கு விவரமாகச் சொல்லவேண்டியிருக்கின்றன. இத்தூலவுடம்பை விட்டுப் புறப்பட்ட உயிர் சூக்கும வுடம்பையுடையதாய்ப் பகற்பொழுதில் மத்தியானத்துக்கு முன் இறந்தால், சூரிய கிரணத்தால் இழுக்கப்பட்டு விரைவில் அச்சூரியலோகத்தை யடைந்துவிடும். சாயங்காலத்தி லிறந்தால் சூரிய கிரணத்தா லிழுக்கப்பட்டுச் செல்லினும் இடையில் சூரியாஸ்தமனமாகிவிடுதலால் மத்தியிலுள்ள சந்திரமண்டலத்தில் தங்கிவிடும். சூரியமண்டலம்போலச் சந்திரமண்டலமும் பிதிர்லோகமாய் விளங்கும். சில உயிர்கள் சந்திரமண்டலத்தையும் அடைய இயலாது சமீபத்திலுள்ள மேகமண்டலத்திலேயே தங்கிவிடும். அவை பின்பு மழைத்துளி பனித்துளிகளோடு திரும்பிப் பூமிக்கு வந்துவிடும். இரவில் இறந்த வுயிர்கள் இங்குதானே தங்கிவிடும்.

சந்திரமண்டலத்தையடைந்த உயிர் மீள இங்கு திரும்பமாட்டாது; சூரியலோகத்தையடைந்து, சிவலோகஞ் சென்றுவிடும். இச்செயல்கள் இவ்வாறிருத்தலால் இங்குத்தங்கிய அல்லது மழைத்துளி பனித்துளிகளோடு இங்கு திரும்பிய உயிரை மீளவும் சூரியலோகத்துக்கு அனுப்பும் நோக்கமாகவே திலோதக தருப்பணஞ் செய்யப்படும்.

இன்னும், அமாவாசாகாலத்தில் மத்தியானமாகிய பதினொரு மணி நேரத்தில் சூரியனும் சந்திரனும் ஒன்றுபட்டுப் பூமிக்கு நேரே பூரண கிரணங்களோடு நேர்படுதலால், அப்பொழுது செய்யப்படும் திலோதக தருப்பணத்தினால் இங்குள்ள வுயிரும் சந்திரமண்டலத்திற்றங்கிய உயிரும் சூரியலோகத்தையடைய ஏதுவா

கும். அன்றி, தருப்பணம் உவப்பித்தலாதலால், சூரியலோக சந்திரலோகங்களிலுள்ள பிதிர்களுக்குத் திலோதகமாகிய உணவளித்து உவப்பித்தலும் திலோதக தருப்பணக் கிரியையாம்.

சூரியமண்டலத்தில் தென்பாகமே பிதிர்களுக்குரிய இடமாம். அதனால், தெக்ஷிணாயனமும் அதனிலும் அவ்வயனத்து வரும் ஆடியமாவாசையும் பிதிர் தருப்பணத்துக்குச் சிறந்த காலமாக எண்ணப்படும்.

சூரியன் கன்னிராசியில் வரும் புரட்டாசி மாசத்தில் அத்தென்பாகத்தின் நடுவிடம் பூமிக்குநேரே நிற்க, சந்திரனது அபரபக்கமாகிய தென்பாகமும் ஒருங்குநேர் நிற்பதால், அச்சமயம் பிதிர் சிரார்த்தத்துக்கு விசேடமான காலமாம். அக்காலத்தை மகாளய பக்ஷமென்பர். மகா—பெரிய, ளயம்—ஒடுக்கம், பக்ஷம்-பக்கம், பிதிர்கள் சென்று ஒடுங்கியிருக்கும் பக்கம் என்பது பொருளாம். அக்காலம் சிராத்தஞ் செய்வதற்கும் பிண்டமிடுதற்கும் தருப்பணஞ் செய்தற்கும் ஏற்ற சமயமாம்.

உயிர்கள் நற்கதியடைதற்குத் தடையாய கன்மங்கள் பலவிருப்பதால், ஒரு முறையின்றிப் பலகாலும் சிராத்தம் பிண்டம் தருப்பணஞ்செய்வது ஆவசியகமாகும். ஒவ்வொரு அமாவாசைகளிலும், மாசப்பிறப்பு, கிரகணம், விஷுவம், அயனம் முதலிய விசேட காலங்களினும் தருப்பணஞ்செய்தலும் ஆவசியகமாம்.

இனி இக்கிரியைகளைச் சாஸ்திரங்கள் விதிக்கினும் அவ்வாறு நிகழக்கூடுமோவெனில், மந்திரங்களின் சக்தியினாலும், பாவிக்கும் மனோசக்தியினாலும், தெய்வபலத்தாலும் நிகழுமென்றுணர்ந்து கொள்க.

இப்படி இறந்தபின் பிதிரர் நற்கதியடைதற்கேற்ற கர்மங்களைச் செய்வதற்காகவே புத்திரப்பேறு வேண்டுமென்று நூல்கள் உரைக்கின்றன. அதற்குரிய இல்வாழ்க்கையையுஞ் சிறந்த அறமாக விதிக்கின்றன. தென்புலத்தார் கடனோம்பல் இல்லறத்தார் கடனென முதலில் விதித்தலும் அதுநோக்கியே. ஆதலால், சைவ சமயிகள் யாவரும் இப்பிதிர் கன்மங்களை மிகச் சிரத்தையோடும் இன்னது செய்கின்றோமெனப் பொருள் தெரிந்தும் சிவத்துவிசர் மூலமாகவும் செய்துவரக் கடமைப்பட்டிருக்கின்றனர். பிதிர் கன்



மங்களை ஒழுங்காகச் செய்து வராதொழியிற் பிதிர்சாபம் பெற்றுச் சந்ததி நாசத்தையுமடைய நேருமென்றும், ஒழுங்காகச் செய்துவந்தால் பிதிர்களது ஆசீர்வாதம் பெற்றுச் சந்தான விர்த்தியையும் பெறுவார்களென்றும் தருமநூல்கள் ஓதுகின்றன.

இனி, மந்திரலோபம் கிரியாலோபம் நேர்ந்தாலும் பெரும் பாபமாம். இக்காலத்திலே சிவத்துவிசர் அல்லாதவர்களும் சைவ சமயிகளுக்குச் சிராத்தம் தருப்பணம் செய்கின்றோமென வந்து அவர்கள் கொடுக்கும் பொருளைமாத்திரம் பெற்றுக்கொண்டு, மந்திரமின்றியும் கிரியாலோபமாகவும் செய்து வஞ்சிக்கின்றார்கள். அவர்கள் செய்யுஞ்சிராத்தமும் தருப்பணமும் எந்த மதம் எந்தச் சாஸ்திரங்களிலும் விதிக்கப்படாத சூனியச்செயலாயிருப்பதால் அவர்கள் செயலால் ஒருபயனும் விளையமாட்டாது. சிராத்தாதி கிரியைகளில் மந்திரம், கிரியை, பாவனை என மூன்று விஷயங்கள் உள்ளன. இப்பொழுது கிரியை செய்கிறவர்கள் பிதிரருக்குரிய மந்திரங்களை உச்சரிப்பதில்லை. கந்தசண்ட கணாதீசர்களது மந்திரங்களை உச்சரிக்கவேண்டியவிடத்து, "தகப்பனார்" "பாட்டனார்" "முப்பாட்டனார்" என்றும், ஆவாகனத்தில் மந்திரமின்றி ஆவாகனம் நம என்றும், கந்தபுஷ்ப தூபதீபங்களை உபயோகிக்குமிடத்து மந்திரமின்றி, கந்தம்நம, புஷ்பம்நம, தூபம்நம, தீபம்நம என்றும், தருப்பிக்கும்போது பிதிர்களின் மந்திரம உரையாது "திலோதகம்நம" என்றும் இப்படி அநேக கிரியைகளை மிகப் பிழையாகச் செய்கின்றார்கள். மந்திரம் உயிர்போலவும், கிரியை உடம்புபோலவும் இருப்பதால், மந்திரமின்றிச் செய்யப்படும் கிரியை உயிரில்லாத உடம்புபோலாகும். ஆயிரக்கணக்கான பெரும் பொருள்களைச் செலவு செய்து அன்போடு நடத்தும் சபிண்டிகரண முதலியவைகளையும் இப்படியே செய்துவிடுகின்றார்கள்.

இப்படி நியாயவீனமான செயலைச் செய்தல் அவர்களுக்குப் பெரும்பாவமாகவும், செய்வித்தவர்களுக்கு ஒரு பயனுமில்லாமலும், பொருள்நஷ்ட மாத்திரமாயும், கர்மநஷ்டத்தால் பிதிர்சாபத்துக்கிடமாயும் முடிகின்றது. ஆதலால், இவ்விருபகுதியாரும் இவ்வுண்மையை நன்கு பரியாலோசித்து எவர்க்கும் நஷ்டமில்லாமல் நடந்துகொள்ளுதல் தகுதியும் விவேகமும் புண்ணியமுமாம். ஏற்போர் பொருள்வரவை மாத்திரங் கருதுதலும், செய்வோர் ஏதோ

கடன் கழித்துவிட்டோமென்று எண்ணுதலும், ஆலோசனையின்றிச் செய்தலும் நீதியல்ல.

சைவசமயிகள் சைவாசாரியரைக்கொண்டு செய்வித்தால் இவ்வளவு நஷ்டம் நேரமாட்டாது. அறிவுடையோர் இவற்றைச் சிந்தித்துச் சிராத்தாதிகளைச் சாஸ்திரவிதிப்படி செய்து, தாமும் தமது சந்ததியாரும் பிதிர்களது ஆசீர்வாதத்தைப்பெற்று இம்மை மறுமையாகிய இருமைப்பயனையும் ஒருங்குபெறுவார்களாக.

திருச்சிற்றம்பலம்.

---

## அர்ச்சாதிபம்.

(9 - வது பக்கத்தொடர்ச்சி.)

பரன் உருவாதி மூன்றுங்கொள்ளுதல் குற்றம்பெறுதேனும், அவற்றைக் கொண்டதற்குக் காரணம் யாதெனின், (உருமேனி தரித்துக்கொண்ட தென்றலுமுருவிறந்த அருமேனியதுவுங் கண்டோ மருவுருவானபோது, திருமேனியுபயம்பெற்றோஞ் செப்பிய மூன்றுநந்தங், கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு காணே.) என்னுந் திருவாக்கே அதற்கு இறையாகும். அன்றியும், ஈண்டு யாம் விளக்கப்போந்தது பரனுக்கு உருவாதிகள் குற்றம் பயவாவென்பதையே யாகலான், அவை பரனிடம் போந்தகாரணத்தை விசாரிப்பது அவசியமுமன்று. ஆயினும், நன்னெறியின் ஞானகலர் நாடுமலமொன்றினையு, மந்நிலையேயுணர்வின் றறுத்தருளிப், பின்னண்பு-மேவாவிளங்கும் பிரளயாகலருக்குத், தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப், பூவலயந்-தன்னின்று நீங்காச் சகலர்க்கவர்போல, முன்னின்று மும்மலந் தீர்த்தாட்கொள்கை, அன்னவனுக் - காதிகுணமாதலினால்'' என்னுந் திருவாக்கை நல்லாசிரியரிடந் திருவடிதீக்ஷைபடைந்துகேட்டுத்தெளிந்திட அறிவித்தோம்.

பரனது அறிவும், தொழிலுமாகிய யாவும் உயிர்ப்பேதங்களின் றன்மைக்கேற்ப வியங்கி யுருவாதி மூன்றுருபகரித்தல் பெறப்பட்டமையின், உயிர்களை நாடாதபோது அவனுக்கு ஞானமுமில்லை, கிரியையுமில்லை, ஒருதன்மையுமில்லை. இதுபற்றியன்றே (சிவனுருவருவுமல்லன் சித்தினோடசித்துமல்லன்) என்னும் பரனது தன்மையை மேல் 9-வது பக்கத்தினுங் காட்டியிருக்கின்றோம்? "ஒரு நாமமோருருவ மொன்றுமில்லான்" எனப் பரமாசாரியர் கூறியருளியதும் இதுவே! "அன்றுந் திருவுருவங் காணாதேயாட்பட்டேன், இன்றுந் திருவுருவங் காண்கிலேன்-என்றுந்தான், எவ்வுருவோனும் பிரா னென்பார்கட் கென்னுரைக்கேன், எவ்வுருவோ நின்னுருவமேது'' என அம்மையார் கூறியதுஞ்சான்றாம். ஆயின், பரனது உண்மைத்தன்மைதான் யாதெனின். (இப்படியனிந்நிறத்த னிவ்வண்ணத்த, னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே) எனவும், (இன்னதன்மையனென்றறியாச்சிவன்) எனவுஞ் சைவத் திருமுறைகள் கூறலானும், "யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸாஸ:'' என்று வேதங்கள் முழங்கலானும் அதுவிளங்கும். பரனை இத்தன்மையனென்று ஒருவன் நிர்த்தேசஞ்செய்வது அளந்துசெல்லுந்தோறுங் கடந்துசெல்லுநிலை பொருவன் முடிவு காணலைபோமாறும். இந்த விசாரத்தால் பரனுக்கு உருவாதி மூன்றுமுளதென்பதும், இலதென்பதுமாய விருதன்மையும் வியக்தம். இலதென்பது அதீதமென்றபடியாம். இலது என்பது அவனதியற்கை யுண்மையும், உளது என்பது உயிர்கண்மாட்டுவைத்த அருளுண்மையுமாம். இப்படி விசாரித்திடுவோர் பரனுக்கு உருவமில்லை, அருவமேயுளது என்று சாதிப்பாரது சழக்குறையை மதியார்! மதியார்!! இன்னும் விரிக்கிற்பெருகும்.

இனிப் பரனை விக்கிரகங்களில் ஆராதிப்பது கூடாது என்னும் அசங்கதத்தையும் விசாரித்து ஒழிப்பாம். பரனுக்கு உருவமில்லை, விக்கிரகத்துக்கு உருவமிருக்கின்றது. உருவமில்லாதபரனை, உருவமாகிய விக்கிரகத்தில் வணங்குவது எங்ஙனமென்பர். பரனுக்கு உருவமுளது என்பதை முன்னர்ச்சாதித்தோமாகையால் உருவமுடையபரனை உருவமாகிய விக்கிரகத்தில் ஆராதிப்பது கூடுமென்று சாதிக்கயாம் பின்னிடேம்

பரனுக்கு உருவத்தோடு அருவமும் அருள்வடிவாகுகையில், அருவத்தை ஏன் வணங்கக்கூடாதெனின், உருவத்தை வணங்குகின்றயாம் அருவத்தியானத்தை விரோதியேமாகையால் அந்தவினை எம்மிடம் பயன்செய்யாது. உருவமின்றி அருவத்தைமாத்திரந் தியானித்தால்போதாதாவெனின் அருவமின்றி உருவத்தைமாத்திரம் தியானித்தால்போதாதோ என்னும் வினாநிகழும். அன்றியும்,

உருவத்தியானத்தால் தோஷமுண்டானாலன்றி அந்தப்பிரசினை பயன்செய்யாது. உருவமின்றி அருவத்தியானமுங் கைகூடாது, உருவத்தை மனசினால் தியானிப்பதொழிந்து விக்கிரகமாகவைத்துப் பூசிப்பது தோஷமெனின், என்னதோஷம்? சிவம் பரிபூரணமாயிருப்பது. சத்துச்சித்தாநந்தமயுள்ளது ஸ்ருஷ்டியில் அகப்படாதது. இதற்கு விரோதமாக விக்கிரமானது ஏகதேசமாயிருப்பது. அந்ருதஜடதுக்கமாயுள்ளது. ஸ்ருஷ்டியிலகப்பட்டது எனின், இதற்கு விடைகூறுதும். சிவம் "தஸ்மாத்துல்யோதிகோநஹி" என்னுஞ் சுருதியாலும், (தனக் குவமையில்லாதான்) என்னுங் குறளாலுந் தனக்குத்தானே ஒப்பாயிருப்பது. அதுபோல இரண்டாவதொருபொருள் அதற்கு வேறாக இல்லை. அதனால், அதை வழிபடும் வழியேயில்லை. அஃதில்லாதபோது சிவமொன்றிருக்கின்றது என்னுஞ்சொல்லிலும் பயனேயில்லை. இப்படி அஸங்கத முண்டாகையால், யாம் கூறிய விக்கிராராதனத்தை ஹேயமாகக் கொண்டதேதவறு. ஆயின் விக்கிரஹத்திலிருக்கும் ஹேயங்களுக்குப் பரிஹாரந்தா னென்னையெனின், விக்கிரஹத்தைத்தள்ளி வேறுவழியா லாராதிப்பதி லென்னபரிஹாரமோ அதுவே எங்கும் பரிஹாரமாம்.

## ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

(13.- வது பக்கத் தொடர்ச்சி.)

சுப்பிரதீகரும் தமது புத்திரியைச் சுவர்ண பூஷணாதிகளால் அலங்கரித்து ஊஞ்சல் மஞ்சத்திலிருத்தினார். வதுவரர் இருவரும் தம்முள் மாலை மாற்றிக்கொண்டார்கள்; ஆசாரியரோடு அவர் மனைவியாரையும் உடன் அமரச்செய்து இருவர் வம்சாவளிநாமங்கள் சொல்லி ஊஞ்சல் ஆட்டினார்கள்; மாமி முதலாயினோர் வதுவரர் பாதங்களைப் பால்கொண்டு பிரக்ஷாளனஞ்செய்து அவ்விருவருக்கும் நீராஞ்சனஞ் சமர்ப்பித்துப் பிரதக்ஷிணஞ் செய்தார்; அதினின்றும் இறங்கிச் சபையின்கண்ணே நானாவித வாத்தியங்கள் கோஷிக்கக் கல்யாணமண்டபஞ்சார்ந்து நவரத்தின ஆசனத்தின்மீது வீற்றிருந்தார்கள். தமது மனைவியாரோடு அவ்விடத்தே சென்று சுப்பிரதீகர் தமது புத்திரியினுடைய வலக்கையைத் தமது



கையினாலே பிடிப்ப, மனைவியார் கரகத்தினின்று தீர்த்தஞ்சொரிய, பழமுதலியவற்றோடு தமது புத்திரியைப் பரமசிவரூபமாய் எழுந்தருளிய உமக்குத் தந்தேம் என்று தமது கோத்திரத்தைச் சொல்லி ஆசாரியர் கையிலேகொடுத்து, அவர் வலப்புறத்திலே கமலவல்லியை இருத்தினார். பவளக்கொடிகளெல்லாம் நாட்டப்பட்ட கல்யாணமண்டபம் மிகுந்த சோபையுற வாத்திய கோஷங்களால் விளங்கிற்று. சங்குகள் எங்குந் தொனித்தன. வேதங்கள் கோஷித்தன. வரர் அக்கினியிலே ஓமஞ்செய்து அதனை வளர்த்தார். வதுவரர் இருவரும் தம்மிருகரங்களினால் பொரியை அக்கினியிலிட்டார்கள். வரர் தமது கையினால் வதுவின் கையைப்பற்றி அஷ்டமூர்த்தியாகிய சிவாக்கினியைப் பிரதக்ஷிணஞ்செய்து, பின்னரும் தமது பாரியாரோடும் சிவபிரான் திருவடிகளை அடைவேன் என்னுந் தியானத்தோடு எஞ்சிய கன்மங்களையு முடித்தார். இங்ஙனம் மகானாகிய அரதத்தாசாரியருடைய விவாகம் மிகு விமரிசையோடு முற்றியது.

கல்யாணத்துக்கு வந்தோர் அனைவரும் இந்தப்பெருமான் சமஸ்த லோகத்தையும் ரக்ஷிக்கும் பொருட்டே எழுந்தருளினாரென்று களிப்பினோடும் ஆரவாரித்துப் புகழ்ந்தார்கள். பின்னர் வதுவரர் இருவரும் வீதிவலம் வருவாரெனக்கொண்டு நகரவாசிகள் தத்தம் கிருகங்களை அலங்கரித்தார்கள். கன்னியர் கர்ப்பூரம் பச்சைக்கர்ப்பூரம் பொரிமுதலியவற்றைக்கொண்டு புறப்பட்டார்கள். வீதிகளைத்தூய்மைசெய்து சந்தனக்குழம்பு தெளித்து, சூரியகிரணங்கள் வீழாவண்ணம் விதானங்கள் அமைத்தார்கள். தேவர்கள் புஷ்பமழை வருஷித்தார்கள். வாயுசந்தனப்புஷ்ப சுகந்தங்கொண்டு யாண்டுஞ் சேவித்தான். பூருவபுண்ணியம் ஞானிகளை உபசரித்தல்போல, நகரத்தார் ஆசாரிய சுவாமிகளை மங்களத்தோடு உபசரித்தார்கள். அரதத்தாசாரியரும் அவர் மனைவியாரும் ஊஞ்சல் விட்டிறங்கி விவாகசாலைக்கு வெளிநீங்கி, வாகனத்திவர்ந்து கிராமப்பிரதக்ஷிணஞ்செய்து, பின்னர் அக்கினீசுவரர் ஆலயத்தை வலம்போந்து வணங்கி, உமாதேவியாருக்கும் சிவபெருமானுக்கும் புஷ்பாஞ்சலி எடுத்து, திருவருள் பெற்று ஆலயத்துக்குப் புறத்தே வந்து, வாகனமேற்கொண்டு வாத்திய கோஷங்களோடு தமது கல்யாணமண்டபம் நோக்கி வந்து, ஆராத்திரிகம் நீராஞ்சன முதலியன பெற்று, ஔபாசனாக்கினியோடு கிருகப்

பிரவேசஞ்செய்து, பிராமணர்களுக்கு விருந்து முதலாயின நடத்தி, அவர் ஆசிர்வாதம் பெற்று, அவர்களிஷ்டப்படி சுவர்னதானாதிகளைக்கொடுத்து மகிழ்வித்தனுப்பினர். இங்ஙனம் அரதத்தாசாரியர் கமலவல்லியாராகிய மனைவியோடமர்ந்து சிவாராதன முதலிய செய்து இல்லறம் நடாத்துவாராயினர்.

அரதத்தாசாரியர் உதயகாலத்தில் எழுந்து சிவத்தியானஞ்செய்து, தந்த தாவனமுதலியனசெய்து, ஸ்நானஞ்செய்து, சந்தியாவுபாசித்து, காயத்ரி செபம் ஓமம் சிவபூசை முதலியன செய்து கிரகஸ்தாச்சிரம விஷயத்தை விசாரித்துக்கொண்டு, மௌனத்தோடு போய் அக்கினீசுவரரை வணங்கி, பின்னர்த் திருக்கோடிகா, திருவாலங்காடு, திருவாவடுதுறை, ஆபத்சகாயேசுரம், பிராணேசுராலயம், ஆம்பிரவனேசுரம், அக்கினீசுரம் என்னும் எழுஆலயங்களையும் வணங்கி, மாத்தியான்னிகம் பிரமயஞ்ஞம் முடித்து, மத்தியான சிவபூசைசெய்து, வைசுவதேவஹோமஞ் செய்து, துவாரத்து அதிதிகளை நோக்கி உபசரித்து, பிராணாகுதி வாயிலாகச் சிவநிவேதனம் அயின்று, பிராமணர்களுக்குத் தாம்பூலம் அளித்து, சாத்துவிக சிவபுராணங்களைப்படித்து, தியானத்தோடு மாலையிலிருந்து, அக்காலையில் சந்தியை உபாசித்து, காயத்திரி செபம் ஓமம் முதலியனசெய்து, சிவாலயதரிசனஞ் செய்துகொண்டு, கிருகத்துக்கு வந்து சிவபூசை வைசுவதேவஹோமஞ் செய்து, அவர்களுக்குத் தாம்பூலம் கொடுத்து, தாமும் தாம்பூலம் சுவீகரித்து, சிறிதுபோது பிராமணர்களோடு சிவகதைகள் சொல்லிச் சிந்தனை செலுத்தி, இதயத்திலே உமாதேவியாரோடு சிவபெருமானைத் தியானித்து, இராத்திரி சூக்தத்தையும் படித்துச் சயனஞ்செய்வார். இருது காலங்களிலே பத்தினி கதனஞ்செய்து, சிவபாவனையோடு கிருகஸ்தாச்சிரமத்தை நடாத்துவாராயினர்.

---

## காசிகண்டம்

## வியாதன் கையுநாவு மெழாது நின்ற அத்தியாயம்.

---

அருமறைதேர் வியாதமுனி காதையினி தறையுமெனப்
பொருவரிய தவமாற்றும் பொதியவரை முனிகேட்ப
வெரிதவழு நெட்டிலைய சுடர்வேலா லெழுந்தோங்கு
வரையகடு தொளைபடுத்தி மாத்தடிந்தோன் கூறுமால்.



(இ-ள்.) அரிய வேதப்பொருளிற் றேர்ச்சியுடைந்த வியாத முனிவரது சரிதத்தை (அடியேன் செவிக்கு) இனிமையாகத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று, ஒப்புரைத் தற்கரிதாகிய தவத்தைச்செய்யும் பொதியாசலத்திலிருக்கும் அகத்தியமுனிவர் வினவவும், நெருப்பைச் சிந்துகின்ற நெடிய அச்சவடிவாய்ப் பிரகாசம் பொருந்திய வேலாயுதத்தினால், ஓங்கியுயர்ந்த (கிரவுஞ்ச) பர்வதத்தின் வயிற்றைத் தொளைபடுத்தி மாமரவடிவேற்ற சூரபன்மனைச் சங்கரித்த ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமான் உபதேசிக்கின்றார். (எ-று)

இவர்விடையேற் றானருள்கூ றெண்பத்தெண்ணாயிராராஞ்
சவுனகரா தியநைமி சாரணியத் துறைவோர்பாற்
குவலயமோ ரேழ்புகழக் கோதிலரு மறைவடித்து
நவையறுநூற் கடல்கடந்த வியாதமுனி நண்ணினன்.

(இ-ள்.) வாகனமாக இடபத்தையுடைய சிவபிரானது அநுக்கிரக மிகுந்த எண்பத்தெண்ணாயிரவராகிய சவுனகர் முதலாகச் சொல்லப்பட்ட நைமிசாரண்ய வாசிகளிடத்தில், ஒப்பற்ற சத்தலோகங்களும் புகழும்படி குற்றமில்லாத அரிய வேதங்களைப் பாகுபடுத்தி, தூஷணையற்ற சாத்திரமாகிய சமுத்திரத்தின் கரையைத் தாண்டிய வியாசமுனிவர் (முன்னொருகாலத்திற்) சென்றனர். (எ-று.)

நண்ணுமறை முனிவரனை யினிதேத்தி யுளநயந்து
பண்ணுமருக் கியமுதல யாவுமிகப் பரிந்தாற்றிக்
கண்ணுதல்வா னவன்போலுங் கடவுளர்மற் றுளர்கொலெனப்
புண்ணியமா தவர்கேட்பப் பொருவரிய முனிபுகல்வான்.

(இ-ள்.) (தம்மிடத்திற்கு) வந்த வேதவியாசமுனிவரை (உபசாரமொழிகளால்) இனிதாகத் துதித்து மனங் களிதுளும்பிச் செய்யத்தக்க அருக்கியம்-(பாத்தியம் - ஆசமனம்) முதலாகிய மரியாதைகளையெல்லாம் மிக்க ஆசையுற்றுச்செய்து, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைப்போல வேறுதேவர் யாவராயினும் இருக்கின்றார்களோ? என்று புண்ணியஸ்வரூபமாகிய சிறந்த தவத்தைச் செய்த நைமிசாரண்ணியவாசிகள் வினவ, ஒப்பிடுதற்கரிய வியாதமுனிவர் உரைக்கின்றனர். (எ-று.)

எக்கலையு மெய்ப்பொருளு முறையுணர்ந்து மிழுதைபோற்
சிக்குறுமா னவமலத்திற் சிமிழ்ப்புண்டு தெருளிலனாய்ப்
பொக்கமுற முளத்தோமும் பூவைபோற் றிருமேனி
யக்கடவுள் பிரமமெனக் கையெடுத்தாங் கறைந்தனனால்.

(இ-ள்.) எல்லாக்கலைகளையும் எல்லா (நூற்) பொருள்களையும் முறையாக (ஐயம்—திரிபு—அறியாமை என்னும் முக்குற்றங்களும் நீங்க) அறிந்திருந்தும், அகப்பட்டுள்ள ஆணவமலத்தினால் கட்டுண்ணப்பட்டு, ஞானமில்லாதவர்போல அறியாதவராய், பொய் பொருந்திய மனத்துடனே காயாம்பூவைப் போலுந் திருமேனி வாய்ந்த கடவுளாகிய அந்தத் திருமாலே பரப்பிரம ஸ்வரூபமென்று கைதூக்கி அம்முனிவர்கட்கு முன்னே கூறினர் (வியாத முனிவர்) (எ-று.)

கையெடுத்தல் சபதக்குறி எனக்கொள்க.

இற்றெனநான் மறைமுனிவ னியம்புதலு நகைகோட்டிக்
கற்றதனாற் செருக்கெய்திக் கழறினனென் றுளத்தெண்ணி
யொற்றைநெடுங் குழைக்கிழவன் காசியில்வந் துரைத்தியென
முற்றுமுணர்ந் தருண்முனிவர் முதுக்குறைவாற் புகன்றனரால்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் நான்கு வேதங்களையுங் கூறிய வியாதமுனிவர் விளம்பவும், (இறப்பு நிகழ்வு எதிர்வென்னுந் திரிகாலவர்த்தமான முதலிய) எல்லாவற்றையுமறிந்த நைமிசாரண்ணியமுனிவர், இவ்வியாதமுனிவர் தாங் கற்ற கல்வியினாற் கர்வமுற்றுக் கூறினரென்று மனதுட்கொண்டு, ஒன்றியாகிய நெடிய குண்டலமணிந்த சிவபெருமானது காசிப்பதியில்வந்து (அவ்வாறு) கழறவேண்டுமென்று சொல்லினர். எ-று.

காஞ்சிபுராணம்.

"வாத ராயண நீயிவண் மொழிதரு மாற்றம்
வேத நூற்பொரு ளுண்மையே யாமெனில் விசுவ
நாத னூர்திரு முன்பெமக் குரையென நவின்று
ரோது கேனென மூர்க்கனு மெழுந்துசென் றுற்று."—என மாறுபட்டுக் கூறியதுகாண்க.

மருள்பூத்து மதிமருண்ட மறைமுனிவன் முனிவரொடுந்
தெருள்பூத்துச் சிறப்பெய்துங் காசிநகர் சென்றெய்தி
யருள்பூத்த பஞ்சநத மாடிமா தவற்போற்றி
முருகூற்றும் பசுந்துளவ முகில்வண்ணன் சீர்பாடி.

(இ-ள்.) மயக்கமிகுந்து அறிவழிந்த வேதவியாசமுனிவர் நைமிசாரண்ய முனிவருடனே, ஞானமிகுந்து சிறப்பெய்திய காசிப் பட்டணத்தைச் சென்றுசேர்ந்து, கிருபைமிகுந்த பஞ்சநததீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, திருமாலைத் துதிசெய்து, தேன் ஊற்றெடுக்கின்ற பசிய துளவமாலையணிந்த மேகவண்ணராகிய விண்டு மூர்த்தியின் சிறப்பு (ஆகிய தோத்திரங்) களை யெடுத்துப்பாடி. எ-று.



இதுமுத லிரண்டுபாடல்கள் குளகம்.

பஞ்சநதமென்றது-தருமநதம்-கங்காதீரம்-தூதபாவை-கிரணைநதி-யமுனையாறு ஆகிய ஐந்தும் ஒன்றோடொன்று கலக்குந்தானம். இதன்விரிவு இந்நூலிற் பஞ்சநதத்தின் வரலாறுரைத்த அத்தியாயத்திற் பரக்கக்காண்க.

தண்டுளவ மணிபூண்டு பாகவதர் தற்சூழ
மண்டுதீம் புனன்ஞான வாவியின்கீழ்ப் பானில்லா.
வெண்டிசையி லுள்ளோருங் கேண்மின்க ளிறையாவான்
புண்டரீகக் கண்ணனெனக் கையெடுத்துப் புகன்றனனால்.

(இ-ள்.) (வியாதமுனிவர்) தண்மைதங்கிய துளவமணிமாலைதரித்துப் பாகவதர்கள் தம்மைப் புடைசூழ்ந்துவர, மதுரம்நிறைந்த நீரையுடைய ஞானதீர்த்தத்தின் கீழ்த்திசையிலே நின்று, எட்டுத் திக்கிலுமுள்ளவர்களுங் கேளுங்கள். (யாவருக்கும்) தலைவனாக வுள்ளவன் செந்தாமரை மலர்போலுங் கண்ணையுடைய திருமாலே என்று கைதூக்கிக் கூறினர். (எ-று.)

பாகவதர் = பகவத்பக்தி செய்வோர். இச்சொல் ஈண்டு விண்டுவினடியாரை யுணர்த்தியது:

அருவுருவா யேகமா யாதியாய் நிறைந்தருளும்
பொருவரிய சிவனல்லாற் புண்டரீகக் கண்ணனே
பிரமமென மயக்குற்றுப் பிதற்றுகின்ற பிழையதனா
லுரைபயில்நாக் கையசையா தூமனென முனியிருந்தான்.

(இ-ள்.) அருவுருவமாகியும் (அருவமாகியும், உருவமாகியும்), ஒன்றியாகியும், முழுமுதற்பொருளாகியும், சர்வவியாபியாக விளங்கும் சமானரகிதராகிய சிவபெருமானையல்லாமல், செந்தாமரைக் கண்ணராகிய திருமாலே பரப்பிரமமென்று மதிமயக்குற்று உளறிய குற்றத்தினால், பேசுகின்றநாவும், (தூக்கிய) கையும் அசையாமல் (தம்பித்து) ஊமையென்று (கண்டோர்) சொல்லும்படி (வியாதமுனிவர்) நின்றனர். (எ-று.)

வியாதமுனிவர் விண்டுவே பரமெனக் கைதூக்கி ஸ்ரீவிச்சுவநாதப்பெருமான் சந்நிதியிற் கூறியபொழுது, விண்டுவுந் தமதுரு

கூறேயாதலின், சிவபிரான் அதனாற் சினங்கொண்டா ரில்லையென்றும், அப்பெருமான்முன் வீற்றிருக்கும் விடைத்தேவர் வியாத முனிவர் கூற்றால் வெகுளி யுற்றுத் தூக்கிய கரமும் தூஷித்தநாவும் அவ்வண்ணமே யசைவற்றிருக்கச் சபித்தனரானபடியால் வியாதர் கையுநாவுமெழாது கம்பித்துத் துன்புற்றனரெனவும், காஞ்சிபுராணங்கூறும். இதனை,

காஞ்சிப்புராணம்-சார்ந்தாசயப்படலம்.

" அறிவு போலடர்ந் தெழுமறி யாமையின் வலியாற்
பொறியி லானிது கிளப்பவும் வெகுண்டிலன் புனிதன்
மறுவில் கூற்றெலாந் தன்பெய ரெனுமறை வழக்கால்
வெறிம லர்க்குழ லுமையொடு மகிழ்ந்துவீற் றிருந்தான்.

நந்தி யெம்பிரான் வெகுண்டொண் மலர்க்கர மெடுத்த
வந்த வண்ணமே யசைவற நிற்குமா சபிப்ப
மந்த னாயின னிமித்தகை மடக்கவல் லாமை
நிந்தை யாற்சிலைத் தூணமொத் தசைவற நின்றான்."—

என்பதனானறிக.

அத்தலையிற் பிழைகூறி யுறுரெய்து முனிவரன்பால்
மைத்தசெழும் புயலனைய மணிவண்ணன் கரந்தெய்திப்
பித்தரின்யா னிறையென்னப் பிதற்றியதென் மதியில்லோ
யெத்திறத்தா லெனையாளு மீசனைநீ மறந்தனையே.

(இ-ள்.) அப்பொழுது பொய்ச்சத்தியஞ்செய்து (கையும் வாயு மெழாது) துன்புற்றிருக்கும் வியாதமுனிவரிடத்தில், கறுத்த செழுமைதங்கிய மேகம்போன்ற நீலவண்ணராகிய விண்டுமூர்த்தி (ஏனையர் கண்ணுக்குத்) தெரியாமல் வந்து, அறிவில்லாதவனே! வெறிபிடித்தான்போல யான் தலைவனென்றுளறியது யாது காரணம்? என்னை யாளாகக்கொள்ளுஞ் சிவபெருமானை என்ன காரணத்தால் நீ மறந்தாய்? (எ-று.)

முனிவரன்பால் என்பதை முனிவரிடத்தில் என்றாவது, முனிவர் அன்பால் என்றாவது பொருள்கொள்க.

வியாதமுனிவர் தான் செய்வது தெரியாமல் விஷ்ணுவைத் தியானஞ்செய்ய அதற்காக அவர் வந்தனரெனக் காஞ்சிப்புராணங் கூறுகின்றது. இதனை,



"தெற்றற் செஞ்சடை யெம்பிரான் றிருமுன்பு நாட்டும்
வெற்றித் தம்பமொத் திலகிவல் விடும்பைகூர் வியாதன்
பற்றிச் சிந்தைசி னெடியமா லிணைபடி பரவ
வற்றைப் போதுமுன் றோன்றிசின் றச்சுத னறைவான்."

என்பதனானறிக.

முக்கண்ணான் சேவடியில் விழிமுளரி பெய்தன்றோ
சக்கரமு மலர்மகளுந் தணப்பருஞ்செல் வமுமடைந்தே
னக்கடவு ளருள்சிறிது மடையாரேற் றம்பதத்தி
லெக்கடவுள் தேவென்றுங் கேமாப்புற் றிருக்குமால்.

(இ-ள்.) திரிநேத்திரங்களையுடைய சிவபிரானது செவ்விய திருவடியில் எனது கண்ணாகிய தாமரையை யருச்சித்தல்லவோ சுதரிசனத்தையும் திருமகளையும் அழிதலில்லாத பெருஞ்செல்வத்தையும் அடைந்தேன்! அந்தப்பெருமானது திருவருள் சிறிதுமடையாராகில், எவ்வெத்தேவர் தத்தம்பதவியிற் கடவுளரென்று களிகூர்ந்திருப்பர்? (ஒருவருமில்லை.) (எ-று.)

இச் செய்யுளின் கருத்தை,

காஞ்சிப்புராணம்.

" வான மேத்தயான் வைகுந்த வாழ்வுபெற்றதுவு
ஞான நான்முகன் சத்திய வுலகாண் டியது
மேனை விண்ணவர் தத்தம வாழ்க்கையெய் தியது
மானு யர்த்தவன் றிருவடி யருச்சனைப் பயனால்."—

என வருவதனானறிக.

ஊனமுறு சடமொருவ னூக்கமின்றி யாடாதால்
யானுலக மளிப்பதுவு நான்முகத்தோ னியற்றுவது
மானிவருஞ் செஞ்சடையோ னாட்டுவித்த லாமதனால்
வானவர்தஞ் செயலெல்லா மரப்பாவைக் கூத்தாமால்.

(இ-ள்.) ஈனம்பொருந்திய சடப்பொருளானது ஒருவன் தொழில்செய்தாலன்றி யசையமாட்டாது. நான் உலகத்தை யிரட்சிப்பதும், சதுமுகப்பிரமன் (அவ்வுலகத்தை) சிருஷ்டிசெய்வதும், இடபத்தை வாகனமாக வேறுஞ் செவ்விய சடையையுடைய சிவபிரான் அசைப்பித்தலாம். ஆனபடியால் தேவர்களது செய்கை முழுவதும் மரப்பதுமையின் நடனம்போலாகும். (எ-று.)

இச்செய்யுளின் கருத்தை,

“அவனசைந்திடி னுலகசைந்திடும்” என்னுந் தேவாரத்தானும், “அவனன்றி யோரணுவு மசையா தெனும்பெரிய வாய்தர் மொழி” என்னுந் தாயுமானார் திருவாக்கானும், “நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் னார்தப்பினால்—தன்னாலு மாடிச் சலிப்பதன் றோவிந்தத் தன்மையைப்போல்—உன்னா லியானுந் திரிவதல்லான்மற் றுனைப்பிரிந்திங்-கென்னாலொன் றாவதுண் டோவிறைவா கச்சி யேகம்பனே.” என்னும் பட்டணத்தடிகள் வாசகத்தானும், “சங்கேந்து மலர்க்குடங்கைப் புத்தேளு மறைக்கோவுந் தழல்கால் சூல—மங்கேந்து மம்மானுந் தத்தமது தொழிறலைநின் றாற்றச் செய்தோர்—பங்கேந்து பெருமாட்டி விழிகளிப்ப விருமுனிவர் பணிந்து போற்றக்—கொங்கேந்து மணிமன்றுட் குனித்தருளும் பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்”—என்னும் சிவஞானயோகிகள் மொழியானுந் தெளிக.

தண்ணிலவு மதிக்கண்ணித் தாழ்சடையோன் றன்போற்றும்
புண்ணியநற் சிவகணங்கள் பூங்கழலிற் கிடப்பதெல்லா
மெண்ணிறந்த வரிபிரமர் தலையன்றோ வெனிற்சிறிது
நுண்ணறிவி லாயெனையேன் பிரமமென நுவல்கின்றாய்.

(இ-ள்.) தட்பம்பொருந்திய நிலவைவீசுகின்ற சந்திரனைச் சிரோமாலையாக வணிந்த நீண்ட சடையையுடைய சிவபெருமானது திருவடிகளைத் துதிசெய்யும் புண்ணிய ஸ்வரூபமாகிய நல்ல சிவகணங்களின் அழகிய கால்களிற் கிடப்பதெல்லாம், கணக்கில்லாத விண்டுபிரமர்களின் சிரங்களல்லவோவென்றால், இலேசமும் நுட்பமாகிய மதியில்லாதவனே! என்னையேன் பிரமமென்று பேசுகின்றனை?

நின்வயிற்சேர் கொடியபிழை மொழிசெவியி னேர்படலு
மென்வயிற்றி னெரிதவழ வுளம்வெருவி யீண்டடைந்தேன்
பொன்னசலச் சிலைகுனித்துப் புரமூன்று மழலூட்டு
முன்னவனை யானறியா முழுமுதலைப் போற்றென்றான்.

(இ-ள்.) உன்னிடஞ் சேர்ந்த கொடிய பழிச்சொல், எனது செவிப்புலனிற் றெரிந்தவுடன், வயிற்றில் தீப்பற்றவும் மனதில் அச்சமுறவும் இவ்விடத்திற்குவந்தேன். பொன்மலையாகிய மேருவை (வில்லாக) வளைத்துத் திரிபுரங்களையுந் தீயூட்டிய ஆதிபெருமா



னும் யான் (இறுமாப்புற்றபொழுது) கண்டறியாத முழுமுதற்பொருளுமாகவுள்ள சிவபெருமானைத் துதிப்பாயாகவென்று (திருமால்) கூறினர்.

அண்ணல்மால் விடையூர்ந்த வரும்பொருளைப் பழிச்சுதற்கு
மண்ணிடத்தோ யெனதுநா வழங்கவருள் வழங்கென்னக்
கண்ணினால் முனியுரைப்பக் கண்ணுதல்பேர்ச் செவியினிசைத்
தொண்ணிறமே னியங்கடவுள் விசும்பினெறித் தேகினனால்.

(இ-ள்.) திரிலோகங்களையுந் திருவடியாலளந்த திருமாலே! பெருமை பொருந்திய பெரிய இடபத்தை யாரோகணித்த அரிய பரம் பொருளாகிய சிவபெருமானைத் தோத்திரஞ்செய்வதற்கு எனது நாவானது உபயோகப்படும்படி அருள்கொடுக்கவேண்டும் என்று, வியாசமுனிவர் கண்ணினால் (சைகைசெய்து) சொல்லியவுடனே, ஒள்ளிய நிறமமைந்த அழகிய சக்கிராயுதமேந்திய திருமால் நுதற்கண்ணையுடைய சிவபெருமானது திருமந்திரத்தை (வியாசமுனிவர்) செவியினுபதேசித்து, ஆகாயமார்க்கமாக மறைந்து சென்றனர். எ-று.

திருமால் சிவமந்திர முபதேசித்தல் தகுதியோவெனின் அவரும் சைவசமயிகட்கு ஓர் குரவரேயாதலிற் பொருந்தும். இதனை,

“திருமாலிற் கிரன்பிரம னுபமனியன் றபனனந்தி செவ்வேளாதி
தருமமுதற் குரவருக்குத் தமதருளா லாசிரியத் தலைமை நல்கி
வருமெவர்க்குமுதற்குருவாய்மெய்ஞ்ஞானமுத்திரைக்கைம்மலரும்வாய்ந்த
உருவழகுங் குறுநகையுங் காட்டியரு டருஞ்சிவனை யுளத்துள் வைப்பாம்”

என்னும் ஆன்றோர் திருவாக்கானும்,

“குண்டையோ கொற்றக் கொடியோ கொடுங்கணையோ
பெண்டோசேர்த் தொண்டனோ பேசுங்கால்—மண்டருணைப்
பூவிரத மோட்டினர்க்குப் பொற்பிருடி மாதர்தம்
மாவிரத மோட்டினர்க்கு மால்.”—என்றபடி திருமால் சிவனடியார்களுள்ளே சிறந்தவராதலானும் பொருந்துமென்க.

நீறணிந்த செம்மேனி நீலகண்ட னன்றேமங்
கூறியது செவிப்புலத்திற் றுறுகுதலு மருளூர்ந்து
தேறிமுதக் குறைவெய்திச் செழுமறைசேர் வியாசமுனி
யாறணிந்த செஞ்சடையெம் மந்தணனை யேத்துவனால்.

(இ-ள்.) திருவெண்ணீற்றினையணிந்த செவ்விய திருமேனி வாய்ந்த சிகண்டத்தையுடைய சிவபெருமானது நல்ல திருநாம

மாகிய (திருமால்) கூறியது காதிற்பட்டவுடனே, செழுமையாகிய வேதங்களில் தேர்ந்த வியாதமுனிவர் மயக்க மொழிந்து உணர்வுற்றுப் பேரறிவுகொண்டு, கங்கையாற்றினை யணிந்த செந்நிறம்பொருந்திய சடையையுடைய எமது சிவபெருமானை (பின் வருமாறு) துதி செய்யத்தொடங்கினர். எ-று.

மாலவன்றன் னுடலின்னுங் கரிதாக வருங்கொடிய
வாலமுண்டு துயர்கூரா தமரருயி ரளித்தோனைப்
பாலனுக்காக் கூற்றுதைத்த பண்ணவனைப் பவளவரை
போல்பவனை யலதுநாப் போற்றாது போற்றாதே.

(இ-ள்.) மாயோனது சரீர மின்னுங் கருமையெய்தத் (திருப்பாற்கடலில்) தோன்றிய கொடிய ஆலாலவிஷத்தைப் புசித்துத் துன்பமுறாமல் தேவருயிரைக் காத்திரட்சித்தவரும், பாலராகிய மார்க்கண்டேயமுனிவருக்காக இயமனை (திருவடியினால் அவன் வீறுகுன்ற) உதைத்தருளிய கடவுளும், பவளமலைபோன்ற திருமேனி யுடையவருமாகிய சிவபெருமானை யல்லாமல் எனது நாவானது (பிறரொருவரையும்) ஒருபோதும் துதிசெய்யாது. எ-று.

இதுமுதல் ஆறுசெய்யுள்களால் வியாதமுனிவர் சிவஸ்துதி செய்கின்றனர்; இக்கவிகளிற் பொதிந்த காதைகள் முன் வந்தவையே.

மண்ணகம்பொற் றிண்டேரா மாமறைகள் பாய்பரியாத்
தண்மதிவெய் யோனிலங்கு பாண்டிலாத் தண்டுளவோ
னெண்ணிறவம் பாய்ப்புரங்க ளொருமூன்று மொருங்கவித்த
கண்ணுதல்பொற் றாளன்றிக் காணாகண் காணாவே.

(இ-ள்.) பூலோகமே அழகிய இரதமாகவும், பெருமை தங்கிய (நான்கு) வேதங்களே பாய்ந்துசெல்லும் (நான்கு) குதிரைகளாகவும், குளிர்ச்சிதங்கிய சந்திரனும் வெப்பம்பொருந்திய சூரியனும் விளங்குகின்ற சக்கரங்களாகவும், தண்ணிய துளவமாலையணிந்த திருமாலே ஒள்ளிய நிறமுடைய அம்பாகவுங் கொண்டு, ஒப்பற்ற புரங்கள் மூன்றையும் ஒரேகாலத்தில் அழித்த சிவபெருமானது அழகிய திருவடிகளையல்லாமல் எனது கண்கள் (வேறொன்றையும்) ஒருபொழுதும் பாராது.



பாணிகருஞ் சிறைத்தும்பி படிந்தாடுங் கொன்றையந்தார்
வாணிலவு மதிக்கண்ணி வளைந்தருளும் புரிசடையோன்
சேணமர்ந்த தேவர்மணி முடியுழுது சேந்தொளிர்பொற்
றாண்மலர்க்கல் லாதுசென்னி தாழாது தாழாதே.

(இள்.) பண்ணைப்போன்ற சிறகோசையைப் பொருந்திய தும்பிகள் மூழ்கி விளையாடுகின்ற அழகிய கொன்றைமலரையும், ஒள்ளிய நிலவைவீசுகின்ற சந்திரனையுஞ் சிரோமாலையாக வணிந்தருளிய புரிந்தசடையையுடைய சிவபெருமானது ஆகாயத்திற் பொருந்திய தேவர்களது மணிகள்பதித்த கிரீடங்கள்விழுதலால் சிவந்து பிரகாசிக்கின்ற பொன்மயமாகிய திருவடித்தாமரையையல்லாமல் (வேறொன்றையும்) எனதுசிரமானது ஒருபொழுதும் பணியாது. எ-று.

பாணிகரஞ் சிறைத்தும்பி யெனவும் பாடம். அஞ்சிறை யென்பதற்கு அகச்சிறகு எனப் பொருள் கொள்க.

கறையனற்பேழ் வாயுரக கங்கணத்தோ னெவனெழுதா
மறைமுழுதுந் தனியேத்தி வழிபடுவோ னெவன்கோணற்
பிறையணிந்தோன் யாவனிங் கவனல்லாற் பெட்பினொடு
மிறைவனென வெனதுள்ளத் தெண்ணேன்மற் றெண்ணேனே.

(இள்.) விஷம் பொருந்திய நெருப்பை யொத்த பெரிய வாயையுடைய சர்ப்பங்களைக் கங்கணமாகவணிந்த கடவுள் யாரோ? எழுதாக்கிளவியாகிய வேதங்களெல்லாம் தனித்தனி துதித்து வழிபாடுசெய்தற்குரிய கடவுள் யாரோ? வளைவாகிய பிறைச் சந்திரனைச் சிரசி லணிந்தகடவுள் யாரோ? அப்படிப்பட்ட கடவுளையல்லாமல் ஆசையோடு கடவுளென்று என் மனதில் (வேறொருவரையும்) ஒருபொழுதும் தியானியேன். எ-று.

ஆதியாய் முழுமுதலா யருவுருவாய்ப் பூரணமா
யோதுநான் மறைதெளித்த வுபநிடதப் பொருளாகி
நாதமாய் வெறுவெளியாய் நாரணனுங் காண்பரிதாஞ்
சோதியா லயமலது சூழாகால் சூழாவே.

(இ-ள்.) ஆதிபகவனாகியும், முழுமுதற் காரணராகியும், அருவுருவராகியும், சர்வவியாபகராகியும், சொல்கின்ற நான்கு வேதங்களையும் தெளிவுபடுத்திய உபநிஷதத் தாற்பரியராகியும், நாதமயமாகியும், சுத்தவெளியாகியும், திருமாலுங் கண்டறிதற்கு முடியாத சோதியின்

வருபராகியு முள்ள சிவபெருமானது திருக்கோயிலை யல்லாமல் எனது கால்கள் (மற்றொன்றையும்) ஒருகாலத்திலும் பிரதட்சிணஞ் செய்யா. எ-று.

மையநெடு வரைபோலு மழைமதமால் கரியுரித்துச்
செய்யதிரு மேனிதனிற் போர்த்தருளுஞ் சேவகன்ற
னையசெழும் பொற்கமல மலர்போலு மடியினல்லாற்
கொய்மலர்க ளேகின்று கூம்பாகை கூம்பாவே.

(இ-ள்.) கருமைநிறம் பொருந்திய பெரியமலைபோன்ற குளிர்ந்த மதநீரைச்சொரியும் மயக்கத்தை யுடைய யானையை யுரித்து, செவ்விய திருமேனியிற் போர்வையாகக் கொண்டருளிய பராக்கிரமமுடைய சிவபெருமானது அழகிய செழுமை வாய்ந்த பொற்றாமரைமலர்போன்ற திருவடியிலல்லாமல், கொய்தமலர்களா லருச்சித்துநின்று எனது கைகள் (பிறிதொன்றையும், ஒருநாளும் கூம்பாது.

மேல்போந்த ஆறு செய்யுள்கள் வியாதமுனிவர் செய்த சிவத்தியானம். அச்செய்யுள்களின்கருத்தைத் திருநாவுக்கரசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருஅங்கமாலைத் திருப்பதிகத்தானும்,

வரதுங்கராமபாண்டியர்.

"கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னா
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலங் கழலினைக்கு நெஞ்சமே நெஞ்ச
மவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை" எனப் பிரமோத்திரகாண்டத்துட் கூறியவற்றானு முணர்க.

(இன்னும் வரும்.)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

| | | |
|---|---|---|
| மலர் 6. | சித்தார்த்திஸு பங்குனிமீ 1920ஸு மார்ச்மீ<br>சித்தார்த்திஸு சித்திரைமீ ,, ஏப்ரல்மீ | இதழ் 3-4. |

## திருநாவுக்கரசு நாயனார் துதி.

(காசிகண்டம்.)

கருவாழிக் கரைகாணச் சாக்கியர்கள் கற்றூணிற் சிக்க யாத்துப்
பெருவாழி யிடைவீழ்ப்ப வதுபுணையாக் கரையேறிப் பெட்பி னுள்ள
முருகாமெய்ம் மயிர்பொடிப்ப வோங்கெயின்மூன் றெரித்தோனை யுவந்து
திருநாவுக் கரசனிரு சேவடிப்பூங் கமலமலர் சென்னிசேர்ப்பாம். [பாடு

(இ-ள்.) பிறவிக் கடலின் எல்லைகடந்து கரைகாண முடியாத சமணசமயிகள் கற்றூணில் சிக்குண்ணும்படி கட்டிப் பெரிய கடலினிடத்தில் விழச்செய்ய அவர்கள் கட்டிவிடுத்த கற்றூணையே தெப்பமாகக் கொண்டு திருப்பாதிரிப் புலியூர்க் கருகில் கரையேறி ஆசையுடன் மனமுருகி, சரீர முழுவதும் மயிர்க் குச்செறியும்படி, உயர்கின்ற மும்மதிலையுடைய திரிபுரத்தை எரித்தவராகிய சிவபெருமானை மனவிருப்போடு தமிழ் வேதமாகிய தேவாரத்தாற் றுதி செய்த திருநாவுக்கரசு நாயனாரது இரண்டு சிவந்த திருவடிகளாகிய அழகுபொருந்திய தாமரை மலர்களைச் சிரமேற் கொள்வாம். எ-று.

---

## சிவஞானபோதம்.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்தநீ சத்தல்லை யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனாற் பொய்விட்டுப் போம்.

இவ்வெண்பா, ஆகார்ச முதலிய அசத்தை அசத்து என்று கண்டு நீங்கிய விடத்து, அவ்வாறு தோன்றுவது வேறொரு பொருள்

என்று கொள்ளலாகாதோ, அது ஞானசொரூபமே எனில் அதற்குப் பிரமாணம் யாது என்னும் ஆசங்கையை நீக்கி அது ஞான சொரூபமே என்பதனை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) சுட்டி உணர்வதனை =(ஏகதேச உணர்வால்) சுட்டி உணரப்படும் நிலம் முதல் சிவம் ஈறாகிய பிரபஞ்சத்தை—சுட்டி அசத்து என்ன =(அசத்ததிகரணத்திற் கூறியவாறு) ஒவ்வொன்றாகச் சுட்டி அசத் தென்று கண்டு கழித்துக் கொண்டே சென்ற விடத்து—இனி உளது சத்தே சட்ட காண் =முடிவில் கோசரமாவது (வேறின்மையால் பாரிசேட அளவையால் அது) சத்தேயாம் என்று செம்மையே அறிவாயாக—(அப்படியாயின் அசத்தின் வேறாய் முடிவில் கோசரமாவது சத்தேயாம் என்பது பொருந்தும். அச்சத்து முதல்வனன்று உயிரேயாம் என்றால் வரும் குற்றமென்னை எனில்)—சுட்டி உணர்ந்த நீ சத்து அல்லை =(இதுகாறும் அசத்தோடு கூடி நிலை பெறுமாறின்றி, ஒவ்வொன்றாகச்) சுட்டி அறிந்து வந்த நீ (என்றும் ஒரு தன்மைத்தாய் நிலை பெற்று நிகழும் அறிவாகிய) சத்தாவாயல்லை—(அசத்தை அசத் தென்று கண்டு நீங்கிய போது)—உண்மையை = உளதாகிய சத்தினை—தைவம் (ஆய்) புணர்ந்ததனால் = நீ அடிமையாகச் சென்று தலைப்பட்டதினால்—பொய் விட்டுப் போம் =(சுட்டியறிவதாகிய ஏகதேச அறிவைச் செய்யும்) பொது வியல்பு நின்னை விட்டு நீங்கும். (ஆகலின் நீ அசத்து மல்லை) (எ-று.)

ஆகலின் அசத்துமல்லை என்பது குறிப்பெச்சம். எனவே அசத்தைச் சத்துடனின்று நீக்குவதனால் சதசத்தாவை என்பதாம். சட்ட = செம்மையாய். தைவம் = தேவனதுடைமை. வாதனையுமின்றிப் பற்றறக்கழிதலால் பொய்விடும் என்னாது "பொய்விட்டுப் போம்" என்றார்.

> கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
> யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்—பண்டணைந்த
> வூனத்தைத் தான்விடுமா றுத்தமனி னொண்கருட
> சானத்திற் றீர்விடம்போற் றான்.

இவ்வெண்பா அசத்தை அசத்தென்று கண்டு நீங்கும் உபாயமும், நீங்கியபோது உண்மையை (அதாவதுசத்தை) தைவம் (அதா



வது உயிர்) புணரும் விதமும், புணர்ந்தகாலையில் பொய் (அதாவது அசத்து) விட்டுப்போமாறும் தெரித்துணர்த்தி இதனை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) கண்டதை அன்று அன்று எனக்கண்டு அசத்தாய் விட்டு = சுட்டி உணரப்பட்ட பிரபஞ்சத்தை இதுசத்தன்று, இது சத்தன்று என ஒவ்வொன்றாகச்சுட்டி அசத்தாகக்கண்டு விட்டுநீங்கி-ஆன்மாவில் அண்டனை ஆய்ந்து =(அவ்வாறு அறிந்து நீங்கியதன்) அறிவின்கண்ணே (சுட்டுணர்விற்கு விடயமாகாத) முதல்வனை ஆராய்ந்து—உணர =(அச்சிவஞானத்தாலே ஆசாரியன் சிவோயம் எனத்தன்னுள்ளே பாவித்துச் "சிவத்துவமசி" என்றறிவுறுக்கும் சித்தாந்த மகாவாக்கியப் பொருளை நாடோறும் பயின்று "சிவோகம்" எனப்பாவிப்பானாயின்,—உத்தமனின் பண்டு அணைந்த ஊனத்தைத் தான் விடுமாறு =(அந்தப்பாவகத்தின் விளங்கும்) முதல்வனால் அநாதியேகூடிய பொதுவியல்பையும் அதற்கேதுவாகிய மலமாயா கன்மங்களையும், (உயிர்) தான்விட்டுநீங்கும். அப்படி விட்டு நீங்குமாறு (எதுபோலுமெனின்)—ஒண்கருடசானத்தின் தீர் விடம் போல் = ஒள்ளிய கருடதியானத்தில் விளங்கும் கருடனால் அப்பாவகன் விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறு போலாம் (எ-று).

கருட பாவனையாவது—கருடன், ஆதி பௌதிக கருடன் ஆதி தைவிக கருடன் ஆத்தியான்மிக கருடன் என, மூவகைப்படும். அவற்றுள் இவ்வுலகத்தில் காணப்படும் கருடன் ஆதி பௌதிக கருடனும், அதற்கு அதி தெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல வைத்துத் தியானம்செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதி தைவிக கருடனும், அம்மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடனுமாம். அவற்றுள் இங்கே கருடனென்றது கருடனுக்கதி தெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்திற் காணப்படும் மந்திர ரூபமாகிய ஆதி தைவிக கருடனை. அதனைப் பாவித்தலாவது நாள்தோறும் பயின்று வந்த பயிற்சி விசேடத்தால் அம்மந்திர ரூபமே தானாக அநந்நிய பாவனை செய்து தன் அறிவு அதன் வசமாம்படி உறைத்து நிற்றல். அங்ஙனம் நின்று அம்மந்திரக் கண் கொண்டு பார்ப்பவே அஃது அவ்விஷ வேகத்தை மாற்றுதல் அநுபவமாகலின், அப்பாவனை சிவோகம்பாவனைக்கு உபமானமாகக் கூறப்பட்டது.

புள்ளு விலங்குமரம் முதலிய சராசரங்களுக்கெல்லாம் அதிதெய்வமும் மந்திரமும் உள்ளன என்றும், சார்ந்த பொருள் வண்ணமாகும் இயல்புடைய ஆன்மா அவற்றுள் எவ்வெம்மந்திரங்களைக் கணிப்பினும் அவ்வம்மந்திர சொரூபமாம் என்றும் சர்வஞானோத்தர முதலிய நூல்கள் விரித்துக் கூறுகின்றன.

---

## காசிகண்டம்.

## வியாதன் கையுநாவு மெழாதுநின்ற அத்தியாயம்.

---

(48-வது பக்கத் தொடர்ச்சி.)

வேறு.

என்று கூறி முனிவர னேத்தலுங்
கொன்றை வேணிய னின்னருள் கூர்தரத்
துன்று பாவந் தொலைந்தவ னேங்குகை
மன்ற முன்னைய தாக வழங்கிற்றால்.

(இ-ள்.) என்றிந்தவகையாக வியாதமுனிவர் தோத்திரஞ் செய்து துதிக்கவும், கொன்றைமாலையணிந்த சடையையுடைய சங்கரரது இனிமையாகிய திருவருள் மிகுதலால், தன்னை யடைந்த பாவமானது தொலைந்து அவரது தூக்கிய கை நிலைபெற முன்னைய தன்மையாக வழக்கத்திற்கு வந்தது. எ-று.

இவ்வாறே யன்றி, வியாதமுனிவர் செய்த தோத்திரத்திற் களிகூர்ந்த சிவபெருமான் உமாதேவியாருடன் இடபாரூடராய் விநாயகர் - ஸ்கந்தர் - திருமால் - திசைமுகன் முதலிய தேவர்கள் புடைசூழவும் புஷ்பமாரி பொழியவும் காட்சியளித்ததாகவும் அவ்வாறு வருகையில் தமது திருவடியைத் தாங்கிநின்ற திருமாலின் நிலைமையை முனிவர்க்குக் காட்டியதாகவும், சரிதமுளது. இதனை,

காஞ்சிப்புராணம் - சார்ந்தாசயப்படலம்

"எவனைநீ மதித்து நம்முன் சூளுற விசைத்தா யிந்நா
ளவனிதோ காண்டி மற்றெம் மடியிணை தாங்கிநின்றான் -
சவலைநீ பேதை நீராற் சாற்றினை யெம்மைத் தேறா
துவலையா மதத்திற் பட்டோ ரிடும்பைநோ யுழப்பர் கண்டாய்-

என்பதனானறிக.



தண்டு ழாய்மணி மாலை தணந்தொளிர்
கண்டி கைத்தொடை சூடிக் களிப்பொடும்
புண்ட ரங்கள் புனைந்து சிவனடித்
தொண்டர் தாண்மலர் சூடின னாடினான்.

(இ-ள்.) குளிர்ச்சிதங்கிய துளபமணி மாலையை நீக்கி, பிரகாசிக்கின்ற உருத்திராக்க கண்டிகையாகிய மாலையையணிந்து, ஆசையுடனே திரிபுண்டரங்கள் (ஆகத்திருவெண்ணீறு) தரித்து, சிவனடியிற் றொண்டர்களாக வுற்றோரது பாதங்களாகிய மலர்களைச் சிரமேற்கொண்டு ஆநந்தக்கூத்தாடினர் (வியாதமுனிவர்.)

அன்று தொட்டெம மமலனுக் கன்பனாய்
மன்ற வோங்குகண் டாகனன் வாவியிற்
றுன்று தண்கதிர்ச் சோதி லிங்கமாங்
கொன்ற மைத்தன் னுவந்தருச் சித்தனன்.

(இ-ள்.) அன்றையதினமுதல் எமது சிவபெருமானுக் கடியவராய், நிலைபெற்றுயர்ந்த கண்டாகனன் தீர்த்தத்திலே, நெருங்கிய நட்பமாகிய கிரணங்களையுடைய சோதிவடிவாகிய சிவலிங்கக் குறியொன்றினைப் பிரதிட்டைசெய்து மனவிருப்புற்றுப் பூசித்தனர் (வியாதமுனிவர்). எ-று.

இன்ன வீசனற் காதை யியம்பினர்
துன்னு பாதகங் கோடி தொகுப்பினு
மன்ன யாவுந் தொலைத்தரன் சேவடி
மன்னி வாழ்குவ ரென்ன வழங்கினான்.

(இ-ள்.) இத்தன்மையான பெருமானது சரிதத்தைச் சொன்னவர்கள், நெருங்கிய கோடிபாதகங்களைச் செய்தபோதிலும், அவற்றையெல்லா மொழித்துச் சிவபெருமானது சிவந்த திருவடிகளில் நிலைபெற்று வாழ்வார்களென்று (ஸ்ரீ ஆறுமுகப்பெருமான் அகத்தியமுனிவருக்கு) அருளிச்செய்தனர். எ-று.

வியாதன் கையுநாவு மெழாதுநின்ற அ-ம்.

முற்றிற்று.

---

## ஸ்ரீ சிவமஹா புராணம்.

## சிவயோக விபூதி யுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸநத்குமாரரைநோக்கிஸ்வாமீ! தேவரீர் முன்னர்ப்பிரமாதிதேவர்களெல்லாரும் பாசுபதயோகத்தை யநுசரித்துச்

சிவகடாக்ஷம் பெற்றுப் பெரும்பதவியி லிருக்கின்றனரெனக் கூறியிருக்கின்றீராதலின், அடியேன்பேரில் அன்புவைத்து அந்தப் பாசுபதயோகமும் அதனாலடையும் ஞானமும் இத்தன்மையினவெனத் தயையோடு கூறியருளவேண்டுமெனக் கேட்க, ஸநத்குமார முனிவர் சாற்றலாயினர். வியாஸமுநிவனே! பிரமாதிதேவர்கள் யாவரும் தக்ஷயாகத்தில் வீரபத்திர மூர்த்தியாற் பீடிக்கப்பட்டவர்களாய் மரணமடைந்த பின்னர், உமாதேவியார் சிவபெருமானை வேண்டி யென்காரணமாக இவர்களிறவாது எல்லாரையும் எழுப்பியருளவேண்டு மென, தேவநாயகன் அவ்வாறே யவர்களை யெழுப்பினமையின், உயிர்த்தெழுந்த தேவர்கள் யாவரும் சிவபெருமானைச் சரணமடைந்து, விபூதி தாரணஞ்செய்துகொண்டு சிவபக்தர்களாகவே சிவத்தியானத்தை மறவாது செய்துகொண்டிருப்பது கண்டுமனங்களிகொண்ட அம் மகாதேவன் அவர்கட்குப் பாசுபதயோகத்தை யுபதேசித்தனன். அந்த யோகமானது அநேக ஆயிரம் பிறவியிற் செய்த புண்ணிய பலன்களையெல்லாம் சிவார்ப்பிதஞ்செய்த பரமபுருஷர்கட்கன்றி உபதேசிக்கப் பிராப்தமாகாது. பாசுபத தீக்ஷையைப்பெற்று, சர்வஜ்ஞானமுற்று, தபோதனர்களுந் துதிசெய்யும் சிவபெருமானை யடையத்தகும். அதர்மத்தாலன்றிப் பாவமும் தர்மத்தாலன்றிப் புண்ணியமுமாகிய பலன்கள் சித்திக்கமாட்டா. இவ்விரண்டும் ஒன்றற்கொன்று பெரிதாக உலகத்தில் அநாதியாயிருக்கின்றன. புண்ணிய பாவ பலன்களில் விருப்புவெறுப்புக்களை யொழித்துப் பாசுபத யோகத்தை யப்பியசித்தவர்கள் அளவிட்டுரைக்க முடியாத அகண்டைசுவரிய மடைந்தவர்களாவார்கள்.

வியாஸமுநிவனே! விபூதியைப் பரிசித்த மாத்திரத்திலேயே அஜ்ஞான பந்தங்களொழியும். அந்தப் பஸ்மதாரணத்தினாலேயே ஜீவன்முக்தனாகிறான். சோமாக்கினியாற் செய்யப்பட்ட விபூதியைத் தரித்த தேவர்கள் அவ்விபூதியின் பிரபாவத்தால் வீரியவான்களாய்ப் பரமாத்மஸ்வரூபியான சங்கரனை ஸ்மரித்து எல்லாப்பாவங்களையு மொழித்துப் பாசுபத யோகஞ்செய்து முக்தர்களானார்கள். தேவர்கள் யாவரும் சோமத்தாலுண்டானவர்களும் பிதிரர் யாவரும் அக்கினியா லுண்டானவர்களுமாதலின், உலகமுழுதும் அக்கினி ஸோமாத்மகமா யிருக்கின்றது. சாம்பசிவனே அக்கினியும் சோமமுமாக விளங்குகின்றான். அக்கினி சொரூபமும் சோம



சொரூபமுமாகிய சிவபெருமானது தேஜஸே விபூதியாம். அவ்வகைய விபூதியை யணிந்தவர்கள் எல்லாப்பாவங்களையு மொழித்து முக்தர்களாவார்கள், வைதிகாசாரமும் சாங்கியாசாரமும் ஞானமும் தவமும் சிறந்ததருமங்களும் ஆகியவற்றை விட்டுவிடினும் அதர்மரூபியாயிருப்பினும் அநேக தர்மங்களில் அவாவுடையவனாயினும் விபூதி ஸ்நானமாத்திரத்தாலேயே பரமசிவனுடைய பாதாரவிந்தங்களை யடைவான். பஸ்மதாரணை செய்தவுடனே முன் சிவபக்தியென்பது சிறிது மில்லாதவனாயினும் அதி சீக்கிரத்தில் சமுசாரபந்தங்களினின்றும் விடுபட்டுச் சிவபக்தியை யிடைவிடாதடையத்தக்க நன்மனமடைவான். இவ்வகையாகவே பூர்வம் திடசித்தமுடையவர்களாய் அநேகர் பாசுபதவிரதத்தை யாசிரயித்து நற்கதியடைந்தார்கள். ஆதலின் சிவசம்பந்தமான இந்தவிஷயம் பரமரகசியமும் ஆதியவசியமுமானது. இதனை யாவரும் அப்பியசிக்க வேண்டியது. ஞாதுரு ஞானஞேயங்களாகிய மூன்றும் சரீரத்திற் பரமாத்மஸ்வரூபமாய் நாடிகளில் வியாபரிக்கின்றன. பாலிற்கலந்துள்ள நெய்யைப்போலப் பூதங்களிலெல்லாம் பரமாத்மா சூக்குமரூபமாக வியாபித்திருக்கின்றான். ஆதலின் தன்னிடத்துள்ள பரமாத்மஸ்வரூபத்தை யுணர்வதனாலேயே முத்திகைகூடும். அந்தப் பரமாத்மாவை ஞானத்தாலேயே யடையவேண்டும். ஞானத்தாலன்றி உருவமும் ஓசையும் முதலியன ஒன்றுமில்லாத ஜகதீசனைப் பிறிதொருவகையாலுங் காணமுடியாது.

வியாஸ முநிவனே! சொரூபாதீதனாகிய பகவானுடைய குணானுபவங்களை அவ்விறைவனுடைய அநுக்கிரகத்தால் அறியத்தக்க ஒருஉபாயஞ்சொல்கின்றேன். இவ்வுலகமானது ஓர் காலத்திற் சூனியமாயிருந்த தன்றோ? அப்பொழுது தேவர்கள் அசுரர்கள் நதிகள் சூரிய சந்திரர்கள் முதலிய ஒன்றுங் காணப்படவில்லையன்றோ? அப்பொழுது சுத்த புத்த சச்சிதானந்த பரப்பிரமஸ்வரூபமொன்றே சேஷித்திருந்தது. அவ்வஸ்து அழிவற்றதும், மாத்திராதீதமும், நிர்விகாரமும், நிரஞ்சனமும், உள்ளும் புறமும் விளங்குவதும், சுயம்பிரகாசமும், விகாரரகிதமும், பரமும், நித்தியமும், ஞானசொரூபமுமானது. அந்தப் பரமான பொருளிலிருந்து ஓம் என்பது பிறந்தது. அவ்வோங்காரமும் மூன்று மாத்திரைகளின் அளவுள்ளதும், மூன்று எழுத்துக்களின் வடிவானதுமாம். அதுவே பரப்பிரமம். அவ்வோங்காரத்திலுள்ள அகார

வுகார மகாரங்கள் திரிமூர்த்திகளும், மாத்திரை பிரகிருதியுமாம். சர்வேசனாகிய சிவபெருமான் அந்தப் பிரகிருதியைப் பாரியை யாகக் கொண்டிருக்கின்றான். அகார உகார ஸ்வரூபிகளான பிரம விஷ்ணுக்கள் ஈச்சுரஸப்த முடையர்களாகவே விளங்குவர். மாயோ பாதியையுடைய அப்பிரம விஷ்ணுக்களையும் மாயையாகிய பிர கிருதியையும் மயாரஹிதமாகிய சுத்தசிவம் தன்னிடத் தொடுக்கி யும் மீண்டும் படைத்தும் அவர்களால் உலககாரியங்களை நடத்தி வருவது இயற்கை.

வியாஸ முனிவனே ! இது பரமரகசியமானது, அழிவில்லாதது. உன் விஷயத்திற் கிருபையுடையவனாகக் கூறினேன். இவ்வகைய ஓங்காரஸ்வரூபமான பரமமந்திரத்தை யாவனொருவன் தியானஞ் செய்தானாயினும், கிருதார்த்தனாய் முக்தனாவான். பிறமதங்களிற் பிரவேசித்தவர்கள் , முக்தியடையார்கள். பாசுபதயோகத்திற் பிரவேசித்துள்ள புண்ணியர்கள் பாலினுள்ள நெய்யைப்போலக் கலந்துள்ளதும், பிரகிருதியைக்காட்டிலும் பரமானதும், தத்துவ சொரூபத்திலுள்ளதும், ஓங்காரஸ்வரூபமாக விளங்குவதுமாகிய தமது சொரூபமே பரசிவமென் றுணர்ந்தவர்களாய்ச் சமுசார பந்தங்களையொழித்துச் சிவாநுக்கிரகத்தால் முக்தியடைவார்கள். பிரகிருதியோ ஈசுவரனன்று; குணபேதங்களைப் பொருந்தியுள்ளது; அநேக ரூபங்களையுடையது; வியாபகமாகவுள்ளது; யானென்னும் அபிமானத்தால் சிருட்டியெனப் பெயருடையது ; அவ்வகைய மாயைக்கு நாயகனாகவுள்ளவன் மகேசன். அப்பிரகிருதியானவள் எட்டுப்புயங்கள் மூன்றுகால்கள் ஐந்துமுகங்கள் மூன்றுவிழிகள் ஐந்துதொழில்கள் இந்திரியாதி ஏழுபுரவிகள் பூட்டியதேர் முத லியவற்றுடன், உலகுக்குத்தாய் போனின்று, சத்வாதி குணங் களாற் பிறந்து, வித்தை அவித்தையென்னும் இருவடிவாகி விளங்குவள். அம்மாயையினாலேயே பிரபஞ்ச முழுது முண்டா யது. நிர்க்குணமான பரசிவத்தினின்று ஓங்காரந் தோன்றியது. அப்பரசிவமும் ஓங்காரத்திலேயே விளங்கும். மகாயோகிகளான கபிலர் முதலானோர் பாசுபதத்தையநுசரித்து நிர்விகற்ப சமாதியி லிருக்கிறார்கள். நிர்க்குணமான பரப்பிரமமே எல்லாவற்றிற்குங் காரணமாக விளங்கும். பிரமவிஷ்ணுவாதியர் பிரகிருதி சம்பந்தமும் மாயா விசிஷ்டமுமுற்று ஓங்காரத்திலே தோன்றிக் குணாத்மகர் களாய்த் தேவயஜ்ஞ நாமங்களுற்று, தர்மாதர்ம பந்தமற்று, மோக



விசிஷ்டர்களாயினும் ஞானவான்களாய், தேவர்களாக விளங்குவர். ஈசுவர மகாத்மியத்தாற் பிரகிருதி அவரிடத்திலேயே லயமாகின் றது. அப்பிரகிருதிக்கு ஈசுவரனைப் பந்திக்குஞ் சக்திகிடையாது என்னும் விவரங்களைத் தியானயோக முணர்ந்தவனே யறிந்து சமுசார சாகரத்தை நீந்தியோக்ஷக் கரையைக் காண்பான்.

## சந்தியாவந்தனம்.

(யாழ்ப்பாணம் " ஞானசித்தி " ப்பிரசுரம்.)

சந்தியாவந்தனம் என்பது-செவ்வையாகத் தியானித்து வழி படுதல் என்னும் பொருளுள்ளது.

சம்-செவ்வே. தியா-தியானித்தல், வந்தனம்-வழிபாடு.

இச்சந்தியாவந்தனம் சைவர் வைணவர் ஸ்மார்த்தர் மாத்து வர் என்னும் நால்வர்க்கும் பொதுநோக்கில் ஒன்று போலிருப் பினும் சிறப்புவகையில் வெவ்வேறாயிருக்கும். அவ்வவர் முத்திநிலை வெவ்வேறுவகைப்படுதலே அதற்குக் காரணமாம்.

சைவசந்தியாவந்தனம் சிவாகமப்படிசிவதீக்ஷைபெற்றோரால் அநுட்டிக்கப்படுவது. அதன்கருத்தென்னவெனில், ஆசிரியனாலே தனக்குக்கொடுக்கப்பட்ட சிவத்துவத்தை அநுபூதியிற்கொண்டு வருதலாம். இது முத்தியடைதற்கு உபாயமாயிருக்கும். அது எங்ஙனமெனில், ஒருவன் தன்னை எப்பொழுதும் சீவனாகவே பாவித்துவருகிறான், உண்மையில் அவன் சீவனன்று; ஆன்மாவாம். ஆன்மா சைதன்னியப்பொருள். எங்கும்வியாபகமானது. ஆயினும் ஆணவமலசம்பந்தத்தால் அறியாமையெய்தி அம்மலத்தின் குண மே தன்குணமாகக்கொண்டு ஒன்று மறியாதிருந்தது. பின் அம்மல மேதுவாக மாயை கன்மங்களையும் அடையலாயிற்று. மாயாகாரிய மான சூக்குமசரீரத்தை யடைந்தபொழுது சீவன் எனப்படுகின் றது. ஆதலால் அச்சீவநிலை உபாதியேயன்றி உண்மையன்று. அவ் வுபாதி நீங்கவேண்டின் உண்மைநிலையைக் கடைப்பிடிக்கவேண்டும். ஆன்மா மலச்சேர்க்கையோடு இருக்கிறவரையில் உண்மைநிலை கை வரமாட்டாது. அதனால் மலம் ஒழியவேண்டியது அவசியமாகிறது.

மல ஒழிவுமாத்திரமன்று. அம்மலம் மீளவும் பந்தியாமலு மிருக்கவேண்டும். மலம் தானாக நீங்காது. ஆன்மா பந்தமுற்றிருப் பதால் அதுவும் மலத்தை நீக்கிக்கொள்ளமாட்டாது. முதல்வன் அநாதியாகவே பந்தமடையாதவன். மலம் அவனைப்பந்திக்கமாட் டாது. அவனுடையசத்தியின்முன்னே மலசத்திமுனைத்துநில்லாது. ஆதலால், அவ்வளவிலாற்றலுடைய அவனே அம்மலத்தை நீக்கிக்

போக்கவல்லவனாவன். அவனுடையசத்தியே மலத்தையொழிக்கவல்லது. அவனுக்கு இரண்டு சத்திகளுள்ளன. ஒன்று கிரியாசத்தி. மற்றொன்று ஞானசத்தி. கிரியாசத்தி மலத்தைப்போக்கும். ஞானசத்தி சிவத்தையளிக்கும். அதாவது சிவத்துவத்தையுண்டாக்கும். அந்த இரண்டு சத்திகளையும் சந்தியாவந்தன கிரியையினாலே நாம் பாவித்து அடைகின்றோம். மலத்தைவெல்லும் சிவத்தின்சத்தி நம்மிடத்தே தங்கினால் நாம் சிவவடிவமாவோம். சிவத்துவமடைந்த நம்மை மலம்பந்திக்கமாட்டாது. இதுவே சந்தியாவந்தனத்தின் தாற்பரியமாம்.

ஆசாரியர் சிவதீக்ஷாகாலத்திலே மலசத்தியைக் கெடுத்துச் சிவசத்தியை நம்மிற் பதிக்கின்றார். அவ்வாறு பதிந்தசத்தியை மேலும்மேலும் வளர்த்துப் பரிபூரணமாக்கிக்கொள்வதே சந்தியாவந்தனக் கிரியையாம்.

சந்தியாவந்தனத்திலே சலசுத்தியென்பது முதலாங்கிரியை. சலசுத்தியாவது சலத்திலே சிவத்தின் கிரியாசத்தியைப் பதித்தலாம். இரண்டாங்கிரியை அஸ்திரசந்தியோபாசனம். அஸ்திரசந்தியோபாசனமாவது சூரிய மண்டலத்திலே சர்வகர்ம சாக்ஷியாய் விளங்கும் சதாசிவ மூர்த்தியை வழிபட்டு அவருடைய அருளினாலே சர்வதத்துவங்கள் புவனங்களில் நிறைந்திருக்கும் பாவ புண்ணிய கர்மங்களை நீக்கிக்கொள்ளுதலாம். அதனால் ஆன்மாவைப் பந்தித்த கன்மமலம் நீங்கும். மூன்றாங்கிரியை ஆசமனம். இது ஆன்மாவைப் பந்தித்த மாயாமலத்தையொழித்தல். மாயை கன்மத்துக்குத் தாரகமாய் அவ்வக்கன்மங்களுக்கு ஏற்பத் தநுகரண புவன போகங்களாய் விரிந்திருக்கும். அத்தநுகரண புவனபோகங்கள் சுத்தமாயையின் காரியமாகிய சிவதத்துவங்களினும் அசுத்தமாயையின் காரியமாகிய வித்தியா தத்துவங்களினும் பிரகிருதிமாயையின் காரியமாகிய ஆன்மதத்துவங்களினும் விளைவுற்றிருக்கும். ஆன்மா கன்மாநுசாரமாக அத்தநுகரண புவனங்களையடைந்து சுகதுக்க போகங்களை நுகரும். இங்கு அப்போக நுகர்ச்சிக்கு ஏதுவாகிய கன்மம் அஸ்திர சந்தியோபாசனத்தால் ஒழியவே அதற்குப் பற்றுக்கொடுத்து நின்ற மாயையும் ஒழியுமாதலால் ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்னும் மூவகை முப்பத்தாறு தத்துவங்களையும் சுத்திசெய்து ஒழித்தலே ஆசமனக்கிரியையாகின்றது. கிரியாசத்தி விருத்தியினாலேயே கன்மமாயைகள் ஒழியவேண்டுதலின், அக்கிரியாசத்தி வடிவாய் விளங்கும் தீர்த்தம் அதற்கு உபகரணமாகின்றது.

இதற்கு உபகரணமாகும் பொருட்டே கிரியாசத்தியைச் சலத்திற் பதிட்டை செய்யப்பட்டதென்பதும் நினைவிலிருக்கவேண்டும்.



இனி, கன்மமும் மாயையும் ஒழிந்தபின்னர் ஆன்மாவைவிட்டு ஒழியவேண்டுவது ஆணவமலம். அவ்வாணவமலம் பராசத்தியால் ஒழியத்தக்கது. அதனால் அப்பராசத்தியை விபூதியிலே பதிட்டை செய்து அவ்விபூதியைப் பராசத்தி வடிவமாகப் பாவித்து அணிந்துகொள்ளின், அப்பாவனா விசேடத்தால் ஆன்மாவிடத்துப் பராசத்தி விளக்கமுற்று ஆணவமல இருளையகற்றுதல் செய்யும். அதனால் ஆணவமலம் நீங்கும். ஆன்மா இம்மும்மலமும் நீங்கி முத்தனாவன். இங்கு கிரியாசத்தி வடிவாய்நின்ற ஆதிசத்தி நீக்கியது கன்மமாயைகளையென்றும் ஞானமே வடிவாயுள்ள பராசத்தி நீக்கியது ஆணவமலத்தையென்றும் அறியத்தக்கது. இப்பாவனையை எப்பொழுதும் பயின்றுவரின் அச்சத்திகள் கிரமக்கிரமமாக மேற்பட்டு உண்மையாகவே மலநீக்கஞ் செய்யுமென்பதில் ஐயமில்லை.

அதன் பின்பு சகளீகரணம் செய்யப்படும். சகளம்-வடிவம், கரணம்-செய்தல். மலவடிவு நீங்கிய உயிருக்குச் சிவவடிவு உண்டாக்கல் சகளீகரணமாம். அச்சகளீகரணம் பலவகைப்படும். அவை தீக்ஷைக்கு ஏற்பத் தான்பெற்ற வடிவு ஏதுவோ அதனைப் பாவிக்கும் வேறுபாடுடையது.

சமயதீக்ஷிதர் உருத்திரவடிவம் பெறுவர். விசேடதீக்ஷிதர் சதாசிவவடிவம் பெறுவர். லோகதர்மிணி நிருவாணதீக்ஷிதர் மகாசதாசிவவடிவம் பெறுவர். சிவதர்மிணி நிருவாண தீக்ஷிதர் சுத்தமாய் விளங்கும் சச்சிதானந்த சிவவடிவம் பெறுவர்.

இந்நிலைகளுக்கு ஏற்பவே சகளீகரணமுஞ் செய்யப்படும்.

முதல்வன் உயிர்கள் பொருட்டுச் சிவசத்தி வாயிலாக எற்கும் சரீரங்கள் மந்திரசரீரங்களேயாதலால், அவ்வடிவு மந்திரங்கொண்டு பாவிக்கப்படுகின்றன.

உருத்திர வடிவு பெற்ற சமயதீக்ஷிதர் அங்கமந்திரங்களால் நியாசஞ்செய்யவேண்டும். சதாசிவ வடிவுபெற்ற விசேட நிர்வாண தீக்ஷிதர்கள் பஞ்சப்பிரமஷடங்கமந்திரங்களால் நியாசஞ்செய்யவேண்டும். சிவவடிவெய்திய சிவதர்மிணி நிர்வாணதீக்ஷிதர் ஐந்தெழுத்தினால் நியாசஞ்செய்யவேண்டும். அவ்வம் மந்திரப் பொருளாயுள்ள சிவபேத வடிவங்களைத் தாம் பதித்தலே அவ்வேறுபாட்டுக்குக் காரணமாம்.

இப்படி மந்திரநியாசஞ் செய்து பயின்று வருதலினாலே அவ்வடிவு ஆன்மாவிற் பதிந்து ஆன்மா சிவசொரூபியாவன்.

அதன்பின்பு ஆன்மாவைச் சுத்தமாகிய சிவத்தோடு சேர்த்தல் பிராணாயாமமெனப்படும். பிராண ஆயாமம்- பிராணனைத்தடுத்தல். இடைகலை பிங்கலை வழி யியங்கும் பிராணவாயுவைத் தடுத்துச் சுழுமுனையில் நிறுத்தவே கருவிகரணங்கள் தொழிற்படாதொழியும். மனம் ஒடுங்கும். ஆன்மா அவற்றின் சேர்க்கையை விட்டு அப்பாற் சென்று சிவத்தையடையும். சிவம் ஆறுதாரங்களையுங் கடந்து அப்பாலுள்ளதாகலின், ஆறுதாரங்கடோறும் கருவிகளோடு கூடிச் சீவிக்குமான்மா, அவற்றினீங்கி அதீதமாயுள்ள சிவத்தையடைதல் அப்பிராணாயாமத்தின் பயனும். இதினும் மந்திரவேறுபாடு பாவனைவேறுபாடு முன்சொன்னபடி கொள்ளப்படும்.

அதன்பின்பு செய்யப்படுவது சந்தியாத்தியானம். காலை மத்தியம் மாலை இரவு என்னும் வேறுபாடுகளுக்கு ஏற்பச்சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்னுங் கிருத்தியங்களைச் செய்துநிற்கும் பிராமி முதலிய சிவசத்திபேதங்களைத் தியானித்து அச்சத்தியின் பூரணப்பிரகாசத்துள் ஒடுங்கி அவ்வண்ணமாதல் சந்தியாத்தியான அபிப்பிராயமாம்.

அதன்பின்புகாலந்தோறும்ஈட்டப்படும்தூலசூக்குமவினைகளையொழித்தல் மார்ச்சன அகமர்ஷணங்களாம்.

அப்பால் ஆதித்த மண்டல மத்தியில் விளங்கும் சிவபேத வடிவினை அவரவர் தியானிக்கும் வடிவாக வழிபட்டு நீரினாலே தருப்பணஞ்செய்தல் சந்தியாவந்தனமாம். தேவர், முனிவர், மனிதர், பூதங்கள், பிதுர்க்கள் என்னும் ஐவரைத் தருப்பணவாயிலாக வழிபடப்படும். தருப்பணம்-உவப்பித்தல். வழிபட்டு உவப்பித்தலே இவ்வந்தனத்தின் நோக்கமாம்.

இவ்வழிபாடு புண்ணியமாகி அப்புண்ணியத்தினாலே அருள் மேலிட்டு அதனால் முத்தி சித்திக்கும்.

இவ்வாறு மலநீக்கமுஞ் சிவப்பேறுமாகிய பிரயோசனம் இச்சந்தியாவந்தன கிரியையினாலே வாய்க்கின்றது.

மலச்சார்பினாலே தன்னைச் சீவனென்றெண்ணிச் சனனமரணப்பட்டு இன்பத்துன்பநுகர்ந்து துயருறும் ஆன்மா, காலந்தோறும் அநுதினமும் மலநீக்கம்பெற்றதாகவும் சிவத்துவமடைந்ததாகவும் சிவமாகவும் பாவித்துவரின் அப்பயிற்சி வசத்தினாலே சீவனென்னுமுணர்வினீங்கிச் சிவமென்னும் உணர்வு தலைப்பட்டு அவ்வுணர்வே மறுமைக்கும் வித்தாய் முத்திக்கு ஏதுவாமென்றல் சந்தியாவந்தனத்தின் அந்தரங்க அபிப்பிராயமாம்.



நம்மவரில் அநேகர் அருமையாகிய மனிதப்பிறப்பை எடுத்தும் இச்சந்தியாவந்தனவாயிலாகச் சிவவடிவெய்தி முத்தியடைய விரும்பாமல், உலகமோகங்களுள் மூழ்கி எப்பொழுதும் சீவபாவனையே செய்து மோசம்போகின்றார்களே! இஃது எவ்வளவு அறிவின்மை!!

## ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

(38-வது பக்கத் தொடர்ச்சி.)

ஒருநாள் அக்கினீசுவரர் ஆலயத்துக்குத் திருத்தொண்டு செய்யும் சில கணிகையர் ஓர்நாள் இராத்திரி கோவிற்றிருத்தொண்டுக்கு வாராமையால் கோயிலதிகாரிகள் அவர்களை மறுநாட் காலையில் வருத்திக் கோவில் மண்டபத்தின்மேலே வெய்யிலில் நிறுத்தி மலசல மோசனமின்றிப் பசியோடு வருத்தும்படி பிடித்தார்கள். மத்தியானமாயும் விடுபோகப்பெறாமல் இங்ஙனம் பிடிக்கப்பட்டு அவர்கள் அழும்போது, வழக்கமாய்த் தான் வரும் காலந்தப்பி மத்தியானத்துக்குப் பின் அரதத்தாசாரியர் ஆலய சேவையின்பொருட்டு அங்கே எழுந்தருளினார். அந்தக் கணிகையர் ஆசாரியரைத் தரிசித்து அத்துன்பத்தினின்று தங்களை விடுவிக்கும்பொருட்டு அழுது பிரார்த்தித்தார்கள். அப்பொழுது அவர் பக்கத்தினின்றவர்கள் வாயிலாக அக்கணிகையர்க்கு நிகழ்ந்த சமாசாரத்தைக் கேட்டுத் தாம் பூமியிலே வீழ்ந்து தம்முடைய வயிற்றிலே அடிக்கடி மோதி, சிரசிலும் மோதி அழுது மூர்ச்சையினாலே நிலத்திலே விரைவில் வீழ்ந்தார். சிலர் அவர் நிலைமை நோக்கிப் பரிகசித்தார். வேறு பலர் இவர் இங்ஙனஞ்செய்தலை நிச்சயித்தறிதற்கு நமக்கு வன்மையில்லை என்றார்கள். அப்போது கோவிலதிகாரிகள் அங்கு வந்து நீங்கள் என் இப்படி வருந்துகின்றீர்களென்று அவரைப் பிரார்த்திப்ப, அதற்கு அவர்கோவிலுக்குவந்து சேவிக்குமாறு தண்டிக்கப்பட்டகணிகையருடைய பாக்கியமன்றோ பாக்கியம்! இந்தப்பிரகாரம் ஆலய சேவைக்கு என்னை வந்திலையென்று பிடித்து என்னைக் கண்டிக்க எனக்கு அதிகாரி ஒருவருமில்லையேயென்று வருந்துகிறேன் என்றார். இந்த வார்த்தையைக் கேட்டு அதிகாரிகள் அக் கணிகையரை விடுதலை செய்தார்கள். அக்கணிகையரெல்லாம் அரதத்தாசாரியரை மிக மகிழ்வினோடு வாழ்த்தினார்கள். ஆசாரியரும் சிவதரிசனஞ் செய்துகொண்டுகிருகஞ்சார்ந்து சிவபூசை செய்ய ஆரம்பித்தார்.

அப்போது இருஷிகள் உபமன்யு முனிவரை நோக்கி, அரதத்தாசாரியசுவாமிகள் பிராதக்காலத்தில் சிவசேவைக்கு எழுந்தருளி

யிருப்பாரேல், கணிகையர் தம் விருத்தாந்தத்தை அவருக்கு விஞ்ஞாபனஞ் செய்திருப்பாரே. அங்ஙனம் அன்றைக்கு அவர் வாராமைக்குக் காரணம் என்னை என்று கேட்டார்கள். ஆசாரியரைக் கணிகையர் காலைப்போதிலே தரிசித்தும் தங்களை அதிகாரிகள் விரைவிலே விடுதலை செய்வார்களென்றெண்ணி அதைக் குறித்து அவருக்கு விண்ணப்பஞ் செய்திலர் என்று முனிவர் சொன்னார். அங்ஙனமாயின் திருவிடைமருதூரைத் தரிசித்துக்கொண்டு சீக்கிரத்திலே அக்கினீசுவரர் ஆலயத்துக்கு வாராது அவர் காலந்தாழ்த்து மத்தியான்னத்துக்குப் பின்வரவேண்டியகாரணம் என்னை என்று இருடிகள் கேட்ப, முனிவர் சொல்வாராயினார்.

பௌர்ணமாசை காலத்திலே அரதத்தாசாரியர் பிரமகத்தி நிவாரணஞ்செய்யும் காவேரி தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, மத்தியார்ச்சுனேசுவரரையும் ஆஞ்ஞா கணேசரையும் கற்பகாயகியையும் பிறரையுந் தரிசித்துக்கொண்டு மத்தியானப்போதிலே தமது கிருகத்துக்குவந்து, மாத்தியான்னிகஞ் செய்து சிவலிங்கப்பெருமானுக்குப் பூசைசெய்யத் தொடங்கி, அவருக்கு அபிஷேகஞ்செய்யும்போது, நாயொன்று தாகமேலீட்டினாலே அந்தத்தாராபிஷேக சலத்தை ஏங்கிச் சாப்பிடுமாறு நாக்கை நீட்டிற்று. அப்போது ஆசாரியர் அந்தச் சங்காபிஷேக சலத்தை அந்த நாயின் நாவிலே விட்டு எஞ்சிய சலத்தைச் சிவலிங்கப்பெருமானுடைய சிரசின்மீது அபிஷேகஞ் செய்தார். சமீபத்திலே நின்றோர் ஆச்சரியத்தோடு அதனை நோக்கி இங்ஙனஞ் செய்யலாமா? இங்ஙனஞ் செய்ததற்குக் காரணம் யாது என்று கேட்டார்கள். அதற்கு ஆசாரியர் என்மாட்டுள்ள அன்பினாலே சிவபெருமானே இந்த நாயுருவத்தோடு எழுந்தருளினால் யான் என்னசெய்யத் தக்கது! என்று சொல்ல, அவர்கள் ஆசாரியருக்குச் சிவபெருமானிடத்திலே திடமான அன்பு இருந்தவாறு என்னை! என்னை!! என்று சொல்லி சிவபூசாதரிசனஞ் செய்துகொண்டு தத்தம் வீடு சார்ந்தார்கள்.

அரணியில் அக்கினி அமைந்தாற்போல அவருடைய பத்தினியார் கர்ப்பமுடையராயினார். அக்கருப்பம் மாதந்தோறும் விருத்தியாக, ஆறும் மாசத்திலே சீமந்தாதி கருமங்கள் நடத்தப்பட்டன. உமாதேவியார் சுப்பிரமணியரைப் பெற்றாற்போல, அவர் பத்தினியார் ஓர் குழந்தையைப் பெற்றெடுப்ப, அக்குழந்தைக்கு அக்கினீசுரன் என்று நாமகரணஞ் செய்தார். அதன்பின்னர் அவருக்குப் பின்னரும் எழுபுத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களுக்குமுறையே மகாதேவர், நீலகண்டர், சங்கரர், சந்திரசேகரர், சம்பு, மத்தியார்ச்சுனேசுவரர், கோவடுநாயகர் என்று நாமகரணஞ்செய்தார். அவர்களோடு கற்பகை, மீனாட்சி என்னும் இரு புதல்விகளும் பிறந்தார்கள். அவர்களெல்லாஞ் சிவநேசச் செல்வர்களாய், விபூதி உருத்திராட்ச



தாரணர்களாய், சிவலிங்கார்ச்சனர்களாய், சதாகாலமும் ருத்திர செபஞ் செய்பவர்களாய், பஞ்சாட்சர செபப்பிரியராய், பிதாவுக்குத் தொண்டு செய்யுங் காதலுடையராய், சற்கருமநிரதராய், வேத சாஸ்திர பாடகர்களாய் ஒழுகினார்கள். இவர்களோடு ஆசாரியர் கிரகஸ்தாச்சிரமத்தில் ஒழுகிப் புத்திரர்களை வைதிக நெறியிலே சிவாஞ்ஞையினாலே செலுத்தி, இரு கன்னியர்களையும் விவாகஞ் செய்துகொடுத்து அன்பினோடு மூன்று காலமுஞ் சிவார்ச்சனைசெய்துகொண்டு வந்தார்.

ஓர் நாள் சிவலிங்க பூபதியானவர் அக்கினீசுவரப் பெருமானுக்குச் சமர்ப்பிக்கும்பொருட்டு மிக விலையேறப்பெற்ற பீதாம்பரம் ஒன்றை ஆசாரியர் சமுகத்துக்கு ஓர் பிராமணர் வாயிலாக அனுப்பினார். பிராமணர் பீதாம்பரங் கொண்டுவந்த காலம் ஆசாரியர் அக்கினியிலே ஓமஞ் செய்யுஞ் சமயமாயிருந்தது; அப்பிராமணர் வந்து அவர் பாதபங்கயங்களிலே வணங்க, ஆசாரியர் அவரையெழுந்திருக்குமாறு செய்து ஆசீர்வாதஞ்செய்து அவர் இருக்குமாறு ஆசனங் கொடுத்தார். அவர் ஆசனத்திருந்துகொண்டு பீதாம்பரத்தை எடுத்து ஆசாரியர் கையிலே கொடுத்து, அரசர் இதனை அக்கினீசுரருக்கு அர்ப்பணஞ்செய்யச் சொன்னார் என்றுரைத்தனர். அப்போது ஆசாரியர் அக்கினீசுவரப் பெருமானை அவ்வக்கினியிலே தியானித்துக்கொண்டு அதனை அவ்வக்கினியிலே ஆகுதிசெய்துவிட்டார். அவ்வக்கினியிலே இட்ட க்ஷணப்போதிலேதானே பீதாம்பரம் பஸ்மீகரமாய்ப் போய்விட்டது. அதைக் கண்ட விப்பிரர் அவரிடத்திலே விடைபெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கி, இராசாவை அடைந்து நடந்த சமாசாரத்தை அறிவித்தார். இதைக்கேட்ட அரசன் நமது ஆசாரியர் சர்வஞ்ஞரன்றோ. யாது காரணத்தினால் தகித்தாரோ என்று சிந்தித்து, அதன் உண்மை அறியும்பொருட்டு ஆசாரியரிடத்தில்வந்து அவருடைய திருவடிகளிலே சுவர்ண புஷ்பங்களினால் அர்ச்சித்து, ஆனந்தபாஷ்பம் வாரா நிற்ப வீழ்ந்து நமஸ்கரித்தார். அவ்வரசரை ஆசாரியர் தம்முடைய திருக்கரத்தினால் எடுத்து அவர் தம்மைப் பூசித்த மகிழ்வினால் அவர் க்ஷேமத்தை விசாரிக்க, பூபாலர் ஆசாரியரை நோக்கி, சுவாமி தங்களுடைய தர்மாதிகளுக்கெல்லாம் பயனும், பாவங்களாகிய வறுமையைத் தகிப்பதாயுமுள்ள தங்களுடைய கருணாசாகரத்தில் அமிழ்ந்தின எனக்குத் துக்கமென்னுளது! அடியேன் கொடுத்தனுப்பிய வஸ்திரம் பரமேசுரனுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டதா என்றார். அதற்கு ஆசாரியரும், பரமேசுரனுக்கு அர்ப்பணஞ்செய்தேமென்று அரசருக்குச்சொல்லி, அவரைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சிவலிங்கப் பெருமான்மீது அவர் வஸ்திரம் தரிக்கப்பட்டிருந்ததை அரசருக்கு

தரிசிப்பித்தார். அரசரும் தான் கொடுத்த வஸ்திரமே அங்ஙனம் அலங்கரிக்கப்பட்டதென்றுகண்டு ஆச்சரியமுற்று, ஆசாரியருடைய பாதங்களின்மேல் வீழ்ந்து வணங்கி, எனது அபராதத்தை க்ஷமித்தருளவேண்டும் என்று பன்முறை பிரார்த்தித்தார். பாலியதசையிலேதங்களுடையமகிமையைக்கண்டிருந்தும்மயங்கிப்போனேனே என்று ஆனந்தக்கண்ணீரோடு பாராட்டினர். அப்போது ஆசாரியர் அரசனை நோக்கி, நமக்கு ஆசாரியர் மீதும் சிவபிரான்மீதும் அன்பானது சமமாய் உளதாக என்று ஆசி கூறி, அவர் நெற்றியிலே விபூதிதரித்து, நீவிர் நமது பட்டணஞ் செல்வீராக என்று சொல்லி விடைகொடுத்தார். அப்போது அரசரும் மகிழ்வினோடு குருவினுடைய பாதாரவிந்தங்களிலே அநேக இரத்தினாபரணங்களையும வஸ்திரங்களையும் சமர்ப்பித்து நமஸ்கரித்து விடைபெற்றுத் தன் நகரமடைந்தார். ஆசாரியர் கணபதி சுப்பிரமனியரோடு, அம்பிகாபதியாகிய சிவபெருமானைச் சிவபூசாதி சற்கருமங்களினாலே வழிபட்டுக்கொண்டு வருவாராயினர்.

(இன்னும் வரும்.)

---

## அர்ச்சாதீபம்.

(36-வது பக்கத் தொடர்ச்சி.)

விக்கிரகத்துக்குத்தான் ஹேயங்கூறினேம். வேறுவழிக்கும் ஹேயமுண்டோவெனின், எந்தவழியும் ஹேயமே! எங்ஙனமெனின், பரனே உயர் ஒப்பில்லாதவன். பரனில் வேறிட்ட பொருள்கள் பரனாகா. அவனுக்கு ஒப்புமகா. இங்ஙனமாக எந்தப் பொருளில் பரனைப் பாவிக்கலாம்? அல்லது பரனாகவே கொள்ளலாம்? மனசினால் சிவனைத்தியானிக்கிறதென்றும், மனசில் சிவனைப் பாவிக்கிறதென்றுங்கொள்வாமெனின், மனம் என்ன வியற்கையுடையது? அது காரணமா, காரியமா? ஸத்தா, அஸத்தா? சித்தா, அசித்தா, சுகமா? துக்கமா? மாயையினுண்டாகையால் காரியமும், அதனிடத்து மீண்டும் லயித்தலால் அஸத்தும், ஆன்ம சம்பந்தமின்றி அறியாமையால் அசித்தும், இருவினைகளையிட்டு விகாரித்தலால் துக்கமுமாகும். இத்தகைய மனசுக்கு எப்படியோ சிவம் விஷயமாகும்? இவ்வுண்மைபற்றியேயன்றோ மனசுக்கு எட்டாது, மனசால் எட்டமுடியாது என்று சிவத்தை வேதாதிகள் விதந்தன? மனசால் எட்டமுடியாமையைக் கவனியாமல், விக்கிரகத்தால் சிவனை எட்டலாமாவென்று கடாவுவது சிரிப்பாக முடிந்தது.

நம்மவர் உதகரித்த கேனோபநிஷத்தில் "எதுவாக்கினாலும், மனசினாலும், கண்ணினாலும், காதினாலும், மூக்கினாலும் விளங்குகிறதில்லையோ, எது வாக்கையும், மனசையும், கண்ணையும், காதையும், மூக்கையும் விளங்கச்செய்கிறதோ அதுவே பிரஹ்மம்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால், மனசுக்குத் தானேயியங்குந் தன்மையில்லையென்று ஏற்படுகிறது. இதன்பின்னே சொல்லப்பட்ட கண்ணுக்கும் இந்தயோக்யதையே கேட்கப்படுகின்றது. கண்ணைக்காணச்செய்தும், மனசை நினைக்கச்செய்தும் சிவம் இயக்கலால், கண்ணினும் அதிக யோக்யதை யுண்டென்று மனசைக் கொள்ள விடமில்லை. கண்ணின்வழியாக மனசே காணுகிறதெனின், மனசின் வழியாக ஆன்மாவே காணுகிறது என்னும் விடைவரும். அதற்குமேல், ஆன்மாவின்வழியாகச் சிவமேகாணுகிறது என்றுஞ் சொல்லவரும். சிவம் தடையற்ற பேரறிவாகையால் அது ஒன்றைக் காண்டலும், அதனை மற்றொன்றற்காண்டலும், அதனாலோர் பயனையெய்தலுங் கூடாது. மனமாதிகள் ஜடமாகையால் அவையும் ஒன்றைக்காணா. கண்ணுக்குப் பார்வைக்கண்ணாடியைப்போல அவை யொன்றை யொன்றபேட்சித்துக் கொண்டிருக்கும். அதனால், அவையும் ஓர்பயனைவிரும்பவாவது, அடையவாவது கூடாது. இடைபேபோந்த ஆன்மாவே மனாதிகளாலும், சிவத்தாலும் உபகரிக்கப்பெற்று ஒன்றினைக் காணுகிறதும், ஓர்பயனையெய்துகின்றதுமாக ஏற்படுகின்றது. இதையுய்த்துணருங்கால் மனசுக்குக் கூறிய ஆதிக்யம் ஜீவிக்கமாட்டாது. மனசுக்கு ஸ்வதந்திர பிரவர்த்தகமில்லாவிடினும், கண்ணைநோக்க ஆதிக்யந்தானேயெனின், கண்மாத்திரமேயன்றி ஏனையிந்திரியங்களினும் ஆதிக்யம் வகித்ததே! அவ்வளவேயன்றிச் சிவத்தை யெட்டுவதில் இந்திரியங்களைக்காட்டிலும் உசிதபோக்யதை பெறுமையால், மனசினால் தியானிக்கத்தக்கது சிவம், கண்ணுக்கு விக்கிரகரூபத்தில் விஷயமாகாதது சிவம் என்று கூறுவதில் ஒருநலனு முண்டாகமாட்டாது.

ஆயின், கடோபநிஷத்தில் "மனஸைவேத மாப்தவ்யம்" என்று கூறி, மனசினால் பிரஹ்மத்தை யெட்டக்கூடும் என்று விளக்கியதென்னையெனின், மனசு பிரஹ்மத்தை எட்டாதுமனசுக்குப் பிரஹ்மம் எட்டாது என்னுஞ் சுருதிக்கு விரோதமின்றிப் பொருள்கூற வேண்டும். ஒன்றுக்கொன்றுவிரோதமாகப்பொருள் கூறுவதுயாங்ஙனம்? கண்முதலிய விந்திரியங்களைப்போலவே மனசும் பரனை எட்டாது என்பது சத்தியம். கண்முதலிய விந்திரியங்கள் பரனைநேரிற் காணுவன்றி விக்கிரகமுதலியவைகளிற் காண்பது நிஜம். அப்படியே மனசும் அவனை நேரிற்காணுதன்றி விக்கிரகமுதலியவைகளிற் காணத்தட்டில்லை. கண்முதலிய விந்திரியங்கள் தாமே காணாவாறுபோல மனமுந் தானேகாணமாட்டாது. கண்முதலிய [illegible]

யங்கள் ஆத்மஞான ஸம்பந்தத்தால் காணுவதுபோல, மனமும்ஆத்மஞான ஸம்பந்தத்தால்காணும். கண்ணுவது, காதாவது, மூக்காவது, பரனை ஸாக்ஷாத்தாகக் காணுவாறுபோல மனசும் பரனை ஸாக்ஷாத்தாகக் காணுமையால் மனசு பிரஹ்மத்தை எட்டாது, மனசுக்குப் பிரஹ்மம் எட்டாது என்ற சுருதியும், கண் காது முதலியவைகள் ஆத்ம ஞானஸம்பந்தத்தால் விக்கிரக முதலியவைகளில் பரனை எட்டுவதுபோல மனசும் ஆத்மஞான ஸம்பந்தத்தால் பரனை எட்டுகின்றமையால் மனசினால் பிரஹ்மத்தை எட்டக்கூடும் என்ற சுருதியும் ஸமர்த்திக்கப்படும். இந்த முடிவால் (மனசினால் பிரஹ்மத்தை எட்டக்கூடும்) என்ற சுருதி அர்ச்சையையே தாபித்ததாயிற்று. இவ்வர்த்தத்தைக்கொண்ட சுருதிகளெத்தனை யிருப்பினும் அத்தனையும் அர்ச்சாவிஷயமாகவே சாதிக்கப்படுமன்றி வேறில்லை. இவ்வுண்மைகளை இனியேனுங்கூர்ந்து யோசித்துக் குணப்படுவாராக.

விக்கிரகமானது கல், செம்பு முதலியவைகளாற் செய்யப்பட்டு, அதைக் கண்ணானது கவர்ந்து அநுபவிக்கின்றது. இந்த விக்ரகாராதனமொழிந்து மனோத்யானமுண்டாகிறபோது அந்த மனசு கல், செம்புகளைக் கவராமல் ஸாக்ஷாத்தாகப் பரனைப் பற்றுகின்றது. இரண்டில் உசிதம் யாதெனின், கல், செம்பு விக்கிரகங்களையே கண்கள் கவர்ந்து ஆநந்திக்கமாட்டா. அந்தவிக்கிரகங்கள் பரனது உருவத்திருமேனிக்குப் பிரத்யாம்நாயமாக அமைக்கப்படுகின்றன. அவைகளில் பரனதுஅறிவே அதிகரித்து, அவனது உருவையே கவர்ந்து கண்கள் ஆனந்திக்கின்றன. வேதங்களில் உமாஸஹாயத்வம், திரிலோசநத்வம், நீலகண்டத்வம் இத்யாதி உருவங்கள் கேட்கப்படுகையால், அவைகளையேயன்றோ கண்கள் விக்கிரக வடிவங்களிற்கண்டு ஆநந்திக்கின்றன? ஓர் ஜைனவுருவம், பௌத்தவுருவம் இவைகள் விக்கிரகமாக வமைக்கப்பட்டபோது அவைகளில் எமது கண்களுக்கு இன்பமுண்டாகின்றதா? இதை யோசிக்கிறபோது கண்கள் கவர்ந்து ஆநந்திப்பது கல்லையுஞ் செம்பையுமா? அல்லது அவற்றில் வேறாகாது விரவிய பரனது உருவத்தையா? என்னும் வினாவுக்கு விடையுண்டாகும். இதனால், மனசினுங் கண்ணானது குறைந்த வநுபவத்தினது என்றுகொண்ட கோள் கோளாகவே முடிந்தது. இனி மனத்தை விசாரிப்போம். மனம் சிவத்தை எட்டாது என்று முன்னரே தீர்மானஞ் செய்திருக்கிறோம். ஆகையால், அது ஸாக்ஷாத்தாகப் பரனைப் பற்றுகின்றது என்று கூறுவது பயன்செய்யாது. மனசு தன்னினமாகிய ஜடங்களிற் சென்று சேருமேயல்லது நேராகச் சிவனைப் பற்றமாட்டாது. கண்ணானது பரனுருவத்தை விக்கிரகத்திற் பற்றியதென்னுங்கால், கண்ணின்வழியாக மனஸேபற்றியது என்று வெளியாகையால், கண்



காட்டாகத் தான்கண்ட பரனுருவத்தையே மீண்டும் அந்தமனங் கருதும். அதுவேயன்றித் தான் கண்ணின்வழியாக முன்காணாத பொருளை அது கருதவறியாது. அப்படியே ஏனையிந்திரியங்களின் வழியாகத் தனக்கு முன்னே விஷயமாகாத வொன்றினையும் அது கருதாது. ஆகவே, அது பரனை ஸாக்ஷாத்தாகப் பற்றுமெனல் யாங்ஙனம்? அது பரனை நேரேபற்றுதற்கு விஜாதியாகலானும், கண்முதலியவைகளும் அவ்வியற்கையின வாகலானும், கண்காட்டாக அது விக்கிரகத்திற்காணும் பரனுருவத்தையே மீண்டுங்கருதும்! கருதும்!! இவ்வுண்மையை அறிந்தபேர் கண்ணால் பரனை விக்கிரகத்தில் தரிசிப்பது மனசால் விக்கிரகத்திற்றரிசித்த பரனைத் தியானிப்பதினுந் தாழ்ந்ததாகக் கூறார்! கூறார்!!

(இன்னும் வரும்.)

—o—

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் இருபத்தொராவது வருடப் பூர்த்தி விழாவும்

### ஸ்ரீமான் யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்களுடைய The Saivite Elementary School என்னும் சைவபாடசாலையின் ஏழாவது வருடப் பூர்த்தி விழாவும்.

—o—

இவ்விழாக்கள் சென்னை தங்கசாலை வீதியில், தொண்டைமண்டலம் து. வே. பாடசாலைக் கெதிரிலுள்ள, இத்திருக்கூட்டத்துச் சபா மண்பத்தில், நிகழும் 1920ஷு மேமீ 9உ ஆதிவாரம் பகல் 3-மணி தொடங்கி ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம்பிள்ளை, B, A, அவர்கள் அக்கிராசனம் வகித்து நடத்த நடைபெற்றது.

அப்போது இதில் 69-வது பக்கமுதல் வெளியிட்டுள்ள இத்திருக்கூட்டத்தின் (1919ஷு) 21-வது சபா வருடத்துச் சபாக்கிரந்தமும் வரவுசெலவு கணக்கும் வாசித்து அங்கீகரிக்கப்பெற்றன.

நிகழும் 1920ஆம் வருடத்திற்கு * இதின் 68-வது பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளார் நிர்வாகசபையினராக நியமிக்கப்பெற்றார்கள்.

பாடசாலைப் பிள்ளைகளுக்குப் புத்தகப் பரிசு அளிக்கப்பட்டது.

ஸ்ரீமான் மணிமங்கலம் திருஞான சம்பந்த முதலியாரவர்கள் இத்திருக்கூட்டம் செய்து வருங் காரியங்களை யெடுத்து விளக்கி உபந்நியாசம் செய்தார்கள்.

முதலிலும் கடையிலும் தேவாரபாராயணமும் ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு ஆராதனமும் செய்யப்பட்டன.

அக்கிராசனர் முதலியோருக்கு வந்தனமளித்தபின் 6 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

# நிர்வாக சபையார்.

### சபைத்தலைவர்.

ஸ்ரீமான், ச. இராஜாகண்ணுமுதலியாரவர்கள், B. A.
சூபரின்டென்டென்டு அக்கவுண்டாண்டு ஜனரல் ஆபீஸ்.

### உதவிசபைத்தலைவர்.

,, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள், B. A.
கவர்ன்மெண்டு பென்ஷனர்.

### காரியதரிசி.

,, இ. ஆதிமூலமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டுபென்ஷனர்.

### உதவிகாரியதரிசி.

,, இ. கண்ணப்பமுதலியாரவர்கள், வர்த்தகர்.

### அத்தியட்சர்கள்.

,, திரு. சபாபதிமுதலியாரவர்கள், ரிடைர்ட் ஸப் இஞ்சினீர்.
,, மணிமங்கலம் திருஞானசம்பந்தமுதலியாரவர்கள்,
கிளார்க்கு, M. S. M. Ry.
,, வே. நேத்திரசிகாமணிமுதலியாரவர்கள்
ஸப் போஸ்ட் மாஸ்டர்.
,, ஆர். பி. துரைசாமிமுதலியாரவர்கள்,
கவர்ன்மெண்டு பென்ஷனர்.
,, சைவமுத்துக்குமாரசாமிமுதலியாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல்.
,, பி. வி. சமரபுரிமுதலியாரவர்கள், கிளார்க்கு
எம். எஸ். எம். ரெயில்வே ஆடிட் ஆபீஸ்.
,, திருவூர் தியாகராஜமுதலியார் அவர்கள்,
கிளார்க்கு அக்கவுண்டாண்டு ஜெனரல் ஆபீஸ்.
,, தி. குப்புசாமிமுதலியாரவர்கள், கிளார்க்கு
ரெயில்வே மெயில் சர்விஸ்.

### கணிதபரிசோதகர்.

,, கூடலூர் சிவவாசுதேவமுதலியாரவர்கள்,
அக்கவுண்டாண்டு எம். எஸ். எம். ரெயில்வே.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

## (1919ஆ)

### 21 ஆவது வருடத்துச் சபாக்கிரந்தம்.

---

மதிவளர் சடைமுடி மன்றவா ணைமுன்
துதிசெய் நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை புலகினில் விளங்கி வெல்கவே.

---

### திருக்கூட்டத்தின்
### இருபதாவது வருடப் பூர்த்திவிழாவும்
### ஸ்ரீமான் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்
### சைவபாடசாலையின்
### ஆறுவது வருடப் பூர்த்திவிழாவும்.

இவ்விழாக்கள் 1919ஆ ஏப்ரல்மீ 27உ நடைபெற்றன. அன்று காலை சென்னை தங்கசாலை வீதியிலுள்ள ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானார் திருக்கோயிலில் மகாபிஷேகமும், தேவாரபாராயணத்துடன் திருக்கோயில் வழிபாடும் செய்யப்பட்டன.

பகல் 3½-மணிக்குச் சென்னை டெலிகிராப் அப்பாயிநாயுடு வீதியிலுள்ள சைவபாடசாலையில் மகாஜனக்கூட்டம் கூடியது. அப்போது இத்திருக்கூட்டத்தினர் மாத்திரமன்றி மற்றவர்களுமாகத் திரளான ஜனங்கள் வந்து கூடினார்கள்.

திருக்கூட்டத்தின் சபைத்தலைவர் ஸ்ரீமான். ச. கண்ணுமுதலியாரவர்கள் B. A. அக்கிராசனத்தில் அமர்ந்

ஸ்ரீமான் கா. முருகேசச்செட்டியார் அவர்கள் பிரேரேபிக்கவும், ஸ்ரீமான் கா. சமரபுரிச் செட்டியாரவர்கள் ஆமோதிக்கவும் அப்போது வந்திருந்தார் யாவருக்கும் அச்சிட்டுக்கொடுத்த திருக்கூட்டத்தின் (1918ஆம்) 20-வது சபாவருடச் சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் மகாசபையார் அனைவராலும் அங்கீகரிக்கப் பெற்றன.

நிகழும் 21-வது சபாவருடத்திற்கு இக்கிரந்தத்தின் 10 - ம் பக்கத்தில் குறித்தகனவான்கள் நிர்வாக சபையினராயிருக்க வேண்டுமெனவும், 20-வது சபாவருடத்தில் கணிதபரிசோதகரா யிருந்த ஸ்ரீமான் கூடலூர் சிவவாசுதேவ முதலியாரவர்களே நிகழும் 21-வது சபாவருடத்திலும் கணிதபரிசோதகரா யிருத்தல் வேண்டுமெனவும் தீர்மானம்செய்யப்பட்டது.

4½-மணிக்கு கனம்பொருந்திய உயர்தர நீதியதிபர் திவான் பஹதூர் பிரமஸ்ரீ T. சதாசிவ ஐயரவர்கள் B. A., M. L., விஜயஞ் செய்து அக்கிராசனத்தில் அமர்ந்தார்கள்.

அது முதல் 5½-மணிவரையில் தேசபக்தன் பத்திராதிபர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களும், ஸ்ரீமான் எஸ். சச்சிதானந்தம்பிள்ளை B.A., L.T., அவர்களும் முறையே "சைவசமயம்," "சமயபோதனை" என்னும் விஷயங்களை யெடுத்து நன்குவிளக்கி உபந்நியசித்தார்கள்.

அதன்பின் 6-மணிவரையில் சைவ பாடசாலை மாணவர் இருவர் ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் என்னும் விஷயத்தை யெடுத்துச் சம்பாஷித்தார்கள்.

6-மணிக்கு மேல் அக்கிராசனரவர்கள் மாணவர்களுக்குப் புத்தகப் பரிசளித்து, இத்திருக்கூட்டத்தினர் செய்துவருங் காரியங்களைச் சிலாகித்துப்பேசியும், உபந்நியாசகர்கள் கூறிய விஷயங்களில் இருந்த அருமைகளை விளக்கியும், மாணவர்கள்செய்த சம்பாஷணையை மிக வியந்தும் முடிபுரை கூறினார்கள்.

அனந்தரம் திருக்கூட்டத்தின் சபைத்தலைவர் ஸ்ரீமான் ச. ராஜாகண்ணுமுதலியாரவர்கள் B.A. அக்கிராசனர் முதலியோருக்குப் பூமாலை சூட்டவும், காரியதரிசி இ. ஆதிமூல முதலியார் வந்தனமளிக்கவும், யாவரும் இன்பக்கடலிற் றிளைத்துக் கரகோஷஞ் செய்யவும், 7-மணிக்குச் சபைகலைந்தது.



---

மகாசபை.

| | |
|---|---|
| இந்த மகாசபையின் 1919ஆம் ஆரம்பத்தி லிருந்தவர்களின் தொகை. | 49 |
| 1919ஆம் சேர்ந்தவர்கள். | ... |
| ௸ நீங்கினவர்கள். | 11 |
| ௸ முடிவிலிருந்தவர்கள். | 38 |

இவர்கள் பெயர் முதலியன இதின் ஈற்றில் காட்டப்பட்டுள்ளன. இவர்களுள் பி. மாசிலாமணி முதலியாரவர்களும், பெ. சபாபதி முதலியாரவர்களும் சென்ற வருடத்தில் சிவபதமடைந்தார்கள்.

| | | | |
|---|---|---|---|
| இச்சபையார் 1918ஆம் | கொடுத்த மாதசந்தா | ரூபா | 251 |
| ௸ 1919ஆம் | ௸ | " | 212 |

---

## S. Rathnavelu Chettiar's Saivite Elementary School

### சைவ பாடசாலை.

இப்பாடசாலையில் 1918-வது வருடத்திலிருந்தது போலவே 1919-வது வருடத்திலும் முதல் வகுப்பு முதலாக ஐந்தாம் வகுப்பு வரையில் ஐந்துவகுப்புகளிலிருந்தன. மூன்று உபாத்தியாயர்களால் தமிழும் ஆங்கிலமும் சைவசமய பாடங்களும் கற்பிக்கப்பட்டன.

| | |
|---|---|
| இதில் சென்ற வருட ஆரம்பத்தில் இருந்த சிறுவர்களின் தொகை. | 70 |
| இடையில் சேர்ந்தவர்கள். | 62 |
| இடையில் நீங்கினவர்கள் | 72 |
| சென்ற வருட முடிவில் இருந்தவர்கள் | 60 |

| | | |
|---|---|---|
| 1918ஆம் பிள்ளைகள் கொடுத்த சம்பளம் | ரூபா | 166 |
| 1919ஆம் ஷை | ,, | 162 |
| 1918ஆம் அரசாங்கத்தார் உபகரித்த தொகை | ரூபா | 236 |
| 1919ஆம் ஷை | ,, | 234 |
| 1918ஆம் பாடசாலைக்குச் செலவான தொகை | ரூபா | 419 |
| 1919ஆம் ஷை | ,, | 525 |

இடவசதிக் குறைவால் அதிகபிள்ளைகளைச்சேர்த்துக்கொள்ள இயலவில்லை.

இப்பாடசாலை 1919ஆம் ஜூலைமீ 28உ அரசாங்கப்பாடசாலைகளின் உதவிப் பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்டது.

இச்சபையின் போஷகரும் Messrs Best & Co., துவிபாஷிகருமாகிய ஸ்ரீமான் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் 1917ஆம் ஜூன்மீ இப்பாடசாலைக்காக ஒரு கட்டடம் வாங்கிக் கொடுத்தார்கள். அதனால் இச்சபையார் மாதந்தோறும் கொடுத்துக்கொண்டிருந்த பாடசாலை வாடகை ரூபா பத்து மீதியாயிற்று. செட்டியாரவர்கள் பாடசாலைக்குக் கட்டடம் வாங்கிவிட்டதல்லாமலும், அது கட்டப்பட்டிருக்கும் நிலத்திற்கும் மாதந்தோறும் 6 ரூபா வாடகையும் கொடுத்துவருகின்றார்கள். இதற்காகச்செட்டியாரவர்களுக்குச் சபையார் மிகவும் நன்றி பாராட்டுகிறார்கள்.

## சைவம்.

1918 ஆவது வருடத்தில் சைவம் என்னும் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களா யிருந்தவர்களின் தொகை (ஆயுள் சந்தாதாரர்கள் நீங்கலாக) 790

1919ஆம் டிடை ஷை 760

1918ஆம் வரையில் சேர்ந்திருந்த ஆயுள் சந்தாதாரர்கள் 204

1919ஆம் சேர்ந்த ஷை 2

ஆக கடந்த வருடம் வரையில் சேர்ந்திருந்த ஆயுள் சந்தாதாரர்கள். 206

இவர்களுள் 157 ஆயுள் சந்தாதாரர்கள் இரங்கோனிலிருந்து ஸ்ரீமான் மெ-செ-மெ-மெ-இராமநாதன் செட்டியாரவர்களாலும், ஸ்ரீமான் செவு-சித-சொக்கலிங்கஞ்செட்டியாரவர்களாலும் சேர்க்



## வரவு செலவு கணக்கு.

சென்ற வருடத்து வரவு செலவு கணக்கு M. & S. M. ரெயில்வே அக்கவுண்டாண்டு ஸ்ரீமான் கூடலூர் சிவவாசுதேவமுதலியாரவர்களால் பரிசோதிக்கப்பெற்று இதனிற்றில் சேர்க்கப்பெற்றுள்ளது.

## திருமுறை மகோற்சவம்.

இதுவழக்கப்படி 1919ஆம் நவம்பர்மீ 20உ நடைபெற்றது. அச்சமயத்தில் கவுணியன் அர்ச்சக்கூடத்தலைவர் ஸ்ரீமான் கா. முருகேசச்செட்டியாரவர்கள் வழக்கப்படி சிவனடியார்கள் எண்ணிறந்தோர்க்கு மகேசுர பூசை செய்வித்தார்கள்.

## வந்தனம்.

இத்திருக்கூட்டத்திற்கு உதவிபுரிந்து சைவசமயபரிபாலனம் செய்பவரும், செய்விப்பவருமாகிய சாமாசிகரும், போஷகர் முதலியவர்களும் ஸ்ரீ சிவகாமசுந்தரி நடராஜப்பெருமானுரின் திருவருளால் சகலசம்பத்துடன் நீடூழி நிலைபெற்றுவாழுமாறு அவ்வம்மையப்பர் திருவடிகளைத் தியானிக்கின்றோம்.

இங்ஙனம்;
உத்திரவின்படி காரியதரிசி
**இ. ஆதிமூல முதலியார்.**

நிகழும் 1920ஆம் ஜனவரி பிப்ரவரி மாதங்களில்
தேவகோட்டையில் கிடைத்த

### நன்கொடைகள்.

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| ஸ்ரீமான் அரு-அரு-சோம சோமசுந்தரம்செட்டியாரவர்கள் | 150 | 0 | 0 |
| ,, மெ-அரு-அரு அருணாசலம் செட்டியாரவர்கள் | 50 | 0 | 0 |
| ,, ராம-அரு-அரு-ராம அருணாசலம்செட்டியாரவர்கள் | 50 | 0 | 0 |
| ,, A-L-A-R ஜமீன்தார். அருணாசலம் செட்டியாரவர்கள் | 20 | 0 | 0 |
| ,, மெ-லெ-மெ இராமநாதன் செட்டியாரவர்கள் | 18 | 12 | 0 |
| ,, அள-சுப-பள சுப்பிரமணியம் செட்டியாரவர்கள் | 15 | 0 | 0 |
| ,, அள-சித-அள அளகப்பச் செட்டியாரவர்கள் | 10 | 0 | 0 |
| ,, R-M-M-S-T வைரவன் செட்டியாரவர்கள் | 10 | 0 | 0 |
| ,, P-L-A வெங்கடாசலம் செட்டியாரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, அள-சித-லெ இராமநாதன் செட்டியாரவர்கள் | 4 | 11 | 6 |
| ,, உ-ராம-உ-மு இலட்சுமணன் செட்டியாரவர்கள் | 1 | 0 | 0 |

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்
## 1919ஆு வரவு செலவுக் கணக்கு.

### வரவு.

| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1919ஆு ஜனவரிமீ 1உ இருப்பு | | | | 115 | 4 | 1 |
| மகாசபையார் மாதச்சந்தா | | | | 212 | 4 | 0 |
| தென் ஆப்பிரிக்காஇந்துசன்மார்க்கசபை நன்கொடை | | | | 93 | 0 | 0 |
| தேவகோட்டை ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியார் அவர்கள் அளித்தநன்கொடை | | | | 75 | 0 | 0 |
| சைவப்பத்திரிகையின் வருடச்சந்தாவும் முன்வருடப்பத்திரிகைவிற்பனையும் | 881 | 0 | 6 | | | |
| ஷை ஆயுள் சந்தா | 295 | 0 | 0 | | | |
| ஷை விளம்பர வரவு | 5 | 0 | 0 | 1181 | 0 | 6 |
| பாடசாலைக்கு அரசாங்கத்தார்நன்கொடை | 234 | 0 | 0 | | | |
| ஷை பிள்ளைகள் சம்பளம் | 162 | 8 | 0 | 396 | 8 | 0 |
| அச்சுக்கூடத்திற்கு மெஷின்முதலியன வாங்கினதற்கு செலவிட்டகடன் | 575 | 11 | 6 | | | |
| அச்சுக்கூலி | 171 | 7 | 0 | 747 | 2 | 6 |
| சேவிங்ஸ் பாங்குவட்டி | | | | 10 | 6 | 0 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு விற்பனை | | | | 0 | 2 | 0 |
| ஆகமொத்த வரவு. | | | | 2830 | 11 | 1 |
| அடுத்த பக்கத்திற் காட்டியபடி மொத்த செலவு | | | | 2815 | 11 | 7 |
| 1919ஆு டிசம்பர்மீ 31உ இருப்பு | | | | 14 | 15 | 6 |



## 1919ஆு வரவு செலவுக் கணக்கு.

### செலவு.

Mr. S. Rathnavelu Chettiar's Saivite Elementary School.

| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| **பாடசாலை.** | | | | | | |
| உபாத்தியாயர் சம்பளம் | 334 | 5 | 4 | | | |
| வேலைக்காரர், ரிஜிஸ்டர் முதலியன | 191 | 2 | 0 | 525 | 7 | 4 |
| **சைவபத்திரிகை.** | | | | | | |
| காகிதம் | 246 | 3 | 9 | | | |
| தபாற்செலவு | 220 | 9 | 9 | | | |
| சிப்பந்தி | 129 | 1 | 9 | | | |
| வண்டி முதலிய சில்லரைசெலவுகள் | 22 | 1 | 10 | 618 | 1 | 1 |
| **வைதிக சைவ அச்சுக்கூடம்.** | | | | | | |
| யந்திரங்களும், அச்சுகளும் | 262 | 5 | 6 | | | |
| சிப்பந்திகள் | 328 | 6 | 0 | | | |
| வீட்டுவாடகை | 120 | 10 | 10 | | | |
| மை வச்சிரம் வண்டிசத்தம் முதலிய பல சில்லரை செலவுகள் | 222 | 13 | 1 | 934 | 8 | 5 |
| தண்டற்காரர் சம்பளம் | | | | 47 | 0 | 0 |
| சபாமண்டப வாடகை | | | | 6 | 0 | 9 |
| கடன் | | | | 650 | 0 | 0 |
| வட்டி | | | | 6 | 8 | 0 |
| இச்சபையின் 20-வது வருடோற்சவம் கார்த்திகை ஞானதீபக் குடையாராதனை முதலிய நானாவித செலவுகள் | | | | 28 | 7 | 9 |
| ஆகமொத்த செலவு. | | | | 2815 | 11 | 7 |

| கணிதபரிசோதகர். | காரியதரிசி. |
|---|---|
| கூ. சிவ வாசுதேவ முதலியார். | இ. ஆதிமூல முதலியார். |
| Accountant M. S. M. Ry. | Govt Pensioner |

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

### போஷகர்கள்.

ஸ்ரீமான் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்
துவிபாஷிகர், மெஸ்ஸர்ஸ் பெஸ்ட் அண்டு கோ.

" ராவ்சாஹிப் பி. மாசிலாமணி முதலியாரவர்கள்
இஞ்ஜினீரிங் கண்ட்ராக்டர்.

" ராவ்பஹதூர் கே. வைத்தியலிங்கம்பிள்ளையவர்கள்
ரிடைர்ட் ப்ரெஸிடென்ஸிபோஸ்ட்மாஸ்டர்.

" வி. முத்தையா பிள்ளையவர்கள் வர்த்தகர், சென்னை.

" ஆர். காசிவிசுவநாத முதலியாரவர்கள்
பொடி புகையிலை வர்த்தகர், சென்னை.

" திரு. சபாபதி முதலியாரவர்கள், ரிடைர்ட் சப் இஞ்சினீர்,
தங்கசாலை வீதி, சென்னை.

,, வி. மாசிலாமணிப் பிள்ளையவர்கள், B. A. B. L, ஐகோர்ட்டு அப்பிஷியல் ரெவ்ரீ.

,, சி. தருமலிங்கமுதலியாரவர்கள் கண்ட்ராக்டர்.

---

### நிர்வாக சபையார்.

#### சபைத் தலைவர்.

ஸ்ரீமான் ச. இராஜாகண்ணுமுதலியாரவர்கள், B. A.
சூபரின்டென்டென்டு அக்கவுண்டாண்டு ஜனரல் ஆபீஸ்.

#### உதவி சபைத்தலைவர்.

,, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள், B. A.
கவர்ன்மெண்டு பென்ஷனர்.

#### காரியதரிசி.

,, இ. ஆதிமூலமுதலியாரவரகள், கவர்ன்மெண்டு பென்ஷனர்.

#### உதவி காரியதரிசி.

,, இ. கண்ணப்பமுதலியாரவர்கள், வர்த்தகர்.



#### அத்தியட்சர்கள்.

ஸ்ரீமான் திரு. சபாபதிமுதலியாரவர்கள், ரிடைர்ட் ஸப் இஞ்ஜினீர்.

,, வே. கந்தசாமிமுதலியாரவர்கள், B. A. L. T.
கிறிஸ்டியன் காலேஜ் ப்ரோபெஸ்ஸர்.

,, வே. நேத்திரசிகாமணிமுதலியாரவர்கள்
ஸப் போஸ்ட் மாஸ்டர்.

,, ஆர். பி. துரைசாமிமுதலியாரவர்கள்,
கவர்ன்மெண்டு பென்ஷனர்.

,, டி. கந்தசாமிஆச்சாரியவர்கள், மானேஜர்
அப்பிஷியல் அஸைனி ஆபீஸ்.

,, பி. வி. சமரபுரிமுதலியாரவர்கள், கிளார்க்கு
எம். எஸ். எம். ரெயில்வே சீப் இஞ்சினியர்ஸ் ஆபீஸ்.

,, வேலாயுதமுதலியாரவர்கள், கிளார்க்கு
ஸ்டாண்டார்டு ஆயில் கம்பெனி.

,, குப்புசாமிமுதலியாரவர்கள், கிளார்க்கு
ரெயில்வே மெயில் சர்விஸ்.

#### கணித பரிசோதகர்.

,, கூடலூர். சிவவாசுதேவமுதலியாரவர்கள்,
அக்கவுண்டாண்டு எம். எஸ். எம். ரெயில்வே.

#### சாமாசிகர் (அங்கத்தினர்.)

,, பி. பார்த்தசாரதி நாயுடு அவர்கள் ஜெயராம முதலியாரவர்கள், வாழைப்பழக் கிடங்கு.

,, கா. ரா. நமசிவாயமுதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர்.

,, மயிலை. முருகேசமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர்.

,, எஸ். விநாயகமுதலியாரவர்கள், B. A. அக்கவுண்டாண்டு ஜெனரல் ஆபீஸ் சூபரின்டெண்டாண்டு.

,, பி. லோகநாதமுதலியாரவர்கள், புரசை.

,, பெ. சபாபதிமுதலியாரவர்கள், மணிலா கிடங்கு.

,, கு. அ. ந. சுப்பராயசெட்டியாரவர்கள்,
ஒற்றைவாடை அரிசி மண்டி.

,, கோ. கணேசம், நீலகிரி, கோடப்பமந்து காப்பிவர்த்தகர்

,, கோ. ஆறுமுகமேஸ்திரியவர்கள், ஷை

,, பொ. அரங்கனிதமுதலியாரவர்கள், ஹோ. அண்டு. கோ.
,, பெங்களூர் நாகரத்தினம்மாள் அவர்கள், சங்கீதபண்டிதை
,, பார்த்தசாரதிமுதலியாரவர்கள், வெற்றிலை வர்த்தகர்.
,, சி. பா. கங்காதரமுதலியாரவர்கள், ஜவுளி பொடி வியா
,, சைவ. முத்துகுமாரசாமிமுதலியாரவர்கள், [பாரம்.
தமிழ்ப்பண்டிதர் முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல்.
,, திருமணம் அண்ணாமலைமுதலியாரவர்கள், ஜமீன்தாரர்.
,, பி. எம் முருகேசமுதலியாரவர்கள், காக்ஸ்டன் அச்சுக்கூடம்.
,, கூ. சிவவாசுதேவ முதலியாரவர்கள் அக்கவுண்டண்டு, எம். அண்டு. எஸ். எம் ரெயில்வே.
,, சி. கன்னைய நாயுடு அவர்கள் கம்பெனி. காக்ஸ்டன் அச்சுக்கூட அதிபர்.
,, எம். நடேசமுதலியாரவர்கள், கார்ப்போரேஷன்.
,, டி. வி. குப்புசாமிமுதலியாரவர்கள், ஷராப், தாலூக்கா ஆபீசு.
,, ஆனந்தமூர்த்திமுதலியாரவர்கள்.
,, வி. எஸ். பரமானந்தம்பிள்ளையவர்கள், 5 ரெயில்ரோட் பெங்களூர்.
,, முத்துசாமிமுதலியாரவர்கள், மதராஸ் பாங்கி முருகேச
,, ஆரணி. முருகேசமுதலியாரவர்கள் (முதலியார் குமாரர்.
,, திரு. அப்பர்சுந்தரமுதலியாரவர்கள்,
,, வே. நேத்திரசிகாமணிமுதலியாரவர்கள், ஸப்போஸ்டு மாஸ்டர்.
,, திருவூர். தியாகராஜ முதலியாரவர்கள் கிளார்க்கு அக்கவுண்டண்டு ஜனரல் ஆபீஸ்.
,, [illegible]சாமிமுதலியாரவர்கள் யம். அண்டு யஸ். யம். ரெயில்வே ஸ்டோர்ஸ்.
,, அம்பலவாணமுதலியாரவர்கள் கிராம்டன் அண்டு கோ.
,, தி. சந்திரசேகரமுதலியாரவர்கள், ப்ரோப்ரைட்டர் சந்திரா அண்டு கோ.
,, ப. வேலுமுதலியாரவர்கள், அருணாசலமுதலி வீதி.
,, இராஜகோபாலமுதலியாரவர்கள், வர்த்தகர்.
,, தாத குருசாமிப்பிள்ளையவர்கள்

———0———



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 6 | இரௌத்திரி ௵ வைகாசி ௴ — 1920 ௵ மே ௴ / " ஆனி ௴ " ஜூன் ௴ | இதழ் 5-6

## சுந்தரமூர்த்திநாயனார் துதி.

கதமெறி நேமி தூண்டிக் கராங்கவர் குரவ னீன்ற
மதலையை யழைத்த செங்கண் மாலென வருந்து முமை
லதிர்கட லமிர்த மன்ன வருந்தமிழ்ப் பதிகம் பாடி
முதலைவாய்ப் பிள்ளை தந்த முதல்வனை வழுத்தல் செய்வாம்.

(இ-ள்.) வேகத்தோடு செல்லும் பிரகாசம் பொருந்திய இரதத்தைச் செலுத்தி முதலைவிழுங்கிய நமதாசிரியன்புதல்வனை வரவழைத்து ஆசிரியனுக்குக்கொடுத்த செவ்விய கண்களையுடைய விஷ்ணுமூர்த்தியைப்போல வருத்தமடையாமல், ஒலிக்கின்ற திருப்பாற்கடலி லுதித்த அமுதத்தையொத்த அரிய தமிழ் வேதமாகிய திருப்பதிகமொன் றோதியருளி முதலை விழுங்கிய பிள்ளையை வருந்தி நின்ற தாய் தந்தையர்க்கு அதன் வாய்வழி வருவித்துக் கொடுத்த முதல்வராகிய சுந்தரமூர்த்திநாயனாரைத் துதிப்போம். (எ-று.)

"கராங்கவர் குரவ னீன்ற மதலையை யழைத்த செங்கண்மால்" என்பதன் விவரம்.

அவந்திதேசத்திலுள்ள சாந்தீவினி யென்பவரைக் கிருஷ்ணனும் பலராமனும் வித்தியாகுருவாகக்கொண்டு வேதாகமங்களைக்கற்றுணர்ந்தனர். பிறகு கண்ணன் ஆசிரியரை வணங்கி "உமக்குவேண்டிய குருகாணிக்கை யாது" எனக்கேட்க, அவர் தமது பத்தினியாரைக் கேட்டனர். அவர் மனைவி "சிறிது காலத்திற்குமுன் சமுத்திரஸ்நானஞ் செய்கையில், அலையில் அகப்பட் டிறந்த எமது புத்திரனைக்கேளுங்கள்" என்று சொல்ல, அவ்வாறே கண்ணனைக்கேட்டனர். உடனே கண்ணன் தன் அண்ணனுடன் தேரேறி வருணலோகம் அடைய அதுகண்ட வருணன் கண்ணனை வணங்கி "வந்தகாரணம் யாதென" கண்ணன் "கடலாடுகையி லிறந்த எமதாசிரியர் புதல்வனைத் தருக", என, வருணன் "கடலில் வசிக்கும் பாஞ்சசனன் என்னு மவுணன் விழுங்கிவிட்டான்" எனக்கேட்ட கண்ணன் கடலிற்பாய்ந்து அங்கு துயிலும் அசுரனது நெஞ்சைப்பிளந்து அதனுள்ளிருந்த சங்கைக் கைக்கொண்டு தேரேறி இயமனுலகடைந்து சங்கைப் பூரித்தனர். அவ்வோசைகேட்ட இயமன் விரைந்தோடிவந்து வணங்கி

இங்குவந்த காரணம் யாதெனக் கேட்டுணர்ந்து புதல்வனைத்தரக் கண்ணன் அப்புதல்வனை ஆசிரியர்முன் கொணர்ந்து விடுத்தனன்.

“முதலைவாய்ப் பிள்ளை தந்த முதல்வன்”. என்பதன் விவரம்.

திருவாரூரில் பரவைநாச்சியார் திருமாளிகையிலிருந்து சுந்தரமூர்த்தி நாயனார் மலைநாடடைந்து சேரமான்பெருமாணாயனாரைக் காணவேண்டுமென்னும் விருப்போடு புறப்பட்டு வழியிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டுவருகையில், கொங்கதேசத்தில் திருப்புக்கொளியூ ரென்னுஞ் சிவஸ்தலத்தை யடைந்தனர். அவ்வூர்ப் பிராமணவீதியாகச் செல்லுகையி லெதிரெதிராகவுள்ள இரண்டு வீடுகளில் ஒன்றில் மங்கலவோசையும் மற்றொன்றில் அழுகுரலுங்கேட்டு, அங்குள்ள வேதியரை நோக்கி “இஃதென்ன” வெனக்கேட்க அதற் கவ்வந்தணர் வணங்கி “இவ்விரண்டு வீடுகளிலு முள்ள ஐந்தாண் டுடைய பார்ப்பனச்சிறுவர் ஓர் மடுவில் நீராடுகையி லொருவனை முதலை விழுங்கியது. பிழைத்தவனாகிய சிறுவனுக்கிவ்வீட்டி லுபநயனமாகின்றது. இறந்துபோனவன் சுற்றத்தவரவ்வீட்டி லழுகின்றனர்” என்று சொல்லக்கேட்ட எமது சுந்தரமூர்த்திநாயனார் திருவுளமிரங்கப் புதல்வனையிழந்த பிராமணனும் மனைவியும் வணங்கிநிற்ப “உமது புத்திரனையா முதலையுண்டது” எனக் கேட்க, அதற் கவர்கள் “அஃது முன்னடந்தது. தேவரீரைக்காண நெடுநாளாக விரும்பிய எமதிச்சை வீணாகாமல் தெரிசனமாயிற்று” எனமகிழ்ந்து கொண்டிருப்பதைக் கண்ட எமது நாயனார் “இவர்கள் புதல்வனையிழந்தது மெண்ணாது எமது வருகைக்குக் களித்தன ராதலின் இவர் புத்திரனை யெழுப்பிக்கொடுத்துப் பின்னரே அவிநாசியப்பரை வணங்குவோம்” என்று அவர்களை நோக்கி “உமது பிள்ளையை முதலை விழுங்கிய மடுவெங்கே” என அவர்கள் காண்பித்தனர். அதன் கரைமேலிருந்து ஓர் திருப்பதிகமோதித் துதிக்க யமன் முதலைவாயிற்பட்டதுமுத லதுகாறும் கழிந்த வயதுகளின் வளர்ச்சியுமுதிர்ந்திருக்கும்படி அப்பிள்ளையி னுடலை முதலைவயிற்றிற் புகுத்த முதலை கரையி லுமிழ்ந்தது. அப்பிள்ளையின் தாய்தந்தை முதலானவர்கள் வணங்கினர். சுந்தரமூர்த்திநாயனார் அச்சிறுவனுக் குடனே யுபநயனஞ் செய்வித்தனர்.

---

## சிவஞானபோதம்.

( 52-வது பக்கத் தொடர்ச்சி. )

ஒன்பதாஞ் சூத்திரம் - மூன்றாம் அதிகரணம்.

விதியெண்ணுமஞ்செழுத்தே.

(இ-ள்.) திருவைந்தெழுத்து விதிப்படியறிந்து கணிக்கப்படும் (எ-று.)

இதில் 1-வது-தன்னாற் கூறப்படும் பொருள்—ஞானம் பிரகாசித்தபின்னர் ஸ்ரீபஞ்சாக்கரத்தைவிதிப்படி உச்சரித்தல்வேண்டும்.



2-வது - ஐயப்பாடு—ஞானம் பிரகாசித்த பின்னும் செய்ய வேண்டுவதுண்டோ, இல்லையோ.

3-வது - பிறர் கூறும்பக்கம்—ஆன்மா தன்னை இந்திரியத்தின் வேறெனக் கண்டு பாசத்தினின்றும் நீங்கியபோது பிறவி வெப்பத்திற்குக் குளிர்ந்த நிழலாய் விளங்கித் தோன்றுவதாகிய ஞானசொரூபமே அரன் கழல்சேறலாகிய சிவானந்த போகப்பயனைப் பயப்பிக்கும். ஆதலால் ஞானம் பிரகாசித்த பின்னர் செய்யக் கடவதாகிய சாதகம் இல்லை.

4-வது - மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—வேம்பினைத் தின்றுகொண்டிருந்த புழு அதைவிட்டுக் கரும்பினைத் தின்னத் தொடங்கிக் கரும்பின் சுவையையறிந்தபின்னரும் முன்னிருந்த பழக்கவாதனையால் மீட்டும் அவ்வேம்பினை நோக்குதல்போல், ஆன்மா பாசத்தினின்றும் நீங்கி ஞானம் பிரகாசித்து ஞேயத்தைக் கண்டு எங்குந் தானாக நிட்டை கூடியவிடத்தும், தொன்றுதொட்டு வரும் ஏகதேசப் பழக்க விசேடத்தால் அதன் அறிவானது புறத்தே விடயத்திற்சென்று பற்றும். ஆதலால் தன் அறிவை அவ்வாறு செல்லாது மடக்கி, அகத்தே ஒரு குறியின்கண் நிறுத்தி நிட்டைகூடி நிற்கும முறைமையை அஞ்செழுத்தோதும முறைமையில் வைத்துக் கண்டு சிந்திக்கச சிந்திக்க, அது சிவதரிசனத்தை விளக்கி, வாதனை வயத்தால் புறத்திற்சென்று பற்றும் ஏகதேச அறிவைப் பற்றறத் துடைத்துப் பூரணநிலையில் கொண்டுசெல்லும். ஆதலால் ஞானம் பிரகாசித்த பின்னரும் விதிப்படி திருவஞ்செழுத்தை விதிப்படி யுச்சரித்தல் இன்றியமையாததாம்.

5-வது - இயைபு—உதாரண வெண்பா.

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனாஞ் சேடனு மக்கு.

இவ்வெண்பா ஸ்ரீ பஞ்சாக்கர செபம் எங்ஙனம் வாசனையை நீக்கும் என்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) உள்ளம் அரன் உடைமை அஞ்செழுத்தால் கண்டு = ஆன்மா சிவனுக்கு அடிமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறைமையில் வைத்துக் கண்டு—இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து = தன் உடம்பினகத்தே இதயம் நாபி புருவநடு என்னும் மூன்றினையும முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியா

னத்தானமாகக் கருதிக்கொண்டு, புறம்பே ஞானபூசை செய்யும் முறைப்படி இதய கமலத்தில் சிவனை அவ்வஞ்செழுத்தால் அமைந்த திருமேனியில் கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறுமை இரக்கம் அறிவு மெய் தவம் அன்பு என்னும் அட்ட புட்பங்கொண்டு அவ்வஞ்செழுத்தாற் பூசைசெய்து—அஞ்செழுத்தால்குண்டலியின் ஓமஞ்செய்து—குண்டலித் தானமாகிய நாபியில் ஞான வனலையெழுப்பி அதன்கண் அத்திருவைந்தெழுத்தானே விந்துத் தானத் தமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனை நாடி இடைநாடி ஆகிய சுருக்குச்சுருவங்களால் ஓமஞ்செய்து—கோதண்டம் சானிக்கில் = விந்துத்தானமாகியபுருவநடுவில் சிகார யகார வகாரங்கள்முறையேதற்பதப்பொருளும் துவம்பதப்பொருளும் அசிபதப்பொருளுமாம் முறைமையின் அவ்வஞ்செழுத்தால் சிவோகம் பாவனை செய்யின்—அங்கு ஆம் அண்டன் சேடன் ஆம் = அப்பொழுதே அங்ஙனம் விளங்கித் தோன்றும் முதல்வனுக்குச் (சேட சேடிபாவத்தால் ஆகற்பாலதாகிய) அடிமையாம் (எ - று.)

கோதண்டம் = கோதண்டத்தின்கண் = புருவநடுவில். அண்டன் = அண்டனுக்கு. சேடன் = அடிமை. சுருக்குச்சுருவங்கள் என்பன ஓமத்தில் நெய்யைச் சொரியும் துடுப்புகள்.

பஞ்சாக்கரமாவது தூலபஞ்சாக்கரம் சூக்குமபஞ்சாக்கரம் அதிசூக்குமபஞ்சாக்கரம் என மூவகைப்படும். நகரத்தைமுதலாகவுடையது தூலபஞ்சாக்கரமும், சிகரத்தைமுதலாகவுடையது சூக்குமபஞ்சாக்கரமும், நகரமகரங்களிரண்டுமின்றி ஏனையமூன்றெழுத்தும் முன்னும் பின்னுமாய் மாறுதலால் ஐந்தெழுத்தாகிச் சிகரத்தை முதலாக உடையது அதிசூக்குமபஞ்சாக்கரமுமாம். அதிசூக்குமபஞ்சாக்கரம் காரணபஞ்சாக்கரமும் முத்திபஞ்சாக்கரமுமாம் இதுவே இவ்விடத்திற் கூறியதுமாம்

சாந்தோக்கிய உபநிடத்திலுள்ள தத்துவமசி மகாவாக்கியம் தற்பதம் துவம்பதம் அசிபதம் என மூன்று பதங்களையுடையது. அவற்றுள் தற்பதம் இறைவனுடைய தடத்த நிலையாகிய பதித்தன்மையினையும், துவம்பதம் உயிரின் தடத்த நிலையாகிய பசுத்தன்மையினையும், அசிபதம் இவ்விரு பொருள்களின் சொரூப நிலையாகிய ஐக்கியத்தையும் உணர்த்தும். அவ்வாறே, ஸ்ரீபஞ்சாக்கரத்தில் சிகரம் பதியையும், யகரம் பசுவையும், வகரம் இவ்விரண்டின் ஐக்கிய நிலையாகிய அருளையும் உணர்த்தும். ஆதலால் முத்தி பஞ்சாக்கரம் சித்தாந்த மகா வாக்கியமாவதறிக.

மந்திரங்களை உச்சரித்தல் மானதம், மந்தம், உரையென மூவகைப்படும். மனத்தாற்பாவித்தல் மானதமும், சூக்கும வைகரி



வாக்கால் தன் செவிக்குமட்டும் கேட்கும்படி உச்சரித்தல் மந்தமும், தூலவைகரிவாக்கால் தனக்கும் பிறர்க்கும் கேட்கும்படி உச்சரித்தல் உரையுமாம். வாக்கின் கலப்பின்றி தனித்து அறிவு ரூபமாய் நின்று பாவித்தலாகிய சுத்தமானதமே இவ்விடத்தில் வேண்டப்படலால் சூத்திரத்தில் உச்சரிக்க என்னாது "எண்ணும்" என்றனர்.

இந்துவிற் பானுவில் ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணு—முந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டாளு மோதஞ் செழுத்து.

இவ்வெண்பா, மேலைவெண்பாவிற் கூறியவாறு, அஞ்செழுத்தோது முறையால் ஒருகுறியின் வைத்தன்றி முதல்வனைக் காண்டல் கூடாதென்பதையும், அவ்வாறு கண்டவிடத்து முதல்வன் தன்னிடத்தில் விளங்கித் தோன்றுதலையும், தோன்றிய விடத்துத்தான் அம்முதல்வனுக்கு அடிமையாதலையும் உவமை வாயிலாக உணர்த்தி அதனை வலியுறுத்துகின்றது.

(இ-ள்-) இராகுவை இந்துவில் பானுவில் கண்டாங்கு = (அந்தரத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் நவக்கிரகங்களுள் மற்ற ஏழு கிரகங்களைப்போல் காணப்படாத) இராகு கேதுக்களைக் கிரகண காலத்தில் சந்திர சூரியரிடத்திற் காணுமாறுபோல்—சிந்தையில் காணில் = (பதி பசு பாசம் என்னும் மூன்று பொருள்களுள் யான் இதனை அறிந்தேன் இதனை அறிகிலேன் என்னும் உணர்விற்கு விடயமாகக் காணப்படும் பசு பாசம் என்னும் இரண்டினைப்போல் வேறு காணப்படாத பதியாகிய முதல்வனைத்தன்) இதயத்தின்கண் (அஞ்செழுத் தோதுமுறையால்) காணுமாயின்—உந்தவே = (கோலை கட்டுக் கயிற்றினாற் சுற்றிக்) கடையவே—காட்டாக்கின் சிவம் தோன்றி = விறகினின்றும் தோன்றும் அக்கினிபோல் அம்முதல்வன் அங்கே தோன்றி—கண் ஆம் = அறிவுக்கறிவாய் விளங்கிநிற்பன்—தான் கனல்சேர் இரும்பு என்ன ஆள் ஆம் = அப்பொழுது தானும் கனலைச் சேர்ந்த இரும்புபோலத் (தன் சுதந்திரத்தைவிட்டு) அம்முதல்வனுக்கு அடிமையாம்—(ஆகலான்)—அஞ்செழுத்து ஓது = அவ்வஞ்செழுத்தை விதிப்படி ஒருகலையா னோதுக. (எ-று-)

இராகுவைப்போல் கேதுவும் சாயாக்கிரகமாதலால் கேதுவை வேறு கூறவில்லை. கண் = அறிவு. காட்டாக்கினியின் என்பது காட்டாக்கின் என விகாரமாயிற்று. காட்டம் விறகு. காட்ட அக்கினி = காட்டாக்கினி. இன் உவம உருபு.

மண்முத னாளமலர் வித்தை கலாரூப
மெண்ணிய வீசர் சாதாசிவமு—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணு
நிலையதிலா மச்சிவன்றா ணேர்.

இவ்வெண்பா, தத்துவம் முப்பத்தாறுக்கும் அப்பாற்பட்ட முதல்வனை இதயத்துட்கண்டு பூசித்தல் எவ்வாறு கூடும் என்னும் ஆசங்கையை நீக்கி, அண்டத்தில் உள்ளனவெல்லாம் பிண்டத்திலும் சூக்குமமாய் அடங்கியிருத்தலினாலும், அண்டவடிவாகிய முப்பத்தாறு தத்துவங்களும் இதயத்தில் கமல ரூபமாய் விளங்குமாதலானும், முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மேற்பட்டு அனைனம் வியாபகமாய் வயங்கும் முதல்வனை அவ்விதய கமலத்தின் மேலாகக் கண்டு பூசித்தல் அமையும் என்பதைத் தெளிவித்தற் பொருட்டு அவ்விதய கமலத்தின் இயல்புணர்த்தி அதனை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) நண்ணில் = (இதயகமலத்தின் இயல்பை) உற்றறியப் புகின்—மண்முதல் நாளம் ஆம் = நிலம் முதலிய இருபத்துநான்கு தத்துவமும் (நாபியினின்றும் தோன்றும் எட்டுவிரல் அளவினதாகிய) நாளவடிவாம்.—வித்தைமலர் ஆம் = வித்தியா தத்துவமே மும் சுத்தவித்தையுமாகிய எட்டும் எட்டிதழ்வடிவாம்.—எண்ணிய ஈசர் சதாசிவமும் கலாரூபம் ஆம். = அத்தத்துவங்களுக்கு மேலாகக் கருதப்பட்ட ஈசரதத்துவமும் சதாசிவதத்துவமும் அறுபத்துநான்கு கேசரவடிவாம்.— சத்தி கலை உருவாம். = சத்தி தத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டுவடிவாம்.— நாதம் அதன் கண்ணும் = சிவதத்துவம் அப்பொகுட்டினுட் காணப்படும் ஐம்பத்தொரு பீசவடிவாம்.—ஆதலால்—அதில் சிவன்தாள் நிலையாம். = அம்முப்பத்தாறு தத்துவமும் ஆசனமாகக் கொண்டு அவற்றின் மேல் நிற்கும் முதல்வன் திருவடிகள் அவ்விதய கமலத்தின்மேல் நிற்கும்.—நேர் = அதனை அறிந்து பஞ்சாக்கரத்தாற் பூசைசெய்வாயாக. (எ-று.)

இவ்வெண்பாவினுக்கு அவ்வவ் வாகமம்பற்றி வெவ்வேறு பொருளுரைப்பாரும் உளர்.

வித்தை = வித்தியாதத்துவம் எனப்படும்கலாதியும் சுத்த வித்தையும். கலை அறுபத்துநான்காகலால் அஃது அறுபத்துநான்காகிய கேசரங்களுக்குத் தொகைபற்றிக் கூறப்படும் ஆகுபெயராயிற்று. ஈசர் என்றது ஆகுபெயராய் அவரால் அதிட்டிக்கப்படும் தத்துவத்தை உணர்த்தும். கலையுரு = கலைக்குள் உரு = கேசரங்களுக்குநடுவாய்விளங்கும்பொகுட்டு. இதயகமலமானது நாளம்முதலாக மேல்நோக்கித் தோன்றும் உலகத்திற் காணப்படும் சுமலம்போலன்றி, கண்முதலாகக் கீழ்நோக்கித் தோன்றும் திவ்வியகமலமாம்.



நாளம் = பூந்தண்டு - பொகுட்டு = தாமரைக்கொட்டை. கேசரம் தாமரைப் பொகுட்டின் புறத்தே தொங்குவன.

---

## பசுபாசங்களின் அநாதித்துவம்.

("ஞானசித்தி" ப்பிரகரம்.)

ஆன்மா பாசங்களோடு கூடியிருந்தலினாலே பசுவென்று சொல்லப்படும். அப்பசு சேதனமாயும் வியாபகமாயும் அருவமாயும் விளங்குதலினாலே நித்தமான பொருளாகும். நித்தமென்றால், தோன்றுதலும் அழிதலுமில்லாதது. அது சேதனவஸ்துவாயினும் அவித்தையுறுதலினாலே, அதற்குக்காரணமான ஆணவமலத்தைச் சார்ந்து நிற்கின்றதென்பது பெறப்படுகின்றது அந்த அவித்தையினாலே, மாயாதேகங்களையும் புண்ணியபாவ கர்மங்கள் செய்தலையும் விரும்புவதாயிற்று. இருளிலிருப்பது போல்வது ஆணவமலபந்தம். இருளுபாதி நீங்க விடஞ்சகமான விளக்கைவிரும்புவதுபோல்வது மாயாதேகங்களில் விருப்பம். விளக்கை விரும்புவது எதற்காகவென்று நோக்கில், அவ்விளக்கின்சகாயத்தால் தான்விரும்பிய தொழிலைச்செய்யவும், உண்ணுதல்முதலிய போகங்களை நுகர்தற்குமென்பது புலப்படும், அதுபோல, ஆன்மா சரீரத்தைவிரும்புவது தொழில்செய்தற்பொருட்டேயாம். அத்தொழிலே கன்மமென்று சொல்லப்படும்.

அறியாமையுடைமை ஆணவமலகுணம். அறியாமையை ஏகதேசத்தில் நீக்குமாறுசார்ந்தது மாயாமலம். ஆணவமலகுணமாகிய அறியாமையோடு விருப்பு வெறுப்புற்றுப் பிறர்க்கு இதாகிதஞ் செய்தலால் விளைவது கன்மமலம். இப்படி மும்மலமும் ஆன்மாவைச்சார்ந்திருக்கும். முன்னில்லாத பாசத்தை உண்டாக்கி ஆன்மாவுக்குக் கடவுள்சேர்த்தாரென்னில், அவரது கருணைக்கு இழுக்காய்முடியுமாதலால், அதுபொருந்தாது. "இல்லதுவராது உள்ளதுபோகாது என்னும் நியமத்தால்" இல்லாத மலமாயை கன்மங்கள் புதுவதாக உண்டாகமாட்டா. உண்டாக்குதற்கு ஒரிவையபு

மில்லை. ஆன்மாவைச்சார்ந்து உள்பொருளாயிருத்தலும் காண்கின்றேம். ஆதலால், அவை அநாதியவென்றேசொல்லவேண்டும்.

அநாதியாவது, உற்பத்தியில்லாதது. அறியாமையை விளைவிக்கும் ஆணவமலம் அநாதி. இந்த உடம்பும், உடம்பிலுள்ள கரணங்களும், உயிர்கள்வசிக்கும் உலகபேதங்களும், அங்குள்ள போகங்களும் ஆகிய தநுகரண புவனபோகங்களுக்குக் காரணமாயுள்ளது எதுவோ அதுவேயுமாயை. அந்தக்காரணமாயையே அநாதிப்பொருள். அம்மாயை நித்தமாயிருக்க அதன் காரியமாகிய உலகம்முதலியவை தோன்றி ஒடுங்கும். அக்காரியங்கள் அழிவனவன்றி மாயை அழியமாட்டாது.

இனி, கன்மமலமும் மூலகன்மம் காரியகன்மம் என இரண்டு வகைப்படும். அவற்றுள் மூலகன்மம் அநாதி. காரியகன்மம் ஆதி. உயிர்களாற் செய்யப்படுவனவற்றை இவை நன்மை தீமையென்று வரையறைப்படுத்துதற்கு ஏதுவாய்ப்பொதுமையில்நிற்பது காரணகன்மம். புண்ணியம்பாவம் எனப்படுங்கன்மம் ஒருவனாற்செய்யப்படுதற்கு முன்னும் இருக்கின்றது. உதாரணமாக, பசித்தவர்க்கு அன்னமிடுதல் புண்ணியம். ஒரு உயிரைக்கொலைசெய்தல் பாவம். இவை ஒருவராற்செய்யப்படுதற்கு முன்புபொதுமையில் புண்ணியம் பாவம் எனப்பெயர்பெற்று நிற்கும். புண்ணியத்தை அல்லது பாவத்தை ஒருவன் செய்தபொழுது அவை அவனைச் சார்கின்றன. முன்பு புண்ணியபாவத்தொழிலாய்நின்றதும், பின்பு அத்தொழிலை ஒருவன் செய்தபோது அவனை அத்தொழில் அடைந்து பயன்றருவதும் என இரண்டுவகையாய் பிரித்துநோக்கினல், அவனாற் செய்யப்படுதற்குமுன்னுள்ள நிலை காரணகன்மமும், அவனாற்செய்யப்பட்டு ஆகாமியமாய்ச் சஞ்சிதமாகிப் பிராரத்தநுகர்ச்சிக்கு வந்துகழியும்போது காரியகன்மமெனவும் பெயர்பெறும். காரியகன்மம் இவ்வாறு ஆதியந்தமுடையதாய் ஒழியினும் காரணகன்மமோ நித்தமாயிருக்கும். அதுபற்றியே கன்மமலம் அநாதியாயுள்ளதென்பர்.

இங்ஙனம் ஆன்மாவும் அநாதி. ஆணவமலம் மாயாமலம் கன்மமலம் என்னும் பாசங்களும் அநாதியவேயாம்.

இனி இவை அநாதியவேயாயினும் ஆன்மாவுக்கும் பாசத்துக்குமுள்ள சம்பந்தம் அநாதியோ ஆதியோவென்னின், அநாதியாயுள்ள ஆன்மாவும் அவையும் முன்பு சம்பந்தமின்றியிருந்து இடையே சம்பந்தமுற்றனவாயின், அப்படியாதற்கு இவற்றுளொன்றைவிடவேறுமோரேதுவேண்டும். அன்றி முன்னரே சுத்த



மாயிருந்த ஆன்மாவை இடையே பந்தித்தமலம் முத்தியிற்சுத்தமாயிருக்கும் பொழுதும் வந்துகூடும். அன்றியும் முத்தியென்பது ஒன்று இல்லையாய்விடும். ஆதலின், இடையேவந்து பொருந்தியதென்பது அமையாது. ஆன்மாமலசம்பந்தமுற்றிருக்கவுங் காண்கின்றேம். அதனால் அது அநாதியதென்றே சொல்லல்வேண்டும்.

இனி ஆணவமல சம்பந்தமே மாயைகன்மங்களின் சம்பந்தமுண்டாதற்கு ஏதுவாயிருந்தமையால், ஆணவமலம் மூலமலமென்றும் அதன்சம்பந்தம் சகசமென்றும் சொல்லப்படும். அதன்வழித்தாக மாயைகன்மங்களின் சம்பந்தம் நேர்ந்தமையால் அவற்றின் சம்பந்தம் ஆகந்துகமெனப்படும். ஆகந்துக மென்பதனால் அவை இடையில் வந்தனவென்பதும் அடாது. என்னை? மும்மலபந்தமும் அநாதியென்று நூல்கள் கூறுதலாலும், ஆணவமலத்தான் மறைப்புண்டிருக்குங்கேவலநிலையில் உயிர்க்குத்தாரகமாவது மாயையேயாகலானும் சிவத்தைத்தாரகமாகக் கொள்ளாதநிலையில் மாயையை விட்டகன்றிருக்க வியலாமையானும், கன்மஞ்செய்தற்கேற்ற தன்மையும் அக்கன்மத்தொடர்பும் அநாதியேயிருந்து மாயாகாரியவியஞ்சகமுண்டாயபோது கன்மத்தை உயிர் ஈட்டுதலானும், அம்மாயை கன்மங்களும் அநாதிசம்பந்தமுடையனவேயாம். ஆயினும் கேவலத்தில் ஆணவமலம் தன்மறைத்தற்றொழிலைச்செய்துகொண்டிருக்க, மாயை கன்மங்கள் காரியப்பாடுற்றுத் தொழில் செய்தலின்றிக், காரணரூபமாய் நின்று உயிர்க்கு யாதோருபாதியுஞ் செய்யாமையானும், அவைசகலத்திற் காரியப்பாடுற்று உபாதி செய்தலானும் அம்முறை நோக்கி, ஆகந்துக மெனப்படுமென்றுணர்க.

ஆதலின், ஆன்மாவும் மலமாயை கன்மங்களாகிய பாசமும் அநாதியவென்றே கொள்ளத்தக்கதாம்.

---

## அர்ச்சாதீபம்.

( 67-வதுபக்கத் தொடர்ச்சி. )

இனி, நம்மவர்கள் பரனது உருவத்தை விக்கிரகத்திற் கண்ணினாற்காண்பது கூடாதென்றபடியே அவனது கல்யாணகுணத்தை ஒலிவடிவாகிய வேதத்திற் காதினாற்கேட்பதும், வாயினாற்றுதிப்பதுங் கூடாது என்று சொல்லப் பின்னிடார்கள். இதனையும் அன்னோர் அவலம்பித்தால், அவர்களைப்பிடித்தசனி அப்போதேதொலையும். கேட்பதுங் காண்பதும் பேசுவதும் ஒழிந்துவிடுகின்றமையால், கருதுவதுங்கூடவே யொழிந்துவிடும். பரனொருவன் உளனென்று அவர் கருதுவதை அப்பெரியோனுக்கு மானியம்விட்டதாக மதித்து, நாங்கள் பரனை நினைக்கின்றேம் என்று கூறி, அவ்வ

ளவிற்றுனே தாங்கள் ஞானிகளென்று மகிழ்ந்திருக்கின்றமையே வைதிகர்களாகியபூமேலோரிடம் போராடத் தூண்டுகின்றமையால், அந்தப்பரனிருப்பையும் ஒழித்துக்கொண்டால் அவர்கள் சுகமாய் வாழலாம்! வாழலாம்!! நம்மதோழர் தங்களைவிட நாத்திகர் யாரோ வேறேயுளராகத் தங்கள் பத்திரிகைகளில் (நாத்திகர்) என்று நிஷேதங் கூறுகின்றனர். சைவ வைஷ்ணவ சமயங்களிற் பிறந்தவர் தம்முள், கரும்பு கசப்பது நாவின்குற்றம் என்பதுபோல அச்சமயவுண்மைகளை முற்றும் அறியப் புண்ணியம் போதாமையால், அவைகளைப் புரைமார்க்கங்களென்று கருதி, அவற்றை நிந்திப்பதையே பெருந்தவமெனக்கொண்டு, அறவே அவைகளையொழித்துவிடலாமென்றால், பெண்டு பிள்ளை மாதாபிதாக்களையுங்கூட இழக்க வருமேயென்று பயந்து, அப்படியும் இப்படியுமாகத் தியங்கித் திரியவர்களே இப்போது நாத்திகர் எனவும், பிரஹ்மஸமாஜத்தாரெனவும் பிரவர்த்திப்பவர்களேயன்றி வேறில்லை. சைவமுதலிய சமயங்களிலிருந்து அதீத ஞானத்தை யடைந்தவர்களாகத் தங்களை எண்ணிக்கொண்டிருப்பவர் தம்முள் முதல்படியாளர் நமது ஸமாஜநண்பரும், இரண்டாம் படியாளர் சுயஞானிகள் என்று தங்கள் காலைத் தாங்களே கும்பிட்டு மகிழும் விவேகசிரோமணிகளுமேயாம். இவர்களைப்போல இன்னும் அநேகம் படியாளர்கள் தினுசுதினுசாயுண்டாவார்களென்பதில் ஸந்தேகமில்லை. இன்னோர் யாவரும் நாத்திகக் குழுவில் முதல்வகுப்பு, இரண்டாம்வகுப்பு என்று கொண்டாடும் பெருமையினரே யாவர். ஆகையால், நம்மவர் தங்களுக்குரிய நாத்திகத்தை நாடாது, நாத்திகர் என்று வேறு யாரையோ பிரஸ்தாபிப்பது குணஞ்செய்யாது. இவ்விருதிறத்தவரையும்யாம் எப்படி யோசிக்கின்றோமெனின், தந்தைதாய் சொல்கேளாது திரியும் மைந்தர் பலர் உலகில் அப்பெரியோர்களை விட்டு அறவேயொழிந்துபோகாமலும், வீட்டிலுஞ் சரியாகத் தங்கி வாழாமலுஞ் சீ! சீ!! என்று யாவரும் வெறுக்க மகிழ்ந்திருக்கின்றார்களாகையால், அவர்களோடொப்பவே கொண்டு நிஸ்புருஹமாக வொதுக்கியிருக்கின்றனம். நம்மவர் நாத்திகர் என்று பிறரைக்கூறுவது தாம் பரனைக் கருதுகின்ற யோக்யதையைப் பெற்றிருப்பதாகக்கொண்ட கம்பீரமே யாகையால், அது கண் - காது - மூக்கு - வாக்கு முதலியவற்றின் வியாபாரம்நேராதபோதுநிலைக்குமா? நிலைக்காதா? என்பதை முன்னர் யோசித்து முடிவு தேர்வாராக. காது - மூக்கு - வாக்கு முதலியவற்றின் வியாபாரங்களைக் கூர்ந்தறியும் நுட்பம் போதாமையே அன்னோர் கண்ணினதுவியாபாரத்தைமாத்திரம் நிந்திக்கத் தொடங்கியதாம. இந்த ஸூக்ஷ்மவிசாரத்தால் கண்-காது-மூக்கு-வாக்கு-மனசு என்னும் நம்மவரது இந்திரிய - கரண வியாபாரமெல்லாம் ஒழிந்து சூந்யமாய்ப் போகின்றமையால், விக்கிரகத்தை ஆராதிப்பது கூடாது, மனசினால் தியானிப்பது கூடும்; என்று



அவர்கள் கூறிவருவது குருட்டுவழியாக முடிந்தது. மனசினால் ஒன்றை நினைப்பது கண் - காது முதலிய இந்திரியவழியாலென்றே நிச்சயிக்கப்பட்டமையாலும், அந்தமனசு விகாரத்தன்மையுடையது ஆகையாலும், அது பரனை ஸாக்ஷாத்தாகத் தியானிக்கயோக்யமுடையதாகாது. அப்படிப்பட்ட மனசால் யாம் பரனைத் தியானிக்கின்றோமென்று பூர்வபட்சிகள் சொல்லுவதுங் கூடாது. அவர் சொல்வது என்போலுமெனின், மலடுகறந்த பாலருந்தினேன் என்று ஒருவன் கூறுவதுபோலாம்.

அதவா அவர்களது வெறுஞ்சொல்லை அங்கீகரித்து நாம் யோசிப்பினும் பெருஞ்சிரிப்பையே விளைக்கின்றது. அவர்கள் பிரஹ்மமொன்று இருக்கிறது என்று நினைத்துக்கொண்டிருப்பதே பிரஹ்மத்தை வழிபடுதலென்றும், அதுவே பிரஹ்மத்தியானமென்றும், அவ்வளவேயன்றிப் பிரஹ்மத்தை ஒருவராலுங் காணக்கூடாது என்றும்) அதைக்கண்டவரில்லையென்றுந்தீர்மானஞ்செய்துகொண்டிருக்கின்றார்கள். ஒருவன் சோறு என்று மனசினால் நினைத்துக்கொண்டு, அம்மட்டிலேதானே அவன் சோற்றையடையும் முயற்சி செய்துவிட்டதாகத் திருப்தியடைந்து, சோற்றையுண்டு களித்தலும் அதுவேயென்றுகூறி, அதற்கு வேறாக ஒருவன் சோறுண்டு மகிழ்ந்தானென்றால் அது பிசகென்றுங்கூறி மகிழ்வது எப்படியோ, அப்படியே நம்ம ஸமாஜநண்பரது அநுபவத்தையுங் கொள்ளவேண்டியது. பசியால்வருந்தியவொருவன்சோற்றைமனசினால் நினைத்துக்கொண்டு வாளாவிருந்தால் பசிதணியுமா? அதை நினைத்துக்கொண்டிருந்துவிடுதலே அதைத்தேடும் முயற்சியாய்விடுமா? அந்த நினைவே அதையுண்டு களித்தலும், பசித்துன்ப நீங்கலாகுமா? சோற்றை நேராகக்கண்டு உண்டு மகிழாமலே நம்மவராவது பசிதீர்ந்திருப்பார்களா? இதை யோசிக்கிறபோது சோறுகாணாத மூளியொருவன் அதைக் கஷ்டப்பட்டுத்தேடி அநுபவிப்பதொழிந்து சோம்பேறித்தனத்தால் வீண்பேச்சுகளைப்பேசி எண்ணியிடிந்து காலங்கழித்து இறக்கும் ஸாத்ருஸமே நம்ம நண்பரது பிரஹ்மாநுபவத்திலுஞ் சிறக்கும்! சிறக்கும்! ஆணவாக்தகாரத்தின்மூழ்கிஅஞ்ஞாநியாக அழுந்துதலேஅதுவாம். தேகேந்திரியப் பிராணாந்தக்கரண தர்மங்களற்றவிடத்தில், கேவலம் ஆத்மஞானத்தாலறிந்து அநுபவிக்கத்தக்கது சிவமாகையால், அந்த நிலைக்கு ஏங்கித் தவம்புரியாதுபாழுக்குமுத்துலைபோட்டிறைக்கும் நம்ம பண்டிதர் கூற்று அதிசயத்தையே விளைக்கின்றது.

இது நிற்க, பிரஹ்மத்தை நினைப்பதனால், அது அவ்வளவிலிருப்பதன்றி அதை யொருவருங் காணக்கூடாது என்று நம்மவர் தெளிந்தார்கள். ஒருவன் ஒருபொருளை உண்டு என்பதும், அதை நினைப்பதும் அது தனக்கு விஷயமாகாதபோது பயனில்லை. பிரஹ்

மம் என்பதொன்று உண்டு என்பதும், அதை நினைப்பதும் அது தனக்கு வெளியாகாதபோது பயனில்லை. தனக்குப் பயனில்லாத வொன்றைப் பிரஹ்மம் என்று சிந்திப்பதும், அதை மகிமையாகக் கூறுவதும் தன் பிரயோசனத்துக்கு வாராத முயற்கோட்டைப் பிரஸ்தாபித்து அதற்கு முழம் நூறு என்று பிரசங்கிப்பது போலவே முடியும். இந்த நுட்பவிசாரத்தால், பிரஹ்மத்தை யாம் மனசினால் தியானிக்கிறோம் என்று கூறும் ஆபாசம் அடியோடே மாய்ந்தது. இதுகாறுஞ்செய்த விசாரத்தால் மனசு ஒன்றினன் மாத்திரமே பிரஹ்மத்தை உபாசிக்கவேண்டியது என்னும் பூர்வபக்ஷிகளது மதம் வெளுத்தது.

இனி வைதிகராகிய எம்மவர் கூற்றை எடுத்துப்பிரகாசப்படுத்துவாம். கண்முதலிய இந்திரியங்கள் ஜடம். பிராணாதிகள் ஜடம். மனாதிகளும் ஜடம். இவைகளால் பிரஹ்மத்தை எட்டமுடியாது. செம்பு - கல் முதலிய விக்கிரகங்கள் பாணுருவப்போலச் செய்யப்படினும் அவையும் ஜடம். ஆகையால், அவை பிரஹ்மமாகமாட்டா. பிரஹ்மமோ தடையற்ற அறிவுக்குமாத்திரமே எட்டத்தக்கது. தடையற்ற ஞானத்தாலன்றிச் சிவத்தை எட்டமுடியாது. தடையற்ற ஞானம்பெற்றவர்கள் உலகில் ஏகதேசிகள். ஏனையோர் அத்தடையற்ற ஞானம்பெறுமையால், அவர்கள் பரனை எட்டுவதின்று. பரனோ அவர்களுக்கு எட்டுவதின்று. ஞானிகள் பரனை எட்டியும், அவர்களுக்குப் பரன் எட்டியும் இயக்கப்பாடுண்டாவதால், ஜடங்களாகிய விக்கிரகங்கள் ஞானிகளுக்கு வேண்டப்படா. ஏனையோர்க்குத் தடையற்ற ஞானம் உண்டாகாமையாலும், அவரது இந்திரியங்களும், கரணங்களும் பரனை எட்டாவாகையாலும், ஜடமாகிய விக்கிரகங்கள் பரனல்லவாகையாலும் ஞானிகளல்லாதவர்க்கும் விக்கிரகங்கள் வேண்டப்படா. இங்ஙனமாகவிக்கிரகத்தைஆராதிக்கத்தக்கவர்கள் வேறுயாவர் எனின், அதற்கு விடைகூறுதும்.

ஞானிகள் தடையற்ற ஞானமுடையவர்களானவிடத்தும் அவர்களுக்குத் தேகநீங்குமளவும் தேகாதிகளின் விவகாரங்களிருக்கும். தேகாதிகள் கன்மேந்திரியம் - ஞானேந்திரியம் அந்தக்கரணம் என்னும் பிரிவுடன் விளங்கும். இவை இயங்கும்போது இவைகளுக்கு மலமாயாதிகளிற் பற்றுண்டாகமாட்டாது. இவைகளும் அந்தஞானிகளது சேர்க்கையால் பரிசுத்த மெய்தாநிற்கும். உப்பளத்திற்சேர்ந்த புல்லானது உப்பேயாய் விடுதல்போல. இதனை "ஆற்றுலலைகடற்கே பாய்ந்தநீரந்நீர்மை, மாற்றியவ் வாற்றுன் மறித்தாற்போற், றேற்றிப் - புலன்களெனப்போதம் புறம்பொழியு நந்த, மலங்களற மாற்றுவிக்கும் வந்து" என்னுஞ் சித்தாந்தச்செல்வர் திருவாக்குந்தெளிவிக்கும். ஆற்றிலே நின்றும் அலையையுடையகடலிலேபோய் விழு



ந்த நல்ல நீரானது தன்மைமாறிக் கடனீரேயாய் விடுவதும், மீண்டும் அக்கடலிலே நின்றும் அது ஓர்கால் திரும்பினும் அக்கடனீராகத் திரும்புவதல்லது ஆற்றுநீராகத் திரும்பாததுமாகிய உண்மையே இத்திருவெண்பாவாற் பெறப்படுகிறது. இசனையுய்த்துணருங்கால், ஞானத்தால் சிவனைக்கூடிச் சிவமாயிருக்கிற ஞானிகளுக்குத்தேகநீங்குமளவுமுள்ள விவகாரங்கள் யாவும் உலகவிவகாரமாகமாட்டா. பரனது விவகாரமாகவே முடியும். அன்னோர் பகிர்முகமாவதும் உலகத்துக்கு உபகரித்தற்கான திருவருட் பிரேரகமேயன்றி வேறில்லை. கடலிலே நின்றும் ஓர்கால் திரும்பிய நீரானது அங்ஙனம் திரும்புகையில், கடனீராகவே நிலைத்தலால், கடலாகிய சிவத்தின்றன்மைகண்டு,வெளிப்பட்டநீராகியசிவஞானிகளை வழிபட்டுய்ய வேதங்கள் விதிக்கும் அவ்வழிபாட்டால், சிவனை வழிபடுதலாய பெரும்பயன் எய்துவதும் ஸித்தம். ஞானிகளது தேகேந்திரியாதிகளின்றன்மை இவ்வியல்பினது என்று வெளிப்பட்டமையால், இவ்விந்திரிய கரணங்களாலும் இவர்கள் சிவனையெட்டுவதற்கு ஹேது உண்டாயிற்று. பூவோடு சேர்ந்தநாரும்பரனது முடியிலேறியதுபோல இன்னும் விரிக்கிற் பெருகும்.

ஆபின், இவர்களது கரணங்கள் விக்கிரகங்களைக் காணுமோ? அவற்றுளதிஷ்டிதமாயுள்ள சிவத்தை நேரே காணுமோ? எனின், எதைக்காணுமிடத்தும், காணுதற்கு அதிஷ்டானம் ஞானமேயாகையாலும், அதில் வேறறக்கரணங்கள் புணர்ந்திருக்கின்றமையாலும், மேல்வினா உசிதம்பெறாது. எனவே, ஞானமாத்திரத்தால் நேரே சிவத்தையும், ஞானம், கரணம் இவைகளின் சையோகமாத்திரத்தால் விக்கிரகங்களிற் சிவத்தையுங் கண்டு ஆநந்திப்பரென்பது துணிபு.

---

## ஹரதத்தாசாரியசுவாமிகள் சரித்திரம்.

(61-வதுபக்கத் தொடர்ச்சி.)

பின்னர் சிலநாட்கழித்து, ஓர் பிராமணன் அக்கிராமத்திலே பசுக்களைப் பரிபாலனஞ் செய்துகொண்டு வருவானாயினன். ஓர் நாள் அவன் வைக்கோற் கட்டொன்றைக் கொண்டுவந்து உட்புறத்திலே அதனைப் போடும்போது, அவ்வுட்பக்கம் அவனுக்குத் தெரியாமையால் அவ்வைக்கோற்கட்டு அபுத்திபூர்வமாக இளங்கன்றொன்றின்மீது விழ, அந்தக் கன்று இறந்து போயிற்று. இறந்துபோன கன்றைக் கண்டு பிராமணன் துக்கித்தான். அதை அறிந்த அக்ராரத்து மற்றப் பிராமணரனைவரும் வந்து பார்த்து, அவன் கோஹத்திசெய்தானென்று அவனைத் தூஷித்து, அவன்முகத்தைப் பார்க்கலாகாது என்று தவிர்த்தார்கள். தான் செய்த தீச்

செயலைநோக்கி வருந்துகின்ற பிராமணனுக்குச் சனங்கள் கூறும் நிந்தாவார்த்தைகள் புண்ணிலே உப்புநீர் சொரிந்தாற்போல விருந்தன. தனது பாவ நிவாரணத்தின் பொருட்டுப் பிராமணர் ஒருங்கு கூடிச் சந்தியா செபம் செய்யும் மடத்துக்குப்போய் அபுத்திபூர்வமாதப் பசுவின்கன்றைக்கொன்றபாவத்தை அடைந்தேனே! இதற்குப் பிராயச்சித்தஞ் செய்யவேண்டுமென்று அவர்களை நமஸ்கரித்துப் பிரார்த்தித்தான். இதைக்கேட்ட பிராமணர்கள் உதாசீனமாக அவனைப்பார்த்து உன்முகத்தை நாம் பார்க்கமாட்டோம்; நீ இவ்விடம்விட்டுப் போய்விடு என்று அவனைப் போக்கி, உரைத்து அவனைப்பார்த்த தோஷம் நீங்குமாறு சூரியதரிசனஞ் செய்தார்கள். தன்னைப் பிராமணர்கள் குற்சிதமாக நிந்தித்தமையால், அவன் அதிக துக்கமடைந்து பிசாசுபிடித்தவன்போலாயினன். அவன் போகும் மார்க்கத்தில் அக்கினீசுவரர் ஆலயத்தைத் தரிசித்துப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்தான்; அப்பெருமானைத் தரிசித்த விசேடத்தினாலே கலக்குண்ட அவனது மனசு சிறிது தெளிவுகொண்டு அதனால் நிர்மலபுத்தியுடையனாய், அரதத்தாசாரியரைச் சரண்புகுவேனாயின், உறுதியாக அவர் தனது பாவ நிவாரணத்திற்கு ஓர்வழி காட்டுவாரென்று கொண்டு, சிவபிரானிடத்திலே பாலியாவஸ்தையிலே அவர் ஞானம்பெற்றமையும், ஒழுகக் காய்ச்சிய அயாசனத்திலிருந்து பிரசங்கித்தமையும் எவர்களாலுஞ் செய்தற்கு எளியனவல்லவே என்று நிச்சயித்து அவருடைய கிருகத்துக்குள்ளே வந்து பிரவேசித்தான்; பிரவேசித்தபோது, அவரது வாசற்படி அவன் தலையிலே பிடிக்க, உடனே "சிவசிவ" என்று சொல்லியிருந்தான். "சிவசிவ" என்று சொல்லியசப்தம் கிரகத்தினுள்ளே இருந்த அரதத்தாசாரியசுவாமிகள் திருச்செவியில் எய்திற்று. எய்தியவுடனே, தாம் செய்த காரியத்தைவிடுத்து ஆனந்தசாகரத்தில் மூழ்கி, யாரோ பெரியவர் இவ்வேளையிலே சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு வந்தாரென்று நினைந்து வாசலிலே வந்து அவனை எதிர்கொண்டார். அவர் எழுந்தருளிவந்தபோது, அப்பிராமணன் ஆசாரியருடைய திருவடிகளிலே தண்டாகாரமாக வீழ்ந்து வணங்கினான். அப்போது ஆசாரியர் அவனைத் தமது திருக்கரத்தினால் எடுத்தணைத்து ஆலிங்கனஞ் செய்தார். "சிவபக்த சிரேட்டரே" நீவிர் எனது கிரகத்துக்கு எழுந்தருளினமையால், நான் தன்னியனாயினேன், எனது கிரகமும் தன்னியமாயிற்று" என்று இங்ஙனஞ்சொல்லி, அவரை ஆசனத்தின்மீதிருத்தி உபசரித்தார். ஆசாரியர் தமக்கு இத்துணை மரியாதை செய்தமையால் மிகுதியும்ஆனந்தமடைந்து, அப்பிராமணன் பின்னர் இங்ஙனம்ஆலோசிப்பானாயினன். ஐயோ! நான்இருமுறை "சிவசிவ" என்று சொன்னமையால் இந்த மரியாதை கிடைத்ததே! என்னிடத்தில் மற்றோர் துக்கம் நிகழ்ந்துகொண்டிருக்கின்



றதே! அதனை இவரிடம்விஞ்ஞாபனஞ்செய்யாதொழியின் எனக்குப் பிராயச்சித்தம் கிடையாதென்றெண்ணி, ஆசாரியசுவாமிகளே! அடியேன் அபுத்தி பூருவமாகக் கோகத்தி செய்துவிட்டேன் உமது பாதங்களையே சரண் என்று அடைந்தேன், அடியேனைப் பாதுகாத்தருளுதிர் என்று வேண்டி, ஆனந்தபாஷ்பஞ் சொரிய அவர் திருவடிகளிலே வீழ்ந்து நமஸ்கரித்தான். இப்படிச் சொல்லிய பிராமணனைக் காருண்ணிய சாகரராகிய ஆசாரியர் நோக்கி, "நீர்செய்த கோகத்திக்குப் பிராயச்சித்தம் முடிந்துபோய்விட்டது. உமக்கு மோக்ஷம் எய்தியது" என்றார். சுவாமி! அடியேனுக்குப் பிராயச்சித்தம் எப்படிப் போந்தது? மோக்ஷம் எப்படி எய்திற்று! திருவாய் மலர்ந்தருளல்வேண்டும் என்றான். அப்போது அவர் நீவிர் முதற்சொல்லிய "சிவ" சப்தத்தினால் கோகத்திற்குப் பிராயச்சித்தம் எய்திற்று; இரண்டாவது "சிவ" சப்தத்தால் முத்தியும் எய்திற்று என்றார். கிருபாமூர்த்தியுடைய அமிர்த வார்த்தையைக் கேட்டு, இருநிதியடைந்த வறியோன்போலஆனந்தமடைந்து, அந்த அமிர்த வார்த்தையைக் கேட்ட ஆராமையினாலே மீட்டும் மீட்டும் ஆசாரியசுவாமிகளை நமஸ்கரித்து ஆனந்தக் கூத்தாடினான். இதயத்திலேயுள்ள தாபம் அவனுக்குச் சாந்தியாயிற்று. அவனது முகமும் பிரசன்னமாயிற்று. இங்கு நிகழ்ந்தவனைத்தையுங் கண்டுகொண்டிருந்த பார்ப்பான் ஒருவன் அப்பிராமணனை நோக்கி, அதிகுரூரமாகிய கோகத்திபாவம் சிவநாமத்தினாலேநிவாரணமாகுமா? இரும்பைத்தின்று சுக்குக் கஷாயஞ் சாப்பிட்டால் சீரணமாய் விடுமா? பாவஞ்செய்யாதவராலே சிவன் துதிக்கற்பாலர். பாவிகள் அந்த நாமத்தினாலே எப்படிப் பரிசுத்தராவார்! என்றான். அதைக்கேட்ட ஆசாரியர் தம்மோடிருந்த பிராமணனை நோக்கி, சிவபிரானுடைய மாயை பிரம விஷ்ணுக்களையும் மயக்கிவிடுமே, இவனையா அது தப்பவிடும் என்றார். சிவநாமத்தினாலே ஒழிக்கத்தக்க பாவத்தைச் செய்பவர் இவ்வுலகிலே இல்லையாதலின், ஸ்மிருதிகளிலே இந்தச் சிவநாமம் பிராயச்சித்தமாக எடுத்துச் சொல்லப்படாது; அவ்வப்பாவங்களுக்கு இயைந்த பிராயச்சித்தங்கள் ஆங்குச் சொல்லப்பட்டுள்ளன. பாசுபதாஸ்திரத்துக்குக் கொசுருகள் இலக்கில்லையாமாறுபோல, சிவநாமத்துக்குச் சர்வ பாவசமூகங்களும் இலக்கில்லையாமென்க. இவ்விஷயத்திலே எவனுக்குச் சந்தேகமுளதோ அவனுக்கு இன்பம் இல்லையாமென்று இங்ஙனம் சொல்லிவிட்டு, இதைக்குறித்து விவாதஞ்செய்பவனைப் பார்த்தல் பாவமாய் முடிதலின், அதுவுமற்றி இவ்விடத்திலே யாரும் அறியாது குதர்க்கஞ்செய்கின்ற உன்னை நோக்குதல் எமக்கு இகழ்ச்சியாமாதலின், நீ இவ்விடம்விட்டுப் போய்விடுஎன்றுசொன்னார். சிவநாமத்திலே சந்தேகங்கொண்டமையால், ஆசாரியரால் உடனே திரஸ்கரிக்கப்பட்டு, அவன் அதிக பாவமும் பயமும்

எய்தி தன்வீடுநோக்கிப்போனான். கோகத்தி பாவத்தினின்று நீங்கிய பிராமணனை நோக்கி, நீர் எப்போதும் சிவநாம கீர்த்தனஞ்செய்யுமென்று சொல்லி, அவரை கிரகத்துக்குப் போகுதிர் என்று ஆஞ்ஞாபித்தார். இங்ஙனஞ் சந்தோஷத்தோடு சிவநாம கீர்த்தனஞ் செய்துகொண்டு போகும்பொழுது, அவன் பிராமணர்களை நோக்கி, சிவனுடைய கிருபையினாலே சர்வஞ்ஞாதி குணங்களையுடைய அரதத்தாசாரியர் எனது பாவங்களெல்லாம் ஒழிந்து போய்விட்டன என்று சொன்னார் என்றான். அதைக் கேட்டுப் பிராமணர்கள் உனக்கு மகாபாதகமானது எப்படி விமோசனமாயிற்று என்று கேட்டார்கள். அதற்கு அவர் அவர்களை நோக்கி, நான் அவர் வாயிலில் நுழைந்தபோது, இருதரஞ்சிவநாமஞ்சொன்னேன், அவர் என்னை உபசரித்து, பக்தருடைய பீடையைப்போக்கும் சிவனுடையநாமம் இருமுறைஉச்சரிக்கப்பட்டபோதே, உமது கோகத்தி சந்தேகமின்றி நாசமாயிற்று. நீரும்சம்சாரத்தினின்று முக்தராயினீர் என்று சொன்னார் என்றான். இதைக் கேட்ட பிராமணர்கள் நன்று! நன்று! நீ சிவநாமத்தை உச்சரித்த மாத்திரத்திலே மகாகொடிய பாவம் எப்படி நீங்கும்! என்று பரிகசித்தார்கள். உடனே அவர்கள் சொல்லிய வார்த்தையைக் கேட்ட பிராமணன் ஆசாரியர் கிரகத்துக்கு வந்து அவர்கள் சொல்லிய வார்த்தையை அவருக்கு விண்ணப்பஞ்செய்தான். அதைக்கேட்டஆசாரியர் அவனைப் பார்த்து, ஓ பிராமணனே நீ அந்தப் பிராமணனிடத்திலே மீட்டும் போய் என்னசெய்தால் பாவம் நீங்கினமையையுற்று அவருக்குத் திருப்தியுண்டாகுமென்று கேட்டுவந்து எனக்குத் தெரிவி என்றார். அப்போது அவர் பின்னும் அங்குநின்றும் போய்ப் பிராமணர்களை நோக்கி, தமது ஆசாரியர் சொன்ன மொழியைச் சொல்லி, உங்கள் மனசு திருப்தியாதற்குத் தாம்யாது செய்தல்வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர்கள் அக்கினீசுரர் சன்னிதானத்திலுள்ள சிலாவிடபதேவர் நீர் கொடுக்கும் அறுகம்புல்லைச் சாப்பிடுமாயின், உமது சிவநாமத்தால் பிராயச்சித்தம் எய்தியது நிச்சயந்தான் என்றார்கள். அப்போது அவர் விரைந்து ஆசாரியரிடத்தில்வந்து சிவ சொரூபமாய் விளங்கும் ஆசாரியரை நமஸ்கரித்து, அவர்கள் சொல்லிய வார்த்தையைச்சொன்னார். ஆசாரியர் அவரைநோக்கி நீவிர் சிவபிரானைத் தியானித்துக் கொண்டு அறுகிருக்குமிடஞ் சென்று, அதனை எடுத்து நன்றாகத் தீர்த்தங்கொண்டு கழுவிக் கொண்டுபோய்க் கொடுக்குதிர், சந்தேகிக்கவேண்டாம் என்று ஆஞ்ஞாபிக்க, அவர் அப்போது போய், அறுகெடுத்து அதனை நன்றாகக் கழுவிச் சுத்திசெய்து அப்பிராமணர்களையும் அழைத்துக்கொண்டு அக்கினீசுவரர் ஆலயத்துக்குப் போந்து, அக்கினீசுவரப்பெருமானை நமஸ்கரித்து, இடபதேவருக்கு வலப்புறத்திலே அறுகம்புல்லைப் பிடித்துக்கொண்டு நின்று, அஷ்ட



மூர்த்தியாகிய சிவபிரானை வகிப்பவரே! த்யாகிதியே! சிவநாமோச்சாரணத்தினால் என்பாவம் விமோசனமானால், இந்தப் புல்லைச்சாப்பிட்டு என்னை எப்போதும் ரக்ஷித்தருளுக என்று பிரார்த்திப்ப, அவ்விடபதேவர் தமது நாக்கை வலப்புறமாக நீட்டி, அவர் கையிலிருந்த புல்லைக்கிரகித்து சாப்பிட்டார். அப்போது அங்குநின்ற பிராமணர் அனைவரும் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்து, அவ்வானந்த மேலீட்டினாலே அரதத்தாசாரியரைத்தோத்திரஞ்செய்து, அவரைநோக்கி பிராமணரே! இப்படிப்பட்ட சமாசாரம் எவ்விடத்துண்டு என்று வாழ்த்தி, உமது பாவமெல்லாம் போய்விட்டன, நீர் கிருதார்த்தராயினீர் என்றார்கள். அந்தப் பிராமணரெல்லாம் பின்னர் ஆசாரியரிடத்திலே வந்து அவரைச் சங்கர சொரூபி என்றும், அவருக்கும் சங்கரனுக்கும் பேதமில்லையென்றும் துதித்து வணங்கினார்கள். சிவபெருமான் சித்தவடிவராகிப் பாண்டியன் தானைக் கல்லானைக்குக் கரும்புகொடுத்துண்பித்தாரென்று சொல்லப்படுமாறுபோல, உமது ஆஞ்ஞையினாலே இந்த இடபமும்புல்லை வாங்கி உண்டுவிட்டது. உமக்குஞ் சிவபிரானுக்கும் பேதமில்லை; உமது பெருமையை யார் புகழ்ந்து முடித்தல் கூடுமென்று துதித்தார்கள். அப்போது சுவாமிகள் அவர்களைத் தத்தம் கிரகத்துக்குப் போமாறு ஆஞ்ஞை செய்ய, அவர்கள் சிவநாமத்துக்கு இத்தனை மகிமையுளதோ என்று வியந்து வீடுபோய்ச் சார்ந்தார்கள். அறுகூட்டியபிராமணர் நேத்திரங்களிலே நின்று ஆனந்தபாஷ்பஞ் சொரியச் சம்சாரபந்தத்தினின்றும் விமோசனராகி ஆசாரியர் சந்நிதியிலே நமஸ்காரஞ்செய்து, சுவாமீ! மகாபாதகனாகிய நான் உமது கிருபைக்குப் பாத்திரனாயினேன் என்றார். அப்போது ஆசாரியர் அவரை நோக்கி, இன்றுமுதல் சிவநாமோச்சாரணஞ்செய்து சிவபூசை முடித்துச் சிவாலயதரிசனஞ்செய்து வருதிரென்று கூறி, அவரைக் கிரகத்துக்கு அனுப்ப, அவர் சந்தோஷத்தோடு வீடு சார்ந்து சிவத்தியானாதி செய்துகொண்டு ஆசாரியர் நெறிபற்றி ஒழுகுவாராயினார்.

[இன்னும் வரும்]

---

# அறம்.

(விருதுபட்டி சைவப்பிரகாச சபாப் பிரசுரம்.)

---

தானந் தவந் தருமஞ் சந்ததமுஞ் செய்வர் சிவ
ஞானந் தனை யணைய நல்லோர் பராபரமே.

என்ற திருவாக்கின்படி பிறப்பிறப்பினீங்கி மீளாத முத்தியின்பத்தைத் தரத்தக்க சிவஞானத்தை யடைய விருப்பமுடைய உத்தமர்கள் மேற்கண்ட மூன்றையும் அன்போடு செய்தல் வேண்டும். தானமாவது தங்கை

முதலிய புண்ணிய தீர்த்தங்களிலும் க்ஷேத்திரங்களிலும், கோதான முதலியவைகளைச் சற்பாத்திரர்களுக்குச் செய்தலாம். இத்தானத்தைச் சற்பாத்திரர் அல்லாதவர்களுக்குச் செய்தால் அதன் பலனைக் கொடாது. இக்கருத்து நோக்கியே, "நிலமத்தனை பொன்னைச் சிவஞானிக் கீந்தால், பல முத்தி சித்தி பரபோகமுந் தரும். நிலமத்தனை பொன்னை நின் மூடர்க் கீந்தால், பலமுமற்றே பரபோகமுங் குன்றுமே." என்ற திருமந்திர விதி எழுந்தது.

இனி தவமாவது:—காமக் குரோத முதலிய குற்றமான குணங்களை நீத்து ஐம்பொறி யடக்கல் இயம நியமம் முதலிய உத்தம குணங்களைக் கைக்கொண்டு ஈஸ்வரத் தியானஞ் செய்தலாம் "யோகியர்க்கே ஞானம் ஒழுங்காம்" என்ற திருவாக்கும் இதனையே வலி யுறுத்தும்.

இனி தருமமாவது -பசு (ஆன்மா) தருமம், பதி (சிவ) தருமம், என இருவகைத்து. அப்பசு தருமமாவது, அன்ன சத்திரம் தண்ணீர்ப் பந்தல் முதலியவை வைத்தலும் வறியார்க் கொன் றீவதே ஈகை என்றபடி வறியராய், திக்கற்ற வயோதிகராய், தொழில் செய்து சீவிக்க சக்தி யற்றவராய், பிணியாளராய், அங்கப் பழுதுடையரா யுள்ள எல்லோர்க்கும் "இயல்வது கரவேல்" என்ற திருவாக்கின்படி, தங்கள், தங்களா லியன்ற உதவியைப் புகழ் முதலிய உலகப் பயனைக் குறியாது சற்பாத்திரர், அசற்பாத்திர ரென்ற பேதமின்றி சீவகாருண்யத்தோடு செய்தலாம். இதனையே "ஈத லறம்," "மேலுலக மில்லெனினும் ஈதலே நன்று" என்ற திருவாக்குகள் வற்புறுத்து கின்றன.

இனி பதி (சிவ) தருமமாவது:—சிவாலயத் திருப்பணி செய்தல், சிவாலய சீரணோத்தாரணஞ் செய்தல், திருநந்தனவனம் வைத்தல், மஹேசுரர்களாகிய சிவனடியார் பூசை செய்தல், முதலியவைகளும், "எவ்வுயிரும் பராபரன் சன்னிதியதாகும்" என்ற பிரமாணப்படி சகல வுயிர்களிடத்தும் சிவ பாவனை செய்து அவரவர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தங்கள் தங்களால் இயன்றமட்டும் அன்போடு செய்தலுமாம். இதுவே பொருளைப்பெற்றதின் பிரயோசனமாம். இக்கருத்து நோக்கியே "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியுமென" நம் மணிவாசகப் பெருமான்கட்டளை யிட்டுள்ளார்.

பிரதமத்தி லெடுத்துக் கொண்ட பிரமாணத்தின் வண்ணந் தானந் தவந் தருமம் என்ற மூன்றும் சிவஞானத்தை யடைவதற் கேதுக்களே. ஆனால் முதலிரண்டுஞ் செய்வதற்குப் பொருளும் சரீர ஒற்றுமையும் இன்றியமையாதனவாயிருக்கின்றன. மூன்றாவது குறித்த தருமம் யாவராலும் எளிதிற் செய்யக் கூடியது.

"பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல், இறக்கும் பொழுது கொடு போவதில்லை இடைநடுவிற், குறிக்கு மிச்செல்வஞ் சிவன்



தந்த தென்று கொடுக்கறியா, திறக்குங் குலா மருக்கென் சொல்லுவேன் கச்சி யேகம்பனே." "ஐயமிடுமி னறநெறியைக் கைப்பிடுமி, னிவ்வள வேனு மன்னத்தை யிட்டுண்மின்—றெய்வ, மொருவ னுளனென் றுணர வல்லீரே, லருவினைக ளைந்துமறும்" என்ற திருவாக்குகள் இதனையே வலியுறுத்துகின்றன.

**அன்பர்காள்!!** மேற்கண்ட மூன்று ஏதுக்களில் தங்கள் தங்களுடைய தகுதிக் கேற்ப இயன்றவைகளை அன்போடு செய்தால் பெரும் புண்ணியமாகிய சிவஞானத்தையே கொடுக்கு மென்பது திண்ணம்.

இதனாற் போந்த தொகைப் பொருள்—முத்தி யடைதற்கு சிவ ஞானமே உரித்தென்றும், அச்சிவஞான மெய்தற்கு மேற் கூறிய தானந் தவந் தருமம் என்ற மூன்றும் ஏதுக்க ளென்றும் தானமாவது, புண்ய க்ஷேத்திராதிகளில் சற்பாத்திரத்தில் கோதான முதலியவைகளைச் செய்த லென்றும், தவமாவது காமாதி குற்றங்களை நீக்கி இயம நியமாதி யோகங்களைச் செய்தலென்றும், தருமமாவது பசு தருமம், பதிதருமம், என இருவகைப்பட்டு அன்னசத்திர முதலியவைகள் வைத்தல் பசு தருமமென்றும், சிவாலய திருப்பணி, நந்தனவனம் வைத்தல், மாகேசுர பூசை செய்தல் சகல ஆன்மாக்க ளிடத்தும் சிவ பாவனை செய்து அவரவர்களுக்கு வேண்டியவைகளை அன்போடு செய்தல் பதி தருமமென்றும், இவைகளில் ஒன்றை நோக்கி இது நம்மாற் செய்யக் கூடியதா வென்று கைவிடாமல் தத்தந் தகுதிக் கேற்ற தொன்றைச் செய்யினும் அதுவே சிவஞானத்தை யுதிப்பித்து முத்தியைக் கொடுக்கு மென்பதும் முடிந்த முடிபாம். இவற்றை நாமெல்லா மறிந் துய்யும் பொருட்டே தாயுமான சுவாமிகள் "தானந் தவந் தருமஞ் சந்ததமுஞ் செய்வர் சிவ, ஞானந் தனையணைய நல்லோர் பராபரமே." என்று கட்டளை யிட்டருளினார்கள்.

இதிற்கண்ட வண்ணம் சிவ தருமங்களைச் செய்து எல்லாம் வல்ல இறைவன்றிருவருட்குப் பாத்திரராய் வாழ வேண்டுமென்று திருவருளைச் சிந்திக்கின்றேம். சுபம்.

---

## திருஞானசம்பந்தசுவாமிகள் பிருதாவளி

"ஸ்ரீ பரசிவ புத்ர ரத்ந குமாரகுருமன்ய துலாவதார ஸ்ரீ பார்வதீஸ்தந்யபாநலப்த திவ்யஜ்ஞாந நிஸ்ருத ஸகல நிகமாகமஸார பூத த்ராவிட வேதப்ரவக்த்ர ஸ்ரீமத் பரசிவகருணாஸமதிகத முக்தாமய சதுரந்தகாயமான சத்ரசாமர ஸ்ரீசிங்ஹகாஹளாதி ஸமஸ்த பிருதாவள்யாலங்க்ருத ஜ்ஞானவிஜ்ஞாந சக்ரவர்த்தி ஸர்வஜனஸங்க ஸத்யோ நிர்வாண தீக்ஷாவ்யாபவர்க்க வருஷவிச்ராணந ஜீமூத பரமதகளபகேஸரி ஷண்மதப்ரதிஷ்டாபகாசாரிய ராஜாதிராஜ

பாண்ட்ய மஹாராஜகுரு க்ஷபண சாக்த்யாதி மஹாந்தகார நிவாரண ஜ்ஞாநபாநுவீக்ஷணநர்கார்க துவஜோச்சேதந பூர்வக ஸ்ரீமத் வ்ருஷபத்துவஜஸ்தாபக ஸ்ரீசைவஸமயகர்த்ரு ஸர்வஜ்ஞபீடாரூட ஸ்ரீஜகத்குரு”

இது காஞ்சீபுரம் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்த மஹாமடாலய பிருதாவளியிற் கண்டது.

—o—

## திருஞானசம்பந்த சுவாமிகள்

### அஷ்டோத்தரவிம்சதிநாவாமளி.

1. ஓம் ஜ்ஞாநஸம்பந்தகுருப்யோநம:
2. ஓம் ப்ரஹ்மபுரபரிப்ருடாயநம:
3. ஓம் பார்வதீஸ்தந்யபாயிநேநம:
4. ஓம் ஸுப்ரஹ்மண்யாபரமூர்த்தயேநம:
5. ஓம் சிவபாதஹ்ருதயமுனிபுங்கவஸுதாயநம:
6. ஓம் கௌண்டிந்யதிலகாயநம:
7. ஓம் அயோநிஸம்பவாயநம:
8. ஓம் ஸ்வபரப்ரகாசாயநம:
9. ஓம் ஸ்வயமேவாதிகதஸகலவித்யாகலாபாயநம:
10. ஓம் த்ரவிடவேதப்ரவக்த்ரேநம:
11. ஓம் ஜ்ஞானவிஜ்ஞாநசக்ரவர்த்திணேநம:
12. ஓம் பரமதகஜபகேஸரிணேநம:
13. ஓம் சிவதத்ததாளஹஸ்தாயநம:
14. ஓம் முக்தாமயசதுரந்தயாநாதிரூடாயநம:
15. ஓம் சிந்ஹகாஹளாதிபிருதாவளீபலங்க்ருதாயநம:
16. ஓம் பாண்ட்யராஜதேசிகாயநம:
17. ஓம் பாண்ட்யஜ்வராபஹர்த்ரேநம:
18. ஓம் க்ஷபணசாக்யாந்தகாரதபநாயநம:
19. ஓம் ராஜகந்யகாரோகநிவர்த்தகாயநம:
20. ஓம் வைச்யகுமாரகரளநிர்ஹரணாயநம:
21. ஓம் நிஷ்பலதாலபலதத்வகாரிணேநம:
22. ஓம் வாக்ஸந்தாரிததரணயேநம:
23. ஓம் வேதவநக்ஷேத்ரகவாடச்சாதககாரிணேநம:
24. ஓம் அஸ்திஸாதிதகந்யகாயநம:
25. ஓம் விஷ்ணோச்சிவஸாரூப்யதாயிநேநம:
26. ஓம் சிவகுமாராயநம:
27. ஓம் ஸத்யோநிர்வாணதீக்ஷாகர்த்ருணேநம:
28. ஓம் ஸர்வமோக்ஷப்ரதகல்யாணஸுந்தராயநம:

திருச்சிற்றம்பலம்.



162419

## சமயபேதம்.

(ஞானசித்திப் பிரசுரம்.)

எந்தச்சமயமாயிருந்தாலும் அதனால் ஆவதொன்றில்லை, எதனையும் கொள்ளலாம், எதைக் கொண்டாலும் மோட்சங்கிடைக்குமென்று சிலர் எண்ணுகிறார்கள். சமயமாவது கடவுள், ஆன்மா, பந்தம், நரகம், மோட்சம் என்னும் இவற்றைப்பற்றி விரித்துணர்த்தி, ஆன்மாவை முத்தியிற் சேர்ப்பிக்கும் சாதனமான ஒரு வழி. அந்த வழியினால் அடையப்படும் சாத்தியமான மோட்சம் ஒன்றாயிருக்கவேண்டுமேயன்றிப் பலவாயிருக்கக்கூடாது. மோட்சம் பலவாயிருந்தால் வழி பலவாயிருக்கலாம். அப்படியில்லாமையால் வழியும் ஒன்றாகவே யிருத்தல்வேண்டும். உலகத்திலே நாம் பார்க்கும்பொழுது சமயமாகிய வழியொன்றாயிராமல் பலவாயிருக்கின்றன. அப்படிப் பலவழியிருந்தாலும் ஒருவழிதான் நேர்வழியாயிருக்கவேண்டும். ஆதலால், எந்தச் சமயத்தையும் அநுட்டிக்கலாம் என்று சொல்லுதல் கூடாது. சில சமயங்கள் கடவுளொருவர் இலரென்கின்றன. சில சமயங்கள் ஆன்மாவை யில்லையென்கின்றன. சில சமயங்கள் புண்ணியத்தைப் பாவமாகவும பாவத்தைப் புண்ணியமாகவும் கூறுகின்றன. சில சமயங்கள் பந்தமில்லை மோட்சமில்லை யென்கின்றன. இப்படி எல்லாவகையாலும் எல்லாச்சமயங்களும் தம்மாற்றமுறுதலால், எல்லாவற்றையும் ஒரே தன்மையுடையனவென்று சொல்ல இடமில்லை. ஒன்றுக்கொன்று பேதமான கொள்கைகளையுடைய சமயங்கள் ஒவ்வொன்றும் பயன்தருமுறையிலும் ஒன்றுக்கொன்று பேதப்பட்டேயிருக்கவேண்டும். பயன் பலபடும் பொழுது எல்லாப்பயனையும் ஒன்றென்றாவது ஒரு தன்மை யுடையனவேயென்றாவது சொல்ல இயலாது. ஒன்று மெய்ப்பயனும் மற்றவை மெய்ப்பயனாகாதனவுமாயே யிருத்தல் வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது ஏதேனுமொரு சமயமும் அதன்பயனாகிய ஒரு மோட்சமுமே கொள்ளத்தக்கதாய் முடியும். அவ்வியல்பில்லாத மற்றவையெல்லாம் கொள்ளத்தக்கனவாகா. கொள்ளக்கூடாமைக்குக் காரணம் அவற்றால் மோட்சமாகிய பயன் கிடையாமையேயாம். அன்றியும் சில சமயங்கள் பாவத்தைப் புண்ணியமாக விதித்தலால், ஒருவன் அந்தச் சமயபோதனையைக் கைக்கொண்டாற் பாவஞ்செய்து நரகத்தையடையவேண்டியவனாவான். அதுவன்றி, அந்த நரகத்தை யடையாவிட்டாலும் மோட்சம் கிடையாமையால், பந்தமே கிடைப்பதாகும். இப்படி பந்தத்துக்கு இடமான சமயங்களை அநுட்டிப்பதும் மோட்சசாதனமான சமயத்தையநுட்டிப்பதும் என்று சமயக்கொள்கை இரண்டு வகைப்படுதலால், பந்தத்துக்கு இடமின்றி மோட்சத்துக்கு வாயிலான

சமயத்தைக் கொள்ளுதலே விவேகமாம். கடவுள் இயல்பும் ஆன்மவியல்பும் பந்தமோட்சவியல்பும் இவையிவையென நன்றாக எடுத்துரைத்து நல்வழியில் நிறுத்தும் சமயமெதுவோ அதனைக் கொள்ளுதலே அறிவுடைமையாம். இதைவிட்டு எதனையுங்கொள்ளலாமென்றல் அறிவுடைமையாகாது.

உலகத்துள்ள சமயங்களெல்லாவற்றுள்ளும் வேதாகமபுராண இதிகாச ஸ்மிருதியென்னும் நூல்களாற் பிரதிபாதிக்கப்படும் சைவசமயமே கடவுள் இத்தன்மையுடையவரென்றும், ஆன்மா இவ்வியல்புடையதென்றும், அவ்வான்மாவுக்குப் பந்தம் வந்தவகை இவ்வாறென்றும், அது நீங்கி ஆன்மா முத்தியடைதல் இவ்வழியாலென்றும் விரித்தோதி நல்வழியில் நிறுத்தி முத்தியைத் தருவதாயிருக்கின்றதென்பது விவேகமுடையார்க்கு இனிது விளங்குதலின், நாம் கொள்ளுமிடத்து அதனையே கொள்ளவேண்டுமென்பதும், சைவசமயத்திலே பிறந்துள்ளவர்கள் அவ்வருமையான சைவசமயத்தை விட்டு அந்நியமாய்ப் பயனற்றனவான பிறசமயங்களைக் கொள்ளப்படாதென்பதும் உண்மையாம். அநேகர் சைவசமயத்திலே பிறந்தும் அதன் அருமையை யறியாமல், அழிந்துபோகின்ற இந்த உடலைச் சதமென்று நம்பி வயிறு வளர்த்தலே காரணமாக, சைவசமயத்தைக் கைவிட்டு அந்நியசமயங்கொண்டு ஆன்மலாபத்தை இழந்து போகின்றனர். அநேகர் சமயம் இவ்வளவு பயனுடையதென்று அறியாமல், சைவசமயத்திலே இருந்தும் சமயாநுட்டானங்களைக் கைக்கொண்டு ஒழுகி அதன் பயனைப் பெற நினையாமல் உலக வாழ்வே பெரிதெனறு எண்ணியிருந்து மோசம்போகின்றனர்.

ஒருவன் தான் பிறந்து கைக்கொண்ட சமயம் எதுவோ அதனைக்கொண்டு நடத்தல் அவனுக்குக் குற்றமாகமாட்டாது. அவன் உண்மையான மோட்சத்தை யடையாவிட்டாலும் முன்செய்த கர்மத்துக்கு ஏற்ப அவனுக்குக் கிடைத்தசமயம் எதுவோ அதனைக்கொண்டொழுகி அதன் பயனைப்பெறலாம். ஆனால், மோட்சத்துக்கு ஏதுவான ஆசாரங்களையுடைய சைவசமயத்திற் பிறந்தோன் அதனைவிட்டு வேறொன்றைக்கொண்டு, அந்தமோட்சத்தை இழத்தல்மட்டும் கூடாதசெயலேயாம். ஆதலால்எந்தச்சமயத்தைக் கொள்ளினும் குற்றமில்லை, எதனையும் கொள்ளலாம் என்பது ஒப்பத்தக்கதன்று. அதினும் சைவசமயிகள் சைவசமயத்தையே கொள்ளவேண்டும். பிறிதொன்றைக் கொள்ளலாகாது.

---



உ

## சந்தாதாரர்களுக்கு விஞ்ஞாபனம்.

ஐயன்மீர்,

இப்பத்திரிகைக்கு முதலாம் ஆண்டில் 520 சந்தாதாரர்கள் இருந்தார்கள். அப்போது ஒவ்வோரிதழும் 16 பக்கங்களோடு வெளிவந்தது. 1000 பிரதிகளே அச்சிடப்பட்டன. அவ்வருடத்தில் பத்திரிகையினால் கிடைத்தபொருள் ரூபா 378. செலவான பொருள் ரூபா 344. காகிதத்தின் விலையும் ரீம் ஒன்றுக்கு ரூபா இரண்டே.

இப்போது (வருடம் ஒன்றுக்கு) ஏறக்குறை 1000 சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். இவர்களுள் 200 பேர் ஆயுள் சந்தாதாரர்கள். இவர்கள்பொருட்டு 1500பிரதிகள் அச்சிடப்படுகின்றன. பிரதி ஒவ்வொன்றும் 24 பக்கங்களாக மாதமாதம் வெளியிடப்படின் வருடம் ஒன்றுக்கு (டைட்டில்பேஜ் நீங்கலாக) 36 பாரமாகிறது. இதற்கு 54 ரீம் காகிதம் வேண்டும் இதின்விலை இப்போது ரீம் ரூபா 9-3-0 வீதமாக ரூபா 496 (அதாவது சுமார் 500 ரூபா) ஆகிறது. இதற்குமேல் மற்ற செலவுகளும் சேர்ந்து அடியிற்கண்ட விவரப்படி வருடம் ஒன்றுக்கு 1300 ரூபா செலவாகும். இதற்கு ஆயுள் சந்தாதாரர் நீங்கலாக 1300 சந்தாதாரர்கள் இருந்தால் இப்பத்திரிகை கிரமமாய் நடைபெறலாம். அச்சுக்கூடம் வைத்துக்கொண்டால் அநுகூலமாயிருக்குமென்று எதிர்பார்த்து ஆயுள் சந்தாதாரர்கள் கொடுத்த சந்தாத்தொகையைக் கொண்டு அச்சுக்கூடம் வைத்துக்கொண்டோம் ஆனால் இப்போதுள்ள காலநிலையில் இன்னும் 2000 ரூபாமுதல் வைத்தால்மாத்திரம் அச்சுக்கூடத்தினால் இலாபம் பெறலாம். அதுகூடாமையால் இதுவரையில் நட்டமே உண்டாயிற்று.

இவ்வருடம் இதுவரையில் கிடைத்திருக்கும் சந்தா (பழைய பிரதிகள் விற்றவரவு சேர்ந்து) ரூபா 698. இப்பத்திரிகையின் பொருட்டுச்செலவான தொகை ரூபா 292. இப்போதுகையிலிருப்பது 406 ரூபாவே. இதைக்கொண்டும், இனி இவ்வருடம் சேரும் சந்தாதாரர்கள் கொடுக்கும் சந்தாத்தொகையைக் கொண்டும், பழையபத்திரிகை விற்பனையைக் கொண்டும் இவ்வருடம் டிசம்பர்மீ வரையில் இப்பத்திரிகை நடைபெறச்செய்தல் வேண்டும். ஆதலால் பத்திரிகையைத்தாமதித்தும், பக்கங்களைக் குறைத்தும் வெளியிடநேர்கின்றது. இவ்வாறு நேர்வதற்கு யாம் மிகவருந்துகின்றோம். யாம் யாதொருபிரதிபலனையும் எதிர் நோக்காமல் இப்பத்திரிகையைவெளியிடுவதனால் சைவாபிமானிகள் எமக்குத்துணையாயிருந்து இதைநடத்துவித்தல்வேண்டும். இவ்வாறுசெய்

தலைத்தவிர்த்து "நம்மவர்கள் பத்திரிகையைக் கிரமமாய் நடத்துகிறதில்லை" என்று குறைகூறுவது குறைகூறுவோர் குற்றமேயாம்.

சிலர் வர்த்தமானப் பத்திரிகைகள் பல கிரமமாய் நடைபெறும்போது நம்சைவப் பத்திரிகைமாத்திரம் ஏன் அவ்வாறு நடைபெறக் கூடாதென்கின்றனர். வர்த்தமானப்பத்திரிகைகளுக்கு மூலதனம் வைத்து நடத்துவிக்கப் பலர் போட்டி போட்டுக் கொண்டுவருகின்றார்கள். பல்லைக்காட்டிக் காலில்வீழ்ந்து கெஞ்சினும் மூலதனம்வைத்துச் சைவப்பத்திரிகைகளை நடத்தும் சைவாபிமானிகள் எவரும் இல்லை. அப்பத்திரிகைகள் ஆயிரக்கணக்காகப் பரவுகின்றன. சைவப்பத்திரிகையை வாங்குவோர் சைவருள்ளும் மிகச்சிலரே. அப்பத்திரிகையின் ஆசிரியர்கள் நாற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் சம்பளமோ இலாபமோ பெறுகிறார்கள். சைவப்பத்திரிகாசிரியர் தன் சொந்தபொருளையும் செலவிட்டுப் பத்திரிகையை நடத்தவேண்டியதாயிருக்கிறது. சைவசமயிகளுள் பக்திமான்களும், கொடையாளிகளும் பலர்இருந்தும் இவர்களுக்கு இப்பத்திரிகையை முன்னின்று நடத்துவிப்பது உத்தமோத்தம சிவபணியென்ப தெரியவில்லை இது சைவசமயத்தின் துர்ப்பாக்கியம் போலும். ஆதலால் சந்தாதாரர்கள் யாம் வஞ்சகமின்றி உலகம் உய்வது கருதி இப்பத்திரிகையை வெளியிட்டுவருகின்றோமென்பதையும், இதில்நேரிடும் குறைகளாவும் காலநிலைமையைப் பொறுத்ததென்பதையும் மறக்கலாகாது.

இப்பத்திரிகையை மாதமாதம் மூன்றுபாரமாக வெளியிடுவதால் நேரிடக்கூடிய செலவின் விவரம்.

| | ரூபா |
|---|---|
| காகிதம் 54 ரீம் | 496 |
| டைட்டில்பேஜ்காகிதம் | 27 |
| விலாசம் எழுதும் காகிதம். | 15 |
| அச்சுக்கூலி | 216 |
| கட்டடம் (தைத்தல்முதலியன) | 60 |
| தபால் | 250 |
| லிகிதர் சம்பளம் | 180 |
| வீட்டுவாடகை | 60 |
| மை - கடிதம் - வண்டி முதலிய சில்லரை செலவுகள் | 25 |
| ஆகமொத்தம். | 1329 |

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE ... OF BOOKS
18 AUG 1920
MADRAS

# சைவம்.

மலர் 6. | இரௌத்திரி௵ ஆடி௴ - ஆவணி௴ ௳ — 1920௵ ஜூலை௴ ஆகஸ்டு௴ | இதழ் 7-8

## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் துதி.

(கந்தபுராணம்.)

கந்தமோ டுயிர்படுங் கணபங் கம்மெனச்
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித் தெந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம்.

(இ-ள்.) உயிர்கள் பஞ்ச கந்தங்களோடு கணந்தோறும் தோன்றி யழியுமென்று தங்கள் சிந்தையில் எண்ணிக்கொண்டிருந்த பௌத்தர்கள் ஊமைகளாய் மயங்கிநிற்க, முன்னே ஒரு ஊமைப் பெண்ணைப் பேசுவித்து எமது சிவபெருமான் திருவடி நீழலையடைந்த ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளை வணங்குவோம் (எ-று.)

கணபங்கம் = கணந்தோறும் தோன்றியழிதல். கந்தம் = கூட்டம். பஞ்சகந்தங்களாவன உருவம், ஞானம், வேதனை, குறி, வாசனை என்பனவாம். இவ்வைந்தும் கெடுதலே முத்தியென்பர் பௌத்தர்.

——:0:——

## சிவஞான போதம்.

(87-வது பக்கத் தொடர்ச்சி.)

### பத்தாஞ் சூத்திரம்.

அவனே தானே யாகிய வந்நெறி
யேக னாகி யிறைபணி நிற்க
மலமா யைதன் னொடு வல்வினை யின்றே.

இதுமுதல் மூன்று சூத்திரங்களும் பயனியல் சூத்திரங்களாம். பாசவீடும் (அதாவது பாசத்தை விடுதலும்) சிவப்பேறும் (அதா

வது சிவத்தைப் பெறுதலும்) என, பயன் இருவகைப்படும். இவ்விரண்டினுள் பரசிவீடாகிய பயனைக் கூறுவது இச்சூத்திரம்.

(இ-ள்.) அவனே = (ஞானக்கண்ணாற் சிந்தை நாடப்பட்ட) அம்முதல்வன்—தானேயாகிய அந்நெறி = (உயிராகிய) தானே யாய் நின்ற அப்பெத்தநிலைபோல் = ஏகனாகி = (உயிர்) அவனோடு ஒற்றுமைப்பட்டு (அதாவது அவனேயாய் நின்று)—இறைபணி நிற்க = அவ்விறைவன் பணியின் வழுவாது நிற்பின்—மலமாயை தன்னொடு = ஆணவமலம் மாயாமலம் என்னும் இரண்டனோடு— வல்வினை = வலிய கன்ம மலமும்—இன்றே = இல்லையா யொழியும் (எ-று.)

முதல்வன் உயிர்தானேயாய் நிற்றலாவது முதல்வன் பொருட்டன்மையால் உயிரின் வேறேயாயினும, பெத்தநிலையில் வேறு காணப்படாது உயிர் யானே கண்டேன் என்னும்படி உயிரோடு ஒற்றுமைப்பட்டு நிற்றல்.

உயிர் ஏகனாகி நிற்றலாவது உயிர்தானென வேறுகாணப் படாது அம்முதல்வனே யாம்படி ஒற்றுமைப்பட்டு நிற்றல்.

ஏகாரம் தேற்றம்.

ஏகனாகி ஒற்றுமைப் படுதலின்கண் பற்பல சமயவாதிகளின் மதம்பற்றித் தோன்றும் ஆசங்கைகளை யெல்லாம் நீக்குதற் பொருட்டு "அவனே தானேயாகிய வந்நெறி" என உவமை யெடுத்துக்காட்டி ஓதினார்.

——:o:——

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

1-வது—அவனே தானேயாகிய வந்நெறி யேகனாகி.
2-வது—இறைபணிநிற்க மலமாயை தன்னொடு
வல்வினையின்றே.

——:o:——

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை.

1-வது—அரனுடன் ஒன்றாகிநில்.
2-வது—உன் தொழிலெல்லாம் அரன்பணியென்று கொள்.

——:o:——



## இச்சூத்திரத்தின் வார்த்திகம்.

1-வது—ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்தேகனாகி நிற்கஎன்றது—அவ்வாறு நிற்கவே யான் எனதென்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தையணையு மாகலான்.

2-வது—இனி இறைபணி வழுவாது நிற்க என்றது—அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா ஆகலான்.

——:o:——

இச்சூத்திரத்தின் உதாரண வெண்பாக்கள் ஆறு.

——:o:——

## முதலாம் அதிகரணம்.

அவனே தானேயாகிய வந்நெறி யேகனாகி.

(இ-ள்.) முதல்வன் (பொருட்டன்மையால் உயிரின் வேறாயிருந்தும் பெத்தத்தில் வேறு காணப்படாது உயிரேதான் என்னும்படி) உயிரோடு ஒற்றுமைப்பட்டு நிற்பதுபோல், உயிர் தானென வேறு காணுமாறின்றி அரனோடு ஒற்றுமைப்பட்டு (நிற்றல் வேண்டும) (எ-று.)

இவ்விடத்து அவன் என்பது முதல்வனை; தான் என்பது உயிரை.

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்—உயிர் அரனோடு ஒன்றாகி நிற்றல் வேண்டும்.

2-வது—ஐயப்பாடு—ஞானம் பிரகாசித்து விதிப்படி ஸ்ரீ பஞ்சாக்கரசெபம் செய்த பின்னர் உயிர் முதல்வனுடன் ஏகனாய் நிற்றலும் வேண்டுமோ.

3-வது—பிறர் கூறும் பக்கம்—ஒன்பதாஞ் சூத்திரத்திற் கூறிய வாறு பிரபஞ்சத்தை அசத்தென்று கண்டவிடத்துத் தோன்றும் ஞானக்கண்ணினால் சிவதரிசனம் செய்தபின்னர் வாதனாமலம் நீங்கி ஆன்மசுத்தியுண்டாதற்கு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை விதிப்படி உச்சரித்தல் மாத்திரமே யமையும். அதன்மேலும் ஏகனாகி நிற்றல் வேண்டாம்.

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு—ஏகனாகி அப்படி நின்றாலன்றி பாசனைப்படும் ஞாதாவும், என தெனப்படும

ஞானமும், அதற்குவிடயமாய் எனப்படும் ஞேயமும் எனப் பகுத்துக்காணும் மயக்கவுணர்விற்கு ஏதுவாகிய மலவாசனை நீங்காது; அது நீங்கினாலன்றி முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தை அநுபவித்தல் கூடாது. ஆதலால், அம்மலவாசனை நீங்கிச் சிவானந்தத்தை அநுபவித்தற்கு முதல்வனோடு ஏகனாய் நிற்றல் வேண்டும்.

ஞாதா=காண்போன்-ஞானம்=காட்சி, ஞேயம்=காட்சிப் பொருள்.

5-வது—இயைபு—உதாரண வெண்பா:—

நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத
லானெனவொன் றின்றியே தானதுவாய்—நானெனவொன்
றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானா மிறை.

(இ-ள்.) நான் அவன் என்று எண்ணினர்க்கும் நாடும் உளம் உண்டாதல்=யானென்றும் அவனென்றும் பகுத்தறிந்து நிற்பார்க்கும் (யானே என நிற்பார்க்கு முனைத்துத் தோன்றுவதுபோல்) நாடுகின்ற ஆன்மபோதம் முனைத்துத் தோன்றும்- (அதாவது முற்பட்டுத் தோன்றும்.) ஆதலினால்—நான் என ஒன்று இன்றியே தான் அது ஆய்=(அது தோன்றியவிடத்து) தானென ஒருமுதல் காணப்படுமாறின்றித் தான் அவ்வுயிரேயாய்க் காணப்பட்டும்,—நான் என ஒன்று இல் என்று=யான் என்று ஒருமுதல் காணப்படுமாறில்லை யென்றறிந்து —தானே எனும் அவரை=தானே முழுவதுமெனக் காண்பவரை—இல் என்று= அவ்வாறே வேறு காணப்படுமாறில்லை யென்று—தன் அடிவைத்து=தனது திருவடி வியாபகத்துள் அடங்கிநிற்கச் செய்து—தான் ஆம் இறை=தானே முழுவதுமாய்க்காணப்பட்டும் நிற்பன் இறைவன். (எ-று.)

இதில் நான் என்பதும் அது என்பதும் உயிரை. அவன் என்பதும் தான் என்பதும் இறைவனை. அதுவாய் தானும் இறை எனக் கூட்டுக.

தூல வொளியாகிய கண்ணொளியும் சூக்குமவொளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலை பிரித்தறிய



வாராமையிற் கண்ணொளியாய்க் காணுங்கால் காணுந்தன்மையே முனைத்துத் தோன்றும். ஆதலால் அப்படித்தோன்றும் போதும் விளக்கொளியிருந்தும் இல்லையாகும். கண்ணொளியாய்க்காணாது விளக்கொளியாய்க் காணுமிடத்து காணுந்தன்மை முனைத்துத் தோன்றாமல் காட்டுந்தன்மையே முனைத்துத் தோன்றும். ஆதலினால், அப்போது கண்ணொளியிருந்தும் இல்லையாகும். கண்ணொளி விளக்கொளியுமெனப் பகுத்துக் காணப்புகினும் காணுந்தன்மையே முனைத்துத் தோன்றுதலினால் விளக்கொளி திரிவு புலனாகக் காட்சிப்படுவதல்லது தெளிவு புலனாகக் காட்சிப்பட்டு நிற்பதில்லை. அதுபோல, தூல அறிவாகிய உயிரும் சூக்கும அறிவாகிய சிவமும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலையும் பிரித்தறிய வாராமையின், உயிராய்க் காணுங்காற்சிவமில்லை; சிவமாய்க்காணுங்கால் உயிரில்லை. இரண்டுமாய்க் காணப்புகினும் தற்போதம் முற்பட்டு நிற்றலின் அப்போதும் சிவம் ஐயக்காட்சிக்குப் புலனாய் நிற்பதல்லது தெளிவு காட்சிக்குப் புலனாய் நிற்குமாறில்லை. ஆதலால் "நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத—லானெனவொன்றின்றியே தானதுவாய்" என்றார்.

யாதானுமொன்றைச் சார்ந்து அதன்வடிவாய் நிற்பதன்றித் தனித்து நில்லாத உயிரைத் தனித்து நிற்பதாகக் காண்டல் ஐயக் காட்சியாம். சிவம் உயிரோடு கூடிய விடத்தும் சிவமாய் விளங்குவதன்றி உயிராய் விளங்காமையால் அச்சிவமாக உயிரைக்காண்டல் தெளிவுக்காட்சியாம்.

---

## சைவசித்தாந்த சங்கிரகம்.

(ஞானசித்திப் பிரசுரம்.)

சிவம், ஆன்மா, மலம் என மூன்று பொருள்கள் உள்ளன. அவற்றுள், சிவம் ஒரேபொருள். ஆன்மாக்கள் எண்ணில்லாதன. மலம் ஆணவம் கன்மம் மாயை என மூன்றுவகைப்படும். சிவமும் ஆன்மாவும் ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று மலமும் ஆகிய ஐந்துபொருளும் நித்தமாயுள்ளன. நித்தமென்றால் தோற்றமில்லாதவை யென்று பொருளாம்.

இவற்றுள், சிவமும் ஆன்மாவும் சித்துப்பொருள்கள். ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்றும் சடப்பொருள்கள். சித்து என்றால் அறிவுடையது எனவும் சடம் என்றால் அறிவில்லாதது எனவும் பொருள்படும்.

சிவம் ஆன்மா என்னும் சித்துப் பொருள்களுள்ளும் வேறுபாடிருக்கின்றது. ஆன்மா தூலசித்து, சிவம் சூக்குமசித்து, அன்றியும் சிவம் ஆன்மாவுக்கு ஆன்மாவாயிருக்கும். சிவம் தானேயுணருஞ் சித்து. ஆன்மா அச்சிவத்தினால் உணர்த்தப்படும் சித்து. சிவம் இவ்வெண்ணில்லாத ஆன்மாக்களிலும் வியாபித்து அறிவுக்கு அறிவாய் நின்றுணர்த்தும். ஆன்மாக்கள் அச்சிவத்தின் உபகாரத்தால் அறிவுபெற்று விளங்கும். அது ஒரே சூரியன் எண்ணில்லாத கண்களுக்கு விளக்கஞ் செய்வதுபோலாகும்.

என்றும் ஞானசொரூபமாயும் ஆனந்தமயமாயும் விளங்கிக் கொண்டிருத்தல் சிவத்தின் இலக்கணம்.

ஆன்மாவுக்கு இந்த இலக்கணமில்லை. பளிங்கைப்போல எதை அடுத்ததோ அதன் தன்மையைத் தன் தன்மையாகக் கொள்ளுகிற ஒரு இயல்பு ஆன்மாவுக்கு உண்டு. இந்த இயல்புள்ள ஆன்மா அநாதியே தனக்கு உயிராயுள்ள சிவத்தைப்பற்றாது தனக்கு வேறாய்ச் சடமாயுள்ள மலத்தைப்பற்றி நின்றது. அந்த மலத்துக்கும் ஆன்மாவுக்குமுள்ள சம்பந்தமாகிய தொடர்பு சகசமென்று சொல்லப்படும். ஆன்மா அநாதியே சிவத்தைப் பற்றியிருந்தால் சிவத்தின் குணமாகிய ஞானானந்த நிலையையடையும். அப்படியின்றி ஆன்மா அநாதியே மலத்தைப் பற்றியபடியால், மலம் தன் குணமாகிய அறியாமையைக் கொடுக்க ஆன்மா அறிவிருந்தும் அறியாது மயங்குவதாயிற்று. கண் எல்லாவற்றையுங் காணும் இயல்புடையதாயினும் இருளிலகப் பட்டபொழுது ஒன்றையுங் காணமாட்டாமைபோல, ஆன்மா அறிவுடையதாயினும் மலத்தின் வயப்பட்ட இந்நிலையில் ஒன்றும் அறியாதிருக்கும்.

ஒவ்வொரு ஆன்மாவுக்கு ஒவ்வொரு ஆணவமலமாய் எண்ணில்லாத ஆன்மாவுக்கு எண்ணில்லாத மலம் இருந்து மறைப்பதல்ல. எண்ணில்லாதனவாகிய கண்களை ஒரேஇருள் எப்படி மறைக்கிறதோ அப்படியே எண்ணில்லாத ஆன்மாக்களையும் ஒரே



மலம் மறைத்துநிற்கும். மலமறைப்பினாலே ஆன்மா தன்னையும் அறியாது. தலைவனாகிய சிவத்தையும் அறியாது. தன்னை மறைக்கும் பாசத்தையும் அறியாது.

ஆணவமல மறைப்பினாலே வருந்திய ஆன்மா அம்மறைப்பினின்று நீங்கும்படி தன்னறிவு வெளிப்படுதற்கு வியஞ்சகமாகிய மாயாதநுகரணங்களை விரும்பிற்று. தன்செயல் வெளிப்படுதற்கு ஏதுவாகிய கன்மத்தையும் இச்சித்தது.

அதுகண்ட சிவம் அப்படி வருந்தும் உயிர்கள்மேல் இரக்கங் கொண்டபொழுது சத்தியென்றாயிற்று. அச்சத்திக்குப் பராசத்தியென்று பெயர். அப்பராசத்தியின் வசப்பட்டு உயிர்களுக்கு உபகாரஞ் செய்யவேண்டுமென்று முயன்றபொழுது அச்சிவம் பதியென்னும் பெயருடையதாயிற்று. பதி உயிர்கள் பொருட்டு ஐந்தொழில் செய்ய முயன்றபொழுது அப்பதியோடு கூடிநின்ற சத்தி ஆதிசத்தியென்னும பெயருடையதாயிற்று. அவ்வாதிசத்தி பின்பு இச்சை ஞானங் கிரியை என மூன்றாய் வேறுபட்டு அப்பதியினது செயலுக்குத் துணைபுரியும். அன்றி ஆரணி ஜனனி ரோதயித்திரி எனவும் மூன்றுவிதமாகும்.

அச்சத்திகள் சுத்தமாயையைக் காரியப்படுத்தி ஆன்மாவின் மலமறைப்பை வாட்டி ஆன்மாவினறிவை யெழுப்பண்ணும். அசுத்தமாயையைக் காரியப்படுத்தி ஆன்மாவினறிவு வியாபரிக்கும்படி செய்யும்.

அதன்பொருட்டு அச்சத்திகள் செய்யுந் தொழில் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என ஐந்துவகைப்படும். இந்த ஐந்து தொழிலையும் அந்தச் சத்திகள் நேரே செய்வதில்லை. பிரமாவை அதிட்டித்துப் படைப்பையும், விண்டுவை அதிட்டித்துக் காப்பையும், உருத்திரனை அதிட்டித்து அழிப்பையும், மகேசுரனை அதிட்டித்து மறைப்பையும், சதாசிவன் வாயிலாக அநுக்கிரகத்தையும் செய்யும்.

பதி ஐந்தொழில் செய்ய முயன்றது உயிர்களின் விருப்பப்படியேயாம். உயிர்களுக்குத் தநு கரண புவன போகங்களைக் கொடுத்தலே ஐந்தொழிலாம்.

உயிர்கள் தநுகரண புவனங்களை இச்சித்தபடியால், முதல்வன் உயிர்களின் இச்சைப்படி அவற்றைக் கொடுக்க முயன்றனன். அவ்விச்சையெழுதற்கு ஏதுவாய் நின்றது ஆணவமலமேயாம். அதனால் ஆணவமலத்துக்கு மூலமலம் என்னும் பெயருண்டாயிற்று. அம்மூல மலமறைப்பைச் சிறிதேயொழிக்கும்படி முதல்வன் சத்திகள் வாயிலாக மாயாதநுகரணங்களைக் கூட்டினான்.

அந்த மாயை இரண்டுவகைப்படும். ஒன்று சுத்தமாயை, மற்றொன்று அசுத்தமாயை. சுத்தமாயையிலிருந்து நான்குவாக்கும், ஐந்துகலையும், ஐம்பத்தோரக்கரமும், எண்பத்தொருபதமும், பதினொரு மந்திரமும், இருநூற்றிருபத்துநான்கு புவனமும், சுத்தவித்தை முதலிய ஐந்து தத்துவமும் உண்டாகும். அசுத்தமாயையிலிருந்து கலைமுதலிய ஏழு தத்துவங்கள் தோன்றும். அவற்றுள், கலையிலிருந்து மூலப்பிரகிருதி தோன்றும். அந்த மூலப்பிரகிருதியிலிருந்து குணதத்துவமுதல் பிருதிவியீறான இருபத்துமூன்று தத்துவங்கள் தோன்றும். இப்படி மாயாகாரிய தத்துவங்கள் முப்பத்தாறும்.

இம்மாயாகாரிய தத்துவங்களை யடைந்தபொழுது ஆன்மா தன் வியாபகஅறிவில் ஏகதேச விளக்கம் பெற்று, அவ்வறிவு விளக்கத்துக்கு ஏற்ப ஏகதேசியெனப்படுவன். அன்றியும் அத்தத்துவங்கள் கூடிநின்று தொழில் செய்யும் முறையில் அவை ஐந்து சரீரங்களெனப்படும்.

மாயையின் கலக்குண்ட பாகம் காரணசரீரமாம்.

காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐந்தும் சேர்ந்தது கஞ்சுகசரீரமாம்.

சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குணமுங் கூடியது குணசரீரமாம்.

மனமும் புத்தியும் அகங்காரமும் பஞ்சதன் மாத்திரைகளுங் கூடியது சூக்குமசரீரமாம்.

பிருதிவி முதலிய ஐந்து பூதங்களாலாயது தூலசரீரமாம். வியாபியாகிய ஆன்மா தன் வியாபக அறிவு முழுவதும் மலத்தால் மறைக்கப்பட்டிருந்து மாயாதநுகரணங்களால், ஏகதேச விளக்கம் பெறுதலால், ஏகதேசியெனப் பெயர்பெற்று, இத்தத்துவசரீரங்களில் போக்குவரவு செய்தலால், சாக்கிரமுதலிய ஐந்தவத்தையும் பெறுவன்.



ஆன்மா ஆணவமலத்தோடு கூடித் தனியே நிற்பது கேவலநிலையென்றும், மாயாதத்துவங்களோடு கூடி நிற்பது சகலநிலையென்றும் சொல்லப்படும்.

ஆன்மா மாயாகருவிகரணங்களை அடைந்தபொழுது ஆன்மாவின் அறிவு இச்சை தொழில்கள் அவற்றால் வியாபரிக்கப்பெறுதலால், ஆன்மா அவற்றைக்கொண்டு கன்மஞ்செய்ய முயலும். அச்சமயத்தில் ஆணவமலம் ஆன்மாவோடு கூடி முற்பட்டு யான் எனதென்னுஞ் செருக்கையும் விருப்பு வெறுப்புக்களையும் ஆன்மாவுக்கு உண்டாக்கும். ஆன்மா அதன் செயலிற் சிக்கி, நாம் என்னும் முனைப்போடு விரும்பி வெறுத்து நன்மை செய்தார்க்கு இதமும் தீமைசெய்தார்க்கு அகிதமும் செய்யும். இப்படி நாமென்னும் முனைப்போடு விரும்பி வெறுத்து இதாகிதஞ் செய்தலால், ஆகாமிய வினையேறும். அந்த ஆகாமிய வினை சுவர்க்கநரகாதிகளிற் பிரிந்து சஞ்சிதமாம். அவை பக்குவமாக அங்கங்கே உயிர்சென்று அநுபவிக்கும்பொழுது பிராரத்தமாம். இப்படி வினை மூன்றுவகைப்படும். ஆன்மா மாயாகாரியங்களோடும் கன்மத்தோடுங் கூடிப் பிறந்திறந்து இன்பத்துன்பமநுபவிப்பன். மாயை கன்மங்களின் சம்பந்தம் ஆகந்துகமெனப்படும்.

முதல்வன் ஆன்மாவின் ஆணவமல நீங்கும்படி மாயாகன்மங்களைச் சேர்த்து ஐந்தொழில் செய்தல் உயிர்கள்மேல் வைத்த கருணையினாலாம்.

ஆன்மா இப்படிப் பிறந்திறந்து வரும்பொழுது புண்ணியவசத்தினாலே காலாந்தரத்தில் இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் எய்தப் பெறுவன். ஐந்தொழில் செய்புமுகத்தால் அவற்றை வருவித்துநின்ற முதல்வன், அப்பக்குவநோக்கி ஆசாரியமூர்த்தியாய் எழுந்தருளி ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் போக்கி அருள் செய்து ஆன்மாவினறிவு ஆன்மவியாபகமுழுவதும் விளங்கும்படி அனை செய்து என்றும் அந்நிலை மாறாதிருக்கும்படி தனது முற்றுணர்வு முதலிய அறுகுணங்களையும் ஆன்மாவினிடத்து நிறுத்துவன். ஆன்மா அவ்வறுகுணங்களையும் பெற்று எப்பொழுதும் நீங்காத பேரின்பமெய்துவன். இப்படி நிற்குநிலை சுத்தமெனப்படும். இது பெத்தம்போல மாறுதலின்றி நித்தமாயிருக்கும். அதனால் இவ்வாழ்வு நித்தியானந்த வாழ்வெனப்படும்.

இன்னும் இதன் விரிவை விரிந்த நூல்கள்பற்றி யுணர்ந்துகொள்க.

---

உ
சிவமயம்.

---

## சிவாசாரியர்கள்.

(ஸ்ரீ - சோமசுந்தரநாயகரவர்கள் இயற்றியது).

வேத சிவாகமங்களிலும், பிற நூல்களிலும் ஆதிசைவர் மகிமை விஸ்தாரமாய்ப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. பூர்வம் யாம் வெளிப்படுத்திய "ஆதிசைவப்பிரபாவ" த்தில் அவர்கள் பெருமை இனிது பிரகாசப்படுத்தப்பட்டிருக்கின்றது. "சிவத்விஜோத்கர்ஷ தீபிகை" என்னு நூலொன்றும் எம்மால் செய்யப்பட்டிருக்கின்றது. அது விரைவில் வெளிவரும். நிற்க:

இப்போது சுருக்கமாய்ச் சிலஸ்லோகமெழுதி அவற்றின் பிரமாணத்தையு மெடுத்துக்காட்டி ஸாதுக்களை யுவப்பிப்பாம்.

1. சிவவேதியர்களுக்கு வீடுகட்டிக் கொடுத்தல் - தானமுதலியவை செய்தல் ஆவசியகமென்று ஸ்காந்தம் தக்ஷகாண்டம் 37-வது அத்தியாயம், 33-வது சுலோகத்திலும், உபதேசகாண்டம் 39-வது அத்தியாயம், 11-வது சுலோகத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

2. சிவத்விஜர்களே ஆசாரியர்களாய் வரிக்கத்தக்கவர்களென்று உபதேசகாண்டம் 39 - வது அத்தியாயம், 17 - வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

3, ஆதிசைவர்கள் சிவசொரூபிகளென்று ஷை காண்டம் 39-வது அத்தியாயம் 18 - வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

4. சிவபிராமணர்கள் (புஷ்பகிரிசந்தானத்தார்) மிகப்பூஜ்யர்களென்று ஷை காண்டம் 40 - வது அத்தியாயத்தில், 52 - 53 - 54 - 56 - 57 - வது சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

5. மேற்கூறியபடியே ஷை அத்தியாயம் 75 - 81 - வது சுலோகங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

6. ஆமர்த்தகி - கோளகி - புஷ்பகிரி - சந்தானகிரி முதலிய திவ்யமடங்களின் சந்தானத்தார் ஆதிசைவர்களென்றும், ஸ்ரீ



முருகேசுவரஸ்வாமிக்குப் பூஜைசெய்கின்றவர்கள் சிவபிராமணர்களென்றும் ஷை அத்தியாயம் 38 - 45 - வது சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

7. ஆமர்த்தகிமடத்தைச்சார்ந்த சிவபிராமணர்களது பிறப்பு ஸர்வோத்தமமென்று 45 - வது அத்தியாயம், 44 - வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

8. சிவபிராமணர் ஜகத்குருமூர்த்திகளென்று 49 - வது அத்தியாயம், 30 - 31 - வது சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

9. சந்தானகிரிவம்சத்திற் பிறந்த சிவபிராமணராகிய தற்புருஷரென்பவர் ஜகத்குருவாயினர் என்று 56 - வது அத்தியாயம், 8 - வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

10. இன்னு மிவ்வாறு போதிக்கும் வசனங்கள் பலவுள.

இவற்றைத் தெளிந்தவர்கள் பிராமணாதி சாதுர்வர்ணத்தாருக்கும் ஸம்ஸ்காரங்களை நடத்தி யுபதேசிக்கவல்ல பரமாசாரியர்களிவரென்று சுலபமாயறியலாம். இவர்கள் சிவபெருமானால் நேரே தீக்ஷிக்கப்பெற்றவர்கள். இவர்களிடம் தீக்ஷையடைந்த அநந்தரமே பிராமணாதி சாதுர்வர்ணத்தாரும் தத்தஞ்சாதியிலும், தமக்குக் கீழ்ச்சாதிகளிலும் ஆசாரியத்வம் வகிக்க வுரியவராவர். இதனுண்மை தெரியவேண்டின், திருக்கோயில்களினடக்கும் ஆசாரத்தைக் கண்டறிக பிராமணாதி சாதுர்வர்ணத்தாரும் சிவாலயதரிசனத்தின் பொருட்டு வருகின்றார்கள். அவர்களுக்குச் சுவாமிதரிசனஞ் செய்வித்து விபூதி - கந்தகுசுமாதி பிரஸாதங்களை ஆசீர்வாத பூர்வகமாயளித்து அநுக்ரகிக்கும் சிவவேதியரது பரமாசார்யத்வத்தை யாவர்தான் மறுக்கலாம்? இவர்களுக்கும் சிவபரஞ்சுடருக்கும் பேதமில்லை யாகையால் இவர்களைச் சிவனென்றே வழிபட்டு உய்யும்வழி தேடுவர் பெரியோரெனக. "தாவர சங்கமங்களென்றிரண்டுருவினின்று, மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்" என்னுந் திருவாக்கில், ஸ்தாவராராதனம் - ஜங்கமாராதனம் என இருவிதாராதனங்கள் பெறப்பட்டன. இவற்றுள், ஸ்தாவராராதனம் ஸ்ரீ சிவலிங்கப்பெருமானை வழிபடுதலும், ஜங்கமாராதனம் சிவாசாரியரை வழிபடுதலுமேயாம். இவ்வுண்மை அநுபவசித்தமாயிருத்தலால் இதனையே கடைப்பிடித்து உலகம் க்ஷேமமடைந் துய்யக்கடவது. சுபம்.

திருச்சிற்றம்பலம்.

# ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

(97-வது பக்கத்தொடர்ச்சி.)

பின்னர், அந்த கஞ்சாபுரக் கிராமத்திலே வேதங்களை அத்தியயனஞ் செய்தவரும், தனமில்லாமையினால் வறுமையுற்றுப் பீடிக்கப்பட்டவருமாகிய பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் பிராமணர்கள் பாராயணஞ் செய்யும் சந்தியாமண்டபத்திலே போய், நான் தரித்திரத்தினாலே வருந்துகின்றேன் என்றார். அதற்கு அவர்கள் சாஸ்திரங்களை ஆராய்ந்து சொல்வார்களாயினார்: தானப்பிரகரணத்திலே சொல்லப்பட்ட தானங்கள் அனைத்தையும் எவன் பிராமணர்களுக்குச் செய்கின்றானோ, அவனுக்குச் சகலசம்பத்துகளும் எய்தும்; அதற்குச் சக்தியில்லையாயின், இயன்றவாறு சிறிது கொடுத்தாலும் சம்பத்து உண்டாகும் என்றார்கள். இதைக்கேட்ட பிராமணர் இந்தத்தானத்தை எவரிடத்திற்கொடுப்பதென்று ஆலோசித்து, சிவபக்தாக்கிரராகிய அரதத்தாசாரியருக்குத் தானசமர்ப்பணம் பண்ணுவதினாலே புண்ணியம் அக்ஷயமாய்ப் பலிக்குமென்று நினைந்து, இந்தச் சதாசிவர் என்னும் பிராமணர் அரதத்தா சாரியருடைய கிரகம் அடைந்து, அவரை வணங்கி, தமது கிரகத்துக்குப் போசனத்துக்கு எழுந்தருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தார். அதற்கு ஆசாரியர் "ஓம் வருகின்றோம்" என்று உத்தரமளித்தார். அந்தச் சதாசிவர் தமது கிரகத்துக்கு வந்து பஞ்சமகா யஞ்ஞமுதலியன செய்து, சிவார்ச்சனை செய்து, ஆசாரியரைத் தமது கிரகத்துக்கு அழைத்துவந்து, பாதப்பிரக்ஷாளனஞ்செய்து, அந்தத் தீர்த்தத்தை உள்ளும் பூரித்துப் புறத்தும் புரோக்ஷித்து, ஆசனங்கொடுத்து, அவர் முன்னே கதலிபத்திரத்தை யிட்டு, அதிலே மிளகு-சாலியன்னம்-பருப்பு-வியஞ்சனம்-சாகபாகாதிகள்-அபூபாதிகள்-க்ஷீரான்னம்-பாயசம்-பழமுதலியன படைத்துப் போசனம் பண்ணுவித்து, போசனம் முடிந்த பின்னர் நமஸ்காரஞ்செய்து, அவருக்குத் தமது அபிப்பிராயத்தைச் சொல்வாராயினார். அரதத்தரே! சிவபாதாப்ஜ சிந்தகரே! அநேக புத்திரரோடு கூடத் தரித்திரத்தினாலே வருந்துகின்றேன். இப்படிப்பட்ட என்னைக் கிருபாதிருஷ்டிசெய்து ரக்ஷிக்க என்றுவேண்டினார். இங்ஙனம் பிரார்த்தித்தபோது, ஆசாரியர் ஆசிகூறி, மங்களாக்ஷதையும் விபூதியுங்கொடுத்து அநுக்கிரகம்பண்ணி, தமது கிரகஞ்சார்ந்தார்.

அவ்வேளையிலே சிவலிங்கபூபதியானவர் அப்பிராமணரை அழைத்து வரும்படி ஒரு தூதனை அனுப்ப, அப்பிராமணர் தன்னை அரசர் யாதுகாரணத்தினால் அழைக்கின்றார்! யான் யாதாயினும் அபராதஞ் செய்தேனோவென்று திகிலடைந்துகொண்டு போனார். அரசர் இப் பிராமணர் வரவை நோக்கி, இவர் சிவபிரானே வருவதென விளங்கக்கண்டு எழுந்து வணங்கி,



அவர் காலைக் கழுவி, அத்தீர்த்தத்தைப் புரோக்ஷித்துக்கொண்டு அர்க்கியங்கொடுத்து, சுவர்ணமுங் குங்குமமுங்கொண்டு அவர் பாதங்களிலே அர்ச்சித்து, திவ்ய வஸ்திரங்கள், பீதாம்பரங்கள், தனங்கள், தானியபூமிகள் முதலியவைகளையும், பால்தருகின்ற கோக்களையும் கொடுத்துபசரிக்க, அவர் அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு வீடு சார்ந்தார்.

ஒருகாலத்தில் சிவலிங்கபூபதியானவர் நானூறுதானிய அரிசிப்பொதிகளை இருநூறுகாளைகளின் மேலிட்டுத் தமது குருவாகிய அரதத்தாசாரியருக்கு அனுப்பினார். இதற்குள்ளே பசுபதியென்னும் பிராமணச் சிவபக்தசிரேஷ்டர் ஒருவர் அரதத்தாசாரியருடைய தாயாரிடத்திலே பதக்குநெல்லுத்தானியங் கொடுத்திருந்தார். அவ்வம்மையார் அதனை வாங்கி வெய்யிலிலே உலருமாறிட, ஓர் காளை புறப்பட்டுவந்து வழியிலே கிடந்த அந்த நெல்லைச்சாப்பிட்டது. அப்போது சமீபத்திலிருந்த அரதத்தாசாரியர் அந்தக்காளையின் சமீபத்திலே போய், நெல்லைக் கூட்டிக்கூட்டி அந்தக் காளைக்கு உபசாரமாகக்கொடுத்து உண்பித்தார். அதைக்கண்ட தாயார் ஓடிவந்து தண்டத்தினாலே காளையைப்புடைத்து அதனை வெருட்டியோட்டினாள். அவ்வாறு ஓட்டிய தாயாரை அரதத்தாசாரியர் பார்த்து, பசியோடு வந்த காளையை நீயேன் அடித்து ஓட்டினை என்று கேட்க, அதற்கு அவள் சிவபூஜா நிவேதனத்துக்கு ஒன்றுமில்லையே இதைக்கொண்டே அது நடத்தல் வேண்டுமாதலில், அங்ஙனஞ் செய்தேன் என்று சொல்லி, வீட்டுக்குள்ளே போய் வாளாவிருந்தாள். இந்த வேளையிலே அரசனாலே அனுப்பப்பட்ட பிராமணதூதர்கள் ஓடிவந்து ஆசாரியரை நமஸ்கரித்து, அஞ்சலியஸ்தராய் நின்று சுவாமீ! சிவலிங்கபூபதியானவர் தங்களுக்கென்று அனுப்பிய அரிசிமூட்டைகள் நானூற்றிலே இருநூறுமூட்டைகள் நதிப்பிரவாகத்திலே போய்விட்டன. இருநூறுமூட்டைகள்தான் வந்து சேர்ந்தன என்றார்கள். அதைக்கேட்டுப் பின்னர்த் தமது தாயாரை அழைத்து, நீ காளையை உண்ணவொட்டாது அடித்து ஓட்டிய தூர்ச்செய்கையினாலன்றோ நானூறு அரிசிமூட்டைகளுள்ளே பாதிமூட்டைகள் சேதமாயின என்றார். இதைக்கேட்ட தாயார் வியாகுலமுடையராயினார்.

அரதத்தாசாரியருடைய மனைவியார் ஓர்நாள் அரிசிகழுவும்போது நெருப்பணைந்தது கண்டு அதனை எரிக்கப்போயிருந்தார். அந்தவேளையில், நாயொன்று வந்து அந்த அரிசியைத்தின்றது. இதைக் கண்ட மனைவியார் அரிவாளையெடுத்து எறிந்துவிட, அதுபோய் நாய்மீது வீழ்ந்து, அதன் கழுத்தை வெட்டிவிட, நாய் மூர்ச்சையாய் வீழ்ந்தது. இது தெரியாது நேர்ந்ததே என்று பஞ்சாக்ஷரத்தைச் செபித்தார். அப்போது மாத்தியான்னிகஞ் செய்துவந்த அரதத்தாசாரியர் இது மூர்ச்சையாய்க் கிடந்ததைக் கண்டு, தமது மனைவியை இஃதென்னை என்று கேட்க, அவர் நடந்த [illegible]சொல்ல, அதனால் சிறிது வருத்தமுற்று அவரைநோக்கி நீ

வாயிலே அடைத்துவையாமையினால் இது நேர்ந்தது, அதனால் இது உன் மேற்றோஷமேயன்றி இந்நாயின்மேற் குற்றமில்லையென்று கண்டித்துச் சொல்லி, அந்த நாயைத் தமது மடித்தலத்திலெடுத்து வைத்து, அதற்கு உருத்திராக்ஷம் தரித்து, விபூதியை அதன் சரீரமெங்கும் பூசி, பஞ்சாக்ஷரோபதேசஞ் செய்தார். அப்போது கோடிசூரியப்பிரகாசமுடைய இரதமொன்று கைலாசத்திலிருந்து வர, இதைக்கண்ட நாய் தனது பூதசரீரத்தையொழித்து, தேவசரீரத்தை யெடுத்துக்கொண்டு கைலாசத்தை அடைந்தது, அதற்குச் சிவபெருமான் கணாதிபத்தியத்தைக் கொடுத்தார். அந்த நாய் கைலாசமடைந்தமை அறிந்து அரதத்தர் மிகவும் களிப்புடையராயினார்,

நமது கிரகத்திலே நமது தாயாரும் பாரியும் காளையை அடித்து வெருட்டித் தண்டத்தாற் புடைத்தும், நாயை அரிவாளால் வெட்டியும் துஷ்டகாரிய மிரண்டு செய்தார்களே. இவர்களை இப்பாபத்தினின்றும் விமோசனஞ் செய்தல் வேண்டுமென்று ஏகாந்தத்திலே யிருந்து சிந்தித்தார். அப்போது அவர் ஓர் பத்திரிகையைக் கையிலெடுத்துத் தெரிந்துந் தெரியாதுஞ்செய்த மகாபாபங்களுக்கு—

ஞானாஞ்ஞானப்ரயுக்தாநாம்பாபாநாம்மஹதாமபி!

என்னும் கருத்தையுடைய இப்பாதிச் சுலோகத்தை எழுதிக் கிரகத்திலே வைத்துவிட்டு, மனுடர்களுடைய பாபங்களை ஒழிப்பதும், மகா புண்ணியம் வாய்ந்ததும், இருஷீசுவரர்களாற் சேவிக்கப்பட்டதுமாகிய காவேரிக்கு ஸ்நானத்துக்குப் போயிருந்தார். அப்போது அக்கினீசுவரப் பெருமான் அரதத்தாசாரியர் வடிவு பூண்டு அவர் வீட்டுக்கு வந்து, அப்பத்திரத்தை அவர் மனைவியார் வாயிலாகப்பெற்று ஏகாந்தத்திலே யிருந்து சிவநாமத்தை உச்சரித்தலே பிராயச்சித்தமாம் என்னுங் கருத்தையுடைய—

ஏகாந்தநிஷ்க்ரதிச்சம்போஸ்ஸஙிர்தேவஹிகீர்த்தநாத்

இந்த மற்றைப் பாதிச்சுலோகத்தை எழுதிப் பத்திரிகையை அவர் கையிலே கொடுத்துவிட்டு அந்தர்த்தானமாயினார். அரத்தாசாரியா ஸ்நானஞ் செய்துவந்து சிவாராதனம்பண்ணி, பஞ்சயஞ்ஞம் வைசுவதேவம் முதலிய செய்து அதிதிபிராமணர்களுக்குப் போசனங்கொடுத்து, தாமும் புத்திரர்களோடு போசனஞ்செய்து, ஆசனத்திருந்து பத்திரிகையை எடுத்துப் பார்த்தார், பார்த்தபோது உத்தரார்த்தம் எழுதப்பட்டிருப்பதுகண்டு தமது பத்தினியை அழைத்து இப்பத்திரிகையை யார்கையிலெடுத்துக் கொடுத்தனை என்றார். அதற்கு அவர் ஸ்நானஞ்செய்யப்போந்த நீவிரே மீண்டு வந்து பத்திரிகையைக் கேட்டு எழுதித் தந்துவிட்டுப் போயினீர் என்றார். சிவநாமத்தின் மகிமையறிந்த அரதத்தாசாரியர் நாம் இருதயத்திலே சிந்தித்தபிரகாரம் சங்கரரே இங்ஙனஞ் செய்தாரென்று கண்களிலே நின்று ஆனந்தபாஷ்பம் பொழியப் பரவசராயினார்.

---

(இன்னும்வரும்)



# அர்ச்சாதீபம்.

---

(93-வது பக்கத்தொடர்ச்சி.)

---

இனி ஞானிகள் வணங்கும் விக்கிரகத்தின் றன்மையைக் கொஞ்சங் கூறுவாம். ஞானிகள் சிவனைத்தவிர இரண்டாம் வஸ்துவைக்காண்டலும், இரண்டாம்வஸ்து அவர்க்குத் தோன்றலும் இல்லை. சிவத்துக்கு வேறாகிய சராசரங்களை அந்தஞானிகள் காண்பதின்றேவெனின், சிவமாகவே காண்பார்கள். அவையும் அவர்களுக்குச் சிவமாகவே தோன்றும். சிவம் சராசரங்களெவற்றூடும் உள்ளும் வெளியும் விரவியதன்மை யுண்மை. அது விரவியிராதபோது சேதனங்கள் அறியவும், அசேதனங்கள் அசையவுங் கூடாது. சேதனங்களை அறிவிக்கவும், அசேதனங்களை அசைவிக்கவும் ஞானக்கிரியாஸ்வரூபனாய் அவைகளி விரண்டறக்கலந்து சிவன் பிரகாசியாநிற்பன். ஆகையால் அசேதனங்களிலுஞ் சிவன் ஞானிகளுக்கு விஷயமாவன். புல் - பூடு - புழு - மரம் - மிருகம் - பறவை - பாம்பு - கல் - மனிதர் - பேய்-கணங்கள் - அசுரர் - முனிவர் - தேவர் என்னும் பாகுபாடுகளே சேதனாசேதனங்களாகையால், எங்குஞ் சிவன்வடிவத்தையே அவர்கள் காண்பார்கள். இவைகளே சிவமாகக் காட்சியாகிறபோது சிவனது பிரத்யாம்னயமாகஅமைந்த சைவவிக்கிரகங்கள் அவர்களுக்குச் சிவமாகாமற்போகுமா? புல் - பூடு முதலியவைகளில் சிவம் கலந்திருக்குந்தன்மை சுரோத்திரவழியாக நமது மனசுக்கு விஷயமாகும். விக்கிரகங்களில் சிவம் கலந்திருப்பது சுரோத்ரவழியாக மனசுக்கு விஷயமாவதுடன், நேரே நேத்ரத்துக்கும், நேத்திரவழியாக மனசுக்கும் விஷயமாகும். சைவவிக்கிரகத்தில் சிவஸ்வரூபம் நேரே காட்சிப்படுதலால், இதில் சிவத்வம் ஞானிகளுக்குண்டாகுமாவென்று ஸந்தேகிக்க இடமேயில்லை. அன்றியும், எல்லாப்பொருள்களிலுஞ் சிவம் நிறைந்திருப்பினும், விக்கிரகங்களில் அது நிறைந்திருப்பதோடு அதனது ஸ்வரூபமும் பாஹ்யப்பிரகாசமாகின்றது. வியாபகத்தினால் உள்ளும், உருவத்தினால் வெளியிலுஞ் சிவம் பிரகாசித்தற்கிடமாகிய விக்கிரகத்தில் வேறு விசேடமுமுண்டு. அது மந்திரக்கிரியா விசேடமாம். எல்லாப்பொருளுஞ் சிவனிருப்பைத் தம்மிற்கொண்டிருப்பதுபோல மந்திரக்கிரியைகளுஞ் சிவனிருப்பைத் தம்மிற்கொண்டு அவருக்குத் திருமேனிகளாயின. சிவகோசங்களாகிய அம்மந்திரக்கிரியைகளை விக்கிரகமாகிய சிவகோசத்தி லொன்று சேர்க்கிறபோது சிவஸம்ஸ்கார விசேடத்தால் ஒன்றையொன்று ஆஸ்ரயித்து யாவுஞ் சிவமாய் விடுகின்றன. ஞானிகளது சேர்க்கையால் அவரது கரணேந்திரியங்களெல்லாஞ் சுத்தமாகுமெனின், சிவனது பூரணத்தாலும், சிவனது ரூபகோசரத்தாலும்,

சிவஸம்ஸ்கார விசேடத்தாலுஞ் சைவவிக்கிரகங்களுஞ் சிவமாவதில் என்ன தடை? இத்தகைய சைவவிக்கிரகங்களை ஞானிகள் சிவமாகக்கண்டு வணங்குவதிலும் என்னதடை? இந்தவிசாரத்தால் ஞானிகளுககு விக்கிராராதனம் வேண்டியதில்லையென்பதற் கிடமில்லாமற் போச்சுது. விக்கிரக வழிபாடு ஸவிகல்பத்தில் ஞானிகளுக்கு அவசியமாதல் பெறும்.

இனி, ஏனையோர்தன்மையையுங் கொஞ்சம் யோசிப்பாம். ஏனையோரென்பது ஞானிகளல்லாத எம்போலிகள். எமக்கு விக்கிரகாராதனம் அத்தியாவசியம். எமது இந்திரியகரணங்கள் சுத்தமெய்தாவிடினும், தடைபெற்ற ஞானத்தோடு கூடியிருப்பது ஸித்தம். அந்த ஞானக்கலப்பால் இவைக்கு அறியுந்தன்மை யுண்டாயினமையு முண்மை. அங்ஙனம் அறியுமிடத்துச் சிவத்தை நேரே அறியாது. சிவபாவனையோடு விக்கிரகமாக அறியும். ஞானத்தின் கூட்டால் இந்திரியகரணங்களுக்கு அறியுந்தன்மை யுண்டாயினவாறுபோலச் சிவத்தின் பூரணக்கூட்டாலும், சிவனது ரூபகோசரக்கூட்டாலும், சிவஸம்ஸ்கார விசேடக்கூட்டாலும் விக்கிரகத்துக்குஞ் சிவமாந்தன்மை யுண்டாகின்றது. இத்தகைய விக்கிரகத்தை ஞானக்கலப்புற்ற கரணங்கள் சிவபாவனையாலறிந்து ஆனந்திக்கும். இந்த வுபாஸனையின் முதிர்ச்சியில் ஜீவகரணங்களெல்லாஞ் சிவகரணமாய் விடுகையால்; அப்போது ஞானிகடன்மை வந்தெய்தி மேற்கூறிய ஞானிகளுடைய வழிபாடே சிறக்கும். ஞானிகளுக்கும், அல்லாதவர்களுக்கும் அர்ச்சாபிம்பத்தை அநாதரவுசெய்ய இடமுண்டாகாமையால், அர்ச்சையை யாவரும் உபாசிக்கவேண்டியது என்னு மெமது வைதிகஸித்தாந்தம் நிலைபெறுகிற்று.

சிவஞானிகள் தடையற்ற ஞானத்தால் பரனை ஸாக்ஷாத்தாக அநுபவிக்கிறபோது அவர்கள் விக்கிரகங்களை வணங்குவதும் அவசியமோவெனின், அவர்வணங்குவது அவர்களுடைய கர்மேந்திரியங்களுக்குப் பிரயோசனம் வேண்டியென்க. ஞானத்தால் நேரே சிவனை வணங்குவதுபோல ஞானக்கலப்பாற் சுத்தமெய்திய கரணாதிகளால் சிவத்தின்கலப்பாற் சுத்தமெய்திய சைவவிக்கிரகங்களை வணங்குதல் தகும். வணங்காவிடின் என்னையெனின், ஜகத்தினது பிரஜ்ஞை அறவேயொழிந்து சைவநிட்டை கூடியிருக்கும் அநுபவ நிலையில் கூடும், கூடாது என்று சொல்ல விடயில்லை. பஹிர்முகப்பட்டபோது திருக்கோயிலும், திருவேடமும் அவசியந்தான். பஹிர்முகப்பட்ட திருஷ்டியைப் பாஹ்யப்பிரகாசமாகிய சிவஸ்வரூபவிக்கிரகத்தில் தர்மயப்படுத்துதலே அப்போது கூடத்தக்க பாஹ்யநிஷ்டையாம். இத்தச் சிவஸம்பந்தமாகிய பாஹ்யநிஷ்டை கூடாதபோது லோகசம்பந்தமாகிய பாஹ்யநிஷ்டையே சிறந்து அவர்களது சைவநலங் குன்றும்! குன்றும்!! ஞானிக ளல்லாதவர்கள் இந்திரிய கரணங்களால் விக்கிரகங்களை வணங்குவது என்னபயன் கருதியெனின், பாசக்ஷயங்



கருதியென்க. என்னையெனின், விக்கிரகங்களின் றன்மையும், அவைகளிற் சிவன் உடனாயும் வேறாயு மிருக்குந்தன்மையும், உயிர்களின் றன்மையும், அவைகளது கரணசையோகம் தடைபெற்ற ஞானத்தோடு நிகழுந்தன்மையும் முன்னர் விளக்கினாம். ஆணவந்தடையாயிருந்த ஞானம் இந்திரிய கரணங்களைப் பரமன் உபகரித்தவுதவியாற் சிறிது விளங்கும். அவ்விலக்கலேசங்கொண்டு இடைவிடாது பரனை யுபாசித்தலால் மலஞ்சிறிது சிறிதாய் நீங்கி, ஞானமுஞ் சிறிது சிறிதாய் விளங்கிவரும். முதல் வெளிப்பட்ட ஞானலேசமும் மலமாயாதிகளின் மறைந்தேயிலங்கலால், அதுகொண்டே சிவத்தை நேரே அநுஸந்திக்க முடியாது. ஆகையால், விக்கிரகமாகியவுடம்பை அதிட்டித்துவிளங்குஞ் சிவத்தை யுபாசித்தலே ஞானலேசத்தால் எம்மனோரெய்தும் பயனாகும். ஆசாரியன் அரசன்முதலாயினோர்க்கு யாம்செய்யு முபசாரங்கள் அவரது உடம்புகளிலன்றி வேறில்லை. அந்த வுபசாரங்களால் அவர் மகிழ்ந்து எமக்கு அருள்புரிவதிலுந் தடையில்லை. அவருடம்புகளிலுபசரிப்பதன்றி அவ்வுடம்புகளில் வேறாக அவரைக்கண்டு உபசரித்தலும் யாண்டுமில்லை. அவ்வுடம்புகளைப் பூசிக்கிறபோது மகிழ்ந்திடுவது உடம்போ? உயிரோ? உடம்பன்று. உயிரே.

உயிரானது நரம்புமுதலியவற்றாற் பிணிக்கப்படும் உடம்பினையும், ஐம்பொறிமுதலிய கருவிகளையுங் கைக்கொண்டுநின்று, சாத்தா கொற்றா என்று உடம்புக்கிட்டபெயரால் பிறர் அழைத்தபோது என்னென்றுவந்து நிற்றலானும், இரண்டுபேர் ஒருவரையொருவர் கைகோத்துலாவுகையில், அவருள் அழைக்கப்பட்டோனேயன்றி ஏனையோன் என்னென்றுவந்து நில்லாமையானும், அன்றியும், உடம்பின் பெயரானழைத்தவழி உயிரென்னென்றதற்குக் காரணம் பிறிதோராற்றாற் பெறப்படாமையானும் அருத்தாபத்தியளவையானே அவ்வுயிர் உடம்பெனத்தானென வேற்றுமையின்றி அபேதமாய் நிற்கும். அங்ஙனம் நின்றவிடத்தும் உயிர் உயிரே! உடம்பு உடம்பே! உயிர் உடம்பாவொழியாது. உடம்பு உயிராகமாட்டாது. ஆயினும், உயிர் உடம்பாயும், அதனின் வேறாயுநிற்கும், உடம்பு அங்ஙன நில்லாது. இந்த வுண்மைகளால், உடம்பையே உயிரெனக்கொண்டு பூசித்தலும், அந்தப் பூசையால் உடம்பை யதிட்டித்தவுயிர் மகிழ்ந்து எமக்கு அருளலும் வெளிப்படை.

இதனை யிப்படியே விக்கிரகத்துக்கும், பரனுக்கும், விக்கிரகத்திற் பரன்விரவி விக்கிரகமெனத் தானென வேற்றுமையின்றி அபேதமாயிருத்தற்கும், ஏனைஸம்பந்தங்களுக்கும் பொருத்திக்கொள்க. இந்த வியவஸ்தையை யோசிக்கிறபோது எம்போலியர் விக்கிரகங்களிற் சிவாராதனஞ் செய்வது ஸாமஞ்சஸமேயாயிற்று. இந்த ஸந்மார்க்கமன்றிப் பரனை உபாஸித்தற்கு வேறுமார்க்கங் கிடையாமையும் வியக்தமாயிற்று. ஞானிகளும், அல்லாதவர்களும் விக்கிரகங்களில் பரனை ஆராதிக்கிறபோது ஞானிகளுக்குத் தயிரில் நெய்போலவும், ஏனையோர்க்குப் பாலில் நெய்போலவும் அந்த விக்கிரகங்களில் பரன்விளங்கி அநுக்கிரகிப்பனென்பதும் ஸத்தியம்.

(இன்னும் வரும்.)

## சரியையாதி நாற்பாதங்கள்.

(விநாயகபுராண வசனப்பிரசுரம்.)

### சரிதை.

சரிதையாவது: பிராத காலையிற் றேவாலயங்களிற் சென்று பயபத்தியுடனே திருவலகிடுதல் திருமெழுக்கிடுதல் திருவிளக்கிடுதல், நந்தவனம் வைத்தல், பூமாலைதொடுத்தல், சாத்தல், பூசனைபுரிதல், பெரியோர்களைக்காண்டல், கடவுளை வழிபடுதல்போல அவர்களையும் வழிபட்டு வசித்தல், தேவாலயம்-சத்திரம்-சாவடி-முதலியவைகளை நூதனமாகச் செய்வித்தல், அவைகள் சிரணித்திருக்கிற் பழுது பார்த்தல், தினந்தோறுங் கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்களில், ஸ்நானஞ் செய்தல், ஆலயங்களில் அங்கப்பிரதக்ஷிணாதிகளைச் செய்தல், அடியளந்து நடத்தல், நூற்றெட்டு ஆயிரத்தெட்டென்னுந் தொகைப்படி பிரதக்ஷிணஞ் செய்தல், கருமத்தின் வழிநின்று பொருள் சம்பாதித்தல், பிரமசாரி வானப்பிரத்தன் சந்நியாசி யென்னும் இம்மூவருக்கும் பசிபிணி முதலிய இடையூறுகளுறா வண்ணந் தக்கமுயற்சி செய்தல், பிதிர்தேவதைகளுக்கு யாகாதி கருமங்கள், நீர்க்கடன் முதலிய வற்றால் திருப்தி செய்தல், வந்த விருந்தினரைப் பாதுகாத்து, இனிவரும் விருந்தினரைக் கெதிர்பார்த்தல், உறவினர்கள் உள்ள மகிழவேண்டியவற்றை யுதவல், தானுந் தன் மனைவியும் ஒருவழிப்பட்டு நடுவு நிலைமையை யனுசரித்திருத்



தல், அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்க முடைமை, பொறையுடைமை, யென்னும நன்னெறிகளை யுற்றிருத்தல், பிறர்பொருள் கவர்தல், புறங்கூறுதல், பயனிலாவற்றை யநுசரித்தல், என்னுந் தீநெறிகளை விலக்குதல் முதலியனவாம். இவற்றையநுட்டித்தவர்கள் சாலோக பதவியையடைவார்கள்.

### கிரியை.

கிரியையாவது: சந்தனம், புட்பம், தூபம், தீபம், நைவேத்தியம், கோசலம், கோமயம், பால், தயிர், நெய், தேன், வாழைக்கனி, மாங்கனி, பலாக்கனி, நாரத்தங்கனி, இளநீர், பனிநீர், சந்தனம முதலிய பூசாதிரவியங்களைக்கொண்டு வேதாகம விதிப்படி திருமஞ்சனாதிகளைச் செய்தல். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னுமிவற்றின் வழியாகிய சத்த, பரிச, ரூப, ரச, கந்தமென்கின்ற ஐந்தாசைகளையும், நாளுக்குநாள் அடக்கல், விரதம், தேவதாபூசை, மந்திரம், எந்திரம், செபம், பாகம் என்னுமிவைகளை யனுசரித்தல், ஓருயிர்க்கும் இடையூறு வராமற் காத்தல், தவங்களினிறுதல், மனதை யடக்கி, அறிவோடு கலந்து, தற்பதத்தை யுணருகின்ற வரையில் ஆசிரியன் கட்டுரையையுஞ் சாத்திரவிதியையுங் கடைப்பிடித்திருத்தல், கோபமாதிகளைநீக்கல் முதலியனவாம். இவற்றை யனுட்டித்தவர்கள் சாமீப பதவியைப் பெறுவார்கள்.

### யோகம்.

யோகமாவது; இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எண்வகைப்படும், இவற்றுள்.

௧. இயமமென்பது—கொல்லாமை, மெய்ம்மை கூறல், கள்ளாமை, பிறர்பொருளிச்சியாமை, இந்திரிய மடக்கல் முதலியனவாம்.

௨. நியமமென்பது—தவம், தூய்மை, தத்துவநூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல் முதலியனவாம்.

௩. ஆதனமென்பது—சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி மயூரம், பத்திரம, முத்தம், சுகம், என ஒன்பதுவகைப்படும். இவற்றுள்:-தொடைக்கும் முழங்காற்குநடுவே இரண்டு உள்

னங்காலையுஞ் செலுத்தி யிருமாந்திருத்தல் சுவத்திகமென்றும், சகனபக்கத்திலு இருகாற் பரட்டையு மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலைக் கைப்பிடித்திருத்தல் கோமுகமென்றும், இருதொடை மேலும் இரண்டுள்ளங் காலையுமாறித் தோன்ற வைத்தல் பதுமமென்றும், வலத்தொடையில் இடக்காற் பரட்டை சேர்த்து இருமாப்புற்றிருத்தல் வீரமென்றும், பீசத்தின்கீழ்ச் * சிவனியிடத்துப் பரட்டைவைத்து, இடது முழங்கையை முழந்தாளில் வைத்து † அங்குலிவிரித்து, நாசியைப் பார்த்திருத்தல் கேசரியென்றும், பீசத்தின் கீழ்ச்சிவனியிடத்து இருகாற்பரட்டையும் வைத்து அவ் விரு பாதத்தையும் இருகையா லிறுகப்பிடித்து அசையாதிருத்தல் பத்திரமென்றும், இடக்காற்பரட்டாற் சிவனியை யழுத்தி வலக்காற்பரட் அப்பரட்டின்கீழ் உந்தவிருத்தல் முத்தமென்றும், முழங்கை யிரண்டும் உந்திப்புறத்தி லழுந்தப் புவியிற் கையூன்றிக் காலெட்டித் தலைநிமிர்ந்திருத்தல் மயூரமென்றும், சுகமுந் திடமும் எவ்வாறிருக்கி னெய்துமோ அவ்வாறிருத்தல் சுகமென்றுங் கூறப்படும்.

* சிவனி-பீஜத்திற்கும், பெருந்தொடைக்கு மிடைத்தானம்.

† அங்குலி-விரல்.

ச. பிராணாயாமமென்பது—பிராண வாயுவை ‡ ரேசக, பூரக, கும்பகஞ் செய்தலாம்.

‡ ரேசகம்-மூச்சு விடுதல், பூரகம் - மூச்சையிழுத்து உள்ளே வாங்கல். கும்பகம - வாங்கிய மூச்சை உள்ளே ஸ்தம்பித்தல்.

ரு. பிரத்தியாகாரமென்பது—உபாதியைநீக்கி, உள்நோக்கலாம்.

சா. தாரணை யென்பது—கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவற்றிலொன்றிற் சந்ததஞ் சிந்தைவைத்திருத்தலாம்.

எ. தியான மென்பது—ஐம்புலமடக்கிச் சிவயோகஞ் செய்தலாம்.

அ. சமாதி யென்பது—இந்திரிய முதலிய தத்துவ சேட்டையடங்கி ஏகவுருவாய் யாக்கையுணின்று அவற்றோடு கூடியும், அவற்றிற் பற்றின்றி (அன்மாவிரிவு) தன்னைத்தான் காண்டலாம். இவற்றை யநுட்டித்தவர்கள் சாரூபப் பதவியைப் பெறுவார்கள்.



## ஞானம்.

ஞானமாவது—ஞானாசாரியருடைய ¶ தீட்சைக் கிரமத்தினால் § வஸ்துத்திரயம், §§ தத்துவத்திரயம். ○ தசகாரியம் என்னும் மூன்று ஞானங்களையுமறிந்து அஞ்ஞானத்தினின்று நீங்குதலாம். இந்த மேலான ஞானத்தை யநுட்டித்தவர்கள் சாயுச்சிய பதவியையடைவார்கள்.

¶ தீட்சை என்பன: சமயதீட்சை, விசேடதீட்சை, நிருவாண தீட்சை என்பன. இஃது ஆசாரியனால் பக்குவாதாரமாகச் செய்யும் வைதிகதர்மமென்க.

§ வஸ்துத்திரயமாவன: பதி, பசு, பாசம் என்பன. இவற்றிற் பதியாவது: ஆதியந்தமின்மை, ரூபமின்மை, குணங் குறி யின்மை, அவா வெறுப்பின்மை, ஒப்புயர் வின்மை, எங்கும் பூரணமாயிருக்கை, மனாதி தத்துவாதீதமாயுண்மை. ஆத்மாத்மகமாயிருத்தல். என்னும் அஷ்டமங்கள குணத்தினை வாய்ந்த நிட்களப்பொருளாயிருப்பது. பசுவாவது: அளவிடற்கரியதும், நித்தியத்துவ முள்ளதும், மலவிருளிலழுந்தியிருப்பதும், இறைவன்றிருவருளால் இருவினைக்கேற்ற சரீரமெடுத்துப் பலவாகிய புவனபோகங்களை அநுபவித்து இதனாற் புண்ணிய பாவங்களைச் செய்து பிறப்பிறப்புள்ளதும், புண்ணியமேலீட்டால் இருவினையொப்பு, மலபரிபாக முண்டாகும் காலத்தில் குருவருளால் முத்தியின்பத்தைச் சேர்வதுமாம். பாசமாவது: ஏகத்துவமும், நித்தியத்துவமும், அளவிறந்த வல்லமையு முள்ளதும், செம்பிற் களிம்புபோலச் சீவனைப்பற்றி அறிவு முழுவதையும் மறைப்பதும், புண்ணியமேலீட்டால் பக்குவப்படுவதும், இரவின் இருளினும் அதிக இருளாயிருப்பதுமாம்.

§§ (திரயம்-மூன்று) தத்துவத்திரயமாவன: ஆத்துமதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்பன. இவற்றுள். ஆத்தும தத்துவமாவன:—பிருதிவி-அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பூதம் ஐந்தும்; சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் ஐந்தும்; சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் தன்மாத்திரை ஐந்தும்; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் கன்மேந்திரியம் ஐந்தும்; மனம்,

புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணம் நான்கும்; ஆகிய இவ்விருபத்துநான்குமாம். இவற்றில் பிரிதிவு - உரத்துத் தரிக்கும், அப்பு - குளிர்ந்து பதஞ்செய்யும், தேயு-சுட்டொன்றுவிக்கும். வாயு - சலித் தெவையுந் திரட்டும், ஆகாயம் - நிரந்தரமாயிடங்கொடுக்கும்,—சோத்திரம் - சத்தத்தை யறியும், தொக்கு பரிசத்தை யறியும் சட்சு-ரூபத்தையறியும். சிங்குவை ரசத்தை யறியும், ஆக்கிராணம்-கந்தத்தையறியும் —வாக்கு - வசனிக்கும், பாதம்-கமனம்பண்ணும், பாணி - இடுதலும் ஏற்றலும் செய்யும், பாயுரு - மலவிசர்க்கத்தை விடும், உபத்தம் - ஆனந்தத்தைவிடும். மனம் - பற்றும், புத்தி - நிச்சயிக்கும், சித்தம் சிந்திக்கும், அகங்காரம் கொண்டெழுப்பும்.

வித்தியாதத்துவமாவன: காலம், நியதி, கலை, வித்தை, அராகம் புருடன், மாயை என்னும் ஏழுமாம். இவற்றுள் காலம்: நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்னும் முக்காலத்தையுங் குறிக்கும்:—நியதி-கன்மத்தை நிச்சயித்து அநேகசாதி நாமத்துவங்களை யுண்டாக்கும்;—கலை-ஆணவத்தைச் சிறிதே நீக்கி அந்தந்த சாதிகளுக்கேற்ற கருமங்களைப்பற்றுவிக்கும்;—வித்தை அறிவையெழுப்பிக் கிரியையோடு ஞானத்தை ஓர்விக்கும்;—அராகம்-பெற்றதைச் சிறிதாக்கிப் பெருததில் இச்சையுண்டாக்கும்;—புருடன்-பஞ்சேந்திரியங்களின் வழியாக விடயத்திலே பழுத்துவிக்கும்: மாயை-தமம், மாயை, மோகம், அவித்தை, அநிர்தம் என ஐவகையாயிருந்து மயக்கும். இவற்றில் தமம். சிவசைதன்னியத்தை மறைத்தலும், மாயை-சகத்ரூபமான அன்னிதாத்தோற்றத்திற்குக் காரணமாயிருத்தலும், மோகம்-விபரிதஞான முண்டாக்கலும், அவித்தை-உணர்வழித்தலும், அநிர்தம் சகத்ரூபத்துக் கன்னியமாதலுமாம்.

சிவதத்துவமான: சுத்தவித்தை, ஈச்சுரம், சதாக்கியம், சத்தி, சிவம் என்னும் ஐந்துமாம்.—இவற்றிற் சுத்தவித்தை ஞானமேறிக் கிரியை குறைந்திருக்கும். ஈச்சுரம் ஞானங்குறைந்து கிரியை யேறியிருக்கும்: சதாக்கியம்ஞானமுங் கிரியையும ஒத்திருக்கும். சத்தி கிரியையாயிருக்கும். சிவம்-ஞானமாயிருக்கும், எனவறிக. இவற்றுள் சிவம், சிவனுக்கிடம். நாதமென்றும்பெயர். சத்தி-காருண்ணியத்திற்கிடம், விந்து வென்றும் பெயர். சாதாக்கியம்-அநுக்கிரகத்துக்கிடம். சதாசிவமென்றும் பெயர். சுத்த வித்தை-சங்காரத்துக்கிடம். உருத்திரனென்றும் பெயர்.



○ தசகாரியமாவன: தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆத்மரூப ஆத்மதரிசனம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம் சிவபோகம், என்பனவாம்—இவற்றுள் தத்துவரூபமாவது அவற்றின் குணங்களைக் காண்கை, தத்துவதரிசனமாவது அவை தன்னிடத்திலே நின்று சீவித்த முறைமையைக் காண்கை. தத்துவசுத்தியாவது அவை தனக்குவேறென்றறிந்து நீங்குகை. ஆத்மரூபமாவது ஆத்மஞானமாகிய அறிவே தன் வடிவெனவறிகை. ஆத்ம தரிசனமாவது தத்துவங்களை யறிந்து நீங்கி நீங்கின வறிவுதானெனவறிகை, ஆத்மசுத்தியாவது பந்த முத்தியிரண்டிலும் சிவனுபகரிக்கின்றனென்று தன்னுடைய சுதந்தர ஹானியை யறிகை. சிவரூபமாவது தத்துவ முப்பத்தாறுக்கும் அப்பாலாய், வாக்கு மனாதீதகோசரமாய், ஞானமே வடிவமா யிருப்பதெனவறிகை, சிவதரிசனமாவது தத்துவ முப்பத்தாறையும் நீங்கி நிற்கும்ஆத்மாவையுந் தரிசித்து நிற்கின்ற ஞானமெனவறிகை, சிவயோகமாவது, இந்த ஞானந் தன்னைவிட்டு நீங்காதென்றறிந்து தான் அதுவாய் நிற்கை, சிவபோகமாவது தான் அந்த நேயத்திலே நின்றழுந்தி சிவத்தைப் பெறுகை.

---

## நாட்டுக்கோட்டை வைசிய சைவப் பிரபுக்களுக்கு விஞ்ஞாபனம்.

---

ஐயன்மீர்

நீங்கள் எவ்வளவானாலும் பொருள் செலவிட்டுப் பலவிடங்களில் தருமசத்திரங்களும், குருபூசைமடங்களும், வேதாகமபாடசாலைகளும் வைத்து நடத்துகிறீர்கள். பலசிவாலயங்களைச் சீரணோத்தாரணஞ்செய்தீர்கள். பலசிவாலயங்களைப்பரிபாலித்துவருகின்றீர்கள். சைமசமயபரிபாலனம் செய்பவர்கள் இக்காலத்தில் உங்களையிட வேறெவருமில்லை. இவ்வாறாகவும், நீங்கள் செய்துவரும் காரியங்கள நீங்கள் செலவிடும் பொருளுக்கேற்பப்பெரும் பலனைத்தராமல் மிகச்சிறிய பலனையேதருகின்றன. அவை பெரும்

பயன் தராமைக்கு முக்கியமான காரணங்கள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று சைவராசாங்கம் இல்லாமையாம். மற்றொன்று சர்வசனங்களுக்கும் கூடுமானவரையில் சமயபோதனை செய்யப் படாமையாம்.

நூறுபேர் தனித்தனியாக ஒவ்வொரு தருமத்தை நடத்துவதினும், அத்தனைபேரும் ஒன்று கூடி அத்தருமங்களைச் செய்யின், அவைநீடித்து நடைபெறுதற்குமாத்திரமன்றி, பெரும்பயன் விளைத் தற்கும் ஏதுவாகும். இப்படியே ஐரோப்பியர்கள் எதையும் செய்து மேம்படுகிறார்கள். அன்றியும் எங்களுக்குச் சைவராசாங்கம் இல்லை. ஆதலால் நீங்கள் அனைவரும் ஒன்று கூடிச்சைவ ராசாங்கம் தாபித்து அதற்குவேண்டிய பற்பல உத்தியோகசாலைகள் வைத்து அவற்றின்மூலமாய் நீங்கள் செய்யும் எவ்வகைத்தருமங் களையும் செய்வித்தல் வேண்டும். இது நீங்கள் செய்யவேண்டிய கடமைகளுள் முதற்கடமையாம்.

சர்வசனங்களுக்கும் பொதுவகையான சைவசமயபோதனை செய்தல் இரண்டாவது கடமையாம். பிரசங்கத்தாலும் பத்திரிகைகளாலும், பாடசாலைகளாலும் சைவசமயபோதனை செய்யப்படல் வேண்டும். பிரசங்கத்தினும் பத்திரிகைகள் அதிகபயன்தரும். பத்திரிகைகளினும் பாடசாலைகள் அதிகபயன்தரும். பாடசாலைகளுள்ளும் வெறும் லௌகிக பாடசாலைகள் இக்காலத்தில் பொருட்செலவுக் கேற்றபயன் தரமாட்டா. இலௌகிகக்கல்வியோடு சமயக்கல்வியும் கற்பிக்கும் பாடசாலைகளே இக்காலத்தில் சிறிய பொருட்செலவில் பெரும்பயனைத் தருவன. ஆதலால் நீங்கள் எங்கும் கீழ்தரப் பாடசாலைகளேயன்றி உயர்தரப் பாடசாலைகளும் வைத்து அவற்றில் வேறு உபாத்தியாயர்களையேயன்றிச் சைவசமயபோதகர்களையும் வைத்துச்சிறுவர்களுக்கு இளமையிலேயே சமயக்கல்விகற்பித்து அவர்களைச் சைவவொழுக்கத்தில் நிறுத்துதல்வேண்டும். நீங்கள் இவ்வாறு ஐந்து வருடம் செய்வீர் களாயின் நீங்கள் செய்யும் சிவதருமங்கள் மிக அற்புதமான பயனைத் தருதலைக்காண்பீர்கள்.

மெய்யன்பர்களே, இவ்வுபாயங்களிரண்டையும் நீங்கள் அன்பு கூர்ந்து கடைப்பிடிக்குமாறு உங்களையும், உங்கள் குலதெய்வமும் வழிபடுகடவுளுமாகிய முருகக்கடவுளையும் பிரார்த்திக்கின் றோம். (ப - ர்.)

21 MAR 1921 MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சைவம்.


| | | |
|---|---|---|
| மலர் 6. | இரௌத்திரி ஞு புரட்டாசி மீ ஐப்பசி மீ<br>1920 ஞு செப்டம்பர் மீ அக்டோபர் மீ | இதழ் 9-10 |


## மெய்கண்டதேவர் துதி.

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன்ஞானம் பரிந்தொழுகச் சிவ கந்தம் பரந்து நாற, கண்டவிரு தயகமல முகைகளெல்லாங் கண்டிறப் பக் காசினிமேல்வந்தவருட் கதிரோன், விண்டமலர்ப் பொழில்புடை சூழ் வெண்ணெய்மேவு மெய்கண்ட தேவன்மிகு சைவநாதன், புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும் பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்.

(இ-ள்.) பழைமையான வேதங்களாகிய வண்டுகள் ஒலிக்கவும், பதிஞானமாகிய பசியதேனைது ஒழுகவும், எங்கும் சிவமணம் வீசவும், மெய்ப்பொருளை யுணர்ந்த ஞானிகளின் இதய மாகிய தாமரை மலர்கள் மலருமாறு, இந்நிலவுலகத்தில் திருவவதாரஞ்செய்தருளிய திருவருட் கிரணம் வீசும் சூரியனும், நன்கு மலர்ந்த மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரில் வீற்றிருந்தருளினவரும் எச்சமயத்தினும் சிறந்த சித்தாந்த சைவக்குருநாதருமாகிய மெய்கண்ட தேவ நாயனாரது இலக்குமி வசிக்கும் செந்தாமரை மலரும் நாணியவனழக் வனப்புவாய்ந்து எம்மை ஆட்கொள்ளுமாறு எம்சிரத்தில் நின்று நிலைபெற்று வீற்றிருக்கும் திருவடிகளை யாம் எப்போதும் போற்றி வணங்குவாம். (எ-று)

# சிவஞான போதம்.

(109-வது பக்கத் தொடர்ச்சி.)

பத்தாஞ் சூத்திரம்—இரண்டாம் அதிகரணம்.

**இறைபணிநிற்க மலமாயை தன்னோடு வல்வினை யின்றே**

(இ-ள்.)இறைபணியில்வழுவாது நிற்பின் ஆணவமலம் மாயாமலம என்னும் இரண்டனோடு வலிய கன்மமலமும் இல்லையாய் ஒழியும்(எ-று.

இதில், 1-வது—தன்னாற் கூறப்படும்பொருள்—மலவாசனையறு தற்கு ஆன்மா ஏகனாய பின்னரும் இறைபணியில் வழுவாது நிற்றல் வேண்டும்.

2-வது—ஐயப்பாடு—ஆன்மா இறைபணியில் நிற்பின் அதன் குணமாகிய அறி விச்சை செயல்கள் கெட்டொழியுமோ, கெடாது நிற்குமோ.

3-வது—பிறர் கூறும் பக்கம்—இறைபணியில் நிற்பதனால் ஆன் மாவின் குணமாகிய அறி விச்சை செயல்கள் கெட்டொழியுமெனில், குண குணிகட்குத் தம்முள் வேற்றுமை யில்லாமையால், குணம் கெடவே குணியாகிய ஆன்மாவும் கெடும் எனப்பட்டு, முப்பொருளும் நித்தம் என்னும் சைவ சித்தாந்தத்தோடு மாறணும்-கெடாது நிற்கு மெனில் ஏகனாதல் கூடாது. அன்றியும், இறை பணியில் நிற்பதனால் ஆன்மா முத்தியிலும் சுதந்திரம் இல்லாதவனாய் பாதந்திரன் எனப் பட்டு, முத்தியும் பந்தமாய் முடியும். ஆதலால் ஏகனாகி நிற்றலே யமையும். அதற்குமேலும் இறை பணியில் நிற்கக் கடவதின்று.

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு—விளக்கொளி யின்றிக் கண்ணொளிக்குக் காட்சியில்லை—ஆதலால், கண்ணானது தான் காண்பன வெல்லாம் விளக் கொளியின் செயலே யெனக்கண்டு, தானென வேறு முனைத்து நிற்பதின்றி, அவ்விளக் கொளியில் அடங்கி நின்றால், ஏனைய விடய மெதுவும் கண்ணுக்குத் தாக்குதலில்லை. அதேபோல், ஆன்மாவானது தன்னுடைய இச்சா ஞானக் கிரியை



களியாவும் முதல்வனுடைய இச்சா ஞானக் கிரியைகளின்றித் தொழிற் படாவாதலால், தன்னிடத்து நிகழும் இச்சா ஞானக் கிரியைகளின் நிகழ்ச்சியாவும் முதல்வனது இச்சா ஞானக் கிரியைகளின் நிகழ்ச்சியே எனக்கண்டு அம்முதல்வன் வியாபகத்திற் குள்ளாக அடங்கி, அவன் அருள்வழி நிற்பின் பிரபஞ்சம் சிறிதும் தாக்கமாட்டாது. அது தாக்கா தொழியவே அது காரணமாக மேலைக்கு வினையேறுதலில்லை. அப்படி அடங்கி அருள்வழி நில்லாத விடத்துப் பிரபஞ்சம் தாக்காமலிராது. அது தாக்குமாயின், அது காரணமாக வரும் விருப்பு வெறுப்பு ஏறாம லிராது. விருப்பு வெறுப்பு ஏறுமாயின் அது பிறவிக்கு வித்தாய் மறுப டியும் பெத்த நிலையிற் செலுத்திவிடும். ஆதலால் அவ்வாறு நிகழா வண்ணம் மாயை கன்மங்களின் வாசனை யறுதற்கு இறைபணியில் வழுவாது நிற்றல் வேண்டும். அவ்வாறு நிற்றல் தன் இச்சையின்படி சிவானந்தத்தையனுபவித்தற் கேதுவாய இறைபணியாமாகலின் அது பந்தத்தினுட்படுத்து மாறில்லை. அதனால் ஆன்மா சுதந்திரனுவனே யன்றி பரதந்திரன் ஆகான்.

இங்கு இறைபணியென்றது இறைவனருள்வழி நிற்றலை. வழு வாது நிற்றலென்றது சலியாது நிலைபெறுதலை.

5-வது—இயைபு—உதாரண வெண்பா

நாமல்ல விந்திரியம் நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மானுடைமை—யாமென்னி
னெத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் முன்.

(இ-ள்.) இந்திரியம் நாம் அல்ல—செவிவாய்முதலிய இந்திரியங்கள் முதல்வனது உடைமையாகிய மாயேயம் எனப்படுவனவன்றி ஆன்மா வாகிய யாம் எனப்படுவனவல்ல—நம் வழியின் அல்ல—அவை தொழிற் படுதலும் முதல்வன் வயத்தானன்றி நம்வயத்தானல்ல—வழிநாம் அல்ல—(அவ்விந்திரியங்கள் சத்தம் முதலியவைகளையும் வாக்கு முதலி யவைகளையும் விடயித்தற்கு) வழியாகிய தநுகரண புவன போகங்களும் அம் மாயேயமாவன. வன்றி யாமாவனவல்ல—(நம்வழியின் அல்ல—

அவை சேட்டித்தலும் முதல்வன் வயத்தானன்றி நம்வயத்தானல்ல— நாமும் அரனுடைமை=(அவற்ருேடு இயைந்து நின்று வினைகளை யீட்டுதற்கும் நுகர்தற்கும் வினைமுதலாகிய) யாமும் (ஞானச் செய்திகளை முதல்வன் விளக்கியபோது விளங்கியும் விளக்காதபோது விளங்காதும் இவ்வாறு முதல்வனையின்றி அமையுமாறின்மையான்) அம்முதல்வனது உடைமையாவோம்-(சுதந்திரராவோமல்லோம்)- ஆம் என்னில்= என்று இங்ஙனம் பசு பாசங்களின் இயல்புகளை உள்ளவாறு உணர்ந்து செய்வன வெல்லாம் அவனருள் வழிநின்று செய்யுஞ் செயலாமெனக் கண்டு கொண்டிருப்பாராயின் —இறை பணியார்க்கு எத்தனுவின் நின்றும் வினை இல்லை = அவ்விறைபணியாகிய அடிமைத்திற முடையார் எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினும் அவை அவர்க்குப் பந்தமாதலில்லை —முன்செய்வினையும் தருவான் முன்ஆம்= (அவ்வாகாமிய வினையை அவிநாபாவமாய் உடன்கொண்டு வருவதாகிய) பிராரத்த வினையும் தன்னைக் கூட்டுவிக்கும் முதல்வன் சந்நிதியில் (உடனுழாய்க்)கழியும். (அப்படிக்கழிவதன்றி ஏனையோர்க்குப்போல அவர்க்காதலில்லை).

நம்வழியினல்ல என்பதனை வழிநாமல்ல என்பதனோடுங்கூட்டுக. ஆம் என்பதனைத் தருவான் முன் என்பதனோடு சேர்த்துப் பொருளுரைக்க. ஆம்என்பது சொல்லெச்சம். சஞ்சித வினை ஆசாரியன் தீக்கை செய்த மாத்திரையே எரிசேர்ந்த வித்துப்போலக் கெட்டொழிதலின் இங்கு முற்செய்வினை யென்றது பிராரத்தவினையை யெனக் கொள்க.

இவ்வெண்பாவினுல் இறைபணியில் நிற்பார்க்குப் பிராரத்தவினை முதல்வன் சந்நிதியில் உடனுழாய் ஒழிவதாகலின் மேலைக்கு வினையேறுவதில்லை யென்பது விளக்கப்பட்ட வாறு காண்க.

# அர்ச்சா தீபம்.

(122-வது பக்கத் தொடர்ச்சி.)

சிவம் விளங்கியிருந்து அடியார்கள் செய்யும் பூசையை ஏற்குமிடமாகிய விக்கிரகமே யாம்கண்ட சிவமன்றி வேறில்லை யாகையால், விக்கிரகத்தைச் செம்புகல் என்றும், விக்கிரகம் சிவமல்ல வென்றுங் கூறுவது கூடாது. மகாராணியாரது அதிகாரசக்தி பதிந்திருக்குமிடமாகிய கவர்னரே நாம் கண்ட சக்ரவர்த்தினியன்றி வேறில்லை. கவர்னரை இவர் நம்மோடொத்த வொருவர்தானேயென்றும், இவருக்கு இந்த அதிகாரம் பிறக்கும்போது கூடவே யுண்டாயிற்ருேவென்றும், இவர் உத்தியோகத்தினின்றும் நீங்கினுல் இவருக்கு இந்த அதிகாரம் எப்படியாகுமென்றும், ஆகையால் இவர் நம்மை ஆளத்தக்கவரன்று, இவருக்கு நாம் அஞ்சி இவரை வழிபடவேண்டுவது மின்று என வொருவன் எண்ணுவது கூடுமோ! இன்னும், இலக்கணையாலும் விக்கிரகம் சிவமாதல் விளங்கும். விளக்கு முறிந்தது என்னுங்கால் விளக்குத் தண்டுமுறிந்தது என்றே பொருளுண்டாகி விளக்குத்தண்டையே விளக்கு என்று கூறும் அபேதநிலைமையே அதுவாம். இத்யாதி அநந்த ஹேதுக்களால் விக்கிரகவழிபாடு பரமரத்தாணியறைந்தாற்போல நாட்டப்பட்டது.

மகாராணியும், கவர்னருஞ் சேதனர்கள். சிவமும், விக்கிரகமுஞ் சேதனம் அசேதனம் என்னும் வேறுபாடெய்தும். அதனுல் உபமான ஸாத்ருஶ்யமாகாதெனின், பிரகிருத விசாரணையில் இந்த ஆக்ஷேபம் ஸயுக்திகமாகாதாயினும், இதற்கும் ஸமாதானஞ் சொல்லுகிருேம். ஆசாரியனது பாதுகை, மஹாராணியாரது முத்திரை என்னுமிவைகள் இவற்றையுடையவர்களைப்போலச் சேதனங்களன்று அசேதனங்களாயிருப்பதறிந்து இவைகளை ஸம்மானஞ்செய்யாதபேர் உலகிலில்லை. அங்ஙனஞ் செய்தவர்க்கு ஆசாரியனது அருளும், மகாராணியாரது தயையும் உண்டாகத் தடையில்லை. செய்யாது இழிவு கூறினோர்க்குப் ப்ரத்யவாயமுண்டாவதிலுந் தடையில்லை. இந்த வுபமானத்தால், விக்கிரகமாத்திரமேயன்றித் திருக்கோயில் விபூதி, ருத்ராக்ஷம், பில்வம், சிவவேடமுதலிய சைவமுத்திரைகளுஞ் சிவபாவனைக்குரிய ஸ்தானங்களாகிச் சிறக்கும்! சிறக்கும்!! சிவனடியாரைச் சிவமாக வழிபடுதலும் நிலைக்கும்! நிலைக்கும்!! சிவனடியார் சேதனராயினமையால், அவர் பூசையும் நம்மவர்க்கு மணக்கும்! மணக்கும்!!

இதுநிற்க, விக்கிரகத்தைப் பரனுருவம்போலச் செய்வதும் அதில் பரனைப்பாவிப்பதும் நமது செயலாக முடிதலால், நம்மாலே

செய்யப்பட்டதை நாமே அழிக்கவுங்கூடும். இத்தகைய விக்கிரகத்தில் அன்பு எப்படி நிகழுமெனின், ஒரு அரணியிற்கடைந்த அக்னி நம்மா லுண்டுபண்ணப்பட்டிருந்த போதிலும் நாமுண்டு பண்ணினதுதானே யென்று அவமானிக்க வுபகாரப்படாது. அது உடலைக்கொடுத்தால் எரித்து விடும். சீதளகாலத்தில் அநுஸரித்தால் குளிரைநீக்கும். இதுபோல விக்கிரகநிந்தையால் சிக்ஷையும், விக்கிரகசிந்தையால் ரக்ஷையும் உண்டாகும்.

இனித் திருக்கோயில்கள் மூடப்படுவதும், விக்கிரகங்கள் பின்னமாவதும் ஆகிய அவஸரங்களில் சிவஸாந்நித்யம் அவைகளி லெப்படியாகிறதெனின், எப்போதும் ஒருபடித்தாகவேயிருக்கும். வழிபடும் அதிகாரியினது யோக்யதையே அப்போது யோசிக்கத்தக்கது. நீரானது தளும்பியகாலத்தில், அதிற்றோன்றுஞ் சந்திரபிம்பமுந் தடுமாறியதாக அவிவேகி எண்ணுவான். விவேகியோ அப்படி எண்ணமாட்டான். மூடியகோயிலை மீண்டுந் திறக்கும்போது ஸம்புரோக்ஷணஞ் செய்வதும், ஒடிந்த விக்கிரகத்தை யெடுத்துவிட்டு நூதனவிக்கிரகம் அமைப்பதும் என்னையெனின், ஸம்புரோக்ஷணம் என்பது ஸமஸ்காரமாகையால், அதுவும் பரனது ஸ்வரூபவிளக்கவிசேடமாம். மந்திரக்கிரியா விசேடத்தினதாகிய இதன் பிரயோசனத்தை மேல் விளக்கி யிருக்கின்றோம். நூதன விக்கிரகமமைப்பது விக்கிரகம் பின்னமானகுறைவைப் பூர்த்திசெய்யவேயன்றி, அதில் சிவம் இல்லையென்னுங் குறைவைப் பூர்த்திசெய்யவன்று.

பரனது ஸ்வரூபவிளக்கம் புல் - பூடு - புழு-மரம் - விலங்கு முதலிய யாவற்றுள்ளும் நிறைந்திருக்க, அவைகளிலும் பரனை வணங்காமல் விக்கிரகத்திலேயே வணங்குவது என்னையெனின், (கண்டனவெலாமோன வுருவெளியதாகவுங் கருதியஞ்சலிசெய்குவாம்) என்னுஞ் சைவாக்ரேஸர் திருவாக்கே அதற்கு விடையாகும். இதனால் அந்தவினை எம்மிடம் பயன்செய்யாது. சராசரங்க ளெவற்றூடும் பரனிருப்பையறிந்து உபாசிக்கின்றோமென்று கூறு நம்மவர் விக்கிரகங்களின் மாத்திரம் அந்தப்பரனை வர்ஜித்துப்பேசுவதென்னை?



அதாவது விக்கிரகாராதனஞ் செய்கின்றபேரை நிந்திக்கின்றவாறென்னை? பூர்வபட்சிகளுக்கேயன்றிக் கண்டபாவனை எமக்கின்று. வேதத்தில் குதிரைகளுக்கு நமஸ்காரம், குதிரைகளின்பதிக்கு நமஸ்காரம், நாய்களுக்கு நமஸ்காரம், நாய்களின்பதிக்கு நமஸ்காரம், குலாலனுக்கு நமஸ்காரம், கம்மாளனுக்கு நமஸ்காரம் என்று மேலிட்டபொருள்களையேயன்றிக் கிழிட்டபொருள்களையும் பரமனது வாஸஇடமாக அறிந்து நமஸ்காரங்கள் சொல்லியிருக்கின்றது. இஃதறிந்தே உலகில் யாவரும் மண் - ஜலம் - நெருப்பு - காற்று - ஆகாசம் என்பவைகளை முறையே பூமிதேவிஎனவும், வருணபகவான் எனவும் அக்னிபகவான் எனவும், வாயுபகவான் எனவும், ஆகாசவாணி எனவுங்கொண்டு வழிபட்டுவருகின்றார்கள். சூரியசந்திரர்களையும் வழிபடுகின்றார்கள். அன்றியும் மநுஷ்யர்களையும ஒருவருக்கொருவர் வந்தனவழிபாடுகளால் ஆராதிக்கின்றார்கள். இன்னும், எருது, பசு - யானை - மயில் - கருடன் - பாம்பு முதலிய பசுபட்சிகளையும், அரசு - வேம்பு - ஆல் - கொன்றை - பில்வம் - துளசி முதலிய மரவகைகளையும் யாவரும் பூசித்தேவருகின்றார்கள். இந்தப் பரதகண்டமல்லாத வேறுகண்டங்களில் சிலர் மரத்தைக் கும்பிடுகின்றவர்களும், சிலர் ஜலத்தைக் கும்பிடுகின்றவர்களும், சிலர்நெருப்பைக் கும்பிடுகின்றவர்களும், சிலர் பிணத்தைக் கும்பிடுகின்றவர்களுமாகப் பல்வேறு வகைப்பட்டிருக்கின்றார்கள். இவைகள் யாவும் எமது சைவசித்தாந்தத்துக்கு விரோதம் பயவா (விரிவிலாவறிவினர்கள் வேறொருசமயஞ்செய்தே யெரிவினாற்சொன்னாரேனு மெம்பிரார்க்கேற்றதாகும்) என்று சைவத்தலைவருங் கூறியிருக்கின்றனர், யாவுஞ் சிவமயமாவது ஸித்தமாகையால், இதை அறிந்துபூசித்தாலும், அறியாது பூசித்தாலும் அவ்வவ்விடங்களிலிருந்து அந்தந்த இடங்களுக்குத்தக்கபடியும், அவ்வவ்வதிகாரிகளுக்குத் தக்கபடியும் பரமன் அருள் செய்வது தப்பாது. சூரியன் எங்குங் காய்ந்தாலும், சூரியகாந்தக்கல் - பளிங்குக்கல் - கருங்கல் - செங்கல் இத்யாதிகளில் அவனுடைய பிரகாசமும், உஷ்ணமுந் தாரதம்பமாகவே விளங்கும். இது கல்லுகளின் சுத்தாசுத்தங்களால் உண்டாவதன்றி அவற்றுளுறையுஞ் சூரியனாலுண்டாவதன்று. இவற்

றுள், சூரியகாந்தக்கல் - பளிங்குக்கல் முதலிய நிர்மலவஸ்துக்களிலேயே சூரியனது ஸாந்நித்யத்தை அறிந்தனுபவிக்க வேண்டும். இப்படியே சிவலிங்கம், சிவாக்னி முதலிய வஸ்துக்களிலேயே சிவஸாந்நித்யத்தை அறிந்தனுபவிக்க வேண்டும். சராசரங்களெங்கும் நிறைந்த சிவனைச் சிவலிங்காதிகளிலேயே அறிந்து யாம் அநுஸந்திப்பது பசுவினது உடம்பெல்லாம் நிறைந்தபாலை அந்தப்பசுவினது முலையிற்றானே கறந்து அநுபவிப்பதுபோற்கொள்ளத்தக்கது.

இம்மட்டோ, விக்கிரகபூசை இன்றியமையாத தென்பதை இன்னுஞ் சொல்லுகிறோம், கல்வியில்லாத வொருவனுக்கு அதைக்கற்பிக்கத்தொடங்குகையில், அவனுக்கு முதலில் அக்ஷராப்யாஸஞ்செய்விக்கவேண்டும். அங்ஙனஞ் செய்விக்குங்கால் முதல் அந்த அக்ஷரங்களை எழுதிக்காட்டி, பின்பு உச்சரித்துக்காட்ட வேண்டும். கண்ணினாலேபார்த்தும், வாயினாலே உச்சரித்தும் அறிந்துகொண்ட எழுத்தையே பின்பு மனசில்பதிந்துகொண்டு ஒருவன் அநுஸந்திக்கிறான். கண்வாய்களுக்கு அது விஷயமாகாதபோது மனசுக்கும் விஷயமாகாது. கண்ணுக்கு விஷயமானதை வரிவடிவென்றும் வாக்குக்கு விஷயமானதை ஒலிவடிவென்றும், மனசுக்கு விஷயமானதைத் தியானவடிவென்றும் அறிந்து அக்ஷரலக்ஷணத்தை அங்கீகரிக்குமாபோல், பரனை விக்கிரகமாகத்தரிசிப்பது ஸ்வரூபாராதனமென்றும், சந்திரசேகராதி முகூர்த்தங்களைப் புகழ்வது நாமார்த்தவைபவமென்றும் அவனது ஸ்வரூபவர்ணனைகளையும், அவனது நாமவைபவங்களையும் உள்ளத்திற்கொண்டு மகிழ்வது தியானவைபவமென்றும் அங்கீகரித்து மேலோர் அநுஷ்டித்து வருகின்றார்கள். எழுத்தினது வரிவடிவை வேண்டாதபோது அதனது தியானவடிவு கைகூடாது. அதுபோல பரனது அர்ச்சையை வேண்டாதபோது அவனது தியானவடிவு கைகூடாது, இதனாலும் அர்ச்சாராதனம் ஸர்வஸம்பிரதிபந்நமாயிற்று.

# அரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

(118-வது பக்கத் தொடர்ச்சி.)

ஓர்நாள் அவர் வைசுதேவஞ்செய்து தமது கிரகத்துவாயிலிலே வந்து அதிதிகள் வருகின்றார்களா வென்று பார்க்குமிடத்து, ஒரு சிவபக்தர் ஆங்குவந்தார். அவரை அழைத்துக்கொண்டுபோய் அறுசுவையோடு போசனஞ் செய்வித்து, தாமும் போசனஞ்செய்து அவரோடு தாமும் தாம்பூலஞ் செய்துகொண்டிருக்குங்கால், அந்த அதிதிப்பிராமணர் ஆசாரியரை நோக்கி, சுவாமீ, தங்களுக்கு க்ஷேத்திரமிருக்கிறதா? தாங்கள் செய்யும்உபசாரம் ராஜோபசாரமா யிருக்கின்றதே என்று கேட்ப, அதைக் கேட்ட ஆசாரியர் எனக்குள்ள க்ஷேத்திரம் உழப்படாததும், சலம் பாய்ச்சப்படாததும், தீர்வைகொடுக்கப்பெறுததும், இருபோகமின்றி ஒருபோக முடையதும், குளிர்ச்சியாகிய முளையுடைய நதிப்பிரவாக முடையதும் எப்பொழுதும் உபாதியின்றி போகமுடையதாயுமுள்ள க்ஷேத்திரமேயாம்,என்று —

அங்யேவக்ஷேத்ரமார்கிஷ்டபச்யமநர்க்கபாகத்விதீயோபபங்கம்
ஊஷ்பௌஷதேசர்ம்குரமுந்நதீகமத்யத்ஸதாபோகமுபாதிசூந்யம்

என்னும் இந்த சுலோகத்தைச்சொல்லக்கேட்ட பிராமணர் ஆச்சரியமடைந்து, பின்னரும் அநேக சிவகதைகளை ஆசாரியர்வாயிலாகக் கேட்டு, நாம் கிருதார்த்தராயினேம் என்று சந்தோஷத்தோடு விடைபெற்றுக்கொண்டு தம் வீடு சார்ந்தார்.

அரதத்தாசாரியர் ஓர்நாள் சிவத்தியானபாராயணராய்ப் பிரமயஞ்ஞத்தின் பொருட்டுக் காவேரி தீர்த்தத்துக்குப் போயிருந்தார். அப்போது ஆங்குவந்த சண்டாளன் சண்டாளி என்னும் இருவருள்ளே சண்டாளியானவள் காவேரியைப் பரிசிக்கும்பொருட்டுப்போக, புருஷன் அவளைநோக்கிக் காவேரி சலத்தைத்தொடாதே என்றான். அதைக்கேட்ட நாயகி ஸ்நானஞ்செய்தலினாலும் தரிசித்தலினாலும் காவேரி மகாபாபங்களை யெல்லாம் போக்குகின்றாளென்று சொல்லப்படுகிறதே, பிராணநாயகரே! இங்ஙனம் நீவிர் சொல்லி என்னைத் தடுக்க வேண்டியது என்னை யென்றாள். அதற்கு அவன் அவளை நோக்கி காவேரி தீரத்திலே எவ்வளவு மணலுண்டோ அவ்வளவுஞ் சிவலிங்கரூபமாம். நாம் கையினாலே பரிசிக்கப்படாது என்றான். இந்த வார்த்தை

யைக் கேட்ட ஆசாரியர் சமீபத்திலே நின்ற அச்சண்டாளனுடைய பாதத்திலே வீழ்ந்து வணங்கி, அவன் கழற்றிவிட்ட செருப்பைத் தமது தலையிலேவைத்து, ஆனந்தக்கூத்தாடி, உலகத்திலே சிலர் ஞானத்தை அவலம்பனஞ்செய்கின்றார், வேறுசிலர் கன்மத்தை அவலம்பிக்கின்றார், நாமோ சிவபக்தருடைய பாதரக்ஷையை அவலம்பிக்கின்றோம்,—

ஞானாவலம்பிநகேசித்கேசித்கர்மாவலம்பிந: |
வயந்துசிவபக்தாநாம்பாதரக்ஷாவலம்பிந: ||

என்னுங் கருத்தையுடைய இந்த சுலோகஞ் சொல்லிச் சமஸ்தப் பிராணிகளையும் சிவசொரூபமாகப் பாவித்து வருவாராயினர்.

ஓர்நாள் இவருக்குப் பாகஞ் செய்யப்பட்ட சாலையினுள்ளே நாயொன்று பிரவேசித்து அன்னத்தை உண்ண இதைக்கண்ட அரதத்தாசாரியர் சிவபிரானே நாய்ரூபமாய் வந்துண்டாரென்று நினைந்து அதனால் அதனைச் சிவநின்மாலியமாய்க்கொண்டு சிவத்யானத்தோடு பந்துக்களுடன் அதனைப் புசித்தார்.

மற்றோர்நாள் அரதத்தாசாரியர் அப்பியங்க ஸ்நானஞ் செய்துவிட்டுக் காவேரிக்கு போயினர். மடிசஞ்சி பாத்திர முதலியன எடுத்துக்கொண்டு போகும்போது சிவபிரான் ஓர் விருத்த சண்டாளனாய்க் கோலை யூன்றிக்கொண்டு தீனவார்த்தை பேசி அவரைச் சமீபித்து, நாதரே! தாகத்துக்குச் சலமில்லை; பசி என்னை வாட்டுகின்றது. அதற்கொரு வழிகாட்டல் வேண்டுமென்று கேட்ப, உடனே அவர் தமது கிரகத்துக்கு வந்து வடித்தகஞ்சி கொண்டுவந்து அவருக்கு வார்த்துவிட, அவரும் அதைக் குடித்துப் பசிதீர்த்தார்.

சோழராஜாவானவர் தக்ஷிணாயன வுத்தராயண புண்ணிய காலங்களிலே சிவபிரானைத் தயிலம் அன்னம் பால் தயிர் பழமுதலிய கொண்டு மிகுதியும் மகாபிஷேகஞ்செய்து வருவாராயினர். அப்போது சிவபிரானும் அபிஷேகஞ்செய்த அன்றிரவு அரசருக்குச் சொப்பனத்திலே தோன்றி, அன்பனே! நீ செய்த மகாபிஷேகத்தினால் மிகவும் உவந்தேமென்று திருவாய்மலர்ந்தருளுவாராயினர்; ஓர்நாள் அக்கினீசுவரப் பெருமானுக்கு மிக விசேஷமாகப் பூசிக்க ஆரம்பித்து பஞ்சாமிர்தம், பஞ்சகவ்வியம், மாம்பழம், பலாப்பழம், இளநீர், கருப்பஞ்



ரசம், சர்க்கரை, தேன், சந்தனம், எலுமிச்சம்பழம், ஜலம், இலாமிச்சை சேர்ந்த சுத்தோதகம் என்பனவைகளால் வாசாமகோசரமாக அபிஷேகஞ் செய்து, பீதாம்பரம் தரித்து, ஆரங்கள் பதக்கங்கள் முதலிய கொண்டு அலங்கரித்து, மல்லிகை நீலோற்பலம் சம்பக முதலிய புஷ்பங்களினால் அர்ச்சித்து, தூபதீபாதிகளினால் ஆராதித்து, சிறுபருப்புப் பொங்கல் சர்க்கரைப் பொங்கல், மாஷான்னம், கடுகன்னம், தேன் அன்னம் பாயசம், சுத்தான்னம், திலோதனம், பாலன்ன முதலிய அன்னபேதங்களை நாநாவித பதார்த்தங்களோடு படைத்து, கட்டித்தயிர், புத்துருக்கு நெய். வாழைப்பழம், பேரீச்சம்பழம், வடகம், அதிரசம், இளநீர் முதலியன கொண்டு வாக்குக்கடங்காத பிரகாரம் உபசரித்தார். நீராஞ்சனம், தாம்பூலம், சத்திரசாமரம், நவரத்தினக்கண்ணாடி, பிரதக்ஷிண நமஸ்காரம், மந்திரபுஷ்பம், ஸ்தோத்திர முதலியவற்றால் உவப்பித்து, பிராமணர்களுக்கும் அந்நைவேத்தியங்கொண்டுபசரித்தார். இராத்திரியிலே பின்னருஞ் சிவபிரானை வணங்கிப் போசனஞ்செய்து நித்திரைக்குப் போயினர். நித்திரையிலே அவருக்குச் சிவபிரான் ஒன்றுஞ் சாதிக்காமை கண்டு, சுவாமி வந்திலரே! என்று விசாரமும் துக்கமு முற்று, பின்னரும் நித்திரைசெய்தார். அப்போது சிவபெருமான் சிவனடியாராக அவருக்குக் கனவில்வந்து, உனக்கு முதற்றினத்திலே ஒருவர் செய்த உபசாரத்துக்கு நீசெய்த உபசாரமெல்லா மீடாகா! திருப்தியுமின்றாம். பூருவதினத்திலே சண்டாளனாய்ப் போனபோது அரதத்தாசாரியர் எனக்கு எள்ளுப்பிண்ணாக்கும் கஞ்சியுங் கொடுத்தமையினால் மிகத்திருப்திகரமாயினேன் என்று திருவாய்மலர்ந்தருளினர். உடனே சோழராஜா மிக வியந்து ஸ்தோத்திரஞ்செய்து, உதயகாலத்திலே நித்திய கருமமுடித்து, அரதத்தாசாரியர் வீட்டுக்கு வந்து, அவர் பாதத்திலே வீழ்ந்து வணங்கி சொப்பன விருத்தாந்தத்தால் தங்கள் பெருமை அறிந்தேனென்று தோத்திரம் பண்ணினர். அக்கிராமத்தாரெல்லாம் இதனைக்கேட்டு ஆசாரியருடைய பெருமையை அறிந்து தோத்திரஞ்செய்தார்கள். இதைக்கேட்ட அரதத்தாசாரியர் சிவப்பிரசாத மின்னமா என்று சொல்லிப் பேரானந்தமுற்றார்.

துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலகராய்ச் சமஸ்த தருமங்களினாலும் உலக பரிபாலனஞ் செய்துவந்த சோழமகாராஜா அநேக தீர்த்தயாத்தி

யாத்திரை செய்து, பல சிவஸ்தலங்களைப் பணிந்துகொண்டு (அக்கினியின் சாபந் தீர்த்தமையால் அக்கினீசுரனெனப் பெயர்கொண்ட) அக்கினீசுவரத்துக்கு வந்து, கங்கையின் பாபத்தைப் போக்குகின்றதும் நிர்மலமாயிருக்கிற காவேரியிலே ஸ்நானஞ்செய்து, கற்பக விநாயகரைத் தரிசித்து சுவாமி தரிசனஞ்செய்து ஆலயத்தை வலம்வந்தார். அப்போது பஸ்மோத்தூளன திரிபுண்டரதாரியாய் உருத்திராக்ஷதாரரானராய் நாசாக்கிர திருஷ்டியோடு நேரிய சிரத்தோடுகூடிய சரீரத்தினராய், சிவதேஜஸினாலே சோலிக்கின்றவராய், பதுமாசனத்திருந்து சிவத்தியான பராயணராயிருக்கும் உலகப்பிரசித்திபெற்ற அரதத்தாசாரியரைச் சோழராசா தரிசனஞ் செய்து, சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அடியேனை ரக்ஷிக்க என்றார். அப்போது ஆசாரியரும் அவரைநோக்கி தமது ராச்சியத்தனகோசம் பந்துவர்க்கமெல்லாம் க்ஷேமமாவென்று வினவ, அதற்கு அரசர் சுவாமிகள் கிருபாதிருஷ்டியினால் எல்லாம் க்ஷேமமே என்றார். இங்ஙனஞ்சொல்லி பின்னரும் அவரை நமஸ்கரித்து, சுவாமி! இந்தச் சரீரத்தோடு நான் கைலாசத்துக்குப் போதல்வேண்டும், அதற்கு வேண்டிய உபாயத்தை உபதேசித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்போது அரதத்தாசாரியர் நீவிர் இவ்வக்கினீசுவராலயத்துக்குச் சமீபத்திலேயுள்ள ஏழு தலங்களையும் அரையாமத்தினுள்ளே தரிசித்து வருவீரேல் உமது மனோபீஷ்டம் சித்தியாகும் என்றார். அரசர் அதற்கிசைந்து சில பரிசாரகர்களுடனே சுவேதசத்திரத்தோடு குதிரைமேற்கொண்டு அரையாமத்துக்குள்ளே ஏழுதலங்களையுந் தரிசித்துக்கொண்டு வந்தார். குதிரையையும் சேவகர்களையும் வெளியே நிறுத்தி அரசர் கோயிலினுள்ளே புகுந்தபோது, ஓடிவந்த வேகத்தினால் குடைபிடித்து வந்தவன் குதிரையோடு கீழேவிழுந்து மூர்ச்சையாயினன். குதிரையும் குடைபிடித்தவனும் தேகத்தோடு ஆங்கு வந்த விமானத்திலேறி ஆகாயமார்க்கமாகக் கைலாசத்துக்குப் போகும்போது, ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ் செய்துவந்த அரசரோடு ஆசாரியரும் கோபுரவாயிலுக்கு வந்து, ஆச்சரியமுற்று அவ்விமானத்தின் மீது சென்ற குதிரையையும் குடைக்காரனையும் சோழராஜாவுக்குக் காண்பிக்க, அரசர் தம்மை மிகவும் நொந்துகொண்டு, ஆசாரியரைப் பார்த்து தமக்கு விமானம் வாராமைக்குக் காரணத்தை வினவினார். அதற்கு ஆசாரியர் நீர் எப்



படிப் பிரதக்ஷிணஞ் செய்துவந்தீர் என்று கேட்டார். நான் குதிரைமேலேறிவரக் குடைக்காரன் குடைபிடித்துக்கொண்டுவரப் போய்த் தரிசனஞ் செய்துகொண்டு வந்தேன் என்றார். சிரமமடைந்து வந்தபடியால் குதிரைக்குங் குடைபிடித்தவனுக்கும் விமானங் கிடைத்தது; நீரும் பாதசாரியாய் அரையாமத்துக்குள்ளே வருவீராகில் தேகத்தோடு கைலாசம் வாய்ப்பதாகும் என்றார். அதுகேட்ட அரசர் அந்தப் பிரகாரம் ஏழுதலங்களையும் தரிசித்துக்கொண்டு அக்கினீசுவரர் ஆலயத்தை வலம்வந்து புறத்தேபோந்து ஆசாரியரைத் தரிசித்துவணங்கி, சுவாமி! நீர்சொல்லிய பிரகாரம் செய்து முற்றியது என்று சொல்லி முடித்தற்கு முன்னே, கோடி சூரியப்பிரகாசத்தோடு நானாரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதாய், அநேக வாத்தியகோஷங்களோடு பொருந்தினதாய், ஆகாயத்தினின்றும் போந்தவிமானத்திலே விநாயக சுப்பிரமணியர் நந்தி முதலியோர்சேவிக்க பிரமவிஷ்ணுக்கள் ஜய சப்தம் செய்ய, உமாதேவி சமேதராய் இடபவாகன மேற் கொண்ட சிவபெருமானைத் தரிசித்து அரதத்தாசாரியரும் சோழராசாவும் அங்குள்ளாரும் மகிழ்ந்து துதிக்க, அரசரைமாத்திரம் இறைவர் விமானத்திலெடுத்து வைத்துக்கொண்டு போம்போது அரசர் ஆசாரியரை நமஸ்கரித்து கைலாயத்துக்குப் போய்வருகின்றேன் என்று சொல்லி கைலாயம் அடைந்தார்.

## சந்தாதாரர்களுக்கு விண்ணப்பம்.

அடுத்தவருடச் சந்தா

இப்பத்திரிகை வெளிவரத் தொடங்கியபோது காகிதத்தின் விலை இராத்தல் ஒன்றுக்கு அணா 2½-அச்சுக்கூலி டெம்மிபாரம் ஒன்றுக்கு ரூபா 3½-வி-பி யில் அனுப்பப்படும் பத்திரிகைகள் ரிஜிஸ்டர் செய்தே அனுப்பப்படல் வேண்டும் என்னும் நிபந்தனை இல்லை. இப்போது காகிதத்தின் விலை இராத்தல் ஒன்றுக்கு அணா 10. அச்சுக்கூலி டெம்மிபாரம் ஒன்றுக்கு ரூபா 7-வி.பி யில் அனுப்பப்படும் பத்திரிகைகள் ரிஜிஸ்டர் செய்தே அனுப்பப்படல் வேண்டும். இவற்றால் முன் வருஷம் 500 ரூபா செலவிட்டு நடத்திய இப்பத்திரிகையை இப்போது

நடத்துவதற்குச் சுமார் 1500 ரூபா வேண்டியதாயிருக்கிறது. இதற்கு நியாய வாயிலாக விதிக்க வேண்டிய சந்தாவும் 3 ரூபா ஆகிறது. ஆயினும், இத்தொகையைக் கொடுக்கச் சத்தியற்றவர்களும் பலர் இருப்பார்களாதலினால் சென்னைச்சிவனடியார்திருக் கூட்டத்தினர் அடுத்த வருடமுதல் இதின் வருடச்சந்தாவை 1½ ரூபா வாக்கத் தீர்மானித்துள்ளார்கள். இப்பத்திரிகை சந்தாதாரர்கள் கொடுக்கும் சந்தாத் தொகையை மாத்திரம்கொண்டு நடத்தப்பெறாமல் திருக்கூட்டத்தார்கொடுக்கும் மாதசந்தாக்களைக் கொண்டும் ஏனையசைவாபிமான சிலர்கள் கொடுக்கும் நன்கொடைகளைக் கொண்டும் நடத்தப் பெறுவதனால் பொருளுதவி செய்து இப்பத்திரிகையை நடத்துவிக்க விரும்பும் சைவ சமயாபிமான சிலர்கள், சந்தாத் தொகையோடு தங்களுக்குக் கொடுக்க விருப்பமுள்ள தொகையையும் சேர்த்து மணியார்டர் மூலமாய் அனுப்பப் பிரார்த்திக்கின்றோம்.

இது வரையில் ஒவ்வொருவருடத்திலும் முதல்மாதப் பத்திரிகை சாதாரணமாக வி-பி-யில் அனுப்பப்பட்டது, இப்போது ரிஜிஸ்டர் செய்தே அனுப்பப்படல்வேண்டும். இதனால் அதிக பிரயாசையோடு அதிகசெலவும் நேரிடுவதனால் சந்தாதாரர்கள் தாங்களே தயைசெய்து 1921 வருடத்துச் சந்தாவை மணியார்டர் மூலமாகஅனுப்பப் பிரார்த்திக்கின்றோம்.

## இடையூறுகள்.

இவ்வருடாரம்பத்தில் ஒரு கனவான் நாம் வைத்திருந்த வைதிக சைவ அச்சுக்கூடத்தை ஆதரிக்கவேண்டி இவ்வச்சுக் கூடத்தில் பன்னிருதிருமுறைகளையும் தாம் அச்சிடப் போவதாகச் செப்பினர். அதனால் அவர் விரும்பியபடி புதிய அச்சுகள் முதலியன வாங்கியும் அதிக வேலையாட்களை வைத்தும் முதற்றிருமுறையில் முதல் இரண்டு பாரம் அச்சிடச்சித்தப்படுத்தினோம். பிறகு அவர் காகிதம் கிடைக்காமல் தாம் கொண்ட முயற்சியைக் கைவிட்டனர். இச்சமயத்தில் உகிர்ச் சுற்றின் மேல் உலக்கை விழுந்தது போல் அச்சுக்கூடம் வைக்கப்பட்டிருந்த வீட்டுக்குடையவர் அவ்வீட்டைக் காலி செய்து கொடுக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தினார். அச்சுக்கூடத் தொழிலாளிகள் எங்கும் வேலை நிறுத்தம் செய்தார்கள். இதனால் சபைக்கு நட்டம் ஏற்படுவதாலாயிற்று.



பத்திரிகையையும் கிரமமாய் மாதமாதம் வெளியிட இயலாமற் போயிற்று. அச்சுக்கூடத்தில் சொந்தமாக நூல்கள் வெளியிடுவதற்கும் காகிதப்பஞ்சம் இடம் கொடுக்கவில்லை. வருமானம் உண்டாகுமாறு ஜாப் வேலை என்னும் சில்லறை வேலைகளைச் செய்வதற்கும் வேண்டிய யந்திரங்கள் இல்லை. இன்னும் 2000 ரூபா முதல் வைத்து வேலை செய்தால் நிச்சயம் நல்ல இலாபமும் அடையலாம். இவ்வளவு உதவிசெய்வாரும் இல்லை. ஆதலால் அச்சுக்கூடத்தை 3000 ரூபாவுக்கு மிகவும் வருத்தத்தோடு விற்றுவிட நேர்ந்தது.

இப்பத்திரிகையை அச்சிட்டுக் கொடுப்பதனால் அச்சுக்கூடக்காரர்களுக்கு அதிக இலாபம் கிடைக்கப் போவதில்லையாகையாலும் இதை அச்சிடுவதற்கு மாஜிஸ்ட்ரேட்முன் போய் வாக்குறுதி செய்ய வேண்டியிருத்தலாலும் இப்பத்திரிகையை நியாயமானகூலிக்குஅச்சிட ஒப்புக்கொள்வார் கிடைக்காமையாலும் இப்போது அச்சிட்டுத்தந்த அச்சுக்கூடம் புதிதாய் வைக்கப்பட்டதாகையாலும் இது வெளிவர மிகவும் தாமதமாயிற்று.

இவ்வாறு இவ்வருடமெல்லாம்இடையூறுகள் பலநேர்ந்தன, அவற்றை விரிக்கிற் பெருகும். இதனால் ஒரு பால் யாம் பத்திரிகையை மாதமாதம் வெளியிடமாட்டாமல் வருந்தியலையவும், மற்றொருபால் சந்தாதாரர்கள் இவைகளை யறியாமல் குறை கூறவும் நேர்ந்தது.

இனி விரைவில் அடுத்தடுத்து நவம்பர் டிஸம்பர் மீ பத்திரிகைகள் வெளிவருமென்று எதிர் பார்க்கிறோம்.

## சைவ சமய பரிபாலனமும் நாட்டுக் கோட்டையாரும்.

சைவம் என்னும் பத்திரிகையின் ஆசிரியர் தமது பத்திரிகையில் மலர் 6-இதழ் 8-பக்கம் 127-128-ல் நாட்டுக் கோட்டை வைசிய சைவப் பிரபுக்களுக்கு விஞ்ஞாபனம் என்று நாமம் இட்டு ஒரு விஷயம் எழுதியிருப்பதைக் கண்டு களித்தோம்.

நாற்பது வருஷத்தின் முன் முதலாகநாட்டுக்கோட்டையார் வேத பாடசாலை, அன்னசத்திரம், குருபூசை மடம், ஆலயஜீரணோத்தாரணம் பசு மடம் பள்ளிக்கூடம் முதலான பலவகைத் தருமங்களைச் செய்து

பரிபாலித்து வருகிறார்கள். சைவசமயத்துக்கு அஸ்திவாரமாய் இருக்கின்றன இவர்கள் செய்யும் தருமங்கள். சிவபூசை விபூதிதாரணம் உருத்திராக்ஷ தாரணம் சிவநாம உச்சாரணம் குருப்பிரசாதம் என்னும் ஐந்தும் சிவபஞ்சசின்னங்களாம். இவ்வைந்து சின்னங்களும் நாட்டுக்கோட்டையாரிடத்தே காணப்படுகின்றன. ஏழைகளை யாதரிப்பதும் வித்வான்களைக்காப்பதும் இவர்களது சொந்தக் குணம். சிலர் புகழ் கருதி, வெறுவிய டாம்பிகதர்மங்கள் புரிகின்றனர். அவை மேன்மக்களாற் பாராட்டப்படா. சைவ உலகம் மகிழ்வது சைவசமய அபிவிர்த்திக்கேற்ற சிவபுண்ணியங்களைச் செய்வதனாலேயேயாம். சைவப்பத்திராதிபர் சொல்வது போல நாட்டுக்கோட்டையார் எல்லாரும் ஒன்று கூடிச் சங்கமூலமாய் நடத்தும் தருமம், சைவ சமய போதனை செய்தல் என்னும் இரண்டும் நாட்டுக் கோட்டையாரால் செய்யப்படுமாயின், அது சைவ சமய வளர்ச்சிக்குப் பெரிதும் உபகாரமாகும்.

கோவில் கட்டுவதும் குருபூசை மடம் ஏற்படுத்துவதும் விப்பிரர்க்கு விவாகத்துக்கும் வீட்டுக்கும் சாந்திக்கும் பொருள்கொடுப்பதும் பெரும் புண்ணியம் என்று நினைப்பது போல, சைவாகமங்களையும் சைவ சித்தாந்த நூல்களையும் சைவசமய நன்மக்களுக்குப் போதிப்பதும் பத்திரிகைகளை உலகத்தில் வெளிப்படுத்துவதும் உத்தம சிவ புண்ணியமென்று ஒவ்வொரு வைசிய மாந்தரும் நினைக்க வில்லை. அது சைவ உலகஞ்செய்த தவக்குறைவேயாம்.

சமயப்படிப்புக்கு ஒருலக்ஷம் செலவு செய்தால் எவ்வளவோ மேல் நிலைக்கு வந்து விடும். சமய போதனைக்கு ஒரு கோபுரம் கட்டும் பணத்தை உபயோகித்தால், எவ்வளவோ கோபுரங்கள் உலகிற் கட்டப்படும். சிவன் புகழ் ஞாலமிசைப் பரவச் செய்வது போலும் புண்ணியம் மற்றொன்றில்லை. குலச்சிறை நாயனாரும் மங்கையர்க்கரசியாரும் விண்ணப்பஞ் செய்ய, அதற்கிசைந்து திருஞான சம்பந்தப் பிள்ளையார் சமணமதக் களை வேருடன் களைந்து சைவப்பயிர்வளர்த்த பெருந்தகைமை யறியாதாரியாவர்.

நகரத்தாரும் இத்தகையகாரியங்களிற் பிரவர்த்திக்கும்படி சிவபரம்பொருளைச் சிந்தித்து வந்திக்கின்றோம்,

வித்வான்—சி. நாகலிங்கப்பிள்ளை

31 MAR 1921 MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 6 | இரௌத்திரி ஸ்ரீ கார்த்திகை மீ 1920 ஸ்ரீ நவம்பர் மீ | இதழ் 11

## திருநந்தி தேவர் துதி.

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

(இ - ள்.) சிவபெருமானுக்குப் பரத்துவங்கூறிப் பத்துப் புராணங்கள் சொல்லியும், செவ்விய பல வேதங்களை யுணர்ந்திருந்தும், மாயையினால் மயங்கி, பொய் வார்த்தைகூறிய வியாசமுனிவன் நீட்டிய கையை நீட்டியவாறே இருக்கச்செய்த திருநந்தி தேவரது திருவடிகளை வணங்குவோம் (எ - று.)

வியாதமுனிவன் கையும் நாவும் எழாது நின்ற சரித்திரத்தை இப்பத்திரிகையின் 38-வது பக்கத்திற் காண்க.

---

## சிவஞான போதம்.

பத்தாஞ் சூத்திரம்—இரண்டாம் அதிகரணம்.

(132-வது பக்கத் தொடர்ச்சி.)

உதாரண வெண்பா.

சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்—சார்ந்தடியார்
தாந்தானாய்ச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்த
லாய்ந்தார்முன் செய்வினையு மாங்கு.

(இ - ள்.) சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்=தம்பால் அடைக்கலமெனச் சார்ந்தாரைக் காப்பது உத்தமர் கடமையாகலான்—தானும் சார்ந்தாரைக் காத்தும்=முதல்வன் தன்னைச் சார்ந்தவரையே பாதுகாப்போனாகியும்—சலம் இலன் ஆய்=அதுபற்றிக் கோட்டமுடைய னல்லனாய்—சார்ந்து அடியார் தான் தானாய்ச்செய்து=தன்னைச் சார்ந்து தன் அடிப்பணியில் நிற்க வல்ல அடியார் தானேயாய் நிற்குமாறு நிறுவி—பிறர்தம்மை வினைகொடுத்தல்=அவர்க்கு வரும் ஆகாமிய வினையைக் கெடுத்து, அது செய்யமாட்டாத பிறர்க்கு வரும் ஆகாமிய வினையை அவர்க்குக் கொடுப்பான். அப்படிக் கொடுத்தலினால்—ஆய்ந்து ஆர் முன் செய்வினையும் ஆங்கு=அவ்விரு திறத்தோர்க்கும் உணவாகி நுணுகி வந்து பொருந்தும் பிராரத்த வினையும் அவ்வாறே செய்வோர் செய்திக்குத் தக்கபயனாய் இருவேறுவகைப் படச் செய்வன் (எ - று.)

சாராதாரை யொழித்துச் சார்ந்தவரையே காப்பது நடுவு நிலையாகிய தலைமைக் குணமாவதன்றி இழிகுண மன்றென்பார் தலைவர் கடன் என்றார்—"தன்னையடைந்தார் வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தங் கடனாவது தான்", "சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால் நலமிலன்" என்னும் தேவாரத்தானும் இதனையறிக—உம்மை சிறப்பின்கண் வந்தது. சார்ந்த என்னும் பெயரெச்சம் சார்ந்து என ஈறு திரிந்தது. தான்=முதல்வன். ஆதல்=ஆதலால். கொடுத்தல்=கொடுத்தலால். ஆய்ந்து=நுணுகி. ஆர்வினை=ஆரும்வினை=கூடுவதாய வினை. பிராரத்தவினை சூக்கும வினையாகலின் அது கூடும் முறைமையறிதல் அரிதென்பார் "ஆய்ந்தார் முன் செய்வினையும்" என்றார்.

இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபான்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
மாயையுட னில்லாது மற்றவன்றான் மெய்ப்பொருளே
யாயவத னாலுணரு மச்சு.

(இ - ள்.) இங்குளி=பெருங்காயத்தின் வாசத்தை—வாங்கும்=பெறுகின்ற—கலம்போல=பாத்திரத்தைப்போல்—(அதாவது தன்பால் வைத்து எடுக்கப்பட்டொழிந்த பெருங்காயத்தினின்றும் அதன் வாசத்தை வாங்கிக்கொள்ளும் பாத்திரத்தில் அவ்வாசம் மங்கிப்போய் மெலிதாய் கந்திக்குமாறு போல)—ஞானிபால் முன்செய் வினைமாயை மூண்டிடினும்=(நான் அவனென்



றெண்ணிச் சிவோகம்பாவனை செய்தறியும்) ஞானிக்கு (நாடும் உளம் உண்டாதற் கூடுமாகையால் அதுபற்றி) அவனிடத்துப் பிராரத்த வினையும், அதற்கிடனாகிய உடம்பு முதலிய மாயையும் வாசனை மாத்திரையாய் மெலிதாய் வந்து தாக்குமாயினும்—பின் செய்வினைமாயையுடன் நில்லாது=அவ்வழி ஏறுவதாகிய ஆகாமிய வினை (மேலைக்கு வித்தாய் நிலை பெற்று முறுகுதலின்றித் தனக்குப் பற்றுக் கோடாகிய) மாயேயத்தினோடுங் கெட்டொழியும்—அவன் தான் மெய்ப்பொருளே ஆய அதனால் மற்று அச்சு உணரும்=அந்த ஞானி (பின்னர்ப் பசுத்துணர்வு மிறந்து ஏகனாகி இறைபணிநின்று) சத்தாயுள்ள சிவமேயாகிய வதனால் (ஒரோவழி அவ்வாதனைப்பற்றிப் பிறழினும் பிறழவொட்டாத) அவ்வச்சினையே (அதாவது அச்சாணிபோன்ற அச்சிவத்தையே) உணர்ந்து நிற்பன். (ஆதலினால் ஒளி இருளைத் தாக்குமாறு போல அவ்வுணர்வு அவ்வாகாமியத்தைத் தாக்கும்) (எ - று.)

இங்கு=பெருங்காயம்—உளி ஐந்தாம் வேற்றுமை யுருபு. இங்குளி=பெருங்காயத்தின். வாசனை யென்பது வருவிக்கப் பட்டது.

சக்கரத்தைப் பிறழவொட்டாது நிலைத்திருக்கும்படி செய்யும் அச்சுப்போல் வினைவயத்தால் ஞானியைப்பிறழ வொட்டாது நிலைத்திருக்கச் செய்வது மெய்ப்பொருளாதலால் அம்மெய்ப் பொருளை அச்சாக உருவகஞ் செய்தார்.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினு—மெண்ணி
யரனடி யோர்பவ ரைம்புலனிற் சென்று
மவர்திற னீங்கா ரதற்கு.

(இ - ள்.) நண் அனல் வேவாத நற்றவர் தம்மினும்=அனல் நடுவில் (இருந்தும்) வேவாத நல்ல தவத்தினையுடையார் போலவும் (அதாவது, அங்கித்தம்பன சித்தியையுடையவர் அக்கினியின் நடுவில் இருப்பினும் தம் திறத்தின் நீங்காதவாறு போலவும்)—பண் அமர மா செலுத்தும் பாகரினும்=பண்ணப்படும் கதிகள் பொருந்தக் குதிரையைச் செலுத்தும் பாகரைப் போலவும் (அதாவது, குதிரையை அதின் கதிகளுக்கிசைய வேகமாய்ச் செலுத்துதற்குரிய பாகுநூல் கற்றுவல்லார் அக்குதிரையின் வேகத் துட்படினும் தம்திறத்தின் நீங்காதவாறு போலவும்)—எண்ணி=(ஐம்புலன்

கள் தமக்கு வியாப்பியமாய் அடங்கத் தாம் அவற்றை வியாபித்து மேற்பட்டு நிற்கும் முறைமை) ஆராய்ந்து—அரன் அடி ஓர்பவர் = முதல்வன் திருவடியாகிய அச்சினை (இறைபணியினின்று) உணர வல்லோர்—ஐம்புலனில் சென்றும் அதற்கு அவர் திறல் நீங்கார் = அவ்வைம்புலனிற் சென்றும் அதனானே தம் திறல் நீங்குதல் இலர். (எ - று.)

நள் அனல் என்பது நண்ணனல் என மருவியது. நீர் கீழ் என்பது கீழ்நீர் என மாறியது போல், அனல் நண் என்பது நண் அனல் என மாறியது. நள் = நடு. பண் = பண்ணப்படும் கதிகள். அதற்கு = அதனால்.

> சதசத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணி
> னிதமித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்
> கெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தி
> னருகணையார் சத்தணைவா ராங்கு.

அன்வயம்—சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற்காணின், பாசத்தில் இதமித்தலின்றிச் சத்தணைவார் கதமிக்கெரிகதிரின்முன் இருள்போல் ஆங்கு ஏலா அசத்தின் அருகணையார்.

(இ - ள்.) சத சத்து ஆம் மெய்கண்டான் சத்து அருளின் காணின் = சத்தோடு கூடிய விடத்துச் சத்தாயும் அசத்தோடு கூடிய விடத்து அசத்தாயும், இவ்வாறு சதசத்தாம் இயல்புடைய தன் உண்மை புணர்ந்தோன் சத்தாகிய முதல்வன் திருவருளினாலல்லது ஒன்றையுங் காணானாயின் (அதாவது எதையும் அவ்வருள் வழிநின்று காண்பானாயின்)—பாசத்தில் இதமித்தல் இன்றி = அவ்வழிப்பாசமாகிய அசத்தின் இதஞ் செய்தலின்மையால்—சத்து அணைவார் = சத்தாகிய அம்முதல்வனைத் தலைப்படுவோர்—கதம் மிக்கு எரிகதிரின் முன் இருள்போல் = சீற்றமிக்கு எரியாநின்ற ஒளியின்முன் இருள்போல—ஆங்கு ஏலா அசத்தின் அருகணையார் = அச்சத்தினெதிர் தனது சத்தியை ஏற்கமாட்டாத அசத்தாகிய பாசத்தினிடம் எய்துவாரல்லர் (எ - று.)

மெய்கண்டான் காணின், சத்தணைவார் அணையார் என முடிதலால் ஒருமை பன்மை மயக்க மன்மை தெளிக. இதமித்தல் = இதஞ் செய்தல் = பற்றுச்செய்தல். இன்றி = இன்மையான். அருளின் = அருளினால். எரிக்குக் கோபம் உண்டென்பது ஒப்புமைபற்றி. இதனைச் "சினம் என்னுஞ் சேர்ந்தாரைக்



கொல்லி" என்னுந் திருக்குறளானும், "எரிதுள்ளினாலென வெகுண்டான்" என்னும் பெரியபுராணத்தாலும் அறிக.

இவ்வைந்து வெண்பாவானும் முறையே இறைபணியினிற்பார்க்குப் பிராரத்தவினை முதல்வன் சந்நிதியில் உடலூழாய் ஒழிவதாகலின் மேலைக்கு வினை ஏறுமாறில்லை யென்றும், அது செய்வோர் செய்திப்பயன் வினையுமாற்றாற் பெறப்படும் என்றும், செய்வோர் செய்திப் பயனன்றியும் விளைவது வாதனை மாத்திரையேயாகலான் அதுபற்றி வரும் வினை ஞானத்தான் அழிவெய்தும் என்றும், அந்த ஞானம் வாசனைபற்றிச் சலிக்குமாறில்லை என்றும் அது சலிக்காமைக்கேது இது என்றும் எடுத்துக்காட்டி, அஞ்ஞான கன்மம் பிரவேசியாமையை வலியுறுத்தியவாறு காண்க.

---

## அன்பு.

அன்பு எனப்படுவது பற்று இரக்கம் விசுவாசம் என்னும் இம்மூன்று காரணங்களினால் உயிர்களிடத்தில் தோன்றும் உள்ள நெகிழ்ச்சியாம்.

அன்பு பற்றுக் காரணமாகத் தோன்றும்போது பந்தம் அவா ஆசை மோகம் என்பன வாதியாய பெயர்களைப் பெறும். அப்போது அது செலுத்தப்படும் இடங்கள் சரீரமும் சரீரத்தோடு தொடர்புடைய மனைவி மக்கள் மாடு வீடு முதலியனவுமாம். அதனால் உண்டாகும் பலன் சிற்றின்பமும் பாவமும் பிறவித் துன்பமுமாம்.

அன்பு இரக்கம் காரணமாகத் தோன்றும்போது கருணை அருள் என்பன வாதியாய பெயர்களைப் பெறும். அப்போது அது செலுத்தப்படும் இடங்கள் ஓரறிவுயிர் முதல் எல்லாவுயிர்களும். அதனால் செய்யப்படுவன பலவகைப்பட்ட தருமங்கள். இவை பசுபுண்ணியம் என்னப்படும். பசுபுண்ணியம் பயன் குறித்துச் செய்யப்படுமாயின் சொர்க்காதி போகங்கள் உண்டாம். பயன் குறியாது வெறும் இரக்கம் மாத்திரம் காரணமாகச் செய்யப்படுமாயின் பதி புண்ணியத்திற்கு ஏதுவாம்.

அன்பு விசுவாசம்காரணமாகத் தோன்றும்போது பத்தி என்று சொல்லப்படும். அப்போது அது செலுத்தப்படும் இடங்கள் கடவுளும் கடவுளின் சகளவடிவங்களாகும் குரு லிங்க சங்கமங்களும். அதனால் செய்யப்படுவது பதி புண்ணியம். பதி புண்

ணியம் சரியை கிரியை யோகம் ஞானம் என நால்வகைப்பட்டு முறையே சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியம் என்னும் முத்தியைத்தரும்.

இவ்வாறு அன்பானது தான் செலுத்தப்படும் இடங்களுக் கேற்ப வெவ்வேறு பெயரும், தொழிலும் உடையதாய் அவ்வப் பொருள்களின் மயமாயிருந்து உயிர்களுக்குப் பந்தமும் வீடும் தருவதனால் அன்பேசிவம் என்னப்படும்.

### திருமந்திரம்.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருக் தாரே.

அன்பு செலுத்தப்படும் இடங்களின் வேறுபாடுகளும், அதனால் உண்டாம் பலன்களின் வேறுபாடுகளும் அறியாமலே, சிலர் பற்று மேலீட்டினால் மனைவிமக்கள் முதலிய சுற்றத்தாரிடத்தில் செலுத்தப்படும் அன்பும், இரக்கமேலீட்டினால் உயிர்களிடத்திற் செலுத்தப்படும் அன்பும், பத்திமேலீட்டினால் கடவுளிடத்திற் செலுத்தப்படும் அன்பும் ஒன்றேயாமெனவும், கடவுளிடத்திற் செலுத்தப்படும் அன்பைக்காட்டிலும் மனிதர்களிடத்திற் செலுத்தப்படும் அன்பே சாலச்சிறந்ததெனவுங் கூறுவர்.

இல்லறத்தான் தாய் தந்தை மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாரிடத்தில் அன்பு செலுத்துவதும் பாவமாமோவெனில், மனைத்தருமவழியில் நிறுத்தி இல்லறத்தை வழுவாது நடத்துவோன் உள்ளத்துறவியேயாவன். ஆதலால் அவனைப்பாவம் அணுகுதலில்லை, பற்று மேலீட்டினால் மனைவிமக்களிடத்தில் அன்பு செலுத்துவதே பாவத்திற் கேதுவாமென்க.

### திருக்குறள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

### தேவாரம்.

மனைவிதாய் தந்தைமக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல் சூழ்நாகை மன்னு காரோணத்தானை
நினையுமா வல்லீராகி லுய்யலா நெஞ்சினீரே.



அன்பு ஈண்டுக்கூறிய மூவிடத்தும் தலையன்பு, இடையன்பு, கடையன்பு என மும்மூன்று வகைப்படும்.

பற்றுக் காரணமாகவுடைய தலையன்பாளர் தம்மனைவிமக்கள் முதலியவர்களைத் தம்மினும் அதிகமாக நேசித்து அவர்கள் பொருட்டுத் தம் உயிரையும் இழப்பர். இவருள் இடையன்புடையார் தம்மைப்போலவே தமது மனைவிமக்கள் ஆதியவரை நேசிப்பர். கடையன்புடையார் அவர்களைத் தமக்கிரண்டாவதாக நேசிப்பர்.

இரக்கங் காரணமாகப் பெற்ற தலையன்புடையார் ஓரறிவுயிர் முதல் எல்லா உயிர்களையும் தம்மினும் அதிகமாக நேசித்து, அவற்றின் பொருட்டுத் தம் உயிரையும் கொடுப்பர். இவர்களுள் இடையன்புடையார் பிற உயிர்களைத் தம்முயிர்போல் நேசித்துத் தமக்குத் தீங்குபுரியும் உயிர்க்கும் தீங்கு புரியாதொழுகுவர். கடையன்புடையார் தமக்குத் தீங்குபுரிபவரும் உயிர்கள் ஒழிய மற்றெல்லா உயிர்களையும் நேசிப்பர்.

பத்தி காரணமாகப் பெற்ற அன்புடையாருள் தலையன்புடையார் இம்மை மறுமை முத்தி என்னும் பயன்களை எதிர்பாராமல் வெறும் அன்பு காரணமாகக் கடவுளிடத்தில் பத்தி செய்வர். இவர்களுள் இடையன்புடையார் முத்தியின்பம் ஒன்றையே நோக்கி அவரிடத்திற் பத்தி செய்வர். கடையன்புடையார் இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் நோக்கிப் பத்தி செய்வர்.

பாவம் அதிகரிக்குந்தோறும் மனைவிமக்கள் முதலிய பிரபஞ்சப்பொருள்களிடத்தில் அன்பு அதிகரித்து பிறவித்துன்பம் உண்டாம். பசுபுண்ணியம் அதிகரிக்குந்தோறும் எல்லாவுயிர்களிடத்திலும் அன்பு அதிகரித்துப் பதிபுண்ணியத்திற்கேதுவாம். பதிபுண்ணியம் வளருந்தோறும் பசுபதியாகிய இறைவனிடத்தில் அன்பு வளரும். பதிபுண்ணியத்துள்ளும் சரியையினிலும் கிரியையிலும், கிரியையினிலும் யோகத்திலும் அன்பு அதிகரித்துச் சென்று ஞானத்திற் பூரணமாம். அதனால் எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகவும் இலங்குமுயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயிலாகவும் விளங்கி முத்தியின்பம் உண்டாம். இவ்வுண்மைகளை யறியாதார் சிலர் தங்களை வேதாந்திகளாகவும் ஞானவான்களாகவும் எண்ணிக்கொண்டு, ஞானநூல்களை வாசித்தலினாலேயே ஞானமுண்டாமென்றும், சரியையாதியாய சைவநெறி பத்திமார்க்கமேயன்றி

ஞானமார்க்கமன்றெனவும், பத்திமார்க்கத்தினும் ஞானமார்க்கமே சிறந்ததெனவும் உளறுவர். ஒரு பொருளைப்பற்றிய ஞானம் உண்டானபிறகே அதனிடத்தில் அன்புண்டாவது அநுபவமாதலாலும், ஞானம் சித்தித்தபிறகே இறைவன் உயிர்களுக்கு இடைவிடாது செய்துவரும் அளவிடப்படாத உபகாரங்களை உயிர் அறிந்து அன்பு மீதூரப்பெறுதலினாலும், அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலாராதலாலும், பத்தி மார்க்கமே உண்மையான ஞானமார்க்கமென்பதறிக.

---

## அர்ச்சாதீபம்.

(136-வது பக்கத்தொடர்ச்சி.)

இதனை இன்னுங் கொஞ்சம் விசாரிப்பாம். ஒருவன் வீதியிலே நடந்துபோகிறபோது வழியில் ஒரு கோயிலைக் காண்பானாயின், உடனே அவனுக்கு அப்போதிருந்த ஞாபகம்போய்த் தெய்வத்தினது ஞாபகம் உண்டாகின்றது. அது உண்டானபோது தனது அகங்கார மமகாரங்களொழிய ஹேதுவாகின்றது. திருக்கோயில்களில்லாதபோது உலகில் தெய்வசிந்தை அறவே ஒழிந்துபோகத் தடையில்லை. ஒருவன் வேதமுதலிய கலைகளைக்கற்று ஈசுவரன் ஒருவனிருக்கிறானென்று அறிந்துகொள்ளுகிறான். அவன் அதுஸமயந்தப்பி வேறுவிவகாரங்களி னுழைந்து குடும்பகோஷத்தில் தந்மயமாகி அலைகிறபோது, மீண்டும் அவன் கற்றகலைகளே அவனைத் தெளிவித்து உபகரிக்கின்றன. கலைகள் எப்படி அவனைத்திருப்பித் தெய்வசிந்தையை உண்டுபண்ணுகிறதோ, அப்படியே திருக்கோயிலும் ஒருவனுக்கு அவனுடைய மறதியைப் போக்கித் தெய்வசிந்தையை உண்டுபண்ணுகின்றது. இவ்விரண்டில், கலைகள் கற்றவர்களுக்கு மாத்திரம் உபகாரம். திருக்கோயில் கற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உபகாரம். திருக்கோயிலுக்கு உண்டானபெருமை அதிலெழுந்தருளியிருக்குஞ் சிவலிங்கப்பெருமானைக் குறித்ததேயாகையால், அந்த விஷயத்தில் யாம் அதிகமாகச்சொல்லுவது அவசியமன்று. இவ்வளவு சுபங்களுக்கு ஹேதுவாய் விளங்குந் திருக்கோயில், அர்ச்சை முதலியவைகளை நம்மவர் தூஷிப்பது அவரது வினையேயன்றி வேறு ஒன்றுஞ் சொல்லக்கூடவில்லை.



இதுநிற்க, நம்மவர்கள் ஸ்காந்தாதிகளில், கல்-செம்பு விக்கிரகங்கள் உபாஸனாயோக்கியமற்றவையென்று நிஷேதித்திருப்பதாக மகிழ்ந்து கூறினார்கள். இது எமக்கும் உடன்பாடே. பரமாத்மாவினுடைய வியாபகத்தை அறிந்து எங்குமிருக்கின்ற அவர் இங்குமிருக்கின்றாரென்றுணர்ந்து விக்கிரகத்தைவழிபடாமல், அந்த விக்கிரகத்தையே பரமாத்மாவாகவெண்ணும்படிறரையே ஆண்டுப் பிரஸ்தாபித்தபடியாம். புராணங்களைச் சுத்த பொய்யென்று சாதிக்கத் துஜங்கட்டிக்கொண்டவர்கள் அந்தோ! மறந்து அவைகளையும் எடுத்தாண்டனர். தங்களுடைய அநுகூலமாகவன்றோ அதிககஷ்டப்பட்டு அவைகளில் பிரமாணந்தேடினார்கள்? பூர்வபட்சிகள் புராணத்தைத் தொடாதவர்களாகையால், அவர்களுக்கத்தை அநுசரித்தே இதுகாறும் யாம் புராணத்தை முக்கியப் பிரமாணமாகத் தொடவில்லை. இப்போது அவர் தொட்டாராகையால் யாமுந் தொடுகின்றோம். "ப்ரஹ்மாக்ஷதைர்திவ்யலிங்கம் * * * *" எனவும், "இந்த்ரநீலம்மயம்லிங்கம் * * * *" எனவும் போந்த ஸ்காந்தாதி மஹாபுராணங்களில் கல் - செம்பு - படிகம் - நீலம் - பொன் முதலிய இலிங்கங்களும், அவைகளைப் பூசித்த அதிகாரிகளும், அவர்களடைந்த பலனும் வியக்தம். இவைகளை யோசியாமல் நம்மவர்கள் புராணங்களிலும் அர்ச்சை நிஷேதிக்கப்பட்டது என்று சோபனம் பாடியது சுபசோபனமாகாதொழிந்தது.

இங்ஙனநிற்க, நம்மவர்கள் "புராணங்களிலும் அர்ச்சையைக் குறித்துத் தனித்துப் பிரஸ்தாபிக்குங்கால் அதை ஒருவாறு சிறப்பித்துச் சொல்லியபோதிலும் இதர உபாஸனாமார்க்கங்களுடன் அதை ஒப்பிடும்போது அர்ச்சையைக்காட்டிலும் இழிவான மார்க்கம் உலகில் இல்லையென்று நிந்திக்கப்பட்டிருப்பதாய் அனைவருக்குந் தெரியும்" என்று மங்களமும் பாடினார்கள். மேல் யாம் காட்டிய வசனங்கள் விஷ்ணு - பிரஹ்மா - இந்திரன் - சூரியன் - வருணன் - முனிவர்கள் - கிருஷ்ணர் - இராமர் - சேஷன் - வாசுகி முதலினோரை அர்ச்சையை அவலம்பித்தவர்களென்று தெரிவித்தன. இவர்களைக்காட்டிலும் உயர்ந்தவர்கள் வேறு யாவருளர்? இப்படிப்பட்டவர்கள் அநுஸரித்தமார்க்கம் இழிந்தமார்க்கமாவது எங்ஙனம்? இதரவுபாஸனாமார்க்கங்களில் அர்ச்சாமார்க்கம் ஹேயமாவதும் எங்ஙனம்? எழுத்தை ஒவ்வொன்றாகவும், அவைகளைக் கூட்டிப் பதமாகவும், பின்பு வாக்கியமாகவும், முடிவில் பாடலாக

வும் ஒருவன் படிக்குங்கால், எந்தலிபியிலும் எழுத்துக்களை அவன் அநுஸந்திப்பது விட்டொழியாது. பாடலைத் தட்டாமல்படிக்கிறவன் எழுத்தை ஒவ்வொன்றாகவுச்சரிக்கிறவனை இழிந்தவனென்று கூறுதல் கூடாது. ஸாதகஸாத்யர்களாக அவரை அறியவேண்டியது. இப்படியே அர்ச்சாவலம்பர்களிடத்திலும் அறியவேண்டியது. ஸாதகரும், ஸாத்யரும் எழுத்தை விடாது வர்த்திப்பது போலச் சரியைகிரியையோக ஞானங்களை அநுஸந்திப்பவரும் அர்ச்சையை விடாது வர்த்திப்பது அவசியம். யாவருக்கும் அர்ச்சாராதனங் கேட்கப்பட்டகாலத்தும், அவரவர்களுடைய பரிபாகபேதங்களே அவ்வர்ச்சைகளில் தாரதம்யமாக நிகழும். "விரும்புஞ் சரியை முதன் மெய்ஞ்ஞானநான்கு - மரும்புமலர் காய்கனிபோலன்றோ பராபரமே" என்னுஞ் சிவாநுபவச்செல்வர் திருவாக்காலும் அதுவிளங்கும். எங்ஙனமெனின், அரும்பைவிட்டால் மலரில்லை. மலரைவிட்டால் காயில்லை. காயைவிட்டால் கனியில்லை. ஒருபொருளே தன்மை வேறுபட்டு முதல்குன்றாது நின்றபடித் திருக்கோயிலை முதலாகவுடைய அர்ச்சாராதனந்தானே ஞானியீறாக முதல் கெடாமலும், தன்மை வேறுபட்டும் அநுபவ வேத்யமாகின்றது. அரும்பைக் கிள்ளியெறிந்துவிட்டு யான் பழம்பறித்து உண்பேன் என்று கூறும் விவேகியோ டொப்பவே அர்ச்சையை நிந்தித்து யாம் ஞானாநுபவத்திலிருக்கின்றோமென்பாரைக் கொள்ளவேண்டியது. இப்படி நம்மவர் தாவித்தாவியெட்டுமொவ்வொருவிஷயமும் அவலமாயினமையால், அவர் பாடியமங்களம் அகரத்தை முதலிற்கொண்டதாயிற்று. நம்மவர்கள் (வைத்தால்குடுமி, சிரைச்சால்மொட்டை) என்று ஓரிடத்தில் புராணத்தைக் கொஞ்சந்தழுவியும், ஓரிடத்தில் சுத்தபொய்யென்று கைகழுவியும் விவகரிக்கின்றார்கள். அதைச் சாதிக்கவேண்டிச் சிவபுராணங்களை வைஷ்ணவர்கள் தள்ளினார்களெனவும், விஷ்ணுபுராணங்களைச் சைவர்கள் தள்ளினார்களெனவும், இப்படியாவுந் தள்ளப்பட்டு அவைமுழுதும் பொய்யாகிறதெனவும் உபந்யஸிக்கின்றார்கள். இது கேவலம் பகுப்பின்மையேயன்றி வேறில்லை. விவிலியநூலை வைதிகர் மறுத்தும், வைதிகநூலை விவிலியர் மறுத்தும் விவகரிப்பது மாத்திரம் ஒருவர்நூலை யொருவர் தள்ளியதாகுமன்றிச் சைவவைஷ்ணவர்கள் ஒருவர் புராணங்களை மற்றொருவர் மறுப்பது தள்ளியதாகாது. வேதம் நாலு, புராணம் பதினெட்டு என்று சைவரும், வைஷ்ணவரும் ஒத்துக்கொண்ட விஷயம். வேதம்



நிற்க, புராணங்களுள் சிவபுராணங்கள் சைவருக்குச் சிறப்பும், ஏனையபுராணங்கள் பொதுவும், விஷ்ணுபுராணங்கள் வைஷ்ணவருக்குச் சிறப்பும், ஏனையபுராணங்கள் பொதுவும் ஆகும். இப்படி அறிவதொழிந்து ஒருவர்நூலை யொருவர் தள்ளினாரென்பதே தள்ளுண்டதாயிற்று. இதனால், சிவபுராணங்களைச் சைவர்கள் சிறப்பாகக்கொண்டும், விஷ்ணுபுராணங்களை வைஷ்ணவர்கள் சிறப்பாகக்கொண்டும், சிவபுராணங்களை வைஷ்ணவர்கள் பொதுவாகக் கொண்டும், விஷ்ணுபுராணங்களைச் சைவர்கள் பொதுவாகக்கொண்டும் விவகரிக்கின்றவுண்மை வெளிப்பட்டுப் புராணங்கள் யாவும் ஸத்தியமென்று சாதிக்கப்பட்டது.

இதுநிற்க, உபநிஷத்துக்களில் பட்சியாகவும், நதியாகவும், குதிரையாகவும் உருவகப்படுத்திப் பிரஹ்மத்தைக் கூறுகின்றபடியே அதைப்புருஷனாகவும் புருஷஸூக்தத்திற் கூறியிருக்கின்றதெனவும், பட்சிமுதலிய வடிவங்களெப்படி அதற்கு நைஜமன்றோ, அப்படியே புருஷவடிவம் நைஜமன்றெனவும், அதனால், அந்தப்பிரஹ்மத்தை ஆகாரமுள்ளதெனக்கொள்ளவும், அப்படியே விக்கிரகங்களிற் பாவிக்கவுங் கூடாதெனவும் நம்மனோர் பிரஸ்தாபிக்கின்றார்கள். ரூபமில்லாத பிரஹ்மத்தை ரூபகப்படுத்தி வேதம் விதந்தவாறென்னை? சுத்தவறிவாகிய பிரஹ்மத்தை மலினவறிவாகிய பசுபட்சிகளாகவும், ஜடமாகிய நதியாகவும் உருவகப்படுத்தியவாறென்னை? இவை குற்றமாகாதபோது யாம் விக்கிரகமாக அதை எண்ணுவது என் குற்றமாகும்? அவை கற்பனையாகையால் குற்றமில்லை, இது நிஜமாகையால் குற்றம் எனின், கற்பனையின் றன்மையைக் கொஞ்சம் யோசிப்போம். பிரஹ்மத்தை நேரேயுணர்த்தவும், நேரே உணரவுங் கூடாமைபற்றியே உணர்த்தவும், உணரவுங்கூடுமான பொருள்களாக உருவகப்படுத்தி வேதம் உபகரித்தது. அப்படியே (இன்னதன்மையதென்றறியக்கூடாத சிவம்) தன்னைத்தான் காட்டவும், தன்னைப்பிறர்காணவுங்கூடுமான அருண்மேனிசாத்தி உபகரித்தது. வேதம் எவ்வளவு உபகரிக்கக்கூடுமோ அவ்வளவு உபகாரம் அது செய்தது. சிவம் எவ்வளவு உபகரிக்கக்கூடுமோ அவ்வளவு உபகாரம் அது செய்தது. வேதம் தனது உபகாரத்தை விதந்தபடியே சிவன் செய்தவுபகாரத்தையும் "உமா ஸஹாயம்", "ஸ்திரேபிரம்கை" இத்யாதி வசனங்களால் விதந்து காட்டியது. உருவகப்படுத்திக் கூறியதற்கும், உண்மையாகக் கூறியதற்கும் ஒரு விரோதமுமுண்டாகாமையால், யாம் பரமனுக்கு உருவத்தை அங்கீகரித்ததும், அப்படி

யே விக்கிரகத்திற் பாவித்ததுங் குற்றமாகாதொழிந்தது. தேகத்தையே பிரஹ்மமெனவும், புத்தியையே பிரஹ்மமெனவும், குணத்தையே பிரஹ்மமெனவும், சிவனையே பிரஹ்மமெனவும் பிரஹ்மத்தை அறியமுடியாத மந்தாதிகாரிகளுக்கு வேதமானது சுட்டியும், பின்னர் முறையே ஒழித்தும் உபகரித்திருக்கின்றமையால், இந்தமுறைமையே பசு-பட்சி-நதி முதலியவைகளாகப் பிரஹ்மத்தைப் பிரஸ்தாபித்ததும் ஆகும். இவைகளைக்கூர்ந்து யோசிக்கிறபோது நம்மவர்தொடுத்த இந்தவுபந்நியாஸம் அவர்களுக்குப் பாதகமும் எமக்கு ஸாதகமுமாக முடிந்திருக்கின்றது. எங்ஙனமெனின், யாம் விக்கிரகத்துக்கு வேறாகவும், உடனாகவும் பிரஹ்மம் விளங்குகிறதெனவும், பிரஹ்மம் விக்கிரகமாகும், விக்கிரகம் பிரஹ்மமாகாது எனவும் ஸித்தாந்தம் பண்ணியிருக்கின்றோம். அதனால் விக்கிரகத்தைப் பிரஹ்மமாக யாம் வணங்காமல், பிரஹ்மத்தையே விக்கிரகமாக வணங்குகிறோம். இப்படியேயன்றோ நதியையும், பசுவையும், பட்சியையும் பிரஹ்மமென்று கூறாமல், பிரஹ்மத்தையே நதியாகவும், பசுவாகவும், பட்சியாகவும் வேதம் விதந்திருக்கின்றது? அதனால், வேதம் அவ்வாறு விதந்திருக்குங்கருத்து நதியையும், பசுவையும், பட்சியையும் பிரஹ்மமென்று கருதாமல் பிரஹ்மத்தையே நதியாகவும், பசுவாகவும், பட்சியாகவும் யாவருங் கருதியுய்யவேண்டுமென்பதாயிற்று. இப்படி யுணர்ந்தபின்னர் வேதத்தின் ஸம்மதப்படியே பிரஹ்மமாக எல்லாப்பொருளையும் வணங்குதல் தேற்றமாயினமையால் பிரஹ்மமாக விக்கிரகத்தையும் நம்மவர் வணங்குவது அவசியமாயிற்று. அப்படி வணங்காதபோது அவர்க்கு வேதபாஹ்யத்வம் ஸித்திப்பது ஸித்தம்! ஸித்தம்!!

இன்னும், விக்கிரகமானது சிவரூபமாக வமைக்கப்படுங்கால்

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தின் மறைந்தது மாமதயானை

என்னுந் திருமந்திரத்தை யோசித்தலும் எடுத்துக்கொண்ட பிரமேயத்தை நிறுத்தும். மரயானையினிடத்து யானைநாட்டத்தில் மரந்தோன்றாமையும், மரநாட்டத்தில் யானைதோன்றாமையும் ஸித்தமாவதுபோலப் பூதகாரியமாகிய விக்கிரகங்களினிடத்துச் சிவனது உருவநாட்டத்தில் கல்-செம்பு முதலிய பூதகாரியந் தோன்றாமையும், கல்-செம்பு நாட்டத்தில் சிவந்தோன்றாமையும் வியக்தம்.



மரநாட்டத்தைக் கழித்து யானையை நாடல்போலக் கல்-செம்பு நாட்டத்தைக் கழித்துச் சிவத்தை நாடுவர் மேலோர். இந்த நயங்களை யுணர்ந்தபேர் விக்கிரகநிந்தை யாண்டுஞ் செய்யார்! செய்யார்!!

---

## ஆலயங்களின் அமைவு.

(ஞானசித்திப் பிரசுரம்.)

எல்லா மதத்தவர்களும் ஆலயங்கள் அமைக்கும் வழக்கமுள்ளவர்களானாலும், சைவ சமயத்தவர் அமைக்கும் ஆலயங்களுக்கும் மற்றவர்கள் அமைக்கும் ஆலயங்களுக்கும் பேதமதிகம் உண்டு. மற்ற மதத்தவருடைய ஆலயங்கள் ஏதேனுமொரு குறிப்போடாவது கருத்தோடாவது அமைக்கப்படுவதில்லை. அவை இன்னவாறு தான் இருக்க வேண்டுமென்னும் நியதமுமில்லை. கடவுளுடைய வாசஸ்தானமாய் அவை விளங்குதற்கு ஏற்ற தத்துவக் குறிப்புகள் அவற்றில் அடங்கி யிருக்கமாட்டா. அவ்வாலய வழிபாட்டினாலே முத்தியுண்டாதற்கேற்ற சாதனமுறைகள் அவற்றில் அடங்கியிருக்கமாட்டா. சைவ வைணவ முதலிய வேதாகம வழிவந்த சமயங்கள்பற்றி அமைக்கப்படும் ஆலயங்கள் அப்படிப்பட்டனவல்ல. எல்லா அமைவும் ஒவ்வொரு குறிப்போடு கடவுளுக்கு வாசஸ்தானமாதற்குரிய அமைவோடும், வழிபட்ட உயிர்கள் முத்தியடைதற்குரிய சாதனங்களோடும் பொருந்தியிருக்கும். பொதுவாக நாம் பார்க்கும்போது கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி உற்சவாந்தம் உற்சவாதி பிராயச்சித்தாந்தமான எந்தக் கிரியைகளும் எந்த ஆலயங்களிலும் ஒரே தன்மையுள்ளனவாய் விளங்குதலும், ஒரே நியதமாகவே செய்யப்படுதலையும் பார்க்கிறோம். நீளம் அகலம் உயரம் பருமம் முதலிய அளவுகளிலாவது கட்டட அமைவுகளிலாவது யாதேனும் வித்தியாசமிருப்பின், அது பிழைபட்டு விடுமென்பதும், ஒரே கணக்காகவே இருக்க வேண்டுமென்பதும் எல்லார்க்குந் தெரிந்த காரியம். இவ்வளவு நுண்மையான கணக்குகளோடு இருத்தற்கு ஏதேனுமொரு சரியான காரணமில்லாதிருந்தால் இக்கணக்குகள் பயனற்றனவாகும். ஆதலால் ஆலயத்தின் சரியான குறிப்புப் பொருள் எதுவென்பது ஆலய வழிபாட்டைக் கருதும் ஒவ்வொருவராலும் கவனிக்கப்பட வேண்டும். அவற்றுள்ளே சைவாலயங்களின் குறிப்புப் பொரு

ளாகிய தத்துவார்த்தத்தை இங்கே சுருக்கமாகச் சொல்லு கிறோம்.

கடவுள் ஆன்மாக்கள் பொருட்டுக் கொண்ட வடிவங்களுள்ளே சதாசிவ வடிவம் என்பது ஒன்று. ஞானிகளது ஞான வழிபாட்டுக்கு இயைந்தது சிவத்தின் ஞானானந்த சொரூபம். யோகிகளது தியானத்துக்கு உரியதாயுள்ளது சிவத்தின் நிஷ்கள வடிவம். கிரியையாளரது வழிபாட்டிற்குரியதாயுள்ளது இச்சதாசிவ வடிவமாம். சதாசிவ மூர்த்தி சுத்தமாயா காரியமாகிய சாதாக்கிய தத்துவத்திலே பஞ்சப்பிரமஷடங்க மந்திர தனுவைத் தூல சரீரமாகக் கொண்டு எழுந்தருளி யிருப்பர். அத்தூல தனுவுக்கு மூலமாகிய சூக்குமதனு முப்பத்தாறு தத்துவங்களுக்கும் திரோதான சத்திக்கும் அப்பாற்பட்டு உன்மனை கலைக்கண்ணே சிற்சத்தி காரியமாய் விளங்குவது. அது சத்தி காரியமாய ஞான சொரூபமாய் விளங்குதலின் அதனை வேதாகமங்கள் சிற்கன மேனியென்று கூறும். அருள் வடிவென்பதும் அதுவே. அச்சூக்கும வடிவுக்கு உயிராய் விளங்குவது எதுவோ அதுவே சிவம். இதனால் ஞானானந்த வஸ்துவாகிய சிவம் உயிர்கள் பொருட்டு உருவங் கொள்ளும்போது வித்தியா தேகமெனப்படும் அச்சூக்கும வடிவை யடைந்து, பின்பு மந்திர வடிவைத் தூலவடிவமாகக்கொள்ளுமென்று உணரத்தக்கது.

சதாசிவ மூர்த்தி அண்டத்திலே சாதாக்கிய தத்துவத்தும், பிண்ட (சரீர)த்திலே இருதய கமலத்தும் விளங்குவர். "அண்ட பிண்டமவை சமம்" என்று நூல்கள் கூறும். வியாபகமாகிய ஆன்மா ஏகதேசியாய் வரும்பொழுதும் அவ்வியாபக நிலைக்குரிய தத்துவங்களனைத்தையும் (ஆலமரத்தின் உருவனைத்தும் அதன் விதையில் சூக்குமமாய் அடங்கியிருந்தவாறு) அடக்கி நிற்குமாகலின், அவ்வியல்பு கொண்டே இரண்டற்கும் சமத்துவம் கூறப்படும். அண்டத்தில் எவ்வெத்தத்துவங்கள் எங்கெங்குள்ளனவோ அவ்வாறே பிண்டத்திலும் அவ்வத்தத்துவங்கள் ஒவ்வோரிடத்து நிலை பெற்றிருக்கும்.

இங்ஙனம் அண்டபிண்டமவை சமத்துவமுறுதலால், அச்சதாசிவ மூர்த்திவைகும் ஆலயம் அண்டத்தில் சாதாக்கிய தத்துவத்தையும், பிண்டத்தில் இருதயத்தையும் ஒத்து நிலவும்.

யோகாவத்தையில் இருதயம் மூலாதார ஸ்தானமாய் விளங்கும். ஆதலால் கர்ப்பக்கிரகம் மூலாதாரத்தானமாய் எண்ணப்



படும். இருதயம் தத்துவ சொரூபமான ஒரு கமல வடிவாகப் பாவிக்கப்படும். அவ்விருதய கமலத்தை புணர்த்துவது கர்ப்பக்கிரகத்தின் மேல் விளங்கும் தூபி. அத்தூபியோடு சார்ந்த கர்ப்பக்கிரகத்தில் சதாசிவ மூர்த்தி விளங்குதல் இருதய கமலத்து விளங்குதலை யொக்கும்.

கர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் ஸ்தபன மண்டபம் தம்பமண்டபம் நிருத்த மண்டபம் ஆகிய ஆறும் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் விசுத்தி அநாகதம் ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதார ஸ்தானங்களாம். சோமாஸ்கந்தர் மகேசுரராவர். சந்திர சேகரர் உருத்திர மூர்த்தியாவர். துஜஸ்தம்பம் பதி. நந்தி பசு. பலிபீடம் பாசம். ஐந்து பிராகாரங்கள் அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயமென்றுவது, தூலம் சூக்குமம் குணம் கஞ்சுகம் காரணம் என்றுவது சொல்லப்படும் ஐந்து கோசங்கள் அல்லது சரீரங்களை உணர்த்தும். நிவர்த்தி பிரதிஷ்டை வித்தை சாந்தி சாந்தியதீதையென்னும் ஐந்து கலைகளாகவும், மகாமந்திரமாகிய பஞ்சாக்கரத்தின் ஐந்து எழுத்துகளாகவும், பிரணவத்தின் ஐந்து கலைகளாகவும் விளங்கும். எந்தெந்த மூர்த்திகள் எந்தெந்த ஆதாரத்தில் அல்லது எந்தெந்த தத்துவத்தில் விளங்குவரோ அந்த அமைவாக ஆலயத்தினும் அந்தந்த மூர்த்திகளையும் அந்தந்தப் பரிவார தேவர்களையும் காணலாம். அவ்வவ்வடிவாகவே அவரவர் ஆலயங்கள் விளங்கும். இதுவுமன்றி முறை பிறழ்ந்து பிரதிஷ்டை செய்தலும் ஆலயம் வகுத்தலும் அபசாரமாய் முடியும். சைவக் கிரியைகள் ஒவ்வொன்றிலும் மூர்த்திகள் அமைக்குமிடத்து இந்நியமம் பற்றியே அமைக்கப்படுமென்பதும் உணரற்பாற்று. பாகசாலை நாபிஸ்தானமாம். தீர்த்தம் சிவசத்தி சொரூபமாம். அஸ்திரதேவர் ஆரணி ஜெனனி ரோதயித்திரி வடிவான திரோதான சத்தியாம். இடபவாகனம் ஆன்ம சொரூபமாம். இவ்வாறு ஆலயத்திலுள்ள எல்லா அமைவுகளும் தத்துவ சொரூபமாகவும், அவ்வத் தத்துவங்களில் விளங்கும் கர்த்தாக்களின் வடிவமாகவும் சதாசிவ மூர்த்தி ஆன்மா பாசம் என்னும் பொருள்களின் சொரூபமாகவும் விளங்கும்.

முப்பத்தாறு தத்துவங்களும் ஐந்து கோசமாய் அல்லது சரீரமாயிருக்க இருதயகமலத்தில் ஆன்மாவையே இலிங்கமாகக் கொண்டு சதாசிவமூர்த்தி விளங்குந் தன்மையாகிய பிண்ட அமைவை விளக்குவது இவ்வாலயம். முப்பத்தாறு தத்துவங்

களும் நிவர்த்தியாதி பஞ்ச கலைகளில் அடங்க, அக்கலா நிலயத்தில் சாதாக்கிய தத்துவத்திலே சதாசிவமூர்த்தி விளங்கும் அமைவாய் உள்ளது ஆலயம். இவ்வாறு ஆலயத்திலே அண்டபிண்ட சமத்துவ நிலை புணரப்படும்.

இதனால் முதல்வன் உயிர்களுக்கு அநுக்கிரகிக்கும்படி எவ்வாறு எங்கு எழுந்தருளியிருப்பரோ அவ்வாறு அவ்வடிவாயுள்ளது ஆலயம் என்பதும் உணரற்பாற்று.

ஆலயத்தை யடைந்து தீர்த்த ஸ்நானஞ்செய்தோன் சத்திநிபாதமுடையனாகின்றான். நிவர்த்தி முதலிய ஐந்து கலாசொரூபமாயும், முப்பத்தாறு தத்துவ சொரூபமாய் ஐந்து கோசம் அல்லது ஐந்து சரீர அமைவாயும் விளங்கும் பிராகாரங்களைக் கடந்து பிரதக்ஷிணஞ் செய்துகொண்டு உள்ளே செல்லுதலினாலே அத்தத்துவமய சரீரத்தைவிட்டு நீங்குகிறான். துஜஸ்தம்பம் நந்தி பலிபீடங்களைத் தரிசிக்கும்போது பதிபசுபாசங்களை புணர்பவனாகிறான். பாசவடிவாகிய பலிபீடத்துக்கிப்பால் அட்டாங்கமாக நமஸ்கரிக்கும் பொழுது (தனது எண் குணங்களையும் விளங்கவொட்டாது தடுத்து யானெனதென்னுஞ் செருக்கினை யுண்டாக்கி நின்றது அப்பாசமாகிய ஆணவ மலமேயாதலால் பதியினதருளால் அப்பாச இயல்பு தோன்றவே) அப்பாச விளைவாகிய யானெனதென்னுஞ் செருக்கொழிந்து தற்போதம் நீங்கிப் பரவசமாதல் உண்டாகும். மண்டபங்களைக் கடந்து செல்லும்பொழுது ஆதாரங்களை விட்டு நீங்கிச் சிவசந்நிதியை யடைபவனாகிறான். அதிகாரநந்தியின் ஸ்தானத்தை யடையும்போது அதிகாரமுத்தனாகிறான். சதாசிவமூர்த்தியைத் தரிசித்த பொழுது பாசமனைத்தும் நீங்கிப் பசுவியல்பொழிந்து சிவதரிசனஞ் செய்து அபரமுத்தனாகின்றான். ஆலயத்தில் ஆசாரியராலே செய்யப்படும் பூசை உயிர்களுக்குச் செய்யும் தீக்ஷையாம். அங்கே அளிக்கப்படும் விபூதி திருவருளாம். இவ்வாறு தினந்தோறும் சென்று வழிபாடு செய்து வருவோன் முடிவிலே மும்மலபந்தம் நீங்கித் திருவருள் பெற்று முத்தனாவன். அதுபற்றியே ஆலய வழிபாடு முத்திக்குச் சாதனமென வைக்கப்பட்டது. ஆலய வழிபாட்டின் வரும் முத்தி அபரமுத்தியாம்.

---

## சைவப்பகைவர் சைவர்களே.

முற்காலத்தில் சைவசமயத்திற்குச் சமணர் முதலிய புறச்சமயத்தினர் பகைவராயிருந்தார்கள். அதனால் பிற்காலத்தில் சைவசமயம் தழைத்து நிலவப்பெற்றது. இக்காலத்தில் சைவ சமயத்திற்குச் சைவ சமயிகளே பகைவராயிருத்தலினால் சைவ சமயம் தலையெடுப்பது அரிதாயிருக்கிறது. இக்காலத்தில் தங்கள் தங்கள் இஷ்டப்படியே தங்கள் தங்கள் ஆன்மலாபத்தின் பொருட்டு மாத்திரமாகவோ புகழைக்கருதியோ பலவகைப்பட்ட தருமங்களைச் செய்பவர்கள் பலர் இருந்தாலும், சைவ சமயமானது என்றும் நிலைத்து நிலவுதற்பொருட்டுச் சமயபரிபாலனம் செய்வோரும் செய்விப்போரும் மிகவும் அரியரா யிருக்கின்றனர். சிற்சிலர் முன்வந்து சமயபரிபாலனம் செய்ய முயன்றிடினும், அதற்கு இயற்கையாகவே யுண்டாகும் இடையூறுகள் மலையத்தனையானால் இக்காலத்துச் சைவ சமயிகள் செய்யும் இடையூறுகள் கடலத்தனையாக விருக்கின்றன. இது கீழ்வரும் எம்முடைய சரித்திரச் சுருக்கத்தால் விளங்கும்.

யாம் சற்றேறக்குறைய முப்பது வருடங்களாக எம்மாலியன்றவரையில் சைவ சமய வளர்ச்சிநிமித்தம் பாடுபட்டு வருகின்றோம். யாம் இதுவரையில் செய்தனவற்றை நடுநிலைமையோடு நோக்குவார்க்கு இக்காலத்தில் சுயநலப் பரித்தியாகஞ்செய்துகொண்டு எம்போல் உழைப்பாரைக் காண்பது அரிதென்பது புலப்படாமற் போகாது. சென்னைச் சைவர்கள் சிலரேனும் எமக்குத் துணையாயிருந்து உழைப்பரேல் இதுவரையில் பல நன்மைகள் உண்டாயிருக்கும். இவர்கள் எமக்குத் துணை செய்யாவிடினும் வாளாவிருந்தாற் போதும். இவர்கள் வாளா விருத்தலையும் தவிர்த்து இடையூறு விளைப்பாராய் யாம் தொடங்கும் காரியம் எதுவும் தலையெடுக்கவொட்டாமற் செய்வாராயினர்கள். யாம் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தைத் தாபித்துச் சிவதல யாத்திரை செய்யத் தொடங்கிக் கண்டோர் மனங்காதலித் துருகுமாறு பல தெய்வீகமான யாத்திரைகள் செய்வோமாயினோம். இதைக்கண்டு சென்னைச் சைவர்கள் சந்தோஷிப்ப தொழிந்து பொறாமை மேற்கொண்டு இதைக்கலைத்துப் பல வேறுசபைகளைச் சேர்த்து வெவ்வேறுப் யாத்திரை செய்யத் தொடங்கினார்கள். முதல் முதல் பூவை அஷ்டாவதானம் கலியாணசுந்தர முதலியார்

மாணுக்கர்கள் சிலர் கலகம் விளைத்துப் பிரிந்து சிவதலயாத்திரைச் சங்கம் என்னும் ஒரு சபைவைத்துச் சிலமாதம் யாத்திரைசெய்து பின்னர் தம்முள் மாறுபட்டுக் கலைந்தொழிந்தார்கள். அதன்பின் சித்தாந்தப் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் கி. குப்புச்சாமி முதலியார் முதலிய சிலர் கலாம் விளைத்துப் பிளவுபடுத்திச் சிவஞானப் பிரகாச சபை எனப் பெயரியதோர் சபைவைத்துச் சிலநாள் யாத்திரை செய்து பின் கலைந்தொழிந்ததோடு, சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தைப் பலவாறாகத் தூஷித்துத் திருக்கூட்டம் சிந்திப்போகுமாறு சிந்தித்துச் "சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சிந்து" என்னும் ஒரு சிறு சுவடி அச்சிட்டு வெளியிட்டனர். அதற்குப்பின், தம் ஊர் பேர் தொழில் முதலியன வெல்லாம் சிவாகசிய மயமாய்க் காணப்படும் ஸ்ரீமான் கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார், B. A., தாம் திருக்கூட்டத்தினிடமிருந்து வாங்கிக்கொண்ட கடனைக் கொடுக்காமலே பிரிந்து தம்மினத்தவருக்கெனச் சைவ சமய பக்தஜன சபை என்னும் ஒருசபையைத் தாபித்துக்கொண்டு, சைவ சமயத்தினருள்ளும் சாதிப் பிரிவினையை யுண்டாக்கிச் சமயக்கட்டைக் குலைத்துவிட்டனர். அதற்குப் பின்னும் பலரால் பல இடையூறுகள் நேர்ந்தன. அவற்றை விரிக்கிற் பெருகும். அவற்றுள் இச்சபையின் அத்தியக்ஷர்களாயிருந்த அணைவை சண்முக முதலியார், காட்டூர் வேங்கடாசல முதலியார் ஆகிய இவ்விருவரால் உண்டான இடையூறுகளே அறக்கொடியன. இவர்கள் பெயர் மறந்து போகாதிருக்குமாறு இவர்கள் செய்தியைச் சுருக்கிக் கூறத்தொடங்குகின்றோம்.

யாம் உத்தியோக சம்பந்தமாய்க் கல்கட்டாவுக்குப்போய் அங்கே சில காலம் வசிக்கநேரிட்டது. அதனால் அணைவை சண்முக முதலியாரைத் திருக்கூட்டத்தார் எமக்குப் பதிலாகக் காரியதரிசியாக நியமித்தார்கள். சண்முக முதலியார் திருக்கூட்டத்தின் காரியதரிசியாயிருந்தபோது காட்டூர் வெங்கடாசல முதலியார் அவரைப் பகைத்துத் திருக்கூட்டத்தின் வசத்திலிருந்த ஒரு விநாயகராலயத்தையும், இவ்வாலயத்தைச் சேர்ந்த நிலத்தில் திருக்கூட்டத்தினரால் பெருஞ்செலவிட்டுக் கட்டப்பெற்ற சபாமண்டபத்தையும், ஆலயத்திற்குரிய பிற சொத்துக்களையும் துராக்கிரமமாகப் பராதீனப்படுத்திவிட்டனர். இதை யாம் அறிந்து சென்னைக்கு வந்து ஹைகோர்ட்டில் வியாச்சியம் நடத்தி, கோயிலைப் பொதுஜன சொத்தாகவும் சபாமண்டபத்தைக் கோயிற் சொத்தாகவும்



செய்வித்து, முன்னிருந்த நேசம் பாராட்டி அணைவை சண்முக முதலியாரை இக்கோயிலுக்கு ட்ரஸ்டியாக நியமிக்கச் செய்தோம். அணைவை சண்முக முதலியார் ட்ரஸ்டியானதும், சுயநலம் பாராட்டி, தம்முடைய அச்சுக்கூடத்தைத் திருக்கூட்டத்திற்கு அதிக விலைக்கு விற்க முயன்றனர். அதற்கு இணங்காமையால் இவரும் திருக்கூட்டத்திற்குப் பெரும்பகைவராய், திருக்கூட்டத்தினர் வைத்து நடத்திவரும் பாடசாலையை அழித்துவிட்டு யாத்திரை மாத்திரம் செய்தாற் போதுமென்று பெருங் கலகம் செய்து, தம் எண்ணம் பலிக்காமையால் பிரிந்து, ஷை காட்டூர் வேங்கடாசல முதலியாரோடு சேர்ந்துகொண்டு "சென்னைச் சிவனடியார் தல யாத்திரைச்சங்கம்" என்னும் ஒரு சபை வைத்துக் கொண்டனர். இவர் செய்த கலகத்திற்குப் பூவை அஷ்டாவதானம் கலியாணசுந்தர முதலியாரும் உடனிருந்து இவர் சபைக்குத் தலைவராயினர்.

முற்கூறிய ஹைகோர்ட்டு வியாச்சியத்தில் செய்த தீர்மானத்தின்படி, சபா மண்டபத்தின் ஒரு பாகமாத்திரம் திருக்கூட்டத்தின் வசத்திலிருக்கிறது. மற்றொருபாகத்தை (க்கோயில் ட்ரஸ்டியாக எம்முயற்சியாலும் பெரும்பிரயாசையாலும் பணச்செலவாலும் நியமிக்கப்பெற்ற) அணைவை சண்முக முதலியார் ஷை கோயில் வருமானத்தின் பொருட்டு யாருக்கேனும் வாடகைக்கு விடலாம். இதற்குத் திருக்கூட்டத்தார் அதிக வாடகை கொடுத்து இதில் தங்கள் வைதிகசைவ அச்சுக்கூடத்தை வைத்துக்கொள்ளவேண்டிப் பலகால் முயற்சி செய்தும், சண்முக முதலியார் அதற்கு இடங்கொடாமல், முன் தம்மை விரோதித்துச் சபாமண்டப முதலியவற்றைப் பராதீனப்படுத்திய காட்டூர் வேங்கடாசல முதலியாருக்குக் குறைந்த வாடகைக்குப் புத்தகக்கட்டடக் கடை வைத்துக்கொள்ள விட்டிருக்கிறார். இதை ஆட்சேபிக்கும் சைவாபிமானிகள் ஒருவரும் இல்லை. இதைப்பற்றிச் சைவ சித்தாந்த பேராதரத்துகரம் ஸ்ரீமான் கா. ஆலாசசுந்தரம் பிள்ளையவர்களிடமும் சொல்லிப்பார்த்தோம். இவரும் ஷை காட்டூர் வேங்கடாசல முதலியாருடைய நெருங்கிய சிநேகராகவும், அணைவை சண்முக முதலியார் சபையில் புராணப் பிரசங்கஞ் செய்பவராகவுமே இருந்து விட்டார். இச்சமயத்தில் வைதிகசைவ அச்சுக்கூடம் வைத்திருந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் தம் வீட்டைக் காலிசெய்து கொடுக்கும்படி நிர்ப்பந்தப் படுத்தினமையாலும், வேறு தகுந்த

இடம் கிடைக்காமையாலும் திருக்கூட்டத்தார் இவ்வச்சுக்கூடத்தை விற்றுவிட நேர்ந்தது.

## பத்திரிகையின் தாமதம்.

யாம் வைதிக சைவ அச்சுக்கூடத்தை விற்றபோது அச்சுக் கூடத்தொழிலாளிகள் எங்கும் வேலை நிறுத்தம் செய்தமையால் நம் சைவப்பத்திரிகையைக் குறித்த காலத்தில் அச்சிட்டுத்தருவார் கிடைக்கவில்லை. கடைசியாகப் புதிதாக வைக்கப்பட்ட ஒரு அச்சுக்கூடத்தில் 1920ஆம் செப்டம்பர்மீ, அக்டோபர்மீ பத்திரிகையை நான்கு பாரமாக அச்சிடக்கொடுத்தேன். இந்த அச்சுக் கூடக்காரர் விஜயதசமி யன்றே இப்பத்திரிகையை அச்சிட ஆரம்பிப்பதாக வாக்களித்துவிட்டுப் பிறகு நான்கு மாதங்களாகத்தினக் கெடுவிட்டு வந்தார்கள். இதற்கிடையில் இப்போது அச்சிடும் சாது அச்சுக்கூடம் என்னும் இடத்தில் அச்சிடவேண்டி மாஜிஸ்ட்ரேட் அவர்களிடம் மறுபடியும் உத்திரவு பெறவேண்டியிருந்தது. முன் ஒப்புக்கொண்ட அச்சுக்கூடக்காரர் 1921ஆம் ஜனவரிமீ 19உ வரையில் செப்டம்பர்மீ பத்திரிகையில் இரண்டுபாரமே அச்சிட்டுக் கொடுத்தமையால், அதைமட்டும் செப்டம்பர் அக்டோபர்மீ பத்திரிகையாக அவசரநிமித்தம் அனுப்பநேர்ந்தது. இவ்வாறு யாம் பல வழிகளிலும் வருந்தியலையும்போது, நம் சந்தாதாரர்கள் சிலர் இவைகளையறியாமல் யாம் தங்களிடம் ஒரு ரூபாவை வாங்கிக்கொண்டு மோசஞ்செய்துவிட்டதாக எண்ணிப் பலவாறாகக் குறைகூறத் தொடங்கிவிட்டார்கள். உதவிசெய்வாரில்லாவிட்டாலும் குறைகூறுவோருக்குக்குறைவில்லை. இதுவும் சிவன் செயலே.

## 1921ஆம் பத்திரிகை.

1921ஆம் ஜனவரி மாதப்பத்திரிகை 1921ஆம் பிப்ரவரிமீ முடிவில் அல்லது மார்ச்மீ ஆரம்பத்தில் வெளிவரும். அதற்குப் பின் பிப்ரவரி மார்ச் ஏப்ரல்மீ பத்திரிகைகளைத் தனித்தனியாக மார்ச் ஏப்ரல் மாதங்களில் அனுப்புமாறும் மேமீ முதல் அவ்வம் மாதப் பத்திரிகையை அவ்வம்மாதம் அனுப்புமாறும் வேண்டிய முயற்சிகள் செய்யப்படுகின்றன. இப்போது இப்பத்திரிகையானது முன் "தேசபக்தன்" பத்திராதிபரா யிருந்தவரும், இப்போது "நவசக்தி"யின் பத்திராதிபரா யிருப்பவருமான ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களுடைய "சாது" அச்சுக்கூடத்



தில் அச்சிடப்படுவதினால், இனி தாமதமின்றி உத்தேசப்படி பத்திரிகை வெளிவரக்கூடும்.

இப்போது நடைபெற்றுவரும் சைவப் பத்திரிகைகளுள் இப் பத்திரிகைக் கிணையாக நடைபெறும் சைவப் பத்திரிகை வேறில்லை யென்பது அறிஞர் பலரின் அபிப்பிராயம். இதன் ஆசிரியரை வித்வான்கள் பலர் புகழ்ந்து சாற்றிய பாமாலைகளுக்கும் அளவில்லை. இது பரவாத தமிழர்வசிக்கும் ஊரும் இல்லை. ஆயினும், இப்பத்திரிகையை ஆதரித்துச் சைவ பரிபாலனம் செய்விக்கும் சைவப் பிரபுவாவது மடாதிபதியாவது ஒருவரும் காணப்படவில்லை. இப்பத்திரிகை கிரமமாய் நடைபெறுவதற்கு வருடம் தோறும் 1500 ரூபா வேண்டும். 1000 சந்தாதாரர்கள் சேர்ந்து 1½ ரூபா வீதம் சந்தா கொடுத்தால் வேறொருவர் உதவியை எதிர்பாராமலே பத்திரிகையை நடத்தலாம். இப்போதிருப்பவர்கள் 700 பேர்களே. இவர்களுள் ஏறக்குறை 300 பேர் வழக்கப்படி 1921ஆம் ஜனவரிமீ பத்திரிகையைச் சந்தா கொடுத்துப்பெறாமல் திருப்பி நட்டம் விளைப்பார்கள். எஞ்சிய 400 சந்தாதாரர்கள் கொடுக்கும் சந்தாத் தொகையைக்கொண்டு பத்திரிகை நடைபெறுவது கூடாமையாகும். ஆதலால் சந்தாதாரர்கள் சைவசமய பரிபாலனத்தை புத்தேசித்தேனும் அப்பத்திரிகையைத் திருப்பாமல் பெற்றுக்கொள்வதோடு, ஒவ்வொருவரும் சிலரைச்சந்தாதாரர்களாகச் சேர்த்துப் பத்திரிகையை நடத்துவித்தல் கூடும்.

1920ஆம் அக்டோபர் நவம்பர் மாதங்களில் கோயம்பத்தூரிலிருக்கும ஸ்ரீமான் A. K. சுப்பராய முதலியாரவர்கள் 100 சந்தாதாரர்களைச் சேர்த்து உபகரித்தார்கள். இவர்களைப்போல் 100 புண்ணியவான்கள் முயற்சி செய்தால் 10,000 பத்திரிகைகள் செலவாகும். மாதமாதம் நான்கு அல்லது ஐந்து பாரத்திலும் பத்திரிகை வெளிவர ஏதுவாகும்.

---

## தேவார வைப்புத்தல விளக்கம்.

உலகத்திலே சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும்படி வாய்ந்த திருவருளே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் அளவில்லாதன வாயினும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய உண்மை நாயன்மார்கள் தோத்திரித்திருக்கின்ற தலங்களே உயர்வுடையனவாம்.—அப்படி இருக்க தேவாரமுதலிய

அருட்பாக்களில் வைப்பாக அமைக்கப்பட்டு வைப்புத்தலங்களென்று வழங்கி வருகிற ஸ்ரீகாசிமுதலிய மேம்பாடுள்ள சிலதலங்கள் தேவாரமாதிய திருவருட்பாப் பெற்றனவென்று சிலர் அறிந்து கொள்ளாமலே தனித்திருப்பதிகம் பெற்ற தலங்களே சிறப்புள்ளனவென்று வழங்கி வருகிறார்கள். எண்ணில் அதிகமான பதிகங்கள் பெற்றிருக்கின்ற தலங்களுக்கு எண்ணில் குறைந்தபதிகங்கள் பெற்றிருக்கின்ற தலங்களை எப்படி சமானமாக நினைக்கின்றேமோ அப்படியே வைப்புத்தலங்களையும் தனியே பதிகம்பாடப் பெற்றதலமாக எண்ணி வழிபடுதலே மிகமேன்மையாகும்.— தேவார முதலிய பன்னிரு திருமுறைகளில் ஓரிடத்திலேனும் அமைக்கப்பட்டிருக்குந் தலங்களெல்லாம் தேவாரப்பதிகமாதியன பெற்ற தலங்களென்று கருதுதலே சிறப்பு.

இன்னும் யோசிக்குமிடத்து வைப்புத்தலங்களுக்குத் தனியே தேவாரப்பதிகங்களிருந்து மறைந்தவற்றுட் சேர்ந்திருக்கலாமென்று யூகிக்கப்படுகிறது.

யாத்திரை வாசிகளுக்குதவியாகத் திருத்தலங்களை விளக்க வந்த 'சிவஸ்தலமஞ்சரி' முதலிய நூல்களில் வைப்புத்தலங்களையும் திருவாசகமாதிய பதிகம்பெற்றதலங்களையும் விளக்காமையால் அவற்றுட் சில தெரிந்தவரையில் ஒருவாறு குறிப்பிக்கப்படுகின்றன.

### 1 ஸ்ரீகாசியென்னும் வாரணாசி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிய க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

மாட்டூர் மடப்பாச்சிலாச்சிராமம் முண்டீச்சரம் வாதவூர், வாரணாசி [யும்
காட்டூர் கடம்பூர் படம்பக்கங் கொட்டுங் கடலொற்றியூர் மற்றுறையூரவை
சோட்டூர் திருவாமாத்தூர் கோழம்பமுங் கொடுங்கோவலூர் திருக்குண
[வாயில்.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் முத்தித்தலங்கள் ஏழனுள் ஒன்று.

உமாதேவியார் கைவிரலிற்றோன்றிய கங்காநதி, மணிகர்ணிகை முதலிய அநேக துறைகளோடு விளங்கப்பெற்றது. அங்கு இறப்பவர்களுக்கு அம்பிகை சமேதவிசுவநாதப் பெருமான் தாரகமந்திரத்தை உபதேசித்து முத்தி எய்துவிக்கின்றனர். இது கலைவாயர்க்கட்டுவின் ராவலோடு நிலவுவது. இத்தலம் பலருக்கும் வெளிப்படையாய்த் தெரிந்துவருதல்பற்றி முன்னை வைக்கப்பட்டதோடு ரெயில்வே ஸ்டேஷனும் குறிப்பிக்கப் படவில்லை.



சுவாமிபெயர்—விசுவநாதர். அம்பிகை-விசாலாக்ஷி, அன்னபூரணி. தீர்த்தம்-கங்காநதி.

### 2 திருவாதவூர்.

இத்தலம் சமயாசாரியருள் ஒருவராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவவதாரஞ் செய்தது. அசுவனி முதலிய தேவர்கள், வாயு, காத்தியாயனர் முதலியோர் பூசித்தது. இத்தலத்தின் பெயர் வந்த காரணத்தை, வேப்பத்தூர் திருவிளையாடற் புராணத்தாலறிக.

"ஆதியா தித்தன் சோமன் அசுவினி கடம்போரால்
வேதியர் தமைவர் தேத்தி விமலனை யுகங்கண் மூன்றும்
காதலில் வணங்கக் கண்டு கடையுகம் வாத ராஜன்
நீதியில் வணங்க வாத புரமென நிகழு மூதூர்."

சுவாமிபெயர்— வாதபுரீசுரர். அம்பிகை - உமாதேவியார். தீர்த்தம் - சிவகங்கை.—மதுரை ஸ்டேஷனிலிறங்கி அழகர்கோவில் மேலூர் இந்த வழியாகப்போக 27-மைல்.

### 3 திருக்கரபுரமென்னும் திருவிரிஞ்சிபுரம்.

திருநாவுக்கரசுநாயனார் அருளிய காப்புத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தெண்ணீர்ப் புனற்கெடில வீரட்டமும் சிக்காலி வல்லம் திருவேட்டியும்
உண்ணீரோ ரேடகமுமூறல் அம்பருறையூர் ஈறையூரணைநல்லூர்
விண்ணோர் விடையான் விளமர் வெண்ணி மீயச்சூர் வீழிமிழலைமிக்க
கண்ணார் நுதலார் கரபுரமுங் கபாலியுக நவர்தங் காப்புக்களே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் உமை, விஷ்ணு, பிரமன், கரன் முதலியோர் பூசித்தது. கரன் பூசித்தமையின் கரபுரமென்றும், பிரமனாகியவிரிஞ்சனால் பூசிக்கப்பெற்றமையின் விரிஞ்சிபுரமென்றும் பெயர் கூறுவர்.

அர்ச்சகராது குழந்தை தாயாதிகளால் பூசைப்பாத்தியம் ஏமாற்றநேரிட்டதைத் தாயார் வேண்டிக்கொண்டபடி அக்குழந்தைக்கு தீக்ஷானுக்கிரகஞ் செய்து பூசையைத் திருமுடி வளைத்து ஏற்றுக்கொண்டனர். பின்னு பொதிகொண்டு சென்ற தனபால செட்டிக்கு வழித்துணை சென்றதால், சுவாமிபெயர்—மார்க்கசகாயர். அம்பிகை - மரகதவல்லி. தீர்த்தம் - சத்திதீர்த்தம், பாலிநதி. கள்ளிக்கோட்டை மார்க்கம்போகும் சென்னை ரெயில்வே ஸ்டேஷன் விரிஞ்சிபுரம்.

### 4 உருத்திரகோடி.

திருநாவுக்கரசுநாயனார் அருளிய க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

உஞ்சேனை மாகாளம் மூறலோத்தூ நருத்திரகோடி மறைக்காட்டுள்ளு
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர் வீரட்ட மாதானங் கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடல் மீயச்சூர்வைகா வேதீச்சரம் விவீச்சரம் வெற்றியூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையுங் கைலாய நாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சிவபெருமானிடமுண்டாகிய கோடி உருத்திரர்கள் காசிபமுனிவருடைய குமாரர்களாகிய கோடி அசுரர்களோடு யுத்தஞ்செய்து கொன்று வென்றதினால் விளைந்தபாவ நீங்கச் சிவபெருமானை வழிபட்டு அநுக்கிரகம் பெற்றது. சுவாமிபெயர் - உருத்திரகோடீசுரர். அம்பிகை - உருத்திரகோடீஸ்வரி. உருத்திரகோடி தீர்த்தம்.

செங்கற்பட்டு ஸ்டேஷனிலிறங்கி திருக்கழுக்குன்றம் போக அதற்குச் சமீபம் ½-மைல்.

### 5 தஞ்சையென்பது தஞ்சாவூர்.

இத்தலம் தேவேந்திரன், அகத்தியர், சோழன் முதலிய அநேகபக்தர்களுக்கு நல்வரங் கொடுத்தருளியது. கருவூர்த்தேவர் திருவிசைப்பாவுமுண்டு. அன்றியும் செருத்துணைநாயனார் திருவவதாரமானது. சுவாமிபெயர் - பிரகதேஸ்வரர். அம்பிகை - உமாமகேஸ்வரி. கிருபாதீர்த்தம் 1. காவேரிநதி 2. சிவகங்கை 3. ரெயில்வேஸ்டேஷன் தஞ்சாவூர்.

### தக்களூர்.

திருநாவுக்கரசுநாயனார் அருளிய க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

இடைமரு தீங்கோ யிராமேச்சுர மின்னம்பரேரிட வையேமப்பேரூர்
சடைமுடி சாலைக்குடி தக்களூர் தலையாலங்காடு தலைச்சங்காடு [கொக்காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம்பூதூர் கோத்திட்டை கோட்டாறு கோட்
கடைமுடிகானூர் கடம்பந்துறை கைலாய நாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - திரிலோகநாதர். அம்பிகை - தர்மசம்வர்த்தனி. திருநள்ளாறு ரெயில்வே ஸ்டேஷனுக்கு 1-மைல்.

பு. வே. சுப்பராய முதலியார்.

(தொடரும்.)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

| மலர் 6 | இரௌத்திரிஸு மார்கழிமீ 1920ஸு டிசம்பர்மீ | இதழ் 12 |
| --- | --- | --- |

## சிவனடியார்கள் துதி.

(காசிகண்டம்)

அறந்தவா தொழுகும் வைதிக சைவ
  நெறியினி லகனில மருங்கிற்
பிறந்துளோர் பிறவா நின்றுளோர்
  பிறப்போர் பெய்கழற் றாமரைப்போதின்
மறந்திடா தன்பு பூண்டுளோர்
  யாவ ராயினு முவக்குமற் றவர்தஞ்
சிறந்தபூங் கமல மருட்டிவீ டளிக்குஞ்
  சேவடி சென்னியிற் சேர்ப்பாம்.

(இ - ள்.) இடமகன்ற நிலவுலகத்தில் நீதிதவறாமல் நடக்கும் வைதிக சைவ மார்க்கத்தில் முன்னமே பிறந்துள்ளவர்களும், இப்போது பிறக்கின்றவர்களும், இனிப் பிறப்பவர்களும் ஆகிய இவர்களது வீரக்கழலணிந்த பாதமாகிய தாமரைமலர்களில் எக்காலத்தும் நீங்காத பேரன்பு உடையவர்கள் குலம் நடக்கை முதலியவற்றால் எத்தன்மையராயினும், அவர்களது சிறப்புத்தங்கிய அழகிய தாமரை மலர்களை மருட்டிப், பேரின்ப வீடாகிய மோட்சத்தைக்கொடுக்கும் சிவந்த திருவடிகளைச் சிரசின்மேற் சேர்த்துக் கொள்ளுவாம் (எ - று.)

---

## சிவோபாசனையின் கருத்து.

(ஞானசித்திப் பிரகரம்.)

வேத சிவாகமங்கள் சிவனை உபாசிக்குமாறு விதிக்கின்றன. சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கும் சிவோபாசனையேயாம்.

சிவம் ஞானனந்தவஸ்துவாகலின் ஆன்மா அதனை வழிபடுதலால் அச்சிவப் பொருளுக்கு வரக்கடவதோர் பிரயோசனம் இருக்கமாட்டாது. சிவம் அருட்பிழம்பாகலின் வணங்கியவர்க்கு அருள்புரிதலும் அல்லாதார்க்கு நிக்கிரகஞ் செய்தலும் ஒவ்வாது. ஆதலால் அவ்வணக்கம் ஆன்மப் பிரயோசனங் கருதியதாகவும், அவ்வணக்கமின்மை ஆன்ம சுகத்துக்குக்கேடுள்ளதாகவும் இருக்கவேண்டும.

ஆன்மா பளிங்குபோன்று எதையெதைச் சார்ந்ததோ அதனதன் குணத்தைத் தன்குணமாகக் கொள்ளும் இயல்பிற்று. அதனால் அனாதியே தன்னோடு இயைந்துள்ள மலமாயாகன்மங்களின் தன்மைகளைத் தன்றன்மையாகக்கொண்டு இடர்ப்படுகின்றது. ஆணவ மலக்குணத்தைத் தன் குணமாகக் கொண்டதனால் யான் எனது என்னுஞ் செருக்கும், மாயையின் குணத்தைத் தன் குணமாகக் கொண்டதனால் சுகதுக்கமோகங்களும், கன்மத்தின் குணத்தைத்தன் குணமாகக் கொண்டதனால் எண்ணரிய பிறவிகளும் உண்டாயின. ஆன்மா ஞானசொரூபியாயிருந்தும் தன்னதல்லாத பிறகுணங்களைத் தன்னதாகக்கொள்ளுதற்கு ஏதுவாயிருந்தது சார்ந்த தன் வண்ணமாம் இயல்புடைமையே யாம். அதனால் அவ்வுபாதியினின்றும் நீங்கவேண்டின் மலமாயா கன்மங்களின் சேர்க்கையை விடவேண்டும். அப்படி விடுமிடத்து அவற்றிற்குந் தனக்குமுள்ள சம்பந்தத்தை முன்னர் அறியவேண்டும்.

ஆன்மாவும் மலமும் உள்பொருள்களாகலின் அவ்விரண்டற்கும் ஒன்றுபடும் சம்பந்தம் இருத்தல் கூடாது. இருக்குமெனின், ஒரு காலத்தும் நீங்கவுமாட்டாது. அதனால் அவ்விருபொருளுந் தம்முள்ளே கலந்திருக்குமென்றல் அமையாது.

பளிங்கும் அதனை யடுத்த செவ்வரத்தை முதலிய பொருள்களும் தம்முள்ளே கலந்திருப்பன வல்ல. ஆயினும் அம்மலர் முதலியவற்றின் நிறங்கள் பளிங்கினிடத்து விளங்கக் காண்கின்றோம். அக்காட்சியை உற்று நோக்குமிடத்துப் பளிங்கினும் அந்நிறம் காணப்படமாட்டாது. பளிங்கின் நிறமே மலர் முதலியவற்றின் நிறத்தைக் கவர்ந்து செம்மை கருமை பொன்மை முதலிய வண்ணங்கள் தோன்ற நிற்கும்.

அதுபோல் ஆன்மாவில் அப்பந்தம் இருப்பதில்லை. ஆன்மசிற்சத்தியிலே மலத்தின் குணம் காணப்படும். அதனால் அவ்விருபொருட்குமன்றி, அவற்றின் குணங்களுக்கே சம்பந்தமிருப்பதாக



அறியவேண்டும். அச்சம்பந்தமும் உண்மையன்று. உண்மையாயின் ஒருகாலத்தும் நீங்கமாட்டாது. பளிங்கு செம்மை முதலிய நிறமுடையதாகக் காணப்படும் போது அந்நிறம் உள்ளவாறே பளிங்கின் நிறத்திலிருக்கவில்லை. இல்லாத குணமே உள்ளதுபோல் காணப்படுகின்றது. இல்லாத ஒன்று தன்னிடத்து உள்ளதாகக் காணப்படின் அதனை உபாதியென்பர். அவ்வாறே ஆன்மாவினில்லாத மலகுணம் ஆன்மாவுக்கு உண்மையன்று, உபாதியாம். ஒரு காரணம் பற்றிக்காணப்படும் உபாதிக்குணம் மற்றொரு காரணத்தால் நீங்கிவிடும். அது எதுபோலுமெனில், உச்சிப்பொழுதில் ஆதித்த வொளியில் அடங்கிநிற்கும் பளிங்குக் கல்லில் வேறு நிறங்கள் காணப்படாமைபோலுமென்க.

இங்ஙனம் ஆன்மாவின் பந்த நிலை உபாதிபற்றியதாயிருத்தல் கண்டு அவ்வுபாதியினின்று நீங்குதல் ஏதுவாகவே சிவோபாசனை விதிக்கப்பட்டது.

ஆதித்த வொளி எப்படியோ அப்படியே சிவசத்தி பிரகாசமாயிருக்கும். ஆதித்த வொளியில் அடங்கிய பளிங்கு வேறு நிறத்தை வாங்காமை எப்படியோ அப்படியே சிவசத்தியின் அடங்கிய உயிர் மல குணத்தைத் தன் குணமாகக் கொள்ளமாட்டாது. அப்பொழுது அவித்தையும் இன்பத்துன்பங்களும் இறப்புப் பிறப்புக்களும் எய்தமாட்டா. அதனால் ஆன்மா மலபந்தத்தினின்று அகலவேண்டில் அச்சிவ சத்திப் பிரகாசத்தை அடையவேண்டும். அடைந்து அதன் நிழலில் இருக்கவேண்டும். அப்பொழுது உச்சிகாலப் பளிங்குபோல யாதொரு உபாதியுமில்லாது இருக்கலாம்.

ஆதலின், இந்நிலை கைகூடு நிமித்தமே சிவோபாசனை விதிக்கப்பட்டது. சார்ந்ததன் வண்ணமாமியல்புடைய ஆன்மா சிவத்தைத் தியானித்து அதன் பிரகாசத்தில் அடங்கியிருப்பதாகப் பாவிக்கின், அப்பாவனா விசேடத்தினாலே, சிவம் வெளிப்பட்டு ஆன்மாவினிடத்து அருளை நிறுத்தும். அதனால் ஆன்மா மலபந்தத்துட்படாது திருவருள்வசப்பட்டு, அவ்வருளின் வண்ணமே தன் வண்ணமாகக்கொண்டு சிவானந்தாநுபூதியையெய்தும். மலத்தின் குணத்தைத் தன் குணமாகக்கொண்டு உபாதியுற்ற ஆன்மாவுக்குச் சிவத்தின் குணத்தைத் தன் குணமாகக் கொள்ளுதலாகிய உபாயமே சிறந்த சாதனமாம். அச்சாதனம் பக்குவத்துக்கு ஏற்பப் பலவகைப்படும்.

மலமாயை கன்மங்களி னீங்கிச் சிவவியாபகத்துள் அடங்கி ஆனந்தகரமாக விருக்கும் வல்லமையுண்டாயின் அது ஞான வழிபாடு எனப்படும்.

அவ்வியல்பில்லாதார் அகத்து ஒரு குறியின் கண் அவனது அருவ நிலையைத் தியானித்து அது வெளிப்பட அவ்வடிவுள் அடங்கியிருக்கப்பெறின், அது யோகவழிபாடு எனப்படும்.

அவ்வியல்பில்லாதார் அகத்தும் புறத்தும் அவனது மந்திர வடிவாகிய அருவுருவைத் தியானித்து வழிபடின், அவ்வடிவு பிரகாசமாகி ஆன்மாவை அவ்வடிவினதாக்கும்.

அவ்வியல்பு மில்லாதார் ஆலய முதலியவற்றில் அருவுருவத் திருமேனியை அல்லது உருவத்திருமேனியை அமைத்து வழிபடின், அவ்வடிவங்கள் வெளிப்பட்டு ஆன்மாவைத் திருவருள் வசப்படுத்தி அவ்வண்ணமாக்கும்.

இன்னும் முதல்வனைக் குறித்த வழிபாடுகள் ஒவ்வொன்றும் இக்கருத்துடையனவேயாம்.

அநுட்டானமாகிய சந்தியா வந்தனத்தில் மலகன்ம மாயைகள் அகல ஆன்மா சிவத்தையடைந்து அருள் வசப்பட்டு ஆனந்த நிலையுறும் பாவனையாகச் சிவோபாசனை வைக்கப்பட்டது.

இங்ஙனம் வைத்த சிவோபாசனைகளின் கருத்தைச் சுருக்கிச் சொல்லில், எதையெதைச் சாரினும் அதனதன் வண்ணமாமியல்புடைய ஆன்மா பாவனைவிசேடத்தாற் சிவத்துவ மெய்தி முத்தி பெற வேண்டுமென்பதேயாம்.

ஆகலின், அறிவுடையோர் தம்மை மனிதர் முதலிய வடிவப் பொருளென்றும், தமதல்லாத உலகப்பொருளைத் தமதென்றும், உடலுக்கு வரும் இன்பத்துன்பங்களை தமக்கு வருபவையென்றும் அபிமானிக்கும் அறியாமையினால், மீண்டும் உபாதிபுற்று வருந்தாமல், இவற்றின் வேறாகிய ஆன்ம இயல்பையுணர்ந்து சிவோபாசனை பண்ணிச் சிவமாந்தன்மை பெற முயலவேண்டும்.

இதுவே சிவோபாசனையின் கருத்தாம்.

---

## மகோதய புண்ணிய காலம்.

(இந்து சாதனப் பிரகாரம்.)

தைமாசத்தில் அமாவாசைத்திதியும் திருவோண நட்சத்திரமும் வியதிபாதயோகமும் திங்கட்கிழமை யுதயத்திற் பொருந்துவது மகோதய மெனப்படும். இவைகள் பொருந்தி வருவதற்குப் பல வருடங்கள் செல்லும். இற்றைக்கு ௨௧ - வருடங்களுக்கு முன் விஜய௵ தை௴ ௨௰௪ (6-2-94-) திங்கட்கிழமை நிகழ்ந்துள்ளது. இதன் விசிட்டம் சேது புராணம் முதலியவற்றில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதனைச்சுருக்கி இங்கே தருகின்றோம்.



அகஸ்திய மகாமுனிவர், பரங்கருணைத் தடங்கடலாகிய சுப்பிரமணியப் பெருமானை வணங்கிச் "சுவாமி, புண்ணியத்தைத் தரும் விசேஷ விரதத்தையும் தீர்த்த ஸ்நான பலத்தையும் தமியேனுக்குத் திருவாய்மலர்ந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்க, குமரவேள் கூறியருளியதாவது:—"கும்பமுனிவ, சகல விரதங்களினும் மகோதய விரதமே விசேஷம். இவ்விரத காலத்தில் செய்யும் ஸ்நானமே விசேஷ பலனைத் தருவது. இதின் பலன் பதினாயிரம் அஸ்வமேதயாகஞ் செய்த பலனுக்கும் கோடி சூரிய கிரகணங்களிற் செய்த புண்ணிய பலனுக்கும் சமமாகும். இப்புண்ணிய காலத்திலே ஸ்நானாதிகள் செய்தற்கு கங்கை கயை பிரயாகை என்னும் தீர்த்தங்களே விசேஷம். இன்னும் சமுத்திர (உபய சாகரமத்திய தீர்த்தமாகும் சேது) முதலியவைகளும் விசேஷமாகும். பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் திரிமூர்த்திகளுக்கும் பிரீதியானவிரதம் இதுவே. இப்புண்ணிய காலத்தில் சங்கற்ப பூர்வமாக ஸ்நானாதிகள் செய்து திரிமூர்த்திகளுக்கும் பிரீதியாக மூன்று பசுக்களைத் தானஞ் செய்யலாம். சுவர்ணம் முதலியவைகளில் திரிமூர்த்திகளின் விம்பங்களை யமைத்து முறைப்படி தாமரைப்பூவாலும் வில்வத்தாலும் அருச்சித்தல் வேண்டும்"

## அர்த்தோதய புண்ணிய காலம்.

மகோதய புண்ணிய காலத்திற் சேரும் திதியும் நட்சத்திரமும் யோகமும் தைமாதத்தில் ஆதிவாரத்தில் வந்து பொருந்துவது அர்த்தோதயபுண்ணிய காலமாகும். (ப - ர்.)

நம்மவர்களால் இந்நாட்கள் புண்ணியகாலங்களாகக் கொண்டப்படுவதற்குரிய காரணங்கள் இனிவரும் பத்திரிகைகளில் நன்கு விளக்கப்படும்.

---

# அர்ச்சாதீபம்.

(157-வது பக்கத்தொடர்ச்சி.)

இப்படி எல்லாப்படியாலுஞ் சாதிக்கப்படுவதாகிய அர்ச்சையை வைதிகசீலர்கள் கொள்ளவும், அவைதிகசீலர்கள் தள்ளவுமிருப்பது ஸஹஜந்தான். வேதத்தை அறவே கொள்ளாதவரும், வேதத்தை அபார்த்தஞ்செய்து கொள்ளுபவரும், வேதத்தை அபவாதமாகக் கொள்ளுபவரும் ஆகிய யாவரும் அவைதிகரேயாவர். நமது ஸமாஜநண்பர் இந்த மூன்றுவிதத்தாலுஞ் சிறந்து விளங்குகின்றனர். எங்ஙனமெனின், முதலாவது வேதத்தைப் பதிவாக்கென்று கொள்ளாமையாலும், இரண்டாவது அதனை விபரீதமாகப் பொருள் படுத்தலாலும், மூன்றாவது அதைப் பசுவாக்கென்று கொள்ளுதலாலுமேயாம். நம்மவர் வேதத்தைப் பதிவாக்கென்று கொள்ளாவிடத்தும், அதைக்கௌரவப் பிரமாணமாகவே கொள்ளுகிறார்களெனின். அதிலென்ன விசேடம்? அதற்கு நியாயமென்ன? அது நிர்விவாதமாய் நியாயமணங் கமழ்ந்திருக்கின்றமையாலெனின், பௌத்த - சார்வாக - ஹூண - மகம்மதீயர்கள் அங்ஙனங் கொள்ளாமையால் அதுகூடாது. நிர்விவாதமும், நியாயமணம் வீசுவதும் யாவர்க்கு மொப்பமுடிதல் வேண்டும். அங்ஙனமின்றி முற்றும் விரோதமாக அவர்க்குக் காண்டலின், நம்மவர் வேதத்தைக் கௌரவப் பிரமாணமென்றது நலஞ்செய்ய மாட்டாது. வேதம் அவர்க்கு விரோதமாயினபடியே அவரது சமய நூல்கள் நம்மவர்க்கு விரோதமாதலுந் திண்ணம். அவரவருந் தத்தஞ்சமயநூல்களைத் தனித்தனியே நிர்விவாதமும், நியாயமணம் வீசப்பெற்றதும் என்று கொள்ளவுந்தடையில்லை. அதனால், நம்மவர் வேதத்தைக் கௌரவமாகக் கொண்டதற்குக் காட்டிய நியாயம் அவலமாயிற்று. ஆகவே, வேறுகாரணத்தாற் கௌரவித்தாரென்பது பெறும். என்னெனின், ஹூணர் கொள்கையில் நம்மவர் விசுவாசம் வைத்தவர்கள். அதை அப்படியே அவலம்பிக்கலாமெனின, உலகம்பழிக்கும். ஜாதிசமய நஷ்டமும் உண்டாம். ஆகையால், அந்தக்கொள்கையை வேதமூலத் தாற்றழுவித் தமக்கு வைதிகங்கெடாமலும், தாம் தழுவிய ஹூணர் கொள்கை கெடாமலுமிருக்க அவர் பிரவர்த்திக்கின்றனர். இது அவரது வாஸ்தவமான அபிப்பிராயம். இத்தகையோர்க்கு வேதத்தில் எப்படிக் கௌரவபுத்தியுண்டாகும்? தங்கள் கௌரவத்தை நாடியே அதைக்கௌரவமாகப் பேசுவதன்றி, உண்மையாக அதில் கௌரவபுத்தி கிடையவே கிடையாது.

இனி, அதனைப் பதிவாக்கென்று கொள்வதே அதில் கௌரவபுத்தி வகித்தவர்மதமாம். எங்ஙனமெனின், பிள்ளைக்குப்பிதாவும், மாணுக்கனுக்குக் குருவும், ஸ்திரீக்குப்புருஷனும், குடிகளுக்கு அரசனும் ஆப்தர்களாகின்றனர். இப்படியே கடவுள் ஆப்ததாரதம்யங்களால் உயிர்களுக்குப் பரமாப்தராகின்றனர். ஆப்தர் வாக்கியம் கௌரவிக்கப் படுதல்போலப் பரமாப்தராகிய கடவுள் வாக்கியமுங் கௌரவிக்கப்படுதல் உண்மை. அரசனது நிருபத்தைக் கண்டபோது, அவனைக் காணுமிடத்தும் அவனைக் கண்டது போலவே பயந்து அதில் விதித்தவாறு கட்டுண்டொழுகுதல் உலகில் அநுபவம். அதுவேநிருபம் அரசனல்லாதவன் பக்கலிருந்து வருமிடத்து அதற்கு அவ்வளவு யோக்யதை யுண்டாக மாட்டாது, அதிலடங்கிய விஷயத்தைச் சர்ச்சிக்கவும், அதைத் தோஷங்கூறவுங்கூடும். அரசன் விடுத்தது நியாயமாகத் தோன்றாவிடினும் அதை அவமானிக்கமுடியாது. அல்லாதவன் விடுத்தது நியாயமாக விருப்பினும், அது நியாயந்தானா? அன்றா? என யோசிக்கச்செய்யும். இதனால், அரசன் வாக்குக்கு ஏற்றமுண்டாகின்றது. இப்படியே பரமன்வாக்கென்று கொண்டகாலத்திற்றானே வேதத்துக்கும் ஏற்றமுண்டாகின்றது. யாம் எமது வேதத்தைப் பதிவாக்கென்று கொண்டமையாலும், அதிற்பழகிய அறிவின்விசாலத்தால் அது பதிவாக்கென்றே விளங்குகின்றமையாலும், அதை மறுக்கவாவது, மறுக்க எண்ணங்கொள்ளவாவது எமக்கிடமில்லை. புறச்சமயநூல்களை யாமங்ஙனங் கொள்ளாமையாலும், அவற்றை மறுப்பது ஆவசிகமாகவே தோன்றலாலும் யாம் அப்படியே பிரவர்த்திக்கின்றோம். இப்படியே புறச்சமயிகளும் எம்ம வேதத்தைக்கொண்டு பிரவர்த்திக்கின்றார்கள். யாம் அவரையும் அவர்கள் எம்மையும் ஹேயமாகவெண்ணுவது முக்கியமல்ல. எவர்கள் யாவரை எப்படி யெண்ணினுங் கடைசியாக யாவருந் தத்தஞ்சமயநூல்களைப் பதிவாக்கு அல்லது அவரது ஆணை என்று துணியுமுடிவே முக்கியம். அவ்வாறுகொள்வதே அவரவர்களும் அவரவர் சமயநூல்களைக் கௌரவித்தலும், அவை விதிக்கிறபடியே அஞ்சியொழுகுதலுமாகிய நலத்தை நாட்டும்! நாட்டும்!! இப்படி ஒவ்வொருவருங் கொண்டொழுகுங்கால்,

யாவுங் கடவுள் வாக்காதல் எங்ஙனம்? அவை ஒன்றையொன்று விரோதித்ததாலெனின்,

“ ஓதுசமயங்கள்பொரு ளுணருநூல்க ளொன்றோடொன்
றொவ்வாம லுளபலவுமிவற்றுள்
யாதுசமயப்பொருணூ லியாதிங்கென்னி லிதுவாகுமதுவல்ல
வெனும்பிணக்கதின்றி
நீதியினாலிவையெல்லா மோரிடத்தேகாண நிற்பது
யாதொருசமய மதுசமயம் பொருணூ
லாதனாலிவையெல்லா மருமறையாகமத்தே யடங்கிடு
மவையிரண்டு மானடிக்கீழடங்கும்”

என்னுஞ் சைவத்தலைவர் திருவாக்கால் அது விளங்கும். யானையினது வாலையே யானையெனவும், அதனது காலையே யானையெனவும், அதனது காதையே யானையெனவும், அதனது கையையே யானையெனவுங் கண்ணில்லார்பலர் தடவிப்பார்த்து ஒருவரோடொருவர் மாறுகொண்டு தத்தமநுபவத்தையே நாட்டாநிற்பர். கண்ணுடையொருவன் யானையை முற்றுமறிந்து கூறுமிடத்தும் அவனையும் மறுத்துரைப்பர். அவனும் அவர்களை மறுத்துரைப்பன். இவர்களில் கண்ணில்லார் மறுப்பதுவேகுற்றம். கண்ணுடையான் மறுப்பது குற்றமாகாது. கண்ணில்லார் கூறுவதுங் கையினாற்றடவி யூகித்ததையேயன்றிக் கண்ணினாற் பார்த்ததையன்று. கண்ணுடையான் கூறுவது நேரே கண்ணினாற் பார்த்ததொன்றை. இவருள் கண்ணில்லார் ஏகதேசவுறுப்புக்களை யூகித்து மயங்கினவர்கள். கண்ணுடையான் அவ்வுறுப்புக்களையும் அவற்றையுடைய யானையையும் நேரேகண்டு தெளிந்தவன். கண்ணில்லார் கூறுவது கண்ணுள்ளான் கூறுவதிலடங்கும். கண்ணுள்ளான்கூறுவது கண்ணில்வார்கூறு மேகதேசங்களிலடங்காது. இதனால் கண்ணுடையான் கண்ணில்லாரை மறுப்பதற்கும், தழுவுதற்கும் ஹேது உண்டாயிற்று. கண்ணில்லார் கண்ணுள்ளானை மறுப்பதற்கு ஹேதுவில்லை. அவர் மறுத்தற்குண்டான ஹேது அவர்பால் குருட்டுத்தன்மை நிகழ்வதொன்றே! அவர் மறுப்பதேயன்றித் தழுவுவது இல்லை! இல்லை!! இந்தவுபமான வரிலாக வேதமானது புறச்சமய நூல்களைப்போலாது அதிநுத்தையடைந்து பதிவாக்கென்று கூறுவதில் பிரதானபத்வமடைந்து நிலைக்கும்! நிலைக்கும்!! எல்லாச்சமய நூல்களும் வேதத்திலடங்கும். வேதம் அவைகளிலடங்காது. இந்தவேதம்



சிவாகமத்திலடங்கும். சிவாகமம் வேதத்திலடங்காது. இதனால், வேதத்தினுஞ் சிவாகமம் சிறந்ததெனல் வெளிப்படை. வேதம் பொதுவும், சிவாகமம் சிறப்புமாம். வேதசிவாகமங்களினுண்மையைச் சிவபாரம்யப் பிரதரிசினியின் முகவுரையில் விரித்திருக்கின்றோம், ஆண்டுக்கண்டுணர்க. இந்த வுண்மைகளையறியும் பகுப்பின்றிச் சிவாகமத்தைச் சங்கராசாரியர் பாஞ்சராத்திரத்தோடு ஒதுக்கிவிட்டாரென்றும், அது பிரமாண மாகமாட்டாதென்றும் பூர்வபட்சிகள் சொல்லியிருக்கின்றார்கள். இதை யாம் ஒதுக்கிவிட யாதொருதடையுமில்லை. யாருடைய ஸித்தாந்தமாயிருப்பினும் அவை எமக்கொருபொருளல்ல. பதிவாக்கே எமக்குப் பொருள். சிவாகமம் பதிவாக்கிற் சிறப்புடைத்து. இதனால் வேதசிவாகமங்களிரண்டுமே எமக்குப் பிரமாணமும், பதிவாக்காதலுமாகி நிலையுதல்பெறும். இந்தவிசாரத்தால், நம்மவரை அவைதிகசிலர் என்று யாம் காட்டியது நாட்டியதேயாயிற்று.

இதுநிற்க. பட்டணத்தார் முதலிய சிவாநுபூதிமான்கள் அர்ச்சையை நிந்தித்திருப்பதாக நம்மவர் கூறினர். அவர்களுடைய நூன் முழுதும் அர்ச்சையையும், திருக்கோயிலையுமே பிரதிபாதிக்கின்றமையால், ஏகதேசமாக இரண்டொருபாடலை யெடுத்துக்கொண்டு அவர்களுடைய மதம் அதுவேயாகத்துணிவது கூடாது. அவ்விரண்டொருபாடலாலும் அவர்கூறியதென்னையெனின், பிரஹ்மத்தை விக்கிரகமாக வணங்காமல், விக்கிரகத்தைப் பிரஹ்மமாக வணங்கும் மந்தாதிகாரிகளைத் தெளிவித்தற்பொருட்டு. ஒழிவிலொடுக்கம் என்னுஞ் சைவநூலில் யோகக்கழற்றி-கிரியைக்கழற்றி--சரியைக்கழற்றி என்று அதிகாரங்கள் பிரித்து, சரியை கிரியை யோகங்களைத் தூஷித்திருக்கின்ற பகுதிகளுக்கு உரையாசிரியர் (சரிதாதியினிற்போர்களு ளோரொருவர் முன்விட்டகுறையான் ஞானத்திற்குப் பக்குவராய் வருவார்கள். அவர்கட்குத் தற்போதத்தையொழித்து ஞானம் வருவித்தற்பொருட்டுத் தற்போதத்தாற்செய்யுஞ் சரிதாதிகளைப் போதனைகளா னீக்கவேண்டுமாகலின், அவ்வதிகாரத்தின் பின்ன ரிவ்வதிகாரங்கள் வைக்கப்பட்டன. ஆயின், முறையே வைத்துக்கூறாது யோகக்கழற்றியை முதற்கண் வைத்ததென்னையெனின், யோகம் ஞானத்துக்கருகாகலினும், இவ்வியோகத்தினின்ற ஞானபக்குவனதிபக்குவனாகலினும் முதற்கண் வைக்கப்பட்டது.) என நியாயங்காட்டியிருக்கின்றனர். இதை யோசிக்கிறபோது யோகத்தைத் தூஷிப்பது

ஞானத்தில் அபிருசியுண்டாதற்பொருட்டும், கிரியையைத் தூஷிப்பது யோகத்தில் அபிருசியுண்டாதற்பொருட்டும், சரியையைத் தூஷிப்பது கிரியையில் அபிருசியுண்டாதற்பொருட்டுமென்றறிய வேண்டியது. நீரும்அன்னமும் உண்ணுகின்றவனைப் பாலும் அன்னமும் உண்ணென்றபடியே சரியையினின்றவனைக் கிரியையிலும், கிரியையினின்றவனை யோகத்திலும், யோகத்தினின்றவனை ஞானத்திலும்புக அறிவுறுத்துதலாம்.இதை நோக்குங்கால், சரியையாதிகள் ஒன்றினொன்று மேலிட்டபடிகளும், ஒன்றினொன்று மேலிட்ட பயனைத் தருவனவுமாகும். சரியைமுதல் ஞானமீறாக எந்த நிலையிலொருவனியங்கினும் அவனுக்கு முக்கியந் தற்போதநிவிர்த்தியேயாகையால், அஃது நேராத வழியும் உண்மைநூல்கள் அவைகளை நிந்தித்துப்பேசும். தேவாரம், (காலை சென்று கலந்துநீர் மூழ்கிலென், வேலைதோறும் விதிவழி நிற்பிலென்) என்று எம் பரமகுருநாதர் அருளிய திருவாக்குஞ் சான்றாம். உள்ளன்பில்லாமல் வேடமாத்திரத்தாற் றவசியெனப்பொலிந்து, கோயிறோறுங் குளங்கடோறுந்திரிந்து, சிவார்ச்சனையிலுஞ் சிறந்து, அகம்பாவத்தின் மிகுந்து அழிவாரை "விபரீதப்பூணுமுடையும் விளிபா-லபிமானமு மவராலாட்டுந்-தவசுபோற்- செய்யுஞ்சடங்குந் திசைப்புஞ் சிதம்பரத்தி-லையன்றனக்கறியலாம்" எனப் பெரியோர் பிரஸ்தாபித்திழித்தமையுங் கண்டுதெளிக. தற்போத நீங்கியவிடத்தோவெனின், (ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென்னுள்ள மும் போய்- நான் கெட்டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ) என்று ஸ்ரீமத், ஆசாரியசுவாமிகள் கூறிய அநுபூதிசெறிந்து சரிதாதிகளை விடாதுபற்றி யொழுகாநிற்பர். (ஞானயோகக் கிரியை சரியை நாலு - நாதன்றன்பணி ஞானி நாலினுக்கு முரியன், ஊனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன் - யோகிகிரியாவான்றானுங்கிரியையாதி, யான விரண்டினுக்குரியன் சரியையினினின்றோ - னச்சரியைக்கே யுரியன்) என்று ஸந்தானகுரவர் பிரகாசம் பண்ணியிருப்பதுஞ் சான்றாம். இந்த விசாரத்தால் சிவாநுபூதிமான்கள் அர்ச்சையைத் தூஷித்தாரெனல் அறவே நிரஸ்தம். ஆகவே, அவர் பூஷிப்பதேயன்றி அவரது ஸ்வாநுஷ்டானமாகக் கொண்டொழுகுதலும் வியக்தம். இவ்வளவு கூர்ந்து நோக்காமல் பூர்வபட்சிகள் வீண்விபரீதம் பேசியது விருதா கோஷமாக முடிந்தது. இன்னும் விரிக்கிற் பெருகும்.



நம்மவர்கள் தாயுமானவர், பட்டணத்தார் முதலிய பெரியோர்களைத் தமக்கு ஸாக்ஷிகளாகக்கோரி, அந்த ஸாக்ஷிகள் தம்மைத் தெருவில் விட்டமையால், வீணாக அவமானத்தை யடைகின்றார்கள். தாயுமானவர் முதலினோர் ஓரிடத்தில் நிர்க்குணமாகவும், ஓரிடத்தில் ஸகுணமாகவும், ஓரிடத்தில் அருவமாகவும், ஓரிடத்தில் உருவமாகவும், ஓரிடத்தில் மானஸபூசையாகவும், ஓரிடத்தில் அர்ச்சாராதனமாகவும் பலவாறு சிவத்தைப் பூஷித்திருக்கின்றார்கள். இவை ஒன்றோடொன்று முரணாமையும், இப்படியே உபநிஷத்துக்கள் முழங்குவதுமாகிய வுண்மையை முன்னே விளக்கினும். நம்மவர் இப்படி விசாரியாமையால், தாயுமானவர்- பட்டணத்தார் நூல்களிலுஞ் சிலவற்றைக் கொள்ளவும், சிலவற்றைத் தள்ளவும் அதிகாரிகளாயினர்கள். தம்மகோளைச் சாதிக்குமேற்கோள் தம்மினுயர்ந்தாருரையாகவேண்டும். தம்மினுமறிவிற் சிறியாருரை தமக்கு மேற்கோளாதல் கூடாது. தாயுமானவர் முதலினோரை நம்மவர் தம்மினுமறிவிற் சிறியாராகக் கொள்ளாதபோது அவரது வாக்கிற் சில பகுதிகளைத் தள்ளவுபகாரப்படாது. சிலவற்றைத் தள்ளினாராகையால் அவரதியற்கை வெளியாயிற்று. தாயுமானவர் முதலினோர்க்கும் நம்மவர் யோக்யதா பட்டங்கொடுக்க விசைந்தாராகையால், அவரை நினைக்குந்தோறும் அவரது புத்திமை: ஆ! ஆ!! என்று வியந்து புகழ்கின்றனர் மேலோர். இனியாவது நம்மவர் அப்பெரியோர் கூறிய ஸந்தர்ப்பங்களையும், அவற்றினுண்மைகளையுந் தெளிந்து அவரருளைப்பெற்று வாழ்வாராக.

இப்படியே நம்மவர்செய்யு மாட்சேபங்களொவ்வொன்றும் நசிக்கத் தடையில்லை. இதுகாறுஞ் செய்தவிசாரத்தால் பிரஹ்மத்தைக்கேவலம் அருவமென்று சாதிப்பது தவறென்றும், அதை இன்னதன்மையது என்று ஒருவருஞ் சொல்ல முடியாதென்றும், அதற்கு அருவமேயன்றி உருவமும் வேதத்தில் அருண்மேனியாகக் கேட்கப்படுகிறதென்றும், அதை ஸாக்ஷாத்தாக மனசு எட்டாதென்றும், எட்டுமென்று சொல்லும் ஏழைகள் வாதம் ஏலாதென்றும், அர்ச்சாராதனத்தைக்காட்டிலும் வேறுவழி அதை அடைவதற்கு இல்லையென்றும், பிரஹ்மாதிகளும் இந்த அர்ச்சையை யுபாஸித்தே ஸர்வைசுவரியங்களையும் அடைந்தாரென்றும், இந்த அர்ச்சாமார்க்கத்தை ஹேயமென்று கொள்வது நீச்சமார்க்கமென்றும், இவ்வுண்மைகள் வேதத்திற் பிரதிபாத்யமென்றும், வேதம் ஈசுவர வாக்கியமென்றும், வேறு விதமாகக்கூறுவது

அஸங்காத்ம வாதமென்றும், இந்த அர்த்தங்களெல்லாங்கொள்ளக்கிடக்கும் பட்டினத்தார் - தாயுமானவர் முதலிய சிவாநுபூதிமான்கணூல்களைத் தமக்காதாரமாக நம்மவர் தழுவியது விட்டிலின் கதியாகுமென்றும், இந்த நயங்களையறிந்து அவர் திருவடிகளுக்காட்படின், நம்மதோழர்க்கு உஜ்ஜீவனமுண்டாகுமென்றும் வெளிப்படுத்தினோம். இவைகளைக்கூர்ந்து யோசித்து, இனியேனுந் தர்விவாதங்களிற் றலையிட்டுழலாது, "நன்மை கடைப்பிடி" என்பதை நாடி நம்மதோழர் குணப்படுமாறு திருவருளைச் சிந்தித்து. இவ்வளவில் உபசாந்தியடைந்தோம். இது கொண்டே இன்னும் அநந்த யுக்திகளையும், பிரமாணாநுபவங்களையுந் தேடியுய்யும் பொருட்டு ஸாதுக்கள் க்ஷேமார்த்தம் இந்த கிரந்தம் உலகில் நீடுவாழ்க. சுபம்! சுபம்!!

அர்ச்சாதீபம் முற்றிற்று.

---

## ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

(141-வது பக்கத் தொடர்ச்சி.)

மற்றோர்நாள் சிவபிரான் ஓர் பிராமணவடிவம் பூண்டு, அரதத்தாசாரியர் வீட்டுக்குவந்து, ஓ சாத்திரிகளே! என்று உச்சசுவரத்தோடு அழைத்தபோது, ஆசாரியர் நாம் கவியுமல்லேம், சாஸ்திரியுமல்லேம், பௌராணிக நாடக சமர்த்தருமல்லேம்; பின்னைச் சிவநாமவாச்சியராகிய சிவானந்தத்திலே அமிழ்ந்தினமைபற்றிச் சிவானந்திகளென்று அழைக்கற்பாலேம்.—

நவயம்கவயோநசாஸ்திரிணோவாநசபௌராணிகநாடிகப்ரவீணா: |
சிவநாமநிதேவதாவிசேஷபரமானந்தபயோநிதௌ நிமக்நா: ||

என்றுரைத்தார்.

அந்தக்கஞ்சாபுரத்திலே மற்றோர் தேசத்துப் பிராமணன் போந்து விலைமாதொருத்தியின் வீட்டினுள்ளே புகுந்து, தான் அவளைக்கூட நினைந்து, தான் அரதத்தாசாரியர் புத்திரன் என்றும், தான் அவளுக்குப்பொருள் உதவுவோனென்றும் உரைக்க, அதனைக்கேட்ட அவ்விலைமாது அவனைத் தன் செயற்கையினால் பிரீதி செய்தாள்; இப்படி நெடுநாட் கலந்திருந்துவிட்டு, அப்பிராமணன் அவளுக்கு யாதுங் கொடாது, தன் கிராமத்துக்குப் போய்விட்டான். அவள் பின்னர் அரதத்தாசாரியார் வீட்டுக்குவந்து சுவாமீ! தங்கள் புத்திரர் நெடுநாளாக என்னோடு கலந்திருந்துவிட்டு, யாதுங் கொ



டாது போய்விட்டார் என்றாள். ஆசாரியர் சிவபிரானே அவளோடிருந்து போயினனென்று கொண்டு, அவளுக்குத் தம்மிடத்துள்ள ஆயிரம் கழஞ்சுள்ள சுவர்ணாபரணத்தைக் கொடுப்ப, அவளும் அதனை வாங்கிக் கொண்டு போயினள். இவருடைய எட்டுப் பிள்ளைகளும் சன்மார்க்க நெறி பூண்டவர்களென்று முன்னரே அறிந்த அக்கிராமத்தார் அனைவரும் அவளிடத்திலேபோய், "நீ ஆசாரியரிடத்தில் அவ்வாபரணத்தைக் கொண்டுபோய்க்கொடுத்துவிடு என்று கண்டித்தார்கள். அதை அவளறிந்து பயந்து, ஆசாரியரிடத்தில் வந்து பழையபடி அதனை வைத்து மீளவெடுத்துக் கொள்ளும் வண்ணம் பிரார்த்தித்தாள். அப்போது ஆசாரியர் ஓ குமாரி! நான் உனக்குக் கொடுக்கும்போது சிவார்ப்பணமென்றே கொடுத்தேன், நீயே கொண்டு போவாயாக; அதனை நான் மீண்டு எடுக்கமாட்டேன் என்றார். அதனைக் கேட்டபோது, அவளுக்குச் சித்த சுத்தி பிறந்து அவள் அவ்வாயிரங்கழஞ்சு சுவர்ணாபரணத்தையும் சிவார்ப்பணம் பண்ணி கோயில் மண்டபம் விமான முதலியவைகளுக்குச் செலவு செய்தாள்.

ஓர் காலத்திலே அக்கினீசுவரர் ஆலயத்திலே சர்வசனங்களுக்குங் காட்சி கொடுக்கும் பொருட்டு இரதோற்சவம் நிகழ்ந்தது. சிவபிரான் இரதாரூடராய் எழுந்தருளினர்; அப்போது பேரி முதலிய வாத்தியங்களும் முழங்க, நாநாவித கொடிகள் சலிப்ப, அநேகசனங்கள் குழும, சுகந்ததூபம் நறுமணங்கமழ, வீதிகளிலே புரோக்ஷிக்கப்பட்ட சந்தனக்குழம்பு விளங்க, மாலைகளினாலே தெருக்களெல்லாம் பிரகாசிப்ப தோரணங்கள் தூங்க,— ஆச்சிரமிகளெல்லாம் நெருங்க, அம்மையாரும் சுப்பிரமணியரும் விநாயகரும் சண்டேசுரரும் மகாதேவரும் தத்தம் இரதங்களிலே இவர்ந்தருளினார்கள்; கஞ்சாபுரத்திலுள்ள பெண்கள் அனைவரும் உற்சவதரிசனத்தின் பொருட்டு நாநாவித ஆபரணங்களால் அலங்காரஞ் செய்துகொண்டு புறப்பட்டார்கள். அப்போது அரதத்தாசாரியருடைய புத்திரிகள் இருவர் உற்சவத்துக்குப் புறப்படுதற்கு மற்றைப் பெண்களுக்குப் போல ஆபரணம் தங்களுக்கு இன்மையால், பிதாவை அடைந்து எங்களுக்குத் தரித்தற்கு ஆபரணமின்மையால் நீவிர் ஆபரணங் கொடுத்தருளல் வேண்டுமென்று வேண்டினார்கள்; துக்கத்தோடு இவ்வாறு ஆபரணம் வேண்டுமென்று பிரார்த்தித்த குழந்தைகள் இருவரையும் ஆசாரியர் நோக்கி, நீங்கள் உங்கள் அவயவங்களிலே பூசும் விபூதியே

பூஷணம், நீங்கள் சிரவணஞ்செய்யும் சிவநாமமே காதுக்கு அலங்காரம், நீவிர் எப்பொழுதும் செய்யும் சிவலிங்கார்ச்சனையே கரபூஷணம், நீங்கள் செய்யும் சிவலிங்க பிரதக்ஷிண நமஸ்காரமே பாதபூஷணம், ஆதலினால் நீங்களேன் கவலைப் படுகின்றீர்கள் என்றார். அவர்கள் பின்னரும் பிதாவே, தாங்கள் சொல்லிய ஆபரணங்கள் உள்ளபடியே இருக்கின்றன; இருந்தும் எங்களையொத்த தோழியர்கள் மிகுதியும் நிந்திக்கின்றார்கள்; ஆதலினால் லௌகிக பூஷணமுங் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அது கேட்ட பிதாவானவர் சிறிது வருத்தத்தோடு அவர்களை நோக்கி முற்சென்னத்திலே இவை வேணுமென்று உபாசனை செய்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்கெப்படி வாய்க்குமென்று சொல்லக்கேட்ட புதல்விகள் பிதாவே உமக்கு அவை என் கிட்டா; ஆவசியகம் கொடுத்தருளல் வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது அரதத்தாசாரியர் சிறிதுபோது தியான பாராயணராயிருக்க, எருதொன்று அவ்வழியே செல்லக்கண்டு அவர்களை நோக்கி, அந்த எருது வைத்துக்கொண்டுபோன பாதக்குளம்பினிடத்திலே வேண்டிய பூஷணங்களெல்லாம் அகப்படும். அவ்விடத்தே போய் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். குழந்தைகள் இருவரும் விரைந்துபோய் அது கால்வைத்துப்போன குளம்பிடங்கடோறும் விசித்திரமாகிய ஆபரணங்கள் இருக்கக்கண்டு அவற்றை எடுத்துக்கொண்டு தங்கள் பிதாவுக்குச் சமீபத்திலே வந்து அவர் எவை எவை என்று கேட்க, அவர்கள் மகிழ்ச்சியோடு பாதமோதிரம், பாதகடகம், சிறுகிங்கிணிமாலை, மேகலை, கடிசூத்திரம், கடிபந்தனம், ஆரம், பவளமாலை, அங்கதம், கங்கணம், பதக்கபேதம், பவளவலயம், விரல் மோதிரம், சுவஸ்திகம், காதோலை, திலகாகாரமாகிய பொட்டு, தலையாபரண முதலாயின அகப்பட்டன என்று சொல்லிப்போய், அந்தத்தானங்களிலே இவ்வாபரணங்களினால் தங்களுக்கு அலங்காரஞ்செய்ய வேணுமென்று தம் தாயாரை வேண்டினார்கள்; தாயார் அவ்வாறு அலங்காரஞ்செய்து முடிந்தபின்னர், அவர்களுக்கு அணிந்து எஞ்சிய ஆபரணங்களை அக்கினீசுவரர் கற்பகநாயகி இருவருக்கும் அலங்கரிப்பிக்கும் பொருட்டுப் பழம் கர்ப்பூரம் தாம்பூல முதலிய கொண்டு சகிகளோடு கூட ஆலயத்துக்குப்போய் நிவேதிப்பனவற்றை நிவேதித்து, ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து, ஆசாரியருடைய மகிமையையும் சிவபெருமானுடைய திருவருளையும்



நினைந்து சந்தோஷமுடையராயினார். ஊரிலுள்ள சனங்கள் இவ்வாபரணங்களையெல்லாங் கண்டு யாவும் அறிந்து அரதத்தாசாரியருடைய மகிமையே மகிமையாம் என்று வாழ்த்தினார்கள்.

ஓர்நாள் இராத்திரிப்போதிலே கோவடு எனப்படும் திருவாடுதுறையாலயத்திலே அரதத்தாசாரியர் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு வழியே போம்போது, மழையும் காற்றும் உண்டாகி இருள் மிகுந்தபோது, சிவபிரான் இவருக்குச் சகாயமாகக் கோபாலவேஷந் தரித்துக்கொண்டு அவருடன் சென்றார். ஆசாரியர் அவரை நோக்கி நீ ஆர் என்றார். அவர் நான் கோவடு க்ஷேத்திரத்திலுள்ள கோக்களை மேய்க்கும் இடையன், உமக்குச் சகாயஞ் செய்யப் போந்தேன் என்றார். இவ்வார்த்தை அவருக்கு இனிமை பயந்தமையால், அங்ஙனமாயின் நீ வருவாயாக என்று கூட்டிக்கொண்டு வந்து, பின்னர்த் தமது கிரகத்திலே ஆகாரஞ் செய்து போவாயோவென அவர் நீர் என்கையிலே ஆகாரத்தைக்கொடுத்துவிடின், நான் என்வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சாப்பிடுகின்றேன் என்றார். அதற்கு ஆசாரியர் இசைந்து, பாகற்காய்க் குழம்பும் அன்னமுங் கொடுப்ப, அவர் அதை வாங்கிக்கொண்டு தமது வீடாகிய ஆலயத்தினுள்ளே பிரவேசித்து, இலிங்கத்துக்கும் இடபதேவருக்கும் இடையேயுள்ள அர்த்தமண்டபத்திலே அவற்றைச் சிதறிவிட்டு லிங்கத்திலே அந்தர்த்தானமாயினார். காலையிலே அர்ச்சகர்கள் வந்து சிந்துண்டு கிடந்த கறியையும் அன்னத்தையும் பார்த்து, இஃதென்னை! என்று ஆச்சரியமுற்று நின்றார்கள். பின்னர்க் கோயிலதிகாரியானவர் வந்து பார்த்து, பரிசாரக வேலைக்காரரையெல்லாம் தண்டிக்கத் தொடங்கினார். அவர்கள் நாங்கள் இந்தக் காரியம் செய்தேம் இல்லை என்றும், நாங்கள் வீட்டுக்குப் போம்போது உள்ளே எங்கும் நன்றாகப் பரிசோதித்து, திருக்காப்பிட்டுக்கொண்டு போனோம் என்றும், இது செய்தார் மற்றியாருமில்லை என்றும் சொல்லித் தலைகுனிந்து சும்மா விருந்தார்கள். அப்போது முதற்றினத்து இராத்திரியிலே அரதத்தாசாரியர் தரிசனத்துக்காக இங்கே வந்திருந்தார். போகும்போது வழியிலே மழைபெய்யத் தொடங்கிற்று; ஆதலினால் அவருக்குச் சகாயமாகக் கோவடுநாதர் கோபால வேஷத்தோடு போயினார். அவர் தமது கிரகஞ் சார்ந்தபோது ஆசாரியர் அவரைப் போசனத்தின் பொருட்டுத் தடுப்ப, அவர் அதற்கு உடன்படாமை கண்டு பாகற்காய்க் குழம்பும் அன்னமுங் கொடுப்ப, பாலசந்திர

சிகாமணியாகிய கோவடு நாதப்பெருமான் இடைய ரூபத்தோடு அவற்றை வாங்கிக் கொண்டுவந்து, இந்தப்பிரகாரஞ் செய்து விளையாடினார் என்று ஓர் அசரீரிவாக்கு ஆகாயத்திலே எழுந்தது. அதைக்கேட்டு யாவரும் ஆச்சரியமுற்று அரதத்தாசாரியருக்குச் சிவபெருமான் இத்துணைக் கிருபை செய்தாரோவென்று யாவரும் புகழ்ந்தார்கள். இங்ஙனம் அரதத்தாசாரியர் நெடுங்காலம் அதிதி பூசைமுதலிய அநேக தருமங்களைச்செய்து கொண்டு வந்தார். வயசு முதிர்வுறுந் தமது தள்ளாமைப் பருவத்திலே எழுதலத்துக்குந் தினந்தோறுஞ் செல்லமாட்டாதவராய், தமது ஆன்மார்த்த பூசையிலே எழுதலத்துச் சிவலிங்கங்களையும் ஸ்தாபித்து பூசித்து தரிசித்து மோக்ஷப் பிராப்தியின் பொருட்டு ஒருமையோடும் வழிபட்டு வந்தார்.

திரியகம்பர் என்னும் பிராமணர் ஒருவர் யதீசுவரர் ஒருவரை அடைந்து சேவைசெய்து, அநேக வித்தியாப்பியாசம் பண்ணினார். ஓர்காலத்திலே தமது குரு ஏகாந்தத்திலிருந்தபோது, எல்லா வித்தைகளும் அப்பியசித்தேன். பஞ்சாக்ஷரோபதேசமும் பெற்றேன். இவற்றிற்கு மேலறியற்பாலது யாது? என்று தமது குருவைக் கேட்ப, அவர் யோசித்து உலகத்திலே சுருதிஸ்மிருதிகளுள்ளும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் மேலானதும் ஒன்றுமில்லை. ஒப்பானதும் ஒன்றுமில்லை. இந்த இரகசியம் இவனுக்குத் தெரியவில்லையே! இவன் சந்தேகமில்லால் மூடனென்று நினைந்து சில இரகசியம் இன்னும் உண்டு காலாந்தரத்திலே சொல்லுகின்றேன் என்றார். இதுநோக்கிக் காலம் பார்த்துக் கொண்டிருந்தான். இப்படி வெகுகாலமாய பின்னர், ஓர்நாள் சிஷன் போசனத்தின்பொருட்டு வெளியே போயிருப்ப, யதீசுவரருக்குத் தேகவியோக காலம் கிட்டிவிட, சிஷனுக்கு யாதோ சொல்ல வேண்டியிருந்ததென்பதை அவர் யோசித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தினும் மேலாய் அறியற்பாலது மற்றொன்றில்லை என்று நிலத்தில் எழுதிச் சரீரத்தியாகம் பண்ணினார். அதனை அருகில் நின்ற ஒரு கழைக்கூத்தியான தாசி கண்டு ஓலையில் எழுதிக் காதோலையா யிட்டுக்கொண்டு மணலெழுத்தைக் கையாலழித்து வீடுசார்ந்தாள். சிஷன் வந்து பார்த்து, தனது ஆசாரியார் இறந்து கிடத்தலைக் கண்டு துக்கத்தோடிருப்ப, அங்கிருந்தவர்கள் உமது ஆசாரியார் எழுதிவைத்த இரகசியத்தை ஓர் தொம்பச்சி எழுதிக் கொண்டு போய்விட்டாள் என்று சொல்ல, சிஷன் அவள் வீடு



தேடிப்போய், அவளைப் பலவகையாலும் உபசரித்துக் காதோலையைத் தரல்வேண்டும் என்று கேட்டான்; நீ என்னோடிருந்து வசித்து என்னோடு கூட உண்பையாயின், நான் காதோலையைத் தருவேன் என்றாள்; அதற்கு அவன் உடன்பட்டு, அவளுக்கு வேண்டிய தொழில்களையெல்லாஞ் செய்து, அவளைப் பிரீதி செய்து காதோலையை வாங்கிக்கொண்டான். அவன் தன் குரு எழுதிய பத்திரிகையைப்பார்த்து, அதிலே எழுதப்பட்ட அக்ஷரங்களைக் கண்டு மகிழ்ந்து, பின்னரும் அவளை இதுகாறுங் கூடியிருந்த தோஷமற யாது பிராயச்சித்தமாமோ என்று நினைந்து தைப்பூசத்திலே திருவிடைமருதூருக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து, மத்தியார்ச்சுனரோடு காவேரிக்குப்போய் ஸ்நானஞ் செய்து, மகாலிங்கமூர்த்தி தரிசனஞ் செய்துகொண்டு போகும்போது, அரதத்தாசாரியர் கிரகத்துக்கு வந்து அவரை நோக்கி, சுவாமி! எனக்கு அன்னங் கொடுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்திப்ப, ஆசாரியர் அவரைத் தமது ஒரே பந்தியிலிருத்திப் போசனங் கொடுத்தார். போசனமுடிந்தபின் அவர் வெளியிலேவர, அதைக் கண்டு கிராமத்தார் இவன் தொம்பச்சி சகவாசம் பண்ணினவனென்று அரதத்தாசாரியருக்குப் பிரஸ்தாபித்தார்கள். பின்னர் அவர்கள் திரியம்பகரைநோக்கி நீ எந்தப்பந்தியிலிருந்து சாப்பிட்டாயென்று வினவ, அவர் உள்ளவாறு சொல்ல, அதைக்கேட்டு அவர்கள் ஆசாரியரிடத்திலே போய், மகாபாதகனாகிய இவனோடு நீர் சாப்பிட்டது நிந்தையாமன்றோ என்றார்கள்; அப்போது அவர் அவர்களை நோக்கி, தைப்பூசத்திலே மகாகாவேரியிலே ஸ்நானம் பண்ணி மகாலிங்கமூர்த்தி தரிசனம் பண்ணியிருக்கின்றார்; ஆதலினால் அவர் மகாபாதகங்களினின்று நீங்கினார் என்றார். கோடி சென்மங்களிலே செய்த பாவம் சிவதரிசனத்தினாலே அக்கினியிலிட்ட பஞ்சுபோல நசித்துப்போம் என்றார். இந்த வாக்கியத்தைக்கேட்டு அவர்கள் பின்னுஞ் சொல்வாராயினார். அவளோ தாசி, அகோராத்திரம் அவன் அவளோடு இருந்தமையால், அவையெல்லாம் கேவலம் காவேரி ஸ்நானத்தால் எவ்வாறு நீங்கும் என்றார்கள். உடனே அரதத்தாசாரியர் அந்தப்பிராமணரைத் திரியம்பகரே என்றழைத்து, நீர் இவர்களோடு திருவிடைமருதூருக்குச் சென்று, நான் புஷ்ய நக்ஷத்திரத்திலே காவேரியில் ஸ்நானஞ் செய்து உம்மைத் தரிசனம் பண்ணினமையால் என் பாவம் போய்விட்டதோ, சுவாமீ! சொல்லும் என்று

கேளும், என்றார். இங்ஙனம் அரதத்தாசாரியர் அறிவுறுத்தக் கேட்ட திரியம்பகர் அப்பிராமணர்களோடு திருவிடைமருதூருக்குப் போயிருந்த சமயத்திலே, ஆலயம் சிவனடியாரால் நிறைந்திருந்தது. திரியம்பகர் சுவாமியைப் பார்த்து, தேவாதி தேவரே, தயா சமுத்திரரே, புஷ்ய நக்ஷத்திரத்திலே காவேரி ஸ்நானத்தினாலும், உமது தரிசனத்தினாலும் அவ்வேசியோடு யான் சங்கமஞ் செய்துண்டு வாழ்ந்த தோஷம் போய்விட்டதா சொல்லும் என்று பிரார்த்தித்தார். அதுகேட்ட பக்தரக்ஷகராகிய மருதப்பெருமான் அவரை நோக்கி, ஏ குழந்தாய்! நீ செய்த அந்தப் பாவம் தீர்ந்துபோய்விட்டது என்றார். சரணாகதரக்ஷகராகிய சிவபெருமானுடைய வாக்கியத்தை அவர்கள் கேட்டு இது எதிரொலி வாக்கியமேயன்றி, ஈசுவரனுடைய வாக்கியமன்று என்று மறுத்தார்கள். இதைக்கேட்டு திரியம்பகர் கண்ணீர் வார அழுது, மீட்டும் ஆசாரியரிடம் வந்து இவர்கள் அதனை ஒப்புக்கொண்டிலர் என்று விண்ணப்பஞ் செய்தார். அப்போது அரதத்தாசாரியர் அவரோடு தாமுங்கூட ஆலயத்துக்குப் புறப்பட்டுப் போய், அந்தச் சபையிலே சுவாமியைப் பார்த்து பின்னுங் கேளும் என்றார். அவரும் அப்படியே முன்போல வணங்கி வேண்டினார். சுவாமியும் மகாமேக கோஷம்போல, மகாலிங்க தரிசனத்தினாலும், காவேரி ஸ்நானத்தினாலும் உன்பாவம் போயது போயது என அசரீரிவாக்கினால் அருளினார். உடனே எல்லாரும் ஆச்சரியப்பட்டு அரதத்தாசாரியரைப் புகழ்ந்தார்கள். இதுநிற்க,

அரதத்தாசாரியருடைய சகோதரியாருக்கு ஓர் மூடப்புதல்வர் அவதரித்திருந்தார். இவர் ஓர் நாள் தமது மாமனாருடைய பாதங்களிலே வீழ்ந்து வணங்கி, சுவாமி உமது அருளினாலே காசியகாக்ஷேத்திரத்து மணிகர்ணிகையிலே ஸ்நானஞ் செய்ய விரும்புகின்றேன் என்று ஆசையோடு வேண்ட, ஆசாரியர் கிராமத்திலேயுள்ள சரசிலே ஸ்நானஞ் செய்யுமாறு ஆஞ்ஞாபித்தார். மேன்மை தங்கிய புத்தியையுடைய இவர் உடனே அதில் ஸ்நானஞ்செய்ய, அவர் மணிகர்ணிகையிலே தோன்றி, பின்னர் கங்காஸ்நானஞ் செய்து, விசுவேசுரர் தரிசனஞ் செய்து கொண்டிருந்தார். இங்ஙனம் சில வருஷம் கழித்தபின், ஓர் நாள் விசுவேசுரர் ஆலயத்துக்குச் சமீபத்திலே ஒருவர் தமது பாரியாரோடு சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தார். அப்போது அவர் இவரை நோக்கி, ஓ பிராமணோத்தமரே! நுண்ணறிவுடையவரே! நுமது கிராமத்திலே



காசிபகோத்திரரும், நல்லோரும், வைதிகருமாகிய அரதத்தர் என்பவர் ஒருவர் இருக்கின்றாரா? என்று கேட்டார். அதற்கு அவர் நான் வசிக்கும் கஞ்சாபுரத்திலே அரதத்தர் எனப் பெயரிய என் மாதுலர் வசிக்கின்றார்: அவர் சைவேந்திரர், க்ஷேமத்தோடிருக்கின்றார் என்றார். அப்போது அவர் இவரது வார்த்தையைக் கேட்டுச் சந்தோஷமுற்று, காசியிலே ஒருவர் அவரது க்ஷேமம் விசாரித்தார் என்று சொல்லுதிர் என்றார்; அவரோடு அங்கிருந்த பாரியும் புன்முறுவலோடு நானும் விசாரித்தேன் என்று சொல்லுதிர் என்றார். அதைக்கேட்ட மருகனார் நான் நீங்கள் இருவருங் கேட்ட வசனம் சொல்வேனென்று சொல்லி, நான் இனி எப்படி அங்கே போகும் வன்மையுடையவனாவேன் என்றார். அதற்கு அவர் நீர் எப்படி இங்கு வந்தீரென்று கேட்க, அவர் என் கிராமத்திலே பிரமதீர்த்தம் என்று ஒன்றுளது. அதிலே ஸ்நானஞ் செய்யுமாறு என் மாமனார் ஆஞ்ஞாபிக்க, அப்படியே ஸ்நானஞ் செய்து இங்கே மணிகர்ணிகையிலே வந்து தோன்றினேன். இனி அவ்வாறு போகச் சக்தியுடையனல்லேன் என்றார். அதைக்கேட்ட பெரியவர் நீர் இப்பொழுதும் போய் மணிகர்ணிகையிலே ஸ்நானம் செய்யும் என்றார். அவர் அவ்வாறு மணிகர்ணிகையிலே ஸ்நானஞ் செய்து, உடனே பிரமதீர்த்தத்திலே தோன்றி, மகிழ்ச்சியோடும் மாமனாரை அடைந்து வணங்கி, சுவாமீ! உமது கிருபையினால் கங்காஸ்நானஞ் செய்து போந்தேன் என, ஆசாரியர் அவரை நோக்கி, காசியிலே யாராயினும் என்னை அறிந்தார் உளரோ? என்று கேட்ப, அதற்கு மருகனார் ஆம் காசியிலே விடரூபத்தோடு சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்த தமபதிகள் தங்கள் க்ஷேமத்தை விசாரித்தார்கள் என்றார். அதைக்கேட்ட அரதத்தர் அவர்கள் கேட்டார்களா! கேட்டார்களா!! என்று சொல்லிக் கண்ணீர் வார ஆனந்தபரவசராய் நிருத்தனஞ் செய்தார். இதைக்கேட்ட கிராமத்தாரெல்லாம் வந்து ஒருங்கு கூட, சிவாஞ்ஞையினாலே மணிகர்ணிகையிலே ஸ்நானஞ் செய்து பிரம தீர்த்தத்திலே வந்து தோன்றினமையால், இத்தீர்த்தத்துக்கும் மணிகர்ணிகை என்று பெயர் வழங்குக என்றும், இதிலே ஸ்நானஞ் செய்தவர்களுடைய பாவமெல்லாம் ஒழியும் என்றும் ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. அரதத்தாசாரியர் முதலிய யாவரும் அற்புதமாகிய இவ்வசரீரி வாக்கைக்கேட்டு, இது அடியார்கள் பொருட்டுச் செய்யப்பட்ட சிவலீலை என்று அறிந்துகொண்டார்கள். அரதத்தாசாரியரிடத்தி

லிருந்து அவர் மருமகனார் யாவும் அறிந்து சரவஞ்ஞராயினார். இவர் தமது மாமனார்செய்த சுருதி சூக்திமாலைக்கு வியாக்கியானஞ் செய்து மிகக்கீர்த்தி படைத்தார். சனங்கள் இவருடைய பக்தி விஷயத்தை நோக்கி இவருக்கும் அரதத்தர் என்று பெயர் கொடுத்தார்கள்.

அக்கஞ்சாபுரத்திற் சிவப்பிரியரென்னு மொரு மறையவருருமையாகப்பெற்ற சுமதி, தருமபாலன் என்னும் இரண்டு சிறுவர்களும் ஒரேதினத்தில் வாந்திபேதியாலும் பாம்புகடியாலும் இறந்தமையாலவர் மிகவுந் துக்கித்து இறந்த இருமக்களுடலங்களையுந் தகனஞ்செய்ய இட்டமில்லாதவராக அழுது கொண்டிருந்தனர். இதனை யுணர்ந்து அரதத்தர் அவ்விடத்திற் கெழுந்தருளி பிரேதங்களை வைத்திருப்பது சரியல்லவென்றுரைத்துப் புத்திர சோகத்தாலவர் அவ்வண்ணஞ் செய்யாமையால், மந்திரவிபூதியை அவ்விறந்த இருவருடலின்மீது மிட்டனர்; உடனே அவர்கள் உயிர் பெற்றெழுந்து அஞ்சலியஸ்தராக நின்று, சுமாமீ! நாங்கள் முற்பிறப்பில் இச்சிவப்பிரியருக்கு அடிமைகளான நந்தனும் வீரனுமாக விருந்தேம், இவரெங்களுக்குச் சரியான கூலி கொடாமையினாலிவர் மக்களாகப் பிறந்தேம், கடனொழிந்தமையா லுடலிழந்தேம்; உம்மாலிடப்பட்ட மந்திரவிபூதியினால் உயிர் பெற்றெழுந்தேமென்று அநேகவிடயங்களைக் கூறினார்கள். அப்பொழுது சிவகணங்கள் விமானத்துடனாகாயத்திற்றோன்றி அரதத்தருடைய விபூதிப்பேற்றினால் உங்களுக்குச் சிவலோகங் கிடைத்தது என்றனர். உடனே அவ்விருவரும் அவ்வுடலங்களைவிட்டுத் தேவ உருவமெய்திச் சிவலோகமடைந்தார்கள். இந்த ஆச்சரியத்தைக் கண்டவர்களுங் கேட்டவர்களுமானந்த மடைந்தார்கள்.

இப்படி இருக்குங்காலத்தில் ஓர் நாள் திருடன் ஒருவன் இராசாவின் கிரகத்திலே திருடிக்கொண்டு புறப்பட்டுப்போக, காவற்காரர்கள் அவனைத் தொடர்ந்துவர, அதுகண்ட கள்வன் ஓடிவந்து அரதத்தாசாரியரை நமஸ்கரித்து, சுவாமீ! காவற்காரர்கள் தொடர்ந்து வருகின்றார்கள்; என்னைக்கண்டால் கொன்று போடுவார்கள்; காத்துக்கொள்ளல் வேண்டுமென்று வேண்ட, உடனே அவர் அந்தத்திருடனுக்கு விபூதி தாரணஞ்செய்து யஞ்ஞோபவீத தாரணஞ் செய்து, தாலபாத்திரத்திலே போசனங் கொடுத்து உண்பித்தார். உண்டுக் கொண்டிருக்கும்போது, முன்னே ஓடி வந்த கள்வன் எங்கே என்று காவற்காரர்கள் அரதத்தாசாரிய



ரைக் கேட்டார்கள். அதற்கு அவர் நமது பிள்ளை உள்ளே உண்டு கொண்டிருக்கின்றான். ஐயமுளதேல் உள்ளே பிரவேசித்துப் பார்த்துக்கொள்க என்றார். அவர்கள் எங்குஞ் சுற்றிப்பார்த்தும் மற்றொருவரையுங் காணாது தம்வழியே போய் விட்டார்கள்.

அரதத்தாசாரியர் சர்வகர்த்தாவாகிய சிவபெருமானையே பூரணபாவனா தியானஞ் செய்துகொண்டிருந்தார். அப்போது சிவபெருமான் அவருக்குச் சாயுச்சியங் கொடுக்கவேண்டி, தாம் பிருங்கி நந்தி மகாகாளர் பிரமா விஷ்ணு முதலாயினோரோடு வாத்தியகோஷங்கள் முழங்க, அட்டதிக்குகளெல்லாம் அளவிலாப் பிரகாசம் விளங்க, சடையிலே அமைந்த கங்கைப்பிரவாகத்திலே சந்திரன் விளங்க, காதிலே சர்ப்பங்கள் இரத்தின குண்டலங்களாய் விளங்க, தமது மடித்தலத்திலே உமாதேவியார் அமர, கபோலங்களிலே தமது குண்டலங்கள் பிரதிவிம்பிப்ப, பவளக்கொடியின் மத்தியில் விளங்கும் முத்துக்கள்போல உதடுகளின் மத்தியிலே தந்த வரிசைகள் பிரகாசிப்ப, மந்தகாசத்தினாலே முகம் சோபிக்க, மான் மழு வரதம் அபயம் விளங்க, உருத்திராக்ஷமாலாதாரணராய் இடபாரூடராய் இடபத்தின் பிடரியிலே சர்ப்பகங்கணமணிந்த கரம் அமைய, உருகும் நெய்க்கட்டிபோல சச்சிதானந்த சொரூபியாகிய சிவபிரான் அரதத்தாசாரியருக்குச் சாயுச்சியம் கொடுக்குமாறு குருவடிவத்தோடு எழுந்தருளினார். இவ்வாறு தமக்கு முன் எழுந்தருளி மோக்ஷங் கொடுக்க விரும்பும் சுவாமியை ஆசாரியர் நோக்கி, அவரை ஆராமையினாலே மீட்டும் நமஸ்கரித்துத் தோத்திரம் பண்ணினார். பண்ணவே, ஆசாரியர் மீது சிவபிரான் பிரீதிசெய்து, ஏ. அரதத்த பக்த சிரோமணியே உனது திரிகாலபூசை செபம் ஸ்தோத்திரம் தியானம் என்பனவற்றால் நம்மை வழிபட்டனை; உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றார். அதற்கு ஆசாரியர் உமாசமேதராகிய கைலாசபதியை நோக்கி, சுவாமீ! நீர் இப்போது அடியேனுக்குப் பிரசன்னராய் வரங்கொடுப்பது மெய்யேயானால், எனக்கு இருபுறத்துமுள்ள பதினான்கு வீட்டுக்காரரையும் மீண்டு வாரா நெறியாகிய முத்தியிலே சேர்த்தருளும் லோகநாதரே! உமக்கு நமஸ்காரம் என்றார். இங்ஙனம் பிரார்த்திக்கச் சிவபிரான் அங்ஙனமாகுக என்று அங்கீகாரஞ்செய்ய, ஆயிரங்கிண்கிணி சாலங்களாலும் நவரத்தினக் கால்களாலும் அலங்கரிக்கப்பட்ட கோடிசூரியப் பிரகாசமாகிய விமானமொன்று வந்திறங்கிற்று. அதிலே பதின்மூன்று

வீட்டுக்காரரும் அவர்கள் பந்துக்களும் சிநேகிதர்களும் வந்தேறி னார்கள். சுவாமி அரதத்தரை நோக்கி, பதின்மூன்று வீட்டுக் காரர்கள் வந்து ஏறினார்கள். மற்றோர் வீட்டுக்காரர் எங்கே என்று மிகுந்த கருணையோடும் வினவ, அவர் பதினான்காம் வீட்டுக்காரி ஓர் கிழவி, அவள் சரீரமெல்லாம் திரைத்து வெளுத்து நடுங்கப்பெற்றவள், நெடுங்காலத்தாள்; ஒவ்வோர் நாளும் விக்கினேசுரருக்கு மோதகம் நிவேதிப்பவள் என்று கூறி, அவளை அழைத்து வருமாறு ஒருவரை அனுப்ப, அக்கிழவி அழைக்க வந்தவரை நோக்கி, நான் விநாயகக்கடவுள் பொருட்டு அடுப்பிலே மோதகம் பாகமாமாறு வைத்தேன், அது நிவேதிக்கப்பட்டபின் வருவேன், போகின்றவர்கள் கைலைக்கு முந்திப் போகலாம், நான் விக்கினேசுரருக்கு நிவேதனம் பண்ணிவிட்டுப் பின்பு வருகின்றேன் என்று சொல்லியனுப்பினாள். இவர் அவள் வார்த்தையை ஆசாரியருக்குச் சொல்ல, அவர் நாங்கள் இப்போது பிரஸ்தானமாவேம், அக்கிழவி விக்கினேசுரருக்குப் பூசை செய்து கொண்டு வருகின்றாளாம் என்றார். அப்போது சுவாமி புன்சிரிப்படைந்து பக்கத்திலிருந்த கணபதியை நோக்கி, அக்கிழவியுடைய பூசையை அங்கீகரித்துக்கொண்டு அவளை கைலைக்கு இட்டுக்கொண்டு வருக என்று அவரை ஆலயத்தின் புறத்திலே இருக்கச்செய்தார். அரதத்தாசாரியர் விமானத்தில் ஏறும்பொழுது, அவருடைய வைசுதான்னம் நாடோறும் புசித்துவந்த ஓர் சுவானமானது இரக்கத்தினாலே அழ, அதனையும் எடுத்து இரதத்தின் மேலேற்றி வைத்துத் தாமும் ஏறினார். சிவபிரான் அரதத்தாசாரியர் முதலிய பக்தர்களோடு கைலையை யடைந்தார். இதற்குள்ளே மோதகம் பாகஞ்செய்து முடித்து, அவற்றை மற்றைய உபகரணங்களோடு கொண்டுபோந்து, சாவகாசமாக விநாயகருக்குப் பூசைசெய்து முடிப்ப, அவ்விநாயகர் அவளை நோக்கி உனது பூசைகொண்டு பிரீதியுற்றேம். உனக்கு வேண்டிய வரத்தைக் கேளென்ன, அவள் லோகோபகாரமாக ஓர் வார்த்தை கேட்கின்றாள், சுவாமீ! இப்படிப்பட்ட ஓர் கிழவி பூசித்து வந்தாளென்ற புகழ் நிலைக்குமாறு நீர் இவ்விடத்திலே சாந்நித்தியமாயிருந்து, உமக்கு மோதக முதலியன வைத்து நிவேதித்து உம்மை பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்கின்றவர்களுக்குக் கைலாயத்தைக் கொடுத்தருளல் வேண்டுமென்று உரைத்து, தனக்குக் கைலாய பிராப்தியைத் தந்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தாள்.



அதற்கிசைந்து விநாயகர் அவள் கைலாசத்தை அடையத்தக்க சத்தியைக் கொடுத்து அவர் ஆங்கே எழுந்தருளி யிருந்தார். இரதத்தின்மீதிவர்ந்து போந்தவர்கள் பாதித்தூரஞ் செல்லற்கு முன்னரே இவள் அவர்களைக் கண்டு சேர்ந்தாள். அங்குள்ளோர் நீ இவ்வளவு வேகமாய் வந்தாயோ என்று கேட்ப, அவள் "குதிரையுங் காதம் கிழவியும் காதம்" என்பது அறியீர்களோ என்றாள். அந்த வார்த்தையைக் கேட்டுக்கொண்டு அவர்கள் எல்லோரும் அழியாததும், பழிப்பற்றதும், ஆனந்தமே உருவமானதும், ஞானிகளுள்ளம்போல வெண்ணிறம் பொருந்தியதும், பாவிகளாலடையக்கூடாததும்; அருவியை ஒலியாலும் ஐராவதத்தை மதநீராலும், சந்திரனைக் களங்கத்தாலும், அன்னத்தை நடையாலும் அறியவேண்டிய வெண்மையை யுடையதும், பகலு மிரவு மற்றதும், பரமேசுவரனையே ஒத்ததுமான ஸ்ரீகைலாசத்தை அடைந்தார்கள். பதினான்கு வீட்டுக்காரரும் சந்திரகலா சூடராகிய சம்புவுடைய சாரூபத்தைப் பெற்றார்கள்.

ஸ்ரீ ஹரதத்தாசாரியர் சரித்திரம் முற்றிற்று.

---

## தேவார வைப்புத்தல விளக்கம்.

(168-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 6—மூவலூர்.

திருநாவுக்கரசுநாயனார் அருளிய திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூவ னூர்தண் புறம்பயம் பூம்பொழி
நாவ லூர்நன் னாரையூர் நன்னிலங்
கோவ லூர்குட வாயில் கொடுமுடி
மூவ லூர்முக் கண்ணனூர் காண்மினே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் புன்னாகவன மென்பர். சுவாமிபெயர் - புன்னாகவனேசுரர். அம்பிகை - மங்களாம்பிகை, சௌந்தரநாயகி. அம்பிகைக்கு நேர் ஓர் தீர்த்தமிருக்கிறது. சமீபத்தில் காவேரிநதியுமிருக்கிறது. மாயவரம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு 2-மைல்.

## 7—திங்களூர்.

### திருநாவுக்கரசுநாயனுர் அருளிய திருவாரூர் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தேரூரார் மாவூரார் திங்களூரார் திகழ்புன் சடைமுடிமேற் றிங்கள்சூடிக்
காரூரா நின்றகழனிச் சாயற்கண்ணார்ந்த மாடங்கலந்து தோன்றும்
ஓரூராவுலகெலா மொப்பக்கூடி யுமையாண் மணவாளாவென்று வாழ்த்தி
யாரூரா வாரூரா வென்கின்றார்க ளமரர்கடம் பெருமானே யெங்குற்றாயே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் அப்பூதிநாயனுர் அவதரித்து வழிபட்டது. தன்னு டையன வெல்லாம் திருநாவுக்கரசு நாயனருக்கே உரியனவென்று மைந்தர்கட்கும் அப்பெயரை யிட்டு வழங்கி வருநாளில் பிள்ளைக்கு விஷந்தீண்டி மரணமடைந்ததை ஷை திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்பாடி உயிர்ப்பித்த காரணத்தால் சுவாமிபெயர் - பரமேஸ்வரர் என்றதை விஷந்தீர்த்தநாதர் என்கிறார்கள். அம்பிகை- பூங்கோதை.

தஞ்சாவூர் ரெயில்வே ஸ்டேஷனி லிறங்கி திருவையாற்றி லிருந்து திருப்பழன மென்கிற சிவஸ்தலத்துக்கு 1-மைல்.

## நல்லாற்றூர்.

### திருநாவுக்கரசுநாயனுர் அருளிய அடைவுதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பிறையூருஞ் சடைமுடியெம் பெருமா னூர் பெரும்பற்றப் புலியூரும்
பேராவூரு நறையூரு நல்லூரு நல்லாற்றூரு நாலூருஞ் சேற்றூரு நாரை
யூரும், உறையூரு மோத்தூரு மூற்றத்தூரு மளப்பூரோ மாம்புலியூ ரொற்றி
யூருந், துறையூருந் துவையூருந் தோழூர்தானுந் துடையூருந் தொழவிடர்க
டொடரா வன்றே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம், திருக்கைலாயகிரியிலுள்ள சிவகணநாதரி லொருவராகிய சங்குகன்னர் பூலோகத்தில் அவதரித்து பாலசித்தரென்னும் திருநாமத்துடன் மயூராசலத்தில் தவமியற்றி முருகக்கடவு ளருள் பெற்றுச் சிலகாலம் மடம் ஏற்படுத்தி வாசஞ் செய்தனர். சுவாமி பெயர்-சொர்ணபுரீசுரர். அம்பிகைபெயர்-திருவழகி. கூபதீர்த்தம்.

விழுப்புர மிருந்து புதுச்சேரி மார்க்கத்திலுள்ள கண்டமங்கலம் ஸ்டேஷனுக்கு மூன்றுமைல்.

(தொடரும்.)

பு. வே. சுப்பராயமுதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

| மலர் 7 | துன்மதிவரு சித்திரைமீ 1921வரு எப்ரல்மீ | இதழ் 1 |
| --- | --- | --- |

## விநாயகர் தோத்திரம்.

“ மாவேலை யாலமதையடக்கித்தன்னுண்
மண்டலகமண்டமெலாம் வளர்ந்துதானோர்
காவேயின் முன்னுதித்த வரசிற்றோன்றிக்
கடம்புபுனை குருந்தினுக்குத் துணையதாகித்
தாவேதந் தலைகாண்டற் கரியதாகித்
துன்பமுறு பிறவியெனுந் துகள்சேர்வெய்யி
லாவேனைத் தன்னடியா நிழலிற்சேர்த்த
வத்திதனைப் பத்திசெய்து முத்திசேர்வாம்.”

(இ - ள்.) பெரிய சமுத்திரத்திலுண்டாகிய ஆலகாலவிஷத்தைத் தன் கண்டத்துக் குள்ளடக்கி உலகங்கள் அண்டங்க ளெங்கும் பரவி முற்காலத்தில் ஒரு மூங்கிற்புதரில் தோன்றிய இறைவனிடத்தில் திருவவதாரமாகியும், கடப்பம் பூமாலையணிந்த முருகக் கடவுளுக்குச் சகோதரமாகியும், நிர்மலமான வேதங்களாலுந் திருமுடியைக் காணுதற்கரிய பொருளாகியும், துன்பமே மிகுத்துள்ள பிறவியாகிய குற்றம்பொருந்திய வெய்யிலில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் அடியேனைத் தன் திருவடியாகிய நிழலில் சேர்த்த யானைமுக விநாயகருக்குப் பத்திசெய்து முத்தியிற் சேர்வாம்.

## சிவஞான போதம்.

(முற்றொடர்ச்சி.)

### பதினொராஞ் சூத்திரம்.

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே.

இச்சூத்திரம் சிவப்பேறுகிய பயனைக் கூறுகின்றது.

(இ - ள்). காணுங் கண்ணுக்கு=காட்டக் காண்பதாகிய கண்ணுக்கு—(காண=உருவத்தைக் காணுமாறு)—காட்டி=(பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று அதற்குக்) காட்டி—(காணும்) உளம்போல்=(தான் காண்கின்ற) ஆன்மாவைப்போல—(காணும்=அறிவிக்க அறிவதாகிய)—உள்ளத்தை=அவ்வான்மாவுக்கு—காண=விடயத்தை யறியுமாறு—காட்டி=(முதல்வன் பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று அதனை) அறிவித்து—காண்டலின்=தான் அறிந்து வருதலால்—(அதனை=அவ்வாறு அத்துவிதமாய் நின்று உதவிசெய்துவரும் பெருங்கருணையை)—அயரா அன்பின்=மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பினாலே—அரன் கழல் செலுமே=(ஆன்மா) அம்முதல்வனது திருவடியாகிய சிவானந்தாநுபூதியைத் தலைப்படும் (எ - று.)

இச்சூத்திரம் காணும் கண்ணுக்குக் (காணக்காட்டிக்) காணும் உளம்போல், காணும் உள்ளத்தைக் காணக் காட்டிக் காண்டலின், (அதனை) அயரா அன்பின் அரன் கழல் செலுமே—என விரித்துரை செய்யப்பட்டது.

வெகுண்டு வேர்த்தான் என்பது வேர்த்து வெகுண்டான் எனப்படுவது போல், காட்டிக் காண்டல் என்பது கண்டு காட்டல் எனப்பட்டது. அயராமைக்குச் செயப்படுபொருள் அதனை யென்றெடுத்துக்கொள்க. அயரா அன்பு=அயராமையானாகிய அன்பு. உள்ளத்திற்கு என்பது உள்ளத்தை யென நின்றது உருபு மயக்கம். அறிவிச்சை செயல்களுள் அறிவின் நிகழ்ச்சியாகிய அயராமையும், இச்சையின் நிகழ்ச்சியாகிய அன்பும், செயலின் நிகழ்ச்சியாகிய அரன் கழல் செல்லுதலும் முறையே காரண காரியங்களாய் அரன் கழல் செல்லுதலாகிய அவ்வொருள் பொருள்மேல் ஒருங்கு நிகழு மென்பார் "அயராவன்பின் அரன்கழல் செலுமே" என்றார். இதனால் அறிவு இச்சை செயல் ஆகிய இம்மூன்றும் முதல்வனையே விடயித்தல் அறிக.

## இச்சூத்திரத்தின் விரிவுரை

காணுங் கண்ணுக்குக் காணக்காட்டிக் காணும் உளம் போல்=ஆன்மாவின் துணையின்றி ஒன்றையும் காணமாட்டாத கண் ஒருருவத்தைக் காணுமிடத்து, ஆன்மபோதமானது கண்ணொளி வேறு தான் வேறு என வேறு காணப்படாது உடனாய்க் கலந்து நின்று, கண்ணுக்குக் காட்டிய உருவத்தைக் கண் கண்டது என்றும் கண்ணை அதிட்டித்து நின்ற ஆன்மா கண்டது என்றும் பிரித்து அறியப்படாதபடி இருவகைக்காட்சியும் ஒன்றையொன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே நிகழும் முறைமைபோல்—காணும் உள்ளத்தைக் காணக் காட்டிக் காண்டலின்=முதல்வன் துணையின்றி ஒன்றையும் அறியமாட்டாத ஆன்மா ஒரு விடயத்தை யறியுமிடத்து அம்முதல்வனது சிற்சத்தியானது ஆன்ம சிற்சத்தி வேறு தான்வேறு என்று வேறு காணப்படுமாறின்றி உடனாய்க் கலந்துநிற்க, முதல்வனும் ஆன்மாவில் அவ்வாறு விரவிநின்று அறிவித்த விடயத்தை ஆன்மா அறிந்ததென்றும் ஆன்மாவை அதிட்டித்து நின்ற தான் அறிந்தான் என்றும் பிரித்தறியப்படுமாறின்றி இருவகையறிவும் ஒன்றையொன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே விடயித்துச்செல்லுமாறு செய்துவரும் இவ்வுபகாரம்பெத்தம்முத்தி இரண்டினும் ஒருபெற்றித்தாய உண்மையின்—அதனை அயரா அன்பின் அரன்கழல் செலும்=ஏனையவற்றை யெல்லாம் கைவிட்டு முதல்வனிடத்து ஏகனாகி அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாய் நின்ற ஆன்மா, முதல்வன் அவ்வாறு அத்துவிதமாய் உடனின்று கருணையான் உபகரித்துவரும் உரிமையை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அப்பொருளின்கட் செல்லும் இச்சை அடங்காது மீதூர்தலின் அவ்விச்சையே தானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அநுபவிக்கப்பெறும்.

இதனால் அறிவிச்சை செயல்கள் மூன்றும் அம்முதல்வனை ஒருங்கே விடயித்து நிற்குமாறு விளக்கி அதீத நிலையின் இயல்பு கூறியவாறும்.

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

1-வது—காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல் காண வுள்ளத்தைக் காட்டிக் காண்டல்.

2-வது—அதனை அயராவன்பி னரன்கழல் செலுமே.

## இச்சூத்திரத்தின சூர்ணிகை.

1-வது—ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அநுபவிப்பன்.

2-வது—அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கமாய்ப் போவன்.

### இச்சூத்திரத்தின் வார்த்திகம்.

1-வது—கண்டு அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றது—இவ்வான்மாக்கள் அவனையின்றி யமைந்தொன்றையும் விடையியா வர்கலான்.

2-வது—இனிப் பத்தியினுன் மறவாதேத்த அவனது சீபாதத்தை அணையும் என்றது—அவன் அங்கியமின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்து நிற்றலான்.

---

### இச்சூத்திரத்தின் உதாரண வெண்பா ஆறு.

---

### முதலாம் அதிகரணம்.

**காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல் காண வுள்ளத்தைக் காட்டிக் காண்டல்.**

(இ - ள்.) காட்டக் காண்பதாகிய கண்ணுக்கு உருவத்தைக் காணுமாறு அதனோடு ஒருங்கு கலந்து நின்று காட்டித் தான் காண்கின்ற ஆன்மாவைப்போல், அறிவிக்க அறிவதாகிய அவ்வான்மாவுக்கு விடயத்தை யறியுமாறு அதனோடு ஒருங்கு கலந்து நின்று அறிவித்துத் தான் அறிந்து வருதலால் (எ - று.)

(தொடரும்.)

---

## தேவார வைப்புத்தல விளக்கம்.

(6-வது மலர் 192-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 8 கோண்டல்.

**சுந்தரமூர்த்திநாயனார் அருளிய திருநாட்டுத்தொகை.**

*திருச்சிற்றம்பலம்.*

*அண்டத் தண்டத்தி னப்புறத்தாடு மமுதனூர்*
*தண்டந்தோட்டந் தண்டங்குறை தண்டலையாலங்காடு*
*கண்டன் முண்டல்கள்சூழ் கழிப்பாலை கடற்கரை*
*கொண்டல்நாட்டுக் கொண்டல் குறுக்கைநாட்டுக் குறுக்கையே.*

*திருச்சிற்றம்பலம்.*

இத்தலம் பிரமதேவனை முருகக்கடவுள் பிரணவங் கேட்டுச் சிறையிட்டது. சிவபெருமான் விஷ்ணு முதலான தேவர்கள் வேண்ட, சிறைவிடுவிக்கும் பொருட் டெழுந்தருளி, குமாரக்கடவுளைத் தாரகோபதேசம் கேட்டது. விஷ்ணுவும் அங்கொருபுறத்தி லிருக்கிறார்.



சுவாமிபெயர் - தாரகபரமேசுரர். முருகப்பிரானுடைய தலமாய் வழங்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் ஓர் ஊர் பக்தகுடியென்று வழங்கும் காரணம் மற்ற தேவர்களெல்லாம் முருகப்பெருமானை வணங்கிப் பேறடைந்தது.

விஷ்ணு வழிபட்டதால் கொண்டல் வண்ணன்குடி என்றிருந்த பெயர் நாளடைவில் கொண்டல் வள்ளுவக்குடி என மருவி வழங்குகின்றது. தைப்பூசம முதலிய புண்ணியவிசேட காலங்களில் அற்புதக் காவடிகள் வருகின்றன. சுவாமிபெயர் - குமாரக்கடவுள். அம்பிகை-தெய்வயானை, வள்ளியம்மை. தீர்த்தம் - சரவணப் பொய்கை.

சீகாழி ரெயில்வே ஸ்டேஷனிலிறங்கி மேற்கே 3½-மைல்

### நாங்கூர்.

**சுந்தரமூர்த்திநாயனார் அருளிய திருநாட்டுத்தொகை.**

*திருச்சிற்றம்பலம்.*

*தேங்கூரும் திருச்சிற்றம்பலமும் சிராப்பள்ளி*
*பாங்கூரெங்கள் பிரானுறையுங் கடம்பந்துறை*
*பூங்கூரும் பரமன் பரஞ்சோதி பயிலுமூர்*
*நாங்கூர் நாட்டு நாங்கூர் நறையூர் நாட்டு நறையூரே.*

இத்தலம் மதங்கரிஷியாச்சிரமம். அவருடைய தவத்தை அழித்தற்பொருட்டு மோகினிரூபங் கொண்டுவந்த விஷ்ணு சங்கு சக்கரத்தோடு அக்கோவிலிலிருக்கிறார். இன்னும் அநேக சிவாலயமிருந்து கிலமாய்ப் போனதாய்த் தெரியவருகிறது. இத்தலத்தில் கீழ்த்திசைநோக்கிய சிவலிங்கத்துக் கெதிரேயுள்ள பலிபீடத்தில் முறைப்படி மேற்றிசை நோக்கி யிருக்கும் நந்தியோடு கீழ்த்திசை நோக்கி ஒருநந்தி யிருக்கிறது. திருவிசைப்பா திருப்பல்லாண்டருளிச்செய்த சேந்தனார் திருவவதாரஞ் செய்தது.

இவர் சிவஞானப் பெருஞ்செல்வம் வாய்ந்து விளங்கிய ஸ்ரீபட்டினத்துப்பிள்ளையார் முக்கிய காரியஸ்தரா யிருந்து, அப்பிள்ளையார் துறவு பூணுங்கால் உத்தரவு செய்தபடி அவர் சொத்துக்களைக் கொள்ளையிடுவித்தல் காரணமாகத் தமக்கு அரசனால் நேர்ந்த விலங்கும் அப்பட்டினத்துப் பிள்ளையார் திருவருளாலேயே நீங்கப் பெற்றதோடு, அருளுபதேசமும் பெற்று, சிதம்பரத்தே வசித்து, ஸ்ரீ சிற்சபாநாதரையே தம்முடைய அன்புள்ள

களி யமுதுண்ணும் விருந்தாகக்கொண்டும், திருப்பல்லாண்டால் திருத்தேர் தானேவரச்செய்தும் முத்திப்பேறடைந்தவர் இந்நாயனார் செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஸ்ரீநம்பியாண்டார் நம்பியாரால் ஒன்பதாந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ சிற்சபாநாதர் இவர்பாற் சென்று களியமுதுண்டது ஞாபகமாக, இரதோச்சவத்திற்கு மறுநாளாகிய திருவாதிரையன்று தெய்வபக்தியுடையார் இப்போதும் களி நைவேத்தியம் செய்தல் வழக்கமாக விருக்கின்றது.—அதுபற்றி

திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார் திருக்களிற்றுப்படியாரில்

"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த வவிழை
யவிழ்ந்த மனத்தா லவிழ்க்க—அவிழ்ந்தசடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்." என அருளினார்.

சுவாமிபெயர் - மதங்கேசுரர். அம்பிகை - மையாடுகண்ணி. தீர்த்தம் - மணிகர்ணிகை.

சீர்காழிரெயில்வே ஸ்டேஷனி லிறங்கித் திருக்கடையூர் போகிறமார்க்கம் 6-வது மைல்.

(இன்னும் வரும்.)

பு. வே. சுப்பராயமுதலியார்.

---

## வேதாந்தம்.

காரைக்குடி ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார் அவர்கள் இயற்றியது.*

வேதாந்தம் என்பது, வேதசிரசு, வேதமுடி, உபநிஷதம், என்பனவாதி பெயர்களால் வழங்கப்பெறும். இது வேதங்களின் முடிவாகியபொருள் கூறுவதாகும். இவ்வுபநிடதங்கள் நூற்றெட்டு, முப்பத்திரண்டு, பத்து முதலிய பகுதிகளா யுள்ளன. இவை யெல்லாம் மிகுதியும் பதி பசு பாச நித்தியங் கூறுவனவேயாம். இப்பதி பசு பாசங்கள் பல பரியாய நாமங்களால் வழங்கப் பெறுவன. அவைகளை முன் பின் நோக்கி ஊகித் துண்மையுணர்வார்கள் புத்திமான்கள். சிலர், நாங்கள் வேதாந்திகளென்று சொல்லிக்கொண்டு, வேதாந்தமாகிய உபநிடதங்கள், பதி பசு பாசங்களாகிய ஈசுவரன் சீவன்செகத்தெல்லாம் பொய்யே பிரமம் ஒன்றேயுள்ளது, நாமே அப்பிரம மென்று கூறுகின்றனவாகவே



பிறர்க்கும் போதிக்கின்றார்கள். இக்கொள்கை உண்மையல்லவென்பதை, அந்த வேத வேதாந்த மூலமாக விளக்கிக் காட்டினால் அதனை எல்லாரும் ஒப்புக்கொள்ளுவார்களாதலால், அங்குள்ள பிரமாணங்கள் ஈண்டு எடுத்துக் காட்டப்படும். உள்ளிட்டுநோக்கி உண்மை தெளிக.

முதலாவதாகிய இருக்கு வேதத்தில் (க-ம்) மண்டலத்து (கசுச-ம்) சூக்தத்து (உ0-ம்) மந்திரம், இரண்டு அழகிய பக்ஷிகள் இஷ்டத்துடன் கூடிக்கொண்டு ஒரே விருக்ஷத்தில் வசிக்கின்றன. அவ்விரண்டு பக்ஷிகளில் ஒன்று, அந்த அரசமரத்தின் இனிய பழத்தைப் புசிக்கின்றது. மற்றொரு பக்ஷியோ, அப்பழத்தைப் புசியாமற் பார்த்துக்கொண்டிருக்கிறது என்று கூறுகின்றது. இதில் இரண்டு பக்ஷிகளென்றது, பரமான்மாவாகிய பதியையும், சீவான்மாவாகிய பசுவையுமே. விருக்ஷமென்றது, சீவர்களுக்குக் கர்மாநுகுணமாயுள்ள சரீரத்தையும், பழமென்றது சீவர்களது கர்மாநுபவத்தையும் ஒருபக்ஷி புசிக்கின்றதென்றது சீவர்கள் வினைப் பயன்களை யநுபவித்தலையும், ஒருபக்ஷி புசிக்காது பார்த்துக் கொண்டிருக்கின்றதென்றது பரமான்மாவாகிய சிவன் அக்கர்மாதி மலத்திரயங்களைக் கடந்தவன் சர்வசாக்ஷியாய்ச் சர்வபரிபூரணனாயுள்ளவனென்பதையுமே குறித்துவிளக்குகின்றன. இது போலப் பதிபசு பாசங்களின் நித்தியங் கூறுகின்ற வேத வாக்கியங்கள் பற்பலவுள்ளன விரிப்பிற் பெருகும்.

இனி, மேற்கூறிய வாக்கியங்கள் குறிப்பாகத்தானே விளக்குகின்றன என்றால், அதனை விளக்கிக்கூறுகின்ற வசனங்கள் பின்வருவன. ஒரே சரீரமாகிய விருக்ஷத்திலே, புருஷனாகிய சீவான்மா, சுதந்திரமின்மையால் மயங்கித் துக்கசாகரத்தில் முழுகிக்கிடக்கின்றான்; அவன் எப்போது பரமான்மாவாகிய ஈசனை அறிந்து அவரது மகிமைக்குணத்தை (அஷ்டமங்கள திவ்யகுணங்களை) அடைகின்றானோ, அப்போது அத்துன்ப நீங்கினவனாகின்றான் என்று முண்டகோபநிடதம் (கூ, க, க,) மந்திரங் கூறுகின்றது.* ஈண்டுக் காட்டிய இருக்குவேத முண்டகோபநிடத மந்திரங்களினாலே, பரமசிவனாகிய பதியும், சீவனாகிய பசுவும், அவன் மயங்கிக்கிடத்தலால் அறிவைமறைக்கும் ஆணவமலமும், அவனுக்குச்சரீராதிகளைக் கொடுத்த மாயாமலமும், அவன் பழத்தை உண்ணுதலாகிய கர்மாநுபவத்தைக்கொடுத்த கர்மமலமுமாகிய மும்மல மென்கின்ற பாசமுமாகிய திரிபதார்த்தங்களும் என்றுமுள்ள அநாதி நித்தியங்

களே யென்பது தெளிவாயது. இதனை, ஏகாத்ம வாதிகளாகிய மாயாவாதிகளும் மேற்கொண்டு பாராட்டுகின்ற கைவல்லியமும்,

அச்சுவத்தமென் றொருமர மதிலிரண்டரும் பறவைகள் வாழும்
நச்சு மங்கொரு பறவையம் மரக்கனி நன்றான் றெனத்தின்னும்
மெச்சு மங்கொரு பறவை தின்னுதென வியங்கியப் பொருளாக
வைச்சு மாமறை சீவனை யீசனை வகுத்த வாறறி வாயே.

என்று விளக்குகின்றது.

இனி, "பின்மனிதன் சிவசாமிய முற்றுப் பிரமானந்தத்தை அனுபவிக்கின்றான்." என்று கடவல்லி யுபநிடதம். (௬, ௧௪) லும், "இதுதான் சீவர்களுக்கு உறைவிடம் இது சிவம்" என்று பிரசினோப நிடதம் (௧, ௧௦)லும் "உனக்கு ஆத்மாவாயுள்ளவர் அந்தரியாமியாகிய சிவன்" என்று பிருகதாரணியோபநிடதம் (௫, ௭; ௩,௨௩) லும்" அறிந்து சிவானந்தம் அனுபவிக்கின்றனன் "அறிந்து சிவானந்தமனுபவிக்கின்றனன்" என்று பிரசினோபநிடதம் (௩, ௧௨) லும் "க்ஷரத்தையும் (பாசத்தையும்) (சீவ) ஆன்மாவையும், ஆளுபவர் ஏகராகியதேவர்." (சிவன்) என்று சுவேதாச்சுவதரம் (௧, ௧௦) லும், "பரமும் அபரமுமாகிய, (சீவப்) பிரமம் (சீவான்மா) பரப்பிரமம் (பரமான்மா) என்னும் இரண்டும் அறியற்பாலன." என்று மைத்ராயணோபநிடதம் (௬, ௨௨) லும் "மகிழ் வுடையனாய் (சீவான்மாவுக்கு) வேறாகிய சிவபிரானையும், அவரது சர்வஞ்ஞதாரூபத்தையும், எப்போது பார்க்கின்றானோ அப்போது பாசத்துக்கம் நீங்கினோனாவன், என்று முண்டகோப நிடதம் (௧, ௩, ௧௨) லும், சுவேதாச்சுவதரம் (௪, ௭) லும் சீவான்மாக்கள் பலவென்பது விளங்கச் "சர்வாத்மாக்களிலும்" என்று சாந்தோக்கியோப நிடதம் (௫, ௧, ௧௮) லும், (சீவ) ஆன்மாவிலே பரம ஆன்மாவைப் பார்க்கின்றனன் என்று பிருகதாரணியம் (௬, ௪, ௨௩) லும் (சீவ) "ஆன்மாவில் இருப்பவராக அவரை (சிவபிரானை) எந்தப்பெரியோர் பார்க்கின்றாரோ அவர்களுக்கே ஆனந்தம், பிறர்க்கில்லை." என்று கடவல்லி (௫, ௧௩) லும் சுவேதாச்சுவதரம் (௬, ௧௨) லும் கூறுகின்ற உண்மைகளை உற்று நோக்குமிடத்துப் பதிபசு பாசங்கள் உள்பொருள்களென்றே பரிஷ்காரமாக விளங்குகின்றன. மேலும், "சத்தியத்தின் சத்தியம்" என்றும், (சிவபிரானாகிய பதிப்பொருள்) "நித்திய பதார்த்தங்களாகிய (பதிபசு பாசங்களுள்ளே) நித்தியர் "என்றும் சேதனபதார்த்தங்களாகிய (பதி விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் சேதனப்பொருள்களுள்ளே சேதனர் என்றும் "பிரதானம் ஆன்மா என்னுமிரண்டுக்கும் பதியாகிய குணங்களையுடைய ஈசரென்றும், இந்தப்பசுக்களைப் பதியாகிய (சிவபிரான்) ஆளுகிறார் என்றும், பிருகதாரணியம் கடவல்லி சுவேதாச்சுவதரம் முதலிய உபநிடதங்கள் கூறுகின்றன. இங்ஙனமாகவும் இவை மூன்றும் (சீவன் ஈசுரன்செகம் மூன்றும்) அநித்தியங்களேயென்றும் பிரமம் ஒன்றே நித்தியமென்றும் நாமே அப்பிரமமென்றுங் கூறுகின்றவர்களை அகம் பிரமவாதிகள், ஏகாத்மவாதிகள், மாயாவாதிகளென்று கூறுதல் பொருத்தமேயன்றி வேதாந்திகளென்பது பொருந்துமா? வேதாந்தங்களாகிய உபநிடதங்கள் திரிபதார்த்தங்கள் உண்டென்றேகூற, நேர் விரோதமாக அவை யில்லை யென்பவர்கள் அவ்வேதாந்த விரோதிகளேயன்றி வேதாந்திகளாகார்களென்பது சொல்லவும் வேண்டுமா?

சீவன் ஈசுரன் செகத்தெல்லாம் (கற்பிதமே) பொய்யே என்றுஞ் சில வேதாந்தங்கள் கூறுதலால் அவற்றை மேற் கொண்ட எங்களை வேதாந்திகளென்னத் தடையில்லை யென்பாராகில், பொய்யென்றுகூறும் அவ்வேதாந்தங்களைத் திரிபதார்த்த நித்தியங்கூறும் வேதாந்தங்களுடன் வைத்து அவைகள் பொய்யென்று கூறுதற்குரிய காரணங்களை யுள்ளிட்டு நோக்குமிடத்து பொய்யென்பனவெல்லாம் பொய்யாயடங்க மெய்யென்பனவே மெய்யாய் நின்றுண்மைசாதிக்குமென்க.

(இன்னும் வரும்.)

---

## சிவபெருமானைப் பித்தன் எனல்.

சிவபெருமானுக்குப் பித்தன் என்னும் திருநாமம் எப்படி வந்தது என்பதை உணராமலே பலர் பலவிதமாக அப்பெயருக்குப் பொருளுரைப்பர். புறச்சமயிகள் அப்பெயரைக்கொண்டு அவரை இகழ்வர். சைவருள் பலர் அவர் யோகியாயிருந்து உயிர்களுக்கு யோகமுத்தி உதவுவோராதலினாலும்,

ஞாலமதின் ஞானநிட்டையுடை யோருக்கு
நன்மை யொடு தீமையில்லை நாளை தொன்றில்லைச்
சீலமில்லைத் தவமில்லை விரதமோடாச்சிரமச்
செயலில்லைத் தியானமில்லைச் சித்த மலமில்லைக்
கோலமில்லைப் புலனில்லைக் கரணமில்லைக்
குணமில்லைக் குறியில்லைக் குலமுமில்லைப்

பாலருட னுன்மத்தர் பசாசர் குண மருவிப்
பாடலினோடாடலிவை பயின்றிடினும் பயில்வர்.

என்று சிவஞான சித்தியாரிற் கூறியவாறு, ஞானநிட்டை யுடையவர்கள் பாலர் போலவும் பித்தர் போலவும் பேயர் போலவும் இருப்பாராதலானும், அவருடைய யோகரூபத்தை நோக்கிப் பித்தனெனப்படுவர் என்பர்.

அவர் தம்மைப் பித்தாவென்று பாடுமாறு சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அடி யெடுத்துக் கொடுத்தமையானும், நாயனாரும் அவ்வண்ணமே தோத்திரம் செய்தமையானும் அவருக்கு இப்பெயர் வழங்கலாயிற்றென்று கருதுவோரும் உளர்.

ஞான நிட்டை யுடையோர் மானிட சரீரம் பெற்றிருந்தும், அச்சரீரத்தோடு தொடர்பின்றி அருள் வசப்பட்டிருப்பாராதலினால், அவர்கள் செய்யும் செய்கைகள் உலகினர்க்குப் பாலர் பித்தர் முதலியோர் செய்கைகளாகக் காணப்படுதல் கூடும். இறைவனார் என்றும் தம்வயத்தராதலினாலும், அவர் கொள்ளும் வடிவங்கள் அருட்டிருமேனிகளாதலானும், அவர் யோகரூபங் கொண்டருளுமிடத்துத் தம் வயமழிந்து பாலர் உன்மத்தர் முதலியோர் குணங்களை மருவுவாரல்லர். ஆயினும், அவர் கொண்டருளும் வடிவங்களுக்கேற்ப நடித்தலும் கூடுமாதலானும், இலக்கணையானும் அவர் பித்தன் எனப்படுவர் என்ப.

சுந்தரமூர்த்தி நாயனாரேயன்றி அவருக்கு முன்னிருந்த நாயன்மார்களும் மாணிக்கவாசக சுவாமிகளும் இறைவனாரைப் பல முறைப் பித்தன் என்று தோத்திரம் செய்திருப்பதனால், அப்பெயருக்குக் காரணம் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் என்று கருதுவது அறியாமையின் பாலதாம்.

இனி, பித்தன் என்னுஞ் சொல்லுக்குச் சிறந்த பொருள் தான் யாதோவெனில் கூறுவாம். பித்தன் என்பது உலகினரை நோக்க அறிவிழந்தவன் என்றும் இறைவரை நோக்க அருள் வசப்பட்டவன் என்றும் பொருள் தரும். "பெற்ற மனம்பித்து, பிள்ளை மனம் கல்லு" என்னும் பழமொழியின்படி தாயானவள் தன் குழந்தை மீது வைத்த அன்பு மிகுதியால் அதனிடத்தில் பித்துடையளாகின்றாள். அவ்வாறே இறைவனாரும் உயிர்களின் மீது வைத்த கருணை மிகுதியால் பித்துடையவராயிருக்கின்றார். தாயானவள் தன் குழந்தை தன் சொல் வழிவாராமல் தன்னை விட்டு விலகிச் சென்று எவ்வளவு தீங்குகள் புரியினும், அதன்மீது வைத்த



பாசப்பித்தால் அதன் குற்றங்களைக் கருதாது அதற்கு இதமே செய்ய விரைவது போல், இறைவனார், தமக்கென யாதொரு உருவும் பெயரும் தொழிலும் இல்லாதிருந்தும், உயிர்கள் மீது வைத்த கருணை மேலீட்டினால், "பாலினைநினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப்பரிந்து" அவைகள் ஆணவமல வசப்பட்டுத் துன்புறுவதற்கிரங்கி, பலவகைப்பட்ட உருவமும் பெயரும் தொழிலும் தாங்கி, அவைகளுக்குப் பலவகைப்பட்ட தனுகரணபுவன போகங்களைக் கொடுத்து, அவ்வாணவமல வலியை படக்கித் தமது திருவடியின்பத்தைத் தரவேண்டி இடைவிடாது உபகரித்துக்கொண்டிருக்கிறார். இவ்வாறு அவர் உபகரித்துக் கொண்டிருந்தும் உயிர்கள் அவரை மறந்து ஆணவமல வசப்பட்டு ஐம்புலவேடரோடு கூடி அழிகின்றன. இப்படி உயிர்கள் பலகாலும் தம்மை விட்டு விலகித் தீ நெறியிற்சென்று நரகத்தில் வீழ்வதற்கு இறைவனார் பலகாலும் இரங்கி, அவைகள் செய்யும் நல்வினை தீவினைகளுக் கேற்றவாறு அறக்கருணையும் மறக்கருணையும் புரிந்து இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாகுமாறு செய்தருளி, கடைசியாகத் தமது பரமானந்தப் பதமலர் நீழலிற் சேர்த்துக் கொள்ளுகின்றார். இவ்வாறு இறைவனார் அருள்மூர்த்தமாய்ந்த ஐந்தொழிலியற்றிச் சர்வான் மாக்களுக்கும் உபகரித்தல் மாத்திரமன்றி, தம்மோடு ஒத்துச்சென்று தம் திருவடியின்பத்தைப் பெறமுயலும் அடியவர்களுக்குப் பெரும் பித்தராய் எளியரின் எளியராகின்றனர்.

திருவாரூர் நான்மணி மாலை.

மாமுகி றவழு மணிமதிற் கமலைப்
பெம்மா னருமைப் பெருமா னாயினும்
ஊனுண் வாழ்க்கைக் கானவர் குரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
உண்மிழ் நீ ருவந்தன ராடியும்
விருப்படி கொண்ட மிச்சிலுண் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்தும்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்தும்
அருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்தும்
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
தன்னாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
ஒருகா லல்ல விருகா னடந்தும்

எளியரி னெளிய ராயினர்
அளியர் போலு மன்பர்க டமக்கே.

சிவபெருமானை யடையும் உயிர்கள் அந்தமொன்றில்லா ஆனந்தம் பெறுகின்றன. உயிர்களாற் சிவபெருமான்பெறுவதோ ஒன்றுமில்லை. அவ்வாறிருந்தும், சிவபெருமான் மண்சுமந்தும், பிரம்படி பட்டும், தூது சென்றும் அன்பர்களையாட் கொண்டனர் எனில் அவரைப் பித்தனென்று கூறுவது அதிசயமாமோ.

### திருவாசகம்.

பித்தனென் றெனையுலகவர்பகர்வதோர் காரணமிதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் றிருவருட்கூடிடுமுபாயம தறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற் கொருப்படுகின்றேனை
அத்தனாண்டு தன்னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே.

(இ-ள்) சிவபெருமானை உலகவர் பித்தன் என்று கூறுவதற்குக் காரணம் யாதெனில் நான் சொல்லுகின்றேன். இதைக் கேளுங்கள். சிவபெருமான் எனக்கு ஓயாது உபகரித்து வரவும் நான் அவரோடு ஒத்துச்சென்று அவரருளைப்பெறாமல் அவரை விட்டு விலகித் தீநெறிசென்று வீணே இறந்து நரகத்தில் வீழ்ந்து அழிய முயன்றேன். அப்படி அழிய விருந்த வென்னையும் ஆட்கொண்டருளியதுமன்றி எனக்காக மண்சுமந்தார், பிரம்படிபட்டார், என்பாடல்களைத் தமது திருக்கரத்தால் எழுதினார். இவ்வதிசயங்களை நாம் அவரிடத்தில் கண்டோமாதலால், அவரை உலகத்தவர் பித்தனென்று கூறுவது அதிசயமாமோ?" (எ-று)

இத்தமிழ்வேதப் பனுவலில் மாணிக்க வாசக சுவாமிகளே பித்தன் என்னும் பெயருக்குக் காரணம் காட்டியிருத்தல் அறிக. இச்செய்யுளில் "எனை" என்பதற்கு "யாது" என்று பொருள் கூறி மேலே கூறியவாறு பொருளுரைக்காமல் "என்னை" என்று பொருள் கூறுவோரும் பலர் உளர்.

"பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே" என்னுந் திருவாசகத்தாலும் இதனை உணரலாகும்.

சிவபெருமான் விருத்த வேதியர் வடிவங்கொண்டு தம்மை யாட்கொள்ள வந்தது தெரியாமல் சுந்தரமூர்த்தி நாயனார் அவரை முதலில் பித்தன் என்று ஏசினார். சிவபெருமான் அதைப் பொருட்படுத்தாமல் "பித்தனுமாகப் பின்னும் பேயனுமாக நீயின் — றெத்தனைத் தீங்கு சொன்னாலியாது மற்றவற்றானாணேன்" என்றுகூறி



வல்வழக்கிட்டுத் தம்மை யாட்கொண்டமையை யறிந்த பிறகு நாயனார் அவருடைய அருட்பெரும்பித்தை யெண்ணி யெண்ணி அகங்குழைந்து மெய்யரும்பி "பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா" என்று புகழ்ந்தருளினர். "முன்னே அவருடைய தகாத வழக்கினால் கோபங்கொண்டு பித்தாவென்று வைதவர், பின்னால்" அப்பெயரைக் கொண்டே தோத்திரஞ் செய்தது அவருடைய அருட்பெரும்பித்தை உலகினர்க்கு அறிவிக்கவேண்டியேயாம். இதனைக் "கொத்தார் மலர்க்குழலாளொரு கூறாயடியவர்பால் — மெய்த்தாயினுமினியானையவ்வியனாவலர் பெருமான் — பித்தா பிறை சூடி எனப்பெரிதாந்திருப்பதிகம் — இத்தாரணி முதலாவுலகெல்லாமுய வெடுத்தார்" என்னும் பெரிய புராணச் செய்யுளால் அறியலாகும். இதில் தாய்க்குத் தன் குழந்தையிடத்திலிருக்கும் பாசப்பித்திலும், இறைவனுக்கு அடியவரிடத்திலிருக்கும் அருட்பித்து அதிகமாதலினால் தம்மை வல் வழக்கிட்டு ஆட்கொண்டருளினார் என்பதனை நோக்கியே "பித்தா பிறைசூடி" எனும் பெரிதாந்திருப்பதிகம் பாடியருளினாரென்றார் சேக்கிழார் சுவாமிகளும்.

இவ்வாறு சிவபெருமான் நம்மீது பெரும்பித்துடையாராயிருக்கவும் நம்மவர்கள் அவரை மறந்திருப்பதோடு, உலகமையலில் ஆழ்ந்து அவர் கூறியருளிய சைவசமய நெறியைப் பாதுகாவாமலும், அவரருட் செயல்களை விளக்கும் இச்சைவப் பத்திரிகையை ஆதரிக்க மனமில்லாமலும் இருப்பது என்ன அதிசயம்! அந்தோ என்ன கொடுமை!!

---

### இந்து சாதனம்.

இந்து சாதனம் எனப்பெயரிய பத்திரிகையொன்று மாதமிருமுறையாக யாழ்ப்பாணத்தில் 32 வருடங்களாக நடைபெற்று வருகின்றது. இது வர்த்தமானப் பத்திரிகையாயிருந்தும் இதில் வெளிவரும் அருமை வாய்ந்த சைவசித்தாந்த வியாசங்களை நோக்கச் சிறந்த சைவப்பத்திரிகையே இதுவென மதிக்கற்பாலதாயிருக்கின்றது. இதிலிருந்து எடுத்து எம் சைவப்பத்திரிகையில் அடிக்கடி பிரசுரித்து வரும் விடயங்களினால் சைவ உலகத்திற்கு "இந்து சாதனம்" செய்து வரும் நன்மைகளை யூகித்தறியலாகும். இப்பத்திரிகை வேண்டுவோர் "யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை, "இந்து சாதனம்" மானேஜர், Jaffna" என்னும் விலாசத்திற்கு எழுதுக.

## சிவபூசைத் திரட்டு.

இது சிவபூசை செய்கிறவர்களுடைய உபயோகத்திற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் எழுதி வைத்திருந்த ஏட்டின்படி யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் நூதனமாக அச்சிடப்பெற்றுள்ளது. இதில் சிவபூசா காலத்தில் செய்யப்படுங் கிரியைகள் தோறும் ஓதற்பாலனவாகிய தோத்திரங்களாக 110 செய்யுட்கள் வரையில் தேவார மாதித் திருமுறைகளினின்றும் திரட்டப்பட்டுள்ளன. இதுவும் ஷை "இந்து சாதனம்" மானேஜரவர்களிடம் கிடைக்கும்.

## ஞானசித்தி.

ஞானசித்தி எனப்பெயரிய இவ்வரிய சைவப்பத்திரிகை யாழ்ப்பாணத்தில் 1908௵ பிப்ரவரி௴ தொடங்கி மாத மிருமுறையாக வித்வான் சி. தாமோதரம் பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டு வந்தது.

இவர் தமது காலத்திற் பெரும்பான்மையை இந்தியாவிற் செய்த சமய பரிபாலன முயற்சிகளிலேயே கழித்தார். பின் சிலகாலம் யாழ்ப்பாணத்திலிருந்து இப்பத்திரிகையை வெளியிட்டு வந்தார். அதன் பின் தேவகோட்டையில் சிவாகம சித்தாந்த போதகாசிரியராயிருந்து 1919௵ அக்டோபர்௴ 31௳ சிவபதமடைந்தார். இவரால் வெளியிடப்பட்ட மாணிக்கம்போன்ற வியாசங்கள் பல இனி நம் சைவப்பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும். அவற்றால் இப்பெரியார் சைவ வளர்ச்சியின் பொருட்டு எவ்வளவு பாடுபட்டாரென்பது நன்கு விளங்கும்.

## ஸ்ரீராமநாத வித்யாலயம்.

இது இலங்கைத் தீவிலுள்ள மிகப்பெரியதொரு பெருமை வாய்ந்த பெண் பாடசாலை. இதில் வாசிக்கும் பெண்களின் வழிபாட்டின் பொருட்டுச் சிவாலயமும் அமைக்கப்பட்டுள்ளது. சிவாலயத்தில் அருச்சனை செய்யவும், மாலை கட்டவும், நந்தனவனமும் வைக்கப்பட்டுள்ளது. பண்டித வகுப்புவரையில் வகுப்புகள் வைத்துக் கம்பராயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை, காஞ்சிப்புராணம், வில்லிபுத்தூரர் மகாபாரதம் முதலிய பண்டைத் தமிழ்க்காவியங்களும், நன்னூல், காரிகை, தண்டியலங்காரம் முதலிய இலக்கண நூல்களும், தர்ம சாஸ்திரங்களும், தேவாரத்திருமுறைகளும்,



சைவ சாஸ்திரங்களும் முறைப்படி கற்பிக்கப்படுகின்றன. மாணாக்கர்கள் தினந்தோறும் காலையிலும மாலையிலும் 6½-மணி தொடங்கி 7-மணி வரையில் ஆலய வழிபாடு செய்கின்றார்கள். சிலர் திருவலகிடுவர். சிலர் பூக்கொய்வர். சிலர் மாலை தொடுப்பர். சிலர் சந்தனமிழைப்பர். சிலர் தீபமேற்றுவர். சிலர் தூபமிடுவர். ஆராதனை காலத்தில் இசைக்கருவிகளுடன் தமிழ்வேத பாராயணஞ் செய்வர். இப்பாடசாலையின் பொருட்டு வருடந்தோறும் 15,000 ரூபாவரையில் செலவாகிறதாம். இதில் மாணாக்கர்களும் அரசாட்சியாரும் கொடுக்கும் தொகை ரூபா 5500 போக, மிகுதியாக உள்ள 9500 ரூபாவும் வித்தியாலய கர்த்தராகிய கௌரவம் பொருந்திய இராமநாதன் துரையவர்களாற் கொடுக்கப்படுகின்றதாம். இவரன்றோ உண்மைச் சைவப்பெருந்திருவாளர். இவர் மாதிரியைப் பின்பற்றி மடாதிபதிகள், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் முதலியோர் பாடசாலைகள் வைத்துச் சைவபரிபாலனம் செய்யும் நாள் எந்நாளோ !

## யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை.

சென்னை இராஜதானியில் பெயரளவாயிருக்கும் பல சைவ சபைகளைப் போலன்றி சைவ சமய வளர்ச்சிநிமித்தம் உண்மையாய் உழைத்து வருஞ் சபைகள் பல இலங்கைத் தீவில் காணப்படுகின்றன. இவற்றுள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும் ஒன்றாம். இச்சபையார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் மாதிரியைப் பின்பற்றி முதற்பால பாடம், முதல் ஆறும்பால பாடம் வரையில் இயற்றியதன்றி, ஆங்கில பாடசாலைகளில் எட்டாம் வகுப்பிலும் பயிலக் கூடியதாக கலாமஞ்சரி என்னும் நூலும், சோமவார விரதமான்மியம் முதலிய பல நூல்களும் வெளியிட்டுள்ளார்கள். இவர்கள் அச்சிட்ட நூல்களை ஷை "இந்து சாதனம்" மானேஜர் மூலமாகப் பெற்றுக் கொள்ளக் கூடும்.

யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறை ஸ்ரீமான் சு. சிவபாதசுந்தரம் பிள்ளை B. A. அவர்கள் சிறுவர்களுக்கும் மற்றிவர்களுக்கும் உபயோகப்படுமாறு "சைவபோதம் முதற் புத்தகமும், இரண்டாம்" புத்தகமும் என்னும் அருமையான நூல்களியற்றியதோடு, சைவ லகுலேகா என்னும் துண்டுப் பத்திரிகைகள் வாயிலாக பல அரிய வியாசங்கள் வெளியிடுகின்றார்கள்.

## இலங்கையில் சைவ பரிபாலனம.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக் நாவலரவர்கள் திருவவதாரஞ் செய்த விசேடத்தால், அவர் மாதிரியைப் பின்பற்றி இலங்கையிலுள்ளார் பலர் பல வழிகளில் சைவ சமய பரிபாலனஞ் செய்து வருவது அத்தீவு செய்த புண்ணியப் பயன் போலும். சென்னை மாகாணத்தார் அவ்வாறு செய்யாதிருப்பதோடு யாழ்ப்பாணத்து வித்வான்கள் சிலர் இவ்விடம் வந்து நாவலர் பேரை மாத்திரம் சொல்லிக் கொண்டு பொருள் சேகரித்து வைத்துக்கொண்டு வீணுள் கழிப்பது சென்னை மாகாணம் செய்த பாவத்தின் விளைவு போலும்.

---

## மாசி மகம்.

(இந்து சாதனப் பிரசுரம்.)

மாசி மகம் என்பது, மாசி மாசத்தின் கண்ணே வருகின்ற பூரணையோடு சம்பந்தமாய மகநக்ஷத்திர புண்ணிய தினமாம். இத்தினத்திலே, கும்பகோணம், வேதாரணியம், திருமயிலாப்பூர் முதலிய சிவக்ஷேத்திரங்களிலே சிவபெருமானுக்குத் தீர்த்தோற்சவம் நடைபெறும். பன்னிரண்டு வருடத்துக்கொருமுறை வருவதனையே மகா மகமென்று கூறுப. இது கும்பகோணத்திலே அதி விசிட்டமென்பர். அதனை; "கங்கைமா மகந்தோறும் வந்து வந்து தற்படிந்தோர் விட்டுப், போமகம் போகமூழ்கும் புனித நீர்ப்பதி" என்பதனாலும், ஸ்தலமான்மியத்தானும் அறிக.

இனி, "மடலார்ந்ததெங்கின் மயிலையார்மாசிக், கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தா, னடலானே றூரு மடிகளடி பரவி, நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்" என்னும் ஆளுடைய பிள்ளை திருவாக்கானும் அது விசிட்டமுடையதென்ப துணரப்படும்.

இனி, இது விசிட்டமுடையதென்பதற்குக் காரணங் கூறுதும்:— தேவமானத்தானே தை முதலிய ஆறு மாசங்களும் உத்தராயணமாகிய பகலாகவும், ஆடி முதலிய ஆறு மாசங்களும் தக்ஷிணாயனமாகிய இரவாகவுங்கூறலான், அப்பகலினும் இரவினும் உள்ள அவ் வறுவகையானய பன்னிரு மாசங்களும் பன்னிராசிகளாய முகூர்த்தங்களாயமையும் எனவும், அவை பூசமும் பூரணையும் சம்பந்தமாயினமையிற் "புஷ்யம்" எனப்பெயரிய தைமாசத்திலும்,



மகமும் பூரணையும் சம்பந்தமாயினமையின் "மாகம்" எனப் பெயரிய மாசி மாசத்திலும், உத்திரமும் பூரணையும் சம்பந்தமாயினமையிற் "பாற்குணம்" எனப் பெயரிய பங்குனிமாசத்திலும், சித்திரையும் பூரணையும் சம்பந்தமாயினமையிற் "சைத்திரம்" எனப் பெயரிய சித்திரை மாசத்திலும், விசாகமும் பூரணையும் சம்பந்தமாயினமையின் "வைசாகம்" எனப் பெயரிய வைகாசி மாசத்திலும், கேட்டையும் பூரணையும் சம்பந்தமாயினமையின் "ஜேஷ்டம்" எனப் பெயரிய ஆனி மாசத்திலும், பூராடமும் உத்திராடமும் பூரணையும் சம்பந்தமாயினமையின் "ஆஷாடம்" எனப் பெயரிய ஆடி மாசத்திலும், திருவோணமும் பூரணையும் சம்பந்தமாயினமையிற் "சிரவணம்" எனப் பெயரிய ஆவணி மாசத்திலும், பூரட்டாதியும் பூரணையும் சம்பந்தமாயினமையிற் "பாத்திரபதம்" எனப் பெயரிய புரட்டாதி மாசத்திலும், அச்சுவினியும் பூரணையும் சம்பந்தமாயினமையின் "ஆஸ்வினம்" எனப் பெயரிய ஐப்பசிமாசத்திலும், கார்த்திகையும் பூரணையும் சம்பந்தமாயினமையிற் "கிருத்திகா" எனப் பெயரிய கார்த்திகை மாசத்திலும், மிருகசீரிடமும் பூரணையும் சம்பந்தமாயினமையின் "மார்க்க சீர்ஷம்" எனப் பெயரிய மார்கழி மாசத்திலும் வரும் பூரணைகளோடு சம்பந்தமான இந்நக்ஷத்திரங்களாற் பன்னிரண்டு விசிட்டமான காலங்களாகுமெனவுமறிக.

இனி, தவம் மானசம் வாசிகம் காயிகம் எனமூவகைப்படும். அவற்றுள் மானசமாவது வாய்மை, இரக்கம், பொறை, ஐம்பொறி படக்கல், சிவத்தியானம், தருமதானங்களிலே சிந்தைசெலுத்தல் முதலியனவாம். வாசிகமாவது பஞ்சாக்ஷரசெபம், சதருத்திரபாராயணம், தோத்திரம், தருமங்களை எடுத்துச் சொல்லுதல் முதலியனவாம். காயிகங்களாவன: சிவனைப்பூசித்தல், சிவாலயங்களை வலஞ் செய்து வணங்குதல், சிவஸ்தலங்களுக்குச் சென்று வணங்குதல், ஆங்காங்கு திருப்பணிகளை நிறைவேற்றல், சிவதீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்தல் முதலியனவாம். இம்மூவகைத் தவங்களுள் காயிகங்களே சிறந்தன. அவைகளுள் தீர்த்தயாத்திரைகள் சிறந்தன. அவைகளுள் கங்கைமுதலிய நதிகளிலே தீர்த்தமாடுதல் சிறந்தது. அந்நதிகளிலே தனித்தனியேபோய்த் தீர்த்தமாடுதல் அரிது. அந்நதிகளெல்லாம் வந்து சமுத்திரத்திலே நிறைதலினால் சமுத்திரத்திலே தீர்த்தமாடுதல் எல்லாவற்றினுஞ் சிறந்தது. இக்கருத்துப்பற்றியே திருஞான சம்பந்த மூர்த்திநாயனாரும்

"மாசிக் கடலாட்டுக் காணாதே போதியோ பூம்பாவாய்" என்றருளிச்செய்தனர். இம்மூன்றும் தக்கனாற் செய்ய பெற்றமை பின் வருவனவற்றாற் பெறப்படும்.

பிரமதேவர் ஓர் நாள், சத்தியவுலகத்திலுள்ள கோயிலிலே முனிவர்களும் தேவர்களும் தம்முடைய புதல்வர்களும் பக்கங்கணிற்றுதிக்க வீற்றிருந்தார். அப்பொழுது, அவர் படைப்புத் தொழில் செய்யும்படி முன்னாளிற் பெற்ற பத்துப் புதல்வர்களுள், புத்தியிற் சிறந்த மூத்த குமாரனாகிய தக்கனென்பவன் முன் செய்த தவவலியால் அப்பிரமாவை நோக்கி, "என் பிதாவே, தேவர்களில் முதல்வராகியும், ஞானத்திற் றலைவராகியும், மும்மூர்த்திகளில் உயர்ந்தோராகியும், அழிவில்லாதவராகியும், உயிர்க்குயிராகியும் உள்ள முழுமுதற் கடவுள் இன்னார் என்பதை அடியேன் அறியும்படி சொல்லியருளும்" என்று வினாவினான். அதனைப் பிரமா கேட்டு, "மகனே நீ வினாவிய இது நன்று. சொல்வேன் கேள்: விட்டுணுவும் யானும் அந்நாளில் 'நாமே பரம்பொருள் என்று தருக்குற்றுப் போர் செய்தபொழுது சோதிசொரூபமாயெழுந்து வானுலகத்தில் உயர்ந்த சிவபெருமான் ஒருவரே எல்லார்க்கும் மேலாய கடவுள். இதனை நீ தெளிவாய்" என்று கூறினார். அதனைக்கேட்ட தக்கன் "முத்தொழில்களிலும் முதற்றொழில்களாகிய சிருட்டி திதிகளைச் செய்யும் நீவிரிருவரும் கடவுளரல்லராக, இறுதியதாகிய சங்காரத்தைச் செய்யும் பரமசிவன் உங்களுக்கிறைவராயிருக்குந்தன்மை என்னை? என் மன மயக்கந்தீரும்படி சொல்லியருளும்" என்றான். சிவபெருமானுடைய திருவருளினால் அவருடைய உண்மை நிலையையறிந்த பிரமதேவர் அதனைக் கேட்டு, "தக்கனே, முன்னே நீ வேதங்களைக் கசடறக்கற்று உண்மைப் பொருள் தெரிந்தவாறு நன்று நன்று!" என்று சிரித்து, "மைந்தனே, 'இறுதித் தொழிலாகிய சங்காரத்தைச் செய்யும் சிவபெருமானைப் பரம்பொருள் எனக் கொள்ளுந்தன்மை என்னை' என்று வினாவினாய்; பிரம விட்டுணுக்களாகிய எங்களையும் தேவர்களையும் மற்றை உயிர்களையும் ஈற்றிற் சங்கரிப்பவர் அச்சிவபெருமான் என்றால், நம்மையெல்லாம் முன்னர்ச் சிருட்டித்தவரும் அவரேயன்றோ! சங்கார காலத்தில் ஒருவராய், சீவராசிகளை முன்பு தோற்றியவாறே ஒடுங்கச் செய்து, தாம் அவிகாரியாயிருந்து, மீட்டும் அன்னையும் அத்தனுமாய் அவ்வுயிர்களுக்கேற்ற தனுகரணாதிகளைக் கொடுத்திரக்ஷிக்கின்ற பரமசிவனுடைய செய்



கைமுழுதும் எத்தன்மையதென்று சொல்லற்பாலதோ! விட்டுணுவையும் என்னையும் முறையே தம்முடைய இடப்புயத்தினின்றும் வலப்புயத்தினின்றும் உண்டாக்கி, திதி சிருட்டியாகிய தொழில்களையுந் தந்து, 'யாமும் உங்கண்மாட்டு இருக்கின்றோம்' என்று எம்முயிர்க்குயிராய் நின்று, அந்தப் பரமசிவனே எல்லாஞ் செய்கின்றார்; எங்களால் முடியுஞ் செய்கை ஒன்றுமில்லை. நம்முயிர்க்குயிராய் நின்றியற்றுதலன்றி, நம்முடைய மனத்தினுள்ளும் இருந்து நாம் பிழைபடாவண்ணம் காப்பார்; நம்முடைய இரு கண்களினுள்ளும் உளர்; நாம் தம்மையறியாமல் மயங்கும் பொழுதும் எம்மிடத்து வந்தருள் செய்வார்; தாமும் ஓர் தொழிலைச் செய்கின்றவர் போல எம்மோடு ஒருவராக எண்ணப்படுவார்; எள்ளும் எண்ணெயும் போலவும், மணியும் நாதமும் போலவும், பூவும் மணமும் போலவும், இரத்தினமும் ஒளியும் போலவும் உலகமெங்கும் உள்ளும் புறம்புமாய் வியாபித்து நிற்பார். வேதாகம முதலிய மேலாகிய கலைகளையெல்லாம் முன்னாளில் அருளிச் செய்தவர் அந்தச் சிவபெருமானே. அவர் அவைகளை எங்களுக்கு உபதேசிக்க நாம் உணர்ந்தோம். இதனை நீ அந்த நூல்களிற் பார்த்தறிகுதி. இவ்வாறிருக்க எல்லாரையும் ஒன்றாக மதித்தாய். நீ மிகவும் பேதையோ!' என்று கூறினார். தக்கன் அதனைக்கேட்டு, "சிவபெருமான் அருளிச் செய்த வேதங்கள் பஞ்சபூதங்களையும் உயிர்களையும் மற்றைத் தேவர்கள் யாரையும் பிரமம் என்று சொல்வதென்னை? இதனுண்மையையறியாது என்மனம் கவற்சியடைகின்றது. என் பிதாவே விரைந்து அதனைச் சொல்லியருளும்" என்றான். பிரமதேவர் தக்கனை நோக்கி, "மகனே, 'இது எல்லாராலும் அறிய முடியாத தன்மை' என்று கருதி நான் சொல்வதை நன்கு கேட்குதி, அழியாத முதல்வராகிய சிவபெருமானைக் குறித்து வேதங்கள் கூறியவைகள் மாத்திரம் விதிவாதமும் ஒழிந்தன துதிவாதமுமாம். ஆதலால் அச்சிவபெருமானையொழிந்த மற்றைத் தேவர்களுக்கும் உயிர்களுக்கும் பஞ்சபூதங்களுக்கும் வேதங்கள் முதன்மை கூறுதல் முகமனாம். ஒரு பொருளைப் புகழவேண்டினால் அதன் நிலைமைக்கு மேலாகவும் புகழலாம். அது உலகத்திலுள்ளோர் பிராமணர்களைப் பிரமாவாகிய யான் என்று சொல்லுதல் போலும்.

(இன்னும் வரும்.)

## சைவலகுலேகம்.

## சமயம்.

(யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறை ஸ்ரீமான் சு. சிவபாதசுந்தரம் பிள்ளையவர்கள் B. A. இயற்றியது.)

சமயம் என்னும் விஷயத்தைப் பற்றிப்பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். எந்த நூலிலே நல்லபோதனைகள் இருக்கின்றனவோ அதுவே மெய்ச்சமய நூலென்றும் அதைச்செய்தவர் மெய்க்கடவுள் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். அப்படியானால் ஔவையார் செய்த ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும், அரிஸ்றோற்றில் (Aristotle) செய்த தர்மசாஸ்திரமும், கடவுள் வழிபாடில்லாத சந்தேக வாதிகளாகிய ஹேர்பெட்ஸ்பென்சர் (Herbert Spencer) பெயின் (Bain) என்பவர்கள் செய்த நீதி நூல்களும், கடவுளில்லையென்னும் நிரீச்சுரவாதியாகிய கூல்ட் (Gould) செய்த ஒழுக்கநூலும் மெய்ச்சமய நூல்களாகிவிடும். அவைகளைச்செய்த நிரீச்சுரவாதிகளும் மற்றையோரும் கடவுளாக வேண்டும். ஔவையார் சமயம் அரிஸ்ற்றோற்றில் சமயம் கூல்ட் சமயம் என்று பலபெயர்ச் சமயங்களும் உண்டாய் விடும். இது பேதைமை.

எந்தச் சமயத்தை அநுசரிப்பது சுகமாக இருக்கின்றதோ அதுவே நல்ல சமயமென்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். அப்படியானால் உலக இன்பமே இன்பமென்றும் விரும்பியவெல்லாஞ்செய்யலாமென்றும் சொல்லும் உலகாயதசமயமும், பெரும் பாதகங்களை விதிக்கும் அசுத்தவாமமார்க்கமும், இவை போல்வன பிறவும் மெய்ச்சமயமாகி விடும். இதுவும் பேதைமை.

எந்தச் சமயத்திலே இரட்சிப்புக்குச் சுகமான வழி இருக்கிறதென்று சொல்லப்பட்டதோ அதுவே நல்லசமயமென்று வேறு சிலர் கூறுவர். அப்படியானால், இயேசுவை நம்பினால் இரட்சிப்படையலாம் என்று சொல்லும் கிறீஸ்து சமயமும் இதுபோல்வன பிறவும் மெய்ச்சமயமாகி விடும். காசிநகரம் ஆயிரங்குரோசத்துக்கப்பால் இருக்க அது ஒரு குரோச தூரத்திலே தான் உள்ளதென்று ஒருவன் சொல்லுவதைக் கேட்டு அதை நம்புவது எவ்வளவு பேதைமை. இது போலவே இப்படியான சமயங்களை மெய்யென்று நம்புவதும் பேதைமை.



எந்தச் சமயத்திலே ஒருவிதமான கிரியைகளேனும் வேறு சாதனைகளேனும் விதிக்கப்படவில்லையோ அதுவே மெய்ச்சமயம் என்று வேறு சிலர் சொல்லுவர். சாப்பிடாமற் பசிதீராமை போலவும் பயிற்சியில்லாமல் நீந்துதல் முதலிய பழக்கங்கள் வாராமை போலவும், சாதனைகளில்லாமல் நற்பேறு அடைதல் கூடாது. ஆதலால் இவர் கருத்தும் பேதைமையாம்

எந்தச் சமயத்தவர் தொகையினால் அதிகமாக இருக்கிறார்களோ அந்தச் சமயமே மெய்ச்சமயமென்று சிலர் சொல்லுவர். அநுசரிக்கிறவர்களது தொகையினாலே சரிபிழை நிச்சயிக்கலாகாது. இந்த உலகத்திலுள்ளோருள் மாமிசஞ்சாப்பிடுகிறவரது தொகை சாப்பிடாதோரது தொகையிலும் அதிகம். ஆயினும் மாமிசஞ்சாப்பிடுவது சரியன்று. உலக இன்பத்தை விரும்புவோர் தொகை மோட்ச இன்பத்தை விரும்புவோர் தொகையிலும் அதிகம். ஆயினும் உலக இன்பத்தை விரும்புதல் சரியன்று. ஆதலாற் சனத்தொகையினால் மெய்ச்சமயத்தை நிச்சயிப்பது பேதைமை.

சமயம் எனப்படுவது நம்மைக் கடவுளோடு சேர்க்கத் தக்கதாக இருத்தல் வேண்டும். பொய்யை மெய்யென்றும் பொய்வழியை மெய்வழியென்றும் பொய்த்துணையை மெய்த்துணையென்றும் பொய்யின்பத்தை மெய்யின்பமென்றும் மயங்குவதினால் கடவுளை அடையமாட்டாமல் இருக்கிறார்கள். இந்த மயக்கங்களை நீக்க வேண்டியது சமயமாதலால் அவைகளை நீக்கத்தக்க அங்கங்கள் அதில் அமைந்திருத்தல் அவசியம். அந்த அங்கங்களாவன முறையே அறிவு, வழி, துணை, பயன் என்பனவாம். இவைகளுக்கு மதம் மார்க்கம் சாதனம் சமயம் *என்றும் பெயர், உலகம் ஆன்மா கடவுளாகிய மூன்று பொருள்களின் உண்மையான இயல்பைக்கூறுவது அறிவு அல்லது மதம். செய்ய வேண்டியவைகளையும், செய்யத்தகாதவைகளையும் கூறுவது வழியென்றும் மார்க்கம் என்றும் தர்மம் என்றும் சொல்லப்படும். மிகுந்த தூரத்திலுள்ள ஒரு நகரத்துக்குப் போகும்வழியை அறிவதினால்

---

* சமயம் என்ற சொல்லின்பொருள் முடிவு. ச—மயம் எனப்பிரித்து சிவத்தன்மை நிறைதல் எனப்பொருள் கொள்வதும் உண்டு. அறிவு முதலிய நாலங்கங்கள் சேர்ந்த பொருளுக்கும் சமயம் என்ற பெயர். இதற்கு மதம் மார்க்கம் என்ற பேர்களும் உண்டு. மதம்—கொள்கை.

மாத்திரம் ஒருவர் அந்த இடத்துக்குப் போக இயலாது. அங்கே ஒருவரைக் கொண்டு போகத்தக்க தோணி சகடம் முதலியவைகள் மிகப்பிரதானமானவை. அதுபோல வழியை (மார்க்கத்தை) அறிவதினால் மாத்திரம் அதை அனுசரித்தல் இயலாது. அந்த வழியிலே நம்மைக்கொண்டு போகுங்கருவிகள் மிகப்பிரதானமானவை. இவைகள் துணை அல்லது சாதனம் எனப்படும். இவற்றால் பெறப்படும் பொருளாகிய பேரின்பம் பயன் அல்லது சமயம் எனப்படும். ஒரு சதுரத்தின் நாலுபக்கங்களில் ஒன்றாயினும் குறைந்தால் அதுசதுரமாகாதது போல, அறிவு வழி துணை பயன் ஆகிய இவ்வங்கங்களில் ஒன்றாயினும் குறைந்திருப்பது சமயம் எனப்படமாட்டாது.

அநேக சமயங்களில் மேலே குறிக்கப்பட்ட அங்கங்களெல்லாங் காணப்படவில்லை. உதாரணமாக கிறிஸ்து சமயத்தில் ஆன்மாவின் இயல்பேனும் உலகத்தினியல்பேனும் சொல்லப்படவில்லை. அம்மார்க்கத்திற் கொலை புலாலுண்ணல் மதுபானம் விலக்கப்படவில்லை. சாதனங்களொன்றுமில்லை. புத்தசமயத்திலே கடவுளின் இயல்பும் ஆன்மாவின் இயல்புஞ் சொல்லப்படவில்லை. ஆதலால் இவைகளும் இவைபோல்வனவும் சமயங்களாகமாட்டா. வேறு சிலவற்றில் அங்கங்கள் நான்கும் அமைந்திருந்தாலும் அவைகள் தவறாயிருக்கின்றன. உதாரணமாக, உலகாயத சமயத்தின்படி உலகமொன்றே மெய்ப்பொருளென்பது மதம்; உலக இன்பங்களைத் தரக்கூடிய எந்தப்பாதகமுஞ் செய்யலாமென்பது மார்க்கம்: ஆசை முதலியவை சாதனங்கள்; உணவும் பெண்ணின்பமுமே பேரின்பம் அல்லது பயன். இந்தச்சமயத்திலுள்ள நாலு அங்கங்களும் மிகத்தவறானவைகள். ஆதலால் உலகாயதம் முதலியன தவறான அங்கங்களுடைமையால் சமயங்களல்ல.

எல்லாச்சமயங்களையும் ஆராயுந்திறமை அரிதாதலால், பேரறிவுடையராகிய தாயுமானசுவாமிகள் சைவசமயமே சமயமென்றும் மற்றவைகள் சமயங்களல்லவென்றும் சொல்லியருளியதைக் காட்டுவாம்:—

"சைவசமயமேசமயம்சமயாதீதப்பழம்பொருளைக்
கைவந்திடவேமன்றுள்வெளிகாட்டுமிந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலும்சமயநெறிபுகுதவேண்டாம்முத்திதரும்
தெய்வசபையைக்காண்பதற்குச்சேரவாரும்செகத்தீரே"



பிறசமயங்களைப்பற்றி அநேகபிழையான எண்ணங்கள் சிலருக்குண்டு. "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர்" என்னும் சிவஞானசித்திப்பாட்டைப் பிழையாக விளக்கி, எந்தச்சமயத்தை அனுசரித்தாலும் சரிதான் என்று சிலர் சொல்லுகிறார்கள். இந்தப்பாட்டுச் சைவசமய நூலிலுள்ளதானபடியால், பிரமா விஷ்ணு முதலானவர்களே இதிலே தெய்வமென்று சொல்லப்பட்டவர்கள். யேகோவா, யேசு, முகமது முதலியோர் தெய்வங்களல்லாதலால் அவர்களைக் கும்பிட்டாற் சிவபெருமான் பலன்கொடுத்தருளுவாரென்று இந்தப் பாட்டுச்சொல்லவில்லை. எல்லா உயிர்களுக்கும், அவரவர் கர்மத்துக்குத் தக்கனவாக, சிவபெருமான் அருள் செய்வாரென்பதே இதன் கருத்து. அன்றியும் பிறசமயத்தவரெவருக்கும் பேறில்லை என்பதை இந்தப்பாட்டுக்கு மூன்றாவது பாட்டில் "அரன்றன் பாதம் மறந்து செய்யறங்களெல்லாம் வீண் செயல்" என்பதினாலும் "இருமுச்சமயத்தொருபேய்த்தேர்.*" என்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளியதாலும் அறிக.

எல்லாச்சமயங்களையும் கடவுளே உண்டாக்கினாரென்பதும் ஆதலால் எல்லாச்சமயமுஞ் சரிதான் என்பதும் பிழையான எண்ணம். கிறிஸ்து சமயத்தைப்பவுலென்பவர் ஒருவர் தம்முடைய அறிவுக்கெட்டியபடி உண்டாக்கினார். முகமது சமயத்தை முகமது என்பவர் தம்முடைய அறிவுக்கேற்றபடி யுண்டாக்கினார். இப்படியே சைவசமயமல்லாத சமயங்களெல்லாவற்றையும் மனிதரே தங்கள் தங்கள் அறிவுக்கேற்றபடி செய்தார்கள். இவைகளைக் கடவுள் செய்யவில்லை- "அவனையின்றியோரணுவு மசையாது" என்றபடி கடவுளே எல்லாவற்றிற்கும் மூலகாரணமாதலால் சமயங்களுக்கும் அவரே மூலகாரணர் என்று சொல்லுவதுண்டு. அவைகளை உண்டாக்கினவர் அவரல்லர். ஆதலால் அவைகளெல்லாம் சரியானவைகளென்று சொல்லுவது தவறு.

[நெருப்புப் பெட்டியைச்செய்கிறவன் ஒருவன் நற்குணமுள்ளவனாயினும், வேறொருவன் அவனிடத்திலே ஒரு நெருப்புப்பெட்டியை வாங்கி ஒரு வீட்டிற்கு நெருப்புவைத்தால் அந்தச்செயல் குற்றமானதுதானே. நெருப்புப்பெட்டியைச் செய்தவன் நல்லவனென்றதினால் வீட்டுக்கு நெருப்பு வைத்தல் நற்செயலாகுமா? நற்செயலாகாது. அதுபோல

* பேய்த்தேர் = தண்ணீர்போலத்தோன்றுங்கானல்.

மெய்க்கடவுள்கொடுத்த அறிவைக்கொண்டு ஒருவன் பொய்ச் சமயத்தைச் செய்தானாயின் அது மெய்ச்சமயமாகுமா? மெய்ச்சமயமாகாது.]

ஆறுகளெல்லாம் கடலையடைவதுபோலச் சமயங்களெல்லாங் கடவுளையடையும் என்னும் வாக்கைப்பிழையாக விளங்கி அநேகர் மயங்குகின்றார்கள். இதன்கருத்து என்னவென்றால், சிற்றாறுகள் இளையாறுகளில் விழ, இளையாறுகள் பெரிய ஆற்றில்விழுந்து எல்லாங் கடலை அடைதல்போல, உலகாயதம் பௌத்தம் முதலிய புறச்சமயங்களிலுள்ளோர் வைரவம் பாசுபதம் முதலிய அகச்சமயங்களுக்கு வந்து அவைகளிலிருந்து சுத்த சைவத்திற்கு வந்து பேரின்பத்தைப் பெறுவரென்பதாம். "புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம்புக்கும்.........சைவத்திறத்தடைவர்' என்று சிவஞானசித்தியார் கூறுதலானும், பிறசமயங்களிலே மதம் மார்க்கம் முதலிய அங்கக்குறைவுகளுந் தவறுகளுமிருத்தலானும், "பொய் வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டாம்'' என்று தாயுமான சுவாமிகள் பாடியருளியதானும், "அறுவகைச் சமயத்தறுவகை யோர்க்கும் வீடு பேறாய்நின்ற விண்ணோர் பகுதி கீடம்புரையும்" என்னுந் திருவாசகத்தானும் இதுவே மெய்க்கருத்தென்பதை அறிக. (கீடம் = புழு)

புறச்சமயங்களை அனுசரிக்கிற சிலர் சாதாரண நற்குணமுள்ளவராயிருத்தலால் அந்தச்சமயங்கள் மெய்ச்சமயமாயிருத்தல் வேண்டுமென்று சிலர் எண்ணுகிறார்கள். இது பொய்ச்சொல்லுதலை அனுசரிக்கிற சிலர் பெலசாலியாயிருத்தலால் பொய்ச்சொல்லுதல் சரீர பெலத்துக்குக் காரணமென்று சொல்லுவதைப்போலிருக்கிறது. அன்றியும் சந்தேக வாதிகளாகிய ஹெப்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) நிரீச்சுரவாதியாகிய ப்றாட்லோ (Bradlaugh) முதலானோரனேகர் சாதாரண நற்குணமுடையராயிருந்தமையால் சந்தேக வாதமும் நிரீச்சுர வாதமும் மெய்ச்சமயமாகுமா?

இப்படிப்பட்ட பிழையான எண்ணங்கள் வேறும் உண்டு. சமயங்களிலுள்ள கொள்கைகளும் மார்க்கங்களும் ஒன்றுக்கொன்றுமாறாக இருத்தலால் எல்லாச் சமயமும் மெய்ச்சமயமாக மாட்டா. தீர்க்காலோசனை செய்து பார்க்கச் சைவசமயமே மெய்ச்சமயமென்பது பெறப்படும்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 7 | துன்மதி௵ வைகாசி௴ 1921௵ மே௴ | இதழ் 2

## திருக்கூட்டப் புகழ்ச்சி.

(பெரிய புராணம்.)

மதிவளர் சடைமுடி மன்றுளாரைமுன்
றுதிசெய் நாயன்மார் தூய சொன்மலர்
பொதிதல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை புலகினில் விளங்கி வெல்கவே.

(இ - ள்.) மதிவளர் சடைமுடி மன்றுளாரை = இளம்பிறை வளர்கின்ற சடைமுடியையுடைய நடேசப் பிரானை—முன்துதி செயும் நாயன்மார் தூய சொல்மலர் = முன்னாளில் வழிபடும் திருத்தொண்டர்களது சரிதமென்னுங் குற்றமற்ற சொல்லாகிய மலர்களிடத்து—பொதிதலன் நுகர் தரு புனிதர் பேரவை = பொருந்திய சுவையென்னுந் தேனைப் பானஞ் செய்கின்ற பரிசுத்தர்களது பெருமை பொருந்திய அவைக்களமானது—விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே = அறநூல் கூறியவாறு உலகின்கண் பிரகாசித்து மேம்பட (எ - று.)

---

நீற்றுநெறியைப்போற்றி வாழ விரும்புவோர் இப்பத்திரிகை பல்லாயிரமாகப் பரவுமாறு செய்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் (1920ஞு) 22-வது வருடத்துச் சபாக்கிரந்தம்.

---

திருக்கூட்டத்தின் இருபத்தொராவது வருடப் பூர்த்திவிழாவும்

ஸ்ரீமான் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்

சைவபாடசாலையின்

ஏழாவது வருடப் பூர்த்திவிழாவும்.

---

இவ்விழாக்கள் 1920ஞு மேமீ 9உ நடைபெற்றன. இவற்றின் விருத்தாந்தம் "சைவம்" ஆறுவது மலர் மூன்றுமிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

---

### மகாசபை.

| | |
|---|---|
| இந்த மகாசபையின் 1920ஞு ஆரம்பத்தி லிருந்தவர்களின் தொகை. | 38 |
| 1920ஞு சேர்ந்தவர்கள் | 2 |
| ஷை நீங்கினவர்கள் | 4 |
| ஷை முடிவிலிருந்தவர்கள் | 36 |

இவர்கள் பெயர் முதலியன இதின் ஈற்றில் காட்டப்பட்டுள்ளன. இவர்களுள் ராவ் பஹதூர் கே. வைத்தியலிங்கப்பிள்ளையவர்களும் பெங்களூர் சி. யஸ். பவானந்தம்பிள்ளையவர்களும் சென்ற வருடத்தில் சிவபத மடைந்தார்கள்.

| | | |
|---|---|---|
| இச்சபையார் 1919ஞு கொடுத்த மாதசந்தா | ரூபா | 212 |
| ஷை 1920ஞு ஷை | ,, | 168 |

---

### S. Rathnavelu Chettiar's Saivite Elementary School

### சைவ பாடசாலை.

இப்பாடசாலையில் 1919-வது வருடத்திலிருந்தது போலவே 1920-வது வருடத்திலும் முதல் வகுப்பு முதலாக ஐந்தாம் வகுப்பு



வரையில் ஐந்து வகுப்புகளிலிருந்தன. இரண்டு உபாத்தியாயர்களால் தமிழும் ஆங்கிலமும் சைவசமய பாடங்களும் கற்பிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| இதில் சென்ற வருட ஆரம்பத்தில் இருந்த சிறுவர்களின் தொகை, | | 60 |
| இடையில் சேர்ந்தவர்கள் | | 34 |
| இடையில் நீங்கினவர்கள் | | 32 |
| சென்ற வருட முடிவில் இருந்தவர்கள் | | 62 |
| 1919ஞு பிள்ளைகள் கொடுத்த சம்பளம் | ரூபா | 162 |
| 1920ஞு ஷை | ,, | 145 |
| 1919ஞு அரசாங்கத்தார் உபகரித்த தொகை | ரூபா | 234 |
| 1920ஞு ஷை | ,, | 221 |
| 1919ஞு பாடசாலைக்குச் செலவான தொகை | ரூபா | 525 |
| 1920ஞு ஷை | ,, | 351 |

இட வசதிக் குறைவால் அதிகபிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள இயலவில்லை.

இப்பாடசாலை 1920ஞு ஜூலைமீ 16உ அரசாங்கப்பாடசாலைகளின் உதவிப் பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்டது.

இச்சபையின் போஷகரும், Messrs. Best & Co., அதிபாதிகருமாகிய ஸ்ரீமான் ராவ்பஹதூர் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் 1917ஞு. ஜூன்மீ இப்பாடசாலைக்காக ஒரு கட்டடம் வாங்கிக் கொடுத்தார்கள். அதனால் இச்சபையார் மாதந்தோறும் கொடுத்துக்கொண்டிருந்த பாடசாலை வாடகை ரூபா பத்து மீதியாயிற்று. செட்டியாரவர்கள் பாடசாலைக்குக் கட்டடம் வாங்கிவிட்டதல்லாமலும், அது கட்டப்பட்டிருக்கும் நிலத்திற்கு மாதந்தோறும் 6 ரூபா வாடகையும் கொடுத்துவருகின்றார்கள். இதற்காகச் செட்டியாரவர்களுக்குச் சபையார் மிகவும் நன்றி பாராட்டுகிறார்கள்.

---

### சைவம்.

| | |
|---|---|
| 1919 ஆவது வருடத்தில் சைவம் என்னும் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களா யிருந்தவர்களின் தொகை (ஆயுள் சந்தாதாரர்கள் நீங்கலாக) | 760 |
| 1920ஞு ஷை ஷை | 790 |
| 1919ஞு வரையில் சேர்ந்திருந்த ஆயுள் சந்தாதாரர்கள் | 206 |
| 1920ஞு சேர்ந்த ஷை | 2 |

ஆக கடந்த வருடம் வரையில் சேர்ந்திருந்த ஆயுள் சந்தா தாரர்கள். 208

இவர்களுள் 157 ஆயுள் சந்தாதாரர்கள் இரங்கோனிலிருந்து ஸ்ரீமான் மெ-செ-மெ-மெ-இராமநாதன் செட்டியாரவர்களாலும் ஸ்ரீமான் செவு-சித-சொக்கலிங்கஞ் செட்டியாரவர்களாலும் சேர்க்கப்பெற்றவர்கள். 25 ஆயுள் சந்தாதாரர்கள் ஸ்ரீமான் கொத்தமங்கலம் தெ-பழ-சித-சதாசிவம் செட்டியார்வர்களாற் சேர்க்கப் பெற்றவர்கள். ஆயுள் சந்தாதாரர்களுள் 185 பேருக்கே இப்போது பத்திரிகை அனுப்பப்படுகின்றது. எஞ்சியவர்களுக்கு அனுப்பிய பத்திரிகைகள் திரும்பி வந்துகொண்டிருந்தமையால் நிறுத்த நேர்ந்தது.

1919 ஆவது வருடத்தில் இப்பத்திரிகையின் வரவு (ஆயுள் சந்தா நீங்கலாக) முன் வருடப்பத்திரிகைகள் விற்பனையால் வந்த வரவு சுமார் ரூபா 200 சேர்த்து ரூபா 881

1920ளு ஷை ஷை ,, 1008

1919ளு இப்பத்திரிகையின் பொருட்டுச் செலவான தொகை 618

1920ளு ஷை ஷை ,, 590

1920ளு அக்டோபர்மீ பத்திரிகை முதல் டிசம்பர்மீ பத்திரிகை வரையில் வெளியிட்ட பத்திரிகைகளின் பொருட்டு 1921ளு செலவிட்ட தொகைகள் இதில் சேர்க்கப்படாமையாலும், ஜனவரிமீ முதல் ஆகஸ்டுமீ வரையில் வெளியிடப்பட்டவை சபையின் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டமையாலும் செலவு குறைந்திருப்பதாகக் காணப்படுகிறது.

---

## அச்சுக்கூடம்.

பல இடையூறுகளினால் நட்டம் நேரிட்டு வந்ததை நோக்கி 3000 ரூபாவுக்கு அச்சுக்கூடத்தை விற்றுவிட நேர்ந்துவிட்டது. இதைப்பற்றி "சைவம்" 6-வது மலர் 142, 143-வது பக்கங்களில் நன்கு விளக்கப்பட்டிருத்தல் காண்க.

---

## வரவு செலவு கணக்கு.

சென்ற வருடத்து வரவு செலவு கணக்கு M. & S. M. ரெயில்வே அக்கவுண்டாண்டு, ஸ்ரீமான் கூடலூர் சிவ வாசுதேவ



முதலியாரவர்களால் பரிசோதிக்கப்பெற்று இதனீற்றில் சேர்க்கப் பெற்றுள்ளது.

---

## திருமுறை மகோற்சவம்.

இது வழக்கப்படி 1920ளு நவம்பர்மீ 14உ நடைபெற்றது. அச்சமயத்தில் கவுணியன் அச்சுக்கூடத் தலைவர் ஸ்ரீமான் கா. முருகேசச் செட்டியாரவர்கள் வழக்கப்படி சிவனடியார்கள் எண்ணிறந்தோர்க்கு மாகேசுரபூசை செய்வித்தார்கள்.

முன் காரியதரிசியாயிருந்த ம-ள-ள-ஸ்ரீ இ. ஆதிமூலமுதலியாரவர்கள் தமது மூப்பைநோக்கித் தமக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்க விரும்பியவாறு நிர்வாக சபையினரால் ம-ள-ள-ஸ்ரீ மணிமங்கலம் திருஞானசம்பந்த முதலியாரவர்கள் 1920ளு ஆகஸ்டுமீ 22உ முதல் காரியதரிசியாக நியமிக்கப் பெற்றனர்.

---

## வந்தனம்.

இத்திருக்கூட்டத்திற்கு உதவிபுரிந்து சைவசமய பரிபாலனம் செய்பவரும், செய்விப்பவருமாகிய சாமாசிகரும், போஷகர் முதலியவர்களும் ஸ்ரீசிவகாமசுந்தர நடராஜப் பெருமானாரின் திருவருளால் சகலசம்பத்துடன் நீடூழி நிலைபெற்று வாழுமாறு அவ்வம்மையப்பர் திருவடிகளைத் தியானிக்கின்றோம்.

இங்ஙனம்;

உத்தரவின்படி காரியதரிசி

மணி - திருஞானசம்பந்த முதலியார்.

---

சிவநேயர்கள், சைவசமய வளர்ச்சிக்கு இன்றியமையாத கருவியாயிருக்கும் இப்பத்திரிகையை உங்கள் நேசர்கள் உறவினர்களியாவரும் வாங்கிப்படிக்கும்படி செய்க.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 1920-ளு வரவு செலவுக் கணக்கு.

## வரவு.

| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1920ளு ஜனவரிமீ 1உ இருப்பு | | | | 14 | 15 | 6 |
| மகா சபையார் மாதச்சந்தா | | | | 168 | 0 | 0 |
| தேவகோட்டைச் செட்டிமார் அளித்த நன்கொடை | | | | 334 | 7 | 6 |
| சைவப்பத்திரிகையின் வருடச்சந்தாவும் முன்வருடப் பத்திரிகை விற்பனையும் | 1002 | 15 | 0 | | | |
| ஷை ஆயுள் சந்தா | 17 | 8 | 0 | 1020 | 7 | 0 |
| பாடசாலைக்கு அரசாங்கத்தார் நன்கொடை | 221 | 0 | 0 | | | |
| ஷை பிள்ளைகள் சம்பளம் | 144 | 9 | 0 | 365 | 9 | 0 |
| அச்சுக்கூட விற்பனை | 3000 | 0 | 0 | | | |
| அச்சுக்கூலி | 131 | 15 | 0 | 3131 | 15 | 0 |
| சேவிங்ஸ் பாங்கு வட்டி | | | | 1 | 1 | 3 |
| புத்தக விற்பனை | | | | 1 | 3 | 0 |
| ஆகமொத்த வரவு. | | | | 5037 | 10 | 3 |
| அடுத்த பக்கத்திற் காட்டியபடி மொத்த செலவு | | | | 2575 | 14 | 9 |
| 1920ளு டிசம்பர்மீ 31உ இருப்பு | | | | 2461 | 11 | 6 |



## செலவு.

### Mr. S. Rathnavelu Chettiar's Saivite Elementary School.

| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| **பாடசாலை.** | | | | | | |
| உபாத்தியாயர் சம்பளம் | 305 | 3 | 0 | | | |
| வேலைக்காரர், ரிஜிஸ்டர் முதலியன | 46 | 1 | 7 | 351 | 4 | 7 |
| **சைவப் பத்திரிகை.** | | | | | | |
| காகிதம் | 227 | 10 | 0 | | | |
| தபாற்செலவு | 175 | 12 | 6 | | | |
| சிப்பந்தி | 120 | 10 | 4 | | | |
| வண்டி முதலிய சில்லரைச் செலவுகள் | 47 | 11 | 2 | | | |
| வீட்டு வாடகை | 18 | 0 | 0 | 589 | 12 | 0 |
| **வைதிக சைவ அச்சுக்கூடம்.** | | | | | | |
| யந்திரங்களும் அச்சுகளும் | 232 | 8 | 6 | | | |
| சிப்பந்திகள் | 548 | 1 | 0 | | | |
| வீட்டு வாடகை | 198 | 7 | 7 | | | |
| மை வச்சிரம் வண்டிசத்தம் முதலிய பல சில்லரை செலவுகள் | 30 | 3 | 0 | 1009 | 4 | 1 |
| தண்டற்காரர் சம்பளம் | | | | 51 | 0 | 0 |
| யாத்திரை | | | | 84 | 0 | 0 |
| கடன் | | | | 425 | 11 | 6 |
| வட்டி | | | | 49 | 7 | 4 |
| இச்சபையின் 20-வது வருடோற்சவம் கார்த்திகை ஞான தீபக் குடையாராதனை முதலிய நானாவித செலவுகள் | | | | 15 | 7 | 3 |
| ஆகமொத்தச் செலவு | | | | 2575 | 14 | 9 |

கணிதபரிசோதகர்.

கூ. சிவவாசுதேவ முதலியார்.

Accountant M. & S. M. Ry.

காரியதரிசி.

மணி - திருஞானசம்பந்த முதலியார்.

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

### போஷகர்கள்.

ஸ்ரீமான் ராவ்பஹதூர் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்
துவிபாஷிகர், மெஸ்ஸர்ஸ் பெஸ்ட் அண்டுகோ.
,, வி. முத்தையாபிள்ளையவர்கள் வர்த்தகர், சென்னை.
,, ஆர். காசிவிசுவநாதமுதலியாரவர்கள்
பொடி புகையிலை வர்த்தகர், சென்னை.
,, திரு. சபாபதிமுதலியாரவர்கள், ரிடையர்ட் சப்
இஞ்சினீர், தங்கசாலை வீதி சென்னை,
,, வி. மாசிலாமணிப் பிள்ளையவர்கள், B. A., B. L.
ஐகோர்ட்டு அப்பிஷியல் ரெவ்ரீ.
,, சி. தருமலிங்கமுதலியாரவர்கள் கண்ட்ராக்டர்.

---

### நிர்வாக சபையார்.

### சபைத் தலைவர்.

ஸ்ரீமான் ச. இராஜகண்ணுமுதலியாரவர்கள், B. A.
அக்கவுண்டண்டு ஜெனரல் ஆபீஸ்.

### உதவி சபைத்தலைவர்.

,, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள், B. A.
கவர்ன்மெண்டு பென்ஷனர்.

### காரியதரிசி.

,, மணி. திருஞானசம்பந்த முதலியாரவர்கள்.

### உதவிக் காரியதரிசி.

,, இ. கண்ணப்பமுதலியாரவர்கள், வர்த்தகர்.

### அத்தியட்சர்கள்.

ஸ்ரீமான் திரு சபாபதிமுதலியாரவர்கள், ரிடையர்ட் ஸப் இஞ்ஜினீர்.
,, இ. ஆதிமூல முதலியாரவர்கள்.
,, வே. நேத்திரசிகாமணி முதலியாரவர்கள்,
ஸப் போஸ்ட் மாஸ்டர்.
,, ஆர். பி. துரைசாமி முதலியாரவர்கள்,
கவர்ன்மெண்டு பென்ஷனர்.



ஸ்ரீமான் சிவமுத்துக்குமாரசாமி முதலியாரவர்கள்.
தமிழ்ப்பண்டிதர், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல்.
,, பார்த்தசாரதி முதலியாரவர்கள், வெற்றிலை வர்த்தகர்.
,, பி. வி. சமரபுரி முதலியாரவர்கள், கிளார்க்கு.
எம். எஸ். எம். ரெயில்வே சீப் இஞ்சினியர்ஸ் ஆபீஸ்.
,, திருவூர் தியாகராஜ முதலியாரவர்கள்.
,, குப்புசாமி முதலியாரவர்கள், கிளார்க்கு,
ரெயில்வே மெயில் சர்விஸ்.

---

### கணித பரிசோதகர்.

,, கூடலூர், சிவவாசுதேவ முதலியாரவர்கள்,
அக்கவுண்டாண்டு, எம். எஸ். எம். ரெயில்வே.

### சாமாசிகர் (அங்கத்தினர்.)

,, கா. ரா. நமசிவாய முதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர்.
,, மயிலை, முருகேசமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு
பென்ஷனர்.
,, எஸ். விநாயக முதலியாரவர்கள், B. A. அக்கவுண்டாண்டு
ஜெனரல் ஆபீஸ் சூபரிண்டெண்டாண்டு.
,, பி. லோகநாத முதலியாரவர்கள், புரசை.
,, கோ. ஆறுமுக மேஸ்திரியவர்கள். ஷை
,, பொ. அரங்கநாதமுதலியாரவர்கள், ஹோ. அண்டு. கோ.
,, பெங்களூர் நாகரத்தினம்மாள் அவர்கள், சங்கீதபண்டிதை.
,, திருமணம் அண்ணாமலைமுதலியாரவர்கள், ஜமீன்தார்.
,, பி. எம். முருகேச முதலியாரவர்கள், காக்ஸ்டன்
அச்சுக்கூடம்.
,, சி. கன்னைய நாயுடு அவர்கள் கம்பெனி,
காக்ஸ்டன் அச்சுக்கூட அதிபர்.
,, எம். நடேச முதலியாரவர்கள், கார்ப்பொரேஷன்.
,, டி. வி. குப்புசாமி முதலியாரவர்கள், ஷராப், தாலூக்கா
ஆபீசு.
,, ஆனந்தமூர்த்தி முதலியாரவர்கள்.
,, வி. எஸ். பவானந்தம் பிள்ளையவர்கள், 5 ரெயில்ரோட்,
பெங்களூர்.

ஸ்ரீமான் முத்துசாமி முதலியாரவர்கள், மதராஸ் பாங்கி முருகேச
,, ஆரணி. முருகேச முதலியாரவர்கள் [முதலியார் குமாரர்.
,, வே. நேத்திரசிகாமணி முதலியாரவர்கள்,
ஸப்போஸ்டு மாஸ்டர்.
,, திருவூர். தியாகராஜ முதலியாரவர்கள்
கிளார்க்கு அக்கவுண்டண்டு ஜனரல் ஆபீஸ்.
,, துரைசாமி முதலியாரவர்கள் யம். அண்டு. யஸ். யம்.
ரெயில்வே ஸ்டோர்ஸ்.
,, அம்பலவாண முதலியாரவர்கள் கிராம்டன் அண்டு கோ.
,, தி. சந்திரசேகர முதலியாரவர்கள்,
ப்ரோப்ரைட்டர், சந்திரா அண்டு கோ.

---

## வேதாந்தம்.

(9-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனிப், பிரம மொன்றொழிய மற்றெல்லாம் பொய்யென்று கூறும் உபநிடதங்களை சரியெனக்கொண்டு அவற்றுடன் மெய் கூறும் உபநிடதங்களை இணக்கிப் பொருள்கொண்டு மற்றெல்லாம் பொய்யென்றே கொள்ளலாமெனின், சீவன் ஈசன் செகத்தெல்லாம் பொய்யென்று கொள்ளுவோர், அதுபோலவே புண்ணிய பாவம் சுவர்க்க நரகம் பந்த மோக்ஷம் முதலிய எல்லாம் பொய்யே என்று கொள்ளுதலால் சிவகைங்கரியாதிசெய்து கஷ்டப்படாமல் இஷ்டப்படி வேண்டியவெல்லாம் உண்டுடுத்துப் போகாதிகளை அனுபவித்துச் சுவேச்சாவான்களாய்ச் சிவநியமமாதிவரம்புக்கு ளகப்படாமல் இகபோகசுகிகளாகவே வாழத்தடையில்லை யாதலால், அவ்வாறு கொள்ளுதல் அவ்வேகான்மவாதிகள் கருத்துக்கிணங்கப் பொருத்தமாயினும், அவ்வேகாத்மவாத மொன்று தவிர மற்றெல்லாச்சமயிகளும் நமக்கு மேலொருபதியுண்டு (ஆண்டவனுண்டு) நாம் பசுக்களே (அடிமைகளே) அப்பதியை வழிபாடு செய்து அடைய வேண்டியதே நமது கடமையெனக்கொண்டு நிற்றலானும் உலகெலாமுள்ள சிவமூர்த்தி தலதீர்த்தங்களெல்லாம் நித்தியர்களாகிய சீவர்கள் வழிபாடு செய்துய்தற்கே, வேத வேதாந்த சிவாகமாதி சகலசாஸ்திர சம்மதமாக, எத்தனையோ ஊழிகளுக்கு முன்னமே அங்கங்கே விளங்கிக் கொண்டிருத்தலானும், இன்னோரன்ன பற்பல ஏதுக்களானும், பதி பசு பாச நித்தி



யங் கூறுகின்ற வேதாந்தங்களே உண்மை வென்பதுதான் எல்லார்க்கும் ஒப்பமுடிந்த முடிவாதலால், அவைகளுக்கு இணங்கவே பொய்கூறும் வேதாந்தங்களை இணக்கி அடக்கிக்கொள்ளுவதே எல்லா வழிக்கும் பொருந்தமாகுமன்றி வேறில்லை என்க. எனவே மெய்கூறும் வேதாந்தங்களே மற்றவற்றைத் தம்முள் ளடக்கிக் கொண்டு உத்தம வேதாந்தமென விளங்குதலால் அவற்றை மேற்கொண்ட சுத்தாத்துவித சைவசீலர்களே வேதாந்திகளாவாரன்றி அதற்கு விரோதமான ஏகாத்மவாதக் கோளினர் வேதாந்திகளாகா ரென்பதே துணிவாகும்.

இவ்வேதாந்தசார சுத்தாத்துவித சைவ சித்தாந்தமே உண்மையென்று உலகெலா முணர்ந் துய்யத் திருவுளங்கொண்டருளிய திருமூல நாயனார் திருமந்திரம், "அன்னமிரண்டுளவாற்றங்கரையினிற், முன்னியிரண்டுந் துணை பிரியாவன்னந், தன்னிலையன்னந் தனியொன்ற தென்றக்காற், பின்ன மடவன்னம் பேறணுகாதே" என்று கூறுகின்றது. இதன் பொருள், சிவனுஞ் சீவனுமாகிய இரண்டு அன்னங்கள் ஆற்றங்கரை அரசிருக்கும்போலுஞ் சரீரத்தி னுள்ளன. அவ்விரண்டும் வியாபகவியாப்பியமாய்ச்சேர்ந்து துணை பிரியாமலிருப்பன. (இவ்வுண்மையுணராமல் ஏகான்மவாதிகள் இரண்டில்லை) தனி நிலையாகத்தவித்த ஒரே அன்னந்தான் உள்ளது என்றால் பின்னமாகிய தனக்கெனச் சுதந்தர அறிவில்லாத அவ்வன்னம், ஆன்மலாபமாகிய சிவானுபவப் பேற்றையடையாதே என்பதாம். ஆகவே, ஏகான்மவாதிகள் ஒரே அன்னமென்பது (பசு) சீவர்களாகிய தங்களையே என்பதும் ஒரு நாயகி தனக்கு மேலாகிய ஒரு தலைவனைக் கொள்ளாவிட்டால், இன்பத்தை ஒருக்காலும் பெறுதவாறுபோல, அவர்கள் தாமும் தமக்கு மேலொரு தலைவனுமாகிய இரண்டன்னங்களுண்டென்று கொள்ளாமையால், ஆன்மலாபமாகிய பேரின்பத்தை ஒருக்காலும் அடையமாட்டார்களென்பதும் தெளிவாய் விளங்குகின்றது. இன்னுமித்திருமந்திரம் "பதிபசு பாசமெனப் பகர்மூன்றிற், பதியினைப் போற்பசுபாசமநாதி, பதியினைச்சென்றணுகாபசுபாசம், பதியணுகிற் பசுபாசமில்லாவே." என்பது முதலிய திருமந்திரங்கள் பதிபசு பாசங்கள் அநாதி நித்தியங்களேயென்று கூறுகின்றன. இவ்வுண்மை மிநனமாகவும், பதிபசு பாசமாகிய ஈசன் சீவன் செகத்தெல்லாம் பொய்யே என்று கூறுவது வேதாந்தமென்றும் இதற்குச்சாதகமாகத் திருமந்திரமுங் கூறுகின்றதென்றுங் கூறுகின்றார்கள். அது

அத்திருமந்திரங்களின் உள்ளீடுகளை முன்பின் விரோதம்வாராதபடி உற்றுநோக்காமையேபோலும். அம்மந்திரங்களுக்கு அவர்கள் மனம் போனபடி பொருள் கொள்ளினும் மேற்காட்டியன முதலியவைகளால் வெட்டவெளியாகப் பதிபசுபாச நித்தியங் கூறுகின்ற திருமந்திரங்களுக்கு என்ன பொருள் கூறுவார்கள். அவைகளை மாற்றிப்பொருள்கொள்ள எவர்களாலும் முடியாதென்க.

இத்திருமந்திரந் திருவாய்மலர்ந்தருளியவர் திருக்கைலையிலுள்ள ஒரு சிவயோகியார். இவர் பசுக்களுக் கிரங்கித் தமது சரீரத்தை ஒரு காப்பில் வைத்து விட்டு அப்பசுக்களை மேய்த்த மூலர் சரீரத்திற்புகுந்து பசுக்கள் துக்க நீங்கி வீடுகளுக்குச் சென்ற பின்பு தாம் காப்பில் வைத்த சரீரத்திற் புகுதற்குவந்து பார்த்தபோது அச்சரீரங் காணப்பெறுமல், அதற்குக் காரணம், தம்மால் சிவாகமப் பொருளைப் பூமியிலுள்ளார்செவ்வேதெளிந்துய்யும் பொருட்டுத் தமிழில் வெளியிடுவித்தற்காகவே திருவருளே மறைத்து விட்டதாகத்தெளிந்து, அத்திருமூலர்சரீரியாகியே திருவாவடு துறையில் வீற்றிருந்தருளி (௩௰௲) வருஷம் சிவயோகத்திலமர்ந்து ஒவ்வொருவருஷ யோகானுபவமே ஒவ்வொரு திருவிருத்தமாகச் சிவாக மங்களிலுள்ள சிவஞான சிவயோகசிவகிரியை சிவசரியாதிகளையே வைத்துப்பாடியருளினரென்று, இவர் திவ்ய சரித்திரத்தை ஸ்ரீமந் நடேசப் பெருமான் ஸ்ரீசேக்கிழார் வாயிலாக வெளியிட்டருளினர். இப்படியே உபமந்நியபக்தவிலாசம் அகஸ்திய பக்தவிலாசம் சிவரகசிய முதலியன கூறுகின்றன. இத்திவ்விய சரித்திரத்தையும் உற்றுநோக்கித், திருவருளாஞ்ஞையின்படி சிவாகமசம்மதமாகிய பதிபசுபாச நித்தியாதி சத்காரியவாத சைவசித்தாந்தமே விளக்கஞ் செய்யவே பூமியிலமர்ந்தருளிய திருமூலர் சைவசித்தாந்தவிரோதமாகப், பதிபசுபாசங்களாகிய ஈசுரன் சீவன்செகத்தெல்லாம் பொய்யே பிரமமொன்றேமெய் நாமே அப்பிரமமென்கின்ற ஏகான்மவாதிகள் கொள்கைக்குச் சாதகமாகக் கூறுவரா என்று முன்பின் பொருந்தவுன்னித்து நோக்குவார்க் குண்மை தெளிவாமன்றோ?

இனி ஏகான்மவாதிகள், "வேதாந்தமில்லாத சித்தாந்தங் கண்டுளோர், சாதாரணமன்னசைவ ரூபாயமே" என்னுந் திருமந்திரந் தங்களுக்குத் சாதகமென்று நினைக்கின்றனர்போலும்; அல்லது வேதாந்தமோர், சீவான்மாக்களாகிய பசுக்கள் தங்களையே பரப்பிரமமென மயங்கிக்கொண்டு சீவன் ஈசுரன் செகமெல்லாந் தங்களிடத்திற் கற்பிதமேயென்று தாம் பிடித்ததே சாதிக்கும் ஏகான்ம வாதபரமான வேதாந்தமும், பரமசிவனுக்கு அடிமையாகிய நாராயணனையே பரப்பிரமமெனக் கொள்கின்ற வைணவபரமான வேதாந்தமும், உள்ளபடி பரமசிவனையே பரப்பிரமமெனக் கொள்கின்ற சைவபரமான வேதாந்தமு முதலாகப் பலவகைப்படும். பலர்க்கும் பரத்துவங் கூறுகின்ற வேதமும், உபக்கிரம உபசங்காராதிகளில் சிவனொருவனே நியமகன் மற்றையர் நியமிக்கப்படுவரென்று தெளிவு கூறி விளக்குதல் போல், இவ்வேதாந்தங்களுள்ளும் ஏகான்மவாத வைணவாதி வேதாந்தங்களிலுள்ள பொருந்தாமைகளை ஞாய வழியாக ஒதுக்கி அவற்றைச் சோபானமாக்கொண்டு அவற்றின் மேலாய் விளங்குவது, திரிபதார்த்த நித்திய முதலிய உண்மை கூறுகின்ற சைவவேதாந்தமேயாம். ஆகவே, மேல் "வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர்" என்று காட்டிய வேதாந்தம், அவர்கள் கருத்தின்படி ஏகான்மவாத பரமாகவே கொண்டாலும், அதைக்கீழ்ச் சோபான முறையாகவே தழுவி மேற் சென்ற சைவ சித்தாந்திகளுக்கு அதனால் யாதொரு விரோதமுமில்லையென்க. இவ்வொன்றைத் தமக்குச் சாதகமாக்கொண்டு சாதிக்குமிவர்கள், அத்திருமந்திரம் (௩௰௲)ங்களில் சைவபரமேயாண்டுங் கூறுகின்றவைகளுக்கு யாதுகூறுவரோ! அவற்றிற் சில பின்வருவனகாண்க. "ஆண்டானடியாரை வேண்டாது பேசினர் தாந்தாம் விழுவது தாழ்வாகரகமே" "சத்துமசத்துஞ் சதசத்துந் தான் காட்டில்," "வேதாந்தந் தொம்பதமே வும் பசுவென்ப" "சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்தித்தலாற் சித்தாந்தத்தே நிற்போர் முத்திசித்தித்தவர்" "காடும் பதியுடனற் பசுபாசமு, நீடுமோ நித்தம்," "ஆயபதிதானருட் சிவலிங்கம், ஆயபசுவுமடலேறென நிற்கும், ஆயபலிபீடமாகு நற்பாசமாம்." "பதியும் பசுவொடுபாசமு மேலைக், கதியும் பசுபாசநீக்க முங்காட்டி, மதிதந்தவானந்த மாநந்தி காணுங், துதிதந்து வைத்தனன் சுத்தசைவத்திலே" "ஆணவமாகும் விஞ்ஞான கலருக்குப், பேணியமாயைப் பிரளயாகலருக்கும், ஆணவ மாயைகன்ம மூன்றுமே, காணுஞ்சகலர்க்குக் காட்டுமலங்களே." "தத்துவமாறாறுந்தன் மனுவேழ்கோடி, மெய்த்தகு வன்னமைம்பானொன்று மேதினி, ஒத்திரு நூற்றிருபானொன் றைம்பானொன்று, வைத்தபதங்கலை யோரைந்தும் வந்ததே." சில

பனவாதியாக அநேகமுள்ளன. இவைகள், உண்மை வேதாந்தத்தெளிவாகிய சுத்தாத்துவித சைவசித்தாந்தமே விளக்குகின்ற வேதசிவாகமாதி சிவ சாஸ்திரங்களிலுள்ள பதி பசுபாச நித்தியங்கள், சரியைகிரியையோக ஞானங்கள், சாலோகாதி நாற்பாதங்கள், தாசமார்க்க சற்புத்திரமார்க்க சகமார்க்க சன்மார்க்கங்கள், மந்தா மந்த தீவிர தீவிரதர சத்திநிபாதங்கள், மந்திரம் புவனங் கலை வன்னம் பதம் தத்துவங்களாகிய சடத்துவாக்கள், வேதாந்த சித்தாந்த நாதாந்த போதாந்த யோகாந்த கலாந்தங்களாகிய சடந்தங்கள், சிவபூசை, குருபூசை, மாகேசுவரபூசை, திருவடிப்பேறு, சிவஞானம், முத்திரை முதலிய சைவபரமாயுள்ளவைகளையே எங்கெங்கும் விளக்குகின்றன. இவைகளில் யாதொன்றுவது ஏகான்மவாதபரமான நூல்களிலுண்டா? இவை முதலியவைகளை உற்று நோக்காமல் திருமந்திரம் தங்களுக்குச் சாதகமென்று ஏகான்மவாதிகள் கொள்வது, மற்றெல்லாம் பொய்யென்று வாதிக்கும் மாயாவாதிகளாகிய அவர்கள் கொள்கைக்கு முழுதும் விரோதமேயன்றிவேறில்லை. அங்ஙனமாயினும் அவர்கள் திருமந்திரத்தை விசுவசித்து மேற்கொண்டது, இனிநாளடைவிலேயாவது திருவருளால் அதனுண்மை மேற்கொண்டு சைவசித்தாந்த நெறியில்வருதற்குக்காரணமாதலின் அதுவுமொருபெரு நன்மையேயாகும்.

இனிக் கைவல்லியமும், "தன்னையுந்தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேல்" என்று பதிபசுபாச நித்தியங் கூறுகின்றது. இதற்கு உரை கூறினவரும் "தன்னை" என்பதற்கு (நித்திய பசுவாகிய) கூடஸ்தன் என்றும் "தலைவன்" என்பதற்கு (நித்தியபதியாகிய) பிரமம் என்றும் உண்மைவிளக்குகின்றார். இனிச்சீவரெல்லாம் அநாதி நித்தியர்களே யென்பதை அக் கைவல்லியமே "அநாதியாஞ் சீவரெல்லாம" என்று கூறி விளக்குகின்றது. மேலும், அக்கைவல்லியம் "எக்குணங்களும்பற்றாதோ னிமித்த காரணனுமீசன்" என்று வேதசிவாகம புராணேதிகாசாதி சகல சாஸ்திரங்களுங்கூறுகின்றபடி, பரமசிவனைச் செகத்துக்கு நிமித்த காரணனென்றே கூற, ஏகாத்ம வாதிகள் பிரமத்தைச் செகந்தோன்றுதற்கு முதற்காரணமென்று கூறுகின்றார்கள். பிரமமாகிய சித்துப் பொருளிலே செகத்தாகிய சடப்பொருள் தோன்றுமென்பது விரோதமல்லவா என்பார்க்கு, அப்பிரமத்தில் விவர்த்தனமாகச் செகந்தோன்றும் அது பிராந்தியேயன்றி வாஸ்தவமல்ல என்று முன் சொன்னதற்கு முட்டுக்கொடுத்து அதுவும்



பொய்யென்பதாக விளக்குகின்றார்கள். இந்த விவர்த்தவாத உபமானங்களிலுள்ள பழுதுகள் பல, விரிப்பானேன்.

இனிப் "பகவற்கீதை" எண்ணிய வுலகமு முலகுக் கீசனும் புண்ணியபாவமும் (அவற்றைச் செய்கின்ற சீவர்களும்), பொய்யென்றே கொள்ளுகிறவர்கள் "கடக்கரிதாய நரகமென்கின்ற கடல்களில் வீழவேகடவார்" என்று கூறுகின்றது. வாசிட்டமும் "ஆய்ந்த வெஞ்சிந்தை சீவநாயகன் வசமாமைக்கே, யேய்ந்ததுநிலையுங்கொள்ளா திறைவனைப்பிரிந்தாள் போல" என்று சீவனாகிய பசுவும் அப்பசுக்களுக்கு நாயகனாகிய பசுபதியும் நிலைகொள்ளாமைக்கு ஏதுவாகிய பாசமும் நித்தியப்பொருள்களென்றே விளக்கி அதற்குவமையாக நாயகனைப் பிரிந்த நாயகிபோல என்றதனாலும் தெளிவிக்கின்றது. இதற்கு உரை காரரும் சீவனைக்கூடஸ்தனென்றும் நாயகனைப் பிரமமென்றுங் கூறி இரண்டும் நித்தியங்களென்று விளக்குகின்றார். "ஆவாவிப்போதுள்ளபடி யறியு மறிவிலெனைக் கண்டேன், ஓவாவிகற்ப மற்றுணர்வாயொளிருஞ் சீவனுருவிதுவோ" என்றும் அவ்வாசிட்டம் சீவன்நித்தியன் சைதன்னியன் என்பதைவிளக்குகின்றது. இன்னும் இம் மாயாவாதிகள் மேற்கொண்ட நூல்களில் இவ்வாறு பதிபசுபாச நித்தியங் கூறுவனபலவுள்ளன. விரிப்பிற் பெருகும். இவர்களுள்ளே ஒரு பகுதியாராகிய கோயிலூர் வாசிகள் எல்லாராலும் சிரமேற்கொள்ளப்பட்ட ஆண்டவரென்னும் முத்துராமலிங்க சுவாமிகளும், "நாம்பிரமமென்று சொல்லி நணணி யுழலாதே" என்று தாமும் பாடிப் பிறர்க்கும் போதித்து வந்தனர். இவைகளில் ஒன்றையேனும் பொருட்படுத்தாமல், பிடித்ததே சாதிக்குங்கருத்தினராய்ச் சீவன் ஈசுரன் செகத்துக்களாகிய பதிபசுபாசங்களை அநித்தியங்களே (பொய்யே) என்றும், பிரமம் ஒன்று மாத்திரந்தான் நித்தியமென்றும், நாமே அப்பிரமமென்றும், இவைக்கும் சில உபநிடதங்கள் பிரமாணமென்றுங் கூறுகின்றார்கள். அவ்வுபநிடதங்களின் உள்ளீடுகள் மேற்காட்டினோம். அவற்றையும் உற்று நோக்காது பிடித்ததே சாதிப்பாரயிற்பதிபசுபாசநித்தியங் கூறுகின்ற பற்பல உபநிடதங்கள் கைவல்யம் பகவற்கீதை வாசிட்டாதி நூல்களின் கதியென்னையோ? ஆனால் விவகாரத்தில் எல்லாம் மெய்மையே; பரமார்த்தத்தில் இல்லையென்பரேல், இல்லது உள்ளதாகாது, உள்ளது இல்லதாகாது. என்னும் ஞாயத்தானும்,

“முத்திதனின் மூன்று முதலுமொழியக்கேள்
சுத்தவனு பேகத்தைத் துய்த்தலனு—மெத்தவே
யின்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மல
மன்பூடனே கண்டுகொளப் பா.”

என்னும் பிரபல சுருதியாலும் இன்னும் பற்பல பிரமாணங்களாலும், பதிபசு பாசங்கள் எப்போதும் அநாதி நித்தியங்களே என்னும் உண்மை விரித்துக்காட்டி அவ்வேகான்ம வாதக்கோண் மறுக்கப்படும். ஈண்டு விரிப்பிற் பெருகும், அமைக.

பன்னெடுங்காலம் பரம்பரையாக, நமக்குமேலொரு ஆண்டவனுண்டு, நாம் அவனுக்கு அடிமைகளே யென்னும் உறுதியேபற்றி, ஒன்பது சிவாலயங்களுக்குக் கொத்தடிமைகளாய், மற்றும் எத்தனையோ சிவாலயாதி திருப்பணிகளே அதிமுக்கியமாகச் செய்து, விபூதிருத்திராக்ஷபஞ்சாக்ஷர சிவசாதனமே மேற்கொண்டு, சிலர் காலகதியாலோ பாவகர்மத்தாலோ அசுபகாலங்களிலே விபூதியாதிகளை நழுவவிடுதல்போல் ஒரு சிறிதும் நழுவவிடாமல், விபூதி சம்பந்தமாகவே சமஸ்த காரியங்களும் செய்து வருகின்ற சைவப்பிரபு குல சிரேஷ்டிகளாகிய தன வைசிய நகரத்தார் முதலிய சைவ சீலர்கள், தமது பரம்பரைச் சைவநெறியிற் சிறிதும் வழுவாது மாயாவாதிகள் எல்லாம் பொய் பொய் யென்று கடைசிவரை பொய்யாகவே கழிக்கின்ற அமங்கலவழி தம்மை யணுவளவுஞ் சாராமல், மெய்யென்றே கொள்ளுஞ் சத்காரியவாத மங்கலவழியே இறுகப்பற்றி, நின்று, அதனால் இம்மையிலே உத்தம களத்திர புத்திரமித்திரபந்து சகிதர்களாய்ச் சகல சம்பத்துடன் வாழ்ந்து மறுமை இன்பமும் பேரின்பமும் பெற்று வாழும்படி ஸ்ரீ கணேச ஸ்கந்தசாம்பபரமேசுர சரணாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

வேதாந்தம் முற்றிற்று.

---

## மாசிமகம்.

(19-ம் பக்கத் தொடர்ச்சி.)

யாதொரு பொருளை யாவர் வணங்கினாலும் அவ்வணக்கமெல்லாஞ் சிவபெருமானைப் போயடையும். அது போல வேதங்கள் மற்றைத்தேவர்கள் முதலாயினோர்க்குச் சொல்லுகின்ற புகழெல்லாம் எல்லா நதிகளும் சமுத்திரத்தைச் சென்றடைதல்போல, சிவபெருமானைச் சேர்வனவாம். மகனே இன்னுங்கேள்; நான்



மேலே சொல்லுமவைகள் வேத சாகைகளெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற சத்திய வசனங்களாம்; அவற்றைக் கேட்பாய்; எல்லாப் பொருள்களையும் படைத்துக் காத்தழித்து மீண்டும் படைப்பவனும், ஆன்மாக்களுக்குத் திருவருள் பாலித்து அவைகளை ஆண்டருளும் தலைவனும், ஆதியந்தமில்லாதோனும் சிவனே யென்றும்; செகத்பிதாவும், சுத்தசாட்குண்ணியனும், அருவும் உருவுமாகும் சுத்தனும், அறிடவொண்ணாத சோதியும், எங்கும் வியாபித்திருக்கும் ஞான சொரூபியும், அநாதியாயுள்ளவனும், தேவாதி தேவனும், என்று மழியாதோனும், ஆன்மாக்களுள் நீங்காதிருக்கின்ற பரமானந்த தாண்டவனும் சிவனேயென்றும்: மூவுலகங்களினுந் தோன்றுகின்ற பொருள்களை யெல்லாம் பெற்றருளும் பிதாவாகிய திரியம்பகனும், எல்லார்க்குஞ் சாட்சியாய் நிற்கின்றோனும், தாணுவும், பரனும், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கடவுளும சிவனே என்றும்; பெருமையிற் சிறந்தோனும், ஏகனும், அளவிடப்படாத குணத்தையுடையவனும், பிரமவிட்டுணுக்களால் அறியப்படாதோனும், ஆண் பெண் அலி யென்னும் மூன்றுபாலுமில்லாதோனும், அன்பர் யாவர்க்கும் வேண்டியவற்றை வேண்டியாங்கு ஈபவனும் சிவனே என்றும், பிரமா முதலாக நின்ற பசுவர்க்கங்கட் கெல்லாம் பதியாக நின்றருள் செய்யும் பசுபதியும், அவர்க்கெல்லாம் தான் றலைவனென்பதை யாவருந் தெளிய அவர்கள் இறக்க வெந்த சாம்பலையும் எலும்பையும் தரிப்பவனும் சிவனே என்றும்; உடம்பெடுத்துப் பிறக்குமெவரையும் தன்னுடைய குணத்துளொடுக்கி அவர்க்குத் தானே புகலிடமாகி நின்று அவர்களுடைய குணங்களிற் றான் புகுதலில்லாதோனும், தன்னுடைய இயற்கை இத்தன்மையதென்று யான் சொல்லுதற்கரிய தேவனும், ஈசனும் சிவனே என்றும் அவ்வேதம் கூறும். தக்கனே இன்னுமொன்றைக் கேள். பிரமா முதலாக நின்ற தேவர்களை யெல்லாம் நீக்கி அந்தச் சிவனென்றுள்ள ஒரு தனி முதல்வன்றானே முத்தியை விரும்பினோர்க்குக் கொடுப்பனென்றும் அந்த வேதஞ் சொல்லிற்றென்னில், மற்று யாவர்தாம் தேவராவார். ‘சீவராசிகள் பரசிவனை யுணர்தலின்றிப் பிறவித்துயரை நீங்கி மோட்சத்தை யடைவோமென்று சொல்லுதலானது உருவமில்லாத ஆகாயத்தின் தோலை உரித்துடுப்பதற்கு நிகராகும்’ என்று உபநிடதஞ் சொல்லிற்றாதலால், அச்சிவனே பரம்பொருள் என்பதற்கு வேறு சாட்சியும் உண்டோ!

அச்சிவ பெருமானே பரம்பொருள் என்பதனை வலியுறுத்துதற்குச் சொல்லிய வேதவாக்கியங்கள் இன்னும் பலவுள, அவற்றை நினைத்துச்சொல்ல எனக்கும் முடியாது. ஒருவாறு சொல்வேனாயினும் சொல்லப் பல நெடுங்காலங்கழியும். அங்ஙனஞ் சொல்லினும் ஒழியா. நீ இதனை முன்னே என்னிடத்தறிந்தனையாயினும் மகனே இப்பொழுது மறந்தனையோ! விட்டுணுவையும் என்னையும் வேறு பலரையும் புகழுகின்ற வேதமானது பரமசிவனைத் துதித்தது போல நமக்கு ஓர் உரையாயினும் சொல்லியதுண்டோ! நம்மைச் சொல்லியதும் உபசாரமே யென்று இவ்வுலகமெல்லாம் அறியும்படி நம்மை அவ்வேதம் முன்னும் பின்னும் விலக்கியதல்லவா? (வேதம் முன்னும் பின்னும் விலக்கினமையைப் பெரிய புராணத்துத் திருமலைச்சிறப்பு சூசனம் இரண்டாம் பாராவிற் காண்க.) நான்கு வேதங்களிலும் ஓர் பாகம் சிவபெருமானுடைய பெருமையை எடுத்துப் பேசும், மற்றோர் பாகம் பிரமவிட்டுணுக்களாகிய எம்மையும் மற்றைத் தேவர்களையும் பஞ்சபூதங்களையும் மற்றைப் பல பொருள்களையும் பேசும். இது சத்தியம். தக்கனே இதனை அறிகுதி. பிரமவிட்டுணுக்களாகிய நம்மையும் பரம்பொருள் என்று நினைத்து சிவபெருமானைப் போலச் சிறப்புச் செய்கின்ற தீய நெஞ்சினர்களாகிய படிறர்கள் தீராததுன்பத்தைத் தருகின்ற செவ்விய நிரயப்படுகுழியில் வீழ்வார்கள். அவர்களை விழுங்கிய அந்நிரயம் உமிழாது. நம்மோடு அச்சிவ பெருமானையுஞ் சமமெனச் சொல்கின்றவர் எப்பிறப்பினுந் துன்பக்கடலுள் ஆழ்வார்கள். நம்மைச் சிவபெருமானுக்கு அன்பர்களென்றும், அவருடைய திருவடித்தொண்டைச் செய்து அவரருளால் வாழும் தேவர்களென்றும் நினைத்துத் தோத்திரஞ் செய்தவர்க்கு நாம் அருள் செய்வோம். இங்ஙனம் நினையாமல் நம்மையும் பரம்பொருள் என்று நினைக்கின்ற மற்றையோரை நமக்குப் பகைவர் என்று எண்ணியேயிருப்போம். சிவபெருமான் பசுபதி; நாமெல்லாம் பாசத்தாற் பந்திக்கப்பட்டுழலும் பசுக்கள்' என்று விதிப்பொருட்டாக வேதங்கள் கூறுகின்ற உண்மைப்பொருளை மைந்தனே நீ தெளியவேண்டினாற் சொல்வேன் கேள். யாங்கள் படைத்தல் காத்தல்களாகிய இவ்வரசியலைச் செய்யும்படி சிவபெருமானுடைய திருவடிகளைப் பூசித்துத் துதித்த ஆலயங்கள் பலவற்றையுங் காணுதி. அந்தச் சிவபெருமானுடைய திருவருளைப்பெறாது முத்தி யடைந்தவர்களில்லை; அவருடைய அருளின்றி வாழ்கின்ற



தேவர்களும் பிறரும் இல்லை; அவருடைய திருவருளைப் பெற்றால் அடைதற்கரிய அரும்பொருள்கள் ஒன்றுமில்லை; அவரன்றிப் பதிப்பொருளுமில்லை. இது சத்தியம். ஆதலால் அக்கடவுளையே சரணென் றடைகுதி." என்று பிரமதேவர் தக்கனுக்கு உபதேசித்தார்.

பிதாவாகிய பிரமதேவர் இவ்வாறே சிவபரத்துவத்தை உபதேசிக்கக் கேட்டுணர்ந்த தக்கன், தீவினைப்பயனை யனுபவிக்கும் ஊழுண்மையினால், மோட்சத்தை விரும்பாதவனாய். "யான் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து, அவருடைய திருவருளினால் பிரமாடுதலிய தேவர்களுடைய வளங்களினும் மேலாகிய வளங்களைப் பெறுவேன்" என்று எண்ணி அதில் ஆசையுற்று, பிரமாவை வணங்கி, 'பிதாவே நீர் உபதேசித்த பரமசிவனையே நான் பரம்பொருள் என்று துணிந்தேன்; அவரை நோக்கிப் பெருந்தவஞ் செய்து பல வளங்களைப் பெற விரும்பினேன். யான் தவஞ் செய்தற்குரிய ஓரிடத்தை விரைவிற் கற்பித்து விடைகொடுத்தருளும்" என்றான். அவர் தம்முடைய மனத்தினின்றுந் தோன்றிய மானசவாவியை அதற்குரிய இடமாகக் கற்பித்து அனுப்பினார். தக்கன் பிரமாவினிடத்து விடை பெற்று, அத்தடாகத்தை யடைந்து, அதன் ஓர்சாரில் இருந்து, காற்று மழை வெய்யில் பனி ஆகிய இவைகளுக்கஞ்சாமல், பிராணவாயுவைச் சுழுமுனை வழியாய் எழுப்பி மூலாக்கினியைச் சுவாலிப்பித்துப் புருவ மத்தியிலுள்ள அமிர்ததாரையை வீழ்த்தி, உடம்பை அன்பினால் அபிஷேகஞ்செய்து குளிர்வித்து இருதயகமலத்திலுள்ள சிவபெருமானுக்குக் கொல்லாமை முதலிய அட்ட புட்பங்களைச் சாத்தி, ஒருப்பாட்டோடு சமானமாக ஸ்ரீ பஞ்சாட்சரத்தை விதிப்படி செபித்துப் பூசனைசெய்து, பாசம் நீக்கும் ஞானிகளைப்போல ஆயிரம் வருடம் அருந்தவத்தைச் செய்தான். அதனைச் சிவபெருமான் திருவுளஞ் செய்து, அவனுக்கு வரங்கொடுக்கும்படி உமாதேவியாரோடு ரிஷபாரூடராய் எழுந்தருளிவந்தார். தக்கன் அவருடைய வரவை யறிந்து, விரைவில் இருக்கை விட்டெழுந்து, "என் மனக் கருத்தும் நிறைவேறின" என்று சொல்லி மிகுந்த அன்பும் மகிழ்ச்சியும் உண்டாக, "எம்பெருமானுடைய திருவடிகளைத் துதிப்பேன்" என்று எதிர்கொண்டு அவருடைய திருவடிகளை வணங்கி, ஒன்று போல ஆயிரந் தோத்திரங்களைச் சொல்லி நின்றான். சிவபெருமான் அவனை நோக்கி, "தக்கனே உன்னுடைய வழிபட்டிற்கு

மகிழ்ந்தோம். உனக்கு வேண்டியதென்னை? சொல்லுதி என்றார். தக்கன் தன் விதிவழியே மதியுஞ் செல்லுதலால், மோட்சத்தை விரும்பாதவனாய், இவ்வாறு வரம்வேண்டுவான்: "எம்பெருமானே, இப்பூவுலகமும் விண்ணுலகமும் கந்தருவர் முதலாயினோர் இருக்குமிடங்களும் பிரம விட்டுணுக்களுடைய பதங்களும் திசைகளும் என்னுடைய ஆஞ்ஞாசக்கரம் செல்லும்படி அருள்புரியும்; உம்மைவந்து துதிக்கும் உயிர்களெல்லாம் என்னை வந்து துதிக்கவும், யான் உம்மையன்றி மனத்தாலும் பிறரை வழிபடாதிருக்கவும், வரந்தந்தருளும், தேவர்களும் அவுணர்களும் யான் பணித்த பணிகளைச் செய்யவும், எனக்கு அநேக புதல்வர்களும் புதல்விகளும் உண்டாகவும் அருள் செய்யும்; உம்முடைய சத்தியாகிய உமாதேவியார் எனக்கு மகளாக, நீர் மறையவராய் வந்து அன்பினோடு திருமணஞ் செய்தருளும்" என்று இவ்வரங்களைத் தக்கன் வேண்டினான். சிவபெருமான் அவற்றைக்கேட்டு, "தக்கனே இது நன்று. இவ்வரங்களை உனக்குத் தந்தோம். நீ நன்னெறியில் நிற்பாயாயின் இவ்வரங்கள் நிலைபெறும்" என்று அருள் செய்து, அந்தர்த்தானமாயினார்.

(இன்னும் வரும்.)

---

## விரதம்

### திருக்குறள்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

விரதமாவது ஆன்ம ஈடேற்றத்தின்பொருட்டு இன்ன தருமஞ் செய்ய வேண்டியதென்றும் இன்ன பாவம் ஒழிக்கவேண்டியதென்றும் தத்தம் சக்திக்குப் பொருந்தும்படி வரையறுத்துக் கொள்ளப்படுவதாம். விரதம் நோன்பு என்பன ஒரு பொருட் சொற்கள். விரதத்தால் மனம் புத்தி முதலான உட் கருவிகள் பரிசுத்தமடையும். அவை பரிசுத்தமாயவழி பிறவிப் பெருங்கடலை நீந்த ஏது உண்டாகும்; அதனால் இறுதியில் முத்தியும் சித்திக்கும். ஆதலால், ஞானங் கைகூடுவதற்குச் சாதனம் விரதம் என்பது சொல்லாமலேயமையும்.

### விரதம் இருவகைத்து

இனி விரதம், நித்தியம், நைமித்தியம் என இரண்டு வகைப்படும். நித்திய விரதங்களாவன :— அருளுடைமை, இன்னா செய



யாமை, கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, வாய்மை, கூடாவொழுக்கமின்மை, கோபமில்லாமை, தவம் முதலியன. மேற்கூறிய வற்றுள் அருளுடைமையே மிகச் சிறந்தது; இது மற்றைய விரதங்களுக்கெல்லாம் அடிப்படையாயுமுள்ளது. அருளுடைமையாவது யாதென்று ஆராயப்புகின் அது சயநலங் கருதாமல் இயல்பாகவே எல்லாவுயிர்கள் மேலும் செல்வதாகிய இரக்கத்தையும் அன்பையுமுடைமை என்பது பெறப்படும். இக்கருணையை நாம் வளர்க்கும் நிமித்தம் அதனைக் கெடுப்பது யாதென்று முதலில் ஆராயவேண்டும். ஆராய்ந்து அதனை அறவே ஒழிக்க உபாயந் தேட வேண்டுவது அவசியம். எம்மாராய்ச்சியில் புலாலுண்ணல், கூடாவொழுக்கம், கோபம் ஆகிய மூன்றுமே அருளுக்குச் சத்துரு என்று கண்டோம் இதன் உண்மை பின்வரும் வாக்கியங்களாலும் தெளியப்படும். "அருளாட்சி யாங்கில்லை ஊன் தின்பவர்க்கு," "நோன்பென்பது கொன்று தின்னாமை," "கொல்லா விரதம் குவலயமெல்லாமோங்க" "பூசையென்பது..........ஆசை கோபம் அகந்தை அடக்கியே நீசனும்பொறி நெஞ்சுள் நிறுத்தியே ஈசனைத் தன் இதயத்துக் காண்டலே" ஆதலால் நாம் மேற்கூறிய பாவங்களை விலக்க முயல வேண்டும். அப்படிச் செய்யாவிடின் இறைவனது திருவடிகளாகிய கருணைமா கடலில் யாம் திளைப்பது யாங்ஙனம்?

### உபவாச விரதம்

நைமித்திய விரதங்களாவன உபவாசவிரதங்களாம். உபவாசமாவது மனம்பொறி வழிபோகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மன வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதலாம். சில காலங்களிலே திருவருள் நுகர்ச்சி அதிகமுண்டு. இக்காலங்கள் தாம் விரதகாலங்கள் என்று கொள்ளப்படுவன. நித்திய விரதம் நைமித்தியத்திற்கு இன்றியமையாதது. நைமித்தியத்தை மாத்திரம் கைக்கொண்டு நித்தியத்தைப் புறக்கணிப்பது பேதைமையாகும். சில மனுஷர்கள் உபவாசகாலங்களில் மாத்திரம் மச்ச மாமிசம் புசித்தலை ஒழித்து மற்றக்காலங்களில் பழையபடி உண்கின்றார்கள். தீயதென்று கண்டறிந்து தானே அவ்வுணவை உபவாசகாலங்களில் விலக்குகிறார்கள். அக்காலங்களில் ஆகாதது மற்றக்காலங்களில் ஆவது எங்ஙனம்? இதைச் சிறிதேனும் சிந்திப்பாராக, நிற்க.

உபவாச விரதங்களுடன் சிவபூசை, ஆலய வழிபாடு, மாகேசுர பூசை, திருவிளக்கேற்றல், சிவாலய தொண்டு, சிவனடியார் தொண்டு, அவ்வவ்விரத மூர்த்தியின் மூலமந்திர செபம், பஞ்சாட்சர செபம், திருவருட்பாப் பாராயணம் முதலியன செய்வது விசேஷம். "நன்று நோக்கிலென் பட்டினியாகிலென், குன்றமேறி யிருந்தவஞ் செய்யிலென், சென்று நீரிற்குளித்துத் திரியிலென், என்றுமீசன் என்பார்க் கன்றியில்லையே" என்னுந் தேவாரம்இங்கு கவனிக்கத்தக்கது. உபவாசவிரதங்கள் உபாசன மூர்த்தத்திற்கேற்ப சிவவிரதம், தேவி விரதம், விநாயக விரதம், சுப்பிரமணிய விரதம், வைரவ விரதம், வீரபத்திர விரதம் என பலவகைப்படும்

**சிவவிரதமாவன:—** திங்கட்கிழமை விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதாரவிரதம் கலியாணசுந்தரவிரதம், சூல விரதம், இடப விரதம் என எட்டாம். பிரதோஷ விரதமும் இதில் அடங்கும்.

**தேவி விரதம்:—** வெள்ளிக்கிழமை விரதம், ஐப்பசி யுத்தர விரதம், நவராத்திரி விரதம், என மூன்றும்.

**விநாயக விரதம்:—** வெள்ளிக்கிழமை விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக சஷ்டி விரதம்என மூன்றும்.

**சுப்பிரமணிய விரதம்:—** வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம், கந்த சஷ்டி விரதம் என மூன்றும்.

**வைரவ விரதம்:—** செவ்வாய்க்கிழமை விரதம், சித்திரைப் பரணி விரதம், ஐப்பசிப் பரணி விரதம் என மூன்றும்.

**வீரபத்திர விரதம்:—** செவ்வாய்க்கிழமை விரதமென ஒன்றேயாம்.

## அனுஷ்டிக்கும் முறை.

விரதம் நோற்பவர் காமங் கோபம் முதலிய குற்றங்களைப் பற்றறக்களைதல் வேண்டும். ("காப்பது விரதம்" என்பது ஒளவையார் வாக்கு) தவறாது விடியுமுன் நித்திரைவிட்டு எழல் வேண்டும். எழுந்து புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்த பின்பு தியானம், செபம், பூசை, ஆலயதரிசனம், புராணபடனம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும். திருக்கோயிலிலே இயன்ற மட்டும் நெய்விளக் கேற்றல் வேண்டும். அபிடேகத்திரவியம், நைவேத்தியத் திரவியங்கள் கொடுத்தல் வேண்டும். போசனம் பண்ணும்போது சிவனடியார் ஒருவரோடாயினும் உடனிருந்து உண்ணல் வேண்டும். இரவிலே நித்திரைசெய்யும்போது மிகப்



பரிசுத்தராய்க் கடவுளைச் சிந்தித்த வண்ணம் தரையில் படுத்துறங்கி அதிகாலையில் எழுந்து விடல் வேண்டும். உபவாச தினத்திற்கு முந்தின தினத்திலே ஒருபொழுது தான் போசனம் செய்தல் வேண்டும். உபவாசதினத்திற்குப் பிந்தினநாட் காலையிலே மாகேசுர பூசைசெய்து இனத்தவர்களோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணியபின் பகலிலே நித்திரை செய்யாது சிவபுராணங் களைக்கேட்டுக்கொண்டிருத்தல் வேண்டும். விரத காலத்தில் உபவாசமிருப்பது உத்தமம். அது கூடாத விடத்து ஒருபொழுது போசனம் செய்யலாம். மற்றைப்பொழுது பாலேனும், பழமேனும், பலகாரமேனும் உட்கொள்ளலாம்.

விரதத்தைக் கிரமப்படி அனுசரிக்கக் கூடாதவர் தம்மாலியன்றவளவு அனுசரிப்பதே தகுதி. ஏனென்றால் தம்மளவுக்கு மீறி தேகத்தை வருத்தப்படுத்த நேரிடின் அவர்களுக்கு விரதத்தில் வெறுப்புத் தோற்றும். இதனால் விரத பலன் இல்லாமற் போய்விடும்.

## பலன்

விரதத்தால் அடையும் பலன் காமியம் நிஷ்காமியம் என இருதிறப்படும். காமியமாவது இம்மைப் பிரயோசனங் கருதி அனுஷ்டிப்பது. அதாவது விரதம் நோற்பதால் தாம் தாம் வேண்டியவற்றைப் பெறுவது. விரதத்தால் கடன், வறுமை, நோய், பயம் முதலான நீங்கப் பெறுதல் உலகப் பிரசித்தம், "வேண்டினர் வேண்டியதே* யீவான் கண்டாய்," "வாயானை மனத்தானை மனத்துணின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னை" என்னும் திருப்பாசுர அடிகள் 'தம்மடியவர் குறைவு தீர்த்தாண்டருள்வதே விரதமாகப் பூண்டுள்ளார் சிவபிரான்' என்பதை நன்கு விளக்கும். இம்மைப் பயன்கள் அநித்தியமும் மேலும் மேலும் ஆசையை உண்டாக்குவன வாதலால் நிஷ்காமியமே சிறந்தது. ஆயினும் யாதொரு பலனுங் கருதாது நோற்கப்படும் விரதமே மிகச்சிறந்ததாகும்.

"வேண்டுங்கால் வேண்டும்பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்டவரும்"

"வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட முழுதுந்தருவோய் நீ
வேண்டு மயன்மாற் கரியோய் நீ வேண்டியென்னைப் பணிகொண்டாய்

* (ஆன்ம ஈடேற்றத்துக்குத்) தேவையான பொருள்.

வேண்டி நீ யாதருள் செய்தாய் யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன்விருப்பன்றே"

"விரதமெல்லா மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்"

"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழிருக்க வென்றார்"

என்னும் திருவருட்பாக்கள் இங்கு உற்று நோக்குதற்குரியவை. விரதம் அனுஷ்டிப்போர் நல்லொழுக்க முடையராய் இருத்தல் வேண்டும். உலக இன்பங்களைச் சிறிது சிறிதாக விட முயற்சி செய்தல் வேண்டும். உலக ஆசை ஒழிந்த விடத்துத்தான் பிறப்பு நீங்கும். பிறப்பு நீங்கிய வழியே முத்திசித்திக்கும். "பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" என்பது பொய்யாமொழி. "பிறவி வேரறுத்தென்குடி முழுதாண்ட பிஞ்ஞகா" என்னும் மணிவாசகமும் இக்கருத்தையே விளக்காநிற்கும். ஒவ்வொருவரும் தாம் தாம் என்னென்ன தீச்செய்கைகளுக்கு உறைவிடமாகஇருந்து வாழ்நாளை வீணாகக் கழிக்கிறார்களென்பதை தம் முன்னேயே காரண காரியத்துடன் ஆராய்ந்தறிந்து அக்குற்றங்களினின்றும் விலக உபாயந்தேட வேண்டும்.

## முடிவுரை.

விரதத்துக்கு முக்கிய அமிசம் அருளுடைமை யென்று மேலே கண்டறிந்தோ மாதலால் நாம் அதை நன்றாக வளர்க்கமுயற்சி செய்யவேண்டியது பெருங்கடனாம். பண்டைக்காலத்தில் விளங்கிய இரந்தி தேவர் என்னும் அரசர், நாற்பத்தெட்டு நாள் விரதம் அனுட்டித்து அருளுடைமையாகிய இவ்வரத்தையே சிவபிரானிடம் வேண்டிப் பெற்றார்.

அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே பெருந்திறலருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலமே புகழ்ச்சியைக்கடந்த போகமே யோகத்தின் பொலி
தெருளிடத் தடியார் சிந்தையுட்புகுந்த செல்வமே சிவ பெருமானே [வே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவ தினியே.

சிவபாதசுந்தரம் பிள்ளை, B. A.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.



| மலர் | துன்மதி௵ ஆனிமீ | இதழ் |
|---|---|---|
| 7 | 1921௵ ஜூன்மீ | 3 |



## தேவாரம்.

மன்னி னல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணி னல்லகதிக் கியாதுமோர் குறைவிலைக்
கண்ணி னல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணி னல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

---

## சிவஞான போதம்.

### பதினொராஞ் சூத்திரம்—முதலாம் அதிகரணம்.

(4-வது பக்கத்தொடர்ச்சி)

இதில் 1-வது—தன்றுற் கூறப்படும் பொருள்:—ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அனுபவிப்பன்.

2-வது—ஐயப்பாடு:—முதல்வனிடத்தில் காட்டும் உபகார மாத்திரமேயன்றி, காணும் உபகாரமும் உண்டோ, இல்லையோ.

3-வது—பிறர் கூறும் பக்கம்:—கண் சடமாதலானும், காணுதலாகிய பயன் ஆன்மாவுக்கே யாதலானும், கண் காணும்போது ஆன்மாவும் உடனின்று காணும் என்பது பொருந்தும். ஆன்மா சடமல்லாமையானும், அறிதலாகிய பயன் ஆன்மாவுக்கேயன்றி முதல்வனுக்கில்லாமையானும் முதல்வனும் அவற்றின் விடயத்தை உடனின்று அறியும் என்பது பொருந்தாது. அன்றியும், ஆன்மாவானது பெத்தத்தில் உலகப் பொருள்களை அறியுமிடத்து முதல்வன் உடனின்று அறிவன் என்பது பொருந்துமெனினும், முத்தியில் ஆன்மாவுக்கு விடயமாவது தோன்றில்லாமையால் அவ்விடத்தும் முதல்வன் உடனின்று அறிவன் என்பது பொருந்தாது.

அன்றியும், முதல்வன் காட்டுந்தொழில் மாத்திரம் உடையவனெனில் (5-ம் சூத்திரத்தில்) "காந்தங்கண்ட பசாசத்தவையே" என்றபடி விகாரியாகான். உடனின்று காணுந்தொழிலும் உடையவனாயின் ஆன்மாக்கள் போல் பந்தமுற்று விகார மெய்துவன்.

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு:—விளக்கொளியானது கண்ணொளியோடு கலந்து உருவத்திலுங் கலந்தால் மட்டும் கண் உருவத்தைக் காணும். அவ்வாறு கலவாதபோது கண் உருவத்தைக் காணமாட்டாது. அதுபோல், முதல்வன் அறிவித்தால் அறியுந் தன்மையுடைய உயிர்களும் முதல்வனுடைய அறிவு உயிராகிய தம்மறிவோடு கலந்து பொருளினும் கலந்து நின்றால் மட்டும், தம் அறிவு விளங்கிப் பொருளை யறியும். முதல்வனறிவு உயிரின் அறிவோடும் பொருளோடுங் கலவாதபோது உயிர்கள் தனித்து ஒன்றை அறியமாட்டா, தனித்து நின்று ஒரு பொருளை அனுபவிக்கவும் மாட்டா. ஆதலால் அறிவு விளங்குதற் பொருட்டு மாத்திரமன்றி விடயத்திற் சென்று பற்றுதற்கும் முதல்வன் உடனிற்றல் பெறப்படும். படுதலும், முதல்வனும் விடயத்தை உணரும் என்பது துணியப்படும்.

பரமுத்தியில் ஆன்மா சிவானந்தத்தை அநுபவித்தலினாலும், அவ்வநுபவம் முதல்வனையின்றிக் கூடாமையாலும், முதல்வனும் அவ்வநுபூதியை அவ்வான்மாவினிடம் தங்கி நின்று உணர்வன். இக்கருத்தையே பற்றிச் சில ஆகமங்கள் முதல்வனும் தன் ஆனந்தத்தை யநுபவிப்பன் என்று கூறும். (இவ்விடத்தில் முதல்வன் அநுபவிப்பன் என்று ஆகமங்கள் கூறுவதின் கருத்து அறிவன் என்பதேயாம். (அழுந்தியறிதலே அநுபவித்தல் என்னுஞ் சொல்லுக்குப் பொருளாதலாலும், அழுந்தி யறிதல் ஆன்மாவுக்கே யன்றி முதல்வனுக் கில்லாமையாலும், முதல்வன் ஆனந்த ரூபமேயாயிருத்தலினால் தானே தன்னைப் புதிதாக அநுபவித்தல் வேண்டாமையாலும், முதல்வன் செய்யுஞ் செயலெல்லாம் தன் பொருட்டன்றி ஆன்மாவின் பொருட்டேயாதலினாலும், ஆகமங்கள் முதல்வனும் தன் ஆனந்தத்தை அநுபவிப்பன் என்றதற்கு அறிவன் என்று பொருளுரைப்பதே பொருத்த முடைத்தாம்.)

உயிரும் முதல்வனும் உடனாய் நின்று விடயங்களை யறியினும், உயிர் தன்னாற் சாரப்பட்ட ஒவ்வொரு விடயத்தையே பற்றிப் பலவேறு வகைப்பட அறியும். முதல்வன் எல்லா உயிராலுஞ் சாரப்



பட்ட எல்லாவிடயங்களையும் ஒரு தன்மையாக அறிவன். ஆதலால் உயிர் போல முதல்வன் பந்த மடையான். ஆதலால் அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்பது துணியப்படும்.

5-வது—இயைபு—உதாரண வெண்பா.

ஐந்தையு மொக்க வுணரா தவற்றுணர்வ
தைந்தும்போ னின்றுணரு மாகலா—னைந்தினையு
மொன்றொன்றாப் பார்த்துணர்வ துள்ளமே யெவ்வுலகு
மொன்றொன்றாப் பார்க்கு முணர்ந்து.

இதின் அன்வயம்—உள்ளமே அவற்று ஐந்தும்போல் நின்று உணர்வது உணருமாகலான் ஐந்தையும் ஒக்க உணராது, ஐந்தினையும் ஒன்று ஒன்றாப் பார்த்து உணர்வது. ஒன்று எவ்வுலகும் ஒன்றா உணர்ந்து பார்க்கும்.

(இ-ள்.) உள்ளமே அவற்று ஐந்தும் போல் நின்று உணர்வது உணரும் ஆகலான் = ஆன்மாவானது சுவை யொளி யூறோசை நாற்றம் என்னும் ஐந்தினும் ஐம்பொறி போல் அதுவதுவாய்ச் செறிந்து நின்று உணர்தற் பாலதனை உணருந் தன்மைத்தாகலான், (அதாவது, மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐந்து இந்திரியங்களும் தத்தம் விடயங்களை உணருமிடத்து அந்த அந்த இந்திரியம் அதனதன் விடயத்தை அதுவதுவாக நின்றுணர்ந்து பிறிதொரு விடயத்தை உணராதவாறு போல, ஆன்மாவானது இரதம் உருவம் பரிசம் சத்தம் கந்தம் என்னும் ஐந்து விடயங்களை உணருமிடத்து அந்த அந்த விடயமாய் நின்று உணரக்கூடிய ஒவ்வொரு விடயத்தையே உணருந் தன்மை புடையது. ஆதலால்)—ஐந்தையும் ஒக்க உணராது ஐந்தினையும் ஒன்று ஒன்றாப் பார்த்து உணர்வது = அவ்வைம்புலன்களையும் ஒருங்கே உணரமாட்டாது, அவ்வைந்தினையும் ஒவ்வொன்றாயறிந் தநுபவிப்பதாம். (அவ்வாறு அநுபவிப்பதனால் சார்ந்ததன் வண்ணமாயிருக்கும் அவ்வான்மா பல தன்மைப்பட்டு விகாரமடையும்)—ஒன்று எவ்வுலகும் ஒன்றா உணர்ந்து பார்க்கும் = (அது போலச் சார்ந்ததன் வண்ணமாய்ப் பல திறப்படுதலன்றி) என்றும் ஒரு பெற்றித்தாயிலங்கும் பரம்பொருள் (எல்லா உயிர்களுடைய) எல்லா விடயங்களையும் (பொது வகையால்) ஒருங்கே புணர்ந்து (அவ்வுயிர்களுடனின்று சிறப்பு வகையானும்) அறியும். (ஆதலால் உடனிற்றலே பற்றி ஆன்மாப்போலப் பரம்பொருள் விகாரமுடைத்தன்று.) (எ-று.)

ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான் விளைந்த பொற்பினனேகமா
யுள்ளத்தின் கண்ணானா னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணானே யற்று.

(இ-ள்.) ஒன்று இணையடிகள் ஏகமாய் நின்றே உணர = முதல்வன் திருவடிகளில் (நானென ஒன்றில்லை, எல்லாம் அம்முதல்வனே யென) ஏகமாகி நின்று கொண்டே (பிராரத்த வினைக்கீடாக வரும் விடயத்தை) உணர்வாராயின் — தான் போகமாய் விளைந்த பொற்பினன் = அது தான் அச்சிவன் முத்தர்க்கு (வினைப்பயனாதலின்றிச்) சிவபோகமாய் விளைகின்ற பொற்பினாலே — உள்குவார் உள்கிற்றை = அவ்வாறு உணர்வாரால் உணரப்படும் விடயத்தை — உள்ளத்தான் உற்றுக் காணானே = அவ்வுணர்வினிடத்தாற் பொருந்தி அறிந்து தனக்காக்கிக் கொள்ளான் கொல்லோ, — ஏகமாய் உள்ளத்தின் கண் ஆனான் = (பெத்தம் முத்தி இரண்டினும) அத்துவிதமாய் அவ்வறிவின் கண் நீங்காது உடனின்று உணர்த்தியும் உணர்ந்தும் வரும் அம்முதல்வன் (எ - று)

நின்றே என்பதில் உள்ள ஏகாரம் நில்லாதுணர்தலைப் பிரித்தமையின் பிரிநிலைக் கண் வந்தது. இணையடிகள் = இணையடிகளின் கண். விளையும்பொற்பினான் என்பது தெளிவு பற்றி விளைந்த பொற்பினன் என இறந்த காலத்தாற் கூறப்பட்டது. விளைந்த பொற்பினன் என்றமையிற் போகம் சிவபோகமாதல் பெற்றாம். ஆனமை = நீங்காமை. உள்ளத்தின் கண் ஆனான் = உள்ளத்தின் கண் நீங்காதுறைபவன்.

இணையடிகளில் ஏகமாய் நின்று கண்டதோர் பொருளை அந்தக் கருத்தினாற் காண்பார்க்கு அது சிவ போகமாய் விளையுமென்பதை "பெற்ற சிற்றின்பமே பேரின்பமாம்" எனவும் "காணுங் கரணங்களெல்லாம் பேரின்பமெனப்—பேணுமடியார்" எனவும் வருவனவற்றாலுணர்க.

இவ்வதிகாரணத்தால் பெத்தம் முத்தி இரண்டினும் ஆன்மாவால் விடயிக்கப்படும் விடயங்களை முதல்வன் உடனின்று விடயிப்பன் என்பதும், பெத்தத்தில் முதல்வன் ஆன்மாவாய் நின்று விடயித்தலின் விடயங்கள் முதல்வனுக்கன்றி ஆன்மாவுக்காயின வென்பதும், முத்தியில் ஆன்மா முதல்வனாய் நின்று விடயித்தலின் விடயங்கள் ஆன்மாவுக்கன்றி முதல்வனுக்காயின வென்பதும், உடல் பொருளாவி முழுவதும் முதல்வனுடைமையெனக் கொண்டு முதல்



வனுக்கு அர்ப்பணஞ் செய்து பதார்த்தங்கள் பாராது பாமே பார்த்திருக்கும் சிவன் முத்தர்களால் விடயிக்கப்படுவனயாவும் அவர்களுக்குப் பேரின்பமாய் விளையுமென்பதும், அதனால் எஞ்சி நின்ற பிராரத்தவினை அவர்களைத் தொடர்தலில்லை யென்பதும் பெற்றாம்.

(தொடரும்)

---

## மாசிமகம்.

(44-ம் பக்கத் தொடர்ச்சி.)

வரம்பெற்ற தக்கன் சிவபெருமானைத் துதித்துப் பெருமகிழ்ச்சியுற்று, பிரமனை வரும்படி நினைத்தான். அவர் அதனைத்தெரிந்து, அவனுக்குச் சிவபெருமான் கொடுத்த வரங்களையும் இனிமேல் வரற்பாலன எல்லாவற்றையும் ஞானத்தாலறிந்து, "தக்கன் நெடுங்காலஞ் சிவபெருமானை நினைத்துத் தவஞ்செய்தவாறு நன்று!" என்று பெருமூச்சுவிட்டுச் சிரித்து, "தக்கன் மோக்ஷமடைந்துய்யும்படி யான் உண்மையாகிய சிவபரத்துவத்தை உபதேசித்தேன்; அவன் இத்தன்மையனாயினன்; ஐயோ இனி என்செய்வேன்! நாடோறும் அமிர்தத்தை வார்த்து வளர்த்தாலும் வேம்பு கைப்பது போமோ; சிவனே பரம்பொருள் என்று அறிந்துபோய், இந்நாள்காறும் மேலாகிய தவத்திலிருந்து, உலகில் என்றும் நீங்காத பழி பாவங்களைப் பெற்றான். விதியை யார் விலக்கவல்லார்? இனி யான் செய்வதென்னை?", என்று மனத்துயரமுற்று, விரைந்து, ஆசிகூறிக்கொண்டு தக்கனையடைந்தார். அவன் "இங்கே ஒரு நகரத்தைச் செய்குதி" என்றான். பிரமர் "விரைவிற் செய்வேன்" என்று, தன் கைகளால் தக்ஷபுரி என்று ஒரு நகரைப் பொன்னுலகமும் நாணும்படி பூமியிலே செய்தார். தக்கன் அந்நகரிற்சென்று, அதனைப் பார்த்து மனமகிழ்ந்து, "விண்ணுலகத்துள்ள நகரிலுள் ஒன்றும் இதற்கு நிகரில்லை. இதற்கிணை இதுவே" என்று பிரமனிடத்தன்புசெய்து, கோயிலினுட்புகுந்து, முனிவர்கள் துதிக்கச் சிங்காசனத்தின்மீது ஐசுவரியங்களோடு வீற்றிருந்தான். சிவபெருமானிடத்தே தக்கன் வரம் பெற்றதைத் தமது குருவாகிய வியாழன் சொல்ல இந்திரன் முதலாகிய தேவர்கள் கேட்டு அஞ்சி, அவனிடத்து வந்தார்கள். அசுர குருவாகிய சுக்கிரன் தேவர்கள் யாவரும் தக்கனிடத்துப் போய் அவனை வழிபாடு [illegible] தெரிந்து, இந்திரனுக்குப்

பயந்து மேருமலையின் ஒரு சாரலிலிருக்கும் அசுரராசனை யடைந்து "அரசனே, உனது துன்பம் நீங்கியது; இனி நீ அஞ்சாதே, இந்திரனுக்குத் தக்கன் தலைவனாயினன்; இனி நீ அத்தக்கனை யடைகுதி" என்றான். அசுரராசன் அதனைக் கேட்டு மனதில் மகிழ்ச்சிமிகுந்து, கிளைஞர்களோடும் தக்கனிடத்துப் போனான், சூரியன் முதலாகிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் தேவர்களும் திக்குப்பாலகர்களும் பாதாள வாசிகளும் பிறரும் அவனிடத்து வந்தார்கள். இவர்கள் யாவரும் தக்கனுடைய கால்களை வணங்கி, சிவபெருமானுடைய திருவருட்டிறத்தைப் புகழ்ந்து நின்றார்கள். இவ்வாறு பிரமா முதலிய அனைவரும் தங்கள் தங்கள் கடமைத் தொழிலாக நினைந்து நாடோறும் வந்து வழிபட, செயற்பாலன வற்றை அறியாத தக்கன் தன்குடைநிழலும் ஆஞ்ஞா சக்கரமும் எவ்வுலகும் செல்ல இருந்தரசியற்றினான்.

தக்கன் பிரமாவுடைய பாதத்தினின்றுந் தோன்றியவரும் கற்பிற் சிறந்தவருமாகிய வேதவல்லியை விதிப்படி விவாகஞ் செய்து ஆயிரம் புத்திரர்களைப்பெற்று மானசவாவியிற் சென்று சிருட்டிக்க வரம் பெறும் வண்ணம் அனுப்ப, நாரதமுனிவருபதேசத்தினால் அவர்கள் அங்ஙனஞ் செய்யாது வீடுபேற்றைத் தரும் தவத்தைச் செய்து மோக்ஷமடைந்தனர். பின்னரும் ஆயிரம் புத்திரர்களைப் பெற்று அவ்வாறு தவஞ்செய்யும் வண்ணம் அனுப்ப இவர்களும் அங்ஙனமே நாரதமுனிவர் உபதேச நெறியில் நின்று மோக்ஷமடைந்தனர். அது கண்ட தக்கன் இவ்வாறு தன் புதல்வர்களைத் தன் கருத்துக்கு மாறாகச் செய்த நாரதமுனிவருக்குச் சாபஞ் சொல்லி இனித் தான் புத்திரர்களைப் பெறுவதினாற் பயனில்லையென் றுணர்ந்து புத்திரிகளைப் பெறவெண்ணி, சுபுத்தி, புத்தி, சுரசை, திருதி, துட்டை, கிரியை, கீர்த்தி, சிரத்தை, இலச்சை, மேதா, கத்தி, சாந்தை, வபுவை, கியாதி, சம்பூதி, நாரி சன்னதி, மிருதி, ஊர்ச்சை, அனசூயை, சுவா, கமை, சுவதை என்னும் இருபத்து மூன்று பெண்களைப் பெற்று தருமர், பிருகு, மரீசி முதலியோருக்கு விவாகஞ்செய்து கொடுத்து, பின் நாண்மீன்களுள் அசுவினி முதலிய இருபத்தேழு பெண்களைப் பெற்று, அவர்களைச் சந்திரனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான். அதன் பின்னர் தான் செய்த தவத்தின் வலிமையினால், சிதசித்துப் பிரபஞ்ச மனைத்தையும் பெறாது பெற்ற உலகமாதாவும் சிவபெருமானது அருட்சத்தியுமாகிய உமாதேவியாரைப் புத்திரியாகப் பெற



மாசிமாமகப் புனலாடும்பொருட்டுத் தன் மனைவியாகிய வேதவல்லியோடும் ஏனைய அரசுரிமைச் சுற்றத்தோடும் யமுனாநதியை யடைந்தான். அங்கே சிவாஞ்ஞையினாலே உமாதேவியார் கைலையை நீங்கிச் சிவாகமவிதிப்படி சிவபிரானைப் பூசித்துப்பின் தக்கனுக்குச் சிவபிரான் அளித்த வரத்திற்காக அவனுக்கருள் செய்ய சங்கினுருவாகி காளிந்தி நதியில் ஒரு வெண்டாமரை மலரில் சிவபிரானைச் சிந்தித்துக்கொண் டிருந்தனர். இருக்க அத்தக்கன் கண்டு மிக மகிழ்ந்து கையி லெடுத்தான். எடுத்தலும், அது பேரழகினையுடைய ஒரு பெண் குழந்தையி னுருவமாயிற்று. அவன் அதனைக் கண்டு விம்மிதமுற்று "சிவபெருமான் எனக்குத் தந்த வரத்தினால் உமாதேவியே ஒரு பெண் குழந்தையாய் வந்தாள்" என்று ஞானத்தினால் அறிந்து, தன்னைச் சூழ்ந்த தேவர் குழாங்களை நீங்கி முன்னே தன் பணியினாற் கிளைஞர்களோடு சென்று அந்நதியிலே ஸ்நானஞ்செய்து வேதாத்தியயனத்தைக் கேட்டுக் கொண்டு கரையிலிருக்கின்ற மனைவியாகிய வேதவல்லியிடத்து வந்து, அக்குழந்தையை அவள் கையிற் கொடுத்தான். அவள் அதனை மகிழ்ந்து தழுவி, தனங்களினிருந் தொழுகும் பாலையூட்டி, அரமகளிர்கள் துதிப்ப விரைவிலே தன் மாளிகையிற் கொண்டு சென்றாள். தக்கன் தேவர்கள் சூழ மகிழ்ந்து கோயிலிற் புகுந்து, முன்போல அரசியலை நடத்தியிருந்தான்.

உலக மாதாவாகிய உமாதேவியாரைத் தக்கன் புத்திரியாகப் பெற்றுக்கொண்டது இம்மகப்புனலாடியமையினாலெனின் இம் மாசி மகத்தினது விசிட்டம் இத்தன்மைத்தென்று நம்மனோரால் விதந்துகூறும் பான்மையினையுடையதா?

இங்ஙனம்:
ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்.

---

## சமயமும் குடும்பமும்.

ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு குடும்பத்தை யொக்கும். அரசன் அக்குடும்பத்திற்குப் பிதாவை யொப்பாவான். மடாதிபதிகள் தாய்மாருக்கொப்பாவர். சனங்கள் மக்களுக்கொப்பாவர். அரசனாற் பாதுகாக்கப்படாத சமயம் தந்தையாற் கைவிடப்பட்ட குடும்பத்தை யொக்கும். மடாதிபதிகளாற் பாதுகாக்கப்படாத சமயம் தாயினாற் கைவிடப்பட்ட குடும்பத்தை யொக்கும். ஒரு

குடும்பமானது தந்தையை யிழந்தபின் கற்புடைய தாயினால் பாதுகாக்கப்படுமாயின் அக்குடும்பம் சீர் குலையாது நிலைத்திருக்கும். தந்தையை இழந்த பின் தாயானவள் துன்மார்க்கியாய்த் தன் மக்களைப் பாதுகாவாவிடில், அம்மக்கள் ஆதரிப்பாரின்றி, சீர் குலைந்து, அக்குடும்பம் அழிந்துபோம். அதுபோல் ஒரு சமயமானது அரசனை யிழந்தபின் நன்னெறி யொழுகும் மடாதிபதிகளால் பாதுகாக்கப்படுமாயின் அச்சமயம் அழியாமல் நிலைத்திருக்கக்கூடும். அரசனை யிழந்த பின் மடாதிபதிகள் துன்மார்க்கர்களாய்ச் சமய பரிபாலனஞ் செய்யா தொழிவரேல் அச்சமயம் அழிந்தேபோகும். அவிசாரி மக்கள் தங்களைச் சேர்த்துப்பிடித்து நன்னெறியில் நடத்தும் பெரியோரின்றித் தம்முள் மாறுபட்டும், பிரிந்தும், தீத் தொழில்களைச் செய்தும், பிறரால் அவமதிக்கப் பட்டும், தங்கள் குடிப்பிறப்பைத் தாங்களே தூஷித்தும், அவரவர்கள் தங்கள் தங்கள் மனம்போன படி யெல்லாம் ஒழுகுவதுபோல், அரசனுக்குப் பின் துன்மார்க்கர்களாகிய மடாதிபதிகளால் கைவிடப்படும் சமயத்தினரும், தங்களை ஒன்று கூட்டி யாதரிப்பாரின்றி, தீ நெறிகளைக் கடைப்பிடித்து, ஒருவரோடொருவர் மாறுபட்டும், கலாம் விளைத்தும், சுயமத தூஷணஞ் செய்தும், பிறசமயம் புகுந்தும், பற்றுக்கோடின்றி யுழல்வர். ஆதலால் சைவ அரசனாகிய தந்தையை யிழந்திருக்கும் சைவக் குடும்பத்தின் தாய்மார்களாகிய சைவ மடாதிபதிகள் வைதவ்வியத்தோடு விபசாரமும் அடைந்த மங்கையர் போலிராமல், கற்புடைய மங்கையர் போலிருந்து, தங்கள் மக்களாகிய எங்களைக் கைவிடாமல் பாதுகாத்து, உயர்வொப்பற்ற சைவக் குடும்பத்தைப் பரிபாலிக்குமாறு, அருமறை பகர்ந்த அம்மையப்பர் திருவருள் புரிக. (ப-ர்.)

---

## கிறிஸ்தவரின் தமிழ் இரண்டாம் புத்தகம்.

(ஞானசித்திப் பிரசுரம்)

கிறிஸ்தவர் வித்தியாசாலைகளிலே படித்தலால் வருங்கேடுகள் இவையிவையென்று, இப்பத்திரிகையிலேயே எழுதியிருக்கிறோம். அதில் நம் சைவசமயநிந்தனையான பாடங்களைப் பிள்ளைகளுக்குப் போதித்தலையும் ஒன்றாகக் காட்டினோம்.

அப்பாடத்தில் ஒன்றை யாவரும் கவனிக்கும்படி இங்கே பிரசுரித்துக் காட்டுகிறோம்.



சிறுவர்கள் சிறுமிகள் படிக்கும்படியாகக் கிறிஸ்தவரால் இரண்டாந்தர பாடமாக வைத்துப் பள்ளிக்கூடங்களில் போதித்து வருகிற "தமிழ் இரண்டாம் புத்தகம்" ௫௯-ம் பக்கம் ௨௭-ம் பாடம் என்ன சொல்லுகிறது?

### ௨௭. விக்கிரகம்.

"நீ பசியாயிருக்கும்பொழுது உன் தாயைப்பார்த்து, 'அம்மா எனக்குக் கொஞ்சம் சாப்பாடுதா' என்று கேட்பாய். ஒரு கல்லைப் பார்த்து அப்படிக் கேட்பாயா? கேட்டால் அது உனக்குத் தருமா? நீ சொல்வதுகூட அதற்குக் கேளாதே. அப்படியிருக்க, அநேக ஜனங்கள் இவ்வகை மதிகேடான செய்கையைச் செய்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டியவைகளைப் பரமண்டலங்களில் இருக்கிற தங்கள் பிதாவாகிய தேவனிடத்திலே கேட்டுக்கொள்ள வேண்டியதாயிருக்க, விக்கிரகங்களிடத்திலே கேட்டுக் கொள்ளுகிறார்கள். இது எவ்வளவு புத்தியீனம்! விக்கிரகங்கள் மனுஷருடைய கைவேலையாயிருக்கின்றன. அவைகள் மரத்தினாலும் பொன்னினாலும் ஆக்கப்படுவன. சத்தியவேதம் சொல்லுகிறபடி அவைகள் வாய் இருந்தும் பேசமாட்டா. கண்களிருந்தும் காணமாட்டா. காதுகளிருந்தும் கேட்கமாட்டா. மூக்கிருந்தும் முகரமாட்டா. கைகளிருந்தும் தடவமாட்டா. கால்களிருந்தும் நடக்கமாட்டா. தொண்டையிருந்தும் சத்தமிடமாட்டா. இப்படிப்பட்ட சீவனில்லாத சிலைகளை வணங்குதல் பாவம்.

### அப்பியாசம்.

நீ பசியாயிருக்கும்போது யாரிடம் போசனம் கேட்பாய்? ஒரு கல்லைப் பார்த்து அப்படிக் கேட்பாயா? இல்லையென்றால் நியாயஞ் சொல்லு என்று சொல்லுகிறது.

இன்னும் ௨௪-ம் பாடம் "நம்முடைய தேசத்தார், கலகம், யுத்தம், பொய், வஞ்சனை, திருட்டு முதலான பொல்லாப்புகளைச் செய்தவர்கள் என்று சொல்லப்படுகிற தேவர்களை வணங்கி வருகிறார்கள். மனிதர்கள் அவர்களை வணங்கினாலும் அவர்கள் தேவர்கள் ஆகார். அவர்களுக்குப் பாவனையாக மண், கல், செம்பு முதலானவைகளாலே பலமாதிரியான உருவங்கள் செய்து வணங்குகிறார்கள். எப்படியும் அவைகள் உருவங்கள்தாம். அப்படிப்பட்டவைகளைத் தேவர்கள் என்று ஒருகாலும் சொல்லக்கூடாது.

மனிதனுடைய கெட்ட இருதயம் இப்பேர்ப்பட்ட தகாத நினைவுகளை அவன் சிந்தையில் உண்டுபண்ணி, தீமையான காரியங்களைச் செய்யும்படி அவனை ஏவிவிடுகின்றது.

அப்பியாசம்.

தேவன் என்னத்தைப் பகைக்கிறார்? விக்கிரகங்கள் தேவர்களா? நாம் விக்கிரகங்களை வணங்கப்படாதென்பதற்கு நியாயஞ் சொல்லு. என்று சொல்லுகிறது. இப்படியே சைவசமய நிந்தனையான பாடங்கள் இன்னும் சில இருக்கின்றன.

இவையெல்லாம் மதநிந்தனையான பாடங்களல்லவா? இந்த "விக்கிரகம்" என்னும் பாடத்திலே ஒரு விக்கிரகமும் விகாரமான ரூபத்தோடு வைத்து அச்சிடப்பட்டிருக்கிறது. சிறு பிள்ளைகள் படிக்கும் புத்தகத்தில் இந்தப் பாடத்தை வைத்த நோக்கமென்ன?

பெற்றோரே! உங்கள் பிள்ளைகள் இந்தப் பாடங்களை வீடுகளில் உங்கள் முன்னே வைத்துப் படிக்க, நீங்களும் அதைச் சொல்லிக் கொடுத்துப் பாடமாக்கும்படி செய்து, பள்ளியிற் சென்று பாடம் ஒப்பித்து வரும்படி செய்கிறீர்களே! உங்களுக்கு வெட்கமில்லையா? சமயாபிமானமில்லையா? தெய்வபத்தியில்லையா?

நல்லூர்க் கந்தசுவாமி கோவில், மருதடிப் பிள்ளையார் கோவில், வண்ணை வைத்தீசுரன் கோவில் முதலாய் உங்களுங்கள் ஊர்களிலுள்ள கோவில்களிலே சென்று, சுவாமி சந்நிதானத்தில் நின்று, கண்ணீர் தாரைதாரையாயொழுகக் கசிந்து உருகித் துதித்து உங்களுக்கு வேண்டியவைகளைத் தரும்படிப் பிரார்த்தித்தவாறே தருவாரென்னும் பூரண நம்பிக்கையோடு வீடுவந்து நுழையும்போது, உங்கள் பிள்ளைகள் இப்படிப்பட்ட பாடத்தை வைத்துப் படித்துக்கொண்டிருந்தால், இந்த நிந்தையைக் கேட்கும் போது உங்கள் மனம் நோகமாட்டாதா? உங்கள் தெய்வபக்தி நன்றாயிருக்கிறது!

சைவப்பள்ளிக்கூடங்கள் அநேகமிருந்தும், அங்கே ஆலய வழிபாடு முதலியவற்றால் வரும் பிரயோசனங்களைப் போதிக்கும் "சைவவினாவிடை" முதலிய புத்தகங்கள் பல படிப்பிக்கப்படவும் அங்கே விடாமல் இந்தச் சுறட்டுப் பள்ளிக்கூடங்களில் விட்டு ஏன் பாவத்தைத் தேடி அலதிப்படுகின்றீர்கள்? உங்கள் பிள்ளைகளைக் கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களிற் படிக்க விடும்பொழுது என்ன படிக்கிறார்கள் என்று நீங்கள் கவனிக்கிறதில்லையா? பிள்ளைகளைப் படிக்கவிடுவது அறிவுபெறுதற்பொருட்டல்லவா? உங்கள் பிள்ளைகளுக்கு இந்தத் தெய்வநிந்தையான அறிவு வளரவேண்டுவது அவசியந்தானா?



இப்படி நீங்கள் யோசனையில்லாமற் செய்வதனாலன்றோ, கிறிஸ்தவர்கள் உங்களை ஆடுகளுக்குச் சமானமாக்கப் பரிகாசம் பண்ணுகிறார்கள்? அப்படி எங்கே சொல்லுகிறார்களென்பீர்கள் போலும். உங்கள் பிள்ளைகள் படிக்கிற அந்த இரண்டாம் புத்தகத்திலேயே ௯௯-ம் பாடத்தில்,

"மந்தையிலுள்ள ஓர் ஆடு ஒரு பாலத்திலிருந்து குதித்துவிட்டால், மற்ற ஆடுகள் அதை யோசியாமல் ஒன்றன்பின்னொன்றாக எல்லாம் குதித்துவிடும். "மதிகெட்ட ஆடுகளைப்போல" "அவர்கள் கற்சிலைகளுக்கு முன்விழுந்து வணங்கினாலும், நாம் ஒன்றான மெய்த்தேவனைத் தொழுதுகொள்ளாமல் விக்கிரகங்களைக் கும்பிடலாமா?" என்று உங்களை மதிகெட்ட ஆடுகளென்கிறார்கள்! சீ! சீ!! உங்களை அவர்கள் என்ன சொன்னாலும் வெட்கம் வருமா? வெட்கம் வருமானால், மீண்டும் மீண்டும் இப்படிப்பட்டதும் இவைகளிற் கொடுமையானவுமான பாடங்களைப் படித்து வரும்படி உங்கள் பிள்ளைகளைக் கிறிஸ்தவர் பள்ளிக்கு அனுப்புவீர்களா?

---

## சிவம்.

"சி" என்பது கிடத்தல் எனப்பொருள்படும். அஃதாவது, எல்லாப் பொருள்களும் இறுதிக்காலத்துத் தன்னிடத்து ஒடுங்க, அவை போலத் தான் ஒடுங்குதலின்றி அவற்றிற்கெல்லாம் ஒடுங்குமிடமாய் நிலைபெற்று, என்றும் ஒரே தன்மையுடையதாய் நிற்பது என்பது அதன் பொருளாம். இறுதிக்காலத்து உலகமனைத்துந் தத்துவங்களினும், தத்துவங்கள் மாயையினும், மாயை சிவசத்தியினும், சிவசத்தி சிவத்தினும் ஒடுங்க, சிவம் அவையனைத்தையும் ஒடுக்கிச் சுயம்பிரகாசமாய் நிற்குமென்பது வேதாகம நூற்றுணிபாம்.

"வ" என்பது அப்பொருளின் குணமாகிய சத்தியையுணர்த்தும். அது சூரியனில் ஒளி போல்வது. ஒளியும் சூரியனும் வேறல்லவாயினும் குணத்தன்மை குணித்தன்மை யென்னும் தன்மை வேறுபாட்டால் இருமையாக எண்ணப்படும். அவ்வாறே, சத்தி சிவம் என்பன குணகுணிபாவத்தால் இரு தன்மையுடையனவென மதித்து, அப்பொருள் பயக்கும் பெயராய் சரியல்பினையும் அடக்கி "சிவம்" எனப்படும்.

அச்சிவத்தின் இயல்பு ஞானமும் ஆனந்தமுமாம். ஞானம் என்பது சத்தும் சித்துமாய இரு தன்மையை யடக்கி நிற்கும். சத்தாவது காரிய காரணப்படுதலின்றி, என்றும் ஒரே படித்தாய் நிற்பது. சித்தாவது உணர்த்த உணர்தலின்றித் தானே சுயம்பிரகாசமாய் நிற்பது. இந்த இரண்டு தன்மையும் முதல்வனிடத்துள்ள விசேட இயல்பாம். அதுவே ஞானம் எனப்படும். ஆனந்தமாவது சருவஞ்ஞத்துவம், திருத்தி, அநாதிபோதம், சுவதந்திரம், அலுத்தசத்தி, அனந்தசத்தி, நிராமயான்மா, விசுத்ததேகம் என்னும் எண்குணமுடைமையாம்.

இச்சிவத்தின் குணங்கள் பலவற்றுள் உயிர்களின் மேல் வைத்த கருணைக்குணம் பராசத்தி யெனப்படும். அக்கருணையின் வசப்பட்டு நின்ற சிவம் அந்நிலையிற் பதியெனப்படும். அப்பதியினது சந்நிதானத்தில் உலகம் ஐந்தொழிற்படும். அவ்வைந்தொழில் நடத்தற்கு ஏதுவாய் நின்ற பதியினது சத்தி ஆதி அல்லது திரோதாயி எனப்படும். பதியும் அவ்வாதி சத்தியும், சூரியனும் அதன் கிரணமும் போல நிற்பனவாம். சூரிய சந்நிதானத்தில் அதன் கிரண விசேஷத்தால் தாமரை அரும்புதலும் மலர்தலும், புலர்தலுமாகிய காரியப்பாட்டினை எப்படி யடையுமோ, அப்படியே, பதியினுடைய சந்நிதானத்தில் உலகம் தோன்றி நின்று அழிதலாகிய காரியப்பாட்டினை யடையும். இந்த உவமானத்தில் தாமரையினது காரியப்பாட்டால் சூரியனுக்கு யாதொரு விகாரமுமின்மை எவரும் அறியத்தக்கது. அது போலவே உலகினது காரியப்பாட்டில் முதல்வனுக்கு விகாரமின்மை தெளியப்படும். இன்னும் அவ்வுவமானத்திற் சூரியகிரணமும் விகாரப்படுதலில்லை. அது போல ஆதி சத்தியும் விகாரமடைதலில்லை. அச்சத்தி உயிர்கட்கு மலத்தை நீக்கிச் சிவத்தையளிக்க விரும்பியபொழுது இச்சாசத்தி யெனப்படும். அதன் பொருட்டுச் செய்யவேண்டிய உபாயங்களை யறியும்போது ஞானசத்தி யெனப்படும். அவற்றைச் செய்யும்போது கிரியாசத்தி யெனப்படும். இவ்வாறு வியாபார பேதம்பற்றி ஐவகையாகக் கொள்ளினும் முதல்வனது சத்தி ஒன்றேயாம்.

இன்னும், ஆதிசத்தி ஐந்தொழில் செய்யுமவதரத்தில் ஆரணி, செநநி, ரோதயித்திரி என முத்திறமாக எண்ணப்படும். அச்சத்திகள் மூன்றும் பிரமா, விஷ்ணு, உருத்திரன, மகேசுரன, சதாசிவன் என்னும் ஐந்து கர்த்தாக்களை யதிட்டித்து நின்று,



முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களைச் செய்யும். அச்சிவசத்தி இவர்களிடத்தே தங்கி இவர்களை அதிட்டித்து ஐந்தொழில் செய்தலால், இவர்களும் சிவவடிவங்களாக உபசரித்துக் கூறப்படுவர். உண்மையில் இவர்கள் அதிட்டான வடிவங்களாம். அதிட்டானமாவது நிலைக்களமாகக்கொண்டு செலுத்துதல். பதியின் ஆதி சத்தி ஆரணி முதலிய மூன்றாக நின்று ஐந்து கர்த்தாக்களை அதிட்டிக்குமென் றுணரத்தக்கது. அது எதுபோலுமெனில், அரசனுடைய ஆணையாகிய சத்தி மந்திரி முதலாகிய பலரிடத்து நின்று அவ்வப்பெயர் பெற்று அவ்வவர்க்குரிய தொழிலை நடத்துதல்போலுமென்க.

இன்னும், முதல்வனார் ஊரும் பெயரும் உருவுங் கடந்தவராயினும் உயிர்களிடத்தே வைத்த கருணையால் ஊரும் பெயரும் உருவுங் கொண்டருளுவர். அப்படிக் கொள்ளுமிடத்துத் தனது அருட்சத்தியினிடமாகக் கொள்வதும், மாயையினிடமாகக்கொள்வதும் என்னும் வேறுபாடுபற்றி அவை இருவகைப்படும். அருட்சத்தியினிடமாகக்கொள்ளும் வடிவங்கள் சம்புபட்சமெனப்படும். மாயையினிடமாகக்கொள்ளும் வடிவங்கள் அணுபட்சமெனப்படும். ஆடியில் நிழல் போல்வது அருட்சத்தியினிடமாகத் தோன்றுவது. அது பூசை தியானாதிகளின் பொருட்டுக் கொள்ளப்படுங் கற்பித வடிவமாம்.

சூரிய சந்நிதானத்தில் இருள் முனைத்து நில்லாதவாறுபோல, சிவமென்னும் பொருளின் எதிரே மலமாயை கன்மங்கள் முனைத்து நில்லா. அதனால் அவை சிவத்தினால் இயக்கமுறுமென்று கொள்ளுதல் அமையாது. அது பற்றியே சத்தியின் ஏகதேச வியாபரிப்பில் அவை தொழிற்படுமென்று வேத சிவாகமங்கள் கூறும்.

இனி, மாயாகாரிய வடிவம் முதல்வனெதிரே அசத்தாயொழிதலின், அவ்வடிவினை முதல்வன் என்று கொள்ளான். அதனால் அவை சத்தியின் அதிட்டானமாகிய அணுபட்சங்களென உண்மை யுணர்தற்பாற்று.

இவ்வகையில் அயனும் அரியும் பிரகிருதியுட்பட்டவராகலின், அவ்வியல்புடைய சகலவர்க்கத்துள் அதிகாரம் பெற்றவரென எண்ணப்படுவர். உருத்திரமூர்த்தி பிரகிருதியை நீங்கினவராகலின், அவ்வியல்புடைய பிரளயாகலருள் முதல்வராய் அதிகாரம் பெற்றுச் சிவவடிவெய்தி நிற்பவராக எண்ணப்படுவர். மகேசுர

சதாசிவர்கள் ஈசுரசாதாக்கிய தத்துவ நிலையராகலின், இறைவனது சுதந்தரவடிவமாகிய அதிகார போக ரூபங்களாம். இவையனைத்திலும் பதியினது சத்தியே நிலவுவதாம். அக்கினியானது ஒன்றிற்றங்கி நின்றல்லது தொழில் செய்யாது. அது போலவே சிவசத்தியும் ஒவ்வோர் வடிவினை யதிட்டித்து நின்றே தொழில் செய்யும். தாமரையின் காரியப்பாடு சூரிய கிரண சம்பந்தத்தால் நிகழ்தல் போல, ஐந்தொழிற்படு முறைமை சிவசத்தி சம்பந்தத்தால் நிகழ்வதாம்.

அதனால், முதல்வனுக்கு உளதாகிய இவ்வியல்பு பொதுவியல்பு எனப்படும்.

தாமரைக்கும் சூரியனுக்கும் உளதாகிய சம்பந்தம் எத்துணையோ, அத்துணையே, உலகுக்கும் பதிக்கும் உளதாகிய சம்பந்தமும், அது பற்றி வரும் பொதுவியல்புமாம்.

சூரியனாலே தாமரை காரியப்படுமென்பது மறுக்க இயலுவதன்று. அது போலவே உலகம் பதிப்பொருளாற் காரியப்படும் என்பதும் மறுக்கத் தக்கதன்று.

இனி, முதல்வன் உயிர்கள் பொருட்டாகக்கொள்ளும் உருவங்களில் உமாமகேசுரர், தக்ஷிணாமூர்த்தி, சபாபதி முதலியவாக இருபத்தைந்து வடிவங்களும், அவற்றுள்ளும் பல பேதங்களும் உள்ளனவென்பது உண்மையாம். அவை ஒவ்வோர் காலத்து ஒவ்வொருவர் பொருட்டு ஒவ்வொரு காரணம்பற்றிக் கொள்ளப்பட்டன. இவ்விருபத்தைந்து கேவல மூர்த்தங்களும் மகேசுரராற் கொள்ளப்படுவன. உருத்திரர்க்கும் அவை உரியனவேயாம். பிரம விஷ்ணுக்கள் அவ்வடிவினை எடுத்தற்கு உரியவரல்லர். அவரது சகல நிலையே அங்ஙனமொழிதற்குக் காரணமாம்.

இதுகாறுங் கூறியவாற்றால், சிவம், சத்தி, பதி, சத்தி பேதங்கள், பதிபேதங்கள், அதிட்டான வடிவங்கள் என்பன நனித்து உணரநின்றன. முதல்வனது சிறப்பியல்பும் பொதுவியல்பும் வெள்ளிடைமலைபோல் விளங்கக்கிடந்தன. இவற்றின் உண்மை புணர்ந்தாரே சிவத்தின் இயல்புணர்ந்தவராவர். ஏனையோர் அன்னராகாரென் றுணர்க.

---

## ஓர் வேண்டுகோள்.

இவ்வருடத்துச் சித்திரை மாதப் பத்திரிகை சுமார் 800 பேருக்கு வி. பி. தபாலில் அனுப்பப்பட்டது. இவர்களுள் சுமார்



400 பேர் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளாமல் திருப்பிவிட்டார்கள். இவர்கள் உலோபத்தாலோ, அசட்டையாலோ காலணா செலவிட மனமின்மையாலோ அல்லது வேறு யாது காரணத்தாலோ தங்களுக்குப் பத்திரிகை அனுப்ப வேண்டாமென்று முன்னமே கார்டு எழுதி தெரிவிக்காமல் எமக்கு வீண் பிரயாசை கொடுத்ததுமன்றி, 60 ரூபா நட்டமும் உண்டாக்கினார்கள். பத்திரிகையின் சந்தா உயர்த்தப்பட்டமையாலும் சென்ற வருடம் இவ்விரண்டு மாதப் பத்திரிகைகளை ஒன்றாய்ச் சேர்த்தனுப்பினமையாலும், சிலருக்குப் பத்திரிகையின் மீது வெறுப்புண்டாயிருக்கலாமெனத் தோன்றுகிறது. தபாற் செலவும், காகித விலையும், அச்சுக்கூலி முதலியனவும் பன்மடங்கு உயர்ந்து விட்டதனால் ஒரு ரூபாவாக இருந்த சந்தாவை யாம் ஒன்றரை ரூபாவாக உயர்த்தியது நியாயமே. இதில் தபாற் செலவு 5½ அணா போனால் எஞ்சியிருப்பது ரூபா 1 அணா 2½. இதைக்கொண்டு டைட்டில் பேஜ் உட்பட வருடம் ஒன்றுக்கு 42 பாரம் அச்சிட்டனுப்ப வேண்டும். இதுவும் 1000 சந்தாதாரர்களுக்குக் குறையாமற் சேர்ந்தால் மாத்திரம் ஆகும். இல்லாவிடில், வரவுக்கேற்ற வாறே பத்திரிகை வெளிவரும். இதனை யோசியாமல் பத்திரிகாசிரியரை நோவதில் பிரயோசனமில்லை. ஆதலால் நம் சைவச் சகோதரர்கள் தாங்கள் சந்தாதாரர்களாயிருப்பதோடு சும்மாவிராமல், பலரையும் சந்தாதாரர்களாக்கிப் பத்திரிகை நடைபெறச் செய்தல் வேண்டும். இப்படிச் செய்வதை விட்டு "அற்ற குளத்தினறு நீர்ப் பறவைபோல்" பத்திரிகையைக் கைவிடுவது நியாயமாமோ?

கிறிஸ்தவர்கள் கோடி கோடியாகப் பணச்செலவிட்டுப் பத்திரிகைகளை யாதரித்துக் கிறிஸ்து சமய பரிபாலனம் செய்ய, நம்மவர்கள் மாதம் ஒன்றுக்கு இரண்டணா வீதமேனும் செலவிட்டுப் பத்திரிகையை ஆதரிக்க மனமில்லாதவர்களாயிருந்தால், நம் சைவ சமயம் தலையெடுப்பதெப்படி?

இவைகளை இப்போதுள்ள சந்தாதாரர்கள் அன்பு கூர்ந்து சிந்தித்து, சற்று பிரயாசை யெடுத்துக்கொண்டு சந்தாதாரர்களைச் சேர்த்து இப்பத்திரிகை ஒழுங்காய் நடைபெறச் செய்யுமாறு பிரார்த்திக்கின்றோம்.

இ. ஆதிமூல முதலியார்.

பத்திரிகாசிரியர்.

## நரசிங்கமுனையரைய நாயனார் புராணம்.

புகழும் படியெம் பரமே தவர்க்குநற் பொன்னிடுவோ
னிகழும் படியோர் தவன்மட வார்புனை கோலமெங்கு
நிகழும்படி கண் டவற்கன் பிரட்டி பொன்னிட்டவனீ
டிகழு முடிநர சிங்க முனையர சன்றிறமே.

பதிபுண்ணியம் பசுபுண்ணியம் எனப்படும் இருவகைப் புண்ணியங்களுக்கும் இருப்பிடமாய் நிலவுதலால் புண்ணியபூமி எனப் புகழ்ந்து பேசப்படும் இப்பரத கண்டத்திலே, பசுபுண்ணியத்தின் விளைவாகிய பதிபுண்ணியத்தின் இருப்பிடமாய் விளங்குதலால் "பேசிலத்திசை யொவ்வா பிறதிசை" எனச் சிறப்பித்தோதப் பெற்ற இத்தென்றிசையிலே, பதிபுண்ணியத்தின் விளைவாகிய சிவஞானத்தின் திருவவதாரமாய் விளங்கிய திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் திருநெறித்தலைவர் முதலாயினோர் திருவவதாரஞ் செய்தருளிய திருமுனைப்பாடி நாட்டிலே, சிவஞானத்தின் பயனாகிய திருநீற்று நெறியொன்றே வேதாகமங்கள் போற்று நெறியெனப் பேணிவாழும் குறுநிலமன்னர் குலத்திலே, நரசிங்க முனையரையர் என்னும் பெரியாரொருவர் உளரானார்.

அப்பெரியார் கண்ணினாற் கேட்டுச் செவியினாற்கண்டு இருநிலம்புரக்கும் ஒரு பெரும் வேந்தராயிருந்தும், திருநீற்றுச் செல்வத்தை நோக்க அரச்செல்வத்தைப் பொருளென மதியாதவராய் திருநீறு தரித்த திருமேனி யுடையாரியாவராயிருப்பினும், அவர்களுடைய குணங்குற்றங்களில் வித்தியாசம் பாராட்டாது, அவர்களியாவரையும் சிவபெருமானாகவே மதித்து வழிபடுவாராயினர். அவர் திருநீறணிந்த திருமேனியைப் பார்த்துப் பார்த்துப் பரவசமாவர்; தமது சரீரமெங்கும் திருநீறணிந்து தம்மைச் சிவமயமாகக் கண்டு இன்பவாரிதியில் மூழ்குவர். திருநீற்றின் மகிமாதிசயங்களைக் கேட்டுக் கேட்டுக் களிகூர்வர். அவைகளைத் தாமும் பிறர்க்குச் சொல்லிச் சொல்லி மகிழ் மீக்கூர்வர். கல்வி குலம் முதலியவற்றால் எவ்வளவு மேம்பட்டவராயினும் திருநீறு தரியாதவர்களைக் காணவுங் கூசுவர். அவர்களும் திருநீறணிந்துய்யப் பெறுங்காலம் எக்காலமோ என்று எண்ணி எங்குவர். பொருள் புகழ் முதலியவற்றையும் உலக இன்பத்தையும் கருதாது திருநீற்று நெறியோங்கி தீநெறியனைத்தும் நீங்கி உலகம் உய்ய வேண்டியே உயிர் துறக்கவரினும் அஞ்சாமல் திருவருள் வசப்பட்டு, பகைவரை



வேற்று, அயல் புலங்கவர்ந்து நடுநிலைமை கோடாமல் செங்கோல் செலுத்துவர். சிவாலயங்கள்தோறும் நித்திய நைமித்திகங்களைக் குறைவற நடத்துவிப்பர். திருவாதிரை நக்ஷத்திரந்தோறும் விசேஷ பூசை செய்வித்து, சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்து, அவர்களுக்குத் தனித்தனியே நூறு பொன் கொடுப்பார்.

ஒரு திருவாதிரை நக்ஷத்திரத்திலே, அடியார்களுக்குப் பொன்னளிக்கும்போது தூர்த்தவேடமுற்ற ஒருவர் விபூதி அணிந்துகொண்டு வந்தார். அவர் வடிவமானது சிவனடியார் வேடமாயிராமல் குற்றமிகுந்து மானமற்ற காமுகர் வடிவமாயிருந்தது. அங்கிருந்தவர்கள் அதைக்கண்டு அசூயைகொண்டு இகழ்ந்து ஒதுங்கிச் சென்றார்கள். அவர்கள் அவ்வாறொதுங்கியதை நரசிங்கமுனையரைய நாயனார் பார்த்து, உளம்நொந்து, "எவரேயாயினும், தரித்த மாத்திரத்திலேயே சர்வ பாவங்களையுஞ் சாம்பராக்கி அவரைச் சிவமயமாகச் செய்துவிடும் பரமபாவனமாகிய திருநீற்றைத் தரித்தவர்களிடத்திலும் குற்றங் காணலாமோ? ஐயையோ, இப்பெரியார் நம்மிடம்வந்து இவ்வாறு இகழப்படுதல் நன்று, நன்று," என்று தம்மைத்தாமே நொந்து, "சிறிதும் சீலமிலராயினும், திருநீற்றுச் சார்புடையாரிடத்தில் குற்றங்கூறி உலகத்தார் கொடிய நரகத்தில் வீழாவண்ணம் நாம் உணர்த்துதல் வேண்டும்" என்று சிந்தித்து அவரெதிரே கைகுவித்துச் சென்று, தனியே யழைத்துப்போய் அவரைப் பலவாறாகக் கொண்டாடி, பின்னும் அதிகமாகப் பூசித்து, "சுவாமி, தேவரீருக்கு நூறு பொன் போதாது. அதிகமாக வேண்டியிருக்கும்" என்று உபசரித்துக் கூறி இருநூறு பொன் கொடுத்தனுப்பினார். இவ்வாறே உலகத்தில் தெய்வவெண்டிருநீறு சிறக்கவேண்டி இடைவிடாது பேரன்பினோடு அளவற்ற சிவதருமம் புரிந்திருந்து சிவபெருமான் திருவடி நீழலிலமர்ந்தனர்.

---

## சிவபூஜாதிகார வினாவிடை.

(தூத்துக்குடி சைவ சித்தாந்த சபா பிரசுரம்.)

க—சிவபூசை என்பது என்னை?

மனவாக்குக்கு எட்டாத பரமசிவத்தை அவைகளுக்கு எட்டியதாக ஒன்றில் பாவித்துப் பூசித்தல்.

உ—அச்சிவபூசை எத்தனைவகைப்படும்?

ஆன்மார்த்தம், பரார்த்தமென இருவகைப்படும்.

௩—ஆன்மார்த்த பூசையென்பது என்னை?

அது பக்குவமுள்ள சீடன் ஆசாரியராற் பாணலிங்க முதலியவற்றிற் சிவபெருமானை விதிப்படி ஆவாகனஞ்செய்து கொடுக்கப் பெற்றுப் பூசிப்பது. அது பூசிப்பவனுக்கு மாத்திரம் பலனைக் கொடுப்பதனால் ஆன்மார்த்தமெனப்படும்.

௪—பரார்த்த பூசையென்பது என்னை?

சுயமாக உற்பவித்ததும், கணங்களால் ஸ்தாபித்ததும், தேவர்களால் ஸ்தாபித்ததும், ரிஷிகளால் ஸ்தாபித்ததும், மானுடரால் ஸ்தாபித்ததுமாகிய சுயம்பு, காணம், தைவிகம், ஆரிடம், மானுடம் என்னும் சிவலிங்கங்களை அரசருக்கும், தேயத்தார்க்கும் போக மோக்ஷங்களுண்டாகும் பொருட்டுப் பூசிப்பது (அது பிறர் பொருட்டுப் பூசிப்பதனாற் பரார்த்தமெனப்படும்.)

௫—ஆன்மார்த்த பூசைசெய்யும் அதிகாரமுடையவர் யாவர்?

ஆசாரியர்களும் அவர்களாற் பெற்றுக்கொண்ட சீடர்களுமாம்.

௬—பரார்த்த பூசை செய்யும் அதிகாரமுடையவர் யாவர்?

பிரதம மகா சிருஷ்டியில் சதாசிவமூர்த்தியினுடைய ஈசான முதலிய ஐந்து திருமுகங்களினின்றுந் தோன்றி அவராலே தீக்ஷை செய்யப்பெற்ற காசிபர் முதலிய ஐந்து ரிஷிகளுடைய கோத்திரத்திலே பிறந்த சிவத்விஜர்களுள்ளும், சமயதீக்ஷை, விசேடதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிஷேகமென்னு நான்கு சமஸ்காரங்களும் பெற்ற ஆதிசைவப் பிராமணர்களே.

௭—பிரமதேவர் முகத்திலுற்பவித்த பிராமணர்கள், மேற்கூறிய சைவ சமஸ்காரம் பெற்றேனும் பெறாதேனும் பூசித்தல் கூடுமா?

கூடாது; கூடாது; ஒருகாலுங்கூடாது.

௮—ஆதிசைவப் பிராமணர்கள் தாம் பூசிக்கலாமென்பதற்கும், ஏனைய பிராமணர்கள் பூசிக்கக் கூடாதென்பதற்கும் பிரமாணமென்னை?

அநேகபிரமாணங்களுள; அவற்றுட்சில ஈண்டுவருமாறு.

பூர்வகாமிகே சிவார்ச்சநாவிதிப்படலே.

பாரார்த்தயஜனங்கார்யம்சிவவிப்ரேணநித்யச ॥
தார்மிக ॥ கத்யதேநித்யமாதிசைவோத்விஜோத்தம ॥
அன்யேஷாம்ஸ்வார்த்தமேவம்ஸ்யாத்குர்யுச்சேத்கர்த்ருநாசநம்



(இ-ள்.) ஆதிசைவப்பிராமணர்களே எப்பொழுதும் பரார்த்த பூசை செய்யவேண்டியது. ஏனெனில், அவர்கள் பிராமண சிரேஷ்டரென்றும், தார்மிகர்களென்றுஞ் சொல்லப்படுவார். மகா சைவர் முதலியோர் ஆன்மார்த்த பூசையே செய்யத்தக்கது. தனக்குரிய ஆன்மார்த்த பூசையையன்றிப் பரார்த்த பூசையுஞ் செய்வாராயின் செய்தவர் நாசத்தையடைவர்.

சிவஸ்ருஷ்டிம்விநாயேதுஜாயந்தேப்ரம்மணோமுகாத்
தேஸாமாந்யாநதேசாந்துபாரார்த்தேஜ்யாநிகாரிதா
யதிமோஹேனகுர்வீரன்ராஜ்ஞோராஷ்டருஸ்யநாசனம்.

(இ-ள்) சிவசிருட்டியினராகிய ஆதிசைவப் பிராமணர்களன்றி எவர் பிரமாமுகத்துப்பிறந்தவர் அவர் சாமானியர், அந்தச் சாமானியராகிய மகாசைவர் மோகத்தாலே பரார்த்த பூசை செய்வாராயின் அது அரசனுக்கும், நாட்டுக்கும் அழிவை யுண்டாக்கும்.

சிவதீக்ஷாபிஷிக்தஸ்யசிவவிப்ரஸ்யதீமத
சிவாஜ்ஞாவசதஸ்தஸ்யபரார்த்தேஜ்யாநதோஷதா

(இ-ள்.) சிவதீக்ஷை ஆசாரியாபிஷேகம்பெற்றசிவப் பிராமணர்களுக்குப் பரார்த்தபூசை செய்யும்படி சிவபெருமான் விதித்திருத்தலினால் பரார்த்தபூசை முதலிய கிருத்தியங்கள் செய்தலினால் அவருக்குத் தோஷமில்லை.

உத்தரகாமிகே ஆசார்யலக்ஷணாபிஷேகபடலே.

ஆதிசைவகுலேஜாதச்ரேஷ்டஸ்யாத்ஸ்தாபநாதிஷு
விப்ராதயச்சதுர்வர்ணாஅபியோக்யாஸ்ஸ்வகர்மணி

(இ-ள்.) ஆதிசைவமரபினராகிய சிவப்பிராமணர்கள் பிரதிட்டை முதலிய சர்வக்கிரியைகளுக்கும் அதிகாரிகள். பிராமணர் முதலிய மற்றைய நாலுவருணத்தவர்களும் ஆன்மார்த்தத்துக்கு மாத்திரம் அதிகாரிகள்.

தீக்ஷாயாம்சர்வமர்த்யாநாம்ப்ரதிஷ்டாயாமதோத்ஸவே
ஸ்நபநேப்ரோக்ஷணேசைவத்ரபிராயச்சித்தாபிஷேசனே
வ்யாக்யாநாதௌசசஸ்த்தஸ்யாத்ஸ்வார்த்தேவாதபரார்த்தகே
சர்வதேவார்சசேவிப்ரஸ்த்வாதிசைவோகுருத்தம

(இ-ள்.) ஆதிசைவராகிய குரு உத்தமரே, தீக்ஷை, பிரதிட்டை, உற்சவம், ஸ்நபநம், புரோக்ஷணம், பிராயச்சித்தம், அபிஷேகம்,

சைவாகமபோதனை, ஆன்மார்த்தமாகவும் பரார்த்தமாகவுஞ் சமஸ்த தேவதைகளையும் பூசித்தல் முதலிய சகலகிரியைகளுக்கும் அதிகாரியாவர்.

*விசிஸ்டேவித்யமானேதுஹம்ரதங்யேநகாரிதே*
*தேசராஜ்ஞோபவேத்தோஷோராஷ்ட்ரஸ்யாபிபயம்பவேத்*
*கர்த்ருஃகாரயிதுச்சாபிக்ராமஸ்யாபிசதோஷக்ருத்*

(இ-ள்.) சிரேஷ்டராகிய சிவப்பிராமணரை நீக்கி மகாசைவரைக் கொண்டு பிடிவாதத்தினாலே கிருத்தியங்கள் செய்வித்தால் அந்நாட்டரசனுக்குப் பெருந் தோஷமுண்டாகும்; அந்தத் தேசத்துக்குப் பயமுண்டாகும்; செய்வித்தவனுக்கும் செய்தவனுக்கும் அந்தக்கிராமத்துக்கும் பெருத்த கேடுண்டாகும்.

(அங்யத்ர ச).

*முக்யத்வாதிஹசைவஸ்யமுக்யமகாத்ம்யதோபிச*
*அதிகாரோஸ்திஸர்வத்ரநாங்யேஷாம்சிவதர்சனே*

(இ-ள்.) ஆதிசைவனுக்கு முதன்மையிருத்தலானும் சிவமுகப் பெருமையானும் சிவ சாத்திரத்திலேயுள்ள சகலகாரியங்களிலும் அதிகாரமுண்டு. மகாசைவர் முதலிய பிறருக்கு அதிகாரமில்லை.

*தஸ்மாத்பரார்த்தமாத்மார்த்தம்ஸ்தாபநம்யஜநந்ததா*
*சிவவிப்ரேணகர்த்தவ்யமங்யேஷாம்ஸ்வார்த்தமேவச*

(இ-ள்.) ஆதலால் பரார்த்தமும் ஆன்மார்த்தமுமாகிய தாபனமும் பூசையும் சிவப்பிராமணராற் செய்யப்படுவது. மகாசைவர் முதலிய மற்றையோருக்கு ஆன்மார்த்தமே உரியது.

*பரார்த்தம்யதிகுர்யாச்சேல்லோபேநந்ருபதேஸ்ததா*
*தத்ராஷ்ட்ரஸ்யவிநாசஸ்ஸ்யாத்சீரேணநஸம்சயஃ*

(இ-ள்.) அவர் அப்படியே பொருளாசையாலே பரார்த்தமுஞ் செய்வாராயின் அந்நாட்டிற்கும் அரசனுக்கும் சீக்கிரத்தில் நாசமுண்டாம்; ஐயமில்லை.

பூர்வகாரணே ஆசார்யலக்ஷணபடலே.

*ப்ரதமோநாதிசைவஸ்துஸசைவஸ்துஸதாசிவஃ*
*ஆதிசைவோத்விதீயஸ்துசிவச்சைவஸ்ஸஉச்யதே*

(இ-ள்.) முதலாவது அநாதிசைவர்: அவர் சதாசிவமூர்த்தி. இரண்டாவது ஆதிசைவர்; அவர் சிவப்பிராமணர் என்று சொல்லப்படுவர்.



*ஆதௌஸதாசிவேநைவதீக்ஷிதாஸ்த்வாதிசைவகாஃ*
*குலேஷ்வேதேஷுஸம்ஜாதாஸ்தாபநாதிக்ரியார்ஹகாஃ*

(இ-ள்.) ஆதிசைவராவார், அநாதிசைவராகிய சதாசிவமூர்த்தியால் முதலிற் தீக்ஷைசெய்யப் பெற்றவர். அவரது குலத்திற் பிறந்து தீக்ஷைசெய்யப் பெற்றவரே பிரதிட்டை முதலிய சகல கிரியைகட்கும் யோக்கியர்.

*ஆதிசைவாஸ்ரிதாப்ரோக்தோ மஹாசைவாநுசைவக*
*ஆத்மார்த்தயஜனம்குர்யாந் நகுர்யாத்துபரார்த்தகம்*

(இ-ள்.) ஆதிசைவரை யாசரித்தவர்கள் மகாசைவர், அநுசைவர், அவாந்திர சைவரென்று சொல்லப்படுவார்கள். அவர்கள் ஆன்மார்த்த பூசையைச் செய்யலாமே யல்லது பரார்த்த பூசை செய்தல் கூடாது.

*ஆதிசைவேனகர்த்தவ்யமாத்மார்த்தஞ்சபரார்த்தகம்*
*ஸ்தாபனம்யஜனஞ்சைவ ஆதிசைவார்ஹகம்விது*
*க்ருதஞ்சேதந்யதாதத்து அபிசாராயசைவஹி*

(இ-ள்.) ஆதிசைவர்கள் ஆன்மார்த்த பரார்த்தமாகிய இருவகைப் பூசைகளுஞ் செய்யலாம். பரார்த்தப் பிரதிஷ்டை பூசை முதலிய கிரியைகள் ஆதிசைவருக்கே சிறப்பாகவுடையது. இக்கிரியைகளை மகாசைவர் முதலியோர் செய்தல் கூடாது. அவர் அக்கிரியைகளைச் செய்வாராயின் அது கொலைப்பொருட்டேயாகும்.

ஸந்தாநகமே

*ஆதிசைவேநகர்த்வ்யம் ப்றதிஷ்டாத்யர்சநாந்தகம்*
*அனயதாகாரயேத்யஸ்து அபிசாராயசைவஹி*

(இ-ள்.) பிரதிட்டைமுதல் அர்ச்சனாந்தமாகிய சருவக்கிரியைகளும் ஆதிசைவராலேயே செய்யத்தக்கது. அவரைக்கொண்டன்றி வேறுவகையாகச் செய்வித்தால் அது கொலைப்பொருட்டேயாம்.

ஹாலாஸ்யமஹாத்ம்யே ஸப்தமாத்யாயே.

*மஹாலிங்கஸ்யபூஜார்த்தம்சிவஸ்ருஷ்டாந்த்விஜோத்தமாந்*
*கங்காதீரஸ்திதாந்தீரான்ஸமாஹூயமஹீபதிஃ*
*விஹிதாந்தைஃகாமிகாத்யைஸ்சமஹாலிங்கம்நிரந்தரம்*

பூஜையந்த்விதிஸம்ப்ரார்த்யவிர்திந்தேப்ய:ப்ரதாயச
தைஃபூர்வம்காரயாம்ஸமகாவிபவவிஸ்தரைஃ

(இ-ள்.) பாண்டியராசனானவன் ஆலயங்கட்டி முடித்துத் தனது பட்டணத்தில் மகா சைவர்முதலிய பல சைவர்களிருக்கவும் அவர்களைக்கொண்டு பரார்த்த பூசை முதலியவை செய்வித்தல் குற்றமென்றுணர்ந்து மகாலிங்கமூர்த்திக்குப் பூசை செய்யும் பொருட்டுக் கங்கைக்கரையில் வசிக்கும் சிவசிருட்டியினரும் பிராமண சிரேட்டரும் பண்டிதர்களுமாகிய ஆதிசைவரை வரவழைத்துத் திருவாலவாயின்கண்ணே எழுந்தருளியிருக்கும் மகாலிங்கமாகிய சொக்கலிங்கமூர்த்திக்குக் காமிகம்முதலிய சைவாகமங்களில் விதித்தவிதிப்படி பூசை முதலியவை செய்துவரல் வேண்டுமென்று பிரார்த்தித்து அவர்களுக்குச் சீவனத்துக்கு வேண்டிய திரவியங்களையும் கொடுத்து அவர்களைக்கொண்டு மகாலிங்கத்துக்குப் பூசை முதலியனவற்றைச் செய்வித்து வந்தான்.

(திருவிளையாடற்புராணம்.) திருநகரங்கண்டபடலம்

கைவரையெருத்திற்கனவரைகிடந்த
  காட்சியிற்பொலிந்தொளிர்கோயின்
மைவரைமிடற்றமதுரைநாயகரை
  மரபுளியருச்சனைபுரிவான்
பொய்வரைமறையாகமநெறியொழுகும்
  புண்ணியமுனிவரையாதி
சைவரைக்காசிப்பதியினிற்கொணர்ந்து
  தலத்தினிற்றாபனஞ்செய்தான்.

௯—மேற்கூறிய பிரமாண வசனங்களின் முக்கியமாகிய தாற்பரிய மென்னை?

சிவாலயங்களிற் பிரதிட்டை செய்யப்பெற்ற சிவலிங்க முதலாகிய விக்கிரகங்களை மேற்கூறிய இலக்கணம் பொருந்திய சிவத்துவிஜராகிய ஆதிசைவப் பிராமணர்கள் தான் பூசிக்கலாமென்பதும், மற்றெவ்வகைப் பிராமணர்களும் பூசித்தல் கூடாதென்பதும், அதவா பூசித்தால் பூசித்தவர் நாசத்தை யடைவதோடு உலகத்துக்கும், அரசனுக்கும் பெருங்கேடு சம்பவிக்குமென்பதும், அவர் தீண்டி அசுத்தப்படுத்திய சிவலிங்காதி விக்கிரகங்களையும், ஆலயங்களையுஞ் சிவத்துவிஜராகிய ஆதிசைவர்களாலே சிவாகமவிதிப்படி பிராயச்சித்தஞ்செய்து சுத்தப்படுத்தல் வேண்டுமென்பதுமேயாம்.



௧௦—மற்றைப் பிராமணர்கள் பூசித்தல் கூடாதாயினும், ஜகத்குருவென வழங்கப்பெற்று வரும் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளும் பூசித்தல் கூடாதா?

கூடாது கூடாது ஒருபோதுங் கூடாது.

௧௧—ஏன் கூடாது?

அவர்கள் சதாசிவமூர்த்தியினுடைய ஐந்து திருமுகங்களினின்றுந் தோன்றிய பஞ்சரிஷி கோத்திரத்திலுற்பவித்தவர்ளாகாமல் பிரமதேவர் முகத்திற்றோன்றிய பிராமண வம்மிசத்திலுற்பவித்தவர்களா யிருப்பதனாலென்க.

௧௨—அப்படியானால், இவ்வளவு சிரேஷ்டமுடைய ஆதிசைவப்பிராமணர்களை மற்றைப்பிராமணர்கள் தங்களினுந் தாழ்ந்தவர்களாகச் சொல்வதற்குக் காரணமென்னை?

அவ்வாதிசைவர்களுக்குள்ள ஆதிக்கத்தைக் கெடுக்கவேண்டுமென்ற பொறாமையேயாம்.

௧௩—எதனால் மற்றைப் பிராமணர்களிலும் ஆதிசைவப்பிராமணர் உயர்ந்தவராவர்?

பிரமதேவரினுஞ் சதாசிவமூர்த்தி எப்படி உயர்ந்தவரோ அப்படியே பிரமதேவர் முகத்திலுற்பவித்த பிராமணரினுஞ் சதாசிவ மூர்த்தியின் முகத்திலுற்பவித்த ஆதிசைவப் பிராமணர் உயர்ந்தவராவர். அவருடைய மகிமையைச் சிவாகமங்கள் சிவபுராணங்கள், ஆதிசைவப்பிரபாவம் முதலிய அநேக நூல்களிற் காணலாம்.

௧௪—ஆதிசைவரென்னும் பெயர் எதனாலுண்டாகியது.

பிரதம மகா சிருஷ்டிகாலத்திலே அநாதிசைவராகிய சதாசிவமூர்த்தியின் றிருமுகத்தி லுற்பவித்து அவராலே தீக்ஷைசெய்யப்பெற்ற காரணத்தாலேயாம்.

௧௫—அப்படியானால் சிவத்துவிஜரென்னும் ஆதிசைவப்பிராமணர்களுக்குச் சதாசிவமூர்த்தியே குருவென்றும், அவர்களே மற்றெல்லா வருணத்தாருக்குங் குருவென்றுமல்லவா ஏற்படுகின்றது. அப்படியிருக்கவுஞ் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை ஜகத்குருவென்று வழங்குவதென்னை?

ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை ஜகத்குருவென்று சொல்வது உபசாரமாகுமேயன்றி உண்மையாகாது.

௧௬—எதனாலுண்மையாகாது?

ஜகத் என்னும் பதம், சருவலோகங்களையு முணர்த்தலாற் சருவ லோகங்களினுமுள்ள தேவர் முதலாகிய யாவருக்கும், யாவைக்குங் குருவாதல்வேண்டும் அங்ஙனமாகாமையால் உண்மையாகாது.

௧௭—அற்றேல், ஜகத் என்னும் பதத்தைப் பூவுலகிலேற்றிப் பூலோகத்தி லுள்ளவர்கட் கெல்லாங் குரு எனக் கொள்ளலாகாதோ?

இப்பூவுலகின்கண்ணும் மகம்மதியர், கிறிஸ்தவர், நாஸ்திகர், பவுத்தர், சமணர் முதலிய அளவிறந்த சமயிகளிருத்தலினாலும், ஒவ்வொரு சமையிகளும் தனித்தனி வெவ்வேறு குருவையுடையராயிருத்தலினாலும் அங்ஙனங் கொள்ளலாகாது.

௧௮—இனி "உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே" என்பதனால், ஜகத் என்னும் பதத்தை உயர்ந்தோர் மேலேற்றி, உயர்ந்தோராகிய வைதீக சமயத்தவர் யாவருக்குங் குரு எனக்கொள்ளலாகாதோ?

வைதிகசமயத்தவரும், சைவ, வைஷ்ணவ, ஸ்மார்த்த மாத்துவ முதலாகிய பல பிரிவையுடையராகி ஸ்மார்த்தரொழிந்த மற்றையரெல்லாந் தனித்தனி வெவ்வேறு குரவரையுடையராயிருத்தலால் அவ்வாறு கொள்ளுதலுமாகாது.

௧௯—ஸ்மார்த்தமதமே வேதாந்த மதமெனவும், ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளே வேதாந்த ஆசாரியரெனவும், மற்றை மதங்களெல்லாம் வேதாந்த மதத்துக்குள்ளடங்கியனவெனவுங் கொண்டு ஜகத்குருவென்னும் பிரயோகத்தை ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளுக்கும் உண்மையாகக் கொள்ளலாகாதோ?

கொள்ளலாகாது.

(இன்னும் வரும்).

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 7 | துன்மதி௵ ஆடி௴ 1921௵ ஜூலை௴ | இதழ் 4

## தேவாரம்.

அருமறையனை யாலொடு பெண்ணனைக்
கருவிடம் மிகவுண்ட வெங்கண்டனைப்
புரிவெண் ணூலனைப் புள்ளிருக்கு வேளூர்
உருகி நைபவ ருள்ளங் குளிருமே.

## சிவஞானபோதம்.

(53-ம் பக்கத்தொடர்ச்சி)

### பதினொராஞ் சூத்திரம்—இரண்டாம் அதிகாரணம்.

### அதனை அயராவன்பி னரன்கழல் செலுமே.

(இ - ள்) ஆன்மாவானது முதல்வன் அத்துவிதமாய் உடனின்று கருணை மேலீட்டினால் உபகரித்துவரும் உரிமையை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அவன்கட் செல்லும் இச்சை அடங்காது மீதூர்தலின் அவ்விச்சையே தானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அனுபவிக்கப் பெறும் (எ - று)

இதில், 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்:—முதல்வன் செய்யும் உபகாரத்தை மறவாமல் அன்பு செய்தால் உயிர் அவன் சீபாதத்தை யடையும்.

2-வது—ஐயப்பாடு—உயிர் பத்தி செய்தலினாலேயே முதல்வன் சீபாதத்தை அணைதல் கூடுமோ?

3-வது—பிறர் கூறும் பக்கம்—ஒரு பொருளை யறிந்த மாத்திரத்திலேயே அதனிடத்தில் இச்சை நிகழக்கூடுமாயினும், இச்சை

யுண்டான மாத்திரத்திலேயே அப்பொருளை யடைதல் கூடும் என்பது உலகத்திலில்லை. ஆதலால், ஆன்மா பத்திமாத்திரையால் முதல்வன் சீபாதத்தை யணைவது கூடாது. பத்தியாவது சிவன் முத்தி நிலைக்குச் செய்யப்படும் ஒரு சாதனமேயாம்.

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—முதல்வன் உலகத்தார் போலன்றி பெத்தம் முத்தி இரண்டினும் அத்துவிதமாய் உடனின்று கொண்டு, யார் யார் யாது செய்கின்றாரென்று அறிந்து, அவரவர்க்கு அவ்வச்செய்திக்குத் தக்கபயனை அவ்வப் பொழுதே விளைவிப்பவனாகலான், உயிரானது பத்தியினால் மறவாதேத்த அவனது சீபாதத்தை யணைவது திண்ணம் - அன்பு பத்தி என்பனவற்றிற்கு இச்சை மீதூர்தல் என்பது பொருள் - பரமுத்தி நிலைக்கண் இச்சை நிகழாதபோது சிவபோகம் அநுபவமாதலில்லையாகையால் அவ்விடத்தும் இச்சை மீதூர்தல் உண்டென்பதறிக. மறவாதேத்துதலென்பது அயராதருள் வழி நிற்றலே.

5-வது—இயைபு—உதாரண வெண்பா:—

அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்
கிருட்கண்ணே பாசத்தார்க்கீச—னருட்கண்ணாற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்.

(இ - ள்) அருக்கன் நேர் நிற்பினும் காணார்க்கு அல் இருளே=(படல விசேடத்தால் ஒளி மழுங்கிய கண்ணிடத்தும், அது நீங்கி ஒளி விளங்கிய கண்ணிடத்தும் வேற்றுமையின்றி) ஆதித்தன் சமமாய் நின்றாலும், அவ்வாதித்தன் ஒளி மழுங்கிக் காட்சியில்லாத கண்ணுக்கு மாலையிருளேயாய்த் தோன்றுவன். (ஒளி விளங்கிய கண்ணுக்குத் தோன்றுமாறு போல விளங்கித் தோன்றான்). அதுபோல்,—ஈசன் பாசத்தார்க்கு இருட்கண்ணே=முதல்வன் (பெத்தரிடத்தும் முத்தரிடத்தும் அத்துவிதமாய் ஒப்பநின்றாலும்) பாசத்தானாகிய ஏகதேச அறிவுடைய பெத்தர்க்குப் பாச ஞானமேயாய்த் தோன்றுவன்—அருட்கண்ணால் நேசத்தில் தன் உணர்ந்தார் நேர் பாசத்தை நீக்கும்=(அப்பாசப் பிணிப்புக்கு ஏதுவாகிய அபக்குவம் நீங்கித் தனது) திருவருட் பார்வையாற் பத்தி செய்து தன்னை அறிதற்குரிய பக்குவமுடைய ராயினார்க்குப் பாசத்தானாகிய அவ்வேகதேச அறிவை மாற்றிப் பூரண அறிவு விரியச்செய்து அவரெதிரே விளங்கித் தோன்றுவன்.—(எதுபோலுமெனின்)—பகல் அலர்த்தும் தாமரைபோல்=தனது கிரணம் தீண்டிப் பக்குவமெய்திய தாமரை மலருக்கு முன்னுள்ளதாகிய கூம்புதலை மாற்றித் தன்போல் ஆயிரமிதழும் அலரச்செய்யும் ஆயிரங்கதிர்ப்பரிதி போலும் (எ - று.)



அல்லும் காணாரும், பாசமும், பகலும் ஆகுபெயர். தோற்றுவன் என்பது சொல்லெச்சம்.

இதனால் முதல்வன் பெத்தம் முத்தி இரண்டினும் திரிபின்றி ஒரு பெற்றித்தாகிய அத்துவிதமாய் நின்று உபகரிப்பானாயின், பெத்த நிலையினும் அம்முதல்வன் புலப்படல் வேண்டாமோ என்னும் ஆசங்கையை அகற்றிய வாறாயிற்று.

மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனே மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் றான்.

(இ - ள்.) மன்னும் இருளை=கண்ணின் கண் நிலை பெற்றுள்ளதாகிய இருளை=மதிதுரந்தவாறு=பூருவ பக்கத்துச் சந்திரன் உடனாய் நின்று முறை முறையான் உந்தித் தள்ளிய வாறு போல=அன்பின் மன்னும் அரனே=ஆன்மாவைத் தனது திருவடியினிடத்துச் சேர்த்துக் கொள்வதன் கண் உள்ளதாகிய இச்சை மிகுதியான் அவ்வான்மாவின் கண் அனாதி முதல் அத்துவிதமாய் நிலைபெறும் முதல்வன்றானே—மலம் துரந்து=அவ்வான்மாவின் கண் நிலைபெற்ற ஆணவமலத்தைச் சோபானமுறையில் உந்தித்தள்ளி—காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசம் செய்வான் செய்தல் சலிப்பு இல்=காந்தக்கல் இரும்பைத் தன்னிடத்தே ஈர்த்துக் கொண்டு தன் வசமாய்ப் பற்றச் செய்தல் போலத் தனது திருவடியின் கண் சேர்த்துத் தன் வசமாய்ப் பற்றிக்கொண்டு நிற்கும்படி பண்ணுதல் அவனுக்கு ஒரு போதும் சலித்தொழிதலில்லை=விகாரி அலன் தான்=(அவ்வாறு சலியாது செய்யுமாயினும் அதனால்) விகாரியாவானல்லன் (எல்லாத் தொழிலும் தனது சந்நிதியின் கண் சத்தி சங்கற்ப மாத்திரையாய்ப் பரமின்றி, அதாவது இலேசாக, விளையாட்டைப்போலச் செய்யும்) அம்முதல்வன் (எ-று.)

ஏகாரம் மலத்தைத் துரத்துதற்குக் காரணம் அவ்வன்பென்ப்படும் இச்சை யன்றிப் பிறிதில்லை யென்பதுணர்த்தி நிற்றலில் பிரிநிலை. வசஞ் செய்வான் செய்தல்=வசஞ் செய்தல்போல் செய்தல். வசமாதல்=பற்றி விடாமை. செய்வானது சலிப்பின்மை செய்கை மேலேற்றப்பட்டது.

இதனால் முத்திநிலையில் ஆன்மாவினது அன்பு நிகழுமாறும் அது முதல்வன் அன்பையின்றி அமையாமையும் விளக்கியவாறாயிற்று.

(தொடரும்.)

---

## கடவுள் பிறப்பிறப்பில்லாதவர்.

(இந்து சாதனப் பிரசுரம்.)

எல்லார் பிறப்புமிறப்பு மியற்பா வலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோநஞ் சோணேசர்—இல்லிற்
பிறந்த கதையுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்த கதையுங்கேட்டிலேம்.

என ஆப்தர் ஒருவர் எடுத்துக் காட்டியபடி, கடவுள் பிறப்பிறப்பில்லாதவர். பிறத்தல் இறத்தலை உடையார்க்கு அந்தப் பிறத்தல் இறத்தல்களுக்கு ஏதுவாகிய கன்மம் உண்டென்பதும், அந்தக் கன்மம் உடையார்க்கு விருப்பு வெறுப்பு உண்டென்பதும், விருப்பு வெறுப்புடையார்க்குக் குறைவிலா நிறைவு உளதாக மாட்டாதென்பதும் பெறப்படும். படவே, பிறத்தல் இறத்தல்களை உடையார் கடவுட்டன்மை உடையராகமாட்டார் என்பது நன்கு போந்திடும். அல்லாமலும், பிறத்தல் இறத்தல்களை உடையாரை அப்பிறத்தல் இறத்தல்களின்கட் செலுத்துவார் ஒரு தலைவர் பிறர் உண்டெனப்படுவர். படவே, பிறத்தல் இறத்தலை உடையார் தலைவராவது செல்லாதாகலின், அவர் கடவுளரெனப்படுவதில்லை என்க.

இனி, பிறத்தலாவது, பசிதாக மோகங்கட்கும், காமக் குரோத மதங்களுக்கும் உரியதாய்ச் சத்த தாதுக்களால் அமைந்ததாய் உள்ளதோர் உடம்பை எடுத்து மாதாவின் கருப்பத்திற் றங்கிப் பல வேதனைப்பட்டு வெளித்தோன்றுதல். இறத்தலாவது, இங்ஙனம் எடுத்த உடம்பை விடுத்துக் காலாந்தரத்திலே உயிர் நீங்குதல். பசி தாக மோகங்கட்கும் காமக்குரோத மதங்கட்கும் உரியராதலும், காலகதிப்பட்டு உயிர் நீங்கப்பெறுதலும் கடவுளுக்குரிய இறைமைக் குணத்தோடு முரணுறுமாதலின், இவற்றுக்கேதுவாகிய உடம்பை எடுத்தலும் விடுத்தலும் கடவுளிடத்துக் காணப்படா என்க.

இங்ஙனமாயின், கடவுள் வடிவங்கொள்ளுதலும் குற்றத்தின் பாற்படுமோ எனின், கடவுளுடைய வடிவம் பசி தாக மோகங்கட்



காவது, காமக் குரோதாதிகட்காவது காரணமாவதொன்றல்ல. அல்லதூஉம், அது மாதாவின் கருப்பத்திற்றங்கி வெளித் தோன்றுவதுமல்ல. அது யாதொரு காலாகதிப்பட்டு மரணத்தின் வாய்ப்படுவதுமல்ல. அது கடவுளுடைய திருவருளே உருப்பாகக்கொண்டு, அனுக்கிரக நிமித்தமாக வேண்டிய வேண்டிய காலங்களிலே கடவுளாற் கொள்ளப்படுவது. அனுக்கிரக முற்றிய பின் அந்தர்த்தானமாய் விடுவது. இங்ஙனந் தோன்றுதலும் மறைதலும் பிறப் பிறப்பெனப்படமாட்டா.

அல்லாமலும் கடவுள் இயற்கை வரம்புக் கமைந்தாரல்லர். அவர் இயற்கை நியதிக்கு மேற்பட்டவர். அவருடைய வடிவுக்கு யாதொரு இயற்கை முறையுங் காரணமாக மாட்டாது. இயற்கை முறைகள் எல்லாம் மலசம்பந்தமாகிய ஆன்மாக்கள் எடுக்கும் உடம்புகளுக்குக் காரணமாவன வன்றி மலரகிதராகிய கடவுள் கொண்டருளும் திருமேனிக்குக் காரணமாகா தென்க. இந்த இயற்கை நியதி கொண்டு உடம்பெடுப்பார் எவர், அவரெல்லாம் சீவர்கள் என்பதும், அந்த இயற்கைநியதியிற் றவிர்ந்து வடிவு கொள்வார் எவர், அவர் கடவுள் ஒருவரே என்பதும் சிவேச இலக்கணங்களை ஆராய்தலுறுவார்க்கு நன்கு புலப்படும். கடவுளுக்கும் ஆன்மாக்களுக்கும் உளதாய பேதத்தைத் தெரித்தலின் இதுவோர் பிரதம சாதனமாகும். ஆகவே ஆன்மாக்களுக்கே பிரத்தியேக உரிமையுடைய பிறப்பிறப்புகள் கடவுளிடத்துக் கேட்கப்படுதல் சாலாதென்க.

இன்னமும் கடவுள் வடிவங்கொள்வதெல்லாம் ஆன்மாக்களாகிய பிறர் பயன் கருதியன்றித் தம்பயன் கருதியன்று. ஆன்மாக்களாகிய பிறர்க்குப் பயன்படுதற் பொருட்டாக, அவர்களுடைய தேகத்தை ஒத்ததோர் மாமிசதேகத்தைக் கடவுள்கொள்வர் என்றால், அதனால் அவ்வான்மாக்களுக்கு எய்தற் பாலதாகியதோர் ஆக்கம் சிறிதும் இல்லையாம். ஆகவே அவர்கொள்ளும் வடிவம் நம் போலியரது மாமிசதேகம் போலாது, அருளே வடிவாகக் கொண்டதோர் அருட்டிரு மேனியேயாகும். அந்தத் திருமேனி பிறப்பிறப்புட் படாததோர் அருமைத் திருமேனியாதலின், அந்தத் திருமேனியைக் கடவுள் கொள்ளு முகத்தால் அவர் பிறப்பிறப்புட்பட்டார் எனப்படமாட்டார். அன்றியும், யாதொரு மாமிச தேகத்தை எடுத்து, அந்தத் தேகத்தைப் போஷித்தற் பொருட்டாக அன்ன பானாதிகளை அருந்தி, அங்ஙனம் அருந்து

முகத்தால் தமக்கொரு பயனைப் பெறுவார் குறைவுடையர் எனப்பட்டுக் கடவுளிலக்ஷணத்திற் பிறழ்ந்திடுவர். அதுமட்டோ, அவர் அந்தத் தேகத்தின் கண் அமைந்துள்ள பொறி புலன் கரணங்கள் வாயிலாகத் தமது அறிவு வியஞ்சகமுறும் பலனையும் எய்துவாராகலின், தமது அறிவு வியஞ்சக முறுதற்கு யாதொரு மாமிச தேகத்தை வேண்டி நிற்பார் கடவுட்டன்மைக்கு உரியராவது ஒருபோதும் கூடாதென்க. இந்த மாமிச தேகம் பிறப்பிறப்புக்குரியதாகலின், இந்தத் தேகத்தை எடுப்பார் எல்லாம் பிறப்பிறப்பின் பாற்படும் சீவர்களே யன்றி, கடவுளர் எனப்படுவது சிறிதும் அமையாது.

---

## வேதத்தின் உற்பத்தி.

### (ஞானசித்திப் பிரசுரம்.)

வேதம் என்னும் சொல் விதுஃ என்னுந் தாதுவினின்றும் பிறந்தது. விதுஃ - அறிவு. வேதம் - அறிதற்குக்கருவி. அதாவது, ஞானத்திற்குச் சாதனமாயுள்ளது என்பதாம். இங்கே ஞானமென்றது உண்மை ஞானமாகிய பரஞானத்தை. வேதத்தான் வரும் ஞானம் அபரஞானம். அவ்வபரஞானம் மேல்வரும் பரஞானத்திற்குச் சாதனமாம். அதுபற்றியே வேதம் ஞானத்திற்குக் கருவியெனப்பட்டது.

வேதம் காரியம்; என்னை? பலசாகைகளும், பலகாண்டங்களும், பல அத்தியாயங்களும், பல மந்திரங்களும், பல பதங்களும், பல எழுத்துக்களும் என்னும் இவற்றின் கோவைப்பாட்டோடு விளங்கிப் பிரபஞ்சரூபமாய் நிற்றலினென்க. எதுபோலுமெனின், இவ்வுலகம்போலும். இவ்வுலகம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பூதங்களின் காரியமாய்ப் பல அவயவப் பகுப்புடையதாய் நிற்றலின், இதனைக் காரியமென்பர். வேதமும் பல அணுத்திரளின் காரியமாகிய எழுத்துக்களோடும், பதங்கள், மந்திரங்கள் முதலியவற்றோடும் கூடித் தொடர்புபட்டு விரிந்து அவயவப் பகுப்புடையதாய் விளங்குதலின், உலகம்போல அதுவும் காரியப்பாடுடையதேயாம். அதனால் அது பிரபஞ்சம் எனப்படும். உலகம் பொருட்பிரபஞ்சம்; வேதம் சொற்பிரபஞ்சம். "சொல்லும் பொருளுமாய இருகூற்றுப் பிரபஞ்சம்" என்பதும் இது நோக்கியேயாம்.



உலகம் மாயாகாரியம். அதாவது, மாயையினின்று கலையும், கலையினின்று பிரகிருதியும், பிரகிருதியினின்று குண தத்துவமும், அதினின்று புத்தியும், அதினின்று அகங்காரமுமாகத் தோன்ற, அவ்வகங்காரத்தோடு தாமதகுணஞ் சேர்ந்த பிரிவினான் வந்த பூதாதியகங்காரத்தினின்றும் சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்னுந் தன் மாத்திரைகளாகிய சூக்கும பூதங்களும் அவற்றினின்று, அதாவது, சத்த தன்மாத்திரையினின்று ஆகாயமும், பரிசதன்மாத்திரையினின்று வாயுவும், உருவதன்மாத்திரையினின்று தேயுவும், இரததன்மாத்திரையினின்று நீரும், கந்ததன்மாத்திரையினின்று மண்ணும் என இவை இவ்வாறே தோன்றும். பின் சொல்லிய இவை பஞ்சபூதங்களெனப்படும். இப்பஞ்சபூதங்கள் அணுவடிவாய் விளங்குவன. அவ்வணுக்களின் கூட்டத்தால் எதிரே காணப்படும் மண், புனல், அனல், வளி, வான் ஆகிய பௌதிக உலககாரியம் பிறக்கும். இதனையே பிரபஞ்சமென்பர். பிர - உபசர்க்கம். பஞ்சம் - விரிவு. அதாவது, மிகவும் விரிந்த இயல்பையுடையது என அதன் நிலையை உணர்த்துவது.

இப்படியே, சுத்தமாயையெனப்படுங் குண்டலிசத்தியினின்று நாதமும், நாதத்தினின்று விந்துவும் தோன்ற, அவ்விந்துவினின்று சூக்குமை, அதினின்று பைசந்தி, அதினின்று மத்திமை, அதினின்று வைகரியாக எழுத்துக்களும், அவற்றின் கோவைப்பாடுகளுமாகிய வாக்குக்கள் தோன்றும். அவை பதங்களாம். அவற்றின் தொடர்பு மந்திரங்களாம். அவற்றின் கோவை அத்தியாயங்களாம். அவற்றின் கோவை காண்டங்களாம். அவற்றின் தொகுதி சாகைகளாம். அவற்றின் தொகுதி வேதமாம். அதனால், வேதம் சுத்தமாயையினின்றுந் தோன்றிய நாதகாரியமாய், உற்பத்தி திதி நாசமுடையதாய், சொற்பிரபஞ்சமாய்க் காரியமெனப்பட்டு விளங்குமென்க.

வேதம் ஒரு கர்த்தாவையுடையது. என்னை? பிரபஞ்சரூபமாய்த், தோற்ற நிலையிறுதிகளை யுடையதாய், விகாரமாய்ச், சடமாய், மாயாகாரியமாய்ப் பரதந்திரப் படுவதாய் நிற்றலானென்பது.

அது எதுபோலுமெனின், இவ்வுலகினைப் போலும். உலகம் பிரபஞ்சரூபமாய்த் தோற்றநிலையிறுதிகளை யுடையதாய், விகாரமாய்ச், சடமாய், மாயாகாரியமாய்ப் பரதந்திரப்படுவதாய் நிற்றலின், அதனைத் தோற்றுவித்து நிறுத்தி அழிக்கும் ஒரு முதல்வன்

அதனின் வேறாக வேண்டப்படுவன் என்பது யார்க்கும் ஒப்ப முடிந்த தொன்றாம். அது போலவே வேதத்துக்கும் ஒரு கருத்தா உண்டென்பது வெள்ளிடை மலைபோல் இனிது விளக்கமாம்.

வேதம்* சுயம்புவாகிய முதல்வனால் அருளப்பட்டமையின், அது காரணமாக, அதனையும் சுயம்புவென்பர். அங்ஙனங் கூறுதல் உபசார மெனப்படும்.

வேதத்தை நித்தப் பொருளென்றும் உபசரித்துக் கூறுவர். எதனாலெனின், அது சுத்தமாயையினின்று, விருத்தி, பரிணாமம், விவர்த்தனம் என்னும் மூவிதகாரியப்பாட்டுள், உலகம்போலப் பரிணமித்தலின்றி, விருத்தி ரூபமாய்த் தோன்றி நின்று மீள ஒடுங்குதலானும், அம்மாயை சிவசத்தியினும் அச்சத்தி சிவத்தினும் அடங்குதலாகிய ஒடுக்கத்தினும் அவ்வேதம் அழிவின்றிக் காரணரூபமாய் ஒடுங்கி நிற்றலானும், சற்காரியவாத முறைபற்றி அங்ஙனம் உபசரித்துக் கூறப்படும். அதுவன்றிக் காரியரூபமான பிரபஞ்சமே நித்தமாயிருக்கு மென்பது கருத்தன்று. அதனது தோற்ற ஒடுக்கங்கள் எல்லா நூல்கட்கும் சம்மதமா மென்பதும் உணரற்பாற்று.

இன்னும், வேதத்திலே பல தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அரசர்களுக்கும் இடையில் நிகழ்ந்த உபதேசக்கிரமங்கள் காணப்படுகின்றன.

உதாரணமாக, அதர்வசிரசு என்னும் உபநிடதம் அதர்வண வேதத்தின் அதர்வசிரசு என்னும் சாகையின் அந்தத்திலுள்ளது. "அதர்வ" என்பவர் ஓர் இருடி. அவர் பிரமாவின் புதல்வர். அவர் சிவத்தியானஞ் செய்திருக்குங்காலத்து, அத்தியானசோதி சிரசைப்பிளந்து மேலெழுந்து இச்சாகையாக, அதனால் அதர்வசிரசு என்னும் பெயரால் அச்சாகை விளங்கும் என்று தைத்திரிய சங்கிதை முதலிய வேதபாகங்கள் கூறுகின்றன. இதனால் உலகப்பொருள்களில் அடங்கும் பிரமா அதர்வமுனிவர் என்பாரின் சரித்திரபாகமும் அதர்வசாகையின் உற்பவமும் அதர்வணவேதத்தில் விளங்குதல் கண்டுகொள்க.

இன்னும், அதர்வசிரத்து முதன்மந்திர மாதியவற்றில் "தேவர்கள் சுவர்க்கத்தையடைந்து, அவர்கள் உருத்திரனைக் கேட்டனர். நீர் யாரென்று" "அவன் உபதேசித்தான்; நான் ஒருவன் ஆதியிலிருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன்; வேறொரு



வன் என்னில் வேறு இருக்கவில்லை" என்பது முதலாகத் தேவருத்திர வினாவிடை யுபதேசக் கிரமங்கள் காணப்படுகின்றன.

அதர்வசிகை யென்பது, அதர்வண வேதத்து ஒன்பது சாகைகளில் ஒன்றன்கணுள்ள உபநிடதம்.

அதில் "இனி சர்வப்பிரசித்தரான இந்த அதர்வண முனிவரைப் பைப்பலாதரும், அங்கிரசும், சனற்குமாரரும் வினவினர்" என்று தொடங்கி, அவர்களுக்கு அந்த அதர்வண முனிவர் உபதேசித்த உபதேசம் சொல்லப்பட்டது. அதர்வண முனி ததீசி முனிவரின் பிதா. அசுவினி தேவர்களுக்கு மது வித்தையுபதேசித்தவரென இவர் வரலாறு இருக்கு வேதத்திலுங் காணப்படுகின்றது. பைப்பலாதர் ததீசியின் புதல்வர். அதர்வண முனிவருக்குப் பௌத்திரர். அங்கிரசு பாரத்துவாசரின் சீடர். இவரை முண்டகோபநிடதம் மிகப்புகழும். சனற்குமாரர் பிரமபுத்திரர்.

இன்னும், மைத்திராயணியம் என்பது சாமவேதத்தின் ஓர் சாகையிலுள்ள உபநிடதம். அதில் அடியில்வரும் சரித்திரம் சொல்லப்படுகின்றது :—

"பிருகத்ரதனென்ற அரசன் இராச்சியத்தில் தனது மூத்த குமாரனை வைத்து, இந்தச் சரீரம் நிலையற்றதென வெண்ணி, வைராக்கிய மடைந்து காட்டுக்கு ஏகினான். அங்கே மேலான தவத்தினைச் செய்து சூரியனை நோக்கி உயர்த்திய கையுடையவனாய் இருக்கின்றான். ஆயிரம் வருடம் சென்றபின்பு, புகையில்லாத நெருப்பைப்போல் தேஜசால் கொளுத்துவார்போல் ஆத்மவித்தான பகவான் சாகாயனிய முனிவர் எதிரே தோன்றினர்" என்றும், அவர் அவனை இட்சுவாகுவம்சத்திற் சனித்த அரசனே" என விளித்தார் என்றும், அரசன் "எமக்கு முந்தியிருந்த மகா பராக்கிரமமுடைய சக்கிரவர்த்திகள் அநேகரும், சுத்தயும்னன், இந்திரத்யும்னன், குவலயாசுவன், புவனாசுவன், வத்திரியாசுவனன், அசுவபதி, சசிபிந்து, அரிச்சந்திரன், அம்பரீஷன், அநநுக்தன், சுவர்யாதி, சர்யாதி, அநரண்ணியன், அட்சசேனன் முதலியவர்களும், இன்னும் மருத்தன், பரதன் முதலிய சில மன்னர்களும் பந்துவர்க்கங்கள் விழித்துக்கொண் டிருக்கும்போதே பெரிய ஐசுவரியத்தை விட்டு இந்த உலகத்திருந்து பரலோகத்திற்குப் போகின்றார்கள்" என்றும் இப்படி முனிவர்களுடைய நிகழ்காலக் கதையும், பல அரசர்களுடைய இறந்தகாலக் கதையும் காணப்படுகின்றன.

இன்னும், கௌஷீதகோபநிடதம் என்பது இருக்கு வேதத்தின் கௌஷீதகி சாகையிலுள்ளது. அதின் முதலாம் அத்தியாயத்திலே "கர்க்ககுலத்திற் பிறந்த சித்திரனென்பவன் யாகஞ் செய்ய உத்தேசித்து, ஆருணியை வரணஞ் செய்தான். அவர் இவனுக்கு யாகஞ் செய்விக்கும்படி தனது புத்திரனாகிய சுவேதகேதுவை அனுப்பினார். அவர் வீற்றிருந்த பின்பு, சித்திரன், ஓ கௌதமன் புத்திரனே! மறைந்திருக்கும் உலகம் ஒன்று உண்டன்றோ, அவ்விடத்தில் என்னை ஆதானஞ் செய்வீரோ என்று கேட்டான்" எனப்படுகின்றது.

பாரத்துவாசர் வம்சத்தைச் சேர்ந்தவர் அங்கிரசு. அங்கிரசின் பரம்பரையில் வந்தவர் கர்க்கமுனிவர். கர்க்ககுலத்திற் பிறந்தவன் சித்திரனென்ற பிராமணன். ஆருணி கௌதம கோத்திரத்திற் பிறந்தவர்.

அதன் நான்காமத்தியாயத்திலே "இனி, கர்க்க கோத்திரத்திற் பிறந்த பாலாகியென்பவன், சர்வவேத வேதாந்தங்களையும் அத்தியயனஞ்செய்து சர்வப் பிரசித்தனாயிருந்தான். அவன் உசிநர தேசங்களிலேயே யிருப்பவன். அவன் மச்சதேசம், குருதேசம், பாஞ்சாலதேசம், காசிதேசம், விதேகம் இவைகளிற் சஞ்சரித்தான். அவன் காசியிலுள்ள அஜாதசத்துரு என்பவரையடைந்து உமக்குப் பிரமத்தைச் சொல்வேன் என்றான்" என்று ஒரு கதை சொல்லப்படுகின்றது. இக்கதை பிருகதாரணியக உபநிடதத்திலுமுள்ளது.

முன்சொன்ன கர்க்ககுலமே பாலாகிக்கும். அஜாத சத்துருவோ காசிராசன்.

இவ்வாறு வேதங்களிலே தேவர்கள் முனிவர்கள் அரசர்கள் பிராமணர்களுடைய நிகழ்கால இறந்தகால சரித்திரங்களும், பல தேசங்களின் பெயர்களும் காணப்படவும், அவ்வேதத்தை நித்தியம் சுயம்பு அபௌருஷேயம் என்று சொல்வதும், "சொல்லுவார் சொல்லினும் கேட்பார்க்கு மதியெங்கே" என்றவாறு நாம் அதனை என்றுகொள்ளுதலும் எவ்வண்ணம். முன்னைக் கற்பங்கள், சிருட்டிகளில் நிகழ்ந்த அச்சரித சம்பந்த உபதேசங்கள் பின்னைக் கற்பங்கள் சிருட்டிகளில் உபதேசக்கிரமமாக வந்தனவென்பது இதனால் நன்கு புலப்படும்.

இனி வேதப்பிரபஞ்சம் ஒடுங்குங் காலத்து உலகமும் அதிலுள்ள கர்த்தாக்களும் ஒடுங்குந் தன்மையால், வினையோர் அதன்



காரணராகமாட்டார். எப்பொருள் சொற்பிரபஞ்ச முதற்காரணமாகிய சுத்தமாயையைக் காரியப்படுத்துமோ, எப்பொருள் நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்சகலையுட்பட்ட ஐவகைச் சங்காரத்துள் இறுதிக்கண் நின்ற மகாசங்காரத்தைச் செய்யுமோ, அப்பொருளாகிய சிவமென்னும் பதிப்பொருளே வேதகாரணப் பொருளாம். வினையோரையும் வேதகாரணரென அங்கங்கே கேட்கப்படினும், அது பரமகாரணத்துவத்தை விளக்குவதன்று. உபதேசக் கிரமமாகிய இடைக்காரணங் குறித்த வுரைகளாம்.

இன்னும், வேதம் பரசிவனாற் செய்யப்பட்டது என்பது பிருகதாரணியம ௪-ம் அத்தியாயம் ௫-ம் பிராமணத்து "அஸ்யமஹதோ பூதஸ்ய நிச்வஸிதம் ஏதத்யத்ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோதர்வதாங்கிரஸ இதிகாச:புராணம்" என்னும் மந்திரத்தாலும், இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் உள்ளடக்கிய வித்தைகள் பதினெட்டுக்கும் முதற்கருத்தா சூலபாணியாகிய சிவனேயென்பது சைவபுராணம், பூருவபாகம், ௧-ம் அத்தியாயம் "அஷ்டா தசானாம் வித்யாநாமேஷ தாஸாம் பிந்தவர்த்மநாம்! ஆதிகர்த்தாகவி:ஸாக்ஷாச் சூலபாணிரிதிசுருதி:!" என்னும் ௨௪-ம் சுலோகத்தாலும் இனிது தெளியப்படும்.

---

## சிவபூஜாதிகார வினாவிடை.

(தூத்துக்குடி சைவ சித்தாந்த சபா பிரசுரம்.)

72-ம் பக்கத் தொடர்ச்சி.

௨௦—எதனாற்கொள்ளலாகாது?

வேதமானது பிருதுவி தத்துவ முதலாக நாததத்துவமீறாக முப்பத்தாறு தத்துவங்களையும், அவற்றின் சையோகப் பொருள்களையுந் தனித்தனி காலம்பிரமம், கருமம்பிரமம், பூதம்பிரமம், அன்னம்பிரமம் என இத்தொடக்கத்து வசனங்களாலே முதலில் அசித்துவர்க்கங்களாகிய பாசத்தைப் பிரமமெனவும், நடுவில் சித்தசித்தாகிய பசுவைப் (சீவாத்மாவை) பிரமமெனவும், அந்தத்தில் சித்தாகிய பதியைப் (சிவத்தை) பிரமமெனவுங்கூறி அம்மட்டிலே உபசாந்தியடைந்து விட்டமையால், அது பதியாகிய சிவமே வேதாந்தப் பொருளெனவும், சிவசாயுச்சியத்தைக் கொடுக்கவல்ல சைவசமயமே வேதாந்த சமயமெனவும், அச்சமய சித்தாந்தப்படி

சமய விசேட நிருவாண தீக்ஷையும், ஆசாரிய அபிஷேகமும் பெற்றுப் பதி பசு பாசமென்னுந் திரிபதார்த்த வுண்மையை யுணர்ந்து உபதேசிக்குஞ் சைவாசாரியரே வேதாந்த குருவெனவும் அங்கீகரித்தற்குத் தக்க ஏதுவாயிருத்தலால், இத்தகைய பெருமை வாய்ந்த சைவாசாரியர்களுக்கு ஜகத்குரு என்று வழங்கும் பிரயோகத்தை உண்மையாகக் கொள்ளலாமன்றி, வேதம் நடுவிலே பிரஸ்தாபித்து ஒதுக்கப்பட்டதும், ஆணவாதி மலத்திரயங்களிற் கட்டுண்டுழல்வதுமான சீவாத்மாவாகிய பசுவைப் பிரமமெனப் போதிக்கும் ஏகான்மவாத ஸ்மார்த்த சமய ஆசாரியர்களாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளுக்கு ஜகத்குரு என்று வழங்கும் பிரயோகத்தை உண்மையாகக் கொள்ளலாகாது.

௨௧—சைவசமய ஆசாரியர்களுக்கு வழங்கும் ஜகத்குருவென்னும் பிரயோகத்தை உண்மையாய்க் கொள்ளுதற்கும், ஸ்மார்த்த சமய ஆசாரியர்களாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளுக்கு வழங்கும் ஜகத்குருவென்னும் பிரயோகத்தை உபசாரமாகக் கொள்ளுதற்கும் மேற்கூறிய நியாயங்களையன்றி வேறு நியாயங்களுமுண்டோ?

உண்டு.

௨௨—அவை யாவை?

சைவசமய ஆசாரியராகிய திருஞானசம்பந்த சுவாமிகளை

"ஸ்வாமிந்ஸர்வஜ்ஞமந்நாதஜகந்நாதஜகத்குரோ" எனவும்

"பத்ராஸநம்ஸமாரோப்ய, பத்ராகாரம்ஜகத்குரும்"

எனவும் வரும் வசனத்தால், ஜகத்குருவென்று ஆலாசியமும், அமிர்தேசுரரைப் பூசித்த ஆதிசைவசிவாசாரியரொருவரை

"த்வம்ஹிலோககுரு:புஷ்பகிரிசர்தானஜோமஹார்
சிஷ்யாநங்கிருஹிப்ரம்யேதாகபீஸ-துக்கிதாந்
பவதாராஜிதம்சம்புமமிர்தேசம்பௌகஸாம்
ஸேவ்யத்வாஸ்யவஸவிதேபரிசர்யாஞ்சகல்பய
யதாபவேயு:யேதேவைஸ-சிரோதுக்கலாகராத்
ததாத்வம்கிருபயாவித்வக்குருலோககுருர்யத:"

என்னும் வசனத்தால், காந்தம் சங்கரசங்கிதை உபதேசகாண்டமுங் கூறும் நூல்வழக்கமாயிருத்தலும், ஸ்மார்த்த சமய ஆசாரியர்களாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை ஜகத்குருவென்று அவர்



கள் சீடர் வழங்க அதைக்கேட்டு உலகம் வழங்குகின்ற உலக வழக்கமா யிருத்தலுமேயாம்.

௨௩—ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை இவைபோன்ற நூல்களில் ஜகத்குருவென்று வழங்கியிருப்பதில்லையா?

இல்லை.

௨௪—இதுகாறுங் கூறிய நியாயங்களால் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் சிவாலயங்களில் வந்து பூசித்தல் கூடாதென்பதே சுருதி யுக்தி அநுபவங்களுக்கு ஒத்ததாயிருக்கச் சில சிவாலயங்களில் வந்து பூஜித்திருப்பதாகத் தெரிகின்றதே அதற்குக் காரணம் யாது?

அவ்வச்சிவாலயங்களிலுள்ள அர்ச்சகர்களாகிய ஆதிசைவர்கள் கல்வி செல்வம் ஜனக்கூட்டம் முதலியவற்றால் குறைவுடையரா யிருந்தமையும் மற்றைய ஜாதி சைவசமயிகளும் விதிவிலக்குகள் தெரிந்துகொள்ளாதவரா யிருந்தமையும் சங்கராசாரியரவர்களுடைய சீஷர்களெல்லாம் செல்வாக்குடையவர்களா யிருந்தமையுமேயாம்.

௨௫—ஆதிசைவர்களல்லாத எவ்வகைப் பிராமணர்களுக்கும் அவர்கள் குருமாருக்குஞ் சிவாலய பூஜை செய்யுமதிகாரம் இல்லாதிருக்கும் பக்ஷத்தில் சிதம்பராலயத்தில் தீக்ஷிதர்கள் பூசித்து வருவதற்குக் காரணம் யாது?

அந்த தீக்ஷிதர்களும் மற்றைய பிராமணர்களைப்போல பிரமதேவர் முகத்தி லுற்பவித்த பிரமசிருஷ்டாளர்காமல் ஸ்ரீ நடராஜ வள்ளல் திருக்கைலாயத்தினின்றும் சிதம்பரத்துக்கு எழுந்தருளுங்காலை அப்பெருமானுடன் வந்த சிவகணத்தலைவராகவும் அந்த நடராஜவள்ளல் தாமும் அவர்களி லொருவரெனக் கூறப்பெற்றவராகவுமுள்ள பெருஞ்சிறப்பினையுடைய தில்லை மூவாயிரவரின் வம்சத்தவரா யிருத்தலால் அவர்கள் ஆதிசைவப்பிராமணரோடொத்த பெருமையுடையவரா யிருத்தலே.

௨௬—அப்படியானால் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை ஆதிசைவப் பிராமணர்கள் தங்களுக்குக் குருவல்லவெனவும் தாங்கள் பூஜிக்கும் ஆலயங்களில் பூஜிக்கக்கூடாதெனவும் விலக்குவதுபோல் தீக்ஷிதர்களும் விலக்குகின்றார்களா?

ஆம்.

௨௭—அப்படி விலக்கியிருப்பதற்கு ஆதாரமென்னை?

சங்கராசாரிய சுவாமிகள் நால்வரி லொருவராகிய கும்ப கோணம் சங்கராசாரிய சுவாமிகள் சிதம்பரம் சேர்ந்த காலையில் நடராஜவள்ளலைத் தெரிசனஞ் செய்யவேண்டுமென்றும் விபூதிப் பிரசாதத்தை தீக்ஷதாள் மடலோடு ஏந்தத் தாங்களெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதற்குக்கூட தீக்ஷ தாள் தாங்கள் கொடுக்கவே கையேந்தி வாங்கிக்கொள்ள வேண்டு மென்று கூறி மறுத்துவிட்டமையும் அதைப்பற்றி பெரிய சபை கூடி சாஸ்திர விவாதங்கள் செய்தும் முடிவில் தீக்ஷதர்கள் கொடுக் கவே சங்கராசாரிய சுவாமிகள் வாங்கிக்கொள்ள வேண்டுமென் றும் தீர்மானிக்கப்பட்டமையுமேயாம்.

உ௮—ஆதிசைவர்களல்லாத மற்றெவ்வகைப் பிராமணர்களுக் கும் அவர்களது ஆசிரியர்களுக்கும் சிவாலயங்களில் எழுந்தருளி யிருக்கும் மூர்த்திகளைப் பூசிக்குமதிகார மில்லாவிடினும் அம்மூர்த் திகளைப் பிரதிஷ்டை செய்யுங்காலத்தில் ஆசாரியராகவாவது சாதக ஆசாரியராகவாவது யிருந்து நடத்துவிக்கு மதிகார முண்டா?

சிவாலயப் பிரதிட்டையானது சிவாகம விதிப்படி செய்யுங் கிரியையா யிருத்தலாலும் சிவப்பிரதிட்டாதி சிவாலய சம்பந்த மான சர்வ கிரியைகளுக்கும் ஆதிசைவர்களே அதிகாரிகளென்று சிவாகமங்களில் விஸ்தாரமாய்க் கூறியிருத்தலாலும் கூடாது! கூடாது!!.

## முடிவுரை.

சைவசமயிகளே! இதுகாறுங் கூறிய சுருதியுக்தி யனுபவப் பிரமாணங்களால் சிவாலய சம்பந்தமான பிரதிட்டை பூசை முத லிய சகல கிரியைகளுக்கும் ஆதிசைவப் பிராமணர்களே அதிகாரிக ளென்றும், மற்றெவ்வகை யோரும் அதிகாரிக ளல்லரென்றும், யாதேனுமோர் துர் அபிமானத்தை முன்னிட்டு மற்றையோரைக் கொண்டு சிவப்பிரதிட்டை பூசை முதலியன செய்யப்படின் உல கத்துக்கும் அரசனுக்கும் பெருங்கேடு சம்பவிக்குமென்றும் பசு மரத்தாணிபோல் நாட்டப்பட்டமையால் சைவாகம நெறிப்படி பூசிக்கப்படும் நமது தமிழ் நாட்டிலுள்ள சிவாலயங்களில் அத் தகைய தீங்கு நேரிடாவண்ணம் பாதுகாக்குமாறு உங்களனைவரை யும் வேண்டுகின்றோம்.

திருச்சிற்றம்பலம்.

---

# திருவண்ணாமலை

## தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரள் மழலைம்முழவதிரும்
அண்ணாமலைதொழுவார்வினை வழுவாவண்ணமறுமே.

திருச்சிற்றம்பலம்.

அகண்டகார சச்சிதானந்த பரிபூரண சுயம்பிரகாசப் பொரு ளாய் விளங்கும் ஸ்ரீகைலாயபதியானவர் இந்த உலகத்திலுள் ஆங் காங்கிருக்கும் ஆன்மகோடிக ளுய்யும் பொருட்டுத் திருக்கோயில் கொண்டிருக்கின்ற பல ஸ்தலங்களுள் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்த சுவாமிகள், ஆளுடைய வரசுகளாகிய திருநாவுக் கரசு சுவாமிகள், ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரமூர்த்தி சுவாமி கள், ஆளுடையவடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் இந்நால்வர்க ளருளிச்செய்த தேவார திருவாசகங்களை உடையன வாய்ச் சோணாடு முதலிய தேசங்களில் இன்ன இன்ன நாட்டில் இத்தனை இத்தனை ஸ்தலங்களென்று முன்னோர்கள் ஏற்படுத்தின கிரமப்படியே நடுநாட்டுக் குள்ளிருக்கும் ஸ்தலங்களுள் விசேஷ மாகிய திருவண்ணாமலை யென்னுந் திருப்பதியும் ஒன்று.

இது கிருதயுகத்தில் அக்கினி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும் திருவுருக்கொண்டு, அருணாசலம், சோணாசலம், கௌரிநகரம், தேசுநகரம், முத்திநகரம், ஞானநக ரம், சிவலோகம் என்பன வாதியாய பல பெயர்களை யுடையதாய், சிவபெருமானே கிரிரூபமா யிருக்கப் பெற்றதாய், பார்வதியார் திருவவதாரமானதும், திருக்கண் புதைத்ததும், மகிடாசுர மர்த் தனஞ் செய்ததும், இடப்பாகம் பெற்றதும், சந்திரவம்சத்தனாகிய வச்சிராங்கத பாண்டியன் பேறு பெற்றதும், அக்கினி வம்சத்த னாகிய வல்லாளராஜன் புத்திரசோகந் தீர்த்ததும் இந்திரதீர்த்த முதலாகிய அநேக தீர்த்தங்களுள்ளதும், ஆதித்தனுக்குத் தரிசனங் கொடுத்ததும், சூரிய வம்சத்தனாகிய பிரதத்வராசனால் அனேக காணிக்கைகள் பெற்றதும், அஷ்டவசுக்களும் பிரமன் முதலான வர்கள் பாவந்தீர்த்ததும், புளகாதிபன் பேறுபெற்றதும், அன்பர்

கள் வரம் புரிந்து நற்கதி யடையப்பெறுவதும், மகாஸ்தலமென்றும் நினைக்க முத்திதரும் தலமென்றும் புராணத்திற் சொல்லப்படுவதுமாகிய சிறந்த தலமாம்.

பரமசிவம் மலையுருவமானதற்குக் காரணம் யாதெனின், ஒரு கற்பத்தில் மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் தான்தான் பிரமமென்று வாதித்துப் போரிட்டதைத் தீர்க்கும் பொருட்டுச் சிவபெருமான் அக்கினிமலையாய் அவர்கள் மத்தியில்நின்று கலகத்தைத் தீர்த்தருளி அவர்கள் வேண்டுகோளினால் ஒரு சிறிய மலையாயுருக்கொள்ள, அதைக்கண்ட பிரமதேவனும் மகாவிஷ்ணுவும் சுவாமியை நோக்கி இம்மலையினுச்சியில் ஒரு சோதி எந்நாளுந் தெரியும்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள், அதற்குச் சிவபெருமான் அங்ஙனமாகுக வென்றருளினர். அன்றியும், கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நக்ஷத்திரத்தில் இம்மலையி னுச்சியில் ஒரு சோதி காண்பிப்போம். அச்சோதியைத் தரிசித்தவர்கள் தரித்திரமும் வியாதியும் நீங்கி இஷ்டகாமியங்களைப் பெற்று வாழ்வார்கள். இவையல்லாமல் அரசர்களும் தவசிகளும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி வாழ்வார்கள். அன்றியும் இதைத் தொழுதவர்களுக்கும் தரிசித்தவர்களுக்குமேயல்லாமல் அவருடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் மோக்ஷங் கொடுப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

மேலும் இம்மலை ஜனனமரணமென்னும் வியாதிக்கு மருந்துபோல இருப்பதினால் மலைமருந்தென்றும் அழல்வண்ணமாயிருப்பதினால் அருணாசலமென்றும் பெயர் பெறக்கடவது. இந்நாமத்தை ஒருதரஞ் சொன்னவர்க்குப் பஞ்சாக்ஷரத்தை மூன்றுகோடி தரம் உச்சரித்த பலன் வருமென்று அருளிச்செய்தார்.

அதற்குப் பிரமனும் மகாவிஷ்ணுவும் ஆநந்தமடைந்து சிவபெருமானைப் பார்த்துத் தேவரீர் இவ்வாறு மலைக்கோலமாயிருந்தால் அடியேங்கள் எப்படி பூசை செய்யக்கூடும். ஆகையால் இந்த மலையின்கீழ் ஒரு சிவலிங்கமூர்த்தியா யெழுந்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். சிவபெருமான் அப்படியே சிவலிங்கமூர்த்த மாவோமென்று அந்த மலையினுள்ளே மறைய, உடனே அம்மலையினிடத்தில் சிவலிங்கந் தோன்றியது. அதைக் கண்டு பரமானந்தராய் மயனென்னுந் தேவதச்சனால் ஓராலயங் கட்டுவித்தார்கள், அப்போது அந்த இடத்தில் வளப்பம் பொருந்திய நகரமும் முந்நூறு தீர்த்தங்களும் உண்டாயின. அல்லாம



லும் ஆகாயகங்கை கிணறுகளாகவும், கற்பகவிருக்ஷங்கள் மரங்களாகவும் வந்திருந்தன. தேவர்களும் ரிஷிகளும் மனிதர்களாக வந்து பிறந்தார்கள். அரம்பா ஸ்திரிகள் தாசிகளாகப் பிறந்தார்கள். ஆகையால் எல்லா ஸ்தலங்களும் உடலென்றும், அருணாசல ஸ்தலம் முகமென்றும், அதில் சிவபெருமான் கண்ணென்றும் இந்த ஸ்தலத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுதற் கருமையென்றும், இரண்டாம் சம்புவாகிய நந்திகேசுரர் மார்க்கண்டேய முனிவருக்கு அநுக்கிரகஞ் செய்தார். அக்காலத்தில் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியபடி அம்மலையின்மேல் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நக்ஷத்திரத்தில் சோதி தரிசனமாகிக் கொண்டுவந்த பாவனையாக இப்போதும் அந்த மலையின்மேல் தீப தரிசனமாகின்றபடியால் அத்தினத்தில் இந்திர தீர்த்தம் முதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து கிரியை வலம்வந்து தங்கள் சக்திக்குத் தக்கபடி தர்மங்களையுஞ் செய்து அருணாசலேசுரரைத் தொழுது தீபதரிசனமுஞ் செய்து துதிப்பவர்கள் அளவிலாச் சம்பத்தையும் மோக்ஷத்தையு மடைவார்கள். இதன்றியும்,

ஆதிவாரத்தில் அந்த மலையை வலஞ்செய்பவர்கள் சூரியமண்டலத்தைப் பிளந்து சிவபதத்தைத் தமக்கு இடமாகச் சேர்த்துக் கொள்வார்கள்.

சோமவாரத்தில் வலம் வந்தவர்கள் தேவேந்திரனைப்போல ஏழுலகத்தையும் ஆண்டு சிவசாருப்பியத்தை அடைவார்கள்.

மங்கலவாரத்தில் வலஞ்செய்பவர்கள் தங்கள் கடனையும் தரித்திரத்தையும் சங்கிலித் தொடர்போல் வருகின்ற எழு பிறப்பையும் நீக்குவார்கள்.

புதவாரத்தில் சிவபெருமானைப் பிரதட்சிணஞ் செய்வோர்கள் நாலு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும் அறுபத்து நான்கு கலைகளையும் தெளிந்து தேவர்களாய்ப் பின் முத்தியை அடைவார்கள்.

குருவாரத்தில் வலம் வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கு மேலாவார்கள்.

சுக்கிரவாரத்தில் வலஞ் செய்தவர்கள் விஷ்ணு பதத்திற் சேர்வார்கள்.

சனிவார வுதயத்தில் வலம் வந்தவர்களுக்கு நவக்கிரகங்களும் பதினோராமிடத்தின் நற்பலனைக் கொடுக்கும். சிவநிசியிலும் வருஷப் பிறப்பிலும் ஐப்பசி முதலாகிய மூன்று மாதங்களிலும் வலம்

வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகமான பலன் சித்திக்கும்.

உருவந் தெரியாமல் சித்தரும் தேவரும் இத்திருமலையை வலஞ்செய்வதால் மற்றவர்கள் கிரிப்பிரதட்சிணஞ் செய்யும்போது, வாகனத்தின்மேலேறிக்கொண்டு வாராமலும், போர்வை போர்த்துக்கொள்ளாமலும், குடை பிடித்துக்கொள்ளாமலும், தாம்பூலம் தரிக்காமலும், வேறொரு சிந்தனையில்லாமலும், மனதினால் வந்தனஞ்செய்து அருணாசலேசுரரையே சிந்தித்துக்கொண்டு மிகுந்த பயபக்தியுள்ளவர்களாய் நடைகொள்ள வேண்டுமென்றும், அந்த நாளில் விரதமிருந்து சிவதரிசனஞ் செய்து ஆலயத்திற் போகின்றவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதிசைவாசாரியர்களைக் கொண்டு வில்வார்ச்சனை முதலியவைகளைச் செய்வித்தால் தங்கள் கையினாற் செய்த பேறு கிடைக்குமென்றும் பிரமதேவர் சனகரிஷிக்குச் சொன்னார்.

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கடூவி யுமையவள்பங்காமிக்க
சோதியேதுலங்குமெண்டோட் சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவே யணியணாமலையுளானே
நீதியானின்னையல்லா னினையுமாநினைவிலேனே.

திருச்சிற்றம்பலம்.

---

## சர்வாலய தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்.

ஸ்ரீ கைலாயத்தில் உலகமாதாவாகிய பார்வதியாரோடு சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும்போது அவ்விடத்தில் ஏற்றியிருந்த நெய்த் தீபங்களில் ஒரு தீபம் அணைந்து போகின்ற தருணத்தில் ஓர் எலியானது அதிலிருந்த நெய்யை உண்ணப் போனபோது அவ்வெலியின் முகமானது அணைந்துபோகிற வர்த்தியைத் தூண்டிய மாத்திரத்தில் பிரகாசம் அதிகப்பட்டது. அதற்குச் சிவபெருமான் கிருபைகூர்ந்து அவ்வெலிக்கு மானிடச் சரீரமும் அரசும் மற்றப்பேறுந் தந்து பூமியில் பிறந்து சகல ஐசுவரியத்தையும் அநுபவித்திருக்கக் கட்டளையிட்டனர். அச்சக்ரவர்த்தியார் ஒருநாள் சிவதரிசனத்துக்குப் போக எத்தனித்துத் தன் இராச சின்ன முதலிய சகல ஆடம்பர விபவத்துடன் சிவாலயத்திற்குட் பிரவேசித்துப் பிரதட்சிணம் வருகையில் அவ்விடத்தில் ஏற்றி



யிருந்த தீபநெய்யின் ஒரு துளி இந்தச் சக்கிரவர்த்தியின் தேகத்தில் ஒழுகினது. அதனால் அந்தச் சக்கிரவர்த்தியின் தேகமுழுமையும் இரணங்கண்டு வெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண் டிருக்கும்போது ஒருநாள் சிவபெருமான் கிருபைகூர்ந்து "சக்கிரவர்த்தியே நீ அகங்காரியாகையால் இத்தீங்கு நம்மாலுனக்குண்டாயிற்று. நீ இன்றுமுதல் நெய் முதலிய பொருள்களால் ஆலயங்களுக்குத் தீபமேற்றுவையானால் உனக்கு இந்த இரணந்தீர்ந்து சாயுச்சிய பதங்கிடைக்கு"மென்று அசரீரியாய்த் திருவுளம் பற்றியதைக்கேள்வியுற்ற சக்கரவர்த்தி ஆநந்தமடைந்து அந்தக் கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலும் மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களிலும் தீபம் ஏற்றிக்கொண்டு வருங்காலங்களில் ஒருநாள் ஸ்ரீகைலாயபதியாகிய சிவபெருமான் திருவுளமிரங்கிக் கார்த்திகைமாதம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தேசோமயமா யெழுந்தருளி அச்சக்கிரவர்த்திக்குச் சாயுச்சியபதமளித்தருளினர்.

அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லாம் அந்தச் சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உஷ்ணந் தணியும்பொருட்டுப் பொரியவல் நிவேதனம் பண்ணினார்கள். இவ்வாறு கைலாயபதியாகிய சிவபெருமான் மாபலிச்சக்ரவர்த்திக்குச் சோதிசொரூபமாகத் தரிசனங்கொடுத்த காரணமாகச் சிவாலயங்கள் தோறும் கார்த்திகை மாதம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம்வைக்கவும் சுட்கப்பனை (சொக்கப்பானை) கட்டவும் ஆயின.

கார்த்திகை நக்ஷத்திரத்துக்கு முன்னாள் பரணி நக்ஷத்திரஞ் சாயங்காலை அதிவாசதீபத்தில் அக்கினிகாரியம் முதலியவைகளின் மூலமாய் மகாலிங்கமூர்த்தியை ஆவாகனம்பண்ணி அந்தத்தீபத்தைச் சுவாமி சந்நிதானத்திற்றானே பூசித்துவைக்க வேண்டும்.

மற்றைய நாள் சாயங்காலை அர்த்த சூரியமண்டலத்தில் தென்னைமரம், பனைமரம், பாக்குமரம், வாழைமரம், மூங்கில் என்னும் இம்மரங்களில் ஒருவிதமரத்தை ஆலயத்திற்கும், இந்திர திக்குக்கும் மத்திய ஸ்தானமாகிய பிரமஸ்தானத்தில் நாட்டவேண்டும். இந்த மரத்துக்குத் தீபதண்டமென்று பெயராம். தண்டவுன்னதப் பிரமாணம், சுவாமி கர்ப்பகிருகத்துக்கு விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது விமானம் கழுத்தினளவாவது இருக்கவேண்டும். இவ்விதமான தீபதண்டத்துடன் உலர்ந்த தென்னோலையாவது பனையோலையாவது பாக்கோலையாவது வாழைச்சரு

காவது தாழஞ்சருகாவது அசோகச்சருகாவது விமானம்போல் கட்டவேண்டும்.

மேற்சொன்ன பரணி நக்ஷத்திர மறுநாளாகிய கார்த்திகை நக்ஷத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதராய் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி, ஷை தீபம் சுவாமிக்கு முன்னே வரும்படியாகச்செய்து தீபதண்டத்தைச் சமஸ்காரப் படுத்திக்கொண்டு அத்தீபத்தை அத்தண்டத்தின் மேல் வைத்து சருகுகளைக் கொளுத்திவிட்டு அந்தச் சருகுகள் எரிந்த பின்பு மேற்படி தண்டத்தைச் சேதித்து விடவேண்டும். அச்சோதியை சிவபெருமானாகப்பாவனை செய்து தரிசிப்பவர்களுக்கு இம்மையில் செல்வமும் மறுமையில் மோக்ஷமுங் கிடைக்குமென்று ஆகமங்கள் சொல்லுகின்றன.

### தண்டவிதி.

உத்தமம் தென்னமரம்,
மத்திமம் பனைமரம்.
அதமம் பாக்குமரம்,
அதமாதமம் வாழையும் மூங்கிலும்.

### தண்டவுன்னதப் பிரமாணம்.

உத்தமம் விமானத்தளவு,
மத்திமம் அதன் கழுத்தளவு.

மலையைச்சேர்ந்த ஸ்தலங்களில் நக்ஷத்திரம் பிரதானமாகவும், சமுத்திரத்தைச் சேர்ந்த ஸ்தலங்களில் பௌர்ணமி திதி பிரதானமாகவும் தீபம் வைக்க வேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன.

அண்ணாமலையானை
உண்ணாமுலையொடு
பண்ணாற்பழிச்சிடில்
நண்ணாவினைகளே.

இந்த அருணாசலத்தின் மான்மியத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் எழுதினவர்களும் எழுதி வைத்துக்கொண்டவர்களும் அதைப் பூசித்தவர்களும் கரியகடல் சூழ்ந்த பூமி முழுதுங் காத்துத்தகுந்த புத்திர சம்பத்தும் போக சவுக்கியமும் தழைபெற வாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணாசலேசுரர் திருவடியினிலே அவர் திருவருளுக்குப் பாத்திராவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இயற்றிய சைவ தூஷண பரிகாரம்.

## சிவாசாரியப் பிரகரணம்.

பரார்த்தலிங்கப் பிரதிட்டை பரார்த்த பூசை உற்சவம் என்பனவும் தீக்ஷை முதலியனவுமாகிய சகல கர்மங்களும் செய்தற்கு, கௌசிகாதி பஞ்சரிஷி கோத்திரத்திற் பிறந்த ஆதிசைவர் என்னும் சிவப்பிராமணர்களுள், பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களைச் செய்பவர்களாய், சமயம் விசேஷம் நிருவாணம் என்னும் மூன்று தீக்ஷையும் பெற்றவர்களாய், சைவாகமங்களை ஓதியுணர்ந்தவர்களாய், சிவாகமங்களில் விதித்த இன்னோரன்ன பல இலக்கணங்களையும் உடையவர்களாய் ஆசாரியாபிஷேகம் பெற்ற சிவாசாரியர்களே அதிகாரிகள் என்றும், மற்றைப் பிராமணர் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வருணத்தார்களுள்ளும் மேற்கூறியவாறே, ஆசாரியாபிஷேகம் பெற்றவர்கள் மேற்கூறிய பரார்த்தலிங்கப் பிரதிட்டை முதலியன நீங்கலாக மற்றை ஆன்மார்த்த லிங்கப்பிரதிட்டை தீக்ஷை முதலியன செய்தற்கு அதிகாரிகளென்றும், அவர்களெல்லாரும் மனிதப் பிறப்பினராயினும் தேவர்களாகப் பாவிக்கற்பாலர் என்றும், அவர்களைப் பூசிப்பவர்கள் சிவனைப் பூசிப்பவர்களென்றும், அவர்களைத் தூஷிப்பவர்கள் சிவனைத் தூஷிப்பவர்கள் என்றும், அவர்களுக்குத் தொண்டு செய்து அவர்கள் சொற்கேட்டு நடத்தல் பெரும்புண்ணியமென்றும், சிவாகமங்கள் செப்புகின்றன.

### கிறிஸ்து சமயம்.

யாத். ௨௯-ம் அதிகாரத்தில் ஆரோனையும் அவன் புத்திரரையும் ஆசாரியராக அபிஷேகம்பண்ணல் வேண்டும் என்றும் அபிஷேகவிதி இன்னது என்றும் யெகோவா விதித்தார் எனவும், ஷை ௪௰-ம் அதிகாரத்தில் அவ்விதிப்படி மோசே அவர்களுக்கு அபிஷேகம் பண்ணினான் எனவும், எண். ௮-ம் அதிகாரத்தில் யெகோவுக்கு மற்றைத் தொண்டுகளைச் செய்யும் பொருட்டு லேவியர் இஸ்ரவேலரினின்றும் பிரித்து அபிஷேகம் பண்ணப்பட்டார்கள் என்வும், எண். ௧௮-ம் ௨௰-ம் வசனத்திலும், உபா. ௧௮. ௧. ௨. வசனங்களிலும் ஷை ௯-ம் வசனத்திலும், ஆரோனுக்கும் அவன் புத்திரருக்கும் அவன் பிதாவின் வம்சத்தாராகிய லேவியாசாரியருக்கும் அவர்கள் சகோதரராகிய இஸ்ரவேலரோடு பாகமும் சுதந்தரமும் இல்லை. யெகோவாவே அவர்களுக்குச் சுதந்தரம் என

வும், எண். கஅ-ம் அதிகாரத்தில் இஸ்ரவேலர் யெகோவாவுக்குக் கொண்டுவந்து கொடுக்கும் இறைச்சி, அப்பம், காணிக்கை முதலியவைகளில் ஆரோனுக்கும் அவன் புத்திரருக்கும் லேவியருக்கும் பங்குஉண்டெனவும், உபா. கஉ-ம் அதிகாரத்தில் லேவியரைக் கைவிடலாகாது எனவும், ஷை கஎ-ம் அதிகாரத்தில் சகலரும் லேவியர் சொற்கேட்டு நடத்தல் வேண்டும் எனவும், எண். கசு-ம் அதிகாரத்தில் ஆரோனுக்கு விரோதமாகப் பேசினவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் எனவும், லேவி. உக-ம் அதிகாரத்தில் இவர்கள் சந்ததியார்களே தலைமுறைதோறும் ஆசாரியர்களாதற்கு அதிகாரிகள் எனவும், இன்னஇன்ன இலக்கணங்களை யுடையவர்களே ஆசாரியர்களாதற்கு உரியரெனவும், மத். க0-ம் அதிகாரத்தில் யேசு தன்னுடைய சீஷரைநோக்கி உங்களை அங்கீகரிக்கிறவன் என்னையும் அங்கீகரிக்கிறான் என்னை அங்கீகரிக்கிறான் என்னை அனுப்பியவரையும் அங்கீகரிக்கிறான். இந்தச் சிறியவர்களில் ஒருவன் என் சீஷனென்று அவனுக்கு ஒரு கலசந் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை இழந்துபோகான் என்று சொல்லி வியாதிகளை நீக்கவும், பிசாசுகளை ஓட்டவும், அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் எனவும், சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படியே உன் சமயநூல் பேசுதல் கண்டும், மனிதர்கள் எல்லாருஞ் சமமாயிருக்க, சைவர்கள் தங்கள் அறியாமையால் அவர்களுட் சிலரை ஆசாரியர்களென்றும் பிராமணர்களென்றும் பெயரிட்டு, அவர்களே உத்தமோத்தமர்களென்று அவர்களை வணங்கி அவர்களுக்குத் தொண்டுசெய்து திரிகிறார்களென்று நீ புலம்புவது என்னை?

---

## சரீரசுத்திப் பிரகரணம்.

தினந்தோறும் அநுட்டானம், செபம், பூசை, சிவாலய சேவை, வேதாகமாதி, சாத்திரபடனம் முதலிய சற்கருமங்களை, சலத்தினாலே விதிப்படி சரீரசுத்தி பண்ணித் தெளதவஸ்திரம் தரித்துக்கொண்டே செய்தல் வேண்டுமென்றும், அவ்வாறே செய்யாமை பாவமென்றும், சைவநூல்கள் சாற்றுகின்றன.

யாத். க0. கக. யெகோவா மோசேயை நோக்கி, மூன்றாம் நாளிலே யெகோவா சகல ஜனங்களுக்கும் பிரத்தியக்ஷமாகச் சீனாய் மலையின்மேல் இறங்குவார். ஆதலால் நீ ஜனங்களிடத்திற்



போய், இன்றைக்கும் நாளைக்கும், அவர்கள் தங்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்கும்படி செய்து அவர்களைப் பரிசுத்தப்படுத்தி மூன்றாம் நாளுக்கு ஆயத்தமா யிருக்கும்படி செய்வாயாக. ஷை ச0, கஉ, கங, கசு, ஙக, ஙஉ. நீ ஆரோனையும் அவன் புத்திரரையும், சபையின் ஆவாசவாசலில் வரச்செய்து, அவர்களைச் சலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்து, ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களைத் தரிப்பித்து எனக்கு ஆசாரியத் தொண்டு செய்யும்படி, அவனுக்கு அபிஷேகம்பண்ணி, அவனைப் பரிசுத்தப்படுத்துவாயாக.—அப்படியே மோசே செய்தான், யெகோவா தனக்குக் கட்டளையிட்டபடி யெல்லாம் செய்தான். அவ்விடத்திலே மோசேயும், ஆரோனும், அவனுடைய புத்திரரும், தங்கள் கைகளையும் கால்களையும் கழுவினார்கள். யெகோவா மோசேக்குக் கட்டளை இட்டபடி அவர்கள் சபையின் கூடாரத்திற் பிரவேசிக்கிற பொழுதும், வேதிகையைச் சமீபிக்கிற பொழுதும் கழுவுவார்கள். ஷை ஙு0, கஎ - உக, யெகோவா மோசேயை நோக்கி, கழுவுகிறதற்குப் பித்தளையினாலே ஒரு தொட்டியை யுண்டுபண்ணு. அதின் பாதமும் பித்தளையா யிருக்கவேண்டும். அதைச் சபையின் ஆவாசத்துக்கும் வேதிகைக்கும், இடையில் வைத்து, அதிலே சலம் வார்க்கவேண்டும். அதில் ஆரோனும், அவன் புத்திரரும், தங்கள் கைகால்களைக் கழுவக்கடவர்கள். அவர்கள் சபையின் ஆவாசத்தில் பிரவேசிக்கும்பொழுதும், யெகோவாவுக்குத் தகனபலி செலுத்தும்படி தொண்டுசெய்ய வேதிகைக்குச் சமீபிக்கும் பொழுதும், சாவாதபடி சலத்தினால் தங்களைக் கழுவக்கடவர்கள். இது தலைமுறை தலைமுறையாக அவனுக்கும், அவன் சந்ததியாருக்கும், நித்திய நியமமாயிருக்குமென்றார்.

இப்படியே சரீரசுத்தி அத்தியாவசியகமென்றும், அது செய்யாதார் தண்டிக்கப் படுவார்களென்றும், உன் சமயநூல் பேசுதல் கண்டும், நீ எங்களை இகழ்வது மடைமையன்றோ?

---

பிழை திருத்தம்—64-வது பக்கம் 18-வது வரியில் கேட்டு என்பதை கூறி என்று திருத்துக.

---

## ஓங்கார விளக்கம்.

இந்நூல் நவீனமாக சித்தாந்த சைவ சரபம் சோளங்கிபுரம் ஸ்ரீலஸ்ரீ சிவ அருணகிரி முதலியாரவர்களால் இயற்றி அச்சிடப்பட்டுள்ளது.

பெண்ணவனம் தொடங்கி நெடுங்காலமாக வைதிக சைவ நெறியை இடையறாப்பேரன்போடு உலகினர்க்குப் போதித்து வரும் உத்தம சைவப் பிரசாரகர்களுள் இவரும் ஒருவர். இவர் இரங்கோனில் உத்தியோகஞ் செய்து கொண்டிருந்தபோது மிகவும் பாடுபட்டு வெளியிட்ட சித்தாந்த சாத்திரங்களினாலும் செய்து வந்த பிரசங்கங்களாலும், மாணாக்கர்களுக்கு அறிவுறுத்திய சித்தாந்த சாஸ்திரோபதேசங்களாலும், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் உள்ளிட்ட எண்ணிறந்த சிவனடியார்கள் சைவ நன்னெறியிற்றலைப்படுவாராயினர். நம் சைவப்பத்திரிகை உலகில் பரவி அபிவிருத்தியடையுமாறு இவர் செய்த உதவிகளும் அளப்பில. இவர் இப்போது இயற்றிய ஓங்கார விளக்கம் இவர் பெருமையை உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்கிக்கொண்டிருக்கிறது. இதில் பஞ்சாக்கரத்தின் பொருளும், பல சமயத்தினராலும் பொதுவாக ஸ்மரிக்கப்படும் ஓமெனப்படும் ஓரெழுத் தொருதனிமொழியின் பொருளும், இது சிவபெருமானையே புணர்த்தி நிற்றலும் அதி தீவிரபக்குவமடைந்த மாணாக்கனுக்கும் ஞானாசிரியனுக்கும் இடையில் நடந்த சம்பாஷணையெனக் கடாவிடைகளாக நானூற்றுக்கு மேற்பட்ட மந்திர சுலோகங்களை மேற்கோளாகக் காட்டி விளக்கப்பட்டுள்ளனவாகலின் இந்நூல் சைவ சமயிகளுக்கு மாத்திரமன்றி ஓங்காரத்தின் உண்மைப்பொருளை யறிய விரும்பும் வைணவர் ஸ்மார்த்தர் முதலிய எல்லோருக்கும் இன்றியமையாததாம்.

பத்திரிகாசிரியர்:

இ. ஆதிமூல முதலியார்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| மலர் | | இதழ் |
|---|---|---|
| 7 | துன்மதி௵ ஆவணிமீ 1921௵ ஆகஸ்டுமீ | 5 |


### தேவாரம்.

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே.

## சிவஞான போதம்.

பதினோராம் சூத்திரம்—இரண்டாமதிகரணம்.

76-வது பக்கத் தொடர்ச்சி.

### உதாரண வெண்பா.

நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்று
நசித்திலதே லொன்றாவதில்லை—நசித்தமல
மப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாம்
ஒப்பின்று மீசன் கழல்.

(இ - ள்.) நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்று = (மேலை வெண்பாக்களிரண்டினும் கூறியவாறே, பூரண அறிவு விளங்கி ஆன்மா முதல்வன் வசமாய் ஒன்றுபட்டுக் கூடுங்கால் பண்டை ஏகதேசவறிவு கெட்டுக் கூடுமோ, கெடாது கூடுமோ என்பார்க்கு) கெட்டுக் கூடுமெனின் குணங்கெடவே குணியாகிய ஆன்மாவும் கெடுதலால் கூடமாட்டாது—நசித்திலதேல் ஒன்றாவதில்லை = கெடாது கூடுமெனின் ஏகதேச அறிவு கெடாதபோது வியாபகப்பொருள் விளங்குதலின்மையால் கூடுமாறில்லை—(மற்றெங்ஙனம் கூடுமோவெனின்)—மலம் நசித்து உளம் அப்பு அணைந்த உப்பின் அணைந்து சேடமாம் = ஏகதேச அறிவைச் செய்யும் ஆண

வம் கன்மம் மாயை என்னும் மலங்கள் மாத்திரமே கெட்டொழிய, ஆன்மா தண்ணீரைச் சேர்ந்த உப்புப்போல் முதல்வன் திருவடியைத் தலைப்பட்டுச் சேடமாம்—ஈசன்கழல் கப்பு இன்றாம்=முதல்வன் திருவடி அவ்வான்மாவை விட்டுக் கவர்தலின்றி இயைந்து நிற்குமாகலான் (எ - று.)

ஒன்றாது என்பதில் துவ்விகுதி விகாரத்தாற் றொக்கு ஒன்றா என நின்றது. மலம் நசித்து அணைந்து=மலம் நசிக்க அதனால் அணைந்து. தன்னிடத்துள்ள கடின குணம் நீங்கி அப்பினைச் சேர்ந் தொன்றாகிய உப்பு ஆன்மா மலம் நசித்து முதல்வனைச் சேர்ந்து ஒன்றுபடுதல் மாத்திரைக்கு உவமையாயிற்று. ஒரு பொருள் தன் பொருட்டன்றி மற்றோர் பொருளின் பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்தரமின்றி நிற்குமாயின் அவ்வாறு நிற்கும் பொருள் அம்மற்றோர் பொருளுக்குச் சேடமாம். இவ்விடத்தில், அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாய்த் தன்னை விட்டுக் கவர்தலின்றி இயைந்து நிற்கும் ஈசன் கழலையே அறிந்து இச்சித்து அநுபவித்தலாகிய முதல்வனது வழிபாட்டின் பொருட்டு உரிமையெய்திய ஆன்மா முதல்வனுக்குச் சேடமாயினவாறுணர்க. ஏனைய பசு பாசங்களும் முதல்வனுக்குச் சேடமேயாமாயினும் அவை பொது இயல்பு பற்றிய சேடமாவதல்லது சிறப்பியல்பு பற்றிய சேடம் ஆகாமையின், இதனை வேறெடுத்தோதினர்.

இதனால் முத்திநிலையில் ஆன்மாவினது கிரியை நிகழுமாறும், அது முதல்வனது, கிரியையை இன்றி அமையாமையும் கூறப்பட்டன.

பொன்வாண்முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே யெங்குமாந் தன்மைபோன்—முன்வாண்
மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும் வரத்து.

(இ - ள்.) பொன் வாள் முன் கொண்மூவில் புக்கு=சூரியன் முன்பு முகிற்படலத்துள் மறைந்து (ஒளி விளங்காமலிருந்து)—ஒடுங்கி=(அம்முகிற்படலம் சிறிது நீங்கியவிடத்துத் தனது) ஒளி சுருக்கமாய்ச் சிறிதே விளங்கி—போய் அகல எங்கும் தன்வாளே ஆம் தன்மை போல்=அம் முகிற்படலத்தை வாயு தாக்க அதனால் அது சத்திமடங்கி விட்டு நீங்கியபோது அவ்வொளி தானே எங்கணும் விரிவாய் விளங்கு முறைமைபோல—உள்ளம் முன் மலத்தின் மறைந்து=ஆன்மாவும் முன்பு மலத்தில் மறைப்புண்டு



(அறிவு சிறிதும் விளக்கப் பெறாமற் கேவலப்பட்டு)—மற்று (ஒடுங்கி) உலகை உண்ணும்=(இறைவன் கூட்டியருளிய கருவிகளைக் கொண்டு) தன்னறிவு ஏகதேசமாய்ச் சிறிதே விளங்கிப் பிரபஞ்ச விடயத்தை அறிந்து அதில் அழுந்தும்—மலத்து இரித்து (எங்குமாய்) வாள் வரத்துச் செல்லும்=பின்பு முதல்வன் திருவருள் அம்மலசத்தியைக் கெடுத்தடக்கிய வழி அவ்வறிவே பூரணமாய் விளங்கிக் கப்பின்றி அம்முதல்வன் திருவடியைத் தலைப்பட்டு அந்த ஞேயத்தில் அழுந்தும் (எ - று.)

ஒடுங்கி எனவும் எங்குமாம் எனவும் உவமைக் கோதிய வினையைப் பொருளினுக்கூட்டி யுரை செய்யப்பட்டது. இது விளங்குதல் மாத்திரைக்கு ஏகதேசவுவமை என்பர் உலகையுண்ணும வரத்துச் செல்லும் என வேற்றுமையும் உடன் கூறினர். ஏகாரம் தேற்றம். முன்வாள் என்றதில் வாள் பிரகாசத்தையுடைய அறிவைக் குறித்தலால் ஆகு பெயர். இரித்து என்பது செயவெனெச் சத்திரிபு. மலத்து இரித்து=மலத்தை இரிக்க-வரத்துச் செல்லும்=விளங்கிச் செல்லும். மலம் நசித்தலாவது தனது மறைத்தற் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதல் மாத்திரையேயாம். இதனை இதற்கோதிய உவமையாலறிக

இதனால் நித்தமாகிய மலத்திற்கு நாசமுண்டாகுமாறும், அது நசித்தவழி அறிவு பூரணமாய் விளங்கி வியாபகத்தை யடையுமாறும் உவமைமேல் வைத்து விளக்கப்பட்டமை காண்க.

## தேவாரபாராயணத்தில் ஒழுங்கீனங்கள்.

சென்ற இருபது வருடங்களாக நம் தமிழ் நாட்டில் முன்னினும் அதிகமாகத் தேவாரபாராயணஞ் செய்யப்படுகின்றது. சிற்சில தேவார பாடசாலைகளும் நிறுவப்பெற்றன. இவை இப்போது தேவாரத் திருமுறைகளில் நம்மவர் வைத்திருக்கும் அன்பையும் அபிமானத்தையும் விளக்குகின்றன வெனினும், இப்போது செய்யப்படும் பாராயணத்தில் பல திருத்தங்கள் இன்றியமையாதனவாயிருக்கின்றன. இக்காலத்தில் தேவாரபாராயணஞ் செய்வோருள் பெரும்பாலார் தாங்கள் ஓதும் அருட்பாக்களின் பொருளைச் சிறிதளவாயினும் அறிந்து ஓதுவதில்லை. குருட்டுப்பாடஞ் செய்தோதுகிறார்கள். இவர்கள் அர்த்த ஞானமின்றி இராக ஞானமிருந்தாற் போதுமென் றெண்ணிக்கொண்டு இலக்கிய இலக்கணப் பயிற்சியும் சாஸ்திரப் பயிற்சியும் சிறிதுமின்றியே, இராகம் இழுக்கவும்

தாளம்போடவு மாத்திரம் கற்றுக்கொண்டு, தாங்கள் நெட்டுருப் பண்ணி வைத்திருக்கும் செய்யுட்கள் ஒவ்வொன்றையே நீண்ட நேரமாக இராகமிழுத் திழுத்துப் பாடிக் காலங்கழிக்கின்றார்கள். இவர்கள் பாடும் அருட்டிருப்பாக்களுக்கும் கீர்த்தனைகளுக்கும் வித்தியாசம் காண்பதரிதா யிருக்கின்றது. இவர்கள் தங்களுக்குள்ள இராகஞானத்தைக் காட்டிக் காட்டிப் பாடுகின்றார்களே யன்றி, தாங்கள் பாடும் பாக்களின் பொருளையுணர்ந்து மனமுருகப் பாடுகிறதில்லை. இவர்கள் "வயிறது குழியவாங்கல், அழுமுகங் காட்டல், புருவமேறல், சிரம் நடுக்குறல், கண்ணூடல், மிடறு வீங்கல், பையென வாயங்காத்தல், எயிறது காட்டல், வெள்ளை, காகுளி, கீழோசை" முதலிய குற்றங்களை இயன்ற வரையிலேனும் அகற்றிப் பாட முயல்வதில்லை. போதிய புலமையில்லாமையால் இவர்கள் கற்றவர் கழகத்தில் கல்லாதாரோ டொப்ப எண்ணப்படுகின்றார்கள். தேவாரத்தின்மீது வைத்த ஆர்வ மிகுதியால் ஜனங்கள் இவர்களிடத்திலுள்ள குறைகளை நோக்காமல் இவர்களை மிகவும் உபசரித்தலால் இவர்கள் தங்களை அதிகமாக மதித்துக்கொண்டு தங்களை உபசரிப்பவர்களுக்கு அதிக பிரயாசையைத் தருகின்றார்கள். நெஞ்சு நோமென்று பாடப் பயப்படுகிறார்கள். திருவிழாக் காலங்களில் சுவாமி எழுந்தருளுமுன் இவர்கள் பாராயணஞ் செய்ய எழுந்தருளுவதில்லை. சுவாமி பாதி மாடவீதி சென்றபிறகே இவர்கள் மிகவும் அருமையாக வாய்திறக்கின்றார்கள். இலக்கிய இலக்கணப் பயிற்சியின்மையால் பிழையறப் பாடுவதுமில்லை. பதங்களை யொன்றோடொன்று பிரிக்கத்தகாத விடங்களிலும் நடுப்பாதியிலும் பிரித்தும், சேர்க்கத்தகாத விடங்களிற் சேர்த்தும் பாடிப் பாராயணத்தை அவலமாக்கி விடுகிறார்கள். சிவபெருமான் திருவருள் பெற்ற பெரியோர்கள் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுத்திருந்தும், அவரவர்கள் தங்கள் தங்கள் மனம் போனபடியெல்லாம் பாடுகின்றார்கள்.

சென்னை முதலான நகரங்களில் இன்னார் தாம் தேவாரம் ஓதுதற்குரியரென்னும் வரம்பின்றி, மதுபானஞ் செய்வோர், புலாலுண்போர் தாசிகள் முதலானவர்களும் ஓதுவதும், அதனைச் சனங்கள் கேட்டுச் சந்தோஷிப்பதும் வழக்கமாயிருக்கிறது.

நம்மவர்கள் இக்காலத்திற் செய்துவரும் சமய சம்பந்தமான காரியங்களனைத்தும் இவ்வாறே பொருள் தெரியாமலும் ஒழுங்கீனமாகவும் செய்து வருவது இயல்பாய் வருவதனால், தேவார பாராய



ணத்தில் மாத்திரம் குறைகூறுவது மணற்சோற்றில் கல்லாராய்தலை யொக்கும். ஆயினும், நம்மவர்கள் இனி இயன்ற அளவிலாயினும் முற்கூறிய குறைகளை யகற்றிப் பாராயணஞ் செய்தும் செய்வித்தும் அதனாலாய பெரும்பயனை யடையுமாறு சிந்தித்து இதை வரையலானோம். இதுபற்றிப் பெரியோர் எம்மீது சீற்றங் கொள்ளற்க. சைவப் பிரசாரகர்கள் என்று வெளிவந்து பிரசங்கங்கள் செய்வோரும், தமிழ்ப்புலமை யுடையோரும் ஓதுவார்களைப்போல் ஒன்றுகூடிப் பாராயணஞ் செய்யத் தலைப்படில் முற்கூறிய குறைபாடுகள் நீங்கற்கேதுவாம். அன்றியும் சைவரெனப்படுவார் ஒவ்வொருவரும் தங்கட்கு இன்றியமையாத தேவாரபாராயணத்தை ஒருபோதும் கைவிடாதிருத்தல் வேண்டும்.

சுவாமி உற்சவங் கொண்டருளும் போது சைவர்கள் யாவரும் கூட்டம் கூட்டமாகக்கூடி வாயாரத் தோத்திரஞ் செய்தல் வேண்டும். இப்படித் தோத்திரஞ் செய்யுமாறு ஒவ்வொரு ஆலய தருமகர்த்தரும் சனங்களைப் பழக்கவேண்டும். இப்படிச்செய்வதைவிட்டு மற்றக் காரியங்களை மாத்திரம் செய்வது பெரும்பயன் றராது.

தேவாரம்.

முடிகள் வணங்கி மூவா தோர்கள் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானர மங்கையர் பின்செல்ல
பொடிகள் பூசிப் பாடுந் தொண்டர் புடைசூழ
அடிகளாரூ ராதிரை நாளா லது வண்ணம்.

---

## "மறுபிறப்பு" வாதம்.

(இந்து சாதனப் பிரசுரம்.)

இதனை ஒரு கிறிஸ்தவ குருவுக்கும் இங்கிலீஷ் வித்தியாசாலையிற் கற்கும் மாணாக்கனுக்கும் நடந்த விவாதத்தில் வைத்துக் காட்டுகிறோம்.

விவாதம்.

"மாணாக்கன் - ஐயா! இறந்துபோன உயிர்கள் இனி என்ன நிலையை யடைவார்கள்?

கிறிஸ்தவகுரு. மாணாக்க! நியாயத் தீர்ப்பு நாளில் மோட்சத்துக்கும் நரகத்துக்கும் அனுப்பப்படுவார்கள்.

மா. அப்படி அனுப்புகிறவர் யார்?

கி - கு. இரட்சகராகிய யேசுநாதர்.

மா. இரட்சகரென்று நீங்கள் புகழ்ந்து பேசுகிற யேசுநாதர்

162419
Q;23m211/N15 N15.6-7

எல்லா உயிர்களையும் ஒருங்கே இன்பம் அனுபவிக்கும்படி மோட்சத்துக்கு அனுப்பாமல் ஒரு பகுதியாரை மாத்திரம் மோட்சத்துக்கு அனுப்பிவிட்டு மற்றோரை எப்பொழுதும் வருந்தும்படி நித்திய நரகத்துக்கு அனுப்பலாமா? இது பட்சபாதமல்லவா.

கி - கு.* அப்படியன்று; அவர் மகா நீதியுள்ளவர். ஒருபோதும் பட்சபாதம் செய்யமாட்டார். சிலர் மோட்சத்துக்கும் சிலர் நரகத்துக்கும் போவது அவருடைய பட்சபாதத்தாலல்ல. அவரவர் செய்த புண்ணியபாவ கர்மமே அதற்குக் காரணமாயிருக்கிறது.

மா. எப்படி, அதை விவரமாய்ச் சொல்லும் பார்ப்போம்?

கி - கு. புண்ணியஞ் செய்தவரை அதன் பயனாகிய இன்பம் அனுபவிக்கும்படி மோட்சத்துக்கு அனுப்புவார். பாவஞ்செய்தவரை அதன் பயனாகிய துன்பம் அனுபவிக்கும்படி நரகத்துக்கு அனுப்புவார்.

மா. ஏன். இந்த வேற்றுமை பாராமல் எல்லாரையும் ஒருங்கே மோட்சத்துக்கு அனுப்பிவிட்டால் அவருக்கு அதனால் வந்த கஷ்டமென்ன?

கி - கு. பிள்ளாய்! நீ தெரியாமற் சொல்லுகிறாய். கர்த்தர் இரக்கமும் நீதியுமுள்ளவர். தம்முடைய மனம் போனபடியல்ல; அவரவர் செய்த கர்மத்தின் பயனை அவரவர்க்குக் கொடுக்கிறார். அதுவே நீதி.

மா. அப்படியானால் மறுமையில் அனுபவிக்கப் போகிற இன்பத்துக்கும் துன்பத்துக்கும் நாம் அடையப்போகிற மோட்ச சரீரத்துக்கும் நரக சரீரத்துக்கும், இம்மையிற்செய்த புண்ணிய பாவமே காரணமென்று சொல்லுகிறீரா?

கி - கு. ஆம். மறுமையிற் சரீர வேற்றுமையும் இன்பத் துன்ப வேற்றுமையும் புண்ணிய பாவகர்மங் காரணமாகவே வரும்.

மா. கர்மங் காரணமாகவன்றி அவர் தம்முடைய மனம் போனபடி ஒன்றும் செய்யமாட்டாரா?

கி - கு. ஒருநாளும் அப்படிச் செய்யமாட்டார். அவர் மகா நீதியும் இரக்கமு முள்ளவரென்று முன்னமே சொல்லிவிட்டேன். நீ அதை யோசியாமல் ஏன் அடிக்கடி மாறிப் பேசுகிறாய்

மா. ஐயா! நான் மாறிப் பேசுவது இருக்கட்டும். நீர் மாறாமல் இப்பொழுது சொன்ன இந்தச் சொல்லை முடிவுவரையும ஒதுக்கிச் சொல்லுவீரா?



கி - கு. நான் ஒருபோதும் மாறிப் பேசமாட்டேன். நீ கேட்கிறதைக் கேள். சொல்லுகிறேன்.

மா. இன்பத்துக்கும் துன்பத்துக்கும் காரணம் கர்மமேயென்று நீர் சொன்னீரல்லவா?

கி - கு. ஆம், சொன்னேன்; அதுவே எனது கருத்து.

மா. அப்படியானால் நீரும் நானும் உலகத்திலுள்ள மனிதர்களும் அடைந்திருக்கும் கூன், குருடு, மூடம் முதலிய சரீரபேதங்களுக்கும் செல்வம, வறுமை, இன்பம், துன்பம், உயர்வு, இழிவு என்பவைகளுக்கும் காரணம் என்ன?

கி - கு. அதற்கு ஒரு காரணமும் இல்லை.

மா. காரணமில்லாமல் அநீதியாய்க் கடவுள் இப்படிச் செய்வாரா?

கி - கு. அநீதியாய்ச் செய்யமாட்டாரென்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.

மா. அப்படியானால் அதற்குக் காரணமென்ன?

கி - கு. அதைப்பற்றி ஒன்றும் சொல்ல என்னால் முடியவில்லை. அது தேவசித்தம். அவரை ஏன் இப்படிச் செய்தீரென்று நாம் கேட்கக்கூடாது.

மா. இதுவரையிலே கேட்டதற்கெல்லாம் விடை சொல்லிக்கொண்டு வந்த நீர் இப்பொழுது முட்டுப்பட்டுக்கொண்டு மெல்ல நழுவப் பார்க்கிறீர்! இது கியாயந்தானோ!

கி - கு. தம்பி! என்னை நீ விற்பூட்டாதப் பூட்டிக்கொண்டாய். எங்கள் கிறிஸ்து மார்க்கம் இந்தக் கேள்விக்கு விடை வைத்திருக்கவில்லை. அதுவேயன்றி என்மேல் வஞ்சகமல்ல. என்னை நீ அதிகம் நெருக்கவேண்டாம். இந்தமட்டில் விட்டுவிட்டால் நான் மெல்ல ஓடிப்போகிறேன்.

மா. ஐயா! நீர் பேச்சு மாறக்கூடாதென்று நான் முன்னமே கேட்டுக்கொண்டேன். அப்படியிருக்க நீர் மாறிப் பேசலாமா?

கி - கு. முட்டுவந்தால் என்ன செய்யலாம். போனது போகட்டும்; இனி மாறாமற் பேசுகிறேன்.

மா. இன்பத் துன்பங்களுக்குக் கன்மமே காரணமென்று முன் சொன்னீரல்லவா?

கி - கு. ஆம், சொன்னேன்.

மா. இப்பொழுது நாம் அநுபவிக்கிற இன்பத் துன்பங்களுக்குக் காரணம் யாதாயிருக்குமென்று நினைக்கிறீர்?

மதாபிமானத்தை விட்டு நியாயமாய் உண்மை சொல்லும் பார்ப்போம்.

கி - கு. புண்ணிய பாவ கர்மங்களாகத்தா னிருக்கவேண்டும்.

மா. அதை நாம் எப்பொழுது செய்திருப்போ மென்று நினைக்கிறீர்?

கி - கு. முற்பிறவியிற்றான் செய்திருக்கவேண்டும்.

மா. அப்படியாயின் முன்னே ஒரு பிறவியிருந்ததாக ஒத்துக்கொள்ள வேண்டுவது அவசியந்தானா?

கி - கு. அவசியமாகத்தா னிருக்கிறது.

மா. ஐயா! நீர் முன்னே நழுவிப் பேசிய காரணமென்ன?

கி - கு. தம்பீ! இப்பொழுது நாம் அநுபவிக்கிற இன்பத் துன்பங்களுக்குக் காரணம் முன்செய்த கர்மமென்பதை ஒத்துக்கொண்டால் முன்னும் ஒரு பிறவி யிருந்ததென்றும் ஒத்து "மறுபிறப்பு" உண்டென்று ஒத்துக்கொள்ள வேண்டி வரும். அதற்குப் பயந்தே நான் மெல்ல நழுவப் பார்த்தேன். நீ விடாது பிடித்துக் கொண்டாய். பின் என்ன செய்யலாம். மன உண்மையை ஒத்துப் பேசினேன்.

மா. மறுபிறப்பு உண்டென்பது உமக்கும் சம்மதந்தானா? தெளிவாய்ச் சொல்லும்.

கி - கு. சம்மதியாமல் முடியுமா. சம்மதிக்கத்தான் வேண்டியிருக்கிறது.

மா. எவ்விதமாய் இதை நீங் கண்டுபிடித்தீர்? அதை ஒளியாமற் சொல்லும்.

கி - கு. நியாயத்தீர்ப்பு நாளின் பின் அநுபவிக்கப் போகிற மோட்ச நரக இன்பத் துன்பங்களுக்கு இப்பொழுது செய்கிற புண்ணிய பாவ கன்மங் காரணமாய் வருமானால், இப்பொழுது அநுபவிக்கிற இன்பத் துன்பங்களுக்கு முன்செய்த கர்மமே காரணமென்பது பட்டப்பகல்போல் வெளியாய் இருக்கிறதே. இதை யாரால் மறுக்க முடியும்.

மா. கிறிஸ்தவருள் உம்மைச் சற்று உண்மை நாடுபவராகக் கண்டேன். நல்லது நான் பாடம் படிக்கப் போகிறேன்.

கி - கு. நல்லது அப்படியே செய். நேரமாகிறது. நானும் போய் வருகிறேன்.

இங்ஙனம் கன்ம உணர்ச்சி யுடையார்க்கு மறுபிறப்பின் உண்மை இலேசாற் புலப்படுதல் கண்டுகொள்க.

# கடவுள் காலங்கடந்தவர்.

(இந்து சாதனப் பிரசுரம்.)

கடவுள் காலத்தால் தாக்குண்டு விகாரம் எய்துவாரல்லர். ஆதலின் அவர் காலங்கடந்தவர் எனப்படுவர். காலத்தால் தாக்குண்டு விகாரம் எய்துவன எல்லாம், தொடக்கம் உடையனவாகும். தொடக்கமுடைய பொருள்களே காலங் கழியக் கழிய வளர்ந்தும் தளர்ந்தும் திரிபுறுதலை நாம் பிரத்தியட்ச வாயிலாகக் காண்கின்றோம். தொடக்கம் இல்லாத பொருள் எப்போதும் உளதாகலின், அதன் பால் வளர்ச்சி தளர்ச்சிகளும் உற்பத்தி நாசங்களும் கேட்கப்படுவது கூடாது. கடவுள் தொடக்கம் இல்லாதவராகலின் அவருக்கு உற்பத்தி நாசங்களு மில்லை, வளர்ச்சி தளர்ச்சிகளு மில்லை. ஆகவே அந்த உற்பத்தி நாசங்களுக்கும் வளர்ச்சி தளர்ச்சிகளுக்கும் காரணமாகிய காலதத்துவம் கடவுள் அளவில் தொழிற்படுதல் சிறிதும் இல்லை என்பது நன்றாக நிறுத்தப்படும்.

கடவுள் காலங்கடந்தவர் எனவே, அவர் காலத்துக்கு முற்பட்டவர் என்றும், எனவே காலம் அவருக்குப் பிற்பட்டதென்றும், எனவே காலத்துக்கு ஒரு தொடக்கம் உளதாதல் வேண்டும் என்றும் நாம் அநுமிக்கலாமன்றே. இங்ஙனம் அநுமித்தால் காலம் அநாதி நித்தியமா யுள்ளதென்னுங் கொள்கை முரணுற்றழிந்திடாதுகொல் எனச் சிலர் ஆசங்கித்தல் கூடும். இந்த ஆசங்கையை நீக்கிக்கொள்வதற்கு, காலம் ஆவது யாது என்று நாம் நுணுகி ஆராய்தல் வேண்டும். காலம் அநாதி நித்தியமா யுள்ளதாயினும், அது எந்த அவசரத்திலே யாதொரு சைதன்னிய சத்தியின்கண் தோன்றுதற்குரியதென்பதை நாம் நுண்ணுணர்வு கொண்டு சீர்தூக்கி நோக்குதல் வேண்டும். இதன் தோற்றத்தைச் சித்தாந்த சாஸ்திரங்கள் வரன் முறையாக எடுத்து விளக்கும். சித்தாந்த சாஸ்திரக் கொள்கையின்வழிக் காலதத்துவம் அசுத்த மாயைக்குரியது. இந்த மாயையின்கண் சிருட்டி ஆரம்பமாகும்போது முதற்கட்டோன்றுவன காலம், நியதி, கலை ஆகிய மூன்றுமாம் என்றும், இவற்றுட் கலையிலிருந்து வித்தை அராகங்கள் தோன்றி, இவ்விரண்டன் வாயிலாக ஏனைய தத்துவதாத்துவிகங்கள் தோன்றுவன வென்றும் சித்தாந்த சாஸ்திரங்கள் விளக்கும். எனவே, காலம் அநாதி நித்தியமாயுள்ளதாயினும் அதன் தோற்றமென்றெடுத்துப் பேசப்படுவது, அது பரமசைதன்னிய சத்தியின்

கட்டோன்றி விகற்பங்கட்கெல்லாம் வித்தாகி நின்று தொழிற்படும் அவசரமாத்திரையேயாம். காலமும் ஆதியந்த மில்லாமைபற்றி வரைவுகடந்த பொருள் எனப்படுதல் கூடுமாயினும், அதன் தொழிற்பாடாகிய விகற்பங்களை நோக்கும் வழி, அது ஒருவாறு வரையின் பாற்பட்டதேயாகும். மாயைக்குரியதும் வரையின் பாற்பட்டதுமாகிய இந்தக்கால தத்துவம் அநாதிக் கண்ணதாயினும், இது பயன்படுவதெல்லாம் வரைவு பாடுகொண்டு தொழிற்படும் அசுத்தமாயா புவனவாசிகளுக்கு மாத்திரமே யாதலால், இதன் வரைவுபாட்டைச் சிறிதும் வேண்டப்பெறாத மாயாதீதராயுள்ள முழுமுதற்றலைவராகிய கடவுள் இந்தக் காலத்தாற் சிறிதும் தாக்குண்பதில்லை. ஆதலின், அவர் காலங்கடந்தவர் எனப்படுவர். சுத்தமாயா புவனவாசிகள் தாமும் அசுத்த காலத்தாற்றாக்குண்பதில்லை யென்பது சுருதிசம்மதமுமாகும். இந்தக் காலத்தின் வரைவுபாடு பற்றியே வரைவுபாடிகந்த முத்திப்பேற்றை நாம் இது காரணம் அளத்தல் கூடாதென்றும், எனவே 'அநாதியான ஆன்மாக்கள் இதுகாறும் முத்தி சேராமை எங்ஙனம்' என்று நாம் வினவுதல் அமையாதென்றும் மேதாவியர் எடுத்து விளக்குவர். அதாவது சுத்தமாயைக்கும் அப்பாற்பட்ட முத்திப்பேறு அசுத்த மாயைக்குட்பட்ட காலதத்துவங்கொண்டு கணித்தற்குரியதன்றாம் என்றபடி.

இஃதொக்கும் :—ஆயினும் காலமே விகற்பங்கட்கெல்லாம் காரணமாயின், அநாதியாயுள்ள ஆன்மாக்களிடத்தே காலந்தோறும் விகற்பங்கள் காணப்படுவதெங்ஙனம் என்பீராயின், ஆன்மாக்கள் அநாதியாயுள்ளாராயினும், அவர்கள் காலதத்துவத்துட்படுதலாலே, அவர்கள் பால் விகற்பங் காணப்படுவதாயிற்றென்க. அநாதியாகிய பொருள் காலதத்துவத்துட்படுமாறெங்ஙனமெனின், ஆன்மாக்கள் மாயாபந்த முடையராதலின், அந்த மாயையின் காரியமாகிய காலத்தால் தாக்குண்டு, அந்தத் தாக்கத்தளவாகிய மாற்றம் எய்துவர். கடவுள் மாயாபந்தம் சிறிதும் இலாதலின், அவர் காலத்தால் தாக்குறுவதில்லை என்க. ஆன்மாக்கள் காலத்தால் தாக்குண்டிடுவாராயினும், அத்தாக்கம், அவர்களுக்குக் காலந்தோறும் கொடுக்கப்படும் தநுகரண புவன போகங்களாகிய தோற்றமுடைய பொருள்களிற் காணப்படும் மாற்றங்களுக்கு மாத்திரமே காரணமாவதன்றி, நித்தியமாயுள்ள ஆன்மாவை வளர்த்ததுமில்லைத் தளர்த்ததுமில்லை, தநுகரண



புவனங்களில் விகற்பங் காணுமுகத்தால் அவற்றோடு சம்பந்தப்பட்டுள்ள ஆன்மா அவ்விகற்பத்தளவாகக் கன்மங்களை நுகர்ந்து படிமுறையே திருவருளைத் தரிசித்தற்குரியதாகும். இந்தத் தரிசனம் காரணமாக அவர்களைப் பந்தித்துள்ள பாசபந்தம் வலி குன்றிடும். இது குன்றவே அவர்களுக்கு முத்திப்பேறுண்டாம். காலத்தால் தாக்குண்டிடும் தநுகரண புவன போகங்கள் ஆன்மாக்களுக்குப் பாசநீக்கத்துக்கும் திருவருட்டரிசனத்துக்கும் ஏதுவாமாயினும், இவற்றால் எய்தற்குரிய முத்திப்பேறு காலத்தாற் சித்தித்தற்குரியதல்ல. அது காலங்கடந்த திருவருட்பதிவாகிய சத்திநிபாதத்தால் மாத்திரமே எய்துதற்குரியதாம். இந்தப் பதிவுக்குக் காலத்தால் தாக்குண்பனவாகிய தநுகரணாதிகள் உபகார கருவிகள் மாத்திரமேயன்றிப் பிறிதல்ல. நோய் நீக்கத்துக்குப் பத்தியங் காத்தல் உபகார மாத்திரையாவதன்றிக் காரணமாகாமைபோலென்க. திருவருட் பதிவுக்குக் காரணம் காலங்கடந்த பரதரிசனமன்றிக் காலத்துட்பட்ட தநுகரணாதிகளன்றென்பது தத்துவ நூலாராய்ச்சியுடையார் எல்லாம் சாதித்தற்குரியது. காலங்கடந்த பரதரிசனத்தைக் காலங்கொண்டு அளத்தல் சிறிதுங் கூடாதென்க.

---

## இயற்பகை நாயனார் புராணம்.

செய்தவர் வேண்டிய தியாதுங் கொடுப்பச் சிவன் றவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி யைத்தருகென் றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன் வாய்ந்த பெரும் புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட் டினத்து வியற் பகையே.

சோழமண்டலத்திலே, திருஞான சம்பந்தப் பெருமானார் திருவவதாரஞ் செய்தருளிய சீகாழிப் பதிக்குத் தென்கிழக்கில், பட்டினத்தடிகள் திருவவதாரஞ் செய்யப் பெற்றதும், காவேரி நதி சமுத்திரத்தினோடு கூடி அதைப் பரிசுத்தப்படுத்துங் காரணத்தால் காவேரி சங்கமம் எனப் பெயரிய விசேட தீர்த்தம் பொருந்தியதும், தேவாரத் திருப்பதிகம் பெற்றுள்ளதும், காவிரிப்பூம்பட்டினம் எனப் பெயரியதுமாகிய திவ்விய சிவதல மொன்றுண்டு. அதில் வைசியர் குலத்தில், குருலிங்க சங்கம பத்தியினாலும் செல்வத்தினாலும் கொடையினாலும் தமக்கு இணையில்லாத பெரியாரொருவர் கற்பினால் தமக்கிணையில்லாத மனைவியோடுகூடி இல்லறம் புரிந்து வந்தனர். அவர் சிவ வழிபாடொன்றே உயர் வழிபாடென்

பதையும், அச்சிவ வழிபாடு குருலிங்க சங்கம வழிபாடேயா மென்பதையும், எல்லா உயிர்களும் சிவபெருமானுக்கு அடிமைகளென்பதையும் உணர்ந்து, தமது உடல், பொருள், ஆவி யாவும் சிவபெருமானார்க்கே அர்ப்பணஞ் செய்வாராய், சிவனடியார்களைக் கண்ட மாத்திரத்திலேயே அவர்களைச் சிவபெருமானாகவே மதித்துப் பூசித்து அவர்கள் கேட்பனவற்றை இல்லையென்னாமற் கொடுத்து வழிபட்டுக்கொண் டிருந்தார்.

அவர் சிவனடியார்களிடத்தில் வைத்திருந்த அன்பு வஞ்சகமற்று அளவு கடந்திருந்தமையால், அவர் அவர்களுக்குச் செய்த வழிபாடுகளும் எல்லையில்லாதனவா யிருந்தன. “அன்புடையார் என்புமுடையர் பிறர்க்கு” என்னும் அன்பிலக்கணத்திற்கு அவர் இலக்கியமா யிருந்தனர். சிவனடியார்களே அவருக்கு அம்மையும் அப்பனுமாயும் மாமனு மாமியுமாயும். மற்றுமுள்ள சுற்றத்தவரும், மாடு, வீடு, மணி முதலியனவாயும் இருந்தார்கள். சிவனடியார்கள் சொல்வனவெல்லாம் அவருக்கு மறைமொழியாக விருந்தன. ஆதலால், சாதி, குலம், பிறப்பு முதலியவற்றை நோக்கி, இன்னார் இன்னாரிடத்தில் இன்னஇன்ன தன்மையா யொழுகுதல் வேண்டுமென்னும் உலகியல், சிவனடியார்களை நோக்க அவருக்குப் பெரும் பகையா யிருந்தது. அதுபற்றி அவருடைய பந்துக்கள் ஊரவர் முதலாயினோர் அவரைப் பகைத்தனர். பலர் தம்மைப் பகைத்துப் பலகாலும் நிந்தித்தாலும், அதனால் அவர் சிவனடியார்களிடத்தில் வைத்த அன்பு அணுவளவும் குறைபட்டிலது. அவர் உலகியலைப் பகைத்துச் சிவனடியார் பூசைசெய்த காரணத்தால் அவரை உலகவர் பைத்தியம் பிடித்தவன் என்றும் இயற்பகை என்றும் அழைப்பாராயினர்.

அவரைப்போலவே அவர் மனைவியாரும் பத்தாவுக்கேற்ற பதிவிரதையாய் அவரையே பரதெய்வமாகவும், அவர்சொல் உலக நடைக்கு எவ்வளவு மாறாயிருப்பினும், அதை வேத வசனத்தினும் சிறந்ததாகவும் மதித்தொழுகுவாரா யிருந்தனர்.

அவர்களிருவரும் இவ்வண்ணமிருந்து சிவனடியார்களைப் பூசித்தலே இல்லறத்தார் செய்யக்கடவதாகிய நல்லறமெனப் பேணி வாழ்நாளில், அப்பூசையின் பயனாக நாளடைவில் அகப்பற்றும் புறப்பற்றுமாகிய இருவகைப் பற்றும் அவர்களை விட்டு நீங்குவதாயிற்று. பற்று நீங்குந்தோறும் இருவினை யொப்பும் மல



பரிபாகமும் மேலிடுவனவாயின. அதனால் இறைவனார் அவர்களை யாட்கொண் டருளுங் காலம் சமீபித்தது. *சமீபித்தலும், வேதங்களாலும், மனவாக்குக் காயங்களாலும் எட்டப்படாத துரியாதீதப் பழம் பெரும்பொருளா யிருக்கும் தம்மை ஆன்மகோடிகள் ஊனக் கண்களாலும் கண்டு வணங்கி யுய்யவேண்டுமென்னும் *பரமகாருணியத்தினால் திருவம்பலத்தின் கண்ணே ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளும் இறைவனார் இயற்பகை நாயனாருடைய அன்பு வலையிற் சிக்குண்டு, அவர் சிவனடியார்கள் எது கேட்டாலும் இல்லையென்னாமல் கொடுக்கும் பேராற்றலுடைமையை உலகத்தார்க்குப் புலப்படுத்தவேண்டி, நீரின் குளிர்ச்சி நீரைவிட்டும், அனலின் வெம்மை அனலைவிட்டும் நீங்காதவாறு போலத் தம்மை விட்டு எக்காலத்தும் பிரிதலில்லாத தாதான்மியமாய்க் கூடியிருக்கும் உமாதேவியாரைப் பிரிந்து, ஒரு பிராமணர் வடிவங்கொண்டு, திருமேனியிலே ஒருபால் திருநீறு பிரகாசிக்கவும், மற்றொருபால் தாசிகளின் கலவைச் சாந்தும் நகக்குறியுமுடன் தூர்த்தவேடம் தோன்றவும் நாயனார் திருமாளிகைக் கெழுந்தருளினர்.

சிவபெருமான், தாமொரு காமுகன் வேடம்பூண்டு, கள்ளமும் கபடமுமற்ற ஒருவரது கற்பிற்சிறந்த காதலியைத் தமக்குக் கொடுக்குமாறு கேட்கவேண்டிச் செல்வதை அறப்பெருஞ் செல்வியாகிய உமாதேவியார் அறியின் சிற்றங்கொள்வர் என்னுங் காரணத்தால் அவ் வெம்மம்மையாருக்குத் தெரியாமலோ, அவளன்றித் தாம் அசையவுமாட்டாத தன்மையால் அவ்வம்மையார் அறிந்தேயோ, அத்தகைய தூர்த்த வேடம் பூண்டு, காவிரிப்பூம் பட்டினத்து வீதி வழியாக நடந்து சென்று, இயற்பகை நாயனார் திருமாளிகைக் கெழுந்தருளினார். இயற்பகை நாயனார் அவரைத் தரிசித்து அவர் திருவடிகளைச் சிரசிற் சூட்டிப் பணிந்து அஞ்சலித்து நின்று “ஐயரே, தேவரீர் இங்கெழுந்தருள அடியேன் என்ன புண்ணியம் செய்தேன். என்பாக்கியமே பாக்கியம். என்தவமே தவம். அடியேன் உய்யுமாறு செய்யவேண்டிய குற்றேவல்களுக்குக் கட்டளையிட்டருளுக” என்றனர். ஐயர், “நீர் சிவனடியார்கள் யாது வேண்டினும் இல்லையென்னாது கொடுக்கும் பெருங்குணமுடையீரென்பதைப் பிறர் சொல்லக்கேட்டு உம்மிடம் ஒரு பொருளை நாடி வந்தோம். நீர் அதைக்கொடுக்க இசைவீராயின் யாம் அதைச் சொல்ல இசைவோம்” என்றனர். பூசுநீறுபோல் உள்ளும் புனிதராகிய நாயனார் “என் ஐயரே, எத்தகைய அரிய

பொருளாயினும் ஆகுக. அது அடியேனிடத்துள்ளதேல் சிவனடியார்களுக்குச் சொந்தமாம். இதிற் சந்தேகம் இல்லை. ஆதலால், தேவரீர் விரும்பியதைச் சந்தேகமின்றிக் கேட்டருளுக" என்றனர். ஐயர் மீட்டும் நாயனாரைப் பார்த்து, "அன்பரே, எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவ மென்ப திழுக்கு என்பர் மேலோர். ஆதலால் யாம் விரும்பியதை அவசரப்பட்டுக் கேட்டால் பின்னால் எம் கதி யாதாகுமோவென்று பயப்படுகின்றோம். இவன் கேட்கத்தகாததைக் கேட்கிறான் என்று எம்மை நீர் தண்டித்தாலும் தண்டித்து விடக்கூடும். ஆதலால் யாம் விரும்பியதைக் கேட்ட பிறகு நீர் எம்மீது கோபிக்காமல் கொடுக்கக் கூடுமானால் அதைச் சொல்லுவோம்" என்றனர். நாயனார், "சிவசிவ, அடியேனுடைய உடல் பொருளாவி யாவும் சிவனடியார்களின் உடைமையாமெனின், அவர்கள் கேட்கற்பாலன இவை, கேட்கத்தகாதன இவை யென்னும் பாகுபாடும் உண்டோ; இல்லை, இல்லை; தேவரீருக்கு வேண்டியதைச் சர்வ சுதந்திரத்தோடும் கேட்டருளுக" என்றனர். ஐயர் பின்னும் நாயனாரை நோக்கி "அன்பரே, யாம் விரும்பிக் கேட்பதை ஒருகால் நீர் மறுக்காமல் கொடுத்தாலும் கொடுக்கலாம். அதற்கு உமது மனைவியும் இசையவேண்டுமே" என்றனர். நாயனார் "சுவாமீ, என் மனைவி பதிசொற் கடவாத பாவை. கற்பிற் சிறந்தவர்களாகக் கருதப்படும் அருந்ததி முதலிய மாதரும் இவளுக் கிணையாகார். வானம் துளங்கி மண் கம்பமாகி மாள்வதாயினும் என் மனைவி என் சொல்லைக் கடவாள். ஆதலால் தேவரீருக்கு வேண்டியதைத் தாராளமாய்க் கேட்டருளலாம்" என்றனர். வேதிய வேடத்தர், "யாம் அத்தகைய சிறப்பு வாய்ந்த உமது காதலியை வேண்டியே உம்மிடம் வந்தோம். உமக்குக் கூடுமானால் கொடுக்கலாம். இல்லாவிடில், எம்மைப் பேசாமல் விட்டுவிடும்" என்றனர். பாசப்பற்று நீங்கப் பரசிவத்தையே பெரும்பற்றாகப் பற்றிவாழும் தூயமனத் தொண்டனார், அவர் தம்மிடம் இருந்த பொருளையே கேட்டதற்கு மிகவும் சந்தோஷித்து, "சுவாமீ, தேவரீர் கேட்டருளியது என்னிடத் துள்ளதே. இச்சமயத்திற் பயன்பட வேண்டியே இறைவனார் இப்பேற்றை எனக்கு முன்னமே தந்தருளியிருக்கின்றார். இதோ கொண்டுவந்து தருகிறேன்" என்று கூறி விரைந்து உள்ளே சென்று தமது பத்தினியாரை யணுகி, "என்னை வேதவிதிப்படி மணந்து இதுகாறும் எனது அருமருந்



தன்ன கற்பிற் சிறந்த காதலியாயிருந்த பெண்கள் நாயகமே, இன்று நான் உன்னை இந்த மெய்த்தவச் சிவனடியார்க்குக் கொடுத்து விட்டேன். இனி உன்னிடத்தில் எனக்கு எவ்விதமான உரிமையுமில்லை. நீ இவருடன் செல்லக்கடவாய்" என்றனர். எவரிடத்தும் எக்காலத்தும் கேட்கப்படாத அத்தகைய கட்டளையைத் தமது கணவனாரிடங் கேட்டவுடன் அவர் பத்தினியார் ஒன்றுந் தோற்றாது திகைத்து நின்று, பின் தெளிந்து, தமது கணவனாரை நோக்கி, "என் பிராண நாயகரே, அடியேனுக்குத் தேவரீர் இன்று அருளிச் செய்வது இதுவாமாகில், அடியேன் தேவரீருடைய கட்டளையின்படி யன்றி என் இச்சையின்படி செய்வதும் வேறுளதோ" என்று கூறித் தமது ஒப்பற்ற கணவனார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். நாயனார் அவர் தம் மனைவியாரென்பதை மறந்து, தம்பிடம் எழுந்தருளிய சிவனடியாருடைய பத்தினியாராக மதித்தும், தமது கட்டளையை மறுக்காமல் இசைந்ததற்குச் சந்தோஷித்தும் அவர் திருவடிகளில் வீழ்ந்து பணிந்தார். நாயனார் அவ்வாறு வணங்குதலும், உலகத்தில் எவ்விடத்தும் காணப்படாத அவ்வணக்கத்தைத் தம் கணவனாரிடம் கண்ட அம்மையார் அதிசயித்து வெருண்டு, தம்மை வேண்டி வந்த சிவனடியாரிடம் சென்று, அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்து நின்றார். நாயனார் தம் தவம் பலித்ததென்று எல்லையற்ற இன்பக் கடலில் மூழ்கி, அவ்வறவாழி யந்தணரைப் பணிந்து "சுவாமீ, அடியேன் செய்ய வேண்டிய குற்றேவல் இன்னும் ஏதேனும் இருந்தால் கட்டளையிட்டருளல் வேண்டும்" என்று பிரார்த்திப்ப, அந்தணர், "செட்டியாரே, நீர் இப்போது உம்முடைய மனைவியைக் கொடுத்துவிட்டது ஒரு பெரிய காரியமன்று. இச்செய்தி உமது பந்துக்களுக்கெட்டுமாயின் அவர்கள் சூழ்ந்து வந்து எம்மைக் கொன்று போடுவார்கள். ஆதலால் உமது சுற்றத்தார் பயமின்றி யாம் இவளைக் கொண்டு போகக்கூடிய வரையில் நீர் எனக்குத் துணையாய் வருதல் வேண்டும்" என்றனர். அதைக்கேட்டு நாயனார் "இவரருளிச்செய்யு முன்னமே இவ்வேலை நானே முற்பட்டுச் செய்ய வேண்டும். இவர் சொல்லும் வரையில் காலம் தாழ்த்தது பெரும் பிழை" என்று தம்மைத்தாமே நொந்து, உடனே ஆயுதசாலைக்குப் போய் போர்க்கோலங்கொண்டு, வாளும் பரிசையும் ஏந்திக் கொண்டு, ஐயரிடத்திற்கு வந்து அவரை வணங்கி அவரையும்

மனைவியாரையும் முன்னே போம்படி செய்து தாம் பின்னே தொடர்ந்து சென்றார்.

இதனை நாயனார் சுற்றத்தார்களும் அவர் மனைவியார் சுற்றத்தார்களும் அறிந்து "இயற்பகை பயித்தியத்தினால் தன் மனைவியைக் கொடுத்தால் அவளை ஒரு பார்ப்பான் எப்படிக்கொண்டு போகலாம்" என்று கூறிக்கொண்டு தங்கள் மரபுக்கு வரும் பழியை நீக்கிக்கொள்ளும் பொருட்டு, வில் வாள் முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு அதிதீவிரமாகப்போய், வேதியரைநெருங்கி ஆரவாரித்து, "அடா, அயோக்கியப் பயலே, எங்கள் குலப் பெண்ணை விட்டு ஓடிப் பிழைக்கிறாயா, அல்லது இவ்விடத்திலேயே மடிகிறாயா" என்று கூச்சலிட்டு அப்புறம் அடியெடுத்து வைக்காதபடி வளைந்துகொண்டார்கள். ஐயர் அவர்களுக்கு மிகவும் அஞ்சினவர்போல் கைவிதிர்த்து நடுநடுங்கி அபிநயித்து அம்மையாரை வெருண்டு வெருண்டுப் பார்த்தனர். அம்மையார் "சுவாமி, பயப்படவேண்டாம். இயற்பகையார் இவர்களெல்லோரையும் வெல்வார்" என்றனர். நாயனார், "சுவாமீ, அஞ்சவேண்டாம். இவர்களியாவரையும் இந்தக் கணமே எமலோகத்திற்கனுப்பிவிடுவேன்" என்றுகூறி அங்கு வந்தெதிர்த்த சுற்றத்தவர்களை நோக்கி "நீங்கள் ஒருவரும் இங்கு நில்லாமல் ஓடிப்பிழையுங்கள். அப்படிச் செய்யாவிடில் என் வாளுக்கிரையாவீர்கள்" என்றனர். அவர்கள் "அடா இயற்பகை, நீ என்ன காரியம் செய்தாய், ஊரார் நம்மைப் பழிப்பரென்பதையும், மாற்றார் நகைப்பரென்பதையும் நீ எண்ணவில்லை போலும், நீ வாட்போரில் சமர்த்தனானால் அதை உன் மாற்றாரிடமல்லவோ காட்டவேண்டும். அப்படிக்காட்டுவதை விட்டு மனைவியை ஒரு பார்ப்பாரப் பயலுக்குக் கொடுத்துவிட்டு, மானங்காக்க வரும் எங்களிடத்திலா காட்டுவது. உன் செய்கை வெகு அழகாயிருக்கிறது. மானமழிந்து உயிர் வாழ்தலினும் சாதலே நன்று. நாங்களெல்லோரும் மடிந்தாலும் மடிவோமேயன்றி உன் அக்கிரமச் செயலுக்கு உடன்படோம்" என்று போகவிடாமல் தடுத்து நின்றார்கள். சிலர் நாயனாரை வணங்கி வேண்டினார்கள். சிலர் அவரை யிறுகப்பிடித்துக்கொண்டார்கள். சிலர் அவர் பத்தினியார் கையைப்பற்றி இழுத்துக்கொண்டு போகத் தலைப்பட்டார்கள். சிலர் வேதியரைக் கழுத்தைப்பிடித்து நெட்டித் தள்ளினார்கள். நாயனார் அடங்காக் கோபங்கொண்டு சிங்கம்போற் பாய்ந்து, இடசாரி வலசாரியாக மாறிமாறிச் சுற்றித் தம்மை எதிர்த்தவர்



களுடைய தலைகளையும் தோள்களையும் கால்களையும் துணித்து வீழ்த்தி பின் ஒவ்வொருவராய் வந்தவர்களையும் கொன்று, மேல் எதிர்ப்பவரொருவருமின்றி யுத்த களத்தில் உலாவினார். இவருடைய வீரம் யாரால் விளம்புந்தகையதாம்!

அதன் பின், நாயனார் ஐயரை நோக்கி "சுவாமீ, தேவரீர் அஞ்சா வண்ணம் இந்தக் கானகத்தைக் கடக்கும் வரையில் துணையாக வருகிறேன்" என்று கூறி அவரைத் தொடர்ந்து சென்றார். சர்வான்மாக்களுக்கும் தோன்றாத் துணையாயிருக்கும் பாங்கருணைத் தடங்கடலாகிய இறைவனார், நாயனாரைத் துணையாகக் கொண்டு, அவர் பத்தினியார் மீது மிகவும் மோகங்கொண்டவர்போல் அவரைத்திரும்பித் திரும்பிப் பார்த்துச் செல்ல, அவ்வருட் பெருங்கடலை நோக்கி அன்பெனுமாறு சென்றதென நாயனார் மனமகிழ்ந்து அவ்விருவர் பின்னே சென்றனர்.

இவர்கள் மூவரும் திருச்சாய்க்காடு என்னுஞ் சிவதலத்தருகே சென்றபோது, ஐயர், நாயனாரைப்பார்த்து "அன்பரே, உமக்கு அதிக சிரமம் கொடுத்து விட்டோம். இனி பயப்படவேண்டியிராதென்று நினைக்கிறோம். இனி நீர் போய்விடலாம்" என்றனர். நாயனார் அவருடைய திருவடிகளை வணங்கி அஞ்சலிசெய்து தோத்திரஞ் செய்து கொண்டு திரும்பிச்செல்வாராயினார். சென்றபோது அவருடைய கரணங்களெல்லாம் சிவகரணங்களாக மாறி, தாம் தம் பத்தினியாரைச் சிவனடியார்க்கீந்ததையும், சுற்றத்தாரைக் கொன்றதையும் மறந்து, பந்தமாந் தொடக்கறுத்த சிவானுபவச் செல்வராய், திரும்பிப் பாராமலும் செல்வதை, அறை கூவி வீடருளும் அந்தணர் பார்த்து, "இயற்பகை முனிவா அபயம், அன்பனே அபயம், செயற்கருஞ் செய்கைசெய்த தீரனே அபயம், அபயம். இங்கே விரைந்து ஓடிவருக. ஓடிவருக" என்று பிராணஹானி நேர்ந்தவிடத்து உயிருக்குப் பயந்து ஓலமிடுவார் போல் ஓவென்றலறி யோலமிட்டனர். அவ்வோலம் தம் செவியிற் புகுந்த மாத்திரத்தில், நாயனார் ஐயருக்கு யாது தீங்கு நேரிட்டதோவென்று மனங்கலங்கி "வந்தேன் வந்தேன், தேவரீருக்குத் தீங்கிழைப்பாரிருந்தால் அவர்களை வெட்டி யெறிவேன். அஞ்ச வேண்டாம். அஞ்ச வேண்டாம்" என்று கூவிக் கொண்டே மனவேகமும் பின்னிட ஓடிச்சென்றார். சென்றதும், இறைவனார் திருவுருக் கரந்தருள, அம்மையார் மாத்திரம் தனித்திருப்பதைக் கண்டு திகைத்து நின்றார். அப்போது இறைவனார் உமா தேவி

யாருடன் இடபவாகனரூடராய் காட்சி தந்தருளினார். நாயனார் அம்மையப்பரைத் தரிசித்து தம்மை மறந்து அவசமாய்த் தரையில் வீழ்ந்தார். பின் எழுந்து அகங்குழைந்து மெய்யரும்பி விதிர் விதிர்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஓவென்றலறியழுதார். "சொல்லுக்கடங்காச்சுகக்கடலே, தேவரீரை என்னென்று வாழ்த்துவேன்" என்றார். "இவ்வேழையேன் ஊனக் கண்களாலும் காணவெழுந்தருளிய திருவருட்கோலமே, வலியவந்து என்னையடிமை கொண்ட கோதிலாவமுதே, என்னைப் பரமானந்தப் பரவையில் மூழ்குவித்தருளிய பரங்கருணைத் தடங்கடலே, தில்லை யம்பலத்தின் கண்ணே பரமானந்தப் பஞ்ச கிருத்தியத் தாண்டவம் புரிந்தருளும் ஏக நாயகனே, போற்றி; போற்றி" என்பன வாதியாகப் பலவாறாகத் தோத்திரஞ் செய்தனர். சிவபெருமான் நாயனாரை நோக்கி "குற்றமென்பது சற்றுமில்லாத தூயமனத் தொண்டனே, நீ நம்மிடத்திற் செய்த அன்புகண்டகமகிழ்ந்தோம். நீ உன்னுடைய கற்பிற் சிறந்த காதலியோடும் நம்முடனே வா" என்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தான மாயினார். வானவர் புஷ்பமாரி பொழியவும், வேதங்கள் கோஷிக்கவும், முனிவர் துதிக்கவும், இயற்பகை நாயனாரும் அவர் பத்தினியாரும் சிவலோகத்திற் சேர்ந்து சிவ பெருமானுக்கு அணுக்கத் தொண்டராயிருந்து வாழும் பெரும்பேறு பெற்றார்கள், நாயனாரால் உயிர்துறந்த அவர் சுற்றத்தார் சொர்க்கலோக பதவியைப் பெற்றார்கள். இப் பெரியோர் புண்ணிய சரித்திரத்தைச் சிரவணஞ் செய்தோர் மலமாசு தேய்ந்து எமபாசம் நீங்கப் பெறுவாராயினர். இயற்பகையப்பன் இணையடி வாழ்க.

---

## சிவ நாமாவளி.

(ஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்க ளியற்றியது.)

சிவ சிவ சிவ சிவ கணநாதா, சிவகணவந்தித குணநீதா.
சிவ சிவ சிவ சிவ குருநாதா, சிவசுந்தர ஷண்முகநாதா.
தணிகாசலபதியே தெய்வம், சார்ந்தினி யவன்பணியே செய்வம்.
கந்தா குமரா கருணாலயசம், பந்தா முருகா பரமா அபயம்.
மரகத மயின்மிசை வருகந்தா, ஹரஹர சிவசிவ சம்பந்தா.
சிந்தாமணியே சிவனார் மகனே, நந்தா வொளியே நவைதீர் குகனே.
சிவ சிவ சிவ சிவ சின்மயதேஜா, சிவசுந்தர குஞ்சித நடராஜா.



அம்பலத்தரசே யருமருந்தே, ஆனந்தத்தேனே யருள்விருந்தே.
தில்லையைக் கண்டார் தேவர்களே, செய்வா ரவர்பணி மூவர்களே.
தில்லையி லுண்டொரு தீங்கனியே, தின்றவர்க்கேதொரு தீங்கினியே
தில்லையிற் கண்டோம் தெரிசனமே, இல்லை நமன்றம ரெரிசினமே.
ஆடியபாதா, அம்பிகைநாதா.
அருணடராஜா, ஆனந்ததேஜா.
குஞ்சிதபாதா, கோமளைநாதா.
மலைதருமகளே மடமானே, மாற்றருசிவ மணந்தரு தேனே.
ஞானசம்பந்தனை நாடுதுமே, நாடுமவரடிகள் சூடுதுமே.
மலைமகள்பாலுண் டருள்சிந்தா, மணியென வந்தருள் சம்பந்தா.
உயர்சண்பையில் வருசம்பந்தா, உமைதருபாலுண் டருண்மைந்தா
முத்துச்சிவிகையில்வருமணியே, முத்திக்கொருவித் தெனுமணியே.
காழியில் வந்தருள் கண்மணியே, வீழியில்கண்டருள் விண்மணியே.
சண்பையர் நாதா சம்பந்தா, சதுர்மறை போதா வின்பந்தா.
காழியி லுண்டொரு கண்மணியே, கண்டவர்க்கேதினி மண்பணியே
ஞானசம்பந்த நறுங்கனியே, நம்பலமாகு மொருங்கினியே.
சம்பந்தசம்பந்தஞானசம்பந்தா, எம்பந்தநின்பந்தமேறவின்பந்தா.
சம்பந்த சம்பந்த வென்போமே, சாருங் கவலைகள் பின்போமே.
ஞானசம்பந்தா, மோனவின்பந்தா.
சைவநன் மணியே, சம்பந்த மணியே.
தெய்வநன் மணியே, சீர்காழி மணியே.
காழியர் மணியே, காதலென் மணியே.
கவுணியர் மணியே, கண்ணினுண் மணியே.
காழியர் தவமே, கவுணியர் தனமே.
அருமறை நெறியே, ஆகம நிலையே.
வேதாந்த மணியே, வேதியர் மணியே.
சித்தாந்த மணியே, சிவனார்கண் மணியே.
குருமணியே - எங் குலமணியே, அருமணியே-வந் - தருள்மணியே.
பரசமயங்களைப் பழிப்பாம் பழிப்பாம்,
பரனருள் வழியே செழிப்பாம் செழிப்பாம்.
சைவம் பரமெனத் தழைப்பாம் தழைப்பாம்,
சம்பந்த நாமனை அழைப்பாம், அழைப்பாம்.
சம்பந்தன் சீர்களைப் படிப்பாம் படிப்பாம்,
ஐம்பேரிகை நிதம் அடிப்பாம் அடிப்பாம்.
சம்பந்தநாதா, சாரும்ப்ரபோதா, நின்பந்தமேதா, நிகமவிநோதா.

நாவரசெனுந் திருவாளனையே, நம்புது நமக்கில்லை தீவினையே.
வாகீசருணாலய தேஜா, யோகீச வரோதயபோஜா.
வன்றொண்ட நாதனை வாழ்த்திடுவோம்,
வாழ்த்து மலர்க்குமுடி தாழ்த்திடுவோம்.
சுந்தரமணியே சுபமணியே, மந்திரமணியே மனமணியே.
கோளறுமணியே குருமணியே, குருபர சுந்தர சிவமணியே.
பரவைதன் மணவாளா சரணம், பரன்மகிழ்தோழா சரணம்சரணம்.
மாணிக்கவாசக மாமணியே, மன்றுளொளித்தருள் தூமணியே.
மணிவாசக சின்மயதீபா, பணியேதருள் சற்குணரூபா.
வாதபுரீசா வாகீசா, சம்பந்தேசா சுந்தரேசா.
அறுபத்துமூவர் நம்மாரியரே, அன்புசெய்வார் மிகுசீரியரே.
அறுபத்துமூவர் நம்மாண்டவரே அம்பலத்தானருள் பூண்டவரே.
அறுபத்துமூவர் நம்மாதிபரே, அருட்டருவார் சிவவேதியரே.
சம்போ சங்கர கௌரீசா, சாம்பசதாசிவ கைலாசா.
சம்போ சதாசிவமாகேசா, சாம்பசங்கர ஜகதீசா.
பார்வதிரமணா, பங்கஜசரணா, பவஹரணா, சிவ.

---

## சமரசஞானதீபம்.

(தூலை - சோம சுந்தரநாயகரவர்களியற்றியது.)

"சைவசமயமேசமயஞ் சமயாதீதப்பழம்பொருளைக்
கைவந்திடவேமன்றுள்வெளி காட்டுமிந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ்சமயநெறி புகுதவேண்டாமுத்திதருந்
தெய்வசபையைக்காண்பதற்குச் சேரவாருஞ்செகத்தீரே."

என்றருளிச்செய்த ஸ்ரீதாயுமான சுவாமிகள் திருவாக்கால் சைவசமயமே சிறந்த சமயமெனவும், அதீதமாகியவச் சைவசமயத்தாற்பெறப்படுமநாதிப்பழம் பொருள் சிதாகாசமத்தியி லநவரத தாண்டவம் புரியாநிற்கும் ஸ்ரீநடராஜவள்ளலே யெனவும், இன்னவுண்மையைப் பயவாத பொய்நிரம்பி யொழுகும் புன் சமயங்களிற் புக்கு வீணே கெடவேண்டாமெனவும், பரமவீட்டைத்தருந் தெய்வ சபையாகியவச் சிதாகாயத்தைத் தரிசித்தற்பொருட்டு இங்கே வந்து சேருங்களெனவுமுலகத்தவரை யிதம்பேசியழைத்தபடி வெளிப்பட்டது. இதை விரித்துரைக்குங்கால் (சைவசமயமேசமயம்) என்றேகாரத் தேற்றம்படக் கூறினமையால், சைவேதரமான வுயர்ந்த மார்க்கங் கிடையாதென்பது போதரும். சைவம்



என்பது சிவசம்பந்தமுடையது எனப்பொருடாலால் சிவத்தின் மேலிட்டதொரு பொருளுண்டாயினன்றோ சைவத்தின் மேலிட்டதொரு சமயமுமுள்ளதாகும்? சிவத்துக்குச் சமானப்பொருளும், அதிகப் பொருளுங் கிடையாவென வேதங்கள் முறையிடல் கண்டு தெளிக. சிவம் என்னுஞ்சொல் மங்கலம், சுபம், முத்தியென்பனவாதி பொருள்களைப் பயத்தலால் அதன் ஸம்பந்தமான மார்க்கம் சுபமார்க்கம், மங்கலமார்க்கம், முத்தி மார்க்கம் என்றே விளங்கும். என்னை - குறுணியென்றுமதற்குப் பொருளுண்மையாற் குறுணிமார்க்க மென்றாலோவெனின், அங்ஙனமுரைத்த கூரன் கண்ணிழந்தானுகைபாலது கூடாதென்க. சைவத்தை மங்கல மார்க்கமெனவே யேனையமார்க்கங்களெனப்போதரும் புற மார்க்கங்கள் மங்கலமெனினவை கொண்டொருபயனு மின்றோவெனின், அவ்வவற்றினேற்றங்களின் படிபலனுண்டென்க. தேகமொன்றிலுண்டான வவயவங்களில்பாவு முபகாரத்தனவுமாவசிகமானவுமேனும் யாவுஞ் சமமரியாதையினவாகா. எல்லாஞ் சேர்ந்தே தேகமாகும். ஒன்று குறையினுமூனமேயாம். இவைகளா லுபகரிக்கப்பெற்ற வொருவனவ்வுபகாரமினைத்தெனவறியாமல் கண்ணே பிரதானம், வாயே பிரதானம், மூக்கே பிரதானம் செவியே பிரதானம், நாவேபிரதானம், பாயுருபாதாதிகளே பிரதானமென்றிசைத்த லமைவுடைத்தன்றாம். அங்ஙனமேயன்றோ தேகமேபிரதானம், காணமேபிரதானம், சிவனே பிரதானம், இந்திர சந்திரரே பிரதானம், பிரமவிஷ்ணுக்களே பிரதானமெனத் தாபிக்க வெழுமதங்களு மவலத்தைப்பெறும். இத்தனையுஞ் சேர்ந்தொன்றாகியதே சைவமாகையால் மங்கலமென்பது ஸ்திரப்பட்டது. தேகத்தி லொவ்வொரு கருவியையே கொண் டேனைய வற்றை விடுவது அமங்கலஞ்செய்தல் போலவே சைவத்தைவிட் டேனைய மதங்களைப் பற்றல் அமங்கலத்தைக் காட்டிற்று. இதனு லெல்லாமதங்களுஞ் சைவத்திலுள்ளன வென்பதைக் காட்டினமையாலொரு மதத்தையுஞ் சைவசமயம் விரோதியாமை வெளிப்பட்டது. பிறசமயங்கள் தத்தம் கூறுகளைத் தனித்தனிக் கொண்டமையாலவையே சைவத்தை விரோதித்தனவென்றறிக. எல்லாவவயவங்களுஞ், சேர்ந்து தேகமாகக்கண்ட வொருவனவ்வவயவங்களை விரோதியாதபடியும், அவ்வவயவங்களி லொன்றையே பற்றினவனேனைய வவயவங்களையு மவ்வவயவங்களாலாகிய தேகத்தையும் வெறுக்கின்றபடியுமாகிய வுவமை வெளிப்பட்டமையால். இந்த

வுவமையால் சைவமொன்றே யவிரோத மார்க்கமெனவும், ஏனைய மார்க்கங்கள் விரோத மார்க்கங்களெனவும் வெளிப்பட்டது. ஒவ்வோரவயவங்களைப்பற்றி யாதிக்கங் கூறுவாருள்ளுஞ் சிரம், உரம், கரம், பதமுதலான வங்கங்களிலேற்றந்தாழ்வுகளுக்கீடாக விவேகம் வெளிப்படல்போல் தனித்தனி மதாந்தரங்களிற் பிரவர்த்திப்பவர்தம்முள்ளுஞ் சிலாக்கிய முண்டெனவறிக. தலையுங் காலு மொன்றாகாமையால். வாயுங்குதமு மொன்றாகாமையால். இப்படியே மதங்களிலும் பார்த்துக்கொள்க. (எல்லாமாயல்லவுமாய்) என்று பதிக்குக் கூறிய விலக்கணமேயன்றோ பதிமார்க்கமாகிய சைவத்துக்கும் வித்தித்தது? தேகம் எல்லா வவயவங்களுமாகி யல்லாமனின்றபடியே சைவம் எல்லாச் சமயங்களுமாகி யல்லா மலப்புறப்பட்டு நிற்குமெனவறிக.

இது அதீதசமயமாகையால் இது வித்திப்பதும் அதீதபக்குவனுக்கே யெனத்தெளிக. இப்படிப்பட்ட அதீதமார்க்கத்திற் பிறக்கும் புண்ணியத்தை யடைந்துஞ் சைவசமயிகள் தங்களுண்மையையும், தங்கள் சமய வுண்மையையும், தங்கள் கடவுளுண்மையையுங் கண்டறியாது ஏழைப் பசுக்கள்போலத் திரிவதென்னையோ ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஒட்டன், சாத்தானி, உப்பரவனெல்லாங் களித்திருமாந்துலாவிவர வரையன் மகனேங்கித் தெருவினிற்பதேயன்றோ விதற்குநிதரிசனமாம்? சிவஞானச் செல்வர்களாயுள்ள நம்பெருமக்கள் கூறியிருக்குங் கம்பீர மொழிகளைத் தரிசித்தாலன்றோ வவ்வுண்மை விளங்கும்? “ நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோ மின்பமே யெந்நாளுந் துன்பமில்லை, தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரனற்சங்கவெண் குழையோர்காதிற், கோமாற்கேநாமென்று மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே” என்றருளியபடியும், “யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம்” என்றருளியபடியும், “பொசிப்போஞ்சிவபோகம் பூரணமாயெங்கும், வசிப்போ முலகில் வசியோம், முசிப்பின்றி, வாழ்வோஞ் சிவனையுணர் மாதவர்தம் பொன்னடிக்கீழ்த், தாழ்வோ மெமக்கார்சரி” என்றருளியபடியும், “கன்மமேது கடுநரகேதுமேற், சென்மமே தெனைத்தீண்டக் கடவதோ” என்றருளியபடியும், “அந்தகா நீயொரு பகட்டாற்பகட்டுவதடா தடாகாசுநம்பாற், செல்லாதடாவென்று பேசவாயது தந்த செல்வமே”



என்றருளியபடியுமே பிரமாணங்களாம். (மெலியார்வலிய விரவலரையஞ்சார், வலியார் தமைத்தாமருவில்) என்றபடி யறிந்தால் நாமார்க்கு மஞ்சவேண்டுவதின்றாம். என் கருடா சுகமாவென்ற விதிகாசமே யதைநிறுத்தும். படைக்கின்றவனாகிய் பிரமன்றலையோடு நங்கடவுளுக்குப்பலிபாத்திரமாயினமையி னவன்படைப்பு நம்மையென்செயும்? அழிக்கின்றவனாகிய காலன் காலைவாரிக் கொள்ள நங்கடவுளிடக் காலுதையுண்டானபி னவனழிப்பு நம்மையென்செயும்? இடையினின்ற திதிக்கண் மனநோக்காடெய்த வனங்கன்செய்யு மவனூற்றறானம்மை யென்செயும்? அவனே யுருவிலியாக நங்கடவுளுதற்கண் முற்பட்டுப் பட்டுப்போயினமையால். அத்திகர்த்தாவென்னு மரிக்கே தக்கன்யாகத்திலவிசுநேராது பட்டினிநேர்ந்து அவ்விடத்திற்றானு மேனைய பல விடங்களிலுந் தன்னையே காத்துக்கொள்ளுமாற்றல் போதாது பரிபவமுண்டாயினமையி னவனளிப்புத்தானமக்கெது செய்ய? சிவனே சங்காரகர்த்தாவாக காலனை யழிப்புக்குத் தேடியதேனெனின், சிவனாழிப்புத் தொழிற்கீழதிகாரம்பெற்று அடியாரல்லாதாரிட மாதிக்கஞ் செலுத்துமந்தகன் றன்மையே பாண்டுக்கூறிய தென்க. சிவனடியாராகிய மார்க்கண்டமுனிவர்பா லவனுண்மை யவலமாயினமையேபோதும் இவ்வுண்மையறிந்து சிவனை வழிபடுவார்க்கு யாதுகுறையுளது? இன்னபெருஞ் சித்திபெய்தற்குரிய சைவசமயிகளாய்ப் பிறந்து மந்தோ வாணாளை வீணாய்க் கழிப்பது என்ன பாவம்?

இங்ஙனநிற்க, “தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி, முனிவிலாததோர் பொருளது கருதலும், ஆறுகோடி மாயாசத்திகள், வேறு வேறு தம்மாயைக டொடங்கின, ஆத்தமானாரயலவர் கூடி, நாத்திகம்பேசி நாத்தழும்பேறினர், சுற்றமென்னுந் தொல் பசுக்குழாங்கள், பற்றியழைத்துப் பதறினர் பெருகவும், விரதமே பரமாகவேதியருஞ் சரதமாகவே சாத்திரங்காட்டினர், சமயவாதிகடத்த மதங்களே, யமைவதாகவாற்றி மலைந்தனர், மிண்டிய மாயாவாதமென்னுஞ், சண்டமாருதஞ் சுழித்தடித்தாஅர்த்து, உலோகாயதனெனு மொண்டிறற்பாம்பின், கலாபேதத்தகடுவிடமெய்தி, யதிற்பலமாயை யெனைப்பல சூழவும்” என்ற பிரமாணப் படியே கோடியிடுக்கண் குறுக்கே வந்து தடுக்கும்! “நலமதொன்றடைதற்குறுமிடையூறு நாதனே பலவுளவன்றே” என்றதனாலுங்காண்க. ஈண்டவ்விடரென்பதேதெனின், மேலவ்வாக்கியத்தில் (சைவசமயமேசமயம்) என்றதன் பிற்போந்த (சமயாதீதப்

பழம்பொருளை) என்பது அச்சைவ சமயத்தினு மதிகரித்த வேறு பொருளையென்று பொருள் விரிக்கும் புன்மதமு நன்மதம் போலப் பகல்வேடங்காட்டி ஆபாசப் படுகுழியாய்ப் பக்கத்திலே தானே தவறி விழுந்தால் விழுங்க வங்காந் திருத்தலேயாம். அவ்வதீத சமயமென்றது எச்சமயிகளுந் தத்தம் பரமாகக்கொள்ளக் கிடைப்பினு முக்கிய மறுவர்த்திப்பவ ரேகான்மவாதிகளேயாம். (பன்முகச் சமயநெறிபடைத்தவரும் யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்) என்று பல சமயிகளையும், அவருளதிக பாதகத்தை காட்டி வெளிப்பட நிற்கு மேகான்மவாதியையு மறுத்திருப்பதோடு (சுத்தநித்த வருளியல்பதாகவுள சோமசேகரகிருபாளுவே) எனச் சிவனது அடையாளத்தையுங் கூறினமையால், அப்பாடலில் (சைவசமயமேசமயம்) என்ற மேற்பாகத்தை யொட்டியவ்வதீதமாகிய சைவத்தால் லபிக்கற்பாலதாகிய பரசிவப் பொருளென்று மேல்யாங்கூறிய பொருளே லபித்தது. சந்திரசூடத்வ மப்பதிப்பொருளுக்குரிய லிங்கமாகக் கூறினமையால் ஸாவயமாயுள்ளதே யப்பதியென்பதும் போதரும். (ஒருநாமமோருருவமொன்று மில்லாததற்கு) என்னும் பரமாசாரியர் வாக்குப்பிரமாணமாதற்கிழுக்குமே யெனின், இழுக்காதென்க. பரமாசாரிய மூர்த்திகளேயன்றி, (தூலமிலான் குணங்குறியிலான் குறைவிலான் கொடிதாம், புலமிலான் றனக்கென்னவோர் பற்றிலான் பொருந்து, மிலமிலான்மைந்தர் மனைவியில்லானெனவனவன் சஞ்சலமிலான், முத்திதரும்பர சிவனெனத்தகுமே.)என நந்தாயுமானார் கூறியபடியுங்காண்க. இங்ஙனங் கூறியுள்ளனவேயன்றி "குவளைக்கண்ணி கூறன் காண்க, அவளுந்தானுமுடனே காண்க" எனப்பரமாசாரிய மூர்த்திகளும், "கொழுந்துதிகழ் வெண்பிறைச் சடிலக்கோவே மன்றிற் கூத்தாடற், கொழுந்தசுடரே யிமயவரை யென்றாய் கண்ணுக் கினியானே" எனத் தாயுமானாரும் பாடியருளினாராகலினவற்றினுண்மையை விசாரிப்பாம்.

(இன்னும் வரும்.)

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| மலர் | துன்மதி௵ புரட்டாசி-ஐப்பசிமீ | இதழ் |
| --- | --- | --- |
| 7 | 1921௵ செப்டம்பர்-அக்டோபர்மீ | 6-7 |


**திருவிசைப்பா.**

*கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியைக் கரையிலாக் கருணைமாகடலை*
*மற்றவரறியா மாணிக்கமலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்*
*செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனைத் திருவீழிமிழலை வீற்றிருந்த*
*கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்குளிர வென்கண்குளிர்ந்தனவே.*

---

## அத்துவிதவாதம்.

(ஞானசித்திப் பிரசுரம்.)

கேவலாத்துவிதிகள், விசிட்டாத்துவிதிகள், துவைதிகள், சுத்தாத்துவிதிகள் என்னும் நான்குபிரிவினர் தனித்தனி தாந்தாமே அத்துவிதிகள் என வாதித்துநிற்றலை யாவரும் அறிவர். அதன் வரலாறும் விளக்கமும் யாதென்பதை யறிய அநேகர்க்கு விருப்பமிருக்குமாகலின், அதனை இங்கே விளக்கிக்காட்டுகின்றோம்.

உண்மைவேதாந்தமாகிய உபநிடதங்களிலே, சர்வசாஸ்திரசாரமாய் ஞானோபதேசகாலத்தில் ஆசிரியனால் உபதேசிக்கப்படும் ஒருவார்த்தையாகிய "தத்துவமசி" முதலிய மகாவாக்கியங்கள் "அது நீ ஆகின்றாய்" எனவும், "அது நான் ஆகின்றேன்" எனவும், "அது இது ஆகின்றது" எனவும் மூவிதம் பற்றி நிகழுவவாயின. அம்மகாவாக்கியங்களுள்ளே "அது நீ ஆகின்றாய்" என்பதில் "அது" என்பது ஒருபொருள், "நீ" என்பது ஒருபொருளாகலின், ஒருபொருள் மற்றொரு பொருளாவது எப்படி என ஐயநிகழ்ந்தது. அவ்வையநீக்குதல் காரணமாக, அது இது

ஆதற்கேதுவாய் அவ்விரண்டற்கும் உள்ள சம்பந்தம் "அத்துவிதம்" என உணர்த்தப்பட்டது.

இவ்வத்துவிதச் சொல்லை நான்குவிதவாதிகளுந் தத்தம் மதங்களுக்கு இயைத்துப் பொருள்கொள்வாராயினர்.

அவருள், கேவலாத்துவிதிகள் ஆன்மா ஒன்றே உள்ளது; அதைவிட வேறொரு பொருளில்லை என்பவர். அதனால் அவர் ஏகான்மவாதிகள் எனப்படுவர். இம்மதப் பிரவர்த்தகர் சங்கராசாரியர்.

இராமாநுஜமதத்தர் வாசுதேவனே பரம்பொருள்; சடமும் சித்துமாய எல்லாம் அவனது பரிணாமமாம் என்பர்.

சிவாத்துவிதசைவர் சிவமே பரம்பொருள்; சித்தும் சடமுமாய எல்லாம் அதன் பரிணாமமேயென்பர். இவ்விருவரும் விசிட்டாத்துவிதிகளெனப்படுவர்.

துவைதிகளாவார் பேதவாதிகள். அவர் மத்துவாசாரியமதத்தர். ஆன்மாவும் முதல்வனும் வேறுவேறிருக்குமென்பது அவர் மதம்.

சுத்தாத்துவிதிகளாவார் சைவசித்தாந்திகள். அவர் முதல்வனும் ஆன்மாவும் மலமும் எனப்பதார்த்த மூன்றுள்ளன. அவற்றுள் முதல்வன் சூக்குமசித்தாயும் ஆன்மா தூலசித்தாயுமிருக்கும். அவ்விரண்டும் நிற்கும்நிலை ஒன்றுமன்று, வேறுமன்று, இரண்டற நிற்கும் என ஓதுவர்.

இப்படி இந்நால்வர் மதமும் வேறுபடுதலால், அது இது ஆதற்கணுள்ள அத்துவித சம்பந்தத்தையும் தத்தமதங்களுக்கு இயையப் பொருள்கொள்ள வேண்டியவராயினர்.

இனி, அத்துவிதம் என்னும் சொல்லின் முதலில் உள்ள அகரம், இன்மை அன்மை மறுதலை என்னும் மூன்றனுள் ஒருபொருள் பயக்கும். அப்படியிருத்தல் அவர் மனம்போனபடி பொருள் கொள்ளுதற்கு வாய்ப்பாயிற்று. வேதாந்த நூல்களிலே துணிந்த பொருள் கூறப்படாமையும் அவரது இடர்ப்பாட்டுக்கு மூலமாயிற்று.

ஏகான்மவாதிகளும் இராமாநுஜமதத்தரும் சிவாத்துவிதிகளும் அகரத்திற்கு இன்மைப்பொருள் கொண்டனர். மத்துவமதத்தராகிய துவைதிகள் மறுதலைப்பொருள் கொண்டனர். சைவசித்தாந்திகள் அன்மைப்பொருள் கொண்டனர்.



ஏகான்மவாதிகளும், இராமாநுஜமதத்தரும் சிவாத்துவித சைவரும் இன்மைப்பொருள் கூறினும் இன்மைக்குப் பொருள் கொள்ளும் வகையில் வேறுபடுவர்.

அவருள் ஏகான்மவாதிகள் கொள்ளும் பொருளாவது, அத்துவிதம் இரண்டின்மை எனப்படுதலின், இரண்டின்மை ஒரு பொருண்மாத்திரையே புணர்த்தும். இரண்டு மூன்று நான்கு முதலியவாய் எண்ணப்படும் பொருள்களில் இரண்டின்மையின்மையின், அவை அச்சொற்குப் பொருளாகா. அதனால், அத்துவிதம் என்னும் சொல்லின் பொருள் ஒன்றென்பதேயாம் என்பது. அது நீ, அது இது என்பன ஒன்று என்பதே அவரது உபதேசமாம்.

இனி, ஆன்மா ஒரு பொருளாயினும் குணகுணி என வேற்றுமை தோன்ற நிற்பிற் கேவலம் ஒன்றாதலின்மையின் அத்துவிதம் என்பது உபசாரச் சொல்லாய் முடியுமாதலின், தன்னின் வேறாயொரு பொருளுமின்றித் தானுங் குணமுடைப் பொருளென விசேடிக்கப்படுதலின்றி நிருவிசேடமாய் நிற்கும் பொருள் என்பது அத்துவிதம் என்னும் சொல்லின் பொருளாம் என்பர். அதனால் அவர் கேவலாத்துவிதிகள் எனப்படுவர்.

இராமாநுஜர் சிவாத்துவித சைவர் முதலாயினோரும் அவ்வாறே இன்மைப் பொருள்பற்றி ஒன்றெனப் பொருள்கொண்டு, சத்தி சங்கற்ப முதலிய குணங்கள் பரப்பிரமப் பொருட்கு உள என்று உபநிடதங்களிற் கூறுதலாலும், அவை செயற்கைக் குணமென்றல் பொருந்தாமையாலும், பசு பாசங்களும் உள்ளனவென்பது உபநிடதங்களில் ஓதப்படுதலாலும் அவற்றிற்கு மாறாகக் கேவலாத்துவிதமெனக் கொள்ளுதல் பொருந்தாது; தன்னோடு இயைபுடைய பசுபாசங்களானும், தன் குணங்களாகிய சத்தி சங்கற்பம் முதலியவற்றானும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம் இரண்டில்லை ஒன்றேயாம் என்பதே அத்துவிதம் என்னும் சொல்லின் பொருளாமென்பர். அதனால் அவர் விசிட்டாத்துவிதிகளெனப்படுவர்.

பேதவாதிகளாகிய மத்துவமதத்தர் மறுதலைப்பொருள்பற்றி இரண்டன் மறுதலையாகிய ஒன்று எனப் பொருள்கொண்டு, அவ்வாறு கொள்ளவே அவ்வொன்றன் மறுதலையாகிய இரண்டாவதும் உண்டென்பதற்குத் தடையின்மையின், அத்துவிதம் என்பதும் துவிதம் என்னும் பொருளைத் தரும் என்பர்.

இவரெல்லாரும் அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருள் ஒன்றென்பதேயாம் எனக்கொண்டு தத்தம் மதங்களோடு முரணுமைப்பொருட்டுக் கேவலம் என்றும் விசிட்டம் என்றும் மறுதலை என்றும் அடைகூட்டி இடர்ப்பட்டுப் பொருள் கொள்வர். அவருள், ஏகான்மவாதிகள் கூறும் கேவலமும், பேதவாதிகள் கூறும் மறுதலையும் சுருதிகளோடு மாறுபடுவனவாம். அதனால் இவ்வத்துவித விசாரத்தில் அவை பொருந்துவனவல்ல. இராமாநுஜரும் சிவாத்துவித சைவருங் கூறும் விசிட்டம் என்பது சுருதிகளோடு ஒவ்வுமாயினும் அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள் ஒன்றெனக் கொள்ளுதல் ஒவ்வாது. என்னை? ஒன்றென்பது பொருளாயின், ஒன்றெனவே தெளிவாகக் கூறியிருக்கலாம். அவ்வாறன்றி, அத்துவிதம் என உய்த்துணர வைத்தோத வேண்டாமையானும், ஒன்றெனப் பொருள்கொள்ளின், மகாவாக்கியப் பொருள் பயப்பதோர் விசேடமின்மையின் அத்துவிதம் என்றது பற்றி அவ்விடத்து ஒரு பயனும் பிறவாமையானும் என்க.

இனி, அத்துவிதம் என்பது "அது" "இது" என்னும் இரண்டு பொருள்கள் ஒன்றுதற்கண் உள்ள சம்பந்த விசேடமுணர்த்த எழுந்ததாகலின், அச்சொல்லாற் பெறப்படும் சம்பந்தம் ஐக்கியமோ? தாதான்மியமோ? சமவாயமோ? சையோகமோ? சொரூபமோ? வேறோ? என விசாரிக்குமிடத்து, ஆற்றுநீரும் கடல்நீரும் ஒன்றாய்ச்சேர்ந்தாற்போலவும் குடாகாயமும் மகாகாயமும் ஒன்றாய்ச் சேர்ந்தாற்போலவும் ஐக்கியமெனின், அவ்வாறு சேர்ந்தவிடத்து ஒருபொருளேயாகலின் "ஒன்று" என்றே கூறலாம். அத்துவிதம் என உய்த்துணரவைக்க வேண்டுவதில்லை அன்றியும் ஒன்றாயவிடத்து அதுவதுவாய் நின்றறிதலாகிய ஆன்மாவின் இலக்கணம் முத்திக்காலத்து இல்லையென்றாகி வழுவாம். ஆதலின், ஐக்கியமென்றல் பொருந்தாது.

குண குணிகட்குத் தம்மின் உளதாகிய சம்பந்தம் போலும் தாதான்மியமெனின், ஆன்மா முதல்வனைப் போலக் குணகுணிப் பொருளாய் நிற்பதன்றி, முதல்வனுக்குக் குணமாகாமையின் அவ்வாறிசைதல் பொருந்தாது.

சமவாயமெனின், தாதான்மியத்தின் வேறாய் நையாயிகர் கூறும் சமவாயம் என்பது ஒன்றின்மையின் அதுவும் பொருந்தாது.



விரலும் விரலும்சேர்ந்தாற் போலச் சையோகமெனின், வியாபகத்துவமில்லாத அவ்வியாப்பிய விருத்தியாகிய சையோகம் வியாபகப் பொருள்கட்குக் கூடாமையின், அதுவும் பொருந்துவதன்று.

இனி, யாதானுமோரியைபு பற்றிக் கூறப்படும் சொரூபமெனின், அது மகாவாக்கியப் பொருளை வலியுறுத்தற்கு எழுந்த அத்துவிதமென்னும் சொல்லுக்குப் பொருளாகாது. இங்ஙனம் அவையெல்லாம் பொருந்தாது ஒழிவனவாம்.

இனி, சுத்தாத்துவிதிகள் கூறும் பொருள் இதுவென்று காட்டுதும்.—ஒருபொருளே அவயவ அவயவிகளாயாதல் குணகுணிகளாயாதல் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்றற்கு ஏதுவாகியதாதான்மியமும், அதுபோல இருபொருளே அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றற்கு ஏதுவாகிய தாதான்மியமும் எனத் தாதான்மியம் இருவகைப்படும். அவற்றுள், முன்னையது தாதான்மியம் என்றும் பின்னையது அத்துவிதம் என்றும் வழங்கப்படும். மேலே கண்டிக்கப்பட்ட தாதான்மியம் ஒருபொருளே குணகுணிகளாய் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்குமெனக் கொள்ளுந் தாதான்மியம்.

இங்கே கொள்ளப்பட்ட தாதான்மியம் "இருபொருளே அதுவதுவாய்" ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றற்கு ஏதுவாகிய "அத்துவிதம்" என்னுந் தாதான்மியம். இதுவே வேதாந்தமாகிய உபநிடதங்களின் தாற்பரியமாம் அது பிரமோபநிடதமும் சுவேதாசுவதரோபநிடதம் ௧௦-ம் அத்தியாயம் ௧௫-ம் மந்திரமும் "திலேஷுதைலம் ததநீவசர்ப்பிஃ ஆபஸ்ரோதஸ்வரணீ ஷுசாக்நிஃ ஏவமாத மாத்மநிஜாயதே"

(திலத்தின் கண்ணே தயிலம் போலவும், தயிரில் நெய் போலவும், பிரவாகத்தில் நீர்போலவும், அரணியில்அக்கினி போலவும் இவ்வான்மா ஆன்மாவிடத்தில் உண்டாகின்றான்) என ஓதுமாற்றால் உணரப்படும்.

இதனையே "நிறைகிற்றீயினன் பாலிற்படு நெய்போன், மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" எனத் தமிழ்வேதம் ஓதிற்று.

இதனையே "முப்பொருளும் சமவியாபகமாயினும் நீரும் எண்ணெயும்போல ஒன்றற்கொன்று தால சூக்குமங்களாயியல்புடைமையின் அதுபற்றி வியாப்பியமும் வியாபகமுமாய் நிற்பனவாம்" என்னுஞ் சுருதி விளக்கிற்று.

இருபொருள் அத்துவிதமாய் நிற்குநிலை வியாபக வியாப்பிய முறையாம். முதல்வன் வியாபகப்பொருள். ஆன்மா வியாப்பியப் பொருள். இந்நிலை பேதம் பேதாபேதம் அபேதம் என்னும் முறைகளுள் அமையாமையின் அத்துவிதம் எனப்படும்.

அதுபற்றியே முதல்வன் கலப்பினால் ஒன்றாயும் செலுத்துதலால் உடனாயும் பொருட்டன்மையால் வேறாயும் நிற்பனென ஓதுவர். அத்துவிதமென்னும் சொல் இம்மூன்று தன்மையையும் அடக்கிநிற்கும்.

இனி, இம்மூன்றற்கும் தனித்தனி உவமைகூறுமிடத்து, "அலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல்" "வானகத்தில் வானும் மணத்தில் மணமும்போல்" என்பன கலப்புப்பற்றி ஒன்றாதலாகிய அபேத நிலையை உணர்த்துவன. "பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்-எண்ணுஞ் சுவையும்போல்" என்பது செலுத்துதலால் உடனாதலாகிய பேதாபேதநிலையை யுணர்த்துவது. "இரும்பைக் காந்தம் வலித்தாற்போலியைந்து" என்பது வேறாதலாகிய பேதநிலையை யுணர்த்துவது.

வேதங்கள் ஆகமங்கள் அவற்றின் வழிநூல் சார்புநூல்களெல்லாம் இம்முறை பற்றித் தனித்தனி உவமை கூறுமிடங்களில் அவ்வுவமை கூறிய நோக்கம் இதுவென உணர்ந்து பொருள் கொள்ள வேண்டும்.

இனி, இம்மூன்று இயைபும் தன்னிடத்துத் தோன்ற இம்மூன்றற்கும் வேறாய் நிற்கும் அத்துவிதத்துக்குச் சிறந்தெடுத்துக்காட்டும் உவமையாவது ஆன்மபோதமும் கண்ணொளியும் தம்முள் அத்துவிதமாய்நிற்றலாம். "காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம் போற் காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்" எனவும், "காட்டக்கண்டிடுந் தன்மையுடைய கண்ணுக்-கேயுயிர்காட்டிக் கண்டிடுமாபோல வீசனுயிர்க்குக் காட்டிக்கண்டிடுவன்" எனவும் ஓதியதும் அதுநோக்கி.

இனி, அத்துவிதம் என்னும் சொல்லின் அகரத்திற்கு அன்மைப்பொருள்கொண்டு, அச்சொல் ஏனையோர் கூறும் அத்துவிதம் போலக் கேவலமென்றுதல், விசிட்டமென்றுதல் மறுதலையென்றுதல் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவிதம் என வழங்குவர். சுத்தமென்றது யாதானுமொன்றான் விசேடிக்கப்படாது நிற்றலை. ஏனையோர் வலிந்துகொள்ளும் அப்பொருள்கட்குக் கேவலம்



அடைகொடாதொழியின் அப்பொருள் பயவாமையும் உணரற்பாற்று.

இன்னும் இப்பொருளை வலியுறுத்தி அரதத்த சிவாசாரியரும் "வேதத்தில் ஆங்காங்குப் பிரமப் பொருளாகிய சிவனுக்கும் ஆன்மாவுக்கும் அத்துவித பாவனை கூறப்படுமாறு என்னை?" என ஆசங்கை நிகழ்த்தி "கருடனும் மாந்திரிகனும் தம்முள்வேறுதல் வெளிப்படையாயினும் கருடோகம் என்னும் அத்துவித பாவனை விஷநிவிர்த்திப்பொருட்டு வேண்டப்படும். அதுபோலப் பிரமப் பொருளாகிய பரமசிவமும் ஆன்மாவும் தம்முள் வேறுதல் வெளிப்படையாயினும் மலநிவிர்த்திப்பொருட்டு வேதத்தில் அத்துவித பாவனை கூறப்பட்டது. அதுகொண்டு தானே நிருபசரித ஐக்கியங் கூறுதல் சாலாது" எனச் சதுர்வேததாற்பரிய சங்கிரகத்து ஓதியருளினர்.

ஆதலின் இவ்வத்துவிதவாதத்தில் இடர்ப்பாடின்றி நேரே பொருள்கொள்ளக் கிடக்கும் சுத்தாத்துவிதமே துணிந்த மெய்ப் பொருளாமென்பது உணரத்தக்கது.

---

## கடவுள் இன்ப துன்பமில்லாதவர்.

(ஹேது சாதனப் பிரகாரம்.)

இன்பதுன்பம் என்று எடுத்துப் பேசப்படுவன அனைத்தும் மாயையிலே தோன்றுங் கருவி கரணங்கள் வாயிலாக அனுபவிக்கப் படும் அனுபவங்களாம். ஆன்மாக்கள் முத்தியில் அனுபவிக்கும் இன்பம் மாயா கருவிகள் அனைத்தும் கழன்று அனுபவிக்கும் இன்பமாதலின், அது ஆனந்தம் எனப்படும். இந்த ஆனந்தம் அளவிடற்கரியதாகலின் பேரின்பம் எனப்படும். உலக இன்பம் வரையறைப்பட்டதாதலின் சிற்றின்பம் எனப்படும். மாயாகருவிகள் கொண்டு அனுபவிக்கப்படும் சிற்றின்ப அனுபவம் கடவுளிடத்தே சிறிதாவது கேட்கப்படமாட்டாது. இந்த மாயா கருவிகள் வாயிலாக அனுபவிக்கப்படும் துன்பமும் கடவுளிடத்தே அணுத்துணையும் இல்லையாம். ஆனதுபற்றியே அவர் இன்பதுன்பம் இல்லார் எனப்படுவர்.

உலக இன்ப துன்பங்கள் ஒன்றனை ஒன்று அவாவிநிற்கும். அதாவது உலகத்திலே இன்பமின்றித் துன்பத்தையும் துன்பமின்றி இன்பத்தையும் ஆன்மாக்கள் அறிதலும் அனுபவித்தலும்

இல்லை என்றபடியாம். இதுபற்றியே உலக இன்பதுன்பங்கள் வரையறைக்கமைந்தன எனப்படும். முத்தியின்பம் யாதொரு வரைவுபாட்டுக்கு முரியதன்று. அந்த இன்பத்தை அநுபவித்தற்குப் பிறிது யாதொரு அநுபவம் வேண்டப்படுவதுமன்று. அது துன்பக் கலப்புச் சிறிதுமில்லாத பரிபூரணானந்தமாம். இந்தப் பரிபூரணானந்தத்துக்குக் காரணர் அந்தப் பரிபூரணானந்த சொரூபியாகிய கடவுளே யாதலின் அவர்மாட்டு அந்தப் பரிபூரணானந்தத்துக்குத் தடையாகிய இன்பதுன்பங்கள் ஒருவாற்றானுங் கேட்கப்படுவது கூடாது.

கடவுள் இன்ப துன்பம் உடையர் எனின், அவர் அந்த இன்ப துன்பங்கட்குக் காரணமாகிய மாயாமலத்தால் தாக்குண்பாராய், அங்ஙனம் தாக்குண்டல் காரணமாகப் பிறப்பிறப்புகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் அறிவறியாமைகளுக்கு முரியராய்க் கடவுளிலக்கணத்திற் பிறழ்ந்திடுவர். இன்பதுன்பங்க ளெல்லாம் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய ஆன்மாக்களிடத்தன்றி முற்றறிவும் முற்றுத்தொழிலுமுடைய முழுமுதற் கடவுளிடத்தே கேட்கப்படுதல் கூடாதாதலின், அவர் இன்பதுன்பம் இல்லாதவர் என்று சாத்திரங்கள் எல்லாம் பெருமுழக்கிட்டோலிடும். இதுபற்றியே இறவாத் தனிநிலை யெய்திய மாணிக்கவாசகப் பெருந்தகையாரும் "இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே" என்று அவரைப் புகழ்ந்து பாடினார். அந்தப் பெருந்தகையார் கடவுளை "இன்பமுந் துன்பமும் இல்லானே" என்று முதற்கண் எடுத்துக்கொண்டு பின்னர் "உள்ளானே" என்றெடுத் தேத்திய தென்னையெனின், அவருடைய நாடக நோக்கியென்க. அவர் ஆன்மாக்களை எல்லாம் ஈடேற்றுதற்பொருட்டாக, அவர்களை உயிர்க்குயிராய் நின்று இயக்கி அவர்கள் துன்பமுற வேண்டிய காலத்துத் தாமும் அவர்களோடு உடங்கியைந்து நின்று துன்பமுற்றாலன்றி அவர்கள் துன்பமுறுதல் கூடாதாதலின், அவர் நாடகமாத்திரையாகத் துன்பமுறுவர். அதாவது அத்துன்ப அநுபவத்தை ஆன்மாக்களுக்கு ஊட்டுதற்பொருட்டாக, அத்துன்ப அநுபவத்தைத் தாமும் அநுபவித்தருளினார் போற் காட்டுவர். ஒருசிறு குழந்தைக்கு அரிச்சுவடி கற்பிக்கப் புகுந்த ஆசிரியன் அவ்வரிச்சுவடியைத் தானும் சொல்லி அக்குழந்தையைக் கொண்டு சொல்வித்தல்போல. ஆசிரியன் அங்ஙனம் சொல்வதனால், அவன் அரிச்சுவடி படிக்கின்றான் எனப்படமாட்டான். அவன் சொல்வதெல்லாம் நடிப்பு மாத்



திரையாதல்போல் கடவுள் அநுபவிக்கும் அநுபவமும் நடிப்பு மாத்திரையேயாம். கடவுள் நடித்தலினாலே ஆன்மாக்களுக்கு உண்மைப்பயன் சித்திப்பது, ஆசிரியன் அரிச்சுவடியைச் சொல்வதனால், சிறுகுழந்தை அதனைப் பயில்வதாகிய பயன் வாய்த்திடுதல் போலாமென்க.

இஃதுண்மையேயாயினும் கடவுள் பேரருளாளராதலால், ஆன்மாக்கள் அஞ்ஞானத்தழுந்தி அலக்கணுற்றழிதலை நோக்கி அவருக்குத் துன்பமுளதாதல்வேண்டுமன்றே எனின், அவர் பேரருளாளராதலால், ஆன்மாக்களை ஈடேற்றுதல் வேண்டுமென்னும் ஒழியாச்சிந்தை எக்காலத்தும் உடையராவர். அதுகொண்டு அவருக்குத் துன்பமுளதாதல் சிறிதுமில்லை. ஒருவன் அபாயத்துட்பட்ட காலத்து, அவனை அவ்வபாயத்தினின்றும் விலக்குதற்கியைந்த உபாயங்களைத் தளர்வின்றிச் செய்துகொண்டிருத்தலே அவனுடைய நல்விருத்தியிற் கருத்துடையான் செய்வது. அங்ஙனமின்றி அவ்வபாயத்தின் பொருட்டுத் துன்பப்பட்டுக் கொண்டிருப்பான் விவேகி எனப்படமாட்டான். அல்லாமலும் அவன் துன்பமுற்றழிவானாயின் அபாயத்துட்பட்டானை அவ்வபாயத்தினின்று நீக்குதலும் கூடாது. ஆன்மாக்களை எல்லாம் ஈடேற்றுவதே கடவுள் அல்லும் பகலும் செய்யுந்தொழிலாயினும் அவர், அவர்கள் பொருட்டுச் சிறிதாவது துன்ப முறுவாரல்லர். துன்பமுறுதல் காருண்ணியம் எனப்படமாட்டாது. காருண்ணிய முடையாரிடத்தே துன்பம் ஒரு சிறிதும் கேட்கப்படுவது கூடாது. கடவுள் அனந்த காருண்ணியராதலின் அவரிடத்தே அணுத்துணையாவது துன்ப முளதாதல் இல்லை என்க. அன்றியும் துன்பத்தை ஒழித்தற்குரிய ஆற்றல் இல்லானே அத்துன்பத்தை நோக்கித் துன்பமுறுவது. கடவுள் துன்பத்தை ஒழித்தற்குரிய ஆற்றல் உடையராய், ஆன்மாக்கள் எய்தும் துன்பத்தை எல்லாம் அவர்கள் பேரின்பத்தை அநுபவித்தற்குரிய சாதனமாக அவர்கள்பால் தாமே உய்ப்பாராகலின், அவர் அத்துன்ப நோக்கித் துன்புறுவாரல்லரென்க.

## கள்ளர்கள்.

(சென்னை பப்ளிஸிடி பீரோவினால் பிரசுரிக்கப்பட்டது.)

"கள்ளன்" என்றால் தமிழில் திருடன் என்று அர்த்தம். இதிலிருந்து கள்ளர்களெல்லோரும் திருடர்களென்று சொல்வது தவறு. அந்த ஜாதியில் பெரும்பான்மையோர் யோக்கியர்களாயும், அநேகர் நல்ல அந்தஸ்திலும், குறைந்த பக்ஷம் ஒருவர் அரசாளுபவராயும் இருக்கிறார்கள். ஆயினும், கள்ளர்களின் முன்னோர்கள் துணிகரமான செய்கைகளைச் செய்து காலம் கழித்து வந்தார்களென்றும் அவர்களின் ஸந்ததியாரிடமும் அந்த முரட்டுச் சுபாவம் இன்னும் இருக்கிறதென்றும் இந்தச் சுபாவத்தினால் அண்டை அயலில் இருப்பவர்களுக்கு, விசேஷமாய் தஞ்சாவூர் திரிசிராப்பள்ளி தாலூகாக்களிலும், மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களிலுமுள்ள பிற மலைக்கள்ளர்களாலும் தொந்தரவு உண்டாகிறதென்றும் பொதுவாய்ச் சொல்லலாம். சில பிரதேசங்களில் இப்படிப்பட்ட முரட்டுச் சுபாவமுள்ள மனிதர்களைப் போலீஸார் அடக்குவதற்கான முறை கண்டுபிடிக்கமுடியாதபடி, அத்தனை அதிகமாய் இருக்கிறார்கள். அடியிற்கண்ட சங்கதி அப்படிப்பட்ட இடங்களிலுள்ள கள்ளர்களைப்பற்றியே என்பது கவனிக்கத்தக்கது.

கள்ளர்களில் பலர், குற்றஞ்செய்வது எவ்விதத்திலும் தவறான விஷயம் என்று எண்ணுகிறதில்லை. இதுதான் பெரிய கஷ்டம்.

குற்றம் செய்வதில் தேர்ந்தவனே வீரன். அவன் ஊரில் உள்ள பெண்களெல்லோரும் தங்களுக்கு புருஷனாயிருக்கத்தக்க யோக்கியதை அவனுக்குத்தான் இருப்பதாகக் கருதுகிறார்கள். சில கிராமங்களில், கள்ளச்சிறுவர்கள் தங்கள் பௌருஷத்தைக் காண்பிக்கும் பொருட்டு குற்றம் செய்யவேண்டியிருக்கிறது. அப்படி ஒருவன் செய்து விட்டால் அவனை மற்றச் சிறுவர்எல்லோரும் வெகுவாகக் கொண்டாடுவார்கள். குற்றம் செய்வதில் ஒருவனையொருவன் தோற்கடிக்கவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதால், அதிகக் குற்றவாளிகள் உண்டாகிப் போலீஸாருக்கும் அவர்களுடன் சமாளிக்க முடியாமல் போகிறது. குற்றம் செய்து பிறகு தண்டனையடைந்தாலும் தப்பித்துக்கொண்டாலும் கள்ளர்களுக்கு ஒன்றுதான். மூன்று முறை அல்லது அதற்கு மேற்பட்டு தண்டனை யடைந்த கள்ளன் ஒரு வீரனாகக் கருதப்படுகிறான்.



அவன் ஜெயிலிலிருக்கும் காலத்தில் அவன் குடும்பத்துக்கு அநேக விதமான உதவி செய்யப்படுகிறது. குற்றவாளிகளுள் எவன் போலீஸ்காரருக்கும் ஊராருக்கும் அகப்படாமல் பன்முறை தப்பிப்போகிறானோ அவனைத்தான் இயற்கையாகவே அதிகக் குற்றவாளிகள் சூழ்ந்திருக்கிறார்கள். சமீபத்தில் பிடிக்கப்பட்ட வயதுமுதிர்ந்த ஒரு கள்ளன் தன் காலத்திற்குள் 900 கன்னக்களவும் திருட்டும் செய்திருப்பதாகவும் ஒரே ஒரு முறை தான் தண்டனையடைந்ததாகவும் பெருமையடித்துக்கொண்டான். இது நிஜமாயிராது; ஆயினும் போலீஸ்காரருக்கு சென்ற வருஷத்தில் ரிபோர்ட் செய்யப்பட்ட கேஸுகளில் குறைந்தபக்ஷம் இருபது இவனால் உண்டாகியவை யென்று போலீஸ்காரர் கண்டுபிடித்தார்கள்.

இந்த ஜாதியில் குற்றஞ்செய்யும் வகுப்பைச்சேர்ந்தவர்களில் அநேகருக்குக்கூட சொத்திருக்கிறது. அவர்கள் குற்றஞ்செய்து ஜீவிக்கவேண்டியதில்லை. அதிகக் குற்றவாளிகளாயிருப்பவர்கள் மிகவும் ஏழையாயிருக்கும் கள்ளர்களல்லவென்று சமீபத்தில் செய்த விசாரணையால் ஏற்படுகிறது. இது வேடிக்கையாகவே இருக்கிறது. வேறு ஒரு முகாந்தரமுமின்றி, தங்கள் துணிகரமானசெயல்களைக் காட்டவேண்டுமென்ற விருப்பமொன்றையே கொண்டு, நல்ல அந்தஸ்திலுள்ள கள்ளர்களின் குமாரர்கள் அநேகமாய் குற்றம் செய்ய ஆரம்பிக்கிறார்கள்.

இந்த பிரதேசங்களிலுள்ள இதர ஜாதியாருக்கு இந்தக் கள்ளர்களைக் கண்டால் கொஞ்சங்கூடப் பிடிக்கிறதேயில்லையென்பது சகஜமான விஷயம். கையும் களவுமாய் அவர்கள் எவனையாவது கண்டுபிடித்துவிட்டால் அவனை ஈவு இரக்கமில்லாமல் நன்றாய் அடித்து சில சமயங்களில் கொன்றும்போட்டுவிடுகிறார்கள். சுமார் 30வருஷத்துக்குமுன் மதுரை ஜில்லாவில் உள்ளவர்கள் கள்ளர்களுக்கு விரோதமாய்க்கிளம்பி, பற்பல இடங்களிலுள்ள கள்ளர்களை அவ்விடம் விட்டுத்துரத்தினார்கள். இப்படிச் செய்வதனால் ஜனங்களுக்குள் சண்டையுண்டாகுமென்று அதிகாரிகளுக்குத் தோற்றினபடியால் அதை அவர்கள் நிறுத்திவிட்டார்கள்.

கள்ளர்கள் மற்றவர்களிடமிருந்து இரண்டு வகையில் ஒழுங்காய்ப் பணம் ஸம்பாதிக்கிறார்கள் :—

(1) துப்புக்கூலி ஏற்பாடு என்பது ஒன்று; ஒரு ஊரிலுள்ள கால்நடைகளைத் திருடிக்கொண்டுபோய், அவைகளின் விலையில்

பாதிப்பணம் வாங்கிக்கொண்டு இன்னொரு கள்ளன் மூலமாய் அவைகளைச் சொந்தக்காரனுக்குத் திருப்பிக்கொடுப்பது.

(2) காவல் ஏற்பாடு என்பது இரண்டாவது. இதன் பிரகாரம் ஊரார் தங்கள் வீட்டில் திருட்டுப்போகாமலிருப்பதற்காகக் கள்ளர்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டியது. தொடர்ச்சியாய் ஊரில் கன்னக்களவும் செய்து ஊராரை இந்த ஏற்பாட்டுக்கு உடன்படும்படி கள்ளர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். இப்படிப் பட்ட காவல் கூலி வாங்கக்கூடாதென்று யாரேனும் சொன்னால் அதன்பலனாக அவர் வீட்டில் அநேகக் கன்னக்களவுகளும் திருட்டுகளும் நடக்கும்.

சில கள்ளர் கூட்டங்களிருக்கின்றன; அவர்கள் தங்களுக்குள் ஒரு சட்டத்தை அனுஸரித்து வருகிறார்கள். ஒவ்வொரு கூட்டத்துக்கும் ஒரு தலைவன் உண்டு; அவர்கள் அடிக்கடி இடம் மாறி மாறிக் கொள்ளையடித்துக்கொண்டிருப்பார்கள். இவர்கள் காவல் கூலியும் வாங்குவதில்லை; துப்புக்கூலி வாங்கிக்கொண்டு திருட்டுச் சொத்தைத் திருப்பிக்கொடுப்பதுமில்லை.

ஆனால், எந்த ஊரில் கள்ளக்காவல்காரர்களிருக்கிறார்களோ சாதாரணமாய் அந்த ஊரில் மேற்சொன்ன கூட்டங்களின் வேலை ஒன்றும் நடப்பதில்லை. அந்த ஊரின் எல்லைகளுக்குள் ஏதேனும் குற்றம் நடந்தால் திருட்டுப்போன சொத்தைக் காவல்காரர் மூலமாய் அந்தக் கூட்டத்தாரிடமிருந்து சாதாரணமாய் வசூல் செய்துவிடலாம். இப்படி அவர்கள் செய்வதற்குப் பிரதிபலனாக அந்தக் கூட்டங்கள் ஏதாவது ஒரு கள்ளர் கிராமத்தில் சௌக்கியமாய் வாசம் செய்கிறார்கள் அவர்கள் மலைக்குப் போய்விட வேண்டியிருந்தால் ஒவ்வொரு கள்ளனும் அவர்கள் கேட்கும்போதெல்லாம் அவர்களுக்கு ஆகாரம் முதலியன கொண்டுபோய்க் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

சில சமயங்களில ஒரு கிராமத்தில் இரண்டு தனித்தனி வகுப்புக் கள்ளர்கள் காவல் கூலி கேட்பதுண்டு. அந்த ஊர்க்காரர் அப்போது அனுபவிக்கும் கஷ்டம் அளவிட முடியாது. ஒவ்வொரு வகுப்பாரும் ஊரில் நடக்கும் குற்றமெல்லாம் தம் எதிரியான இன்னொரு வகுப்பாரால் நடந்ததென்று சொல்லுவார்கள். இப்படி நடப்பதனால் கிராமத்தார் சாதாரணமாய் இரண்டு வகுப்பாருக்கும் காவல் கூலி கொடுக்கவேண்டிவரும்.



1909-ம் ௵த்தில் டிஸ்ட்ரிக்ட் போலீஸ் சூபரின்டென்டென்டாயிருந்தவர் கால்நடைகளுக்கு சூடுபோடும் வழக்கத்தை ஆரம்பித்தார். கால்நடைகளின் சொந்தக்காரர் சில அடையாளங்களைக் கொண்டும், எழுத்துக்களைக் கொண்டும் தங்கள் கால்நடைகளைச் சுலபமாய்க் கண்டுபிடிக்கக் கூடும். இப்படி செய்வதனால், கால்நடைகளை அவைகளின் சொந்தக்காரருக்கன்றி மற்றவர்களுக்கு விற்பது கள்ளர்களுக்கு சாத்தியப்படாதென்றும், திருடர் வசம் இருக்கும் திருட்டுக் கால்நடைகள் எப்படி அவர்களிடம் வந்தது என்றும் ஸமாதானம் சொல்வது அவர்களுக்குக் கஷ்டமாயிருக்குமென்றும் எல்லோரும் நம்பினார்கள். இந்த ஏற்பாடு பத்து வருஷத்துக்குமேல் அமுலிலிருந்தது; ஆனால் அநேக காரணங்களைக்கொண்டு இதை விட்டுவிட்டார்கள்.

சூடுபோட்டால் கால்நடைகளின் தோல் கெட்டுப்போகிறதென்றும் அப்படி சூடுபோட்ட கால்நடைகளைக் கள்ளர்கள் திருடாமலிருப்பதில்லையென்றும் அவைகளின் சொந்தக்காரர்கள் நினைத்தார்கள். இப்படிச் சூடுபோட்டதன் பலன் என்னவென்றால், கள்ளர் இவைகளைத் திருடிக்கொண்டுபோய் தங்கள் துப்புக் கூலி கிடைக்கும்வரையில் அவைகளை நன்றாய்ப் பத்திரப்படுத்தி வைத்துவிடுகிறார்கள் என்பதே. தவிர, சொந்தக்காரர்களுக்கு சூடுபோட்ட மாடுகளையே திருப்பிக்கொண்டுவந்து கொடுப்பதற்காக அதிகமான துப்புக்கூலியும் கள்ளர்கள் கேட்க ஆரம்பித்தார்கள்.

சொந்தக்காரர்கள தங்கள் கால்நடைக்குச் சூடுபோடாமலிருப்பதற்காக, திருடிப்போன கால்நடைகளைக் கள்ளர்கள் சில சமயங்களில் கொன்றுபோடுவதுண்டு. இதனால் சொந்தக்காரர்களுக்குக் கால்நடைகளின் பூராவிலும் நஷ்டமாயிற்று. தவிர, கால்நடைகளுக்குச் சூடுபோடுவதும் வெகு கஷ்டமான வேலை. காரமான ரஸங்கள் உபயோகித்தால் அதிக நோவு உண்டாகும். ஆகவே பிரதி வருஷமும் கால்நடைக்குச் சூடுபோட வேண்டியிருந்தது. எப்படியும் சுமார் இரண்டு வருஷமானால் எல்லா அடையாளங்களும் அழிந்து விடுகின்றன.

இப்படிச் சூடுபோடும் வழக்கம் கட்டாயமல்லாததாயிருந்தபடியால், கிராமத்தார் தங்கள் கால்நடைகளில் ஐந்தில் இரு பங்குக்கு மேல் சூடுபோட முன் வருவதில்லை. வழக்கமாய் அவர்கள் போலீஸ்காரரையே சூடுபோடச் சொல்லுவார்கள். அதுவும்,

வயதாய் உபயோகமற்றிருக்கும் மாடுகளுக்குத்தான் சூடுபோடுவது. மரியாதையுள்ள எந்தக் கள்ளனும் அவைகளைத்திருடி தன் கௌரவத்தைக் குறைத்துக்கொள்ளமாட்டான்.

கள்ளர்கள் குற்றம் செய்வது ஒரு கௌரவமான பிழைப்பு என்று கருதுகிறார்கள். ஒரு கள்ளன் தண்டிக்கப்பட்டு ஜெயிலுக்குப் போனால் அதனால் திருடு குறைவதில்லை; அவனுக்கு அப்பொழுதுதான் பெரிய பேரும் கிடைக்கிறது. கள்ள ஜாதியிலுள்ள அதிக கெட்ட குற்றவாளிகளை மட்டும் பொறுக்கிக் கண்டுபிடித்து அவர்களை ஒரு இடத்தில் குடியேறும்படிச் செய்வோமென்றாலோ அவர்கள எண்ணிக்கையற்றவர்களாயிருக்கிறார்கள். குற்றங்கள் அதிகமாய்க் கொண்டுவந்தன. பிறமலைக் கள்ளர்கள் குடியிருக்கும் மதுரை ஜில்லாவில்தான் அதிகக் குற்றங்கள் நடந்தன.

காவல் ஏற்பாட்டின்கீழ் அவதூர் பேசுவது பஹிரங்கமாய் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. கள்ளர்களின் கொடுங்கோன்மை அதிக பலமாய் இருந்தபடியால், அவர்களுடன் போராடும் விஷயத்தில் கிராமத்தார் எவரிடமிருந்தும் உதவி அடையமுடியாதிருந்தபடியால் போலீஸ் இலாகாவில் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் இவைகள் நடப்பதைத் தெரிந்தும் தெரியாததுபோல் இருக்க ஆரம்பித்துவிட்டார்கள். கேஸுகளில் சாக்ஷிகளாயிருப்பவர்களைப் பயமுறுத்தி அவர்கள் ஸங்கதி சொன்னால் அவர்களுடைய வீடுகளைக் கள்ளர்கள் கொள்ளையிட்டார்கள். பொருள் காணமற்போய் அதைப்பற்றிப் போலீஸாருக்குத் தெரியப்படுத்தினால் அந்தப்பொருளில் எள்ளளவும் திருப்பிக்கொடுப்பதில்லை.

1915-ம் ௵ முதல் குற்றவாளிக் கூட்டங்களைப் பற்றிய ஆக்டின் நிபந்தனைகளை இந்த ஜாதியாருக்கும் பிரயோகித்து இப்படிப்பட்ட நிலைமையைச் சீர்திருத்த முயற்சிசெய்தோம். ஆனால், வெகு கெட்டபெயருள்ள சில கிராமங்களில் குடியிருந்த ஆண்களை ரெஜிஸ்டர் செய்வதனால் குற்றம் குறையவில்லை. வயிற்றுப் பிழைப்புக்காவது, வேடிக்கைக்காவது குற்றஞ் செய்வதையே தொழிலாகக் கொண்ட கள்ளர்கள் இருக்கும் கிராமங்களில் எல்லாம் இந்தச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய போலீஸ்காரர் இல்லை. இவைகளையெல்லாம் ஆலோசித்துப் பார்த்ததில், குற்றஞ் செய்வதைப்பற்றிக் கள்ளர்களுக்கிருக்கும்



எண்ணத்தை மாற்றவேண்டுமானால் அடியில்கண்டபடி செய்ய வேண்டுமென்று ஜில்லா அதிகாரிகளுக்குத் தோற்றிற்று:—

(1) குற்றஞ்செய்தவனை எப்படி சாதாரண ஜனங்கள் வெறுக்கிறார்களோ அப்படியே அவன் ஜாதியாரும் அவனை முற்றிலும் வெறுக்கும்படி செய்வது;

(2) வயிற்றுப் பிழைப்புக்குத் திருடித்தான் ஆகவேண்டுமென்பதில்லாமல் வேறு ஏதாவது தொழில் செய்து ஜீவிப்பதற்கான மார்க்கம் ஏற்படுத்துவது;

(3) சிறுவயதுள்ள துணிகரமான கள்ளர்களின் புத்தியை இதர மார்க்கங்களில் செலுத்தும்படி செய்வது.

இந்தப் பலனை அடைவதற்குக் கள்ளர் ஜாதியைச்சேர்ந்த ஒருவன் செய்யும் குற்றங்களுக்கு அந்த ஊரிலுள்ளவர்களும் உத்தரவாதிகள் என்பதை அவர்களுக்கு முதன் முதல் தெரிவிக்கவேண்டியது அவசியமாயிருந்தது. ஆகவே கள்ளர் கிராமங்களில் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தும்படி அவர்கள் தூண்டப்பட்டார்கள். இந்தப்பஞ்சாயத்துகள் - அவர்கள் ஊரிலாவது அந்த ஊரிலுள்ளவர்களாலாவது நடக்கும் குற்றங்களைப்பற்றி ரிபோர்ட்செய்யவும், காவல் கூலியையும் தப்புக்கூலியையும் நிறுத்திவிடுவதாகவும், போலீஸாருக்குத் தேவையாயிருக்கும் குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுப்பதாகவும், இந்தப் பஞ்சாயத்தார்கள் தங்களைத் தேர்ந்தெடுத்த கள்ளர்களுக்காக ஒப்புக்கொண்டார்கள். பஞ்சாயத்தார் தங்கள் கடமைகளைத் தங்களால் கூடியவரையில் நன்றாய்ச் செய்துவந்த வரையில் அந்த ஊருக்குக் குற்றவாளிகளைப்பற்றிய ஆக்டின் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படவில்லை. இந்த ஏற்பாட்டினால், குற்றவாளிகளைப்பற்றிக் கள்ளர்களுக்கிருக்கும் அபிப்பிராயத்தில் மாறுதல் உண்டானதாகத் தெளிவாய்த் தெரிந்தது. முன் இந்தக் குற்றவாளிகள் வீரர்களாயும் விலை சகாயமான திருட்டுச்சொத்து கொடுப்பவர்களாயும் கருதப்பட்டார்கள். இப்பொழுதோ அவர்கள் தொந்தரவு கொடுப்பவர்களாய் எண்ணப்படுகிறார்கள். சென்ற மூன்று நான்கு வருஷமாய்ப் போலீஸ்காரர் தேடிக்கொண்டிருந்த குற்றவாளிகளில் சுமார் 30 அல்லது 40 பேரை இந்தப் பஞ்சாயத்தார் சென்ற மூன்றுமாத காலத்துக்குள் கண்டுபிடித்து ஒப்புவித்து விட்டார்கள். இதிலிருந்தே அவர்கள் அபிப்பிராயம் எவ்வளவு மாறுதலடைந்திருக்கிறதென்பது தெரியும். பஞ்சாயத்து ஏற்பாடு அமுலிலிருக்கிற பிரதேசங்களில் குற்றங்கள் மிகவும்

குறைந்திருக்கின்றன. திருமங்கலம் சர்க்கிலில் 1920-ம்௵ ஜனவரியீ 21 கன்னக்களவு நடந்திருக்க, 1921-௵ ஜனவரிமாதத்தில் இரண்டே இரண்டுதான் நடந்திருக்கிறது. திருமங்கலம், மதுரைப்பட்டணம், மதுரை தாலூகா இந்த சர்க்கில்களில் மொத்தமாய் 1920-ம்௵ ஜனவரி மாதத்தில் 39 கன்னக்களவும், 1921-ம்௵ ஜனவரி மாதத்தில் 7 கன்னக்களவும் நடந்திருக்கின்றன. பஞ்சாயத்து இன்னும் ஏற்படுத்தப்படாத திண்டுக்கல், பழநி, பெரியகுளம், உத்தமபாளையம் இந்த சர்க்கில்களில், 1920-ம்௵ ஜனவரி மாசத்தில் 42 களவும் 1921-ம்௵ ஜனவரி மாதத்தில் 48 கன்னக்களவும் நடந்திருக்கின்றன. மற்றவிதமான குற்றங்களைப் பற்றியும் இப்படியே இருக்கிறது.

இந்த ஜில்லாக்கள் முழுவதிலும் பஞ்சாயத்துகள் ஏற்படுத்த ஒரு பிரத்தியேகமான போலீஸ் உத்தியோகஸ்தரை இப்போது ஸர்க்காரில் நியமித்திருக்கிறார்கள். ஆயினும், பஞ்சாயத்து ஏற்படுத்துவது மாத்திரமே போதாதென்பதும் தெரியும். கள்ளர்கள் கௌரவமாய்ப் பிழைப்பதிலும் அவர்களுடைய குழந்தைகளுக்கு வித்தியாப்பியாசம் செய்து வைப்பதிலும் அவர்களுக்கு உதவியாக ஏதாவது செய்யவேண்டும். ஆகவே இவ்விஷயங்களிலும் கள்ளர்களுக்கு உதவி செய்யும்படி அந்த பிரத்தியேக உத்தியோகஸ்தருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது குற்றம் செய்வதை ஜனங்கள் வெறுப்பதாலும், குற்றம் செய்தல் அபாயகரமாயிருப்பதாலும், மற்ற தொழில்களில் அவர்களுக்குக் கொஞ்சம் அபிருசி உண்டாயிருக்கின்றது. நாடா செய்தல், கயிறு திரித்தல் முதலிய வீட்டுத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சாதாரண விவசாய கிராமத்தில் வீட்டுக் கைத்தொழில்கள் ஆரம்பிப்பதைவிட இந்த கள்ளர்கள் கிராமத்தில் ஆரம்பிப்பது வெகு சுலபமாயிருக்கிறது. இப்படி இருக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை. அநேக கள்ளர்கள், ஜெயிலுக்குப் போயிருந்தகாலத்தில் அங்கே சில கைத்தொழில்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதுவே பெரிய உதவி. எண்ணெய் எடுத்தல், பாய் நெய்தல், துணி நெசவு ஆகிய இவைகளும் ஆரம்பிக்கப்படுகின்றன். ரஸ்தாவுக்காக வேண்டிய கல்லுக்கு டிஸ்ட்ரிக்ட் போர்ட் இந்தக் கள்ளர்களுக்கு கான்ட்ராக்ட் கொடுத்திருக்கிறது. மதுரை மில்லில் 200 கள்ளர்கள் கூலிவேலைசெய்கிறார்கள். மூணார்



பீர்மேடு டீ எஸ்டேட்டுகளில் 400 அல்லது 500 பேர் வேலை செய்கிறார்கள்.

இதுதவிர, நிலங்களைக் கைப்பற்றவும் அடமானம் வைக்கவும் கூடாதென்ற நிபந்தனையில் கள்ளர்களுக்கு தரிசு நிலங்கள் தர்க்காஸ்தில் கொடுக்கப்படுகின்றன. இவைகளெல்லாவற்றையும் விட முக்கியமானது, கள்ளர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும்படி செய்வதே. இதனால் பின்வரும் சந்ததிகளின் மனது குற்றங்களைத் தவிர இதர மார்க்கங்களில் பிரவேசிக்கும் என்று நம்புகிறோம். ஒரு கிராமத்திலுள்ள குழந்தைகளை சமீபத்தில் வைக்கப்படும் பள்ளிக்கூடத்துக்குக் கட்டாயமாய் அனுப்புவதாக பஞ்சாயத்தார்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள் வைப்பதிலும் உபாத்தியாயர்களைப் பயிற்றுவதிலும், தாலுக்கா போர்டும், அமெரிக்கா, ஸ்வீடன் ரோமன் கதோலிக் பாதிரிகளும் ஸர்க்காருக்கு உதவியாக அவர்களுடன் ஒத்துழைக்கிறார்கள்.

இந்தக் காரியங்களெல்லாம் கஷ்டமில்லாமல் நடக்கவில்லை. ஆரம்பத்தில் கள்ளர்களுக்குத் தங்கள் மாமூலான தொழிலை விட்டுவிட இஷ்டமேயில்லை. தங்கள் விரோதிகளான போலீஸ்காரரைக் கண்டவுடன் அவர்களுக்கு ஸந்தேகமுமுண்டாயிற்று. சிலர் போலீஸ்காரர் விடுவிடாய்ப் போய் இருநூறு ஜாமீன்கள் வாங்கினதன் பிறகுதான், போலீஸ்காரர் சொல்வதற்குக் கள்ளர்கள் செவி கொடுத்தார்கள். அப்பொழுதுதான் போலீஸ்காரர் உண்மையில் அவர்களுக்கு நல்லதைச் சொல்லுகிறார்களென்று தெரிய வந்தது. கள்ளர்களில் அநேகர் இதை இப்பொழுது அறிந்து கொண்டு வேறு மார்க்கங்களில் புத்தியைச் செலுத்தித் தங்களைச் சீர்திருத்திக்கொள்ள நிதானமாய் ஆரம்பித்து விட்டார்கள்.

உலகத்தில் எங்கேயாகிலும் குற்றம் அதிகப்பட்டால் அது மாத்திரம் ஜனங்களுக்கு உடனே நன்றாய்த் தெரிகிறதே யொழிய, குற்றங்கள் குறைந்தால் அது அவர்களுக்குப் புலப்படுவதில்லை. சில கிராமங்களில் துப்புக் கூலியும் காவல் ஏற்பாடும் நின்றுபோனதைப்பற்றி ஜனங்கள் சந்தோஷப்படுகிறார்கள். கள்ளர்களைச் சீர்திருத்தும் விஷயத்தில் போலீஸ்காரரும் கள்ளர்களும் எவ்வளவு அக்கறையுள்ளவர்களாயிருக்கிறார்களோ அவ்வளவு அக்கறையுள்ளவர்களாய் பொதுஜனங்களுமிருப்பார்களென்று நம்புகிறோம். இப்படிச் சீர்திருத்துவது ஒருவேளை அசாத்தியமாகிவிடுமோ

வென்று சந்தேகப்பட காரணமேயில்லை. தென்னிந்தியாவிலுள்ள மனிதர்களுள் கள்ளர்களுக்கு நல்ல புத்தி சாதுர்யமும் தேகபலமும் இருக்கிறது. தங்களுடைய சாமர்த்தியத்தைக் கெட்ட வழிகளில் செலுத்தித் தங்கள் ஜாதியாருக்குக் கொண்டுவந்திருக்கும் அவமானத்தை நல்ல புத்தியுள்ள கள்ளர்கள் அறிந்துகொண்டு, அதை நிவர்த்தித்துத் தங்கள் ஜாதியாருக்கு மறுபடியும் நல்ல பெயர் கொண்டுவர அவர்கள் முயற்சி செய்கிறார்கள். பொறுமை, அநுதாபம், விடாமுயற்சி இவைகளிருந்தால் சீக்கிரத்தில் இது நிறைவேறுமென்று நம்புகிறோம்.

---

## சமரசஞானதீபம்

(சூளை - சோமசுந்தரநாயகரவர்களியற்றியது.)

(120-ம் பக்கத் தொடர்ச்சி.)

சத்தமாத்திரமாயுள்ளபொருளே சிவமும். அதன் தாதான்மியகுணமாகிய சித்தே சத்தியுமாக வேதசிவாகமங்கள் கூறலின், அவ்விருவருமுலகுக்குப் பிதாமாதாக்களாயினர். அவ்விருபொருளொற்றுமையினுண்டாமாநந்த ஸ்புரணமே சிவசத்திகள் பெற்ற மக்களாவர். இம்மூன்றுபொருளுமொரேபொருளன்றி வேறில்லை. ஸச்சிதாநந்த கநீபூதமாகிய அப்பரம்பொருள் விகாசத்தைப் பகுத்துணருங்கால் ஸத்தின் கனமேசிவனும், சித்தின் கனமேயுமையும், ஆநந்தத்தின் கனமே ஸ்கந்தகணேசர்களுமாம். பொன்னே பூஷணமாகத் திரிந்த வுவமானவாயிலாக மேலுண்மையைக் கவர்ந்திடுக. முன்னும்பின்னு நிலைகெடாது நின்ற பொன்னைப்போல் விளங்கு நம்பதிநிலையினைத்தென வெளிப்பட்டமையாலவர்க்கொரு நாமமுமில்லை யென்றதும் ஆயிரநாமங்களுள வென்பதுமாகிய பரமாசாரியர் கருத்தும் வெளிப்பட்டது. அன்றியும், மாயிகமாகிய பிரபஞ்ச தர்மத்தைக் கடந்தொளிர்வது என்னு முண்மையும் போதரும். எங்ஙனமெனின், கணவன், மனைவி, மக்களென்னு முலக தர்மத்தை நோக்குழிக் கணவனோரான்மாவும், மனைவியோரான்மாவும், மக்கள் வேறுவேறு ஆன்மாக்களுமாக வினைக்கீடாக வொருவரை யொருவர் சம்பந்தங்கொள்ளத் தநுவாதிகளை மாயையிற் கொண்டு போந்துழலா நிற்பர். இங்ஙனம் போல்வதன்றென்னு முண்மையையே அப்பரமவாக்குகள் காட்டின. சிவனொருகடவுளும், உமையொருகடவுளும், ஸ்கந்த கணேசர்கள் வேறுவேறு கடவுளர்களுமாகக் கொள்ளாமைக்கே அவை பலஞ் செய்யுமென்க. பிரமனாதி கடவுளரைத் தனித்தனிப் பசுக்களாக வேதஞ் சொல்லுகையா லன்னோர் மனைவிமக்களு மவரவர் வினைக்கீடாகச் சிவனாற் கூட்டுவிக்கப் பெற்ற வேறுவேறு பசுக்களேயாவர். இவ்வுண்மைகளால், "பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு ளும்பர்களெவர்க்கு முயர்ந்தோ னென்பது தெளிகவியல் புணர்ந்தோரே" என்ற பிரமாணப்படி ஸமஸ்த சேதனாசேதனோஜ்ஜீவிதமாயுள்ள அப்பிராகிருதமாகிய திருமேனிகளையுடையானென்பதே தீர்மானம். இவற்றின் விரிவை யாஞ்செய்துள்ள "சிவபாரம்யப்பிரதரிசினி" என்னும் பிரபந்தத்தில் "சிவன் எத்தன்மையர்" என்னும் பகுதியிற்பாக்கக் காணலாமென்க. இன்னபரமகல்யாணகுணைகவிக்கிரகமாய் விளங்கு நங்கடவுள் திரிமூர்த்தியுத்தீர்ணராயுள்ளவராகையால் அவராணையின் வழியொழுகும் மாயாகுணவிசிட்டராகிய திரிமூர்த்திகளில் ஸத்வப் பிரதானராகிய உருத்திரரே நஞ்சைவ சமயத்தாற்பெறப்படும் பரமபதியென்று துணியற்க. "செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்குமற்றை, மூவர் கோனாய் நின்ற முதல்வன்" என்னும் பிரமாணத்தானுந் தெளிந்திடுக. "ஓதருணை வித்தகரை மூவரிலொருத்தரெனவோதியிடு மற்பமதியீர்" என்றதனாலுங்காண்க. இன்னு மப்பாடலில் அப்பதிப்பொருள் ஸ்ரீ சிதம்பரமென்னு மோர் க்ஷேத்திரத்தை யிடங்கொண்டிருப்பதொன்று மென்பதுஞ் "சோமசேகர கிருபானுவாய்" என ஆசிரியர் கூறிய வுண்மையை நிறுத்தும். ஸ்ரீ சிதம்பரமென்கையில், அது சமயமொன்றையுஞ் சாராது பொதுவாய் விளங்கலானுண்டு மூர்த்தி விடய முக்கியமன்றெனின், "தானே யகண்டாகார மயந் தன்னி லெழுந்து பொதுநடஞ் செய்வானே" எனக் கூறியுள்ள வாக்கியத்தால் அது தள்ளுண்டதென்க. மேலிடத்தில் சச்சிதாநந்த கநீபூதமான சிவலட்சணத்தை வர்ணித்திருப்பதையே யீண்டும் பயன்படுத்திக்கொள்க. அந்த க்ஷேத்திரத்திலெல்லாச் சமயிகளு மபிமானம் வைத்தலா லன்னோர் கூறும் மூர்த்திகளே பிரதானமெனி னாகாதோவெனின், அவர் தன்மையை விசாரிக்கிலவருட்சிலர் கேவலம் ரூபவாதிகளும், சிலர் கேவலம் அரூபவாதிகளுமாய்க் காண்டலாலவர் சொந்தம் பாராட்டுதற்கு அச்சிதாகாயமிடந்தராதென்க. அவரெல்லாமுஞ் சைவரைப்போன் மூர்த்தாமூர்த்தங்களை யங்கீகரிப்பினன்றோ வவர்க்கு மங்கே யிடஞ்செய்யலாம்? அவர்களுக்கங்கே யிடமில்லாதபோது அவரபிமானஞ் சேர்தலுக்கு

வழியேதெனின், மேலிட்டத்தில் தேகத்தையும், அத்தேகத்தி லவய வங்களையுஞ் சமட்டி வியட்டிகளாக வபிமானிக்கு முவமானத்தாற் சமயங்களின் றன்மையைக் கூறினுமாகையால் அதை யிங்கே வினியோகஞ்செய்துகொள்க. மூர்த்தா மூர்த்தங்களை யெல்லாஞ் சமட்டியிற் கொண்டவருக்கு எல்லா அவயவங்களுங் கூடிய தேகத்தைக் கொண்டவரும், மூர்த்தம், அல்லது அமூர்த்தங்களைத் தனித்தனி வியட்டியாகக் கொண்டவருக்குக் கரசரணாதி அவயவங்களைத் தனித்தனி வியட்டியாகக் கொண்டவரு முவமிக்கப்படுதலால் வியட்டியாளர் சமட்டியில் அபிமானம் பூண்பதற்குண்டான ஹேது வெளிப்பட்டதென்க. "தில்லைமன்றுட் பார்த்தபோதங் கென் மார்க்க மிருக்குதெல்லாம் வெளியேயென்ன வெச்சமயத் தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர்" என்றபடியாலுங் கண்டுணர்க. வேத சிவாகமங்களுக்குப் பாஹ்ய மதவாதிகளுள் அரூபவாதிகளே யதிகமாகையா லவரும் வியட்டித் தன்மையா லடங்கி விட்டனர். தேகத்திலடங்கிய வுறுப்புக்களைத் தனித்தனி யபிமானித்தவர் தேகத்துக்குப் பாஹ்யவாதிக ளல்லாததுபோல் மூர்த்தா மூர்த்தங்களைக் கொண்ட சமட்டி சிவதர்மத்தைத் தனித்தனி வியட்டியாகக் கிரகித்துக்கொண்டவ ரெப்படி வேத சிவாகம பாஹ்யராகக் கூடுமெனின், அவர் பதியினது மூர்த்தாமூர்த்தங்களைக் கொள்ளாமல் பசு பாசங்களிற்போந்த மூர்த்தாமூர்த்தங்களைக் கொள்ளலால் பாஹ்யவாதிகளென்பதிற் றட்டில்லை. புருடனொருவனை யடைந்து தான் கோரிய காரியங்களை நிறைவேற்றிக்கொள்ள வெண்ணியவொருவன் தானு புருடனையடைந்த தடுமாறியதே யிதற்கு நிதரிசனமாம். அப்படியான காலத்துங் கட்டை மாத்திரமே விரோதப்பட்டு அதிற் புருடாகிருதி விரோதியாவண்ணம் அவர் பசுபாச மூர்த்தங்களைக் கொள்ளும்போது மவையே பதி மூர்த்தங்களென மயங்கினதேயன்றி வேறில்லையாகையால் எச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பரென் றதனுண்மை விளங்கும். சைவத்தில் வேறான புறச்சமயங்களிலும் அரூபவாத மங்கோரமேனு மவை கூறு மரூபவியலும், பதியியலுங் கேவலம் முரணுதலால் அவை சைவர்க்கு ஸாமஞ்சஸ மாகாவென வறிக. இக்கருத்தையே "பொய்வர்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டாம்" என மேல் வவிய் திருவுத்தியபடியாம். இது சைவரையே நோக்கிக் கூறிய



தென்க. புறச்சமயிகள் கூறுந் தர்ப்போதங்களான் மயங்கி முன்னுள்ள சிவத்வாபி வியக்தியை யிழந்தலையு மூர்க்கப் பிணங்களை நோக்கிக் கூறினமை கொண்டே 'இக்கருத்தை விட்டு' எனவும், 'புகுதவேண்டாம்' எனவும் விதந்தமை தெரியும். இக்கருத்தையே 'உலகைச் சமயங்க ளோவ்வாத சாத்திரமாம்' எனப் பரமாசாரிய மூர்த்திகளுங் கூறினர். மேலிவை யுண்மை முத்தியைப் பயவாவென்பது விளங்கும் பொருட்டே 'முத்திதருந் தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே' என்று கூறியபடியுங் காண்க. புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், அகச்சமயமென்னு மிருபத்து நான்கு வகைப்பட்ட பேதம், அபேதம், பேதாபேதங்களாகிய பல சமயங்களாலும் முத்தி கைகூடாவென்பதன் விரிவைச் சிவஞானசித்தியார், தத்துவப்பிரகாசம் முதலிய நூல்களாற் கண்டுணர்க. ஈண்டுத் தெய்வசபையைக் காண்டன் மாத்திரந்தானே முத்தியுண்டா மென்பது போதரும். தெய்வசபை யென்றது தில்லைமன்றே யாகையால் தில்லையைக் கண்டால் முத்தியென்ற வேதப் பிரமாணமே சாலும். தேவன் என்பதற்குப் பிரகாசமானவன் என்று மேலோர் பொருள் விரித்தலால் அந்தச் சத்திகொண்டே மாயாகாரியங்களாகிய சித்திரங்களைச் செய்புமத்தேவனிடத்திற் கூலிக்கு வேலை செய்யும் பல வேலைக்காரருக்குந் தேவரெனப் பெயர் வந்தமை காண்க. அந்த வேலையினின்று மவர்கள் தள்ளப்பட்டால் மானிடர், நாய்கள், பேய்களாகப் பாவிக்க வருதலி னுண்மை விசாரத்தாற் போதருந் தெய்வமொன்றென்பதே தீர்மானம். தேவியென்னும் ஆடிப்பெயரை யுடைய வுமைக்கு நாதரேயன்றோ தேவராதல் சாலும். அந்தத் தெய்வமே தில்லை மன்று ளிருப்பதாலன்றோ அது தேவ சபையாயிற்று? அதுவே உண்மைத் தெய்வமென்பதற்கும், தில்லைக் கண்டால் முத்தி யென்பற்கும் போந்த விதிகாசமொன்று கூறுவாம்.

(இன்னும் வரும்.)

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவ மகாஜனக் கூட்டம்

## சுத்தாத்வைத சித்தாந்த சைவமட ஸ்தாபனம்

திருவொற்றியூர், திருமயிலை என்னும் இருபெருந் திருத்தலங்களை இருகண்களாகப் பெற்று, நம் தமிழகத்தின் தலைநகரமா யிருக்கும் சென்னையம்பதியானது, சிலகாலமாக, உண்மை ஞானோபதேசஞ் செய்து உலகத்தவரை வழிப்படுத்தும் பெரியோர்களின் வாசத்தை யிழந்து பல தீமைகள் விளையும் இடமாய் விட்டது. ஆதலால், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர், தங்கள் சகோதரத் திருக்கூட்டங்களின் துணையைக் கொண்டும், ஏனைய சைவத்திருவாளர்களின் உதவியைக் கொண்டும், இம்மாநகரில் ஒரு சைவத் திருமடம் தாபித்து, அதில் துறவறமேற்கொண்டு கல்வி யறிவு ஒழுக்கங்களாற் சிறந்து மெய்ஞ்ஞான நிட்டை மேவியிருக்கும் பெரியாரை எழுந்தருளுவித்து, இங்குள்ளார்க்கு ஞானோபதேசம், தீக்கை, பிரசங்கம் முதலியன செய்வித்து, இயன்ற வழிகளிலெல்லாம் சைவசமய பரிபாலனம் செய்விப்பது கருதி, நிகழும் துன்மதிஷு புரட்டாசிமீ 31உ (1921ஷு அக்டோபர்மீ 16உ) ஆதிவாரம் பகல் 3-மணிக்கு, சென்னை பச்சையப்ப முதலியார் கலாசாலை மகா மண்டபத்தில் ஒரு மகாஜனக்கூட்டம் கூட்டுவார்கள். அப்போது திருக்கைலாய பரம்பரை தருமபுர ஆதீனத் தம்போதனர் குழாத்தினரும், சிதம்பரம் செந்தமிழ் வேதப்பிரகாச சபைத்தலைவரும், சுத்தாத்வைத சித்தாந்த சைவப் பிரவர்த்தகாசாரியருமாகிய **ஸ்ரீலஸ்ரீ தரு - ஞா. சண்முகத் தம்பிரான் சுவாமிகள்** அக்கிராசனத்தில் அமர்ந்தருள, சைவதத்வ விசிட்டர்களும், சைவப்பிரசாரகர்களும், சகோதரத் திருக்கூட்டத்தினர்களும் விஜயஞ்செய்து உபந்நியாசங்களும் தமிழ் வேதபாராயணமும் செய்வார்கள். சைவத் திருவாளர்காள் வம்மின்; வம்மின். வந்து தரிசன சிரவணாதிகளால் இன்புற்று வாழ்மின்; வாழ்மின். சைவம் எங்குந் தழைக்குமாறு செய்மின்; செய்மின்.

ஸ்திரீகளுக்குப் பிரத்தியேகமாக இடம் அமைக்கப்படும்.

### அப்போது நடை பெறுவன

(1) மத போதனையைப்பற்றிய உபந்நியாசம்.
(2) சென்னையில் சைவமட ஸ்தாபனம்.
(3) டாக்டர் கோர் மசோதா ஆராய்ச்சி.
(4) இந்து தேவஸ்தான கமிட்டியைச் சீர்திருத்தல்.

இங்ஙனம்:

இ. ஆதிமூல முதலியார்,
காரியதரிசி.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்,
சென்னை, 8-10-1921.

## நிர்வாக சபையார்

**போஷகர்**

ஸ்ரீமான் ராவ்பஹதூர்-யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்.

**சபைத்தலைவர்**

,, ச. ராஜாகண்ணு முதலியாரவர்கள், B. A.
Retired Supt., Acct., Genl's Office.

**உதவி சபைத்தலைவர்**

,, தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், B. A.,
(Government Pensioner.)

**காரியதரிசி**

,, இ. ஆதிமூல முதலியாரவர்கள்,
(Government Pensioner.)

**உதவி காரியதரிசி**

,, இ. கண்ணப்ப முதலியாரவர்கள், வர்த்தகர்.
Correspondent - பாடசாலை விசாரணைக் கர்த்தர்.

,, ரே. சண்முக முதலியாரவர்கள், (Clerk, Parry & Co.)

**கணித பரிசோதகர்**

,, கூ. சிய வாசுதேவ முதலியாரவர்கள்,
(Retired Accountant, M. & S. M. Ry.)

**அத்தியட்சர்கள்**

,, திரு. சபாபதி முதலியாரவர்கள், (Retired Sub-Engineer.

,, ரா. பி. துரைசாமி முதலியாரவர்கள்,
(Government Pensioner.)

,, தி தியாகராஜ முதலியாரவர்கள்,
(Clerk, Accountant General's Office.)

,, வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்கள்,
(Head Clerk, Government Press.)

,, கா. முருகேசச் செட்டியாரவர்கள்,
(Proprietor, Gounian Press.)

,, யன். வி. அப்பாதுரை முதலியாரவர்கள்,
(Clerk, Post Office.)

,, க. கணபதி முதலியாரவர்கள்,
(Head Clerk, Audit Office, M. & S. M. Ry.)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 7 | துன்மதி௵ கார்த்திகை௴ 1921௵ நவம்பர்௴ | இதழ் 8

### தேவாரம்.

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
ஆவினுக்கருங்கல மரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக்கருங்கல நமச்சிவாயவே.

---

## சைவக்கிரியைகளின் நோக்கம்.

(ஞானசித்திப்பிரகாசம்)

சைவக்கிரியைகளின் உண்மைப்பொருளாகிய தத்துவார்த்தத்தை அறியத்தொடங்கும்போது முன்னர் அவற்றின் நோக்கைப் பொதுவகையாக உணர்தல்வேண்டும். அவ்வுணர்வு ஒருவனுக்கு இருக்குமாயின், எக்கிரியைகளும் இன்ன இன்ன கருத்துடையனவென்னும் உண்மைப்பொருள் எளிது புலனாகும்.

கிரியை என்பது செயல் என்னும் பொருளில் உள்ளது. சைவக்கிரியை - சிவமாந்தன்மையைத் தருஞ்செயல். இவ்வுலகம் பூலோகம். இதிலுள்ள நாம் மனிதர். இவ்வுலகில் இப்பிறப்பு வருவதற்கு ஏது நாம் செய்த புண்ணியபாவங்கள். இவை முற்பிறப்பிற் செய்யப்பட்டன. அப்படியே இன்னும் புண்ணியபாவங்கள் செய்யின் மறுமையிலே அவ்வப்புண்ணிய பாவங்களுக்கு ஏற்ற பிறவியும் உலகமும் வரும். அவற்றுள்ளே பாவம் ஒரேவகையாய் எப்பொழுதும் துன்பமே செய்வது. புண்ணியம் அங்ஙனமன்று. இன்பஞ்செய்யும் ஆயினும் அப்புண்ணியமும் அதனால் வரும் இன்பமும் இரண்டுவகைப்படும். அவற்றுள்,

ஒன்று பசு புண்ணியம்; ஒன்று சிவபுண்ணியம். பசுபுண்ணியம் இன்பந்தருமாயினும் அவ்வின்பம் அற்ப இன்பமாயும் பிறவிக்கு வித்தாயுமிருக்கும். சிவபுண்ணியம் அங்ஙனமன்று; மலமாயை கன்மங்களை நீக்குவதாயும் பிறவியை ஒழிப்பதாயும் பேரின்பந் தருவதாயும் இருக்கும். பசுபுண்ணியம் முக்குணவசப்பட்டுப் புத்திகாரியமாய் இயம நியமாதி கருமங்களில் அடங்கி யான் எனது என்னும் முனைப்பான் ஆகாமியமாய் இயைந்து சஞ்சிதமாகிக் கன்மமலமெனப்பட்டுப் பிறவிப்பிணியிற் படுத்தும். சிவபுண்ணியமோ மலமாயை கன்மங்கள் நீங்கிய பக்குவிகளாற் சிவபோதங்கொண்டு செய்யப்படுவதாய் அருள்வழி நடப்பதாய்ப் புத்திகாரியகன்ம வரிசையில் அடங்காது வேறாக நிற்கும். புத்திகாரிய கன்மப்பயனெல்லாம் போகமெனப்படும். சிவபுண்ணிய விளைவின் பயன் மோக்ஷ நிலையாகும்.

இவையே இவ்விரண்டற்குமுள்ள வேறுபாடாம். ஆதலாற் பசுபுண்ணியம் முத்தர்களால் விடத்தக்கதும் சிவபுண்ணியம் முத்தர்களாற் கொள்ளத்தக்கதுமாகும்.

இனி, இச்சிவபுண்ணியத்துள் ஒன்றாகிய சைவக்கிரியை அபரமுத்திப் பெரும்பயனை விளைவிப்பது.

புண்ணியஞ் செய்யும்பொழுது அந்தப்புண்ணியம் தான் அடைய விரும்பிய புவனத்தில் அடைந்து, தநுகரணங்களையும் இன்பத்தையும் அப்புவனத்தில் தர ஏதுவாக வேண்டுமாதலின், அதற்கேற்ற கருத்தோடு கிரியைகள் செய்யப்படுவதே வேத சிவாகமங்களிலுள்ள எல்லாக்கிரியைகளுக்கும் தாற்பரியமாம். இது சைவ வைணவ ஸ்மார்த்த மத்துவமுதலிய எல்லா மதக் கிரியைகளுக்கும் எல்லார்க்கும் ஒத்த நோக்காம். எவர் செய்யும் எந்தக் கிரியையும் இந்த நோக்கங்கொண்டே செய்யப்படும்.

சைவக்கிரியைகளில் மண்டபம் குண்டம் வேதிகை முதலியன வகுத்துச் சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்னும் சுத்தமாயா தத்துவங்கள் ஐந்தையும் ஐந்து ஆவரணங்களாகப் பாவித்து, சுத்த வித்தியா தத்துவமாகிய ஐந்தாம் ஆவரண மண்டபத்திலே இந்திரன் முதலிய திக்குப்பாலகரையும் அவர்களுடைய வச்சிர முதலிய எட்டு ஆயுதங்களையும் பாவித்து, சதாசிவ தத்துவத்திலேயுள்ள வேதிகையில் சதாசிவ மூர்த்தியும் மனோன்மணியும் வீற்றிருப்பதாகவும் ஈசுர தத்துவத்திலே அனந்தாதி அட்டவித்தியேசுரரும் வாமை முதலிய எட்டுச் சத்திகளும் சதாசிவ



மூர்த்தியைச் சூழ்ந்திருப்பதாகவும் கும்பமிசைப் பாவித்து, சத்தி தத்துவமாய் நிவிர்த்தியாதி பஞ்சகலாமயமாயுள்ள குண்டமத்தியிலே சிவதத்துவமிசை விளங்கும் நிஷ்கள சிவத்தைச் சிவாக்கினியின் இருதயத்திலே பூசித்து, அச்சிவம் எழுந்து சதாசிவமூர்த்தியினும் குருமூர்த்தியினும் தங்கி அதிட்டித்து அக்குருவினால் ஆன்மாவுக்கு மலநீக்கமும் சிவப்பேறும் அளித்துச் சதாசிவ வடிவாக்கி அபரமுத்திப் பேறு கொடுத்ததாகப் பாவிக்கப்படுகின்றது. சந்தியாவந்தனம் சிவபூசை ஆலயசேவை முதலியவற்றிலும் இப்படியே சுத்தமாயா புவனத்தில் தானிருந்து சிவவடிவெய்தியவனாய்ச் சிவனை வணங்கும் பாவனையே செய்யப்படுகின்றது. இதனால் இவ்வுலகிலிருக்கும் பாவனையும் சீவனாய் மனிதனாயிருக்கும் பாவனையும் ஒழிந்து சிவலோகத்திலே சிவவடிவோடு இருக்கும் பாவனையும், சிவவழிபாடு அச்சிவலோகத்திருந்து செய்வதாகிய பாவனையும் எப்பொழுதும் எக்கிரியையினும் உண்டாகின்றது. அதனால் அவனுடைய மனமும் செயலும் வடிவும் வழிபாடாகிய புண்ணியமும் அங்கிருப்பதாகவே யாகின்றன. ஈசுரசக்தி அவனுடைய கருத்தையறிந்து அவனுடைய புண்ணியத்தை அச்சிவலோகத்திலே சேர்க்கின்றது. அதனால் மரணகாலத்தும் இந்தப் பாவனையே செய்கின்றான். மரணமடைந்த பின்னும் ஆசிரியர் அந்தியேஷ்டி முதலிய கிரியைகளால் அவ்வான்மாவைச் சிவலோகப்பேறு பெறும்படி கிரியை செய்கின்றார்.

ஆதலினால், எப்பொழுதும் தன்னாலே செய்யப்படும் சிவபுண்ணியங்கள் சிவலோகத்தை யடையச் செய்தலும், தான் சிவவடிவெய்தி அச்சிவலோகத்திருந்து சிவோபாசனை செய்வதும், இறந்தபின் அச்சிவலோகத்துள்ள புண்ணியப்பயனை யநுபவித்தற் பொருட்டு அங்கெய்திச் சிவவடிவோடிருந்து சிவானந்தானுபவமுறுதலுமாகிய பாவனைகளைச் செய்தலே சைவக்கிரியைகளின் நோக்கமாம். இது பொது நோக்கு. இனிச் சிறப்பு நோக்காகிய தத்துவார்த்தத்தினை வருமிடங்களில் விரித்துக் கூறுவாம்.

---

## திரிசூலம்.

சிவபெருமானது திருக்கரத்திலுள்ள ஆயுதங்களுள் திரிசூலமுமொன்று. மற்றைய ஆயுதங்களெல்லாவற்றினும் இதுவே பிரதானமானது. சுவாமி திருவுருவைப் பார்க்கும்போது அது ஓர் ஆயுதம்போற் காணப்படினும் உண்மையில் அது ஆயுதமன்று.

சிவபெருமானுடைய அங்கப் பிரத்தியங்க சாங்க உபாங்கங்கள் இவையிவையென்று கூறும் வாதுளாகமம் ஆயுதங்களைப்பற்றிச் சொல்லத்தொடங்கி "குணஞ்சதிரிசூலம்" என ஓதிற்று. அதாவது சிவபெருமானுடைய ஆதிசத்தியின் பேதமாகிய ஆரணி ஜெனனி ரோதயித்திரி என்னும் மூன்று சத்திகளான குணங்களே திரிசூலமாம் என்பது அதன்பொருள். அவ்வாகமம் இப்படியே ஏனைய ஆயுதங்களுக்கும் பொருள் கூறுகின்றது.

பதிப்பொருளின் சத்தியாகிய ஆதிசத்தி திரோதானசத்தியென்றும் சொல்லப்படும் அச்சத்தி படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில் செய்யும் நிமித்தமாக ஆரணி ஜெனனி ரோதயித்திரி என்னும் மூன்று சத்திகளாகப் பிரிந்து நிற்கும், நின்று பிரமா விஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னும் ஐவரையும் அதிட்டித்து அவர் வாயிலாக அவ்வைந்தொழில் செய்யும். பிரமா முதலிய ஐவரும் ஐந்தொழில் செய்தல் அவரது சுதந்திரமன்று. இச்சத்திகளால் அதிட்டிக்கப்பட்டே செய்வர்.

அதுபற்றியே அக்கிருத்தியமனைத்தும் பதியின் றொழிலாகக் கூறப்படுகின்றது.

இனி, ஆன்மாக்கள் மலம் மாயை கன்மம் என்னும் பாசங்களினாலே பந்திக்கப்பட்டு வருந்துதலால், அப்பாசபந்தம் நீக்குதல் ஏதுவாகவே பதி ஐந்தொழில் செய்வர். அவ்வைந்தொழிலை நடத்துவது ஆரணி முதலிய சத்திகளே யாதலாலும் அது அவருடைய குணங்களுள் ஒன்றாதலாலும் அக்குணம் அவரிடத்து விளங்குதலைக் குறிக்குங் குறியாகத் திரிசூலமானது அவருடைய திருக்கரத்தில் விளங்கும். ஒரு மரத்தை வெட்டுதற்கு அல்லது ஒரு சேனையை யழித்தற்கு ஆயுதம் வேண்டப்படுமாறு போல, மல மாயா கன்மங்களை யொழித்தற்கு அவருடைய சத்தியாகிய குணம் ஐந்தொழில் செய்ய வேண்டுதலால், அத்தொழில் செய்யும் சத்தி ஆயுதமாகப் பாவிக்கப்பட்டது. மழு மான் முதலியவும் இவ்வகையாக ஒவ்வொரு பொருளில் உள்ளனவாம்.

திரிசூலவடிவாக எண்ணப்படும் ஆரணி முதலிய சத்திகள் ஐந்தொழில் செய்தலினாலே மலபரிபாகமும் இருவினை யொப்பும் உண்டாகும். அதற்கேற்பச் சத்திநிபாதம் விளையும். அதனால் ஆன்மாவுக்கு முத்தியுண்டாகும். இத்திரிசூலமே பாசுபதாஸ்திரமெனப்படும். பாசுபதாஸ்திரத்திற்கு மேற்பட்ட ஆயுதமுமில்லை



ஆதிசத்திக்கு மேற்பட்ட சத்தியுமில்லை. பாசுபதாஸ்திரத்தை எதிர்க்க வல்லவருமில்லை. ஆதிசத்தியை வெல்லும் மலசத்தியுமில்லை பாசுபதாஸ்திரத்தை அழிக்க ஏவும் ஆயுதமுமில்லை. ஆதிசத்தியை விழுங்கும் மலசத்தியுமில்லை. மும்மலமாகிய பகைவரையும் மும்மல குணங்களாகிய சேனைகளையும் அழித்தல் காரணமாக ஐந்தொழில் என்னும் யுத்தம் எழுந்து நடைபெறும். முதலாம் யுத்தத்திலே மாயையாகிய சத்துருவும் மாயா குணங்களாகிய சேனைகளும் சங்கரிக்கப்படுவர். இரண்டாம் யுத்தத்திலே கன்மமாகிய பகைவனும் கன்மகுணங்களாகிய சேனைகளும் சங்கரிக்கப்படுவர் மூன்றும் யுத்தத்திலே ஆணவமலமாகிய பகைவனும் ஆணவமல குணங்களாகிய சேனைகளும் சங்கரிக்கப்படுவர். இப்படி மலப்பகைவரிலிருந்து உயிர்களை இரக்ஷிக்கு நிமித்தமாகவே சிவபெருமான் பாசுபதாஸ்திரமாகிய திரிசூலத்தைத் திருக்கரத்தில் ஏந்தியிருப்பர். மலப்பகையை அழித்தற்கு அது சாதனமாயிருத்தலால் அதனை ஆயுதமென்றற்கு இழுக்கில்லை.

இனி, இச்சத்தி ஆன்மாக்களைப் பிறப்பிறப்பிலும் துன்பத்திலும் அழுத்துதலாகிய ஐந்தொழில் செய்தலால் வரும் துன்பம் ஆன்மாவுக்கு என்று நாம் நினைக்கின்றோம். உண்மை அப்படியன்று. உடம்பில் துன்பம் மிக மிக யான் யான் என்னுஞ் செருக்கு அறும். இவ்வுடம்பில் வாழும் வாழ்க்கை இன்பகரம் என்னும் எண்ணம் போய் இவ்வுடம்பின் வாழ்க்கை மிகப் பொல்லாது என்னும் எண்ணம் சனிக்கும். மனைமக்கள் சுற்றம் செல்வம் ஆஸ்தியென்பவற்றால் துன்பம் மிக மிக எனது என்னுஞ் செருக்கு அறும். இவற்றோடு கூடி வாழ்தல் மிகப் பொல்லாது என்னும் எண்ணம் வரும். யான் எனது என்னும் செருக்கு மல குணமாதலால் அச்செருக்கழிதல் மல அழிவாமன்றி ஆன்ம அழிவாகமாட்டாது. யான் எனதென்னுஞ் செருக்கொழிதலே மலபரிபாகமெனப்படும். யான் எனதென்னுஞ் செருக்கொழியுமாறு கடவுள் தரும் துன்பத்தை நாம் நமக்கு வந்தனவாக எண்ணுகின்றோம். நமக்கன்று, மலத்துக்கே அத்துன்பம் கொடுக்கப்பட்டன. நாமல்லாத தேகத்தை நாம் என்று அபிமானிக்கச் செய்ததும் எமதல்லாத பண்ட பதார்த்தங்களை எமதென்று அபிமானிக்கச் செய்ததும் அதாவது யான் எனதென்னுஞ் செருக்கினை விளைவித்தது ஆணவமலசத்தியேயாம். ஆதலால், அம்மலசத்தி வலிகுன்றுமாறு கடவுள் பிறப்பிறப்பையும் துன்பத்தையும்

கொடுக்கின்றார். துன்பப்படும் போதெல்லாம் அச்செருக்கும் அறுகின்றது. இது அநுபவசித்தமான காரியம். இஃதுணராமல் நாம் உயிர்களுக்கே அத்துன்பத்தைக் கடவுள் கொடுப்பதாக எண்ணுகிறோம். அது பிழையான எண்ணம். ஒரு பரிகாரி கண்ணிற் படல முரித்தலும் சத்திரம் வைத்தலும் நோயைக் கெடுக்கும் நிமித்தமன்றி நோயுடையானைக் கெடுக்கு நிமித்தமன்று. அதுபோல முதல்வன் நம்பொருட்டுச் செய்யும் எத்தொழிலும் மலநீக்கங் காரணமாகவேயாம்

இறைவன் யான் எனதென்னுஞ் செருக்கொழியுமாறு துன்பங்கொடுத்து வருதலால், அச்செருக்கொழியவே சரீர வாழ்விலும் பிறவியினும் உவர்ப்புத்தோன்றும். அதனால் அப்பிறவிக்கு ஏதுவாகிய நன்மை தீமையினும் உவர்ப்புத்தோன்றும். அதனால் விருப்பு வெறுப்பு அறும். அப்படி விருப்பு வெறுப்பு அற்று நல்வினை தீவினை யொழிதலே இருவினை யொப்பாகும். இந்நிலையெய்தியபொழுது அருட்சத்தி பதிதலாகிய சத்திநிபாதம் உண்டாகும். அதனால் ஞானம் பிரகாசித்துச் சிவம் வெளிப்படும். அச்சிவப்பிரகாசத்துள்ளே நாம் தங்கினால் நம்மை ஒருகாலத்தும் மும்மலங்கள் வாதிக்கமாட்டா. எப்பொழுதும் ஆனந்த வாழ்வை அனுபவிக்கலாம்.

இதுவே முதல்வன் செய்யும் பஞ்சகிருத்தியத்தின் பயனும். ஆதலால் உயிர்கள் மேல் வைத்த கருணையினாலேயே முதல்வனார் இப்பஞ்சகிருத்தியஞ் செய்கிறார். அதை விளக்குவதே திரிசூல தாரணம்.

---

## கடவுள் சர்வாந்தரியாமி

### (இந்துசாதனப்பிரசுரம்)

கடவுள் ஆன்மாக்களுக்கெல்லாம் பரான்மாவாக அவர்களுக்குள் நின்று, அவர்களை அவ்வவர் தகுதிக்கேற்ப இயக்குபவராதலின் சர்வாந்தரியாமி எனப்படுவர். கடவுளே சடமும் சித்துமாகிய இருவகைப் பிரபஞ்சங்களுக்கும் தாரகமாயுள்ளவர். அவரே அனைத்துக்கும் ஆதாரமாய் விளங்குபவர். அனைத்தும் அவரிற்றானே தங்கிநிற்கும். கடவுளின் வேறாக யாதொரு பொருள் உண்டாயின், அந்தப் பொருளின்கட் கடவுளுடைய அதிகாரம் செல்லுமாறில்லையாகி, அவருடைய சர்வகர்த்திருத்துவத்



துக்குப் பங்கம் நேர்ந்திடும். யாதொரு பொருள் அவரின் வேறாக அமைந்து விளங்குமாயினும், அவருடைய அதிகாரம் அப்பொருளின்கட் செல்லும் என்று கொள்ளலாகாதோ எனின், அங்ஙனங் கொள்வதுண்டாயின், அவர் தமக்கு உரிமை யில்லாததொரு பொருளின்கட் டமது அதிகாரத்தைச் செலுத்துபவர் என்றாகி, ஆகவே அவர் பிறபொருளை இச்சித்தாராகி, அந்த இச்சை காரணமாகத் தமக்கோர் குறைவுடையராகிக் கடவுள் இலக்கணத்திற் பிறழ்ந்திடுவர் அல்லாமலும், யாதொரு பொருள் கடவுளின் வேறாக இருப்பதுண்டெனக் கொள்ளுமிடத்து, அந்தப் பொருள் உள்ள இடத்திலே கடவுள் இல்லை என்றாகிக் கடவுளுடைய பரிபூரணத்துவமும் பங்கமுற்றிடும். அதுமட்டோ! கடவுளின் வேறாக யாதொரு பொருள் உண்டெனக் கொண்டால், அப்பொருள் சுதந்திரமுடைத்தென்றாகி, எனவே அது எம் கடவுளென்றாகி அநேகேச்சுரவாதமாக முற்றிவிடும். கடவுள் சர்வாதார பூதரும் சர்வ பரிபூரணருமாதலால், அனைத்தும் அவரிடத்துத்தானே அமைந்து விளங்கும் என்பதும், அனைத்தையும் அவர் தாமே உயிர்க்குயிராய் நின்று இயக்குவர் என்பதும், எனவே அவர் சர்வாந்தரியாமி என்பதும் இனிதமைந்திடும்.

கடவுள் ஆன்மாக்களை எல்லாம் பரான்மாவாக நின்று இயக்குகின்றார் என்னும் உண்மையைத் தெளிவுற எடுத்து விளக்குதற் பொருட்டாகவே எங்கள் சைவசித்தாந்த சாஸ்திரங்கள் எல்லாம், அவர் ஆன்மாக்களுடைய இதயபங்கயத்திருந்து தாண்டவம் புரிகின்றார் என்று, அவருடைய அருள்வியஞ்சகத்தை வியப்புற எடுத்து விளக்கும். அதாவது, அவர் ஆன்மாக்களுடைய இதயங்கள்தோறும் வீற்றிருந்துகொண்டு அசைந்துகொண்டு அசபாநடனம் புரிகின்றார் என்றபடி. இந்த உண்மையே தியாகராசப் பெருமான் தமதடியருட் சிறந்த விஷ்ணுமூர்த்தியுடைய இதயத் தாமரையின்கட் சோமாஸ்கந்த மூர்த்தமாக எழுந்தருளியிருந்துகொண்டு அசபாநடனம் புரிகின்றார் என்னும் சரித்திரத்தாற் பெறப்படுவதுமாம். பூமிக்குச் சுழுமுநாநாடியாக விளங்குஞ் சிதம்பரத்திலே சிற்சபையின் கண்ணே நின்றுகொண்டு அருட்பர தாண்டவராகிய நடராசப்பெருமான் அனவரத தாண்டவஞ் செய்கின்றார் என்பதினாற் பெறப்படுவதும் இவ்வுண்மையேயாம். அவர் ஆன்மாக்கள்மீது வைத்த பெருங் கருணைத்திறம் ஒன்றேயல்லாற் பிறிதொரு நோக்கம் சிறிதுமின்றி, அணுத்துணையேனும் மனக்

கோட்டமிலராய் ஆனந்தமயராய் நின்று ஆன்மாக்களை அவ்வவர் பக்குவத்தளவாக இயக்கலின், இவ்வியக்கம் அவருடைய ஆனந்த நடனம் எனப்படும். அவர் சிறிதேனும் சலிப்பின்றி ஆனந்த மேலீட்டால் இத்தொழிலை மிக இலகுவிற் செய்தல் பற்றியே, இது அவருடைய திருக்கூத்தெனப்படுவது. இக்கூத்தாற் பெறப்படும் பயன் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம் அனுக்கிரகமாகிய ஐந்துமாதலின், இக்கூத்துப பஞ்சகிருத்திய நடனம் என்று சாத்திரங்களால் புகழ்ந்து போற்றப்படும். இந்தத் திருக்கூத்தின் உண்மைப்பொருளை உள்ளவாறு கண்டு பரமபதியாகிய சிவபெருமானுடைய பரமானந்த பரம காருண்ணியத்தைச் சுவைக்கவல்லார்க்கு. அந்தப் பரம்பொருள் "கனியினும் கட்டிபட்ட கரும்பினும்......இனியராய்த்" தித்திப்பர் என்பது அனுபூதிமான்களுடைய உண்மை அனுபவம். இந்த உண்மை அனுபவம் பற்றியே நடராச தரிசனம் முத்தியுபாயம் என்று வேதசிவாகமங்களெல்லாம் முழங்குவது.

> பத்திமையும் பரிசுமில்லாப் பசுபாச மறுத்தருளிப்
> பித்தனிவனென வென்னை யாக்குவித்துப் பேராமே
> சித்தமெனுந் திண்கயிற்றாற் றிருப்பாதங் கட்டுவித்த
> வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே.

என்று மணிவாசகப்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய அருள்வாக்கும் இவ்வுண்மையை வற்புறுத்தும்.

ஆன்மாக்களுக்கெல்லாம் பரான்மாவாகக் கடவுளே அமைந்து விளங்கி அவர்களை இயக்குகின்றாரென்றால், அவர்கள் செய்யும் பாவங்களையும் அவர்களைக்கொண்டு அவரே செய்விக்கின்றாரென்பது பெறப்பட்டு, அவரே அப்பாவங்களுக்குக் காரணராவதன்றி ஆன்மாக்கள் காரணர் எனப்படுவது கூடாதன்றே என்பீராயின், கடவுள் ஆன்மாக்களை இயக்குகின்றார் என்பதனால், அவ்வவர் பக்குவத்துக் கியைய, அவ்வவர் செய்தற்குரிய செயலை, அவ்வவரைக்கொண்டு அவர் செய்விக்கின்றார் என்பதல்லாமல், அவர்கள் தமது சுபாவிக தர்மத்தின் வழிநின்று செய்யமாட்டாததொரு செய்கையை அவர்களைக்கொண்டு அவர் செய்விக்கின்றார் என்பது சிறிதும் பெறப்படாது. அவர்கள் தனித்தியங்கும் வன்மை இலராதலால், அவர்கள் எங்ஙனம் இயங்கவல்லரோ, அங்ஙனமே அவர்களை எல்லாம் கடவுள் இயக்குவர். ஒரு இயந்திரத்தின்கணுள்ள பலவேறு வகைப்பட்ட கருவிகளையும் இயக்குந் தூமசக்தி



ஒன்றேயாயினும், அந்தக் கருவிகள் எல்லாம் இயங்குவது தத்தமது தகுதி அளவாகவேயாம். இதுபோலவே கடவுள் எல்லா ஆன்மாக்களையும் இயக்கும் ஆதாரசக்தியாய் அமைந்து விளங்குவாராயினும், அந்த ஆன்மாக்கள் இயங்குவதெல்லாம் தத்தமது தகுதி அளவாகவேயாம். ஆகவே அந்தத் தகுதியே அவர்கள் பாவஞ் செய்தற்கும் புண்ணியஞ் செய்தற்கும காரணமாவதன்றிக் கடவுளுடைய இயக்க சத்தியன்றும். அவர் கடவுளிடத்தே தனித்தியங்கும் வன்மை இல்லாமைபற்றி, அந்த வன்மையை அவர்களுக்குக் கொடுத்தன் மாத்திரமே கடவுளுடைய செயல். அந்தச் செயலைத் தம்பால் விரவப்பெற்ற ஆன்மாக்கள் தத்தமது பக்குவத்தளவாகப் பலவேறு வகைப்பட்ட செயல்களைப் புரிவர். ஒரு பிதா தன் புத்திரர் பலர்க்கும் ஒரு தொகைப் பணத்தைக் கொடுக்க, அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது விருப்புக்கியைந்தவாறு பல முயற்சிகளில் அப்பொருளை இட்டு, சிலர் இலாபமும் சிலர் நஷ்டமும் எய்தினாற்போல, கடவுள் ஆன்மாக்களுக்கெல்லாம் இயங்குதற சக்தியைக் கொடுக்க, அவ்வான்மாக்கள் தத்தம் தகுதிக் கியைந்தவாறு இயங்குவர். ஆகவே அவர்களுடைய இயக்க வேறுபாடுகளுக் கெல்லாம் காரணமாயுள்ளது அவர்களுடைய தகுதி எனப்படும் பக்குவமேயன்றிக் கடவுள் அவர்களுக்குக் கொடுத்த இயங்குதற்சத்தி அல்ல. இந்த இயக்க பேதங்களாற் பெறப்படும் பலன்களைக் கடவுள் அவர்களுக்கு ஏற்ற ஏற்ற காலங்களிலே அருத்துவதால், அவர்கள் படிமுறையாகத் தமது தகுதியிற் றிருத்த முற்றுக் காலாந்தரத்திலே உண்மை உணர்வு தலைப்படுவர். இதுவே கடவுள் அவர்களை இயக்குதற்கட் கொண்ட பெரு நோக்கமாம்.

ஆன்மாக்கள் எல்லாம் தமது சொரூபத்தளவிலே உண்மை அனுபவத்தை ஒரு காலத்தில் நுகர்தற்குரிய இயற்கை அமைதி வாய்ந்துள்ளாராயினும், அவர்களுடைய அறிவு சிற்றறிவாதலால், அந்த அறிவு விளக்கமடைதற்குரிய பக்குவம் எவ்வளவு மறைந்திருக்குமோ அவ்வளவாக அவ்வறிவை ஆணவமலம் மறைத்துக் கொண்டிருக்கும். இந்த மறைப்பை நீக்கி அவர்களுடைய சிற்றறிவைப் பூரண விளக்கமுறச் செய்து சிவானந்த போகத்தை ஊட்டியருளவேண்டி, கடவுள் அவர்களுக்கு மாயாகருவிகளைக்கொடுத்து, அக்கருவிகள் வாயிலாக அவர்கள் இயங்குமாறு, அவர்களை உயிர்க்குயிராய் நின்று இயக்குவர். இங்ஙனம் கடவுளால் இயக்கப்படு

மிடத்துத் தம்மைப் பந்தித்துள ஆணவமலத் தடிப்பளவாக இயங்குஞ் சீவர்கள், தாம் கடவுளால் இயக்கப்படுவதை, அந்த ஆணவமறைப்புக்காரணமாகக் காணமாட்டாமல், தாமே தனித்தியங்குவதாக அகந்தையுற்றுத் தற்போத மேற்கொண்டு ஒழுகுவர். இவ்வொழுக்கமும் அவ்வாணவமறைப்பின் காரியமேயாகும். இவ்வொழுக்கத்தாற் பெறப்படும் பலனை அவர்கள் காலந்தோறும் அநுபவிக்கவே, அவ்வநுபவங் காரணமாக அவர்களுடைய அகந்தையும் தற்போதமும் படிமுறையாகக் குறைந்து, அவற்றுக்குக் காரணமாயுள்ள ஆணவமலமும் தனது சத்தி குன்றப்பெறும். இது குன்றுதற்குப் பெருஞ்சாதனமாயுள்ளது அவர்கள் தமது இயக்கம் வாயிலாக அவ்வியக்கத்துக்குக் காரணமாயுள்ள திருவருளை அநுபவிக்கும் அநுபவமேயாகும். இவ்வநுபவம் வாயிலாக அவர்களைப் பந்தித்துள்ள ஆணவமலசத்தி குன்றவே, அவர்களுக்குக் காலாந்தரத்திலே உண்மை உணர்வு தலைப்பட்டுத் தமது இயக்கம் அனைத்தும் உயிர்க்குயிராகிய இறைவனது செயலன்றித் தமது செயலன்றெனும் பரம சத்தியம் புலப்படும். இது புலப்படவே, அவர்களுடைய தற்போதம் அவர்களை விட்டு ஒருங்கே நீங்கி எல்லாம் இறைவன் செயலெனக் கண்டு தமக்கோர் செயலற்றிருப்பர். இதுவே செயலறுதி என்றும் தற்போத ஒழிவென்றும் சாத்திரங்களால் எடுத்து விளக்கப்படும். இச்செயலறுதி வாய்க்கவே அவர்களுக்கு செயல்காரணமாக எய்தும் பலனுகர்ச்சியும் இல்லையாய்விடும். இது இல்லையாகவே, அவர்கள் எல்லாம் சிவன் செயல் எனக் கண்டு அந்தச் சிவனோடு இரண்டறக் கலந்துள்ள தமது அத்துவித நிலையை உள்ளபடி உணர்ந்து பரமசுகம் பெறுவர்.

இந்தச் சுகத்தைப் பிரசாதித் தருளுமாறே பரமபதியாகிய சிவபெருமான் ஆன்மாக்களை எல்லாம் அந்தரியாமியாகி நின்று இயக்குவதென்க.

## அறைக்குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை.

குறிப்பு. 1.—கிரிஸ்தியன் பேட்ரியட்டிலிருந்து, அதின் பத்திராதிபர் அநுமதியின்பேரில், மொழி பெயர்த்து அச்சிடப்பட்டது.

(பப்ளிஸிட்டி பீரோ பிரசுரம்)

வருஷாவருஷம் ஆயிரக்கணக்கான குழந்தைகள், கவனிப்பவர்களின் கவனக்குறைவால் பிறந்த சில நாள்களுக்குள்ளாகவே இறந்துபோகின்றதையோசிக்கும் காலத்து அறைக்குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டிய முறையைப் பற்றிய சில விஷயங்களை இங்கு குறிப்பது உபயோகமாயிருக்குமென்று தோன்றுகிறது.

### செய்யவேண்டிய காரியங்கள்.

(1) பிறந்த குழந்தையை, ஸ்நாநம் செய்விக்க ஏற்பாடுகள் தயாராகும் வரையில், ஒரு உலர்ந்த சுத்தமான துணியில் சுற்றி வைக்கவேண்டும். குழந்தை பிறப்பதற்கு முன் தாய்வயிற்றில் எவ்விதம் குளிர்படாது உஷ்ணம் காக்கப்பட்டு வந்ததோ அப்படியே, பிறந்த பிறகும் குளிர்ந்த காற்றுப்படாமலும் தேகச்சூடு குறையாமலும் வைக்கப்பட வேண்டும். குழந்தையை பிறந்த உடனே, தரையில் ஒரு கந்தலின்மேல் போர்த்தாமல் போட்டுவிடுவது ஸகஜம்; பிறந்த சில நாள்களுக்குள்ளாக அநேகம் குழந்தைகள், சாகிறதற்கு இதுவே காரணமாகிறது. குழந்தை குளிர்ந்தகாற்றுபடாமல் மூடிவைத்திருக்கப்பட்டால் குளிப்பாட்ட ஒரு அவசரமுமில்லை. பிறந்த இடத்தினுடைய சீதோஷ்ண ஸ்திதி முதலானவைகள் குழந்தைக்கு கொஞ்சங்கொஞ்சமாய் ஒத்துக்கொள்ளும்படி செய்யவேண்டும்.

(2) பிறந்த குழந்தையை சுத்தப்படுத்த எண்ணெயைத் தடவி ஸ்நானம் செய்து வைக்கவேண்டும். சுத்தம் செய்யவேண்டுமென்று பலமாய் தேய்த்து அதிக ஜலத்தைவிட்டு ஸ்நானம் செய்துவைப்பதைக் காட்டிலும் இது உத்தமம். குழந்தைகளின் அழுக்கை எடுப்பதற்காக, உள்சதை தெரியும்படியாக சொறிந்து தேய்ப்பதை நான் பார்த்திருக்கிறேன். அம்மாதிரி செய்தாலும் கூட சிசு முற்றும் சுத்தமாவதில்லை. கொஞ்சம் எண்ணெயை உபயோகித்தால் சுலபமாய் ஒரு நிமிஷத்தில் அசுத்தமெல்லாம் அதில் கரைந்து வந்துவிடும். குழந்தையை குளிப்பாட்டுவதற்கு அதிக

ஜலம் உபயோகிக்கக்கூடாது. அந்த ஜலம் அதிகச் சூடாயாவது, அல்லது சில்லென்றாவதிருக்கக்கூடாது.

(3) கொதிக்கவைத்து ஆறிய சுத்த ஜலத்தைக்கொண்டு, பிறந்த குழந்தையினுடைய கண்களையும் வாயையும் அலம்ப வேண்டும். பிறக்கும் எல்லா குழந்தைகள் விஷயத்திலும் அவைகளின் கண்கள் பிறந்த உடனே சரியாய் கவனிக்கப்பட்டிருந்தால், இப்பொழுது பூலோகத்தில் இருக்கும் குருடர்களில் பாதி குறைந்துவிடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வேறு எது எப்படியிருந்தாலும் ஸரி மருத்துவச்சியை குழந்தையின் கண்களை சரியாய் அலம்பச்சொல்ல வேண்டியதவசியம்; பக்கத்தில் வைத்தியனிருந்தால் தேவையான சிகிச்சையும் செய்யச் சொல்லவேண்டும். அமெரிக்காவில், மருத்துவச்சிகளும், வைத்தியர்களும் அவர்கள் கவனிக்குமிடங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு கண் நோய்களை தடுக்கும்பொருட்டு அவைகளின் கண்களில் நூற்றுக்கு இரண்டு பங்குவீதம் கலந்த ஸில்வர் நைட்ரேட் (silver nitrate) திராவகமாவது, அல்லது நூற்றுக்கு பன்னிரண்டரை பங்கு கலந்த ஆர்க்கயரால் (argyrol) என்னும் திராவகத்தையாவது, ஒரு துளிவிடவேண்டுமென்று ஒரு ஸர்க்கார் உத்திரவு இருக்கிறது. இந்த சிகிச்சையானது, பிறக்கும் குழந்தைகளில் 100-க்கு 99 பெயர்களுக்கு அனாவசியமாகவே யிருக்கலாம்; ஆயினும் மீதி ஒரு குழந்தை ஸம்பந்தப்பட்டவரையில் இதினால் ஆயுள் பூராவும் குருடாயிருப்பதிலிருந்து காப்பற்றப்பட்டால் இந்த சிகிச்சையை கைக்கொள்ள வேண்டியது அவசியமென்றாகவில்லையா?

(4) பிறந்தவுடன் மேற்சொன்ன பிரகாரம் செய்யத்தவறினாலும், பின்னால் சிசுவின் கண்களில், சிவப்போ அல்லது வீக்கமோ கண்டால் தாமதிக்காமல் ஒரு வைத்தியனைக்கொண்டு பார்க்க வேண்டும். கவனியாது இரண்டொரு நாள் விட்டுவிட்டாலும் மோசம் வந்துவிடும். பிறகு வெகு சாமர்த்தியமான வைத்தியனுக்கும் சாத்தியமில்லாமல்போய்விடும். இந்த விஷயத்தை முக்கியமாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தங்களுடைய குழந்தைகளின் கண்களைக் காப்பாற்ற ஆயிர ரூபாய் செலவழிக்க, தயாராயும், இரவும் பகலும் ஓயாது அதற்காக முயற்சிசெய்யும் பெற்றோர்கள் கூட ஆரம்பத்தில் இரண்டொருநாள் தாமதம் செய்தகாரணத்தினால், தங்கள் குழந்தைகள், பார்வை இழந்ததற்குத் தாங்களே காரணமாகிறார்கள். ஆரம்பத்தில் ஏதோ, ஒன்று



மில்லாததுபோல் கண்ணில் தோன்றும் வீக்கமும் சிவந்த நிறமும் கவனியாதுவிட்டால் கண்ணை அடியோடு அழித்துவிடும். ஆரம்பத்திலேயே வைத்தியனைக் கொண்டு சாதாரண சிகிச்சை செய்தாலும் கெடுதல் முழுவதும் நிவர்த்தியாய்விடும். பம்பாய் இராஜதானியில், ஜில்லா அதிகாரியாயிருக்கும் மிஸ்டர் ஜி. ஜி. ஹெண்டர்ஸன் துரையவர்களால் "குருடுக்கு உதவிபுரியும் சங்கம்" என்ற ஒரு சங்கமேற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சங்கத்தார் அந்த பட்டணத்தில், குழந்தைகள் பிறந்தவுடன், வீதிகளுக்குச் சென்று குழந்தைகளினுடையகண்களை தெரிந்தவர்களைக்கொண்டு சரியாய் பார்வையிட்டு, அதற்கு தகுந்த வைத்தியம்செய்ய முயலுகிறார்கள்.

(5) ஆகாரம் போடுவதைப்பற்றி.—பிறந்த குழந்தைக்கு தன்னுடைய தாயின் பாலைக் குடிக்க ஆரம்பிப்பதற்கு முன்பாக, யாதொரு ஆகாரமும், மருந்தும் தேவையில்லை. சாதாரணமாக சிசு முதலில் பாலில்லாமலே தன் சுயபலத்தைக்கொண்டே தாங்கிக்கொள்ளும். பிறந்து ஆறுமணி சாவகாசத்தின் பிறகு காலாகாலத்தில் தாய்ப்பால் கொடுத்துவரவேண்டும். விளக்கெண்ணெயைக்காட்டிலும், தாயின் சீயன்பால் மலத்தைக்கழிக்க மிகவும் நல்லது. குழந்தை தாயினிடத்து சீயம்பாலைக்குடித்தால் நல்லபால் பிறகு சீக்கிரம் சுரக்கும் மூன்றுநாள் வரையிலும் சீயம்பாலைக் குடித்து குழந்தை திருப்தியடையாமலிருந்தாலும் நஷ்டமொன்றுமில்லை; அப்பாலினால் மலம் கழிந்து வயிறு சுத்தமாய்விடும். ஆகவே கொடுத்த பாலை செரித்துக்கொள்ள சக்தியுமுண்டாகும். முதலிரண்டு நாட்களில், பசும்பாலையும், விளக்கெண்ணெயையும் கொடுத்து குழந்தையின் வயிற்றைக் கெடுப்பதைக்காட்டிலும் முதலில் கொஞ்சம் பசியுடன் தாய்ப்பால் அகப்பட்டால் போதுமென்ற அவாவுடன் விட்டுவிடுவது எத்தனையோ மடங்கு நலம். வேறொரு உணவும், மருந்தும் கொடாமல் தாய்பாலான சிசுவுக்கு ஏற்பட்ட இயற்கை உணவோடு மாத்திரம் சிசுவை விட்டுவிடுவது மிகவும் நல்லது. பிறந்து மூன்று நாள் வரையில் இம்மாதிரி செய்தால் குழந்தை, எதையும் ஜீரணம் செய்துகொள்கிறது. முதலிரண்டு நாட்களில், விளக்கெண்ணெயில்லாமல் தாய்ப்பாலைக் குடிப்பதினாலேயே கறுப்பு மலங்களை கழித்துக்கொள்ளுகிறது.

(6) தேக சௌக்கியமுள்ள சிசு 24 மணிநேரத்தில் 22 மணி நேரம் தூங்கவேண்டும்; பகலில் இரண்டு மணிக்கொருதடவை

யும், இரவில் மூன்று மணிக்கொரு தடவையும் பால் குடிக்கவேண்டும்; முதல், 10 நாள்களில் நாளொன்றுக்கு இரண்டல்லது மூன்று தடவை மலத்தை கழிக்கவேண்டும்.

செய்யக்கூடாதவைகள்.

(1) காற்றடிக்கும் இடத்திலாவது, மூடாமலாவது குழந்தையை வைத்திருக்கக்கூடாது.

(2) குளிப்பாட்டுகையில் வெந்நீரை அதிகமாயாவது மூச்சு திணறும்படியாவது விடக்கூடாது.

(3) குழந்தையின் தொப்புள் கொடிமேல், மண் முதலானவைகள் தடவக்கூடாது.

(4) குழந்தையின் கண்களை கவனியாமல் அஜாக்கிரதையாய் விட்டுவிடக்கூடாது.

(5) பிறந்த சிசுவுக்கு பசும்பாலும், விளக்கெண்ணெயும் கொடுக்க வேண்டாம்; தாய்க்கு பால் சுரக்கும் வரையில் தாமதிக்கலாம்.

(6) அழுகிறபோதெல்லாம் பால்கொடுக்கக்கூடாது. மணிக்கணக்காய் ஒரே ரீதியாய் பால் கொடுக்கவேண்டும்.

---

## சமரசஞானதீபம்

(சூளை - சோமசுந்தரநாயகரவர்களியற்றியது.)

(141-ம் பக்கத் தொடர்ச்சி.)

வியாதருடைய மாணாக்கராகிய ஜைமினி யென்பவர் வேதங்களையெல்லாஞ் சரியாக வோதியுணர்ந்துந் திருவருள் போதாமையால் அவ்வேதத்தாற் றுணியப்படு முண்மை தெளியாதவராயினர். வேதமானது பூர்வம், உத்தரம் என விரு பகுதியவாகி முன்னையது கருமத்தையும், பின்னையது பிரமத்தையும் பொருள்களெனச் சாதிக்கும். இரண்டையு மிலக்கணையாற் கவர்ந்து பிரமத்தையே வியாதர் பொருளாகத் துணிந்து வேதாந்த ஸூத்திரம் என்னும் பிரம்ஹ ஸூத்திரத்தைச் செய்தருளினர். இதற்கே வியாஸஸூத்திரம், பிரம மீமாஞ்சை, உத்தரமீமாஞ்சையெனப் பெயர்கள் வழங்கும். இந்நூலுக்கும், இதையியற்றிய வியாதருக்கும் விரோதமாய்க் கருமத்தை விட்டுப் பிரம மென்பதொரு பொருளுண்டாவ தில்லையென அவ்வேதத்தின் வழியே சாதிப்பான்



தொடங்கிப் பூர்வ மீமாஞ்சையென்னுங் கன்ம ஸூத்திரங்களை அச்சைமினிபகவான் வெளியிட்டனர். வியாதர் கருமத்தைத் தமது சித்தாந்தத்துக்கு ஸாதனமாகக் கொண்டவராகையா லதைத் தாம் விரோதியாவிட்டாலும் அச்சைமினிக்குண்மை வெளியாமாறு அவரைச் சூரியனிட மனுப்பினர். அவரிடஞ் சென்று படித்தும் அம்முனிவர் தெளியாதவராயினர். "நல்லன நூல் பல கற்பினுங் காண்பரிதே, யெல்லையில்லாத சிவம்" என ஔவையா ரருளிச்செய்த வாக்கியத்துக்கேயன்றோ அவரிலக்காயினர்? எவ்வளவு கற்றாலும், எவ்வளவு கேட்டாலும், எவ்வளவு பார்த்தாலு மென்ன பயன்? திருவரு ளில்லாதபோது. அருளிருந்தன்றி யமையாதென்பதை "அருளினு லாகமத்தே யறியலாம்" என்னும் சித்தாந்த போதகர் திருவாக்குங் காட்டும். இன்னும், "உன்திருவடிக் கீழுறுதியா மன்பு முன் 'திருவருளினாற் கிடைப்ப, தன்றி நூற்பலவு மாய்ந்ததா லுரைசெயாப்பநுந் திறமைபான் மதியான், மன்றவே கிடைப்பதன்று" என ஸ்ரீமத் அப்பதீக்ஷிதேந்திரர் கருத்தைச் சிவஞான யோகிகள் வெளிப்படுத்தினபடியாலுங் கண்டுகொள்க.

மேல் சூரியபகவானாலுந் தெளிவடையாதவராகிய அச்சைமினி பகவான் சிலகாலங்கடந்து பூப்பிரதட்சிணஞ் செய்யத்தொடங்கினர். அப்படிச் செய்து வருகையில் ஸ்ரீசிதம்பரத்தையடைந்து ஸ்ரீநடராஜமணியைக் கண்களின் பிரயோஜனமெனக் கண்டனர். கண்டமாத்திரத்தில் அழலிடைப்பட்ட மெழுகெனவுருகி நெஞ்சங்கசிந்து நெக்குவிட்டுநைந்து பரவசமாயினர். ஐயோ. தெய்வமில்லையென்று காலங்கழித்தோமே! நந்தீவினையிருந்தவாறென்னே! என்னே!! இதோ விருக்கின்றதே தெய்வம்! என்று ஓடிச்சென்று எம்பெருவாழ்வே! என்னன்பே! எனக்கட்டிக்கொண்டு கண்களில் நீர் ததும்ப முன்னே நின்று வேதபாதஸ்தவங்களால் துதித்தனர். 'வேதபாதஸ்தவம்' என்பது அவரால் துதிக்கப்பட்ட நூலின் பெயராம். ஒரு சுலோகத்தில் நான்கு பாதமாகையால் முன் மூன்று பாதங்கள் தமது சொந்த திருவாக்கும், நாலாவது பாதம் வேதமுமாகச் சேர்த்துப் பாடியதென்றறிக. எத்தனை வேதம் படித்து மென்னபயனுச்சது? திருவருளில்லாதபோது. "தில்லைச் சிதம்பரதேவா வுன்சித்தந் திரும்பிவிட்டால்" என்னும்படியன்றோ வுண்மை பிரகாசிக்கின்றது? "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்றபடியாலுந் தெளிக. இவ்வுண்மைகளால் தில்லையைக் கண்டால் முத்தியென்னுஞ் சாத்ருசமும், தில்லையிலுள்ளதே

தெய்வமென்னுஞ் சீர்பாடும் வெளிப்பட்டன. இவை ஸ்ரீருத்ரம்,
கைவல்யம், சாந்தோக்யம், மஹா நாராயணமித்யாதி யுபநிடதங்
களாற் பெறப்படுதல் காண்க.

இனிச் 'செகத்தீரேயென்று பொதுவகையாற் கூறியிருக்க
மேலிடத்திற் சைவரையே முன்னிட்டுரைத்தாரென்ற தென்னை
யெனின், செகத்தவர் பல்வேறுவகைப்பட்ட பரிபாகத்தால் சைவ
புத்தியின்றித் தேம்பித் திரிந்துழல்வாராக, அவர்போதங்களான்
மலைந்தும், அவர் கோள்களின் முனைந்தும், அவரநுபவங்களிலிளைந்
தும் அவரவராகி யலையாநிற்குமந்த பருவத்தினையுடைய சைவரை
நோக்கியே யிடித்துக்கூறத் தொடங்கினமையின், அவரையே
செகத்தீரேயென்று கூறினபடி யமைத்துக்கொள்க. அல்லதூஉம்
பொதுவாற் செகத்தவரைப் பார்த்துக் கூறினாரெனினு மிழுக்குறா
தென்க. செகத்தவரெல்லாம் வியட்டியால் அத்தில்லை யெல்லையி
னின்ற கடவுளையே "தந்தெய்வ மெந்தெய்வமென், றெங்குந்
தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றதெது" என்றபடிப்பற்றி வழக்
குப்பேசலால்அவரையே அவ்வழக்கறுத்தருளும் பொருட்டுச் சேர
வாருமென்றழைத்தபடியுங் கண்டுதெளிக. இவ்வாசிரியர் சைவ
மார்க்கமே சன்மார்க்கமென வற்புறுத்திக் கூறியுள்ள வாக்கியங்
களை யீண்டு வரைந்து காட்டுதும். "விண்ணவரிந் திரன்பிரமனா
தாதி விளங்கு சத்தரிஷிகள் கனவீணைவல்லோ, ரெண்ணரியசித்தர்
மநுவாதி வேந்த ரிருக்காதி மறைமுனிவரெல்லாமிந்தக், கண்ண
கன்ஞாலம் மதிக்கத்தானே யுள்ளங்கையினெல்லிக்கனிபோலக்
காட்சியாகத், திண்ணிய நல்லறிவாலிச் சமயத்தன்றோ செப்பரிய
சித்திமுத்தி சேர்ந்தாரென்றும்" எனவும், "செப்பரிய சமயநெறி
யெல்லாந்தந்தந் தெய்வமே தெய்வமெனுஞ் செயற்கையான, அப்
பரிசாளரு மஃதேபிடித்தாலிப்பா லடுத்த வந்நூல்களும் விரித்தே
யநுமானுதி, யொப்ப விரித்துரைப்பரிங்ஙன் பொய்மையென்ன
ஒன்றிலை யொன்றெனப் பார்ப்பதொவ்வாதார்க்கு, மிப்பரிசாஞ்
சமயமுமாயல்லவாகி யாது சமயமும் வணங்குமியல்பதாகி" என
வும், "இயல்பென்றுந் திரியாமலியமமாதி யெண்குணமுங் காட்டி
யன்பாலின்பமாகிப், பயனருளப் பொருள்கள் பரிவாரமாகிப்
பண்புறவுஞ் சௌபானபட்சங்காட்டி, மயலறு மந்திரஞ்சிட்சை
சோதிடாதி மற்றங்கநூல் வணங்கமௌனமோலி, அயர்வறச்சென்னி
யில் வைத்து ராஜாங்கத்தி லமர்ந்தது வைதிக சைவமழகிதந்தோ"
எனவும், "அந்தோ வீததிசய மிச்சமயம்போலின் றறிஞரெலா



நடுவறிய வணிமாவாதி, வந்தாடித் திரிபவர்க்கும் பேசாமோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்றுமற்று, மிந்திராதி போக நலம்
பெற்றபேர்க்கு மிதுவன்றித் தாயகம்வேறில்லை யில்லை, சந்தான
கற்பகம் போலருளைக் காட்டத்தக்க நெறியிந் நெறியேதான் சந்
மார்க்கம்" எனவும் போந்த வாக்கியங்களே சாலும்.

மேல் விசாரத்தால் எல்லா மார்க்கங்களினுஞ் சிறந்த மார்க்
கஞ் சைவமொன்றே யெனவும், அச்சைவத்தாற் பெறப்பட்ட
மெய்ப்பொருள் சிவமொன்றே யெனவும், அச்சிவம் தில்லைமன்
றுள் அனவரததாண்டவம் புரியாநிற்பதொன்றெனவும், அதுவே
தந்தெயவமெந்தெய்வமென்று சமயங்களெல்லாவற்றினும் வழக்குப்
பேசநிற்பதொன்றெனவும், அதனலெல்லாச் சமயங்களுமங்காங்கி
பாவத்தால் சைவமேயாகுமெனவும், சிவத்தைக்காட்டினும் வேறு
தெய்வந்தேடினுங் கிடையாமையா லெல்லாச் சமயங்களாலும்
போந்த தெய்வங்கள் யாவும் நம்பரசிவமொன்றே யெனவும்,
தெய்வ ஒற்றுமையானும், சமயாங்க வொற்றுமையானுஞ் சைவத்
திற்கு வேறானதொரு மார்க்கங் கிடையாமையால் சைவராயுள்ள
பேர் வேறாக வெண்ணுவதற்கு ஒரு சமயமு மில்லையெனவும், யாவ
ருஞ் சைவரேயாவரெனவுந் துணிவது மேலோர் மரபாம்.

இன்னுமிதை விரிக்கில் வேறுசமயிகளிடத்துச் சைவருக்குத்
துவேஷமுண்டாகக்கூடாத நியாயங்கள் பலபடக் கிடக்கும். எங்
ஙனமெனின், பொய்யாமை, கொல்லாமை, களவாமை, கள்ளாமை,
பிறர்மனை நயவாமை முதலிய நற்குணங்களுயிர்களுக்குரிய பூஷண
மாக வேதசிவாகமங்கள் விதந்துரைக்கும். "அழுக்காறவாவெ
குளியின்னச் சொனன்கு, மிழுக்காவியன்றதறம்" என்றதேத்யாதி
பிரமாணங்களுஞ் சான்றாம். இன்ன மங்கல குணங்களுத்த மோத்
தம மார்க்கமாகிய சைவத்துக்கேயமையும், இவை யச்சைவசம
யிகள் கொண்டொழுகற் பாலனவாகிய வறங்களாம். இங்ஙன
மாக, சைவரென்னும் பேர் மாத்திரம் வகித்துப் படிவிபூதியை
மேற்பூச்சாகக் கொண்டு பொதிபொதியாக ருத்ராக்ஷங்களைச்
சுமந்து பகல் வேடதாரிகளாய்த் திரித்து கொப்புங்கிளையுமே
விடுத்து வில்வமரத்தினிலைகளை ஸமூலமாய்ப் பறித்துச் சிவபூசை
யென்னும் வீண்வியாஜத்தாற் போதுபோக்கிக் காலங்கழித்துக்
கொண்டு சிவதிரவியாபஹாரங்களும், மேற்கூறிய தர்மவிஹீனங்
களுங்கொண்டுலையும்போலிச் சைவரையுமன்றோ வவர்வேடமாத்
திரத்தாலஞ்சி நாம் வழிபடுகின்றோம்? மேல் யாம் காட்டிய பகுதி

கள் சைவசமயிகளநுட்டிக்கற்பாலனவாகிய பாஹ்யாந்தரமான விரண்டு தர்மங்களாக வேற்படுகையா லிரண்டிலெதுகுறையினு மவரைவிவேகிகள் தள்ளவேண்டியது. இங்ஙனமாக, அந்தரதர்மங்க ணிறைந்திருப்பினும் பாஹ்யதர்மங்களில்லையாயி னவரை மாத்திரமே நாம் வர்ஜிக்கின்றோம். இப்படியே பாஹ்யதர்மங்க ணிறைந்திருப்பினு மந்தரதர்மங்களில்லையாயி னவரையும் நாம் வர்ஜிக்க வேண்டுமன்றோ? அப்படிக்கனுபவமின்றே! இது என்ன பெருந்தாழ்வு? சைவருளநேகர் பாஹ்ய தர்மிகளாகவே திரிவதன்றி அந்தரதர்மிகளாகக் கிடைப்பது அதிதுர்லபமாய்விட்டது. அந்தரத்திலவலம்பிப்பன வெல்லா முலகாயதர்க்குரிய வஞ்சம் பொறாமை முதலான வலக்ஷணங்களே யாகையால் அவரேன் புறச்சமயிகளாகமாட்டார்கள்? அப்படியே கடவுளில்லையென வுலகாயதஸித்தாந்தத்தைப் பாஹ்யத்தி லவலம்பிப்பவருள் பொய்யாமை முதலியவந்தர தர்மங்கள் ஸித்திக்கப் பெற்றவர் கிடைப்பினவரேன் சைவராகமாட்டார்கள்? சைவத்துக்கே யவை யுரியதருமங்களாகையால். இவை யெல்லாச் சமயங்கட்கும் பொதுக்குணங்களெனக் கூறுவாருமுளர். சைவத்தைவிட்டு ஒரு சமயமு முண்டாதற்கே யிடமில்லாதபோது அங்கே யவர்கூற்றுப் பயன்படுவதெங்ஙனம்? சைவத்தினடியாகவே யச்சமயங்கள் ஜீவித்தலாலவற்றுளித்தருமங்க ளுபசாரமெனக. பாஹ்யத்தில் சைவசின்னங் கண்டு சைவரென மருவும்படியே அந்தரத்திற் சைவதருமங்களைக் கண்டு சைவரெனமருவிக்களிகூர்தல் சாலுமெனக. இதனாலெந்தச் சமயிகளுஞ் சைவதருமங்களைப் பாஹ்யாந்தரங்களாகிய விரண்டுவகையாலுங் கொள்வதரிதாயினு மவற்றுளொருவகையாலாவ தவசியங் கொண்டே யிருப்பாராகையால் யாவருஞ் சைவரால் விரும்பத் தக்கவரே யாவர். இப்படிக் கூறியதால் பாஹ்யாந்தரங்களாற் சைவஸித்தி யுண்டாவது பரமகஷ்டமென்பதும், அப்படி யுண்டாகப்பெற்றவரருமையிற் கிடைப்பாரென்பதும், அவருக்கு ஸமரசஞானமுண்டாமென்பதும் ஏற்பட்டது. இவ்வாறன்றி மாயாவாதத்தையே வேதாந்தமெனவும், அந்தப்போலி வேதாந்தமுஞ் சைவஸித்தாந்தமும் சமரஸமாகிய வொரேஞானமெனவும் பேசிப் பொங்கியழிவார் கோளையும், ஆணவத்தான் மொத்துண்டு பிறந்திழலும் விண்டு முதலிய போலித்தெய்வங்களையும், நம்பரசிவமூர்த்தியையு மொரேதெய்வமென்று சமரஸஞானம் பேசிச் சழக்கிற்பட்டுழல்வார் கோளையுஞ் சமரஸமெனல் பொருந்தாது! பொருந்தாது!!

(இன்னும் வரும்)

# அறப்பளீசுர சதகம்.

இது சதுரகிரியென்னுந் தலத்தில் அறப்பளீசுரம் என்னும் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானது திருநாமத்தைச் செய்யுள் தோறும் அமைத்துப் பாடப் பெற்ற நூறு செய்யுள் கொண்ட ஒரு பிரபந்தம். இந்நூலின் செய்யுளொவ்வொன்றினும் இறுதியில் அருமைமதவேள் அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுர தேவனே" என்பது மகுடமாக அமைக்கப்பட்டிருத்தல் காண்க. அறப்பளீசுரரைப் புகழ்கின்ற சதகம் என இரண்டனுருபும் பயனுந் தொக்க தொகை யென்றாவது அறப்பளீசுரரது சம்பந்தமான சதகம் என ஆறாம் வேற்றுமைத் தொகையென்றாவது விரித்துரைத்துக்கொள்க. அறப்பள்ளி யென்பதைக் கோயிற் பெயரெனக் கொண்டால் அங்கு எழுந்தருளியிருக்கிற ஈசுரர் மேற் பாடிய சதகம் என்றாகும். சதகமாவது தொண்ணூற்றாறு பிரபந்தங்களுள் ஒன்று. அகப்பொருள் ஒன்றன் மேலாவது புறப்பொருள் ஒன்றன் மேலாவது நூறு செய்யுள் கற்பித்துக் கூறுதல் இதனிலக்கணம். அகப்பொருள் காம விஷயம். புறப்பொருள் மற்ற விஷயங்கள். இந்நூலில் பலவகை நீதிகளும் மற்றும் பலவகை இயல்புகளும் கூறப்பட்டுள்ளன வாதலால் இது புறப்பொருளின் மேற் கூறியதாகக் கொள்ளப்படும். "விளையுமொரு பொருண் மேலொரு நூறு, தழையவுரைத்தல் சதகமென்ப" என்பது இலக்கண விளக்கம். சதம் நூறு என்னுந் தொகையை யுணர்த்தும் வடசொல். அது கப்பிரத்யயம் பெற்றுச் சதகம் என்றாயிற்று.

இந்நூல், முதலிற்காப்புச் செய்யுளாயுள்ள வெண்பாவொன்று தவிர, நூறு ஆசிரிய விருத்தங்களை யுடையது. இந்நூலாசிரியர் அம்பலவாண கவிராய ரென்பது இந்நூலினீற்றில் தற்சிறப்புப் பாயிரமாகக் கூறிய செய்யுளில், "அம்பலவாண கவிராயனாகு மென்புன் கவியையுஞ் சூடியே மனமகிழ்ந்திடுவதுன் கடனாகும்" என்று இந்நூலாசிரியர் தாமே கூறியிருத்தலால் இனிது விளங்கும். இவர் சோழநாட்டில் தில்லையாடியில் வேளாளர் குலத்தில் சற்றேறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் தோன்றிப் பின்பு சீகாழியில் தங்கி, அறுபத்தேழு வயது வரையில் வாழ்ந்து இராம நாடகம், அனுமார் பிள்ளைத் தமிழ், சீகாழிப் புராணம் முதலிய நூல்களைச் செய்து பிரசித்தி பெற்ற சீகாழி அருணாசலக் கவிராயரது புதல்வர் நால்வருள் மூத்தவர். ஆகவே இவர் பிறந்த காலம்

ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்களுக்கு முன் என்பது விளங்குகின்றது. இவர் புதல்வர் சுப்பராயக் கவிராயர் என்பவர். இந்நூல் செய்யுட்களின் மகுடந்தோறும் "அருமை மதவேள் அனுதினமு மனதினினை" என்ற அடைமொழியைச் சிவபெருமானுக்குக் கொடுத்துக் கூறியிருத்தலால், இவர் மதவேள் என்னும் வேறு பெயருள்ள ஒரு பிரபுவினால் ஆதரிக்கப்பட்டவரென்று அறியலாம். அந்தப் பிரபுவானவர் வேளாள சாதியில் தோன்றினவர் என்றும், கங்காகுலத்தவர் என்றும் மோழை பூபதி என்னும் பிரபுவினது புதல்வர் என்றும், ஈகை அறிவு அழகு அதிகாரம் கீர்த்தி முதலியவற்றிற் சிறந்தவர் என்றும் இந்நூலால் விளங்கும். அறப்பள்ளி என்பது வைப்புத் தலங்களாகிய சிவதலங்களுள் ஒன்றென்றும், அது கொல்லி மலையைச் சார்ந்துளது என்றும், அதற்குச் சதுரகிரியென்னும்பெயருண்டென்றும், இச்சதகத்தைப் பாடுவித்தவர் கொல்லி மலையிலுள்ள குண்டுனி நாட்டுத் தலைவராகிய கருமக் கவுண்டர் என்றும், மதவேள் என்று கூறப்படுகிறவர் இவர் தாம் என்றும், மோழைக் கவுண்டர் என்பவர் இவருடைய தந்தையார் என்றும் சில முதியோர் கூறுகின்றனர்.

(இச்சரித்திரம், திருநெல்வேலி வித்வான் குப்புசாமி பிள்ளையவர்கள் அச்சிட்ட இச்சதக உரையில் இருப்பது—ப. ஆ.)

### தத்துவத் திரயம்.

பூதமோ ரைந்துடன் புலனைந்து ஞானம்
பொருந்து மிந்திரிய மைந்து
பொருவில்கன் மேந்திரிய மைந்துமன மாதியாம்
புகலரிய கரண நான்கே
ஓதினோ ரிலையான்ம தத்துவ மெனசசொல்வ
ருயர்கால நியதி கலையோ
டோங்கிவரு வித்தைரா கம்புருடன் மாயையென்
றுரை செய்யுமோ ரேழுமே
தீதில்வித் யாதத்வ மென்றிடவெ ரிலையலாற்
றிகழ்சுத்த வித்தை யீசன்
சீர்கொள்சா தாக்கியஞ் சத்திசிவ மைந்துமே
சிவதத்வ மென் றறைகுவார்
ஆதிவட நீழலிற் சனகாதி யர்க்கருள்செ
யண்ணலே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே.



### தேவர்கள் கால வளவை

சதுர்யுக மோரிரண் டாயிரம் பிற்படிற்
சதுமுகற் கொரு தினமதாஞ்
சாற்றுமித் தினமொன்றி லேயிந்த்ர பட்டங்க
டாமு மீரேழ் சென்றிடும்
மதிமலியு மித்தொகையி னயனுயு ளூறுபோய்
மாண்டபோ தொரு கற்பமாம்
மாறிவரு கற்பமொரு கோடிசென் றுநெடிய
மாறனக் கோர் தினமதாம்
துதிபரவு மித்தொகையி னொருகோடி நெடியமா
றோன்றியே போய் மறைந்தா
றேகையோர் பாகனே நீகைத் தலைமுடி
துளக்கிடுங் கால மென்பர்
அதிகமுள பலதேவா தேவனே தேவர்கட்
கரசனே யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே.

---

## தேவார வைப்புத்தல விளக்கம்.

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

### 12-வது வழுவூர்.

**திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் அருளிச்செய்த க்ஷேத்திரகோவை.**

திருச்சிற்றம்பலம்.

*அட்டானமென்றோதியநாலிரண்டு மழகனுறைகாவனைத்துந்துறைக ளெட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங் குளமூன் றுங்களமைஞ்சும்பாடி நான்கு, மட்டார்குழலாண்மலைமங்கைபங்கன் மதிக்குமிடமாகியபாழி மூன்றுஞ், சிட்டானவன்பாசூரென்றேவிரும்பா யரும்பாவங்களாயின தேய்ந்தறுமே.

திருச்சிற்றம்பலம்.

**திருநாவுக்கரசுநாயனுர் அருளிய அடைவுத்திருத்தாண்டகம்.**

திருச்சிற்றம்பலம்.

காவிரியின்கரைக்கண்டிவீரட்டானங் கடவூர்வீரட்டானங்காமருசீரதிகை, மேவியவீரட்டானம்வழுவைவீரட்டம் வியன்பறியல்வீரட்டம்விடையூர்திக்கிடமாங், கோவல்நகர்வீரட்டங்குறுக்கைவீரட்டங் கோத்திட்டை

* அட்டானமென்பது சிவபெருமான் செய்தருளிய அட்ட வீரட்டத்தன் இதுவும் ஒன்றும்.

குடிவீரட்டானமிவைகூறி, நாவினவின்றுரைப்பார்க்கு நணுகச்சென்று
ணமன்றமருஞ்சிவன்றமரென்றகல்வர்நன்கே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தாருகாவனத்து இருடிகளால் ஏவப்பட்ட யானையைச் சிவபெருமான் உரித்துடுத்திக்கொண்ட வீரட்டம்.

இது இவ்வாறாகச் சிலர் பழூரென்னும் தேவாரத்திருப்பதிகம்பெற்ற தலத்தை யானையையுரித்துப் போர்த்த வீரட்டமெனச் சொல்லியும் எழுதியும் வருகின்றனர். பழூர் பரசுராமர் பூசித்த தலமேயன்றி யானையை யுரித்ததலமன்று. இதனுண்மை அப்பழூர் ஆலயத்தின்கணுள்ள திருவுருவங்களாலும் அங்குநடக்கும் ஐதீகங்களாலும் இனிதுவிளங்கும். மாவழூரென்றதை மாப்பழூரென மாற்றுதல் முறையன்று.

இவ்வழூரென்னும் வீரட்டானம், பிப்பிலவனம், சமீவனம், பதரிகாவனம், தாருகாவனம் என்னும் இந்நான்கு வனங்களாற் சூழப்பட்டது. இத்தலத்தில் பிக்ஷாடனவுருவங்கொண்ட சிவபெருமான் மோகினியுருக்கொண்ட விஷ்ணுவுடன் தாருகாவனத்துக்குச் சென்று அவ்வனத்து இருடிகளால் விடப்பட்டுவந்த யானையையுரித்துப் போர்த்துக்கொண்ட சரித்திர ஐதீகப்படி இன்றளவும் மாசிமாதத்தில் உற்சவம் நடந்துவருகின்றது. பிக்ஷாடனமூர்த்தியைக் கண்டமாத்திரத்தே தாருகாவனத்து இருடிபன்னியர் அரையிலணிந்துள்ள ஆடைவழுவினமையின் வழுவூரெனப் பெயர்பெற்றது. இருடிகளால் ஏவப்பட்ட யானையானது பிக்ஷாடனமூர்த்தியிடம் செல்லுதற்கு அச்சமுற்று நின்றதைக்கண்ட இருடிகள் பிக்ஷாடனமூர்த்தியால் உனக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்து உனது தேகத்தினின்றும் உதிரம் பூமியிற் சிந்துமேல் ஒருதிவலைக்கு ஒரு யானையாக உற்பத்தியாகி, உனக்கு உதவிசெய்யுமென்றருள அவ்வருளைப்பெற்றுக்கொண்ட அவ்யானை பிக்ஷாடனமூர்த்தியிடம் சென்றெதிர்க்க அப்பெருமான் உரித்தகாலத்து ஒரு திவலையுதிரம் பூமியில் விழுந்ததனால் தோன்றிய ஒரு யானையைப் பிக்ஷாடனமூர்த்தி அரிஹரகுமரனென்னும் ஐயனாருக்கு வாகனமாகும் பொருட்டு அனுக்கிரகஞ் செய்தார். இதற்குத் திருட்டாந்தமாக இத்தலத்து வீதிக்குட்பட்டு ஐயனார் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிறார்.

சுவாமி பெயர் கிருத்திவாசர், அம்பிகைபெயர் பாலாங்குராம்பிகை, தீர்த்தம் பஞ்சப்பிரமம், இத்தலம் மாயூரமிருந்து



திருவாரூருக்குப்போகும் ரெயில்வேமார்க்கத்தில் மங்கைநல்லூர் ஸ்டேஷனுக்கு ஒருமயில் தூரத்திலுள்ளது.

## 13-வது விளத்தொட்டி.

திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

மண்ணிப்படிக்கரைவா ளொளிபுத்தூர் வக்கரைமர்தாரம்வாரணாசி,
வெண்ணிவிளத்தொட்டி வேள்விக்குடிவிளமர்விராடபுரம்வேட்களத்தும்,
பெண்ணையருட்டுறைதண்பெண்ணாகடம்பிறம்பில் பெரும்புலியூர்பெருவேளூரும், கண்ணைகளக்காறை கழிப்பாலையும் கயிலாயநாதனையேகாணலாமே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் இந்திரன் முதலிய திக்குப்பாலகரும் பிரமதேவரும் பூசித்து வரம்பெற்றது. இக்காலத்தும் இத்தலத்தில் பைத்தியமுதலிய கொடியரோகங்கள் நிவர்த்தியாகின்றன.

சுவாமிபெயர் பிரமபுரீசர், அம்பிகை இக்ஷுரசநாயகி, பிரமதீர்த்தம். இத்தலம் வைதீஸ்வரன்கோயில் றெயில்வேஸ்டேஷனிலிருந்து திருப்பந்தணைநல்லூருக்குப் போகிற மார்க்கத்தில் பன்னிரண்டுமயில் தூரத்துள்ளது.

## 14-வது திருபுவனம்.

திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த திருவீழிமிழலைத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

புன்கூரார் புறம்பயத்தார் புத்தூருள்ளார் பூவணத்தார் புலிவலத்தார் வலியின்மிக்க, தன்கூர்மைகருதிவரை யெடுக்கலுற்றான்றலைகளொடுமலைகளனைதாளுந்தோளும், பொன்கூறுங்கழலடியோர்விரலாலூன்றிப் பொருப்பதின்கீழ் நெரித்தருள்செய்புவனநாதர், மின்கூறுஞ்சடைமுடியார் விடையின்பாகர்வீழிமிழலையேமேவினாரே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் இரணிய சம்மாரஞ்செய்து செருக்கிநின்ற நாசிம்மத்தைத் தேவர்கள் வேண்டுகோளால் சிவபெருமான் சரபாவதாரங்கொண்டு அடக்கியது. வாணாசுரனாலும் பூசிக்கப்பட்டது. வரகுணபாண்டியர் தமக்கு நேர்ந்த பிரமஹத்தியென்னும் பழி நீங்கிச் செல்லுங்கால் அப்பழி பின்னுந் தொடருமோவென அவருக்குண்டாகிய நடுக்கத்தைத் தீர்த்தது. அக்காரணம்பற்றிச் சுவாமிக்குக் கம்பஹரேசர் என்னும் திருநாமமுண்டு.

சுவாமிபெயர் புவனநாதர் அம்பிகை புவனேஸ்வரி; தீர்த்தம் காவேரி. இது திருவிடைமருதூர் ரெயில்வேஸ்டேஷனுக்கு இரண்டு மயில் தூரத்துள்ளது.

### 15-வது கூந்தலூர்.

திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

*தினைநகர்சேரஞ்சேய்ஞலூர்செம்பொன்பள்ளி தேவூர்சிரபுரஞ்சிற்றேமஞ் சேறை, கொண்டீச்சரங்கூந்தலூர்கூழையூர்கூடல்குறுகாவூர்வெள்ளடை குமரிகொங்கு, அண்டர்தொழுமதிகைவீரட்டானமையாறு சோகந்தியா மாத்தூருங், கண்டியூர் வீரட்டங்கருகாவூருங்கயிலாயநாதனையேகாண லாமே.*

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் குமாரக்கடவுள் உரோமரிஷி சீதை என்னும் இவர்களாற் பூசிக்கப்பட்டது. குமாரக்கடவுள் பூசித்தமைக்கு அடையாளமாக ஆலயத்தின் முற்பக்கத்திலும் குமாரக்கடவுளுக்குத் தனியாக ஆலயம் அமைந்திருக்கின்றது. கோபுரவாயிலின் உட்பக்கத்தில் உரோமரிஷியின் திருவுருவம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

சுவாமி பெயர் சண்பகாரண்யேசுரர், அம்பிகை ஆனந்தவல்லி, தெற்கில் குமாரதீர்த்தமும், ஈசான்யத்தில் சீதாதீர்த்தமுமுள்ளது. இது கும்பகோணம் றெயில்வேஸ்டேஷனுக்கு ஒன்பது மயில் தூரத்தில் நாச்சியார் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள பேணுபெருந்துறை யென்னும் சிவஸ்தலத்துக் கருகிலுள்ளது.

### 16-வது குத்தங்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநயனார் அருளிச்செய்த க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ் குருந்தங்குடி தேவன்குடிமருவு
மத்தங்குடிதண்டிரு வண்குடியுமலம்புஞ் சலந்தண்சடைவைத்துகந்த
நித்தனிமலனுமையோடுங்கூடநெடுங்காலமுறைவிடமென் றுசொல்லாப்
புத்தர்புறங்கூறியபுன் சமணர்நெடும்பொய்களைவிட்டுநினைந்துய்ம்மினே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் கோடீசுரர், அம்பிகை பெரியநாயகி, இத்தலம் குற்றாலம் றெயில்வேஸ்டேஷனிலிருந்து ஐந்துமயில் தூரத்தில் தேரழுந்தூரென்னும் சிவஸ்தலத்துக் கருகிலுள்ளது.

(இன்னும் வரும்.)

பு. வே. சுப்பராய முதலியார்.

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

| மலர் 7 | துன்மதிஞு மார்கழி - தைமீ 1921ஞு டிசம்பர் - 1922 ஜனவரிமீ | இதழ் 9, 10. |
| --- | --- | --- |

### தேவாரம்.

ஈச னென்னை யறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி யேத்தப் பெறுதலால்
ஈசன் சேவடி யேத்தப் பெற்றேனினி
ஈசன் றன்னையு மியான்மறக் கிற்பனே.

---

## "மறுபிறப்பு" வாதம்.

(ஞானசித்திப் பிரகரம்.)

உரோமான் கத்தோலிக்கர் ஆன்மாவுக்கு மறுபிறப்பு இல்லையென்று வாதித்து ஒரு புத்தகம் பிரசுரித்திருக்கின்றனர். அவர் விடுத்த ஆசங்கைகளும் முடிபுகளுமாகிய அவை நோக்குந்தோறும் எமக்குப் பெருநகை விளைவிக்கின்றன. பலவிடங்களிலே சைவசமயத்தவர் கொள்கையல்லாத விஷயங்கள் பலவற்றைச் சைவசமயத்தவர் கொள்கையென்று கூறி அதற்கு மறுப்புஞ் சொல்லிப் போகின்றார். அது அவரது அறிவின் மதுகையை வெளிப்படுத்துகின்றதே யன்றிச் சைவசமயத்தவரது சித்தாந்தத்தை மறுக்கு மாற்றல் பெறமாட்டாது. அதனை ஆண்டாண்டு எடுத்துக் காட்டுதும்.

"ஞானசேட்டை உள்ளதாய், அழிபுந் தன்மையற்ற சித்துப் பொருளாய் விளங்குகிற நமது ஆத்துமாவானது சந்மாந்தரங்களில் தேவராய், மனிதராய், நாற்கால் விலங்குகளாய், பறவைகளாய், ஊர்வனவாய், நீர்வாழ்வனவாய், தாவரமாய்ப் பிறந்தும் இறந்தும் உழன்றுகொண்டு வரும் என்றதே மறுபிறப்புக் கொள்கை" என்

கின்றார். சைவசமயிகள் மாத்திரமோ ஆங்கிலேய தத்துவ சாஸ்திர விற்பன்னர்களும் மனிதன் இந்நிலைக்கு வருவதன் முன்னே குரங்காதி விலங்கினங்களிலும் அதனினுங் கீழ்ப்பட்ட பிறவிகளிலும் நின்று பரம்பரியத்தில் மாறுபட்டு மாறுபட்டு உயர்ந்த இந்த மனிதசரீரமாகிய நிலைக்கு வந்திருக்கின்றான் என்று சாதிக்கின்றார்களே. இவர் அதனை அறியாரோ. இன்னும் இவரே "எகிப்தியர், கிரேக்கர், புத்தர் முதலிய மற்றவர்களும் மறுபிறப்பு உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்" என்கின்றார். உலகத்திலுள்ள எல்லாச் சமயத்தவரும் மறுபிறப்பு உண்டென்று ஆய்ந்து கூற இக்கிறிஸ்தவர் மட்டும் இல்லையென்று சொல்லுவதால் ஆவதென்னை. பலர் கூற்றினும் இவரொருவர் கூற்று மேலாவதெவ்வண்ணம். அன்றியும் உலகத்தார் பலரும் உண்டென்று சொல்லும் இதனை இல்லையென்று சொல்லுகிற இவர், "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத், தலகையா வைக்கப்படும்" என்னும் நாயனார் வாக்குக்கு இலக்காவரே. இது நிற்க.

"மறுபிறப்புக் கொள்கை தொடங்கிய காலம்" என ஒன்றெழுதுகின்றார். உலகந்தோன்றி ஆறாயிர மாண்டுதா னாயிற்றென்ற சொல்லை நம்பிய கிறிஸ்துமதாநுசாரிகள் சிலர் தம் மதாவேச நிலையில் நின்றுகொண்டு சைவசமய வேதாகமங்களையும் அவ்வெல்லைக்குட்படுத்த முயன்று ஒரு பிரமாணமுமின்றி மனம்போந்தவாறு குழறி வழிந்தவைகளையெல்லாம் இவரும் பாடமாக்கிக்கொண்டு நாகரிகம் பெருத்த இக்காலத்திலும் பேச வருவது நகையினும் நகையை விளைவிக்கும். இக்காலத்திலே உலகம் உண்டாகிப் பலகோடி வருஷங்களாயினவென்னும் சைவசமயத்தவர் கொள்கையே உலகமுழுவதும் பரந்து ஓங்க ஆறாயிரமாண்டுதானாயிற்று என்னும் கிறிஸ்தவர் கொள்கை பரிகசிக்கப்படுதலை இவரறிந்திலரோ! அறிந்தும் நாணத்தால் மறைக்கின்றனரோ! இதைப் பற்றி இவர் எழுதியவெல்லாம் பயனில் மொழிகளாயொழிதலின் அவற்றைக் கடைக்கணிக்காது ஒதுக்கி மேற்கோளைச் சாதிக்குமேதுவைத் தொடர்ந்து மேலே செல்லுதும்.

ஆன்மாவினியல்பு இத்தன்மைத்தென உணர்ந்தவர்க்கன்றி உணராதவர்க்கு மறுபிறப்பு உண்டென்னுமுணர்வு எழமாட்டாது. கிறிஸ்தவர்க்கோ ஆன்மவியல்பு எட்டுணையும் புலப்படமாட்டாது. நாம் பலமுறை பலரோடு வார்த்தையாட நேர்ந்தபோது "ஆன்மா எப்பொழுது எவ்விதமாய் யாரால் உண்டாக்கப்பட்டது என்பதை



விவிலிய நூலிலிருந்து காட்ட நும்மாலியலுமோ" எனவும், "ஆன்மா ஒருகாலத்து ஒருவரால் உண்டாக்கப்பட்டதெனின், அது எதுபோலும்? குடம் போலுமெனின், குடம் மண்ணாகிய காரணத்திலிருந்து காரியமாயவாறு ஆன்மா எந்தக் காரணத்திலிருந்து காரியமாயிற்று? மண்ணணுக்கள் பல ஒருங்குகூடிக் குடமெனப்படுதல்போல எவ்வணுக்கள் ஒருங்குகூடி ஆன்மா வெனப்பட்டன? பல மண்ணணுக்களின் சையோகத்தாற் பிறந்த குடம் அவ்வணுக்களின் வியோகத்தால் அழிவெய்தல்போல ஆன்மாவும் ஒரு ஞான்று அழிவெய்துமோ? பல அணுக்கள் ஒருங்கு கூடுதலைத் தவிர "உண்டாதல்" என்னுஞ் சொற்குப் பொருள் வேறுமுண்டோ? ஆன்மா கடவுளால் உண்டாக்கப்பட்டதெனின், அது காரண காரிய வேறுபாடுடையதாயும் குடம்போல அழிதன்மாலைத்தாயும் ஒழியுமே? அங்ஙன மொழியுமதனை நீவிர் நித்தமாயிருக்குமெனல் எவ்வண்ணம்?" எனவும், "ஆன்மா வியாபியோ, ஏகதேசியோ? அருவமோ, உருவமோ? சரீரத்தின் மாத்திரமுள்ளதோ, அதைக்கடந்து வெளிடங்களினுமுள்ளதோ? சரீரத்தின் மாத்திரமிருக்குமெனின், ஓரிடத்திருக்குமோ சரீரமுழுதுமிருக்குமோ? எனவும். "ஆன்மா சித்தோ சடமோ? சித்துப்பொருள் காரியப்பாடுறுதலாகிய "உண்டாந்தன்மை" யும் பெறுமோ? பெறுமெனின், அது எதுபோலும்? எனவும் இவை போல்வனவுமாக வினவும் வினாக்களுக்கு விடைகொடுக்க வியலாது விழிபிதுங்கி நெஞ்சம் புலர்ந்து மனந்தடுமாறி எழுந்தோடுமவர் நிலைகண்டு புன்னகை புரிந்து இரக்கமெய்தி வாளாவிருந்தனம். இவர் சற்றே தருக்கவுணர்வுடையார்போலவும் பதார்த்தவியல்பறிந்தார் போலவும் பேசுதலால் இவரிடத்தும் இவ்வினாக்களை விடுகின்றேம். ஆற்றலுளரேல் விவிலிய நூலுக்கு இயைய விடைதருவாராக.

இனி, இங்ஙனம் நீர் வினவுங் காரணம் யாதுபற்றியெனின், கிறிஸ்தவர்க்கு ஆன்மவியல்பு எட்டுணையும் புலப்படமாட்டாதென்பதனை யுணர்த்துதற்கேயாம். ஆன்மவியல்பு இத்தன்மைத்தென்றுணராதவர் மறுபிறப்பு உண்டென்றும் இல்லையென்றும் பகுத்துணரும் ஆற்றல் பெறார். உணர முயலினும் அது குழந்தைவாய் நுழைந்த பாலைக் குருடனுணர்ந்த கதைக்கொத்து விபரீதமாய் முடியும். ஆகலின், இவ்விஷயத்திலே இவர் தலையிட்டுக்கொள்வது வீண்செயலேயாம்.

இன்னும் மறுபிறப்பின் உண்மை யுணர்தற்குக் கன்மத்தின் இயல்பும் தெரிந்திருக்க வேண்டும். கிறிஸ்தவர்க்கோ கன்மவியல்பு எட்டுணையும் தெரியமாட்டாது. அதனால் மறுபிறப்பின் உண்மை மனத்திற் படிவதும் அருமையேயாம். கிறிஸ்தவர்கள் இனியொரு சமயத்திலே நியாயத்தீர்ப்புநாள் வரப்போகின்றதென்றும் அப்பொழுது இறந்துபோன மனிதரை யேசுவானவர் எழுப்பி நித்திய மோட்சத்துக்கும் நித்திய நரகத்துக்கும் அனுப்புவாரென்றும் சொல்லுகிறார்கள். மோட்சத்துக்கும் நரகத்துக்குமாக வித்தியாசம் வைத்து அனுப்புவது யாதன் பொருட்டென்றால், அவரவர் புண்ணிய பாபத்தின் பொருட்டென்கின்றனர். அப்படியிருந்தும் கன்மபேதம் இன்னதென்று அவர்க்கு விளங்கவில்லை. நரகத்துன்பத்துக்கும் மோட்ச இன்பத்துக்கும் பாவபுண்ணியங் காரணமென ஒத்துக்கொள்ளுகிறவர்கள் மறுபிறப்பு உண்டென ஒத்துக்கொள்ளக் கடமைப்பட்டவர்களாகிறார்கள்.

(வரும்.)

---

## சுப்பிறீங்கோடு.

### (இந்து சாதனம்.)

மகா மாயா தேசத்துச் சாதாக்கிய நகரத்துச் சதாசிவ சக்கிரவர்த்தியாரின் அதியுன்னத அலங்கார மாளிகையிலே ஒரு சுப்பிறீங்கோடு கூடிற்று. தைமீ ௧௨ அது தொடங்கப்பட்டது. பிருதிவி முதல் சிவதத்துவ மீறான முப்பத்தாறு தத்துவ இரத்தினங்களாற் குயின்ற அழகிய மந்திர சிம்மாசனம் ஒன்று அம்மாளிகை மத்தியில் இட்டிருந்தது. இம்முறை கனம் தக்ஷிணாமூர்த்தி ஐயர் சுப்பிறீங்கோட்டு நீதிவானாக அமைந்து குறித்த தேதியில் வந்து சிம்மாசனமேறினர். ௧௨ மணியளவில் கோர்ட்டு ஆரம்பிக்கப்பட்டது. திருநந்திதேவர் என்பவர் சுப்பிறீங்கோட்டு முதலியாராயினர். பசுபதி முதலியார் முடிப்புறத்து நியாயதுரந்தரர்.

வழக்காளி - ஆதிதேவி.
எதிரி - கறுப்பண்ணன்.

சாட்சிகள்: மாயாதேவி, இச்சாதேவி, கிரியாதேவி, ஞானம்பாள் என்னும் நால்வர்.

யூரிகள்; சதுர்முகசர்மா, நாராயணவர்மா, நீலகண்டய்யர், பரமேசுரய்யர், சதாசிவ முதலியார் என்னும் ஐவர்.



வழக்கின் விவரமானது:—பராசத்தியென்னும் ஒரு பட்டமகிஷியின் பிள்ளையாகிய ஒரு புற்கலன் என்னும் ராசகுமாரன் பிள்ளைமையினால் விளையாடச் சென்றபோது, குற்றவாளி அவனைக் கவர்ந்து மைபூசி மயக்கி ஆசைகாட்டி யழைத்துப்போய், மெய்யப்பன், வாகீசன், கண்ணுச்சாமி, மூக்கன், காதன் என்னும் ஐந்து வேடர்களையும் சேர்த்துக்கொண்டு, தராதல வனத்தில் வைத்து அங்கும் இங்கும் அலைத்து அலக்கழித்து, அச்சிறுவனுடைய கிரீடத்தையும் பதக்கத்தையும் அரைஞாணையும் காற்சதங்கை, கைக்காப்புகளையும், கொற்றக்குடையையும் களவுசெய்ததுமன்றிக், கொலைசெய்யவும் முயலும்போது, மாயாதேவியென்னும் குறத்தி செவிலித்தாயாரான இரண்டாம் மூன்றாம் நான்காம் சாட்சிகளுக்கு அறிவிக்க, அவர்களும் அதை நேரிற்கண்டு கைத்தாயான ஆதிதேவியிடம் தெரிவித்தார்கள். ஆதிதேவி கீழ்க்கோர்ட்டு நியாயாதிபதியாகிய பிரகிருதிநகரத்துச் சங்கரசர்மாவிடம் முறைப்பாடுசெய்து பிடிவிறாந்துவிட்டுப் பிடிப்பித்தனர். கருணாகரன் என்னும் போலீசுத்தலைவர் போய்ப் பிடித்துச் சோதித்த பொழுது, வேடர்கள் ஐவரும் ஓடி மறைந்துவிட, குற்றவாளி அகப்பட்டனன். அவனிடத்தே பிள்ளையும் கழற்றப்பட்ட நகைகளும் அகப்பட்டன. கீழ்க்கோர்ட்டார் வழக்கை விசாரித்துச் சுப்பிறீங்கோர்ட்டுக்குப் பாரப்படுத்தினர். இதுவே முன் நடந்த சம்பவம்.

பின்பு சுப்புறீங்கோர்ட்டிலும் வழக்காளியும் சாட்சிகளும் எதிரியும் விளக்கப்பட்டார்கள். வழக்காளியும் சாட்சிகளும் உண்மையை உண்மையாம்படி சொன்னார்கள். எதிரியாகிய கறுப்பண்ணன் தான் வீதியிற் போகும்போது பிள்ளை வலிந்து தன்னைத் தாவியதாகவும், அதனால் தானும் அப்பிள்ளையை எடுத்துக்கொண்டு போய் வைத்திருந்ததாகவும், வைத்திருந்தவிடத்தில் நகைகளைக் கழற்றியது உண்மையென்றும், அதனால் தான் குற்றவாளியல்லவென்றும் கூறினன். ஆயினும் அவனிடத்தே கெட்ட எண்ணமிருப்பதைக்கண்டு, அறியாத குழந்தை தாவிவரினும் எடுத்துக்கொண்டு காட்டுக்குப்போனதும் வேடரைச்சேர்த்து நகைகளைக் கழற்றியதும் கொலைசெய்ய முயன்றதும் சாட்சிகளால் வெளிப்படுதலால், எதிரி குற்றவாளியேயாமென்று யூரிமார் ஒரேமனதாய்ச் சொல்ல, கனம்பொருந்திய சுப்பிறீங்கோர்ட்டு நியாயாதிபதியவர்கள் எதிரியைச் சதாகாலமறியலுக்கு நியமனஞ்செய்து,

நகைகளை வாங்கி ராஜகுமாரனுக்கு அணிந்து கைத்தாயாகிய ஆதிதேவியிடம் அப்பிள்ளையை ஒப்பித்தனர். ஆதிதேவி பிள்ளையையழைத்துச்சென்று நற்றாயாகிய பராசத்தியிடம் ஒப்பித்தனள். பராசத்தி பிள்ளையை ஆவலோடு வாரியெடுத்து அணைத்து முத்தமிட்டு அரண்மனையினுள்ளே. கொண்டுபோய்ப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டனள்.

(அரும்பொருள்கள்—கறுப்பண்ணன் - ஆணவவிருள். புற்கலன் - ஆன்மா. ஆபரணங்களாவன - சர்வஞ்ஞதைமுதலிய அறுகுணங்கள். மற்றவையும் இங்ஙனே ஊகத்தா லுணரற்பன.)

---

## சுந்தரவல்லியின் நற்போதனை.

(ஞானசித்திப் பிரசுரம்.)

சுந்தரவல்லியென்னும் ஒரு நங்கை அழகில் இலக்குமியையும் அறிவில் ஔவையையும், கல்வியில் வாணியையும், ஈசுரபத்தியில் புனிதவதியாரையும், கற்பில் அருந்ததியையும், சைவசமயாபிமானத்தில் மங்கையர்க்கரசியாரையும் ஒத்தவள். மயிலின் சாயலும், குயிலின்மொழியும், அன்னநடையும் உடையவள்.

அவள் ஒருநாள் வைகறையில் எழுந்து, அவசியகருமம் முடித்துப் பல்விளக்கி வாய் கொப்பளித்து முகம் கைகால் கழுவி நெற்றியில் விபூதிதரித்து வீட்டின் முற்றத்திலும் தெருப்பக்கமாயுள்ள வாயிலிலும் சுற்றுப்புறங்களிலும் சாணந்தெளித்து அலகிட்டு வீட்டின் உட்பக்கங்களையும் அப்படியே சுத்தம்பண்ணி ஆளும் பாண்டங்களை அலம்பிக்கவிழ்த்துவைத்துவிட்டு நதியிலே சென்று ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனமுடித்து வீட்டை அடைந்தனள்.

பின்பு காலைப்போசனம் அமைத்து அகத்திலுள்ளவர்க்கு அளித்து அவரவர் தத்தங்கருமங்களுக்குச் சென்றதன்மேல், அயல்வீட்டிலுள்ள தன் தோழியாகிய கமலவல்லியை அவசியமான ஒருகாரியத்தின் பொருட்டுக் காணும்படி வந்தனள். அப்பொழுது விடிந்து மூன்றேமுக்கால்நாழிகை அதாவது ஏழரைமணியாயிற்று. கமலவல்லியின் வீட்டு முற்கதவு திறக்கப்பட்டிருந்தது. அறைக்கதவு தாளிட்டிருந்தது. அதனால் அப்பெண்மணி இங்கு ஒருவரும் இன்னும் நித்திரையால் எழவில்லைப்போலும் என நினைந்து, நடைகூடத்திலிருந்த ஒரு நாற்காலியில் வீற்றிருந்து சுவர்களிலே தொங்கும் அழகிய படங்களைப்பார்த்து மகிழ்ந்து



கொண்டு கமலவல்லியின் வருகையை எதிர்நோக்கியிருந்தனள். அப்பொழுது அப்படங்களின் நடுவிலே உமாசகாயராய் இடபாரூடராய் நீலகண்டராயுள்ள பரமேசுரரது அழகிய படமொன்று கண்ணிணைகளைக் கவர்ந்து பிரகாசித்தல்கண்டு, உள்ளத்தில் எழுந்த அன்பினால் அப்பெருமானைத் துதிக்கும் பாடல்களாகிய திருத்தாண்டகங்களிற் சிலவற்றை ஓதிக்கொண்டிருந்தனள். கமலவல்லியின் செவியிலே அவ்விசைபுகுதலும் அருண்டு புரண்டு எழுந்து கட்டிலைவிட்டு இறங்கி இடையில் உள்ள துணியை வாரிச்சுருட்டிக்கொண்டு அவிழ்த்த மயிரும் சோம்பிய முகமும் மூடிமூடிவிழிக்கும் பார்வையும் உள்ளவளாய் மெய்தளர்ந்து ஆடி அசைந்துகொண்டு மெல்ல மெல்லவந்து கதவின் தாளை நீக்கி நடைகூடத்தில் வந்து சுந்தரவல்லியைக் கண்டு சோம்பலோடு எதிரிலிருந்த ஒரு நாற்காலியில் இருந்தனள். இருந்தும் அசதி நீங்காமையால் உடம்பை நெளித்து முறித்துத் திமிர்வாங்கிக்கைகளில் நெட்டிமுறித்துக் கொட்டாவி விட்டுக்கொண்டு. "நீ எப்பொழுது வந்தாய், வந்து நேரமாயிற்றோ என்றாள்" சுந்தரவல்லி புன்முறுவலாகச் சிரித்துக்கொண்டு தன்பாடலை முடித்து, "நல்லது நீபோய் அவசியகருமம் முடித்து முகந்துலக்கிக் கொண்டுவா; பின்பு பேசிக்கொள்ளுவோம்; நான் அதுவரையில் இருக்கிறேன்" என்றாள். அவள் புன்முறுவல் செய்ததும் இப்படிச்சொன்னதும் நாணத்தையுண்டாக்கினபடியால், இதோ வந்துவிட்டேன் இருந்துகொள் என்று சொல்லி விரைவாக எழுந்துபோய் அவசியகருமம் முடித்துத் தந்தசுத்திசெய்து முகம் கை கால் அலம்பித் துடைத்துக்கொண்டு அடுக்களைவாயிலிற் சென்று வேலைக்காரன் ஈந்த கோப்பிநீர்பருகி இச்சுந்தரவல்லியின் அருகேவந்து சிரித்துக்கொண்டு ஒரு நாற்காலியில் இருந்தனள். அப்பொழுது சுந்தரவல்லி சிறுநகை செய்தனள். இருவரும் உடலுயிர்போன்று மிகநேசமுள்ளவர்களாதலால், ஒருவரோடொருவர் கோபங்கொள்ள இடமில்லாதிருந்தது. பின் கமலவல்லி சுந்தரவல்லியை அன்போடு நோக்கி, என் அருமையான தோழீ, நான் நித்திரைவிட்டு எழுந்து வந்தபொழுதும் இப்பொழுதும் என்னைப்பார்த்து நீ சிரித்த காரணமென்ன? அதை எனக்குச் சொல்லவேண்டும் என்றாள். சுந்தரவல்லி "சகியே, நீ வந்த கோலத்தையும் உன் பழக்கத்தையும் பார்க்க எனக்குச் சிரிப்பு உண்டாயிற்று" என்றாள். அதுகாரணமாக அவர்களுள்ளே சில சம்பாஷணைகள் நிகழ்ந்தன.

கமல - என்கோலம் எப்படியிருந்தது? என் பழக்கத்தில் என்ன குறையிருக்கிறது?

சுந்த - தோழி, நான் சொன்னால் உனக்குக் கோபம் வருமோ?

கமல - புத்தியாகச் சொன்னால் ஏன் கோபம் வரும்; என்னுடைய நன்மையின் பொருட்டுத்தானே சொல்லுகிறாய்; நன்றாகச்சொல் கேட்கிறேன்.

சுந்த - ஏழரை மணிசென்றும் நித்திரைவிட்டெழாதிருந்து பின் என் குரல் கேட்டு எழுந்ததும், அலங்கோலமாய் வெளியில் வந்ததும் பார்க்க முதலில் சிரிப்புண்டாயிற்று. இப்பொழுது, மற்றுள்ள உன்பழக்கங்களைக் காணச் சிரிப்புண்டாயிற்று.

கமல - என் நாயகர் ஊரிலில்லாமையால் கவலையற்று அயர்ந்து நித்திரையாய்விட்டேன். அல்லாமலும் இந்த நேரத்திற்றான் நான் எப்பொழுதும் எழும்புவது வழக்கம். எழும்பொழுது உன் குரல் கேட்டபடியால் அவசரத்தில் அலங்கோலத்தோடு வந்துவிட்டேன். இதையல்லாமல் இப்பொழுது நான் செய்த குறையென்ன?

சுந்த - நல்லது, நெற்றியில் விபூதியிட்டுவா பின்பு சொல்லுகிறேன்.

கமல - ஆம், ஆம், மறந்துபோனேன். கிறிஸ்தவரது விடுதிப் பள்ளிக்கூடத்தில் என்னை இளமையிற் படிக்கவிட்டிருந்தனர் பெற்றோர். அதனால் அங்கே பழகிய பழக்கம் இன்னும் என்னை விடவில்லை. நல்லது. இப்போது பூசிக்கொள்ளுகிறேன். (விபூதி எடுத்துத் தரித்தனள்.)

சுந்த - இப்பொழுது உன் முகம் எப்படியிருக்கிறது. கண்ணாடியிற் பார். "நீறில்லாநெற்றிபாழ்" என்றும், "பூதியணியார் முகம் புறங்காடு" என்றும் அதாவது, விபூதிதரியாத நெற்றியும் முகமும் பாழும் சுடுகாடும் ஆமென்று சொல்லியிருக்கிறதே. நீ இவற்றைப் படிப்பதில்லையா?

கமல - கிறிஸ்தவர் பள்ளியில் இந்தப் பாடமும் எனக்குப் படிப்பித்தார்களா? நீ அதிட்டஞ் செய்தவள். சைவப்பள்ளியிற் படித்து எல்லாம் அறிந்துகொண்டாய்.

சுந்த - தோழீ, நீ இவ்வளவு நேரமும் நித்திரை செய்ததும், விடியற்காலத்திலே செய்யவேண்டு மவைகளைச் செயாது விட்டதும் பிழையல்லவா.



கமல - என்னபிழை, அதனால் நட்டமென்ன?

சுந்த - எங்கள் ஆசாரங்களுக்கு மாறு அல்லவா?

கமல - உனக்கும் இந்தப் பேய்த்தனமிருக்கிறதா? எங்கள் முன்னோர் இப்படி அநேக காரியங்களைப் பேய்த்தனமாயெழுதி வைத்திருக்கிறார்களென்பதை எங்கள் பள்ளிக்கூடத்து அம்மா சொல்ல அறிந்திருக்கிறேன். பாதிரியார் சொல்லவும் கேட்டிருக்கிறேன். இதனால் ஒரு பிரயோசனமுமில்லை. அவரவர் சுகத்தை அவரவர் பார்க்கவேண்டும்.

சுந்த - ஓகோ! உன் அறிவு இப்படித் திரிந்திருக்கிறதா! கிறிஸ்தவர் பள்ளியிற் படிப்பதில இவ்வளவு நட்டமிருக்கிறதென்பதை நான் இப்பொழுதுதான் அறிகிறேன்!

கமல - நல்லது, சைவாசாரங்களில் என்ன பயனிருக்கிறது? அவைகளைச் சொல் பார்ப்போம்!

சுந்த - தோழீ, சொல்லுகிறேன், கவனமாகக் கேள். சூரியன் உதிக்க ஐந்து நாழிகையுண்டென்னு மளவில் எழவேண்டும். சூரியன் கண்ணுக்குத் தெரிய ஒருமணி நேரத்தின் முன்னே அதன் கிரணமாகிய வெப்பம் பூமிக்கு வருகிறது. அதனால் பூமியில் ஒருமாறுதல் உண்டாகிறது. அப்பொழுது தான் எங்கள் உடம்பிலுள்ள வாத பித்த சிலேஷ்மங்கள் மாறுபாடடையும். அந்தநேரத்திலே நாங்கள் படுத்திருந்தால் வெப்பம் தலையிலேறிப் பித்தம் மேற்படும். அதிலிருந்து பல நோய்கள் விளையும். ஆதலால், அப்பொழுது சயனித்திருக்கலாகாது. அன்றியும் இப்படிப் பலநாள் நேர்ந்தால், மெல்லமெல்ல நோய் அதிகப்பட்டு முடிவில் நோயாளியாக்கிவிடும்.

கமல - அப்படியானால் ஐந்து மணிக்குப் படுக்கைவிட்டெழலாமே. நான்குமணிக்கே யெழச்சொன்ன காரணமென்ன?

சுந்த - அதற்குமுன்பே உடம்பின் கருவிகள் தொழில் செய்யத் தொடங்கிவிடவேண்டும். அப்பொழுதுதான் வாதபித்த சிலேஷ்மங்கள் சமநிலைபெறும். அதுமட்டுமன்று, ஐந்துமணியளவில் நீராடவேண்டும், ஏனென்றால், அப்பொழுதுதான் நீரின் சொந்தக்குணம் நீரிலிருக்கும். மேற்பட்டால், சூரியவெப்பம் நீரிற்கலந்து நீரின்குணம் மாறிவிடும் மாறியபின் நீராடுவதால், அத்தனை நன்மையுண்டாகமாட்டாது.

கமல - அந்நேரத்தில் நீராடுவது அவசியமென்பதற்கு இன்னும் நியாயமுண்டா?

சுந்த - உண்டு. விடியற்காலத்தில் உடம்பின் அழுக்குகளை நீக்கி, நாம் உடம்பைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். இல்லாதொழியில் உடம்பின் அழுக்குகள் மயிர்க்கால்வழியாக உள்ளே சென்று இரத்தத்தோடு சுவறி எங்கும் பாய்ந்து நோய்க்கு ஏதுவாகும். அன்றியும், சூரியன்முதலிய கிரகங்களிலிருந்தும் பூமியிலிருந்தும் உடம்பில் ஏறுகின்ற பல சுத்த அணுக்கள் உட்புகும்பொழுது உடம்பின் அழுக்குகளோடு சுவறி அசுத்தமடைந்து செல்லநேரும். அதுவும் நோய்க்கு ஏதுவாம். அதனால் வெளியில் உலாவி அவ்வணுக்களை வாங்கத் தொடங்குமுன் உடம்பை அழுக்கு நீக்கிச் சுத்தமாக்கியும் வைத்தல்வேண்டும். பூமியிலும் உடம்பிலும் உண்டாகும் மாறுதல்கள் எல்லாம் ஐந்துமணி தொடக்கமே யுண்டாகின்றன. அதனால் ஐந்துமணிக்கு நீராட வேண்டுவது ஆவசியகமே.

கமல - அப்படியாயின், நான்குமணிக்கே எழுவானேன்?

சுந்த - மற்றுள்ள வேலைகளை முடித்தற்பொருட்டு.

கமல - என்ன வேலை?

சுந்த - முதலாவது, அவசிய கருமமாகிய மலசலநீக்கல்.

கமல - அதினும் ஏதாவதுண்டோ?

சுந்த - உண்டு. அது உள்ளழுக்காதலால், அதனையும் நீக்கிச் சுத்தமாயிருத்தல் வேண்டும். வாயிலுள்ள அழுக்கு நீக்கத் தந்த சுத்தி செய்துவிட வேண்டும்.

கமல - எழுந்தவுடனே கடவுளை வணங்குவது எதற்காக?

சுந்த - மனமும் புலனும் ஒடுங்கியுள்ள நேரம் அதுவேயாம். அதனால், அது கடவுளை வணங்குதற்கு நல்லநேரம். இது ஆன்மசுகத்தின் பொருட்டு. அன்றிச் சரீரசுகமுமிருக்கிறது. என்னவெனில் எழும்பொழுது மனம் ஆனந்தமாய்க் கடவுளை நினைத்தலால், இருதயம் குளிரும். உலக கவலைகளை அடைந்தால் இருதயம் வருந்திச் சூடுகொள்ளும். அதனால் இரத்தம் கொதிக்கும். அதனால் நோயுண்டாகும். ஆதலால், ஆனந்தமாய்க் கடவுளை நினைந்து வணங்குதலில் இரண்டுவகை நன்மைகள் இருக்கின்றன.

(வரும்.)

---

## கடவுள் அநாதிமலமுத்தர்.

### (இந்து சாதனம்)

கடவுள் அநாதிதொட்டுப் பாசபந்தம் சிறிதும் விரவப்பெறாது விளங்குவாராதலின் அநாதிமலமுத்தர் எனப்படுவர். இதுபற்றியே அவர் "இயல்பாகவே பாசங்களினீங்கினவர்" என்று சொல்லப்படுவதூஉமென்க. அதாவது அவர் என்றுள்ளாரோ, அன்றே அசுத்தக் தலப்பாகிய பாசபந்தம் சிறிதும் இல்லார் என்றபடி. அவர் பாசபந்தமுளராயின், துக்கமோகங்களும், அவை காரணமாகப் பெறப்படும் தோற்றக் கேடுகளும் உடையோர் எனப்பட்டுப் பசுவர்க்கத்துள் வைத்து எண்ணப்பட்டுவிடுவர். பாசபந்தமுடையார் முற்றறிவு வரம்பிலாற்றல் முதலிய இறைமைக் குணங்களை வகிப்பது கூடாதாதலின், அவர் ஈச்சுரத்துவத்துக்கு உரிமையுடையாராதலுங் கூடாது அவர் தாம் பாசபந்தமுடையாராயின், தம்மைப் போலப் பாசவலையிற்பட்டுழலும் ஆன்மாக்களை இரக்ஷித்தலுங்கூடாது. அவர் அநாதிதொட்டுப் பாசபந்தமுடையராயிருந்து இடைப்பட்டதொரு காலத்திலே அப்பாசத்தினின்று விடுதலை பெற்றாரெனின், முன்னொருகால் அவரைப் பற்றிய பாசம் பின்னும் பற்றுதல் கூடுமாதலின், அவர் நித்தியானந்தர் எனப்படுவதுங் கூடாது. அல்லாமலும் அவர் யாதொரு காலத்தாவது பாசத்திலிருந்து விடுதலை பெற்றார் எனின், அங்ஙனம் விடுதலை பெறுதற்கு அவருக்குத் துணைக்கருவியா யிருந்த பிறிதொரு பொருள் வேண்டப்படும். அங்ஙனம் யாதொரு பொருளுண்டாயின், அப்பொருள் பாசபந்தம் இல்லாத பொருளாகவே இருத்தல் வேண்டும். பாசபந்த மில்லாதபொருள் கடவுளின் வேறாகயாதொன்று இருக்குமாயின், அப்பொருளே கடவுள் எனப்படத்தக்கதன்றிப் பாசபந்தப்பட்டார் ஒருவர் கடவுள் எனப்படுதல் கூடாது, அந்தப்பொருளும் முன்னர்ப் பாசபந்தமுற்றிருந்து பின்னொரு காலத்திலே விடுதலை பெற்றதெனின், அந்தப் பொருள் விடுதலை பெறுதற்கும் பாசபந்தமில்லாத பின்னொரு பொருள் வேண்டப்பட்டு, அப்பொருளுக்கும் பின்னொரு பொருள் வேண்டப்பட்டு, இங்ஙனமே ஒன்று மற்றொன்றை அவாவி நின்று, இறுதியில் அநவஸ்தையாக முடிந்திடும். ஆகவே ஒரு காலத்தும் பாசபந்தமில்லாததொரு பொருள் வேண்டப்படுமென்பது ஒரு தலையாகத் துணியப்படும். இந்தப்பொருளே பதியாகியகடவுள் எனப்படுவது,

ஆதலாற்றனே பதியாகிய கடவுள் அநாதிமலமுத்தர் எனப்படுவர்.

கடவுள் சருவவியாபகராதலின் பாசங்களினும் வியாபித்துள்ளார் அன்றே. அங்ஙனம் பாசங்களினும் வியாபித்துள்ளாரைப் பாசபந்தமில்லார் என்பது எங்ஙனம் என்பீராயின், வியாபகமும் பந்தமும் ஒரு பொருளனவல்ல. அவை தம்முட் பெரிதும் பேதமுறும். கடவுள் எல்லாப் பொருட்கண்ணும் வியாபித்துளராயினும், அப்பொருட்குணம் தம்பால் விரவப்பெறாத பெருமை வாய்ந்துள்ளார். இந்தப் பெருமையே அவருடைய அநாதிமல முத்தத்துவம் எனப்படுவது. தாமரையிலையிலே சலந் தங்கி நிற்பினும், அவ்விலையோடு அஃது ஒட்டின்றி நின்றாற்போல, இறைவனும் எல்லாப் பொருள்களோடும் செறிந்து விளங்குவனாயினும், அவற்றின் குணம் தன்பால் ஒரு சிறிதும் விரவப் பெறான். இதுவே அவனுடைய பெருமாட்சி; இதுவே அவனுடைய அதீதநிலை.

கடவுளுடைய சிற்சத்தியாகிய ஞானத்தை அனந்தகோடி சூரியப்பிரகாசத்தை நிகர்த்ததொரு பேரொளிப் பிழம்புக்கு ஒப்பிடலாம். இந்தப் பேரொளிப் பிழம்பை இருட்குழாங்களாகிய மலபாசங்கள் தீண்டுவது ஒருவாற்றானுங் கூடாது. ஆதலாற்றனே அவர் இயல்பாகவே பாசங்களி னீங்கினவர் எனப்படுவதென்க.

கடவுள் அனந்தகோடி சூரியப்பிரகாச நிகர்த்த ஒளிப்பிழம்பாயின், அவருடைய சந்நிதியிலே பாசத்திரயங்கள் அமைந்து விளங்குவது எங்ஙனம் என்பீராயின், அவருடைய பேரொளிப் பிரகாசம் விளங்குவதெல்லாம் சைதன்னிய சத்தியினன்றிச் சடப்பொருள்களினன்றாம். அந்தப் பேரொளிப் பிரகாசத்தைக் காணவல்ல சைதன்னிய சத்தியின்கண்ணே மலவிருள் தொழிற்படுவது சிறிதுமில்லை. அந்தப் பிரகாசத்தைக் காணுதற்கமைந்த சத்தி இல்லாத இடங்களின் மாத்திரமே மலவிருள் அமைந்து கிடந்து தொழிற்படுவது. இந்த இடங்களில் கடவுளுடைய வியாபகம் இல்லைகொல்லோ எனின், கடவுளுடைய வியாபகம் எங்குமுள்ளதாயினும், அவ்வியாபக ஒளியைப் புலப்படக் காணாமை பற்றியே அவ்விடங்களில் மலவிருள் தொழிற்படும். கடவுளுடைய பேரொளி சைதன்னிய சத்தியில் மாத்திரம் தோன்றுதற்குரியதோர் சூக்கும ஒளியன்றிச் சடப்பொருள்களிலும் விளங்குந் தகைத்தாயதொரு தூல ஒளியல்ல என்பது கவனிக்கத்தக்கது.



ஆணவமலமும் வியாபகமுடைத்தென்பது சைவசமயக் கொள்கையாதலால், கடவுளுடைய சொரூப வொளி விளக்கமுறு மிடங்களிலே ஆணவவிருள் இல்லை என்பது எங்ஙனம் பெறப்படுமென்பீராயின், கடவுளுடைய சொரூப விளக்கமுளதாய விடங்களினும் ஆணவமலமுண்டு. அங்ஙனமுளதாயினும் அது விளக்கமுறாது மழுக்கமுற்றிடும். ஆதலால் அதன் வியாபகத்துக்கும் குறைவில்லை என்க. சூரிய ஒளிப்பிரகாசத்தின்முன் இருள் மறைந்திடுதலன்றி இல்லாதொழிவதில்லை. இதுபோலவே ஆணவ இருளுமாமென்க.

மழுக்கமுற்றுந் தானும் இவ்வாணவ இருள் கடவுள் சந்நிதியில் இருக்கலாங் கொல்லோ எனின், இது இருத்தல் பற்றியே ஆன்மாக்கள் கடவுளுடைய திருவருட்டிப்பியத்தை உணரவல்லாராதலின், அஃதங்ஙனமிருத்தலும் பெரும் பிரயோசனமுடைத்தாம். ஆகவே கடவுள் சந்நிதியில் மலவிருளிருத்தல் சாலுமென்க. இதுபற்றியே,

"முத்திதனின் மூன்றுமுதலு மொழியக் கேள்
சுத்த வனுபோகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
இன்பங் கொடுத்த லிறையித்தை விளைவித்தன்மலம்
அன்புடனே கண்டுகொ ளப்பா" என்றார் ஆன்றோரும்.

---

## தேவார வைப்புத்தல விளக்கம்.

(168-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 17-வது ஆலக்கோயில்.

திருநாவுக்கரசுநாயனார் அருளிய அடைவு திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயி லெழுபதினோ டெட்டுமற்றுங், கரக்கோயில் கடிபொழில்சூழ் நாழற்கோயில் கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில், இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்து மிளங்கோயின் மணிக்கோயி லாலக்கோயில், திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து தாழ்ந்திறைஞ்சத் தீவினைக டீரு மன்றே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருக்கச்சூ ராலக்கோயில் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

மேலை விதியே வினையின்பயனே விரவார் புரமூன் றெரிசெய்தாய்
காலை யெழுந்து தொழுவார் தங்கள் கவலைகளைவாய் கறைக்கண்டா

மாலை மதியே மலைமேன் மருந்தே மறவேனடியேன் வயல்சூழ்ந்த
வாலைக் கழனிப் பழனக் கச்சூ ராலக்கோயி லம்மானே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலத்தில் அச்சுவினி தேவரென்னும் தேவமருத்துவர் சிவபெருமானைப் பூசித்துத் தாஞ்செய்யும் வைத்தியத்திற்கேற்ற ஔஷதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். இதற்கு ஔஷதகிரி யென்னும் பெயருமுண்டு.

சுவாமி பெயர் ஔஷதேசுரர், அம்பிகை அந்தகார நிவாரணி, ஔஷததீர்த்தம். இது சிங்கப்பெருமாள் கோயில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு இரண்டு மைல் தூரத்துள்ள திருக்கச்சூரென்னும் சிவஸ்தலத்துக்கு அரை மைல் தூரத்துள்ளது. மலைக்கோயிலென வழங்கி வருகின்றது.

## 18-வது நந்திவனம்.

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த அடைவு திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நாடகமாடிட நந்திகேச்சுர மாகாளேச்சுர நாகேச்சுர நாகளேச்சுர
நன்கான, கோடீச்சுரங் கொண்டீச்சுரந் திண்டீச்சுரங் குக்குடேச்சுர மக்
கீச்சுரங் கூறுங்கால், ஆடகேச்சுர மகத்தீச்சுர மயனீச்சுர மத்தீச்சுரஞ்
சித்தீச்சுர மந்தண்கானல், ஈடுதிரை ராமேச்சுர மென்றென் றேத்தி
யிறைவனுறை சுரம்பலவு மியம்புவோமே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தருமதேவதையாகிய நந்தி பூசித்தது.

சுவாமி பெயர் நந்தீசுரர், அம்பிகை சௌந்தர நாயகி, நந்தி தீர்த்தம். கூடுவாஞ்சேரி ரெயில்வே ஸ்டேஷனுக்கு அரை மைல் தூரத்துள்ளது.

## 19-வது நாகளேச்சுரம்.

இத்தலம் நவக்கிரகங்களுள் ஒருவரான இராகுவால் பூசிக்கப் பட்டது. சுவாமி பெயர் நாகேஸ்வரர், அம்பிகை மலைமங்கை, சீகாழி ரெயில்வே ஸ்டேஷன். தோணியப்பர் ஆலயத்திற்கு வட மேற்றிசையில் நாகேசுரமுடையார் கோயிலென வழங்கி வருகிறது.

## 20-வது செம்பங்குடி.

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த அடைவு திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன் செம்பங்குடி நல்லக்குடி நளி
நாட்டியத் தான்குடி, கற்குடி தென்களக்குடி செங்காட்டங்குடி கருந்திட்



டைக்குடி கடையக்குடி காறூங்கரல், விற்குடி வேள்விக்குடி வேதிகுடி
மாணிகுடி விடைவாய்க்குடி, புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி புதுக்
குடியும் போற்றவிடர் போகுமன்றே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் நவக்கிரகங்களுள் ஒருவரான கேதுவால் பூசிக்கப் பட்டது. சுவாமி பெயர் நாகேஸ்வரர், அம்பிகை கற்பூரவல்லி, இதுவும் சீகாழி ரயில்வே ஸ்டேஷன். தோணியப்பர் ஆலயத் திற்கு வடகீழ்த்திசையில் 2 மைல் தூரத்துள்ளது.

## 21-வது கச்சிமயானம்.

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த திருவினாத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சிமயானத்தான் வார்சடையா
னென்னினல்லான், ஒப்புடைய னல்லனொருவ னல்லனோ ரூரனல்லனோ
ருவமனில்லி, அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக்
காணினல்லால், இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ
னென்றெழுதிக் காட்டொணாதே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் காஞ்சிபுரந் திருவேகம்பத்து ளுள்ளது. பண்டா சுரன் என்னும் அசுரன் தான் பிரமதேவரிடம் பெற்ற வரபலத்தி னால் தேவாதியரது வீரியத்தைபுண்டு இடுக்கண்புரிய வாற்றாத தேவர் வேண்டியபடி சிவபெருமான் ஓர் யாகமுன்னிலையில் தேவர் களோடு அவ்வசுரனையும் அவியாகவுண்டு மயானமாக்கியது.

சுவாமி பெயர் மயானலிங்கேசுரர், அம்பிகை காமாக்ஷியம் மையார்; யாககுண்டமே சிவகங்கை தீர்த்தமாயிருக்கிறது. கச்சி மயானத்திற்குக் காஞ்சிபுரமே ரயில்வே ஸ்டேஷன். அன்றியும் பின்வரும் கச்சிப் பலதளிக்கும் இதுவேயாம்.

## 22-வது கச்சிப் பலதளி.

### திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எச்சி லிளமரேம நல்லூரி லம்பையங் கோட்டூ ரிறையான்சேரி
அச்சிறு பாக்கமளப் பூரம்பராவடு தண்டுறை யழுந்தூ ராறைக்
கச்சினங் கற்குடி கச்சூ ராலக்கோயில் கரவீரங் காட்டுப்பள்ளி
கச்சிப் பலதளியு மேகம் பத்துங் கயிலாயநாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிற் சிறந்த காஞ்சிபுரத்துள்ள பல சிவாலயங்களையும் சேர்த்துக் கச்சிப்பலதளியெனத் திருவாய்மலர்ந்தருளினார். கச்சபமென்னும் ஆமையுருவங்கொண்ட விஷ்ணு முதலாயினோர் பூசித்த கச்சபாலயமும், இதற்கு மேற்றிசையில் நாரதர் சிவனடியாரை வஞ்சித்த தோஷநிவர்த்திக்காகப் பூசித்த கயிலாயநாதராலயமும், இதற்குத் தென்றிசையில் மஹா லக்ஷ்மியும், பிரஹஸ்பதியும் பூசித்த காயாரோகணேச ராலயமும், காயாரோகண திவ்ய தீர்த்தமும், இதற்குக் கீழ்த்திசையில் பணாதரேசராலயமும், இதற்குக் கீழ்த்திசையில் மணிகண்டேச ராலயமும், இதற்கு வடதிசையில் சித்தேச ராலயமும், இதற்கு அருகாமையாய் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் வழிபட்ட முத்தீசராலயமும், அன்றியும்,

வேதமே மாவிருட்சமாகக் கம்பாநதிக்கரையி லிருக்க, அம்பிகையார் 32 அறமும் வளர்த்து பிருதிவி லிங்கமாகிய சிவபெருமானைப் பூசித்துத் தழுவப்பெற்ற ஏகாம்பரநாத ராலயத்திற்குத் தென்றிசையில் சுரஹரீசராலயமும், இதற்கு ஈசானியத்தில் சாக்கிய நாயனார் வழிபட்ட வீரட்டகாசராலயமும், இன்னும் பல சிவாலயங்களும், காமக்கோட்டமென்கிற காமாக்ஷியம்மையார் தனி ஆலயமும், குமரகோட்டமென்கிற குகாலயம் முதலியனவும் உள்ளன. இதுபற்றியே நாயனார் கச்சிப்பலதளியெனத் தொகுத்து அருளிச்செய்தார்.

இங்கே சர்வதீர்த்தமென்னும் ஒரு தீர்த்தமும் உளது.

[விரிக்கிற் பெருகுமாதலால் இம்மட்டோடு நிறுத்துகின்றோம்.]

இதை இன்னும் விவரமாகத் தெரிய விரும்புவோர் காஞ்சிப் புராணத்தைப் பார்த்தும் போய் விசாரித்தும் தெளிக.

(இன்னும் வரும்.)

பு. வே. சுப்பராய முதலியார்.

---

## சிசுவின் ஆகாரம்.

(சென்னை பப்ளிஸிடி பீரோவினால் பிரசுரிக்கப்பட்டது.)

குழந்தைக்கு தாய்ப்பால் தான் மிகச் சிறந்தது; செலவில்லாதது. அது குழந்தைக்கு ஆரோக்கியத்தையும் தேஹ பலத்தையும் கொடுக்கிறது. தாய்ப்பால் எப்பொழுது வேண்டுமானாலும் குழந்தைக்குக் கொடுக்கத் தயாராயிருக்கிறது. அது ஒருகாலும் புளிப்பதேயில்லை. பால் புளித்துப்போவதே இந்தத் தேசத்திலுள்ள அபாயம். அதைக் காய்ச்சித் தயார்செய்யவும் வேண்டாம். அளக்கவும் வேண்டாம். அதை எப்போதும் பயமில்லாமல் கொடுக்கலாம். குழந்தை பிறந்து கொஞ்சகாலம் வரையில் அதை வளரச்செய்வதற்கு என்னென்ன வஸ்துக்கள் வேண்டுமோ அவையெல்லாம் தாய்ப்பாலில் சரியான அளவாய்ச் சேர்ந்திருக்கின்றன.

குழந்தை முலைப்பாலினால் வளர்ந்தால் அது ஜீவித்திருப்பதற்கு வேண்டிய ஆஸ்பதங்களுண்டு. முலைப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு வயிறு சம்பந்தமான நோய்கள் வருவது அபூர்வம்; ஆனால் தாய்ப்பாலைத் தவிர இதர பால்களைக் கொடுத்து வளர்ந்த குழந்தைகளுக்கு வெயிற் காலத்திலும் மழைக் காலத்திலும் அடிக்கடி வயிற்று வியாதிவந்து தொந்தரவு செய்யும்.

முலைப்பால் குடித்து வளரும் குழந்தைகள் ஏழைகள் வீட்டிலிருந்தாலும், ஸுகாதாரமற்ற இடங்களிலாகட்டும் வேறு எங்கேயாகட்டும் இருந்தாலும், அவை நன்றாய் விருத்தியாகின்றனவென்று கணக்கெடுத்துக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குழந்தைக்கு வேண்டிய முலைப்பால் கொடுக்க முடியாதபடி அவ்வளவு பலஹீனம் தாய்க்குச் சாப்பாட்டுக் குறைவினால் ஏற்பட்டால் மட்டும், ஏழ்மைத்தனமானது குழந்தையின் முதல் வருஷத்தில் அபாயகரமாகிறது.

குழந்தைக்கு இயற்கையான ஆகாரத்தைக் கொடுக்காவிட்டால் அது சீக்கிரமாய் இறந்துபோகும், அல்லது ஸ்திரமாய் அதன் தேஹஸௌகம் கெட்டுப்போய் விடக்கூடும் இந்தியத் தாய்மார் இந்தக் கடமையைச் செய்ய தவறுவதேயில்லை. ஆனால் அவர்கள் குழந்தையின் இரண்டாவது, மூன்றாவது வயது வரையிலுங்கூட முலைப்பால் கொடுக்கிறார்கள். இதனால் அவர்களுடைய உடம்பு பலஹீனப்படுவதுடன் குழந்தையும் சூணும் வயிறுதட்டி மெலிந்து பலஹீனப்பட்டுப் போகக்கூடும்.

குறித்த நேரங்களில் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கவேண்டியது அவசியம். குழந்தை அழும்போதெல்லாம் பால் கொடுத்தால், அதன் ஜீரணம் சீக்கிரம் கெட்டுப்போகும். பால் நியாயமாய்க் கொடுக்கவேண்டிய நேரத்துக்கிடையில் அது அழுதால் அதற்கு வெந்நீரை ஆறவைத்துக் கொடுங்கள். குழந்தை பசியால் அழுவதுபோலவே ஆகாரம் அதிகமாய்ப் போனாலும் தான் அழும்.

குழந்தை பிறந்து ஐந்து அல்லது ஆறுமணி நேரத்தில் அதற்கு முலைப்பால் கொடுக்கவேண்டும். அது சிணுங்கி பசியாய் இருப்பதாய்த் தோற்றினால், சர்க்கரைத் தண்ணீரைப் புகட்டுங்கள் பசுவின் பாலையாகிலும் வேறு எந்த பதார்த்தத்தையாகிலும் கொடுக்கக்கூடாது.

முலைப்பால் உங்கள் குழந்தைக்குப் போதாவிட்டால், அதற்கு முலை கொடுப்பதை நிறுத்திவிட வேண்டாம். வைத்தியரைக் கேளுங்கள். ஒவ்வொரு தடவை குழந்தை குடிக்கும் முலைப்பாலும், அதில் பிரதி ஔன்ஸும் குழந்தைக்கு அவ்வளவும் பலம் என்பது ஞாபகத்திலிருக்கட்டும்.

தேஹ சௌக்கியமுள்ள குழந்தையானது பகலில் இரண்டு மூன்று மணி நேரத்துக் கொருதடவை பால் குடிக்க விழித்துக் கொள்ளவேண்டும். இரவில் இந்த இடைநேரம் அதிகமாகலாம். பகலில் பால் கொடுக்க குழந்தையை எழுப்பவேண்டியது அவசியமானால் அப்படிச் செய்யலாம். இல்லாவிட்டால் அதற்குப் பகலில் ஆகாரம் குறைந்துபோய் இரவில் தாயாருடைய தூக்கத்தைக் கலைத்துவிடும். இரவில் குழந்தையை பால் கொடுக்க எழுப்பக் கூடாது. ஆகாரமில்லாமல் இரவு முழுதும் தூங்குமானால் அவ்வளவுக்கவ்வளவு நல்லது தான்.

குழந்தைக்குப் பால் கொடுப்பதில் முலையை மாறி மாறிக் கொடுக்கவேண்டும். ஆனால், பால் குறைவாயிருந்து இரண்டு முலையும் கொடுக்கவேண்டியது அவசியமானால் அப்படிச் செய்யலாம். முலையில் கடைசியில் வரும் பாலில் தான் கொழுப்பு அதிகமாயிருக்கிற தென்பதை மறக்கக்கூடாது. இதை அங்கேயே தங்க விட்டால், குழந்தை அடுத்த தடவை பால் குடிக்கும்போது இதைக் குடிக்கும். இதன்பலன் அன்னத்துவேஷமே (dyspepsia). ஆகவே குழந்தை பால் குடிக்கையில் ஒரு முலையை பூராவாய் உண்ணவேண்டுமேயொழிய இரண்டு முலையையும் அரைவாசி



உண்ணக்கூடாது. குழந்தையை 15 நிமிஷம் முதல் 20 நிமிஷம் வரையில் பால் குடிக்கச் செய்யவேண்டும். தேஹ சௌக்கியமுள்ள குழந்தை இவ்வளவு நேரம் பால் குடித்தால் போதும்.

குழந்தைக்கு ஒரு வயதான பிறகு முலைப்பால் கொடுக்கக் கூடாது. அந்த வயதில், அதற்கு பலம் உண்டுபண்ண, இன்னும் தடிப்பான ஆகாரம் வேண்டும். குழந்தைக்கு முலைப்பால் கொடுப்பதை திடீரென்று நிறுத்திவிடக்கூடாது. ஆரம்பத்தில் ஒரு நாளுக்கு ஒரு புட்டி கொடுக்கலாம். பிறகு புட்டியை அதிகமாக்கிக் கொண்டு வந்து முலைப்பால் குடிப்பதற்குப் பதிலாக புட்டிப் பாலையே குடிக்கும்படி செய்யவேண்டும். கோடை காலத்தில் பேதி ஸாதாரணமாயிருக்குமாதலால் குழந்தையின் ஆகாரத்தைக் கோடை காலத்தில் ஜாக்கிரதையாய் அதிகப்படுத்தவேண்டும். மழைநாளில் முலைப்பாலை நிறுத்தாமலிருப்பது நல்லது. இதரப் பால்களைச் கொடுத்து வளர்க்கப்படும் குழந்தைகள் மழைநாளிலும் கஷ்டப்படுவதுண்டு. ஏனென்றால் பசுவின் பாலை அந்தக் காலத்தில் கெட்டுப்போகாமல் வைத்திருக்க முடியாது.

தாய்க்கு விஷஜ்வரம், காசம் முதலிய வியாதிகண்டு அது குழந்தைக்கும் தொத்திக்கொள்ளும்போலிருந்தாலும் குழந்தைக்குப் பால் கொடுத்தால் அதிகரிக்கக்கூடிய விஷப்பாண்டு (Bright disease) விஷச்சளி (acute pneumonia) முதலிய வியாதி ஏதேனும் தாய்க்கு வந்தாலும் முலை கொடுப்பதை உடனே நிறுத்திவிடவேண்டும். தாய் கர்ப்பமானாலும் மார்பு வீங்கிப் புண்ணாயிருந்தாலும் குழந்தைக்கு முலை கொடுப்பதை நிறுத்திவிட வேண்டும்.

ஒன்பது அல்லது பத்து மாதத்தில் முலைப்பால் நிறுத்தப்பட்ட குழந்தையை ஒரு கிண்ணத்திலிருந்து பால் குடிக்கும்படி செய்யலாம். தாய்மார் புட்டியை வெகுகாலம் உபயோகப்படுத்தக்கூடாது. ஏனென்றால், பிறகு குழந்தையை புட்டி வழக்கத்தை விட்டுத் திருப்பமுடியாது; சில சமயங்களில் குழந்தையானது வேறு எவ்விதமாகவும் பாலைக் குடிக்கமாட்டேனென்று சொல்லிவிடும்.

முலைப்பால் நிறுத்தியபிறகு, குழந்தைக்கு கொஞ்சம் கொஞ்சமாய் தடிப்பான ஆகாரம் கொடுக்கலாம். அரிசி, வால்கோதுமை (பார்லி), கேழ்வரகு, கோதுமைமாவை, சவ்வரிசி ஆகிய இவைகளெல்லாம் கொடுக்கலாம். இந்த ஆகாரத்தையெல்லாம் முதலில்

கூழாக்கிக்கொண்டு நன்றாகக் கொதிக்கவைத்து வடிகட்டிக் கொள்ளவேண்டும். முதலில் மஸ்லினில் வடிகட்டி, பிறகு அதையே சிறு சல்லடை (strainer) யில் வடிகட்டிக் குழந்தைக்குப் பூராவும் கொடுத்து விடவேண்டும். மேற்சொல்லியபடியே செய்தால் துவரம்பருப்பும் உபயோகிக்கலாம். சப்பாத்தி (ரொட்டி)கள் கொஞ்சகாலம் சென்றபிறகு கொடுத்தால் தாடைகளுக்கு நல்ல வேலை கொடுத்து அவைகளைப் பலப்படுத்தும். ஆப்பில் (apple - சீமை இலந்தைப்பழம்) ஈறை விருத்திசெய்யும். தேகசௌக்கியமுள்ள குழந்தைக்குக் கடையில் செய்து விற்கும் எந்த விலையுயர்ந்த ஆகாரமும் வேண்டியதில்லை.

முலைப்பால் கொடுக்கும்போதும் புட்டியில் பால் கொடுக்கும்போதும் போலவே, முலைப்பால் நிறுத்தின பிறகும் குறித்த நேரங்களில் தான் ஆகாரம் கொடுக்கவேண்டும். குழந்தைக்கு வயது ஆக ஆக, இரண்டு ஆகாரத்துக்கு இடையிலுள்ள நேரம் அதிகப்படவேண்டும்.

குழந்தை பிறந்ததுமுதல் அதற்கு முலைப்பால் கொடாமல் வேறுவிதமாய் ஆகாரம் கொடுப்பது மிகவும் கஷ்டமான காரியம். இதில் ஜாக்கிரதையாயிராவிட்டால், குழந்தை இறந்துபோகக் கூடும்.

குழந்தை வளர்ந்து அதிக கனமாக ஆக அதற்கு அதிக ஆகாரம் வேண்டும். இந்த மாறுதல்களெல்லாம் தாய்ப்பாலில் இயற்கையாகவே உண்டாகின்றன. அது விஷயத்தில் ஒருவரும் கவலைப்படவே வேண்டியதில்லை. ஆனால், குழந்தைக்கு இதர ஆகாரங்கள் கொடுக்கப்படும்போது சில வாரங்களுக்கு ஒருதடவை அப்போதைக்கப்போது வேண்டிய மாறுதல்களை உண்டாக்கவேண்டும். ஆகவே தாயார் விசேஷமாய் முதலாவது பிள்ளை பெற்றவள் இவ்விஷயத்தில், டாக்டர் அல்லது தாதியின் ஆலோசனை கேட்டு நடக்கவேண்டும்.

வாரம் வாரம் குழந்தையை நிறுப்பதிலிருந்து குழந்தை கிரமமாய் கனம் அதிகரித்து வருகிறதென்று தெரிந்தால், அதுவே அதற்குக் கொடுத்துவரும் ஆகாரம் அதற்கு ஒத்துவருகிறதென்பதற்கும் அதன் பசியை ஆற்றுகிறதென்பதற்கும் தகுந்த அறிகுறியாகும்.

மூன்று மாதத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குத் தாய்ப்பாலன்றி வேறு பால் கொடுத்து வளர்க்கப்பட்டால் அவைகளுக்கு



ஆரஞ்ஜ் (Orange) ரஸம் கொடுக்கவேண்டும். ஆரம்பத்தில் ஒரு நாளுக்கு இரண்டு தடவை அரை ஸ்பூன் ரசம கொடுத்து வந்து அதைக் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகமாக்கவேண்டும். கொதிக்க வைத்து ஆறின ஜலத்தில் முதலில் அதைச் சமபாகமாய்க் கலந்து கொடுக்கலாம். குழந்தைக்கு பேதிகண்டால் அதை உடனே நிறுத்திவிடுங்கள். ஆரஞ்ஜ் கிடைப்பது அரிதாயிருந்தால், திராக்ஷைப்பழத்தையாவது தக்காளிப் பழத்தையாவது (tomatoes) உபயோகிக்கலாம். ஆனால் இவைகளின் ரஸத்தை வடிகட்ட வேண்டும்.

கறந்தபால்:—பால் இயற்கையாய்க் கையாளத் தக்கதல்ல, மனிதர்களாயிருந்தாலும் மிருகங்களாயிருந்தாலும் அந்தப் பால் தாயினிடமிருந்து குழந்தை அல்லது குட்டியின் வாய்க்கு நேராய்ப் போகவேண்டியது. இப்படி முன் ஜாக்கிரதை யில்லாவிட்டால் சிறு தூசிகள் பாலில் விழுந்து அது சுலபமாய்க் கெட்டுப்போய் விடும். குழந்தைக்கு வேண்டிய பாலை தேக சௌக்கியமுள்ள பசுக்களிடம் கறந்துகொள்ளவேண்டும்.

குழந்தைக்குபால் ஒன்றும் செய்யாதபடி செய்வதற்குச் சுலபமான மார்க்கம் என்னவென்றால், அதைக் கொதிக்க வைப்பதே. நெருப்பிலிருந்து அதை எடுத்தவுடன் சீக்கிரம் அதைக் குளிரப் பண்ணவேண்டும். பிறகு அதை ஜலமுள்ள ஒரு தாம்பாளம் அல்லது தட்டில் வைத்து, அதை சுத்தமான ஒரு துணியினால், விசேஷமாய் ஒரு மஸ்லினைக்கொண்டு மூடி, அந்தத் துணியின் நுனி தண்ணீரில் விழுந்திருக்கும்படி செய்யவேண்டும். பாலை ஒருபோதும் மூடாமல் வைக்கக்கூடாது; அதில் ஈக்கள் விழுந்து விடும். அதை நெருப்பண்டையிலும், ஸூரியக்கிரணம் படும்படியாகவும் வைக்கக்கூடாது; அப்படிச் செய்தால் அது சீக்கிரம் கெட்டுப்போகும்.

இயற்கையான உணவு தவிர வேறுவிதமான ஆகாரம் குழந்தைகளுக்குக் கொடுப்பதனால் விளையும் தீங்குகள் ஏழைகளைமட்டும் தான் பாதிக்கிறதென்பதில்லை. அப்படி வளர்க்கப்படும் குழந்தைகளுக்கு உண்டாகக்கூடிய அபாயங்கள் அடியில் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன:—

ஜீரணக்கருவி ஸம்பந்தமான ஸகல வியாதிகளும், விசேஷமாய் கோடைகாலத்திலும் மழைநாளிலும் பேதியும்.

ஜீவதசை முழுவதும் நீடித்திருக்கும் குரூபத்தை உண்டாக்கக்கூடிய ரிக்கெட்ஸ் என்னும் வியாதி (Rickets - கூனும் வயிறு தட்டி மெலிந்துபோவது).

தொண்டையில் சதை வளர்தல் (adenoids); ஸ்கர்வி என்னும் ஒரு நோய் (இது ஆகாரக் குறைவினால் உடம்பு முழுதும் உண்டாகும் சொறி போன்ற ஒரு வியாதி).

க்ஷயரோகம், விஷஜ்வரம், வாந்திபேதி இந்த வியாதிகளின் பூச்சிகள் தொத்தியுள்ள பாலைக் குடிப்பதனால் அவ்வியாதிகள் உண்டாவது.

தேக வீரியக்குறைவு; இதன்பலனாக, ஏதேனும் வியாதி கண்டால் அதற்குட்பட்டு அதைத் தாங்கச் சக்தியற்று அதனால் சீக்கிரம் இறந்துபோகக்கூடும்.

தாகத்துக்கு ஜலம் வேண்டுமென்று குழந்தைக்குக் கேட்கத் தெரியாதென்பதும், கோடைநாளிலும் அது ஜ்வரமாயிருக்கும் காலத்திலும் அதற்கு தாகம் அதிகமாயிருக்கும் என்பதும் ஞாபகத்தில் இருக்கட்டும். பிரதிதினமும் காலையில் ஒரு பைண்ட் அல்லது அரைச்சேர் தண்ணீரைக் கொதிக்கச்செய்து அதை ஒரு சுத்தமான பாத்திரத்தில் விட்டு மூடி, குளிர்ந்த இடத்தில் வைத்து வைக்கவேண்டும். குழந்தையின் இரண்டு ஆகார வேளைக்கு இடையில் அந்த ஜலத்தை நிறையக் கொடுங்கள். எந்த தேசத்தில் பார்த்தாலும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குக் குடிக்க ஜலம் கொடுக்க இஷ்டப்படுகிறதில்லை யென்பது அடிக்கடி கவனித்தறியப்பட்டிருக்கிறது. இது மிகவும் தப்பு அபிப்பிராயம், மிகவும் கொடுமையான வழக்கம்; கீழ்த்தேசங்களில் இந்த வழக்கம் இன்னும் விசேஷமாய்க் கொடுமையானது.

---

## சமரசஞானதீபம்

(162-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈண்டு மாயாவாதம், போலி வேதாந்தமென்று கூறி நம்மால் பஹிஷ்காரஞ் செய்யப்பட்ட சமயமே யுத்தமோத்தமமான வைதிக மார்க்கமெனவும், அதற்கிப்பெயர்களுரிமையல்லவெனவும், மாயாவாதமென வதைக் கூறுவதற்கு நியாயங்கிடையாதெனவும், மாயையென்பதொரு பொருளையே கொள்ளாத வம்மத மெப்படி மாயாவாதமாகுமெனவும், அதுவே மாயாவாதமாகுமெனி னம்மதத்துப்



பூர்வீகர் தங்கள் சாத்திரங்களில் மாயாவாதமென்னுமோர் மதத்தை நிரசிப்பதென்னையெனவும், அதனால், "மிண்டியமாயாவாத மென்னுஞ், சண்டமாருதஞ் சுழித்தடித்தா அர்த்து" என்ன ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் கடிந்தருளிய மார்க்கமின்னதென வெளிப்பட்டதெனவும், இந்த மாயாவாதப்பே ரதைவிட்டொழிதலா லதற்குப் போலிவேதாந்த மென்னும்பேரு மப்படியேயாகுமெனவும், அப்படியாகுங்கால், வேதாந்தமென்னு மார்க்கம் அதைக்காட்டிலும் வேறாகவுண்டாவது கூடாதெனவும், சித்தாந்தமென்னுஞ் சைவத்துக்கு அது பொருண்முடிவில் விரோதியாமையால் ஸித்தாந்தமும் அதுவேயாகுமெனவும், இரண்டுமொன்றான வுண்மையறிந்தே "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே" என்று தாயுமானவருங் கூறினாரெனவுஞ் சமாதானங்கூறித் திருப்தியடைந்து கொள்ளுமன்னோர் அறியாமை தொலைய வுரைசெய்வாம்.

போலிவேதாந்தமென யாம் நிரசிக்கு மார்க்கத்தை யுத்தமோத்தமமான வைதிக மார்க்கமென்று அவர் கூறலாலுண்டாகிய வுசிதம்யாது? கடவுளில்லை, ஆன்மா இல்லை, பூதங்களே யுள்ளவையெனக்கூறு முலகாயதனுந் தன்னை வைதிக மார்க்கத்தானாகக் கூறலால் "பூதக்தேயன்னமாகி யன்னத்தாலுடம்புபுந்தி, பேதித்தே மனமுமாகிப் பிரிந்தமை திருந்தவின்று, வேதத்தே கிடக்கவன்றோ மேதினியோர்களெல்லாங், கேதத்தே வீழ்ந்து வேறு நெறிபல கேட்குமாறே" என வவனறுதாரப்படும் பிரமாண வாக்கியமே சாலும். இவன் சிவசீவர்களுக்கு நாத்திகத்வங் கூறிப் பூதங்களைமாத்திரமே யாத்திகமாகக் கொண்டவன். இவனையேனைய சமயிகளெல்லாம் நாத்திகன், நாத்திகனென வோயாது கூறுகின்றனர். மாயாவாதியுமப்படியே கூறுகின்றனன். அது அவன் பாலிழுக்கெனவறிக. அவனே ஆத்திகனாகாதபோது அவன் பிறனை ஆத்திகனன்றெனல் யாண்டிசையும்? உலகாயதன் பூதங்களுக்கு மாத்திரம் ஆத்திகத்வங்கூறிச் சிவசீவர்களுக்கு நாத்திகத்வமங்கீகரித்தபடியே மாயாவாதியாவான் சிவத்துக்கு மாத்திரம் ஆத்திகத்வங்கூறிச் சிற்சட பூதங்களிரண்டுக்கும் நாத்திகத்வமங்கீகரித்திருக்கின்றனன். சத்தாயுள்ள சிவத்தையங்கீகரித்தமாயாவாதிக்கும் அசத்தாயுள்ள பூதத்தை யங்கீகரித்த வுலகாயதனுக்குமொருதாரதம்யமும் யாம் கண்டிலம். இரண்டு பேரும் நாத்திகரென்னுந் துணிவுடைமையால், சத்தாகிய சிவத்தை மாத்திரங்

கொண்ட மாயாவாதிக்கு அசத்தாகியவுலகமும் சதசத்தாகிய வான்மாவுமில்பொருள்களாய் முடிதலி னவனை ஆத்திகனெனக் கூடாது. அசத்தாகிய வுலகத்தை மாத்திரங் கொண்ட வுலகாயதனுக்குச் சத்தாகிய சிவமும் சதசத்தாகிய வுயிருமில் பொருள்களாய் முடிதலினவனுமப்படியே முழு ஆத்திகனாகமாட்டான். மாயாவாதிக்குள்ள வாத்திகத்வமுலகாயதனுக்கு முண்டாயினமையின் மாயாவாதியாவானினி யுலகாயதனை நாத்திகனெனக் கூறித் திரிதனலஞ் செய்யாதென்க. உலகாயதன் அசத்தாகிய பூதங்களே சிற்சடங்களாய்த் திகழுமெனவும், மாயாவாதி சத்தாகிய சிவமே சிற்சடங்களாய்த் திகழுமெனவுங் கூறலா லிருவர் கோள்களுமொரேதன்மையவாகியழியும். "சத்திலசத்துறை செய்வாரகம்பிர, மத்தருன் மத்தரென்றுந்தீபற, வஞ்சகப்பித்த ரென்றுந்தீபற" என மாயாவாதியையும். "ஒதுமசத்தி லுபர்சத்துதிக்குமென், றோதுவர் நாத்திகருந்தீபற, வூகமிழந் தாரென்றுந்தீபற" என வுலகாயதனையுஞ் (சித்தாந்தவுந்தியில்) யாம் கண்டித்திருத்தல் காண்க. சத்து அசத்தாகவும், அசத்துச் சத்தாகவுந் திரியமாட்டாவாகையால் நெல் கமுகாயும் கமுகுநெல்லாயு நீளாவென்னுந் தருக்கமே யதை நிறுத்த நாத்திகராகிய வவ்விருவருள் மாயாவாதியை ஆத்திகனென்கையிலப்படியே யுலகாயதனையும் ஆத்திகனென்றலிற் பழுதில்லையெனவும், உலகாயதனை நாத்திகனென்கையி லப்படியே மாயாவாதியை நாத்திகனென்றலிற் பழுதில்லையெனவுங் கற்றுணர்ந்த மேலோர் கருதாநிற்பர். இப்படி யிவர்க ளொழியவே, சத்து, அசத்து என்னுமிரு பொருள்களையுந்தான் விவகரித்தலாலவற்றின் வேறான மூன்றாவது சதசத்தாகிய வான்மாவென்னுந் தன்னையுங் கண்டு பதார்த்தத்திரய போதமாகிய வேதாந்த ரஹஸ்யங்களைக் கண்டுணர்ந்தவனேயன்றோ ஆத்திகனாவான்? கண்டவுலகமும், காணும் ஆன்மாவும், காட்டுஞ் சிவமுமாகிய மூன்றனுளொன்று கெடினுமாண்டு. ஆத்திகம் பூர்த்திகட்டாதென்க. சித்சிதீசுவர பதார்த்தத்திரய போதகர்களாகிய பாஞ்சராத்திரிகட்கு ஆத்திகத்வம் ஸித்திக்குமேயெனின், அன்னோர் காணுந் தன்மையினவாகிய தம்மோடொத்த பசுக்களுளோர் பசுவையே காட்டும் பதிப்பொருளென மயங்கலாலவருக்கும் பதி நிச்சயத்தன்மையில் நாத்திகமே நிலைக்கும்.

(இன்னும் வரும்.)

12 APR

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| மலர் | துன்மதி௵ மாசி௴ | இதழ் |
|---|---|---|
| 7 | 1922௵ பிப்ரவரி௴ | 11 |


### விநாயகர் வணக்கம்.

அகரமென வறிவாகி யுலகமெங்கு மமர்ந்
　　தகர வுகாரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
　　பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருணான்கினையு மிடர்தீர்த் தெய்தப்
　　போற்றுநருக் கறக்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு
　　நிருமலனைக் கணபதியை நினைந்துவாழ்வாம்.

---

## திருக்குறள் சைவ சித்தாந்த நூலென்பது.

திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறளானது பல சமயத்தினர்க்கும் பொதுவாகிய நீதி நூலென்பதும், சைவ சித்தாந்த சாத்திரங்கள் சைவ சமயிகட்கு மாத்திரம் உரிய சமய நூலென்பதும் பலருடைய அபிப்பிராயமாயிருக்கிறது. திருக்குறளோடு சைவசித்தாந்த சாத்திரங்களைக் காய்தலுமுவத்தலுமின்றி நடுநிலைமையோடு ஆராய்ந்துணரும் அறிவுடையார்க்குத் திருக்குறளும் சைவ சித்தாந்த நூல்களும் ஒரு பொருளனவே யென்பது விளங்கும். இதனை யுணர்ந்தே ஔவையார்

தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழு முனிமொழியும்—கோவைத்
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசக மென் றுணர்.

என்றருளிச் செய்தனர். சைவ சித்தாந்தமானது மற்றெல்லாச் சமயங்களின் பொது ஒழுக்கங்களைத் தனக்கு அங்கமாகக்கொண்டு சமயாதீதப் பழம்பொருளைக் கைவந்திடச் செய்யும் சமரச சன்மார்க்கமாதலினால் திருவள்ளுவ நாயனார் பல வகைச் சமயத்தார்க்கும் உடன்பாடாயிருக்கும் பொது வொழுக்கங்களை யெடுத்துக் கூறுமுகத்தால் சிறப்பொழுக்கமாகிய சித்தாந்த சைவ ஞான வொழுக்கத்தை யுணர்த்தியருளினர். இவ்விரகசியத்தை யறியாமையால் பலர் சைவ சித்தாந்தம் வேறு திருக்குறள் வேறு யென நினைப்பர். இப்படியே தாயுமான சுவாமிகள் பாடலையும் சிலர் சைவ நூலென் றுணராமல் பொது நூலென்று கூறுகிறார்கள்.

திருவள்ளுவ நாயனார் தமது நூலாரம்பத்தில் கடவுள் வணக்கஞ் செய்யத் தொடங்கி விநாயகர் காப்புக் கூறாமல் தாயுமான சுவாமிகளைப் போலவே “அகர முதல வெழுத்தெல்லாமாதி, பகவன் முதற்றேயுலகு” என்று சிவ வணக்கஞ் செய்தனர். சிவபெருமானார்க்குச் சொரூப நிலையெனவும் தடத்த நிலையெனவும் இரண்டு நிலைகள் உண்டு. இவற்றுள் சொரூப நிலையாவது அவர் குணங் குறி செயல் முதலியன வொன்றுமின்றிச் சச்சிதானந்தமயமாயிருக்கும் நிலை. தடத்த நிலையாவது அவர் ஆன்மாக்களின்மீது வைத்த கருணை மேலீட்டினால் சிவம் சத்தி முதலிய திருமேனிகளைத் தாங்கி படைப்பாதி தொழில்களைச் செய்யும் நிலை. தாயுமான சுவாமிகள் தமது நூலாரம்பத்தில் சிவபெருமானுடைய சொரூப இலக்கணங்கொண்டு அவரைத் தோத்திரஞ் செய்து அதன் பின் பல விடங்களிலும் தடத்தவிலக்கணங்களை யெடுத்து விளக்கித் தோத்திரஞ் செய்தனர். அவ்வண்ணமே திருவள்ளுவ நாயனாரும் தாம் அருளிச்செய்யத் தொடங்கிய நூலுக்கேற்றவாறு, அறிஞர் உய்த்துணருமாறு, சொரூப இலக்கணத்தை வெளிப்படையாகவும், தடத்த இலக்கணத்தைக் குறிப்பாகவும் எடுத்துக்கூறி சிவபரம்பொருளைத் தோத்திரஞ் செய்தனர்.

நாயனார் நூலாரம்பத்தில் அருளிச்செய்த “அகரமுதல வெழுத்தெல்லாமாதி, பகவன் முதற்றேயுலகு” என்னும் குறட்பாவில் பதி பசு பாசம் என்னும் முப்பொருளுண்மையும், பசுபாசங்களோடு இறைவன் அத்துவிதமாய்க் கலந்திருத்தலும், சிவபரத்வ முதலியனவும் கூறப்பட்டுள்ளன. பதி பசு பாசம் என்னும் இம் மூன்றினுக்கும் முறையே அகர உயிரும், ஏனைய உயிர்களும், மெய்யெழுத்துகளும் உவமானப் பொருள்களாக எடுத்தாளப்பட்டன.



“உலகு என்றது ஈண்டு உயிர்கள் மேனின்றது” என உரையாசிரியர் கூறினரெனினும், உலகு என்னுஞ் சொல் சேதனம் (பசு), அசேதனம் (பாசம்), என்னும் இருவகைப் பிரபஞ்சத்தையுங் குறிக்குமாதலாலும், சேதனப் பிரபஞ்சம் அசேதனப் பிரபஞ்சத்தை யொட்டி நின்றே இறைவனாணையால் தோற்றம் நிலை இறுதிகளை யடைதலாலும், உலகு என்றதனால் அசேதனப் பிரபஞ்சமும் கொள்ளப்படும்.

இத்திருக் குறட்பாவில், முதல்வனும் உயிர்களும் பொன்னும் பொன்னாலாகிய பணியும்போல் அபேதமாம் என்று கூறும் மாயாவாதிகளையும், ஒளியும் இருளும்போல் பேதமாம் என்னும் மத்துவரையும், சொல்லும் பொருளும்போல் பேதாபேதமாம் என்னும் விசிட்டாத்துவைதிகளையும் மறுத்து, அகர உயிர்போல் கலப்பினால் ஒன்றாகவும், பொருண்மையால் வேறாகவும், உயிர்க்குயிராதற் றன்மையால் உடனாகவும் முதல்வன் நிற்பன் என்னும் சைவ சித்தாந்தத்தாற் பெறப்படும் அத்துவித உண்மையை அறிஞர் உய்த்துணருமாறு, நாயனார் அகர உயிரை முதல்வனுக்கு உவமானமாக வெடுத்தாண்டனர். இவ்வாறே நமது மெய்கண்ட தேவநாயனாரும்

ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளைகா—ணொன்றின்றா
லக்கரங்க ளின்றா மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு

என்றருளிச் செய்தனர். இதன்பொருள் “வேதம் ஒன்றென்பதற்குப் பொருள் ஒன்றென்பதேயாம்; வேறு பொருள் படாது. அதற்குத் தாற்பரியம் பதிப்பொருள் ஒன்றே; இரண்டில்லை யென்பதாம். இஃதறியாது ஒன்றென்று சொல்லுகின்ற நீ அப்பதிப்பொருளின் வேறாய பசுவென்றறிவாயாக. பதியுஞ் சேதனமாக யானுஞ் சேதனமாக, என்னைப் பசுவென்றதென்னையெனின், நீ மலத்தோடு கட்டுற்று நின்றாயாகலிற் பசுவெனப்பட்டனை. அற்றேல், இவ்வாறு வேற்றுமை கூறிற் பிரமமில்லையாயின் ஒருபொருளுமில்லை யென்னும் வேதத்திற்குத் தாற்பரிய மென்னையெனின், அகர உயிர் இல்லையாயின் அக்கரங்களில்லையா மென்னும் இம் முறைபற்றி வேதம் பிரமப்பொருள் இல்லையாயின் ஒரு பொருளுமில்லை யென்றோதும் அத்தனை” என்பதாம்.

அகரமும் ஏனைய உயிர்களும் மெய்களும் பதி பசு பாசங்களுக் குவமானமாயினமை இப்பத்திரிகை முதன் மலரில் விரித்துரைத்திருத்தலால் ஈண்டு விரிவஞ்சி விடுத்தாம்.

மெய்கண்டதேவ நாயனாரைப் போலவே அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்

“அக்கரங்க டோறுஞ் சென்றிடு மகரம்போல
நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே”

எனவும், மனவாசகங்கடந்தார் “அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போல், மிக்கவுயிர்க் குயிராய் மேவினேம்” எனவும், உமாபதி சிவாசாரிய சுவாமிகள் “அகரவுயிர்போ லறிவாகி யெங்கும், நிகரிலிறை நிற்கு நிறைந்து” எனவும் அகரவுயிரை முதல்வனுக்கு உவமித்திருத்தல் காண்க.

சுட்டியுணரப்படும் பிரபஞ்சத்தைக் கொண்டு சுட்டியுணரப்படாத கடவுளுண்மை கூறவேண்டியிருத்தலின், “ஆதிபகவன் முதற்றே யுலகு” என்றார். இதனால் சுட்டியறியப்படும் பிரபஞ்சம் சித்தும் அசித்தும் என இருவகைப்பட்டு உற்பத்தி திதி நாசம் என்னும் முத்தொழிலையடையும் என்பதும், அது முத்தொழிலையடைவதனால், தனக்குத் தோற்றமும் ஈறும் இல்லாதவனே அதற்குக் கர்த்தாவாதல் வேண்டுமென்பதும் பெறப்படும். அக்கர்த்தாவைப் “பகவன்” என்று கூறியதனாலும், பகவன் என்பது “பகவனேயீசன் மாயோன் பங்கயன்” என்னும் நிகண்டின்படி உருத்திரன் மால் அயன் என்னும் மும்மூர்த்திகளுக்கும் பொதுப்பெயராயிருத்தலாலும், சிருட்டி திதி சங்காரம் ஆகிய இம்முத்தொழிலும் முறையே பிரமன் மால் உருத்திரன் என்னும் இம்மூவரால் நடைபெறுமென்பது பெறப்படும். முத்தொழில்கள் மும்மூர்த்திகளால் நடைபெறினும், இவர்களனைவரும் தாம் தோன்றி நின்று ஒடுங்கும் நிலைக்களமாயிருக்கும் முழுமுதற் கடவுளாகிய ஒப்பற்ற இறைவனது ஆணைவழி நின்று ஏவல் புரிவோரென்பதும் அவ்விறைவன் ஆதிசத்தி யெனப்படும் அருட் சத்தியோடுங்கூடி விளங்கும் சிவபெருமான் என்பதும் “ஆதிபகவன்” என்றதனால் பெறப்படும்.

இறைவன் தனது சொரூப நிலையில் குணம் குறி செயல் முதலியன ஒன்றும் இல்லாதவனாயிருப்பினும் தடத்த நிலையில் அவன் அவள் அது வெனமுப்பாற் பட்டிருக்கும் பிரபஞ்சத்தைக் காரியப்படுத்தவேண்டி தானும் அவன் அவள் அது வெனுமாறு நின்றருளு



வன் என்பதை யுணர்த்துவார். பகவன் என ஆண்பாற் பெயராற் கூறினர். ஆண்பாற் பெயரால் மாத்திரம் கூறியதென்னையெனில், “ஒரு மொழியொழி தன்னினங் கொளற்குரித்தே” என்னும் இலக்கணம் பற்றியும் முப்பாலினுட் சிறந்தது ஆண்பாலாதலினாலும், சர்வ சங்கார காலத்தில் சத்தி சிவத்திலொடுங்கச் சிவம் ஒன்றே சேட்டித்திருத்தலாலும் அவ்வாறு கூறினரென்க.

ஆதி யென்பது நாயனார் தாயின் பேரும் பகவன் என்பது தந்தையின் பெயருமாயிருத்தலினால், இறைவன் உயிர்களுக்கெல்லாம் தாயும் தந்தையுமாகிய சிவசத்தி சொரூபமாயிருப்பவனென்பதையும் இதனால் உணர்த்தியவாறும்.

(இன்னும் வரும்.)

## கடவுள் “கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி.”

(இந்துசாதனப பிரசுரம்.)

கடவுள் அன்புக்கெளியராயினும், மெய்யன்புடையார்க்கே உண்மைக்காட்சி கொடுத்தருளுவர். மெய்யன்பாவது ஒருவரிடத்து அன்பு செய்தற்குரிய காரணத்தை அறிந்து அக்காரணம்பற்றிச் செய்யப்படும் அன்பு. பிற அன்பெல்லாம் பொய்யன்பென்றே சொல்லற்குரியன. காரணத்தை அறியாது செய்யப்படும் அன்பு ஒருபடித்தான பாசாங்கென்றே சொல்லத்தக்கது. காரணத்தை அறியாது செய்யப்படும் அன்பு, அந்தக் காரணத்தைக் கண்டமைபோலக் கற்பித்துக்கொண்டு செய்யப்படுவதே யாதலால், உண்மையை உற்றுநோக்குமிடத்து, அது பாசாங்கின் பாற்படும் என்பது அறிவுடையோர்க்கு இனிது புலப்படும்.

சிற்றறிவுடைய ஆன்மாக்கள் கடவுளைக்குறித்த பரம ரகசியங்களை அறிந்துகொள்வது கூடாதென்பது சத்தியம். அவர்கள் அந்த இரகசியத்துறைகளை எல்லாம் பரம்பரையாகத் தமக்குக் கிடைத்த சம்பிரதாயங்களின்வழிக் கைக்கொண்டு விசுவசித்துப் பத்திசெய் தொழுகுதல் வேண்டும் என்பதை ஒருவரும் மறுத்தல் கூடாது. ஆனால், இந்த ஒழுக்கம் எல்லார்க்கும் எல்லாக்காலத்தும் அமைவுடைத்தாகாது. சிறுமகார் தங் குழவிப்பருவத்தே அறிவுக்கெட்டாத் துறைகளைத் தமது இருமுதுகுரவரும் ஆசிரியரும் பிறருமாகிய ஆப்தர் வாய்ச்சொல்லை நம்பிக் கைக்கொண்டொழுகவேண்டுவது அவர்தங் கடப்பாடாயினும், அவர்கள்

அறிவுமுதிரமுதிர, அத்துறைகட்குரிய நியாய ஆதாரங்களைத் தமது அறிவின்கண் வைத்துத் தாமாக ஆராய்ந்து கண்டு அமையவேண்டுவது அத்தியாவசியகமாம். அங்ஙனங் காண்பதுண்டானால் மாத்திரமே அவர்களுடைய அறிவு மெய்யறிவெனப்படும். இங்ஙனமே கடவுளைக்குறித்த இரகசியங்களையும் எல்லாரும் எல்லாக்காலத்துங் காண்பது கூடாதாயினும், அறிவு வளரவளர அவற்றை அவ்வறிவிடை வைத்து ஆராய்ந்து கண்டு, அக்காட்சி காரணமாகச் செய்யப்படும் அன்பே மெய்யன்பெனப்படும்.

அறிவுநிலைக்கு எவ்வாற்றானும் எட்டுதல் கூடாத பல அதீதத் துறைகள் பதி முதுநிலையின்கண் உள்ளன என்பதும் மறுக்கொணாத சத்தியமேயாகும். இந்த அந்தரங்கங்கள் பதிஞானங்கொண்டு உணர்வு நிலையின்கட் காண்டற்குரியனவேயாம். இந்த ஞானநிலையை அடைதற்கு, அறிவுகொண்டு காண்டற்குரியன அனைத்தையும் அவ்வறிவுவாயிலாகக் கண்டு, அக்காட்சியளவாக உண்மைப் பத்திசெய்து, அந்தப் பக்தி காரணமாகச் சத்திநிபாதம் எய்தப்பெறுதல் வேண்டும். கீழ்நிலையின்கண் அறிவால் அளந்து அறிதற்குரியன அனைத்தையும், அவ்வறிவிடைவைத்து ஐயந்திரிபறக் கண்டுகொண்டவர்க்கே, அக்காட்சி காரணமாகப் பெறப்படும் மெய்யன்பினால் சிவமாந்தன்மை வாய்க்கப்பெற்று, அந்தச் சிவத்தைப்போல முற்றுமுணர்தல் முதலிய திப்பியகுணங்கள் விரவுற்று, பதி முதுநிலைக்குரிய அதீதத் துறைகள் எல்லாம் இருந்தாங்கிருப்ப விளங்கி வெளிப்படும்.

ஆகவே பெத்தநிலையிலே எமக்கு இயைந்தளவு மெய்யன்பு சித்திக்குமாறு நாம் அறிவை இயன்றமட்டும் ஈட்டி, அவ்வறிவுகொண்டு காண்டற்குரிய கடவுளுடைய திப்பியங்கள் அனைத்தையும் கண்டமைதல் வேண்டும். அறிவிற் பெரியோரே கடவுளுடைய அருமை பெருமைகளை அறிந்து மெய்யன்புசெய்ய வல்லுநராவர். ஆதலாற்றானே கடவுளைக் "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி" என்றும், "கல்லார் நெஞ்சில் நில்லானீசன்" என்றும் ஆன்றோர் விதந்தெடுத்தோதுவாராயினர்.

ஆயினும், கல்வியறிவு உண்மைப்பத்திக்கு ஏதுவாதல் போல, ஓர் ஒரு காலத்து அந்தப் பத்திக்குத் தீது செய்வதுமுண்டு. இது உண்மைக் கல்வி எனப்படமாட்டாது. "கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன், நற்றாள் தொழாஅர் எனின்" என்பது நாயனார் வாக்கு. கற்றதன் பயனாக நாம் கடவுளுக்கு அன்புசெய்வ



துண்டானால் மாத்திரமே நாம் கற்றுக்கொண்டது கல்வி எனப்படும். கல்வியால் இறுமாந்து நாம் கடவுளை மறப்பதுண்டானால், அது கல்வி எனப்படமாட்டாது. இத்தன்மைத்தாகிய கல்வியை நோக்கியே "கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்" என்றும், "வெல்லாம லெவரையும் வெருட்டிவிட வகைதந்த வித்தையென் முத்திதருமோ" என்றும், "கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும்" என்றும், பின்னும் பலவாறாகவும் கல்வி மதத்தை மெய்ஞ்ஞானிகள் கண்டித்தொதுக்குவாராயினர். கல்விச் செருக்கால் கருத்து மயங்கிக் கடவுளை மறப்பதுண்டானால், அந்தக் கல்வி மயக்கமாகுமன்றி விளக்கமாகாது. இந்தக் கல்வியைக் கற்றுக் கெடுதலினும் கல்லாது பிழைத்தலே ஆற்றச் சிறப்புடைத்தாம். சிறிது கற்றுவிட்டமையால், அங்ஙனம் கற்றார் அகிலமனைத்தையும் அளந்து கண்டார் போல் மமதையுற்று அழியாமல், தாம் கற்றுக்கொண்ட கல்வியின் பயனாகக் "கற்றது கைம்மண்ணளவு கல்லாத துலகளவு" என்பதை மனத்தகத் கழுத்தி, அக்கல்வி சிறிதெனினும், அது காரணமாகக் கடவுளிடத்தே மெய்யன்பு மீதூரப்பெற்று ஈஸ்வரானுக்கிரகத்துக்குப் பாத்திரராவர் எனின், அதுவே கல்வி என்றும், இந்தக் கல்விச் செல்வம் வாய்க்கப் பெற்றோரே கடவுளைக் காண வல்லுநராவர் என்றும் எங்கள் சமயசாஸ்திரங்கள் எடுத்திசைக்கும். கல்வி என்று அறிவுடையோராற் போற்றப்படுவது சமயக் கல்வியும் அதனுக்கு அனுகூலமான உலகக் கல்வியுமன்றி, சமய அறிவு சிறிதும் விரவப்பெறாது, அதனுக்குப் பிரதிகூலஞ் செய்யும் நிரீச்சுரவாத சம்பந்தமான லௌகிகக் கல்வியன்றாம். கடவுளைக் காண்டற்குரிய கல்வியறிவுடையானுடைய உள்ளத்திலே கடவுள் தெவிட்டாத தெள்ளமுதாகத் தித்திப்பாராதலின், அவர் "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி" எனப்படுவர்.

இதுபற்றியே எமது சமயம் மூடபத்தி மாத்திரத்தால் முத்தி சித்திக்கமாட்டாதென்றும், உண்மையை யறிந்து செய்யும் மெய்ப்பத்தியாற்றானே அது சித்தித்தற்குரியதென்றும் வற்புறுத்திச் சாதிக்கும்.

"தனுகரண புவனபோகந் தற்பரம் பந்தம் வீடென்
றனுவினோ டெல்லாமாகி யடைந்திடும் தத்துவங்கள்
இனிதறிந் திவை நிவிர்த்தி முதற்கலை யிடத்தே நீக்கி
னனிபர முணர்ந்தோ னந்தத் தத்துவ ஞானியாவன்."

என்பது சித்தியார். இங்கே தத்துவங்களை "அறிந்து" என்றும், பரத்தை "உணர்ந்து". என்றும் விகற்பங் காட்டப்பட்டமை சிந்திக்கத்தக்கது;

---

## சுந்தரவல்லியின் நற்போதனை.

(ஞானசித்தி—முற்றொடர்)

கமல - வைகறையில் எழுந்தவுடனே சாணந்தெளித்து மெழுகுகின்றார்களே அதனால் என்ன பிரயோசனம்?

சுந்த - தோழீ! அதுமிகவும் பிரயோசனமானது. வீட்டின் முற்றத்தினும் பக்கங்களினும் நாம் புழங்கும்போது உண்டான அசுத்தங்களும், இரவிலே அதன் தொடர்பாக வந்து குவிந்த கெட்ட அணுக்களும் நிறைந்திருப்பதால், அதைப்போக்கு நிமித்தமாகச் சாணந்தெளித்தல் அவசியமாகும். வீட்டின் உட்பக்கங்களிலே நாம் வாசஞ்செய்யும்பொழுது உண்டான அசுத்த அணுக்கள் அகலுமாறு மெழுகிவரல்வேண்டும். எப்பொழுதும் மெழுக இயலாதாகையால், மெழுகாத நேரங்களிலே சாணங்கரைத்தாவது தெளித்தல் வேண்டும். அப்படிச் செய்யாதொழியின், அவ்வசுத்த அணுக்கள் நிரம்பி நம்மீது சார்ந்து நோயை வருவிக்கும்.

கமல - சாணம் அவ்வசுத்த அணுக்களை நீக்கிவிடுமா?

சுந்த - ஆம், நீக்கிவிடும். சில சமயங்களிலே பிள்ளைகள் இரவில் முற்றங்களில் மல்சலங்கழித்துவிட்டால், அதுநாற்றமாயிருப்பதும் அதுநீங்க நாம் சாணந்தெளித்தால் நாற்றம் நீங்கிச் சுத்தமாயிருப்பதும் நீ கண்டிருப்பாயல்லவா. அதன் காரணமென்ன? அக்கெட்ட நாற்றத்தைத் தந்த கெட்ட அணுக்களைச் சாணம் நீக்கிவிட்டதென்பதல்லவா?

இன்னும் நேர்வாளம் என்னும் நஞ்சு விதையை மருந்துப் பொருளாக்க வேண்டி வைத்தியர்கள் கரைத்த சாணிப்பாலில் ஊறவைத்தும்,பின்பு பாலில் ஊறவைத்தும் அதன் நச்சுத்தன்மையை போக்குதலை நீ கேள்வியுற்றதில்லையா. சாணம் நச்சுத் தன்மையை அகற்றுவதில் மிகவல்லமைபெற்றது. அதுபற்றியே நாம் வசிக்குமிடங்களிலுள்ள நச்சுத்தன்மைகள் கெட்ட அணுக்கள் நீங்கும்படி எப்பொழுதும் சாணந்தெளித்தல் மெழுகுதல் முதலிய வழக்கங்களை நம்முன்னோர்கள் கைக்கொண்டார்கள். சாணம்



சாணம் அழுக்கொழிக்குமென்பதனாலன்றோ வண்ணான் கோடிப் புடவைக்குச் சாணிப்பாலேற்றுகின்றான்.

வீடுகளில் எவரேனும் இறந்துவிட்டால், அவருடையதேகம் எடுக்கப்பட்ட பின்னர், அத்தேகத்தில் நோய்செய்து மரணம் வருவிக்க ஏதுவாயிருந்த கெட்ட அணுக்கள், அவ்விடவாயுவின் சம்பந்தத்தோடும், மண்ணிலும், பண்டபதார்த்தங்களிலும், சுவர் முதலியவற்றிலும், உடுபுடைவைகள் படுக்கைகள் முதலியவற்றிலும், சுவறி நிறைந்திருக்குமென்னுங் கருத்தினாலன்றோ, எங்கும் சாணத்தினால் மெழுகியும், சாணங்கரைத்து ஊற்றியும், பல சாமான்களையும் அலம்பிக் கழுவியும், சுத்தஞ் செய்கின்ற வழக்கத்தை யாவருங் கைக்கொண்டிருக்கிறார்கள்.

எப்பொழுதும் எவ்வகைச் சுத்தஞ் செய்தலுக்கும் சாணத்தை எடுத்துக்கொள்ளும் நோக்கம் அதன் குண விசேடத்தை எண்ணியேயாம்.

போசனஞ் செய்யப்புகும்போது இலைபோடுமிடத்தில் அக்கெட்ட அணுக்கள் இருக்குமாதலால், முன்னே வட்டமாக அல்லது சதுரமாக மெழுகும் நோக்கமும் அவ்விடத்திலுள்ள கெட்ட அணுக்களை நீக்குதற்கேயாம். போசன முடிந்த பின்பும் எச்சிற்படிந்த அவ்விடத்தில் எச்சிலினாலாய குற்றங்களையகற்ற வேண்டி மெழுகுவர்.

எனது அதிப்பிரியையாகிய சகியே! இன்னும் இதன்பெருமை சொல்லுகிறேன் கேள்.

எங்கள் சிறுபிள்ளைகளுக்குக் கைகளிலே கொப்புளச்சிரங்கு வந்தால் சாணத்தைக் கரைத்து ஒரு பாத்திரத்தில் வைத்து அதனுள்ளே கையை வைத்திருக்கும்படி செய்ய அச்சிரங்கு மாறிவிடக் காண்கின்றோம். அது எதனால்? அச்சிரங்கிலிருந்த கிருமிகளை அச்சாணத்தின் சத்துக் கொன்றதனாலல்லவா,

இவைகளை நாம் ஆலோசிக்கும்போது சாணத்திலே நச்சுத்தன்மையை அகற்றவும், கிருமிகளைக் கொல்லவும் தக்க ஒரு வகைச் சத்து இருக்கின்றதென்பது புலப்படும்.

கமல - ஆகா! அப்படியா! மிக நன்றாயிருக்கிறது! இதுவரையில் இதைப்பற்றி எனக்கு ஒருவரும் இப்படிச்சொன்னதில்லை, இப்பொழுது கேட்கக் கேட்க அமிர்தமாயிருக்கிறது. எப்பொழுதும் இனி விடியற்காலையிலேயே சாணந்தெளிக்கும்படியும், விடுவாசல்களை அடிக்கடி மெழுகி வரும்படியும் செய்

வேன். இவ்வளவு குணமுள்ள காரியத்தை நாம் செய்து கொள்வது நம்முடைய சுகத்தின் பொருட்டாதலால், அதை விடுவது மடைத்தனமாகும். பலசனங்களும் பிள்ளைகளும் வசிக்கிற வீட்டிலும் உலாவுகிற முற்றப்பகுதிகளிலும் அசுத்தம் பரவவிடுவது நோய்க்கிடமென்பது என் புத்தியில் நன்றாகப் பதிந்திருக்கிறது. (வரும்.)

---

## மறுபிறப்பு வாதம்

(172 - வது பக்கத்தொடர்ச்சி)

இனி, உலகத்தில் எந்தப் பொருள்களும் மறுபிறப்பை யடையாமலிருக்கவில்லை. நம்முன்னே காணப்படுகிற பிரபஞ்சப் பொருள்களெல்லாம் பல அணுக்கூட்டங்களா யிருக்கின்றன. எந்தப்பொருளும் இப்பொழுதுள்ள நிலைமாறித் தனித்தனி யணுக்களாய்ப் பிரிபினும், பிரிந்த அணுக்கள் மறுபடியும் சேர்ந்து மற்றொரு வடிவாய் வருகின்றது. அது காலஞ் செல்ல மறுபடியும் பிரிகின்றது. பின்பு வேறு ஏதுக்களோடு கூடி மீளவுஞ் சேர்ந்து வடிவுடைப் பொருளாகின்றது. உதாரணமாக மரங்களின் தழைகளைப் பார்ப்போம். அவை மரத்தில் அணு அணுவாய்ச்சேர்ந்து இலைகளாகின்றன. சில சத்திகுன்ற உதிர்ந்து விழுகின்றன. அவற்றை வேறு பயிர்ச் செய்கைக்கு எருவென இடுகின்றோம். எருவென்றாலென்ன? அவற்றின் அணுக்களன்றோ? எருவென இட்ட தழை அணுவாய்ப் பிரிந்து முன் வடிவுமாறி அணுவடிவாகி அங்குள்ள விதையின் சூக்கும சத்தியால் இழுக்கப்பட்டு முளைத்து அப்பயிரின் இலை முதலியவாக வடிவுற்று வருகின்றது. இதில் முன்னிருந்த தழைவடிவு மாறினும் மறுபடியும் அது காரணவடிவாய் அழியாதிருந்து காரியவடிவான இலையாய் மறுபிறப்பெய்தல் பிரத்தியட்சமாம். இப்படி நிகழுதல் ஒருமுறை இருமுறையோடு முடிவதன்று. உலகமுள்ளளவும் அணுக்கள் மாறி மாறி வடிவடைந்து கொண்டே யிருக்கும். இன்னும் உற்று நோக்கில் ஒவ்வொரு கணத்திலும் அணுக்கள் நிலைமாறிக் கொண்டேயிருப்பது புலப்படும். தழைக்குச் சொன்ன இந்த நியாயத்தை மரமுழுவதுக்கும் வைத்துக்கொள்ள வேண்டும். மரத்தின் எல்லா அணுக்களும் நிலைமாறியே வருகின்றன. மரத்தின் அணுக்கள் கூடியதை முளைத்தது என்போம். பிரிதலைப் பட்டது என்போம். மரம்



பட்டபோது அதன் உருவிலிருந்தும் ஏது பட்டது என்று பார்க்கில் அது சீவிப்பதற்கு ஏதுவாயிருந்த சிவ சக்தியே நீங்கியதாக வறிவோம். அது விதையிலிருந்து அணுக்களைக் கவர்ந்து பருத்து வளர்ந்து நின்று பின் அணுத்திரளின் மாறுபாட்டால் அதைவிட்டு நீங்கியதென்று உணரவேண்டும். அணுக்கள் பிரிபினும் மீள ஒன்று கூடி வடிவாவதுபோல, சிவசக்தியும் மரத்தினின்று பிரியினும் சும்மாவிராது வேறோர் விதையைச் சார்ந்து, அதாவது சூக்கும அணுக்களைக் கவர்ந்து, விதையாகி மரமாயேவளரும். அணுக்களைப் போலவே அவற்றை நடத்தும் சிவசக்தியும் மாறிமாறி வடிவெடுக்கும். ஒரு நிமிஷப்பொழுதாவது சிவசக்தி சும்மாவிராது. இதை உற்று நோக்கின் மறுபிறப்பு எப்படிப்பட்டதென்பது இனிது விளங்கும்.

இப்படியே மனித சரீர அணுக்களும் மாறிமாறி வருகின்றன. இலைகளும் காய்களும் கனிகளும் விதைகளுமாயிருந்த அணுத்திரளெல்லாம் எங்கள் ஆகாரமாகி இரத்தாதிகளாய் வந்து சரீரமுமாகின்றன. சரீரமும் அணுவணுவாய்ப் பிரிந்து மற்றொன்றுக்கு எருவாய் அல்லது உணவாய் எழுவகை வடிவுள் ஒன்றோடு கூடி அவ்வடிவாய் மறுபிறப்படைதல் நிதரிசனமாம். இப்படி வருதல் ஒருமுறை இருமுறைமட்டுமா? உலகுள்ளளவும் சரீரமெல்லாம் மறுபிறப்படைகின்றன. கிறிஸ்தவர் ஆன்மாவுக்கன்றோ மறுபிறப்பில்லை யென்கின்றார். நாம் சரீரத்துக்கும் மறுபிறப்பு உண்டென்பதைக் காட்டியிருக்கின்றோம்.

இனி, சரீர அணுக்களின் நிலை மாறுதலைப்போலவே, மரத்தின் சிவசக்திக்குக் காட்டிய முறைப்படி மனிதனிடத்துள்ள சிவசக்தியும், முன்பு பிதாவின் உணவோடு கலந்து உட்சென்று அவனது தேகத்தில் தங்கி அங்குள்ள சுக்கிலத்தில் உருவுற்று விதையாகி மாதாவின் கருப்பையிற் புகுந்து அணுக்களைக் கவர்ந்து வளர்ந்து மகவாய் உதிக்கின்றது. மனிதராய் வளர்கின்றது. பின் இறக்கின்றது. இறத்தலாவது நிலைமாறி வலிகுன்றிய அணுத்திரளாகிய சரீரத்தைவிட்டு நீங்குதலேயாம். நீங்கினும் சரீர அணுக்களை முன்பு கவர்ந்து பருத்து வளர்தற்கு ஏதுவாய்ச் சுக்கிலத்தில் தங்கியிருந்த, அதாவது விதையினிடத்து மரமாதற்கு ஏற்ற, சூக்கும சத்தி முன்னரே யிருந்தவாறுபோல ஒரு சிவசக்தி சூக்குமமாய் அழிவின்றியிருந்து, மற்றொரு சரீரத்தை, அதாவது அணுத்திரளை, கூடி உருவாதற்கு முயன்று நிற்கும். முயன்று மனித கர்ப்பத்

தில் அல்லது பிறிதொன்றில் தங்கி உருவெடுக்கும். இப்படியே மாறிமாறி வருமன்றி ஒரு நிமிஷமும் சும்மாவிராது. (வரும்)

---

## சமரசஞானதீபம்

(192-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல், பதிபசுபாசபதார்த்தத்திரய போதகராகிய சைவஸித்தாந்திகளே முழு ஆத்திகராதல் கண்டு தெளிக. சைவமொன்றுக்கே ஆத்திகத்வம் நிலைத்தலாலதுவே வேத வேதாந்தபாரங்கசிலர்களால் கொள்ளத்தக்க வைதிகமார்க்கமாயினமை ஸித்தித்தது. இந்த வுண்மை நியாயங்களால் மாயாவாதமே வைதிகமார்க்கமென்று சாதிக்கப்புகுவது தவறாய்விட்டது. நாத்திகமு மவைதிகமுமாகத் துணியப்படு மம்மதத்துக்கு மாயாவாதம், போலிவேதாந்தமென்னும் பெயர்களுரிமையல்ல வென்னுந்துர்வாதமுமினிச்சீவியாதென்க. மேல் வியவஸ்தையா லப்பெயர்களம்மதத்திற்குரியவே யென்னு நியாயம் போதாலாலதையின்னுங் கொஞ்சம் விளங்கவுரைப்பாம்.

மாயையை யில்பொருளாகக் கொள்ளலாலவர்மதம் மாயாவாதமாவதெப்படியெனின், அவர் ஜகஜீவபரங்களை மிச்சையெனக் கூறுந்தன்மையான் மிச்சாவாதிகளென வவரை யுண்மை நூல்கள் கூறும். (யாமாஸாமாயா) என்பதற்கு எது இல்லாததோ அது மாயையென வவர்மதப்படியே பொருளுண்டாவதாலதுவே மிச்சாவாதம், மாயாவாதமென் றின்னவாக வழங்கப்பெறும். மிச்சாவாதம் என்பதற்கும், மாயாவாதமென்பதற்கு மொரேபொருள் கண்டுதெளிக. சிவனை யுள்பொருளாக வாதிக்குஞ்சமயம் சைவவாதமெனவும், விண்டுவை யுள்பொருளாக வாதிக்குஞ் சமயம் வைணவவாதமெனவும் பெறப்படுதல் போன் மாயையையுள் பொருளாக வாதிக்குஞ் சமயமாயினன்றோ அது மாயாவாதமாகுமெனின், ஒரு சொல்லுக்குப் பல பொருளுண்மையா லப்பல பொருளும் ஸந்தர்ப்பங்களின் வழி விநியோகம்பெறும். மாயையென்ப தொருபொருளை யில்லாதது எனவவர் கூறுவது சொன்மாத்திரமே யன்றி யவர்க்குள்ள ரோதனங்களெல்லா மம்மாயா விலாசமேயாம். அநுபவத்திலதை யுடையவராகி வார்த்தை மாத்திரத்தாலது கிடையவே கிடையாதெனக் கூறுவதாலவர் வீண் சொல்லென்னை, கௌரவம் பெறுமா? மாயையுளதென்பது சொன்



மாத்திரமெனவும், அது பொருளாகவுளதாயின் ஞானிகளநுபவத்திற் பிரபஞ்சந் தோன்றாததென்னை யெனவுஞ் சங்கித் தழலுமன்னோரறியாமையைத்தொலைப்பாம். அஞ்ஞானிகளுக்குச்சிவம் விஷயமாகாதது கொண்டு அச்சிவமுஞ் சொன்மாத்திரந்தது எனவும், அதுபொருளாக வுளதாயி னஞ்ஞானிகளநுபவத்திலேன் றோன்றக்கூடாதெனவு முண்டாகுமாசங்கைக்குச் சமாதானமவர் சொல்லட்டும் பார்ப்போம். ஞானிகளுக்கு உலகமும், அஞ்ஞானிகளுக்குச் சிவமும் புலப்படாவென்க. அஞ்ஞானிகளுக்குச் சிவம் விஷயமாகாமையா லதை யில்பொருளென லமையாததுபோன் ஞானிகளுக்கு விஷயமாகாதது கொண்டே பிரபஞ்சத்தை யில்பொருளாகத் துணிவது சர்வாஸங்கதமென்க. ஞானிகளுக்குச் சிவமொன்றே தோன்றிக் கொண்டிருக்கும் அப்படியே அஞ்ஞானிகளுக்குப் பிரபஞ்சமொன்றே தோன்றிக்கொண்டிருக்கும். இவ்வுண்மைகளான் மாயையென்பதொரு பொருளை யாமங்கீகரித்த தில்லையென வவர்கூறுங்கூற்றுச் சிதைவுண்டதென்க. "இல்லாததே ததுவேமாயை யெனினில்லாத, தில்லாததேயாகுமெம்மதமே, யில்லா, வொருபொருளுண்டென்ன வுரைக்குமோவேதம், வருபொருள் வேறாகமதிப்பீர்" என யாம் (சித்தாந்தசேகரத்திற்) கூறியபடியாலுங்காண்க. (வருபொருள் வேறாகமதிப்பீர்) என்பதனை ஞானிகளுக்குச் சிவமொன்றே தோன்றிக் கொண்டிருக்குமென மேற்சாதித்த நியாயமே நிறுத்தும். உள்ளதையில்லதாகக் கூறுந் தன்மையால் அஸத்தியவாதிகளென்பது தோன்ற மிச்சாவாதி, மாயாவாதியென வவரையாம் கூறுதல் பிழைபடாதெனவறிக. தம்ம நூல்களிலவர் மாயாவாதமென வேறொன்றை நிரசிக்கத் தொடங்குவதெல்லாந் தம்பாலேறிய குற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டேயாம். ஒருவன்றலைமேன் மலமிருக்கக் கண்டிரங்கிய மற்றொருவ னுன்றலைமேலுள்ள மலத்தைமாற்றுதி யென்றவளவில் என்றலைமேன் மலங்கிடையாது, அவன் றலைமேன் மலமிருக்கிறதென வேறொருவனைச் சுட்டிக்காட்டியும், உன் றலைமேற்றான் மலமிருக்கிறதெனச் சொல்லவந்தவனையே திருப்பிக் கூறியுந் தன்றலையிலுள்ள மலத்தைமாற்ற வழிதேடாத மதிகேடன் விருத்தாந்தத்திலீடங்கலால் விவேகிகள் கழகத்து மணம்பெறாதென்க. மாயாவாதியாகிய தனக்கு நேரிட்டிருக்கும் நாத்திகத்வத்தைப் பரிகரித்துக்கொள்ள மாட்டாமல் உலகாயதனை நாத்திகனென வவன்பழித் துத்திரியும் பண்பிற்றானே முற்றுமிழிந்தழியு

மென்க. (மாயாவாதி யேயாகித், தானேயுரைக்குமந் நூலினுண்மை தன்னைச்சாற்றுவசும்) என அருணந்தி சிவாசாரிய சுவாமிகளும், (மாயாவாதப்பேயா வுனக்குத், தேவரிலொருவனுண்டாக, மேவருநரகம் விடுத்தலோவரிதே.) என உமாபதி சிவாசாரிய சுவாமிகளும் முறையே சிவஞானசித்தியிலும், சங்கற்ப நிராகரணத்திலுங் கூறினாராகலி னவற்றினுண்மைகளை யறிந்தோர்பாற் கேட்டடங்குக. இப்படி யுண்மை வெளிப்பட்டமையால், ஸ்ரீமந் மணிவாசக மூர்த்திகள் கடிந்தருளிய மாயாவாதம் தம்மதல்லவெனத் தப்பித்துக்கொள்ள வழிபார்த்ததுந் தடுமாறிப்போயிற்றென்க.

இந்த விசாரத்தால், மாயாவாதப்பேரவரை விட்டொழியாமை வெளிப்பட்டதனாற் போலி வேதாந்தப்பேறு மவரைவிட்டதில்லையென்பதை நிரூபிப்பாம். மேலிடத்தில் வியவஸ்தைபண்ணி மாயாவாதமென்பது நாத்திகம், அவைதிகம் என்னும் பெயர்கட்குரிய சீருடைத்தெனத் தீர்மானித் திருக்கின்றேமாகையா லதுவே போலிவேதாந்தமென்பதை நிலைக்கப்பண்ணும். இவ்வளவாபாசத்தினதாகியவதைவேதாந்தமாகிய சைவதுல்யமெனவாவது, சைவாதீதமெனவாவது எந்த விவேகத்தால் நாமொப்புக்கொள்ளலாம்? வேதாந்தம் என்பது வேதமுடிவு என்று பொருள்படும். வேதத்தின் முடிவு சிவமென்றே தீர்மானம். அச்சிவம் ஸச்சிதாநந்தகனீபூதமாயுள்ளது. அதற்கு அநர்தஜடதுக்காதிகள் கூறுவது வேதாந்தமாகாது. இங்ஙனமாக, ஜநநமரணப்பட்டுழலு முயிர்வர்க்கங்களும், தநுவாதிகளாகக் காரியப்பட்டழியு மாயாப்பிரபஞ்சங்களுமந்தப் பரமசிவத்தின் விபூதியெனக் கூறிப் பிரலாபிக்குஞ் சித்தாந்தத்தை நாமெப்படி வேதாந்தமென்னலாம்? தத்வமஸியாதி வேதாந்தங்களால் ஸித்திக்கு முண்மை யெதைப்பயக்குமெனின், (ஆரணங்கடருதத்துவம்மஸி யெனும்பதப்பொருளறிந்திடாய், காரணம் மதுவுநீயுமென்றிருமை கண்டு வேறின்மைகருதலால்) என்னும் வசனத்தாற் கண்டுணர்க. இத்தியாதி மஹாவாக்கியங்களை வேதாந்தமென்பதிற் றட்டில்லை. இவற்றினுண்மையுமுரிமையுமான பொருள்களையன்றி மதாந்தரஸ்தர் அந்யதாகூறும் ரோதனர்த்தங்களெல்லாம் எப்படி வேதாந்தமாகும்? அபார்த்தங்களாற் பிரலாபித்துக் கொண்டிருப்பவரெல்லாமுந் தங்களை வேதாந்திகளெனக்கூறித் திரிவதால் அவருளக்ரகண்யனாகிய மாயாவாதியுமப்படியே சொப்பனங் கண்டுகொண்டிருக்கின்றனன்.



அவற்றினுண்மைப் பொருளைக் கவர்ந்து அநுஸந்தானஞ் செய்புமாற்றலுடையவனெவனோ வவனேயன்றோ வேதாந்தியென வெளிப்படக்கூடும்? அவனெவனாயிருக்கக் கூடுமெனின், வேதாந்தத்திற் கூறிய ஸச்சிதாநந்த லட்சணத்தைக் காலத்திரயத்துஞ் சிதையாமற் பாதுகாத்துக் கொள்ளத்தக்கவனாய்ச் சிவத்தியானவிசிட்டமேற் கொண்டொழுகு முத்தமாதிகாரியாதல் வேண்டும். அந்த லட்சணங்குன்றாது உபசிகிப்பது சிவாகம ஸேவை செய்தாலன்றி விளங்காது. அச்சிவாகமநிஷ்டை பெற்றவரே சைவராகையால் அவரே வேதாந்திகளாதல் சாலும். வேதத்தினந்தத்தையறிந்தவரே வேதாந்திகளாவதுண்மையாக, சிவாகமங்களையறிந்தபேர் வேதாந்திகளாவ தெங்ஙனமெனின், வேதத்தினந்தத்தை யறியுந்தன்மையி லுண்மையறிவும், பொய்யறிவுமாக வெளிப்படலால் உண்மையறிவின்படி வேதாந்தமும், பொய்யறிவின்படிப் போலிவேதாந்தமுஞ் சித்திக்கும். ஒவ்வொருவருந் தாந்தாங்கூறும் பொருளேயுண்மையெனக் கோடலினதனை யிதுதானென நாட்டுதல் வேறு சான்றிருந்தாலன்றியமையாது. அச்சான்றே சிவாகமமாகையா லதனையுணர்ந்தவரே வேதாந்திகளென்றல் பொருந்தும். வேதத்தையும், வேதாந்தங்களாகிய வுபநிடதங்களையுஞ் சொன்ன சிவனே சிவாகமங்களையுஞ் சொன்னாராகையால். வேதத்தை ஸூத்திரமும், சிவாகமத்தைப் பாடியமுமாகக் கொள்ளுஞ் சைவமார்க்கமே வேதாந்தமெனவுஞ் சித்தாந்தமெனவும் பெறும். மூலத்தால் வேதாந்தமும், பொருள் விளக்கத்தால் ஸித்தாந்தமுமாகி விளங்குஞ் சைவமார்க்கத்தோடு எப்படியோ மாயாவாதம் ஸாம்யம் பெறும்? அம்மாயாவாதத்துக்கு முன் சிவாகமம் இருளுக்கு முன் கதிரொளியாகுமாகையால். இருளுங்கதிரொளியு மொன்றுகு மெனினன்றோ, மாயாவாதமுஞ் சைவமுமொன்றாகும்? அப்போதல்லவோ வம்மாயாவாதம் வேதாந்தமுமாகும்? அப்படியே சித்தாந்தமுமாகும்? பின்னர் வேதாந்தசித்தாந்த சமரசமுமதுவேயென்னலுமாகும்?

(வரும்)

# சிவ வழிபாட்டினும் சிவனடியார் வழிபாடு விசேடமென்பது.

பூவில் மணமும் மணியில் ஒளியும் போல் எங்கும் நிறைந்து எல்லாமாயும் அல்லதுமாயும் இருக்கும் கற்பனை கடந்த தற்பரம் பொருளாகிய சிவபெருமானை நாம் வழிபட்டு உய்யக்கூடிய இடங்கள் குரு, லிங்கம் (விக்கிரகம்), சங்கமம் (சிவனடியார்கள்) என்னும் இம்மூன்றுமாம். இவற்றுள் குருவழிபாடு தீக்கை பெற்றோரால் தமதாசிரியரிடத்து மாத்திரம் செய்யப்படுவது. விக்கிரக வழிபாடும் சிவனடியார் வழிபாடும் எல்லோராலும் எவ்விடத்தும் செய்யப்படுவன. இவ்விரண்டினுள்ளும் அதிக பலனைத் தருவது சிவனடியார் வழிபாடே யென்பது சைவ நூற்றுணிபாம்.

சிவலிங்க முதலிய வடிவங்களைப் பூசித்தல் சிவபெருமானை மாத்திரம் பூசிப்பதாகும். சிவனடியாரைப் பூசித்தல் அவர்களை மாத்திரமன்றி அவர்கள் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு இனிது வீற்றிருக்கும் சிவபெருமானையும் பூசிப்பதாகும். சிவபெருமான் குறைவிலா நிறைவாய் வேண்டுதல் வேண்டாமையற்றிருப்பதனால் அவரைப் பூசிப்பது அவர் பிரயோஜனங்கருதியதாகாமல் பூசிப்பவர் பிரயோஜனங் கருதியதாகும். சிவனடியார்களுக்கு வேண்டுவன கொடுத்துப்பூசிப்பது பூசிப்பவர் தமக்கு மலநிவிர்த்தியாகிய பிரயோஜனத்தைத் தருவதோடு, அவ்வடியவர்களுக்கும் பயன் படுகின்றது.

திருமந்திரம்.

படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே.

சிவபெருமான் பக்குவம் வாய்ந்தசகலராகிய ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்க வேண்டி ஞானாசிரியத் திருக்கோலம் கொண்டருளும்போது மானிட ரூபங்கொண்டே எழுந்தருளுகின்றார்.

திருவிளையாடற்புராணம்.

"பத்திவழி நிற்பார்க்கு, வினைத்துயர் தீர்த்திட வெடுத்த
வடிவென்ப தவனடியார் வேடமன்றோ"

சிவனடியார் கூட்டத்தில் சிவபெருமானும் ஒருவராயிருந்து நீங்காதுறைகின்றார். இது சிதம்பரத்தில் தில்லை வாழந்தணரோடு தாமும் ஒரு வீட்டாராக இருத்தலாலும் அறியப்படும்.



திருத்தாண்டகம்.

"மனத்தகத்தான் றலைமேலான் வாக்கினுள்ளான் வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர், இனத்தகத்தான்."

பெரிய புராணம்.

ஞாலமுய்ய நாமுய்ய நம்பிசைவ நன்னெறியின்
சீலமுய்யத் திருத்தொண்டத் தொகை முன்பாடச் செழுமறைகள்
ஓலமிட்டு முணர்வரியா ரடியாருட னுழுளதென்றால்
ஆலமுது செய்தபிரா னடியார் பெருமை யறிந்தாரார்.

எத்தகையினராயினும் சிவனடியார் திருக்கூட்டத்தில் சேர்ந்திருக்கப் பெறில் அவர்களுடைய பாவனை விசேடத்தால் சீவன்முத்தராய் விடுவர். இது சிவனடியார்களின் பாவனை விசேடத்தால் கள்ள வேடம் பூண்டார் பலர் உண்மைச் சிவனடியார்களாக மாறின சரித்திரங்களாலும், மரக்கால் கட்டுத்தறி முதலாயினவும் சிவலிங்கங்களாயின சரித்திரங்களாலும் அறியப்படும்.

சிதம்பர மும்மணிக் கோவை.

* * * * *

கூடா வொழுக்கம் பூண்டும் வேடங்
கொண்டதற் கேற்ப நின்றெண்டரொடு பயிறலிற்
பூண்டவவ் வேடங் கண்டோறுங் காண்டொறும்
நின்னிலை யென்னிடத் துன்னி யுன்னிப்
பன்னு ணோக்கின ராகவி னன்னவர்
பாவனை முற்றிய பாவகப் பயனியான்
மேவரப் பெற்றனன் போலும்

* * * * *

மெய்த்தவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத்தகாதனவே.

சிவனடியார்களுக்கு அளித்த உணவு உருத்திரன் மால் அயன் என்னும் மூவர்க்கும் அளித்ததாம். சிவஞானிகளுடைய பரிகல சேடத்தை உண்ணப் பெறுவதனாலேயே ஆணவமலவலி தொலைந்து சிவஞானம் உதித்துவிடும். உமாபதி சிவாசாரிய சுவாமிகளின் திருமடத்துச் சாளரத்திலிருந்த முள்ளிச்செடியும் முத்திபெற்றதெனில் சிவஞானிகள் உண்டு எஞ்சிய பரிகல சேஷத்தின் பெருமையை யாவரால் அளவுபடுத்திக் கூறலாகும்.

திருமந்திரம்.

வித்தக மாகிய வேடத்த ருண்டனன்
அத்த னயன் மாலருந்திய வண்ணமாம்

சித்தர் தெளிந்தவர் சேடம்பருகிடின்
முத்தியா மென்று நம்மூலன் மொழிந்ததே.

இந்திராதி பதவிகளைக் கான்றசோறென வெறுத்தொதுக்கிய சிவஞானிகளாகிய பெரியோர்களும் சிவனடியார்களுடைய பாதோதகத்தை நோக்க விண்ணவரமுதைவேம்பென வெறுத்தனர். சிவனடியார்கள் உண்டு கழித்ததை உண்ணப் பெறும் நாயாகப் பிறக்கவும் விரும்பினார்கள்.

பண்டார மும்மணிக் கோவை.

ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
வாரா வின்ப வருக்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யானவர்
நன்னிலை பெறுதற் கன்னிய ஞயினு
மன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
தீம்புன லமுத மார்ந்தன னதனால்
வேம்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே.

*  *  *  *  *

விழுத்தகு கல்வியு மொழுக்கமு மிலராய்ப்
பழிப்புள ராயினு மாக வழுத்திநின்
பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்தியிப் பவக்கட லுழக்கும்
வர னுடை ஞமலி யாகிநின்
னருளையு மயரா தவதரிப் பதுவே.

சிவனடியார்கள் செய்யும் பூசைகளாலே சிவலிங்க முதலிய மூர்த்தங்களில் சிவ சாந்நித்தியம் அதிகப்படுகிறது. இது பற்றியே பாடல் பெற்ற தலங்கள் ஏனைய தலங்களைக் காட்டிலும் அதிகமாகப் போற்றப்படுகின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் தேவாசிரியன் மண்டபத்தில் எழுந்தருளியிருந்த சிவனடியார்களை முன்னே திரிகரணங்களாலும் வணங்காமல் மனத்தால் மாத்திரம் வணங்கி வீதி விடங்கப் பெருமானை வணங்கச் சென்றபோது, விறன்மிண்ட நாயனார் அவ்வாறு சென்ற சுந்தரமூர்த்தி நாயனாரை மாத்திரமன்றி அவரையாட்கொண்ட வீதி விடங்கப் பெருமானையும் புறகென்று கூறியொதுக்கினார். (Boycott) பாய்காட் செய்துவிட்டார்.)



சிவபெருமான் அடியவர்க்கு மிக எளியரா யிருப்பதோடு அவர்களுக்கு ஏவலும் செய்கிறார்.

திருத்தாண்டகம்.

தூண்டு சுடரனைய சோதிகண்டாய் தொல்லமரர் சூளாமணி தான் கண்டாய், காண்டற்கரிய கடவுள் கண்டாய் கருதுவார்க்காற்ற வெளியான் கண்டாய், வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய் மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம், மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே.

திருவாரூர் நான்மணிமாலை.

மாமுகி றவழு மணிமதிற் கமலைப்
பெம்மா னருமைப் பெருமா ளாயினு
மூனுண் வாழ்க்கைக் கானவர் குரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
வுண்டமிழ் திரு ருவந்தன ராடியும்
விருப்படிக் கொண்ட மிச்சிலூண் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்தும்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்து
மருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்தும்
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
றன்னாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
வொருகா லல்ல விருகா னடந்தும்
எளி யரின் எளிய ராயினர்
அளியர் போலு மன்பர்க டமக்கே.

தொண்டர் கூட்டம் இல்லாதபோது சிவபெருமானுக்கோர் பெருமையுமில்லை. அவர் இருந்தும் பிரயோஜனமிராது. அவர் பஞ்சகிருத்தியம் செய்யவேண்டுவதுமில்லை ஆதலால் அவர் திருத்தொண்டர் கூட்ட சகிதமாகவே தில்லையம்பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்றார்.

திருவாசகம்.

வணங்கத்தலை வைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொடணி தில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

தேவாரம்.

முடிகள் வணங்கி மூவாதோர்கள் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானரமங்கையர் பின்செல்ல

பொடிகள் பூசிப் பாடுந்தொண்டர் புடைசூழ
அடிக ளாரூராதிரைநாளா லது வண்ணம்.

சிவபெருமானைப் பற்றிக் கூறும் சரித்திரங்களுக்குப் புராணங்கள் என்று பேர். திருத்தொண்டர் செய்கைகளைக்கூறும் சரித்திரத்திற்குப் பெரியபுராணம் என்று பேர். இது பற்றியன்றோ "உமையோ இறைவர் பாகத் தொடுக்கம், இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம், தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று பெரியார் கூறினர்.

சிவபெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க அருள்வசப்பட்டிருந்து திருத்தொண்டர்சீர் பரவிய சேக்கிழார் பெருமானே,

தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர் தம்
பொருவருஞ் சீர்புகல லுற்றேன் முற்றப்
பெருகு தண்கட லூற்றுண் பெருநசை
யொரு சுணங்களை யொக்குந் தகைமையேன்

என்று அருளிச் செய்தாரெனில் மருள் வசப்பட்டு முத்திநெறியறியாத மூர்க்கனாகிய ஏழையேனால் திருத்தொண்டர் பெருமைகளையெல்லாம் எங்ஙனம் எடுத்துச் சொல்ல இயலும்.

சைவ சமயிகளுக்குச் சிவாலயங்கள் எப்படி அவசியமோ அப்படியே சிவனடியார் திருக்கூட்டங்களும் அவசியமென்பதைச் சிந்தித்தே யாம் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தை நிறுவி 24 வருடங்களாக நடத்துவிக்கின்றோம். சமய குரவர் மாதிரியைப் பின்பற்றி தெய்வீகமான சிவதல யாத்திரைகள் பல செய்தோம். தலங்கடோறும் மகாபிடேகாதி யுபசாரங்களும் உழவாரத் திருப்பணி தேவார பாராயணம் சைவப் பிரசங்கம் மாகேசுர பூசை முதலியன நடத்தினோம். சைவ பாடசாலை வைத்துச் சிறுவர்களைப் பழக்கிச் சைவ நெறியைப் பாதுகாக்கச் செய்கிறோம். சைவம் எனப் பெயரிய இப்பத்திரிகையை வெளியிட்டு உலகத்தில் அஞ்ஞான விருளை நீக்கி மெய்ஞ்ஞான வொளியைப் பரப்புகின்றோம். யாம் இவ்வளவு அரிய காரியங்களைத் திருவருளையே துணையாகக் கொண்டு பல வருடங்களாகச் செய்துவருவதனால் இத்திருக்கூட்டத்திலிருந்து சைவ நன்னெறியைப் பாதுகாப்பது தங்களைச் சைவர் என்று எண்ணிக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் கடமையாம்.

ப - ர்.

## நம் சைவ சகோதரர்களுக்கு முறையீடு.

சைவ சகோதரர்காள்,

ஒவ்வொரு சமயத்தினர்க்கும் தங்கள் தங்கள் சமயத்தைப் பாதுகாத்துக்கொள்வது, மற்றெல்லாத் தருமங்களைக் காட்டிலும் மேம்பட்ட தருமமும், இன்றியமையாத கடமையுமாம். இப்பரம தருமத்தையும் கடமையையும் இக்காலத்தில் மற்றெல்லாரைக் காட்டிலும் அதிகமாகச் செய்பவர்கள் கிறிஸ்து சமயத்தினரே. முற்றிலும் கைவிட்டிருப்பவர்கள் சைவ சமயத்தினராகிய நாமே. கிறிஸ்தவர்கள் இது வரையில் கோடிக் கணக்கான சனங்களைத் தங்கள் சமயத்திற் சேர்த்திருப்பதோடு திருப்தியடையாமல், இன்னும் இலட்சம் பாதிரிமார்களையனுப்பியும், அனேக கோடி பவுன்களைச் செலவிட்டும், இத்தேசத்து வைதிக சமயங்களை யொழித்து, இயற்கை யாகவே மண்ணாசையாலும், பெண்ணாசையாலும், பொன்னாசையாலும் மயங்கும் சனங்களை மிலேச்சர்களாக்கிவிடத் தொடங்கியிருக்கிறார்கள். சைவசமயிகளாகிய நாமோ எது எக்கேடுகெட்டாலும் நமக்கென்ன என்று நினைத்துக்கொண்டு சைவ சமய பரிபாலனத்தைக் கனவிலும் நினையாமலிருக்கின்றோம். இதனால் விளைந்திருக்கும் விபரீதங்களுக்கு அளவில்லை. கிறிஸ்தவர்கள் நாடு நகரம் மூலை முடுக்கு காடுமேடெல்லாம் பாடசாலைகள் வைத்திருக்கிறார்கள். ஆங்கிலம் கற்கும் சைவப் பிள்ளைகளெல்லாம் அவர்கள் பாடசாலையிலே படிப்பதனாலேயே பெரும்பாலும் நம் சமயம் குன்றிவிடுவதற்கு ஏதுவாகிறது. நாமும் ஏன் அவர்களைப் போல் பாடசாலைகள் வைத்து நம்முடைய பிள்ளைகள் கிறிஸ்து பாடசாலைகளுக்குப் போகாதபடி தடுத்துச் சைவ சமயபோதனை செய்யலாகாது. கிறிஸ்தவர்களிடம் பணமிருப்பது போல் நம்மவர்களிடம் இல்லையென்று நீங்கள் நினைக்கவேண்டாம். இலட்ச ரூபா செலவிட்டுச் செய்த ஒருஇரதத்தை ஒருவன் ஒரு தீக்குச்சியால் கொளுத்திவிட்டால் வேறொரு இரதம் செய்வதற்கு உடனே இலட்சம் ரூபா சேர்ந்து விடுகிறது. இது மாத்திரம் எங்கிருந்து வருகிறது. இன்னும் வாழ்வுக்கும் சாவுக்கும் வம்புக்கும் விளையாட்டுக்கும் அபரிமிதமாகச் செய்யும் செலவுகளுக்குப் பணம் எங்கிருந்து வருகிறது. நம்மிடத்தில் நம்மளவில் சமய பரிபாலனஞ் செய்து கொள்வதற்கு வேண்டிய பொருளில்லாமற் போகவில்லை. பக்தியும் இல்லாமற் போகவில்லை. சமய பரிபாலனஞ் செய்தற்கு

வேண்டிய அறிவும் செல்வமும் முயற்சியும் ஒருங்கு பெற்றார் இல்லை. அன்றியும் நம் சமயத்தை வளர்த்தற்கு அரசாங்கமும் இல்லை. ஆனாலும் நாம் யாவரும் ஒன்று கூடி ஒரு பெருஞ்சபையினராக இருந்தால் இதுவே ஒரு சமய ராசாங்கமாகும். இத்தகைய ராசாங்கமும் இல்லாமையால் நம் சிவாலயங்கள் முதலிய தரும ஸ்தாபனங்கள் பல சைவர்களல்லாதவர்கள் வசத்திலும், அயோக்கியர் வசத்திலும் அகப்பட்டு அழிகின்றன. சகோதரர்களே, நம் உயர்வொப்பற்ற சைவ சமயம் இவ்வாறு பல வழிகளிலும் அழிவதைப் பார்க்க உங்கள் மனம் எப்படி சகிக்கிறது. நீங்களணியும் திருநீற்றிலும் கண்டிகையிலும் உங்களுக்கு உண்மையான பக்தி இல்லையா? இச்சிவ சின்னங்களை உங்கள் சந்ததியாரும் அணிய வேண்டாமா? நீங்கள் செய்யும் சிவ வழிபாட்டை உங்கள் சந்ததியாரும் செய்யவேண்டாமா? நம்முன்னோர்கள் கட்டி வைத்திருக்கும் ஆலயங்களில் பூசையும் திருவிழாவும் நிலைத்து நடைபெற வேண்டாமா? இவையாவும் என்றும் நிலவி நடைபெற வேண்டுமானால், இது வரையில் இருந்ததுபோல் இன்னும் பராமுகமாயிராதீர்கள். ஒவ்வொருவரும் விரைந்து வந்து சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற் சேருங்கள்.

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலும் எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே.

என்னும் இச்செய்யுளால் நம்முடைய சிவாலயங்களும் சிவசாதனங்களும் சைவ நல்லொழுக்கங்களும் முன்னே நம் சமயாசாரியர்களால் உயிர் பெற்றன வென்பது விளங்கும். சமீப காலத்தில் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள், ஆறுமுக நாவலர், சோம சுந்தர நாயகர் முதலிய பெரியோர்களும் சில சைவப் பிரசாரகர்களும், சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட முதலிய சபைகளும் தோன்றியிராவிட்டால் இக்காலத்தில் சைவ சமயம் ஜீவித்திருப்பது இன்னும் அரிதாயிருக்கும்.

சிவாலயங்களைப் போலவே சிவனடியார் திருக்கூட்டங்களும் இன்றியமையாதனவாம். சிவபூசையைக் காட்டிலும் சிவனடியார் பூசையும், சிவாலயங்களைக் காட்டிலும் சிவனடியார்



திருக்கூட்டங்களும் அதிக பலன் தருவனவென்பதும் சிவபெருமான் தங்கள் மனத்தகத்தில் வீற்றிருந்தருளவேண்டுவோர் சிவனடியார் திருக்கூட்டத்தகத்திலிருக்க வேண்டுமென்பதும் வேதாகம நூற்றுணிபாம்.

### திருவாசகம்.

வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய்வாழ்த்த வைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொடணி தில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

உடையான் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரு மிருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் சென்ற 24 வருடங்களாக இயன்ற வழிகளிலெல்லாம் மிகவும் ஒழுங்காகச் சைவசமய பரிபாலனம் செய்து கொண்டிருப்பதும், அரசாங்கத்தால் ரிஜிஸ்டர் செய்யப் பெற்றும் அரசாங்க உதவியைப் பெற்றும் பத்து வருடங்களாக Saivite Elementary School என்னும் பாடசாலை வைத்துப் பரிபாலித்து வருவதும், ஏழு வருடங்களாகச் "சைவம்" என்னும் பத்திரிகை வெளியிட்டு எங்கும் சைவ சமயம் தழைக்குமாறு செய்வதும், முன்னே பெருங்கூட்டமாக 200 சிவ தலங்கள் வரையில் யாத்திரை செய்ததும், இன்னும் பல சிவ கைங்கரியங்கள் செய்வதுமாயிருக்கிறது.

சைவ சகோதரர்களே, இதில் நீங்கள் ஒவ்வொருவரும் அன்புகூர்ந்து தவறாமல் சேர்ந்து உங்கள் சமயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உலோபத்தாலேனும், அசட்டையாலேனும், அக்கிரமமாகக் குறைகூறியேனும் நம் சமயப் பாதுகாப்பைக் கைவிடாதீர்கள்.

இத்திருக்கூட்டத்தவர்களுக்கு மாத மாதம் புத்தகரூபமாக வெளியிடப்படும் சைவப் பத்திரிகை இலவசமாகக் கிடைக்கும். சமய பரிபாலனம் செய்தலினாலும், சிவாலயங்களில் செய்யப்படும் பூசையாதிகளாலும் புண்ணியமும் வளரும். இதிற் சேர்ந்திருப்போர் மாதமாதம் நாலணாவிற்குக் குறையாமல் சந்தா செலுத்த

வேண்டும். மொத்தமாக 25 ரூபா செலுத்துவோர் ஆயுள் சாமர்சி ராவர்.

தேவாரம்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்சிற்றம்பலம்.

---

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

அடுத்த பங்குனி மாதத்தில் இப்போது நடைபெற்றுவரும் 7-வது மலர் முற்றுப்பெறும். சித்திரை மாதத்தில் 8-வது மலரின் முதலிதழ் 1½ ரூபாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப்பெறும்.

7-வது மலர் முதலிதழை சென்ற சித்திரை மாதத்தில் சுமார் 800 பேருக்கு 2½ அணா வீதமாகத் தபால்முத்திரை யொட்டி வி.பி. தபாலில் அனுப்பினோம். இவர்களுக்கு முன்னடியே இருமுறை எச்சரிக்கை செய்திருந்தும், இவர்களுள் 400 கனவான்கள் அப்பத்திரிகையைப் பெறாது திருப்பி நட்டம் விளைத்தார்கள். அதனால் இப்பத்திரிகையில் இவ்வருடம் 6 பாரம் குறைக்க நேர்ந்தது. அப்படிக் குறைத்தும் வரவினுக்கு அதிகமாகவே செலவாயிருக்கிறது. சைவசமயிகளுக்கென வெளிவரும் சமயப்பத்திரிகை இது ஒன்றேயாயிருந்தும், வருடந்தோறும் 36 பாரங்கொண்ட பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு 1½ ரூபா (24 அணா) கொடுக்கவும் மனமில்லாச்சைவ சமயிகள் தங்கள் சமயத்தை எப்படிப் பாதுகாப்பரோ?

இப்போதுள்ள சந்தாதாரர்கள் அடுத்த சித்திரை மாதப் பத்திரிகை அவ்வாறு திருப்ப மாட்டார்களென்று எதிர் பார்க்கிறோம்.

---

28 JUL 1922

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

| மலர் 7 | துன்மதி௵ பங்குனி௴ 1922௵ மார்ச்சு௴ | இதழ் 12 |
| --- | --- | --- |

## இருக்கம் - ஆதிமூல முதலியார் சரித்திரம்

*திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்*
*ஆதலால் வானோரு மானை முகத்தானைக்*
*காதலாற் கூப்புவர்தங் கை.*

இருக்கம் ஆதிமூல முதலியார் (1866-௵) ருத்திரோத்காரி-௵ பங்குனி௴ 28௳ சென்னை திருமயிலையையடுத்த இராயப்பேட்டையில் பிறந்தனர். இவர் தந்தை கனகசபை முதலியார்; தாயார் சொக்கம்மாள். இவர் தாய்மரபு தந்தைமரபு ஆகிய மரபிரண்டும் சைவநெறி வழிவந்த மாண்புக்கியைய தமது இளமையிலிருந்தே சிவபுண்ணியத்தில் விருப்பும் உழைப்பு முடையவராயிருந்து வருகின்றார். இவர் கல்வி பயிலத் தொடங்கி முதலில் தெலுங்கு பிரதம பாடசாலையிற்படித்து அப்பாடசாலையில் முதன் மாணாக்கராயிருந்தனர். அதன்பின் இவர்பிதா இவருக்குத் தமிழில் முதற்பாடபுத்தகம் சொல்லிக்கொடுத்தார். அதுமுதல் இவர் தமக்கு வேறொருவர் கற்பிப்பாரின்றியே தாமே தமக்குத் தற்செயலாகக் கிடைத்த சைவ நூல்களைப் படித்து, உயர்தர வகுப்புப் பாடசாலைகளில் தமது வகுப்பு மாணாக்கரியாவரினும் தமிழில் மேம்பட்டிருந்தனர். இவர் தமிழ்ப்புலமை விரும்பிப் படிக்கவில்லை. ஆன்மார்த்தமாக இயன்றவரையில் சமய நூல்களை மாத்திரம் வாசித்தனர். இவருக்குத் தமிழ்ப்பாஷையிலுள்ள ஞானத்தையும் ஒழுக்கத்தையும் அறிந்து பாடசாலை யதிகாரிகள், தமிழ்ப்பண்டிதர்களில்லாத காலங்களில்

இவரையே தமிழ் உபாத்தியாயராக நியமித்ததுண்டு. அப்போது இவர் பிள்ளைகளுக்குத் தமிழின் அருமையை எடுத்துக்கூறி கடவுட்பத்தியை விளக்கும் சரித்திரங்களைச் சொல்லி அவர்களைத் தம் வசப்படுத்துவர். இவர் தெலுங்கை அனாதரவு செய்து தமிழைப்போற்றி வருவதை யறிந்த தலைமை உபாத்தியாயரொருவர் ஒருநாள் விளையாட்டாக இவர் வகுப்பு மாணாக்கர்களை நோக்கி "தமிழ் பெரிதோ தெலுங்கு பெரிதோ" என்று வினவினர். அப்போது தெலுங்கு மாணாக்கனொருவன் மிகவும் அவசரமாயெழுந்து "தெலுகுதேட்ட அரவம் அத்வானம்" என்றான். அதைக்கேட்ட ஏனைய தெலுங்கு மாணாக்கர்கள் சந்தோஷித்துக் கலகலவென்று சிரித்தார்கள். இவர் உடனே யெழுந்து "தமிழ் தங்கம் வடுகு வல்லக்காடு" என்றார். அதைக்கேட்டுத் தமிழ் மாணாக்கர்களியாவரும் சந்தோஷித்துச் சிரித்தார்கள். அப்போது இவர் தமிழின் பெருமையையும், தமிழில் தேவாரம் இல்லாதிருந்தால் தெலுங்கரியாவரும் சமணராயிருக்க நேரிட்டிருக்கு மென்பதையும், தமிழிலிருக்கும் நாலாயிரப் பிரபந்த முதலிய நூல்களையும் திருக்குறளையும் தெலுங்கர் தெலுங்கு எழுத்தில் அச்சிட்டும் மொழிபெயர்த்தும் அனுபவித்தலையும் எடுத்து விளக்கினார். இவர் பாடசாலையில் ஒரு ஐயங்கார் தமிழ்ப்பண்டிதராயிருந்தார். அவர் இவர் சைவப்பற்றுடையராயிருத்தலால் தமிழ்ப்பாடம் கற்பிக்குங் காலங்களில் நாராயணனே பரம்பொருளென்று கூறிச்சிவதூஷணம் செய்வர். அதை இவர் தாக்ஷிணியமின்றிக் கண்டித்துச் சிவமே பரம்பொருளென்று சாதிப்பார். ஆனால் அவரைப்போல் மத தூஷணமாவது விஷ்ணு தூஷணமாவது செய்வதில்லை. இவைபோன்ற செய்கைகளால் இவரிடத்தில் பாடசாலையில் எல்லோர்க்குமே பொதுவகையாக நன்கு மதிப்பிருந்தது. அப்பண்டிதர் ஒரு தமிழ்ப் பாஷாபிமானி. அவர் "பால திராவிடபோதினி சபை" எனப்பெயரிய ஒரு சபையைத் தாபித்துச் சிறுவர்களைச் சேர்த்து உபந்நியாசங்கள் செய்வித்துக் கொண்டிருந்தனர். அச்சபையில் இவரும் சில நாள் பழகி, இலக்கிய இலக்கண நூல்களை மாத்திரம் கற்பது போதாதென்பதையும் இவற்றோடு சமய நூல்களையும் கற்பது அவசியமென்பதையும் அடிக்கடி வற்புறுத்தி வந்தனர். அதன்பின் "பால ஞான போதினி சபை" யென்னும் ஒரு சபை தாபித்துத் தமது தோழர்களையும் இதர சிறுவர்களையும் கூட்டிச் சமயசம்பந்தமான உபந்நியாசங்கள் நடத்துவித்தனர். பாடசாலையில் கல்வி பயில்வதைவிட்ட பிறகு "ஹிந்து மதாபிமான சபை" என்னும் ஒரு சபை வைத்து மகாஜனக்கூட்டங்கள் கூட்டியும், வீதிப்பிரசங்கங்கள்செய்தும் கிறிஸ்துசமயத்தின்கோட்பாடு



களையும் வைதிக சமயங்களின் ஏற்றத்தையும், கிறிஸ்தவர்கள் செய்யும் முயற்சிகளையும், அம்முயற்சிகளால் இத்தேசத்தவர் எண்ணிறந்தோர் தனித்தனியாகவும், கூட்டங் கூட்டமாகவும், கிராமங்கிராமமாகவும் கிறிஸ்தவர்களாதலையும், அதைப் பார்த்துக்கொண்டு இத்தேசத்து வைதிக சமயிகள் வாளாவிருத்தலையும் எங்ஙனும் எடுத்தெடுத்து விளக்கிக் கொண்டிருந்தனர்.

இவர் உத்தியோகத்தில் அமர்ந்தவுடன் திருமயிலையில் வருடந்தோறும் பங்குனிமாதத்தில் நடைபெற்றுவரும் பிரமோற்சவ காலத்தில் அறுபத்துமூவர் மகோற்சவம் என வழங்கும் எட்டா நாள் திருவிழாவைத் தரிசிக்கச் சென்றபோது, நமது சைவ மகாசமய உண்மைகளைத் தங்கள் ஒழுக்கத்தால் விளக்கி உலகை வாழ்விக்கத் திருவவதாரஞ் செய்தருளிய உண்மை நாயன்மார்களின் மகோற்சவம் அவர்களின் தெரிவரும் பெருமைக்கேற்றவாறு சிறப்பாக நடைபெறாம லிருந்ததைக் கண்ணுற்று வருந்தி, அதனைச் சிறப்பிக்க விரும்பி, அத்தேவஸ்தான தருமகர்த்தரோடு யோசித்து, நாயன்மார்கள் எழுந்தருளுவதற்கென பதினாறு திவ்விய விமானங்களும், அவைகளுக்கு வேண்டிய ஆபக்கால்கள் தண்டுக்கோல்கள் முதலியனவும் செய்து கொடுத்தனர். அக்கைங்கரியத்தை இவர் தொடங்கியபோது இவருக்கு வருவாய் மிகவும் குறைவாயிருந்தமையால் காலைமாலைகளில் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்து அதனால் கிடைத்த ஊதியத்தைக்கொண்டு மிகவும் பிரயாசையோடு அச்சிவ கைங்கரியத்தைச் செய்து வருவாராயினர். இவர் அவ்வாறு செய்து வந்தமையை ஸ்ரீமான் எழும்பூர் மதுரைநாயக முதலியார் என்னும் சிவநேய ரொருவர் அறிந்து, இவரைச் சில தனவான்களிடம் அழைத்துச்சென்று பொருள் சேகரித்துக் கொடுத்தனர். அச்சமயத்தில் ஒட்டகமண்ட் என வழங்கும் உதக மண்டலத்தில் சங்கிலி மேஸ்திரி யென்னும் சிவநேயரொருவர் தமக்கு நெடுங்காலமாகப் புத்திரப்பேறின்றி வருந்தி, அது பெறவேண்டி, விநாயகப் பிரதிட்டை செய்தும், பல பிரார்த்தனைகள் செய்து கொண்டும் விரதங்களை யநுட்டித்துக்கொண்டும் இருந்தனர். அவர் இவரை யறிந்திருந்தமையால் அவருக்கு இவர் கடிதம் எழுதி நாயன்மார்களின் விமானங்களைச் செய்தற்குப் பொருளுதவி செய்யும்படி கேட்டனர். உடனே அச்சிவநேயர் இவருக்கொரு கடிதம் எழுதி அதில் "எனக்கு வெகுகாலம் புத்திரசந்தான மில்லாமலிருப்பதால் பலவிதமான வைத்தியம் விரதம் பிரார்த்தனைகள் எவ்வளவோ செய்தும் பிரயோசனப்படவில்லை. ஆகையால் இவ்வருஷம் புத்திரசந்தானம் உதித்தால் வருகிற

பங்குனி மாதத்தில் பாக்கியாயிருக்கிறேன். விமானங்களை முழுவதும் நானே செய்து வைக்கிறதாக தங்களைக்கொண்டு பிரார்த்தித்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்தேன். மறுபடி எப்படியானாலும் ஆகட்டும், இவ்வருஷத்திலேயே முடிக்கலாமென்று யோசித்திருக்கிறேன். * * * * * * என்னுடைய சந்தான குறைவைப்பற்றி தங்கள் ஆசீர்வாதமும் 63 நாயன்மார்கள் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவருளும் உண்டாகவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" என்று தெரிவித்தார். இவர் அக்கடிதம் கிடைத்ததும் தமது மனோரதம் நிறைவேறிற்றென்று களிகூர்ந்து உடனே அவருக்குப் பதிலெழுதி, அறுபான்மும்மை நாயன்மார்களிடம் பக்தி பூண்டொழுகுவோர்க்குப் புத்திரசந்தானத்தோடு சகல போகபாக்கியங்களும் உண்டாவது திண்ணமாதலால் அவர் விரும்பியவாறே புத்திரப்பேறுண்டாவது திண்ணமாமென்று தெரிவித்தனர். இவர் எழுதியதை விசுவசித்து அவர் உடனே பெருந்தொகை யனுப்பியும், தமது பந்துசனங்களைக்கொண்டு பொருளுதவி செய்வித்தும் அவ்வருடத்திலேயே விமான கைங்கரியத்தைப் பூர்த்தி செய்வித்தனர். நாயன்மார் திருவருளால் அவ்வருட முதலாகவே அவருக்குப் புத்திரப்பேறுண்டாகத் தலைப்பட்டது. அவர் அதனால் களிகூர்ந்து பந்துக்கள் சகிதமாகச் சென்னைக்கு வந்து தமக்குப் புத்திரப்பேறருளிய நாயன்மார்களின் மகோற்சவத்தைத் தரிசித்து அதுமுதல் இவரைப் பின்னும் அதிகமாக விசுவசித்து, சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினருள் ஒருவராயிருந்தனர். அவருடைய சகோதரர் ம-ா-ா-ஸ்ரீ கோ. ஆறுமுக மேஸ்திரியவர்களும், குமாரர் கணேச மேஸ்திரியவர்களும் இன்றைக்கும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திலிருந்து பொருளுதவிசெய்கின்றார்கள். இக்கைங்கரியம் (1894-95-96) விஜய ஜய, மன்மத என்னும் மூன்று வருடங்களில் நடைபெற்றன. இதன் பொருட்டு நேரிட்ட செலவு ரூபா 682. இதற்கு வரவு செலவுக் கணக்கு அச்சிட்டு வெளியிடப்பட்டதன்றி பொருளுதவி செய்தவர்களின் பெயர்கள் விமானங்களில் செதுக்கி எழுதப்பட்டுள்ளன. அது முதல் இவர் இம்மகோற்சவகாலத்தில் தண்ணீர்ப்பந்தர் வைத்து வருகின்றார். இந்த மகோற்சவம் முன்னிலும் மிகவும் சிறப்பாய் நடைபெற்று வருகின்றது. திருமயிலையில் அறுபத்துமூவர் மகோற்சவத்தில் ஸ்ரீ கபாலீச்சரமமர்ந்தார் கற்பக வல்லி யம்மையார் சமேதராய் ஸ்கந்த கணேச சண்டேசர்களோடும் நாயன்மார்களோடும் எழுந்தருளுங் காட்சி திருக்கைலாயக் காட்சியேயென்று சொல்லவேண்டும்.



இவர் மூர்க்கநாயனார் வாசஸ்தானமாகிய திருவேற்காட்டில் வருடந்தோறும் சித்திரை மாதத்தில் நடைபெற்று வரும் திருவூடல் மகோற்சவ காலத்தில் சென்று கூடும் சிவ நேயர்களுக்குத் தண்ணீர்ப்பந்தர் முதலிய வசதிகள் இல்லாக்குறைவை யறிந்து 1897-வது வருட முதல் அவ்விடத்தில் தண்ணீர்ப்பந்தர் வைத்து நீரும் மோரும் சித்திரான்ன முதலியனவும் வழங்கிவந்தனர்.

இவர் கலியுகம் ஐயாயிரத்தில் விளம்பி௵ கார்த்திகைமீ அமாவாசைத் திதியில் தமது வாசஸ்தானமாகிய சென்னையினின்றும் புறப்பட்டுத் திருவொற்றியூரை யடைந்து ஸ்ரீ தியாகராஜப் பெருமானுடைய பவனி மகோற்சவத்தைத் தரிசித்தபோது, அத்தலத்து மேலண்டை மாடவீதி யெங்கும் பூண்டுகள் நெருங்கி முளைத்து, அடியவர்களின் திருவடிகளிற் சிக்குண்டு, வழிபாட்டிற்கு இடையூறு விளைத்தமையைக் கண்டனர். கண்டதும், "இப்பூண்டுகள் முற்பிறவியில் சிவனடியார்களின் தெய்வ வழிபாட்டிற்கும், சைவாபிமானிகளின் சைவசமய பரிபாலனத்திற்கும் இடையூறு செய்த பாவிகளே போலும்! ஓரறிவுயிர்களாய்ப் பிறந்தும் இவை அப்பாவத்தொழிலையே செய்து கொண்டிருக்கின்றன. இவைகளை உழவாரத்திருப்பணியாற் களைதல் வேண்டும்" என்னும் எண்ணம் இவர் உள்ளத்தில் உதித்தது. உதித்தலும், இவ்வெண்ணத்தோடு இறைவனார் திருநடனத்தைத் தரிசித்து மீண்டு சென்னைமாநகரை யடைந்து, தமது கருத்தைத் தமது தோழர்களாகிய சிவனடியார்கள் சிலர்க்கு அறிவித்து, அச்சிவனடியார்களுந் தாமுமாக உழவாரத் திருப்படை மண்வெட்டி கட்டப்பாறை முதலிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு, அடுத்த மார்கழிமீ 11௳ (24-12-98) சனிவார மாலை திருவொற்றியூரை யடைந்து, திருக்கோயில் வழிபாடு செய்தனர். மறுநாளாகிய ஆதிவாரத்தன்று இவர்களியாவரும் அநுட்டானபரராய், திருவீதி மகோற்சவங் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்குப் பின் திருவெம்பாவை பாராயணஞ் செய்த வண்ணம் திருவீதி வலம் வந்து திருக்கோயிலுட் புகுந்து சிவ தரிசனம் செய்து, பிறகு உழவாரத்திருப்பணி செய்யத்தொடங்கி, ஒரு சாரார் திருமதில் திருக்கோபுர முதலியவைகளில் முளைத்திருந்த மரங்களையுங் கொடிகளையும் பூண்டுகளையும் களைந்தார்கள். வேறொரு சாரார் பிராகாரம் திருவாயில் திருவீதி முதலிய விடங்களிற் கிடந்த கல் முள் புல் பூண்டுகளை யகற்றினார்கள். இன்னொருசாரார் திருநந்தனவனத்தைத் திருத்தினார்கள். மற்றொரு சாரார் திருவலகிட்டார்கள். பிறிதொருசாரார் திருப்பள்ளித் தாமந்தொடுத்தார்கள். இவ்வாறு

இவர்களியாவரும் உச்சிப்போது வரையில் திருப்பணி செய்தார்கள். மண்வெட்டி முதலிய ஆயுதங்களைக் கையிலெடுத்துப் பழகியறியாத இவ்வடியவர்கள் செய்யப்புகுந்த உழவாரத் திருப்பணிக்கு மனமுருகி உதவிபுரிவான் போல், வருணனும் அதற்கு முன்னிரவில் மழை பெய்வித்து நிலத்தைச் செப்பனிட்டு வைத்ததுமன்றி, அன்று பகலெல்லாம் மேகங்களைக் கொண்டு பந்தரிட்டு இறைவனாது திருவருளே யெனக் குளிர்ந்திருக்குமாறும் செய்தனன். பின்பு அடியவரியாவரும் அத்தலத்திலுள்ள திருநாவுக்கரசு சுவாமிகள் தண்ணீர்ப்பந்தரில் திருவமுதுசெய்து, பகல் 3-மணியானதும் ஸ்ரீ தியாகராஜப்பெருமான் சந்நிதியை யடைந்து சிவபுராண படனஞ் செய்து, இச்சபைக்குச் "சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்" என்று பெயரிட்டு, அவ்வாறே மாதந்தோறும் தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற தலங்கடோறும் சென்று வழிபடவேண்டும் என்று பிரேரேபித்தார்கள் அதற்குள் பிரதோஷகாலம் சமீபித்தது சமீபித்தலும், அடியவர்களியாவரும் மீண்டும் அநுட்டான முடித்துக்கொண்டு திருக்கோயிலை யடைந்து தேவார பாராயணம் செய்து எழுத்தறியும் பெருமானை இறைஞ்சி யேத்துவாரானார்கள். அச்சமயத்தில் இவர்களுள் ஒருவரும் அறிந்திராத வேதியரொருவர் இவர்களோடு ஒத்தவயதினராகவும் கண்டோர் மனம் காதலித்துருகுமாறு செய்யும் சிவவேடப் பொலிவினராகவும், இவர் இறைவனார் திருவருளுருவமேயோ என்று ஐயுறத்தோன்றி, தம்மைத் திருவையாற்றுச் சாமிநாத ஐயர் எனக்கூறி, இவர்களுடன் சிறிதும் வேற்றுமையின்றிப் பன்னெடுநாட் பழகினவர்போல் அளவளாவிச் சிவாலய வழிபாடு செய்து, பண்ணோடு தேவார பாராயணஞ் செய்து இவர்களை இன்பவாரிதியில் மூழ்குவித்தனர். அடியவர்களியாவரும் அவர் வசப்பட்டு அவரை மண்டபத்தில் எழுந்தருளுவித்து அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். அவ்வேதியர் உடனே எழுந்து "எவரேனுந் தாமாக" என்னும் முதலையுடைய ஒப்பற்ற திருத்தாண்டகத்தைத் திருவாய்மலர்ந்தருளி அடியார் கூட்டத்தைத் தரையில் வீழ்ந்து வணங்கினர் பின்னர் அவ்வேதியரும் அடியார் குழாமும் ஒருவரையொருவர் விட்டு நீங்கமாட்டாதவராய்த் திருநாவுக்கரசு சுவாமிகள் தண்ணீர்ப்பந்தரையடைந்து அன்றிரவு முழுவதும் நித்திரையை மறந்து தேவாரமோதிய வண்ணமாயிருந்து இன்புற்றார்கள். பொழுது விடிந்ததும் அவ்வேதியர் தாம் (ரெயில்) புகைரத மூர்ந்து தம்மூருக்குப் போகவேண்டுமெனக் கூறி விடைபெற்றுச் சென்றனர். அடியவர்களும் அவரிடம் பிரியா விடைபெற்றுத் தத்தம் இல்லங்கட் கேகினார்கள்.



இவர் திருவொற்றியூரில் கண்ட அற்புதங்களாலும், அனுபவித்த இன்பத்தாலும், ஸ்ரீ தியாகராஜப் பெருமானார் சந்நிதியில் பிரேரேபிக்கப்பட்டவாறே மாதந்தோறும் சிவனடியார்களோடு தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற தலங்களை யடைந்து வழிபடல் வேண்டும் என்னும் ஆசை வசப்பட்டு, அடுத்த தையீறாக முதலாகச் சிவதலயாத்திரைகள் செய்யத் தொடங்கி மாதந்தோறும் தப்பாமல் நூற்றுக்கணக்கான சிவனடியார்களோடு சிவதலயாத்திரை செய்து அவ்வண்ணமே வழிபாடு செய்து, சார்வரி வருடத்திற்குள் தொண்டை நாட்டிலுள்ள தேவாரம் பெற்ற தலங்கள் முப்பத்திரண்டையும் தரிசித்து வழிபட்டனர். இத்திருக்கூட்டம் சென்ற தலங்கடோறும் சிவனடியார்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் கூடிச் சர்வோபசாரத்தோடும் எதிர்கொண்டழைத்துச் சென்று உற்சவங்கள் செய்தும், மாகேசுர பூசை செய்வித்தும், திருவிழாக்கொண்டாடி இவர்களோடு ஆராவன்பின் அளவளாவி வழிபடுவாரானார்கள். இவ்யாத்திரைக் காலங்களில் பல அற்புதங்கள் உண்டாயின. இவர் ஸ்ரீ தியாகராஜப் பெருமானைச் சபாநாயகராகச் சிந்தித்து, தாம் காரியதரிசியாயிருந்து தொண்டை நாட்டுத் தலயாத்திரையைப் பூர்த்தி செய்தமையால், யாவருக்கும் அநுகூலமாகிய ஓர் ஆதிவாரத்தில் அப்பெருமானுருக்கு மகாபிடேகாதி யுபசாரங்கள் செய்து தொண்டை நாட்டுத் தலயாத்திரைப் பூர்த்தி விழாவைக் கொண்டாட விரும்பினர். விரும்புதலும், சோமவாரத்திலும் விசேட புண்ணியகாலங்களிலு மாத்திரமன்றி ஆதிவாரத்தில் அப்பெருமானுருக்கு அபிஷேகஞ்செய்யும் நியதியில்லாமையால் இவர் தமது எண்ணம் முற்றுறாமல் வருந்திநின்றனர். காரியதரிசியும் மற்றுமுள்ள சபையார்களும் அவ்வாறு வருந்தி நின்றபோது சபாநாயகர் வாளாவிருப்பரோ? ஸ்ரீ தியாகராஜப் பெருமான் தாம் எழுந்தருளியிருக்கும் மண்டபத்தின் ஸ்தூபிகலசத்தைக் கள்வர்கள் அபகரிக்கச் செய்தனர். அதனை அத்தலத்து ஆதிசைவரறிந்து, இது சிவனடியார் திருக்கூட்டத்தின் பெருமையை விளக்கும் அற்புதச் சம்பவமாம் என்றுணர்ந்து, காரியதரிசியாகிய இவரிடம் சென்று, கலசம் களவாடப்பட்டமையை யறிவித்து, இவர்கள் விரும்பியவாறே ஸ்ரீ தியாகராஜப் பெருமானுருக்கு ஆதிவாரத்திலேயே கும்பாபிஷேக மகோற்சவம் செய்யலாம் என்று தெரிவித்தனர். இவர் அதைத் திருக்கூட்டத்திற்கு அறிவித்து சார்வரிஸு தைமீ 22உ (3-2-1901) ஆதிவாரம் பௌர்ணிமை பூசநட்சத்திரங் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ தியாகராஜப் பெருமானுருக்குக் கும்பாபிஷேகமும் திருவீதி மகோற்சவமும்,

ஸ்ரீ படம்பக்கநாதாதிப் பஞ்சமூர்த்திகளுக்கும் அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் மகாபிஷேகாதி யுபசாரங்களும், பிராமண சந்தர்ப்பணை மாகேசுர பூசை அன்னதான முதலியவைகளும் சர்வாடம்பரங்களோடும் சிறப்புறாய்நடத்தித் தொண்டைநாட்டுத்தலயாத்திரைப் பூர்த்தி விழாக்கொண்டாடினர். அதன் பிறகு அவ்வண்ணமாகவே மாதந்தோறும் தப்பாமல் யாத்திரை செய்து சோழநாட்டிலும் கொங்குநாட்டிலும் நடுநாட்டிலும் உள்ள பல தலங்களைத் தரிசித்தார்.

இவர் அவ்வாறு திருக்கூட்டத்தோடு சிவதலயாத்திரைகள் செய்து வந்தபோது, சென்னை மாநகரில் சைவசமயிகட்கெனப் பொதுவானதொரு சபாமண்டபம் இல்லாமையையெண்ணி அக்குறையை நீக்குமாறு திருக்கூட்டத்தைக்கொண்டு பொருள் சேகரித்தும், தமது கைப்பொருளைக் கொண்டும் மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டு 2,500 ரூபா வரையில் செலவிட்டுச் சபாமண்டபங் கட்டினர். அதைத் தொடங்கிய பிறகு இவருடைய உத்தியோகத்தானமானது சென்னை மாநகரிலிருந்து கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டது. மாற்றப்படவே, அரசாங்கத்தினர் இவரை கல்கத்தாவுக்குப் போகும்படி ஆஞ்ஞாபித்தனர். அதனால் இவரும் திருக்கூட்டத்தார்களும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியமாட்டாமல் மனம் வருந்த, திருக்கூட்டத்தினர் இவர் பிரிவாற்றாமையை விளக்கி இவர் மீது வாழ்த்துப் பாக்களைப்பாடி ரெயில்வே ஸ்டேஷன் முற்றும் பெருங் கூட்டமாகக்கூடி கண்ணீர்விட்டு வழிவிட்டார்கள். இவர் கல்கத்தாவுக்குச் சென்றனரேனும் இவர் மனமெல்லாம் திருக்கூட்டதினிடத்திலேயே பதிந்திருந்தது. சபாமண்டபம் பூர்த்தியாகாமையை எண்ணி வருந்துவாராயினர். கல்கத்தாவுக்குச் சென்ற ஒரு மாதத்திற்குள் திருவருட்செயலாக இவர் சரீரம் மிகவாடி உணவேற்றுக் கொள்ளாமல் இருந்தனர். அதை அரசாங்கத்தினர் அறிந்து உடனே இவருக்கு முழுச்சம்பளத்தோடு மூன்றுமாதம் விடுமுறை கொடுத்துச் சென்னைக்குத் திரும்பிச் செல்லுமாறு அநுமதி கொடுத்தார்கள். அச்சமயத்தில் இவர் மனைவியார் ரெயிலில் நெடுந்தூரம் பிரயாணஞ் செய்யக்கூடாத அவ்வளவு அபாயகரமான நிலைமையி லிருந்தனர். அதனையும் இவர் பொருட்படுத்தாது அத்திருவருட் செயலை யுன்னி வியந்து திருக்கூட்டத்தினர் மகிழ சென்னைக்கு வந்து கொங்குநாட்டிலுள்ள திருமுருகன்பூண்டி, அவிநாசி, திருப்பாண்டிக்கொடுமுடி, திருநணா, திருச்செங்கோடு, சேலம் முதலிய சிவதலங்கட்கு திருக்கூட்டத்துடன் யாத்திரை செய்தனர். அச்சமயத்தில் ஸ்ரீமான் ஜெ. யெம். நல்லசாமிப் பிள்ளை யவர்கள் B.A., B.L.,



சேலம்நகரில் டிஸ்டிரிக்ட் முனிசீப்பாய் இருந்தனர். அவர் திருக்கூட்டத்தை அவ்விடம் வருவித்து அவ்வூர்ச் சீமான்கள் பலரும் சிவனடியார்கள் எண்ணிறந்தோரும் கூடி எதிர்கொண்டு சர்வோபசாரங்கள் செய்துவர நகர்வலஞ் செய்வித்து விழாக்கொண்டாடுவித்தனர்.

ஸ்ரீமான் ஜெ. யெம் நல்லசாமிப் பிள்ளையவர்கள் கொங்குநாட்டுத் தலயாத்திரையில் இத்திருக்கூட்டத்திற்குச் செய்த பேருபகாரங்கள் மிகவும் பாராட்டற்பாலனவாம். அவர் உடனிருந்து திருச்செங்கோடு முதலிய தலங்கட்கு யாத்திரை செய்வித்துச் சிறப்பித்ததுமன்றி, சபாமண்டபத்தின் பொருட்டுப் பல தனவான்களிடம் மெய்வருத்தம் பாராது அழைத்துச் சென்று பொருள் சேகரித்துக் கொடுத்தும் உதவிபுரிந்தனர். இந்த யாத்திரைக்கு ஸ்ரீலஸ்ரீ ம. தி. பாநுகவி சுவாமிகள் விஜயஞ்செய்து தலங்கடோறும் சைவப் பிரசங்க மாரி பொழிந்தனர். இவர்கள் யாவரும் செய்த மிக்க உபகாரங்களால் இவர் தாம் கல்கத்தாவிலிருந்து பெற்றுக்கொண்டு வந்த விடுமுறை கழியுமுன் சபாமண்டபத்தைக் கட்டி முடித்து, 1915ஆம் மேமீ 25ம் அடியவர் குழாம் திருமறைக்காட்டுக் கதவந் திறந்த திருப்பதிகம் ஓதவும், ஸ்ரீமான் ஜெ. யெம். நல்லசாமி பிள்ளையவர்கள் பொற்றிறவுகோலால் கதவு திறக்கவும், ஸ்ரீலஸ்ரீ ம. தி. பாநுகவி சுவாமிகள் முதலிய வித்வசிரோமணிகள் பிரசங்கமாரி பொழியவும், சர்வாடம்பரமாக சபாமண்டபப் பிரவேச மகோற்சவம் கொண்டாடி உடனே மீண்டும் கல்கத்தாவுக்கேகினர்.

இவர் சபாமண்டபம் கட்டத் தொடங்கியபோது பெங்களூரில் வசித்திருந்த பெருங்கொடையாளியாகிய ஸ்ரீமான் ஆற்காடு மெய்கண்டதேவ முதலியாரவர்கள் திருக்கூட்டத்தின் பெருமையை யறிந்து, திருக்கழுக்குன்றத் தலயாத்திரையில் இவர்களைச் சந்தித்து உடனிருந்து சிவாலய வழிபாடாதிகள் செய்து இத்திருக்கூட்டத்தினிடம் பேரன்பு பூண்டு, இவர்கள் கட்டத்தொடங்கிய சபாமண்டபத்திற்கு 250 ரூபா உதவியதுமன்றி, இவர்கள் சபாமண்டபப் பிரவேசம் செய்யப்போவதை யறிந்து தாமே 25 ரூபா அனுப்பிச் சபாமண்டபப் பிரவேச மகோற்சவத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவித்தனர்.

இவர் கல்கட்டாவிற்குச் செல்ல விருந்தபோது, 1905ஆம் மார்ச்சுமீ 19உ சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் மகாஜனக் கூட்டம் கூட்டி அச்சிட்டு வெளியிட்டு வாழ்த்திய வாழ்த்து மஞ்சரி:—

## வாழ்த்து மஞ்சரி.

கடல்புடை யுடுத்த நெடுநில வரைப்பிற் கண்ணுத லடியவர் கூட்ட
மடல்விடை யுகைத்த கடவுடன் னிடங்க ளடைந்தடைந் தருந்தமிழ் வேதந்
தடைகெட வுரைத்துப் பணிதிற மமைத்த சத்துவ வுத்தம சுகுண
மடலுடைக் குவளை யாதிமூ லாநின் மாபுக ழோங்குக மலிந்தே. (௧)

சீருறு மிருக்கத் தண்ணலே நினது சிந்தையின் வலியினா லன்றோ
ஏருறு தமிழின் வேதநல் லடியா ரிருங்கட லுடுத்த பாரதனில்
நாருறு திறமாய்ப் பயின்றன ராதி மூலநற் பெயருறு நண்ப
பாருறு நினது புகழ்ச்செய லறம்போற் படர்ந்தினி தோங்குக மலிந்தே. (௨)

ஐந்துறழ் முப்பான் சிவத்தல மணைந்தெம் மண்ணலை யடியவ ரொருங்கே
வந்தனை புரியுஞ் செயலினுக் காக வைத்தநின் முயற்சிகண் மறவேஞ்
சுந்தர சுகுண வாதிமூ லப்பேர்த் தோன்ற லீயார்ந்த தொல்புகழ்கள்
டந்தணி விரலா லறமென நாளும் படர்ந்தினி தோங்குக மலிந்தே. (௩)

தாமரை யணிந்த புயமிரண் டுடைய சம்பந்த னாதிய ரளித்த
மாமறைப் பொருளார் தமிழ்மறை யுலகோர் மாண்புடன் பயிலுமா செய்த
கோமக னெவனோ வாதிமூ லப்பேர்க் கொண்டநின் றனையன்றிக் குறிக்கின்
மாமிகு நினது புகழ்மறை யெனவே மாண்புட னோங்குக மலிந்தே. (௪)

தூமதி யணிந்த சுருதிநா யகனைத் தொழுந்திற முடையவர் குழுமி
நேமமிக் கவராய்ப் பலதளி புகுந்து நெருங்கிநின் றேத்திடு திறஞ்செய்
தேமலி குவளைத் தாரணி யாதி மூலநின் சீர்ப்புகழ் நாளு
மாமறை யுரைத்த வறமென விளங்கி மாண்புட னோங்குக மலிந்தே. (௫)

அளவில்சீர்ச் சென்னைச் சிவனடி யவர்க ளார்சபா மண்டப மதனை
வளமுற வமைத்த நினதுசீர்க் கம்ம வையகத் தெவரிணை யுறவோர்
அளகையா னெனவெம் மிறைவனுக் குரிய வாதிமூ லப்பெய ரண்ணல்
பளகறு நினது தவப்புக ழறம்போற் பரந்தினி தோங்குக மலிந்தே. (௬)

சூலிகை யழலிற் றூய்மையார் குணத்துத் துறவினர் புகழ்மனை யறத்தோய்
மாலிகை குவளை யாவுடை யாதி மூலநல் லானடி யவர்கள்
பாலிகை யுடன்வந் தெதிர்கொளப் புரிந்த பகருந் தவப்புக ழினைத்துஞ்
சாலிகை மறுவா வுடையவர் புரிந்த தவமென வோங்குக தழைத்தே. (௭)

நின்குல முதல்வ ருபேந்திர னடிக ளினைதரு தவமத னானி
அன்புடை யன்னோர் வழிபடு மாதி மூலநற் பெயருட னடைந்திம்
மன்பதை சைவ மணம்பெறப் புரிந்த மாகிமை யுறுதவப் புகழ்கள்
இன்புறு குடிலை மறைப்பொரு ளென்ன,வினையின்றி விளங்குக விசைந்தே. (௮)

சித்தர்கள் முதலா யுறந்தவர் புகழுஞ் சென்னையம் பதியுறு நினது
புத்தியை யிடமாக் கொடுவெளிப் போந்த புகழடி யவர்திருக் கூட்ட



மித்தரை முழுதும் பரவிமே லோங்கி யெண்ணறு கிளைகளா யிலங்க
லுத்தம வாதி மூலவெந் நாளு மோங்குமெம் மிறையென வுயர்ந்தே (௯)

சைவமந் திரமுந் தமிழ்த்திரு மறையுஞ் சங்கர னடியவர் குழுவுந்
தெய்வ சன்னிதியுந் திகழிரு சுடருந் திருந்தொளி யுறுநுத லவனு
மைவரு முறுமா பூதமு மென்ன வாதிமூ லப்பெய ரண்ணல்
செய்தவப் புகழ்கள் குறுமுனி கரம்போற் சிறந்தினி தோங்குக செழித்தே. (௧௦)

எம்மையா ளுடைய சங்கரி கரத்தி லிருந்தவ தரித்தகற் கங்கை
சும்மையோ டுலவு கல்கட்டா நகர்க்குத் துரைத்தன முறையினாற் புகுநீ
செம்மையோ டுயர்ந்த திருவுடன் விரைந்துசென்னையி லுறமதி யணிந்தார்
தம்மையே நினைக்கு மெம்மனோர் வினைவைத் தருமிறை தனித்திரு வுளமே. (௧௧)

இவர் கல்கட்டாவுக்குச் சென்றபோது சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் மிகவும் உன்னதமான நிலையிலிருந்தது. இச்சபையின் வருகையைப் பலரும் பெருங்காதலோடு எதிர்பார்ப்பவர்களா யிருந்தார்கள். இவருக்குப் பதிலாக இருவர் காரியதரிசிகளாக நியமிக்கப் பெற்றனர். இவர்களோடு பத்துப்பேர் அத்தியட்சர்களாயிருந்தார்கள். இவர் கல்கட்டாவிலிருந்து அடிக்கடி பொருளுதவி செய்துகொண்டிருந்தனர். இவ்வாறிருந்தும் இச்சபை நாளுக்குநாள் பொலிவழியத் தலைப்பட்டது. மெய்யன்புடையார் சிலர் சிவபதமடைந்தனர். இவைகளை யறிந்த அயலவர் சிலர் துராக்கிரதமாகச் சபாமண்டப முதலியவைகளை அபகரிக்கத் தோன்றினர். அவர்களோடு சுயநலங் கருதிச் சபையின் அத்தியட்சர்கள் சிலரும் சேர்ந்து கலகம் விளைவித்துச் சபாமண்டபத்தையும் அதைச் சார்ந்த ஆலயம் வீடு முதலியவைகளையும் பராதீனப்படுத்திவிட்டார்கள். அதனை இவர் அறிந்து காசி பிரயாகை கயை முதலியவற்றைத் தரிசித்து 27 மாதங்களுக்கு விடுமுறை பெற்றுக்கொண்டு மீண்டும் சென்னைக்கு வந்தனர். இவர் அவ்வாறு வந்தபோது இவருக்கு 180 ரூபா மாதச் சம்பளமா யிருந்தது. இவர் பின்னும் சில காலம் உத்தியோகத்திலிருந்தால் 200 அல்லது 300 ரூபா உபகாரச் சம்பளம் பெறலாம். அவ்வாறிருந்தும் இவர் மூன்றிலொரு பங்கு (60 ரூபா பென்ஷன்) உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு உத்தியோகத்தை நிவர்த்தி செய்துகொண்டு ஹைகோர்ட்டில் வியாச்சியம் நடத்திச் சபையை நிலைநிறுத்தித் தம்மாலியன்ற வழிகளிலெல்லாம் சைவசமய பரிபாலனம் பண்ணத் தொடங்கினர்.

அச்சமயத்தில் செல்வச் செருக்கால் மிகவும் அக்கிரமமாய் இச்சபையை யழித்துச் சபாமண்டபத்தைப் பிறர் வசமாக்க முயன்று இவரைத் தாக்கி மனம் நோவச்செய்த ஒருவர்

"பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமு மாயுளு மாண்டொன்றின் மாய்ந்திடுஞ்
சத்திய மீது சதாநந்தி தாளே"

என்னும் திருமந்திரத்தின் வாய்மையை விளக்குவார்போல் திடீரெனப் பெருவியாதி யடைந்து மிக வருந்தி இறந்தனர்.

இவர் திரும்பிச் சென்னைக்கு வந்தபோது முன்போல் திருக்கூட்டம் என்னும் பேரை வகித்துச் சிவதல யாத்திரை செய்தற்கு அருகராவாரைக் காண்பதரிதாயிருந்தது. ஆதலால் இவர் பெருஞ் செலவிட்டும் மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டும் ஹைகோர்ட்டில் வியாச்சியம் செய்து எதிரிகளை ஜெயித்துச் சபாமண்டபத்தையுங் கோயிலையுங் காப்பாற்றிச் சிவதல யாத்திரைகள் செய்வதைச் சுருக்கிச் சபையைப் பலப்படுத்தி நிரந்தரமானவும் சைவசமயப் பாதுகாப்புக்கு இன்றியமையாதனவுமான காரியங்களைச் செய்யத் தொடங்கி, சபையை அரசாங்கத்து 1860-வது வருடத்து 21-வது சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்வித்தனர்.

அதன்பின், சைவ சமய பாதுகாப்புக்குப் பாடசாலைகள் இன்றியமையாதனவென்பதைக் கடைப்பிடித்து, The Saivite Elementary School என்னும் சைவபாடசாலையைத் தாபித்து நடத்தி வருவாராயினர். நடத்திவந்தபோது, சிலர் இப்பாடசாலையை யெடுத்துவிட்டு முன்போல் யாத்திரை செய்ய வேண்டுமென்று கலகஞ்செய்து, தங்கள் கருத்து முற்றுறாமையால், இதினின்றும் பிரிந்து சென்னை மெய்கண்ட சிவனடியார் திருக்கூட்டம் எனப் பெயரியதொரு சபையைத் தாபித்தனர். இவர்களுள் தலைவராயிருந்தவர் தாம் சபை தாபித்த ஒரு மாதத்திற்குள் இறந்துபோயினர். அவரோடு அம்மெய்கண்ட சபையும் பொய்கண்ட சபையாய் முடிந்தது. அச்சமயத்தில் இப் பாடசாலை வைக்கப்பட்டிருந்த வீட்டுக்குடையவர்கள் அவ்வீட்டை மூன்று மாதங்களுக்குள் காலிசெய்துகொடுக்கும்படி நிர்ப்பந்தஞ் செய்தார்கள். இவ்வாறு இவருடைய நன்முயற்சிகளுக்கு இடையூறுகள் மேலு மேலும் உண்டாயின. பாடசாலைக்கு வேறு தகுந்த இடம் கிடைக்கவில்லை. ஆதலால் இவர் மாதம் ஒன்றுக்கு மூன்று ரூபா வீதமாக வாடகை கொடுத்து ஒரு காலி நிலத்தை முப்பது வருட வாடகைக்கு வாங்கி, சுமார் 1600 ரூபா வரையில் செலவிட்டு மூன்று மாதங்களுக்குள் பாடசாலைக்கென ஒரு கட்டடம் கட்டி அக்கட்டடத்தில் இப் பாடசாலையை வைத்து நடத்திவருவாராயினர். அப்போது இப்பாடசாலையில் ஒரு உபாத்தியாயரே யிருந்தார். இப்போது இது மிகவும் விருத்தியடைந்து மூன்று



உபாத்தியாயர்களுடையதாய் அரசாங்கத்தின் உதவியைப்பெற்று பிரசித்தி பெற்று நிலவுகிறது. Messrs. Best & Co, துவிபாஷிகர் ஸ்ரீமான் ராவ்பஹதூர் யஸ். இரத்தினவேல் செட்டியார் அவர்கள் இவர் கட்டிய கட்டடத்தை விலை கொடுத்து வாங்கி இப்பாடசாலைக்கு வாடகையின்றி இலவசமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

இவர் கல்கட்டாவிலிருந்தபோது சைவ சித்தாந்த மகாசமாஜம் தோன்றி வருடாந்தக் கூட்டம் கூடுவதை யறிந்து, ம-ா-ா-ஸ்ரீ ஜெ. யம். நல்லசாமி பிள்ளையவர்களுக்குக் கடிதம் எழுதி, சமாஜம் நாடகசாலைகளைப் போல் வெறும் பிரசங்கத்தினளவா யிருப்பதில் பயனில்லையென்றும், பல வழிகளிலும் சமய பரிபாலனம் செய்ய முயலுதல் வேண்டும் என்றும், சைவ சமயாபிமானிகளின் கடமைகள் இன்னவையென விளக்கி உபந்நியாசங்கள் செய்யவேண்டும் என்றும் தெரிவித்தனர். ஷை பிள்ளையவர்கள் இவருக்குப் பதில் எழுதி சைவ சமயிகளின் கடமையை விளக்கி ஒரு வியாசம் எழுதி யனுப்பும்படி கேட்டனர். இவர் சென்னைக்கு வந்ததும், அவ்வியாசத்தை மிக விரிவாயெழுதி டெம்மி 8 பக்க அளவில் 20 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகமாக 1000 பிரதி அச்சிட்டு, இராமநாதபுரத்தில் கூடிய மகாசமாஜத்து ஐந்தாவது வருடாந்தக் கூட்டத்தில் அரங்கேற்றினர். 1912௵ ஷை சமாஜத்தின் காரியதரிசியாயிருந்து சென்னை விக்டோரியா பப்ளிக் ஹால் என்னும் நகர மகா மண்டபத்தில் மகா சமாஜத்தின் 6-வது வருடாந்தக் கூட்டத்தை மிகச்சிறப்பாய் நடத்துவித்தனர். சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் காரியங்களை நடத்தற்குச் சுமார் 3 வருடம் வரையில் திருக்கூட்டச் சபாமண்டபத்தில் இடங்கொடுத்து ஆதரித்தனர். இரண்டு வருடம் வரையில் பொக்கிஷதாரராயிருந்து சமாஜத்து அத்தியக்ஷர்கள் சிலர் காட்டிய துரோகத்தாலும், ஒற்றுமையின்மையாலும் ஷை சமாஜத்தினின்றும் நீங்கினர்.

இவர் திருக்கூட்டத்தின் சார்பாக ஒரு சைவப் பத்திரிகை வெளியிட்டுவர விரும்பி, அதற்குப் போதிய தமிழ்ப் புலமை தமக்கில்லையென நினைந்து, தமிழ்ப்பண்டிதர் சிலரை பத்திரிகாசிரியராயிருந்து உதவி செய்யுமாறு வேண்டினர். அவர்கள் மிகவுங் கால தாமதஞ் செய்தமையால், இவர் திருவருளையே துணையாகக்கொண்டு தாமே இயற்றிவரத் துணிந்து சைவம் எனப்பெயரிய சீரிய பத்திரிகையை வெளியிடத் தொடங்கினர். இப்பத்திரிகை சிவபெருமானார் திருவருளால், இதற்கிணையான பத்திரிகை வேறில்லை யென்று எவரும் மதிக்கச் சொற்சுவை பொருட்சுவை நிரம்பித் தமிழ் நாடெங்கும் பிரசித்தி பெற்று

நிலவுகின்றது. ஒரு பெரிய பண்டிதர் "பத்திரிகை முழுதுஞ் சைவ மணங் கமழ்கின்றது. தன்னோக்கத்தையே கடைப்பிடித்துச் செல்லும் இத்தகைய பத்திரிகை நந்நாட்டிலரிது" என்று புகழ்ந்தனர். இன்னுமோர் பெரிய வித்வான் "சைவம் என்னும் மகுட நாமமுடைய மாசிகப் பத்திரிகை வாசிக்கும் பெற்றித்து. அறிவுடையவர்க்கு அமிர்தமாயிலங்குகின்றது" என்று வியந்தனர். மற்றுமோர் தமிழ்ப் பெரும் புலவர் "விஷயங்கள் சர்க்கரைப் பந்தலிற் றேன்மாரி பொழிந்தாற் போலக் கனிவாய்ச் செந்தமிழில் எழுதப்பெற்றிருக்கின்றன" என்று சந்தோஷித்துக் கூறினர். பலர் பாமாலைகள் சாற்றிப் புகழ்ந்தனர். இவ்வாறு கற்றல் கேட்டலுடைய பெரியார் பலர் பாராட்ட இன்றைக்கும் பத்திரிகை இயற்றி வருகின்றார். அன்றியும் இப்பத்திரிகையில் இலக்கிய விலக்கண நூல்களைப் பயின்று ஆசிரியர் பால் முறையாக வோதினர்க்கு மாத்திரமன்றிப் பிறர்க்கு எளிதாய் உணர வாராததும், ஞான நூல்களுக்கெல்லாம் தலையாயதுமான சிவஞான போதத்திற்குப் புதிய முறையிலும் எளிய நடையிலும் நவநீத உரை எழுதி இப்பத்திரிகையில் வெளியிட்டு வருகின்றனர்.

இப்பத்திரிகையை முதலில் இவ்விரண்டு பாரம் கொண்டதாக (அதாவது டெம்மி அளவில் 16 பக்கங்கொண்டதாக) வெளியிட்டனர். இப்போது மும்மூன்று பாரமாக (24 பக்கங்கொண்டதாக) வெளியிட்டு வருகின்றனர். இப்பத்திரிகையைத் தொடங்கிய பிறகு காகித விலை அச்சுக்கூலி தபாற்கட்டணம் முதலியன வெல்லாம் பன்மடங்கு அதிகரித்துப் பல பத்திரிகைகள் நடைபெறாதொழிந்தும், இவர் தாமே பத்திரிகாசிரியராகவும், லிகிதராகவும், ஏவலாளராகவும் போஷகராகவுமிருந்து சைவப் பத்திரிகையை வெளியிட்டு வருகின்றார். இவருக்காகப் பரிந்து இரங்கோனிலிருந்து ஸ்ரீமான் சைவ சித்தாந்தசரபம் சோளங்கிபுரம் சிவ அருணகிரி முதலியாரவர்கள் பிரேரணையால் அவர் மாணாக்கர்களாகிய ஸ்ரீமான் - செவு - சித - சொக்கலிங்கம் செட்டியாரவர்களும், ஸ்ரீமான் மெ - செ - மெ - மெ - இராமநாதன் செட்டியாரவர்களும், தெ - பழ - சித - சதாசிவம் செட்டியாரவர்களும், பல ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்து மூலதனமாக 2500 ரூபா சேகரித்துக் கொடுத்தார்கள்.

ஆதிமூல முதலியார் திருக்கூட்டச் சகிதமாய் யாத்திரை செய்த தலங்களின் அட்டவணை இதினீற்றில் அச்சிடப்பட்டுள்ளது. இவர் குடும்ப சகிதமாய் காசி, பிரயாகை, கயை, இராமேச்சுரம் முதலிய தலங்களையும், தரிசித்தனர். இத்தலயாத்திரைகள் மாத்திரமன்றி சென்னையிலும் இதின் சுற்றுப்புறங்களிலும் திருக்கூட்டச் சகிதமாய் எங்கோரும்



தேவார பாராயணமும் சைவப் பிரசங்கமும், ஆலய வழிபாடும் நடத்தினர். பன்னிருதிரு முறைகளையும் திரட்டித் திருமுறைத்திரட்டு வெளியிட்டனர். இதன் பிறகே பலர் பல திருமுறைத் திரட்டுகள் வெளியிட்டார்கள். தேவாரத் திருமுறைகளுக்குத் திருவீதி மகோற்சவம் செய்து காட்டினர். பிறகு எங்கும் திருமுறை மகோற்சவம் நடைபெறுவதாயிற்று. இத்திருக்கூட்டம் தோன்றிய பிறகே பல திருக்கூட்டங்கள் தோன்றின. எங்கும் தேவார பாராயணம் முன்னிலும் அதிகமாக நடைபெறலாயிற்று.

இவர் திருக்கூட்டத்துடன் சிவதல யாத்திரைகள் செய்ததுபோல் இதுகாறும் வேறெவரும் செய்ததில்லை. இவர் காரியதரிசியாயிருந்தது மாத்திரமன்றி திருக்கூட்டத்தினர் எல்லோர்க்கும் குற்றேவல் செய்பவருமாயிருந்தார். யாவரும் உண்ட பிறகு இவர் உண்பதும், யாவரும் உறங்கச் சென்ற பிறகே இவர் உறங்குவதும், எவர்க்கும் எவ்வகைக் குறைவும் நேரிடாதபடி காவல் செய்வதும், யாத்திரைக்கு முன்னமே தலங்கடோறும் போய் வேண்டியவற்றைச் சித்தஞ் செய்வதும், அவசியம் நேர்ந்தபோது மூட்டை சுமப்பதும், தீவட்டி பிடிப்பதும், மற்றவர்களை வண்டிகளிலேற்றித் தாம் நடந்துசெல்வதும் இவருடைய தொண்டுகளாயிருந்தன. இவரோடு உண்மைச் சிவனடியார்கள் பலர் யாத்திரை செய்து, துணை புரிந்தும், வாயாரத் தேவார பாராயணம் பண்ணியும் மன முருகச் சைவப் பிரசங்கங்கள் செய்தும், பேரன்போடு ஆலயவழிபாடு செய்தும், உழவாரத் திருப்பணி, திருவலகிடுதல், திருவிளக்கேற்றல், பூமாலை தொடுத்தல், கூத்தாடல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்வாராயினர். இத்திருக்கூட்டம் யாத்திரை செய்த தலங்கடோறும் அவ்வத்தலத்துப் பெரியோர்கள் அளவற்ற உபசாரங்களைச் செய்தார்கள். உடனிருந்து யாத்திரை செய்தவர்களுள் சென்னைச் சண்முக ஞானபுரவாசரும் சிதம்பர நடராஜ குஞ்சிதபாத நேசருமாயிருந்த மா. சுப்பராயப்பிள்ளையவர்களும், தேவார உபாத்தியாயர் மா. தங்கவேல் பிள்ளையவர்களும், சைவப் பிரசாரகர் கயப்பாக்கம் சதாசிவ செட்டியாரவர்களும், ஸ்ரீ கற்பவிநாயகர் திருவடி நீழலார் நக்காடு இராஜரத்தின முதலியாரவர்களும், தேவார சபைத் தலைவர் பொரூர் ஆறுமுக முதலியாரவர்களும், தங்கவேல் செட்டியார், எழும்பூர் மதுரை நாயக முதலியார், பரசுராம முதலியார், கவுணியன் அச்சுக்கூடத்ததிபர்கள் கா. முருகேசச் செட்டியார், கா. சமரபுரிச் செட்டியார், மாங்காடு குருநாத முதலியார், திரு. வே. மாணிக்க முதலியார், ஐயப்பந்தாங்கல் த. சபாபதி முதலியார், காஞ்சிபுரம் சிவநேசத் திருக்கூட்டக்

காரியதரிசி பி. செ. முருகேச முதலியார் இராயப்பேட்டை ஆறுமுக முதலியார், காட்டூர்-வெங்கடாசல முதலியார், அணைவை-சண்முக முதலியார் முதலியவர்களும் மிகவும் சிரத்தையோடு முன்னிருந்து யாத்திரைகளை நடத்துவித்தார்கள். பல அற்புதங்களும் நடைபெற்றன. மாரிகாலத்தில் மழையினாலும், கோடைகாலத்தில் வெயிலினாலும் திருக்கூட்டத்தினிடையே வழிகளிற் சென்ற சர்ப்ப முதலிய விஷ செந்துக்களாலும், பலர் கூடிப் பகலிலும் இரவிலும் பல யாத்திரைகள் செய்யும்போது சகஜமாய் நேரிடக்கூடிய இடையூறுகளாலும் எவ்வித மான தீங்கும் நேரிட்டதில்லை. கொடிய கோடைகாலத்திலும், பல நாள் மழையில்லாத விடத்தும் திருக்கூட்டம் சென்ற தினத்தில் மழையில்லா திருந்ததில்லை. இத் திருக்கூட்டத்திலிருந்து யாத்திரை செய்த பெரியோர்களின் சரித்திரங்களையும், தலங்கடோறும் அன்பர்கள் செய்த உபசாரங்களையும் ஆங்காங்கு கண்ட அதிசயங்களையும், இறைவனார் அருட்டிறங்களையும் விளக்கப்புகின் அது மிகப் பெரியதொரு புராணமாம்.

இவர் இவ்வாறு யாத்திரைகள் செய்தபோது, சிலர் திருக்கூட்டத்தைக் கலைத்து வெவ்வேறு சபைகளை வைத்து யாத்திரை செய்யத் தலைப்பட்டார்கள். இத்திருக்கூட்டத்திற்குப் பிறர் செய்த தீங்குகள் எல்லாவற்றுள்ளும் இவருக்குப் பதிலாகக் காரியதரிசிகளுள் ஒருவராக நியமிக்கப்பெற்றிருந்த முற்கூறிய அணைவை சண்முக முதலியாரும், அத்தியட்சருள் ஒருவராயிருந்த காட்டூர் வெங்கடாசல முதலியாரும் செய்த இடையூறுகள் மிகக் கொடியன. அவற்றால் திருக்கூட்டம் நிலை குலைந்துவிட்டது. ஆதலால் இவர்கள் செய்த இடையூறுகளையும், அவைகளாலும் சலிக்காமல் அரும்பாடுபட்டு ஆதிமூல முதலியார் திருக்கூட்டத்தை நிலைநிறுத்திச் சைவசமய பரிபாலனஞ் செய்து வருவதையும் இங்குச் சுருக்கி விளக்குவது மிகையாகாது.

## அணைவை சண்முக முதலியாரும்
## காட்டூர் வெங்கடாசல முதலியாரும்

சென்னையில் தங்கசாலை வீதியில் ஸ்ரீ கற்பக விநாயகாலயம் என்னும் சிறு ஆலயம் ஒன்றிருக்கிறது. இது முற்காலத்தில் வண்ணாரிடையே இருந்தமையால் வண்ணாரப் பிள்ளையார்கோயில் என வழங்கப் படுகிறது. 1881ளு இக்கோயில் பா௱ே. சுப்பராய முதலியார் என்பவர் வசத்திலிருந்தது. அவர் இதையும் இதைச்சேர்ந்த ஒரு சிறு வீட்டையும் 1881ளு ஏப்ரல்மீ 25வ சக்காடு இராஜாத்தின முதலி

யார் முதலிய நால்வர் கூடிய ஒரு சிறு சபையாரிடம் ஒப்புவித்தனர். இவர்களுள் மற்ற மூவரும் நாளடைவில் நீங்கிவிட இராஜரத்தின முதலியார் ஒருவரே தர்மகர்த்தாயிருந்து இக்கோயிலைப் பாதுகாத்து வந்தனர். இவர் திருக்கூட்டத்தின் நிர்வாக சபையினருள் ஒருவரா யிருந்தமையாலும், இக்கோயில் முன்னே தம்மிடத்து மாத்திரமன்றி தம்மோடு மூவர் கூடிய ஒரு சபையாரிடம் ஒப்புவிக்கப்பட்டமையாலும், இதற்குச் சொந்தமான சிறு வீட்டின் வாடகை ரூபா ஆறுக்கு மேல் வருமானமில்லா திருந்தமையாலும், திருக்கூட்டத்தைக் கொண்டு பரிபாலிப்பித்துவர விரும்பிப் பலகாலும் வேண்டிக்கொண்டனர். திருக்கூட்டத்தினர் இவர் வேண்டுகோளுக்கிசைந்து, வர்த்தமானப் பத்திரிகைகள் வாயிலாகவும் விளம்பரப் பத்திரிகைகள் வாயிலாகவும் பலர்க்கும் அறிவித்து, 1904௵ நவம்பர்௴ 27௳ மகாஜனக் கூட்டம் கூட்டி, இராஜரத்தின முதலியாரிடமிருந்து இக்கோயிலைத் தங்கள் வசப்படுத்திப் பரிபாலித்து வந்தார்கள். திருக்கூட்டத்தார் 1905௵ கோயிலைச்சார்ந்த வீட்டு நிலத்தில் ஏறக்குறைய 2500 ரூபா செலவிட்டுச் சபாமண்டபம் கட்டி, மேல் மண்டபத்தைச் சைவப்பிரசங்கம் தமிழ்வேத பாராயண முதலியவைகளுக்கு உபயோகித்துக்கொண்டு, கீழ்மண்டபத்தைப் பத்து ரூபாவுக்கு வாடகைக்குவிட்டு அவ்வாடகையைக் கோயிலுக்கு உபயோகித்துக் கொண்டிருந்தார்கள். அன்றியும் கோயிலுக்கு வேண்டிய எவ்வகைப் பணிகளையும் செய்து பரிபாலித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு 1908௵ வரையில் கோயிலைப் பரிபாலித்துக் கொண்டிருந்தார்கள். திருக்கூட்டத்தின் காரியதரிசிகள் பேராலேயே போலீஸ் லைசென்சும் வாங்கப்பட்டு வந்தன. திருக்கூட்டத்தின் வசம் வந்தபிறகு முன் கேள்வி முறையில்லாதிருந்த இக்கோயில் மிகவும் அபிவிருத்தி யடைந்தது. புங்கத்தூர் சிங்கார முதலியார் என்பவரொருவர் தாம் இறக்குமுன் வேலுபிள்ளை யென்பவரொருவர் மூலமாக 2000 ரூபாவுக்கு வீடுவாங்கி இக்கோயிலுக்கு தானஞ் செய்யும்படி பத்திரம் எழுதி வைத்தனர்.

அதற்கிடையில் ஆதிமூல முதலியார் 1905௵ உத்தியோக விஷயமாகக் கல்கட்டாவுக்குப் போக நேரிட்டமையால், திருக்கூட்டத்தார் இவருக்குப் பதிலாக முற்கூறிய இராஜரத்தின முதலியாரையும் அணவை சண்முகமுதலியாரையும் காரியதரிசிகளாக நியமித்தார்கள். 1908௵ இராஜரத்தின முதலியார் சிவபதமடைந்தனர். அவர் நோயால் வருந்தி இறக்குந் தறுவாயிலிருந்தபோது முற்கூறிய வேலுபிள்ளை சிங்காரமுதலியார் வைத்த திரவியத்தைக் கொண்டு ஒரு

வீட்டை வாங்கினர். கோயிலுக்கு முன்னிலும் அதிகமான வருமானம் வரக் காரணமாயிற்று. ஆதனால் இராஜரத்தின முதலியாருடைய பந்துக்கள் கோயிலையும் அதைச் சார்ந்த சபாமண்டபத்தையும் அப்போது வேலுபிள்ளை வாங்கினவீட்டையும் துராக்கிரதமாய்த் தங்கள் வசப்படுத்திக்கொள்ள விரும்பினார்கள். வேலுபிள்ளை சபாமண்டபத்தின் கீழ் கட்டடத்தைத் திருக்கூட்டத்திற்கு வாடகை கொடுத்து உபயோகித்துக் கொண்டிருந்தார். முற்கூறிய காட்டூர் வெங்கடாசல முதலியார் அக்கீழ் கட்டடத்திற்குக் குறைந்த வாடகைகொடுத்துப் புத்தகக்கட்டடக் கடைவைத்து அநுபவித்துவர விரும்பி வேலுபிள்ளையைத் தூண்டி இராஜரத்தின முதலியார் பந்துக்களுக்குத் துணையாய் நின்றார். இவைகளுக்கெல்லாம் வேலுபிள்ளை உடன்பட்டு திருக்கூட்டத்தை நிராகரித்து, இராஜரத்தின முதலியார் பேரைமாத்திரம் செப்பி தானபத்திரம் எழுதி, தாம் வாங்கின வீட்டைக் கோயிலுக்குத் தானஞ்செய்து, இராஜரத்தின முதலியார் இறந்து போகவும் தாம் அதுவரையில் திருக்கூட்டத்திற்கு வாடகை கொடுத்து உபயோகித்து வந்த சபாமண்டபத்தின் கீழ் கட்டடத்தின் வாடகையையும் புதிய வீட்டின் வாடகையையும் இராஜரத்தின முதலியார் மனைவியிடம் வசூல் செய்து கொடுத்தனர். கோயில் குருக்களைத் தம் வசப்படுத்திக் கொண்டு தாமே குருக்களுக்குச் சம்பளம் முதலியவைகளைக் கொடுத்து வந்தனர். இவ்வாறு வேலுபிள்ளையும், வெங்கடாசல முதலியாரும் இராஜரத்தின முதலியார் பந்துக்களும் சேர்ந்துகொண்டு எல்லாப் பொருள்களையும் அக்கிரமமாகத் தங்கள் வசப்படுத்திக் கொண்டு திருக்கூட்டத்தைச் சபாமண்டபத்தினுள் பிரவேசிக்க இயலாதபடி செய்தார்கள். அப்போது காரியதரிசியாயிருந்த அணவை சண்முகமுதலியாரால் யாதும் செய்ய இயலவில்லை. ஏனைய அத்தியட்சர்களும் மௌனமாயிருந்துவிட்டார்கள்.

## போலீசும் பயன்படாமை

இவைகளைக் கல்கட்டாவிலிருந்த ஆதிமூல முதலியார் அறிந்து 27 மாதங்களுக்கு விடுமுறை பெற்றுக்கொண்டு சென்னைக்கு வந்து எதிரிகள் செய்யும் அக்கிரமங்களைப் பொது ஜனக் கூட்டங்களைக் கூட்டிப் பரிகரிக்க முயன்றனர். அதனால் பயன் உண்டாகவில்லை. எதிரிகள் மேலுமேலும் அக்கிரமங்கள் செய்யத் தலைப்பட்டார்கள். சபாமண்டபத்தின் பூட்டுகளை உடைத்துச் சாமான்களைக் கொள்ளையடிக்கத் தலைப்பட்டார்கள். போக்கிரிகளையேவி ஆதிமூல முதலியார் சபையினுள் புகாதபடி கொடுமைகளைச் செய்தார்கள். இவைகளை



ஆதிமூல முதலியார் போலீஸ் அதிகாரிகளுக்குக் கடித மூலமாக அறிவித்தனர். அதுவும் பயன்படவில்லை. இவர் எழுதிய கடிதமும் அதற்குக் கிடைத்த போலீஸ் இலாகாவின் விந்தையான பதிலும் வருமாறு:—

Madras, 24th July 1909.

From

The Secretary,

CHENNAI SIVANADIAR THIRUCCOTTAM,

To

THE DEPUTY COMMISSIONER OF POLICE,

Madras.

SIR,

I beg to submit that the Sri Karpaga Vinayagar temple (premisis No. 180, Mint Street, Madras, has been in possession of the Chennai Sivanadiar Thiruckoottam a society registered under Act XXI of 1860) since 1903. The society has erected a building known as the "Chennai Sivanadiar Thiruckootta Sabamantapam" in the above temple premisis, let its down - stairs hall to one Mr. Velu Pillai and has been using its upstairs hall as the society's premisis. On the death of the late secretary, Mr. E. Rajarathna Mudaliar, his wife, in collusion with the above Mr. Velu Pillai and Archaka of the temple, began to lay fictitious claims to the Dharmakarta - ship of the temple, and to give the society a lot of trouble The locks of the society's premisis are constantly broken, apparently by the above named persons. Consequently, the door was fitted with inside locks on the 17th July 1919. Even this lock has been broken and the doors are left open again.

As we have got our valuable pictures, records etc., in our society's premisis referred to above, and some of them are already missing, I request that yon will kindly

cause an enquiry to be made and prevent recurrence of similar house - breaking.

I am sir,
Yours Most faithfully
(Sd.) I. AUTHEMOOLA MUDALIAR,
Secretary, Chennai Sivanadiar Thiruckoottam,
Residing at No. 24, Nattu Pillaiar Covil St., G T. Madras.

இதற்குக் கிடைத்தபதில் போஸ்ட் கார்டு (Post Card).

R.C. 1070/R.C.D. Police Deputy Commissioner's Office,
Northern Range,
Madras, 11th August 1909.

The Deputy Commissioner of Police has passed the following endorsement on your petition, dated 24th July 1909.

"I don't believe you have lost any property. The High Court has found you have no rights there, and the present Dharmakartha refuses to rent the building to you, and I refuse to interfere."

(By order)
M. ANANDAVELU,
Head Clerk.

இவ்வாறு போலீசும் பயன்படாதொழியவே ஆதிமூல முதலியார் தமது உத்தியோகத்தை நிவர்த்திசெய்துகொண்டு சொற்ப உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு, பெருஞ் செலவிட்டும், பெரும்பிரயாசையெடுத்துக்கொண்டும், ஹைகோர்ட்டில் ஸ்கீம் சூட் (Scheme suit) தாக்கல் செய்து வியாச்சியம் செய்து, எதிரிகளின் உபத்திரவங்களையொழித்து, கோயிலையும் சபாமண்டபத்தையும், கோயிலுக்குரிய வீடு முதலியவைகளையும் காப்பாற்றிப் பொதுஜன சொத்துகளாக்கினர். இவ்வழக்கில் கனம்பொருந்திய ஹைகோர்ட்டார் செய்த தீர்மானம் இதினீற்றில் வெளியிடப் பட்டிருக்கிறது.

இதில் சபாமண்டபம் கோயில் நிலத்தில் கட்டப்பட்டமையால் கோயிற் சொத்தாக மதிக்கப்பட வேண்டுமென்றும், ஆனால் திருக்கூட்டத்தார் தாங்கள் அனுபவித்துவரும் சபாமண்டபத்தின் மேல்பாகத்



திற்குத் திருக்கூட்டம் உள்ளவரையில் கோயிலுக்கு மாதம் ஒன்றுக்கு எட்டணா வீதமாக வாடகை கொடுத்து வரவேண்டுமென்றும், மதராஸ் ஹிந்து தேவஸ்தான கமிட்டியால் நியமிக்கப்படும் இரண்டு ட்ரஸ்டிகளால் கோயிற் காரியங்கள் நடத்தப்படல் வேண்டுமென்றும், ட்ரஸ்டிகள் ஐந்து வருடகாலம் இருத்தல் வேண்டும் என்றும், அவசியமானால் முன் இருந்தவர்களே மீண்டும் ஐந்து வருடங்களுக்கு ட்ரஸ்டிகளாக நியமிக்கப்படலாம் என்றும் விதிக்கப்பட்டது.

இவ்வாறு ஆதிமூல முதலியார் பகீரதப் பிரயத்தனம் செய்து, கோயில் முதலியவைகளைப் பொதுஜனச் சொத்துகளாக்கி, முன்னிருந்த நேசம்பாராட்டி, மதராஸ் ஹிந்து தேவஸ்தான கமிட்டியார் அணைவை சண்முக முதலியாரை கோயில் ட்ரஸ்டியாக நியமிக்குமாறு செய்தனர். அணைவை சண்முக முதலியார் ட்ரஸ்டியாக நியமிக்கப்பெற்ற உடனே தம்மைக் கோயிலதிகாரியாகவும் திருக்கூட்டத்தாரைத் தமது குடித்தனக்காரராகவும் எண்ணிக்கொண்டார். தமது அச்சுக்கூடத்தைத் திருக்கூட்டத்திற்கு அதிக விலைக்குவிற்றுப் பெருத்த இலாபஞ் சம்பாதிக்கமுயன்றார். இதற்குத்திருக்கூட்டத்தார் இடங்கொடாமற் போகவே இவரும் திருக்கூட்டத்தைப் பகைத்து உபத்திரவஞ்செய்யத் தொடங்கிவிட்டார். முன் தம்மை விரோதித்துக் கோயில் முதலியவைகளைப் பராதீனப் படுத்திய காட்டூர் வெங்கடாசல முதலியாருடன் தோழமைகொண்டு, அவரே நெடுங்காலம் அனுபவித்து வருமாறு சபாமண்டபத்தின் கீழ்க்கட்டடத்தை அவருக்கு மிகவும் குறைந்த வாடகைக்கு விட்டார். முதல் 5 வருடங்கள் கழிந்தபிறகு மதராஸ் ஹிந்து தேவஸ்தான கமிட்டியார் அணைவை சண்முக முதலியாரோடு ஆதிமூல முதலியாரையும் இரண்டாவது ஐந்து வருடங்களுக்கு ட்ரஸ்டிகளாக நியமித்தார்கள். சண்முக முதலியார் ஆதிமூல முதலியாருக் கிடங்கொடாமலே கோயில் கணக்கு முதலியவைகளைத் தம் வீட்டிலேயே வைத்துக்கொண்டு பலவழிகளில் அக்கிரமமாக நடந்துகொண்டிருந்தார். சபாமண்டபத்தின் கீழ்க்கட்டடத்திலிருந்து மேல் கட்டடத்திற்குப் போகும்படி புதியதொரு படி போடச் சம்மதித்து, அதன்பொருட்டுத் திருக்கூட்டத்திற்கு அதிக செலவு நேரிடச்செய்து, திருக்கூட்டத்தார் எல்லாச் சாமான்களையும் சித்தப்படுத்தித் தம்முடன் கலந்து நன்னாள் வைத்துப் படி கட்டத் தொடங்கியபோது, வெங்கடாசல முதலியாருக்கு உடனாயிருந்து, வெங்கடாசல முதலியார் வாடகை கொடுத்து உபயோகிக்கும்வரையில் படி போடாதபடி தடுக்குமாறு செய்துவிட்டார். திருக்கூட்டத்தார் கீழ்க்கட்டடத்திற்கு எவ்வளவு அதிகமாகவாயினும் வாடகை கொடுத்து

அதில் தங்கள் அச்சுக்கூடத்தை வைத்து நடத்தப் பல கால்முயன்றும் அதற்குச் சண்முகமுதலியார் இடங்கொடாமல் வெங்கடாசல முதலியாருக்கே குறைந்த வாடகைக்குப் பலநாளும் விட்டிருந்தார். இவர் நெடுங்காலமாக சுவாசகாசத்தால் பீடிக்கப்பட்டும் படுக்கையிலேயே கிடப்பவராயிருந்தும் தமக்குப் பின்வரும் ட்ரஸ்டிகளும் கீழ் கட்டத்தைத் திருக்கூட்டத்திற்கு வாடகைக்கு விடாதபடி தடுக்குமாறும், வெங்கடாசல முதலியாரே அதைப் பலநாள் அநுபவிக்குமாறும் மற்றொரு ட்ரஸ்டியாகிய ஆதிமூல முதலியாருடன் கலவாமலே, தமது பேரோடு ஆதிமூல முதலியார் பேரையுஞ்சேர்த்து வெங்கடாசல முதலியாரிடம் குடிக்கூலி உடன்படிக்கை எழுதி வாங்கிக்கொண்டார். அணவை சண்முக முதலியார் செய்த இவ்விதமான இடையூறுகளால் திருக்கூட்டத்தார் சைவ சமயப் பாதுகாப்பினிமித்தம் தாபித்து நடத்திய வைதிகசைவ அச்சுக்கூடத்தை விற்றொழித்துவிட நேர்ந்தது. சண்முக முதலியாருடைய அக்கிரமச் செயல்கள் இன்னும் பலவுள. அவற்றை விரிக்கிற் பெருகும்.

### மதராஸ் ஹிந்து தேவஸ்தான கமிட்டியின் ஒழுங்கீனம்.

ஆதிமூல முதலியார் சண்முக முதலியாருடைய அக்கிரமச்செயல்களை விவரமாய் எழுதி மதராஸ் ஹிந்து தேவஸ்தான கமிட்டிக்கு அறிவித்தார். அக்கடிதத்தைக் கமிட்டியின் கூட்டத்தில் வைத்து விசாரிக்கப் போவதாக கமிட்டியின் தலைவராயிருந்த திவான்பஹதூர் இராஜரத்தின முதலியாரும், ஸர். பி. தியாகராஜ செட்டியாரும் தெரிவித்தார்கள். கமிட்டி காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ ஆர். சுப்பிரமணிய ஐயர் B.A., B.L., யாது காரணத்தாலோ முதலில் ஆதிமூல முதலியார் கடிதத்தைக் கமிட்டி முன்வைத்து விசாரணை செய்விக்க விரும்பவில்லை. பிறகு முற்கூறிய இரண்டு கமிட்டி மெம்பர்களின் தூண்டுதலால் அக்கடிதம் 1917௵ ஏப்ரல்மீ 22௳ கூடிய கமிட்டி கூட்டத்தில் விவகரிக்க வேண்டுமென உத்தேசிக்கப்பட்டது. அப்படியிருந்தும் அத்தினத்தில் அதுபற்றிப் பேசாமலே அக்கடிதத்தை ஸர். பி. தியாகராஜ செட்டியாருக்கும், பி. வி. துரைசாமி முதலியாருக்கும் அனுப்பி அவர்கள் மூலமாய் விசாரித்தல் வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதன் பின் அக்கடிதத்தை காரியதரிசியாகிய ஐயர் அவ்விருவரிடம் அனுப்பியிருத்தல் வேண்டுமென்று பலநாள் எதிர்பார்த்தும் கடைசியாக அவ்விருவரும் தங்களுக்கு அக்கடிதம் சேரவில்லையென்று தெரிவித்துவிட்டார்கள். ஐயர் அதை அவர்களுக்கு அனுப்பிவிட்டதாகத்



தெரிவித்துவிட்டார். அதனால் ஆதிமூல முதலியார் அதன்பின் அவ்விருவருக்கும் தமது கடிதத்தின் பிரதி (Copy) ஒன்று எழுதியனுப்பினார். ஸர். பி. தியாகராஜ செட்டியார் 1917௵ செப்டம்பர்மீ 9௳ ஆதிமூல முதலியாரையும் சண்முக முதலியாரையும் தம்மிடம் வருவித்து, கடிதத்தைச் சண்முக முதலியாரிடம் கொடுத்து, ஒருவாரத்திற்குள் அவருடைய மறுமொழியை எழுதி, தம்மிடம் கொண்டு வந்து கொடுக்கும்படி சொன்னார். சண்முக முதலியார் அப்படிச் செய்வதற்குப் பயந்து, தம் மனம் போனபடியெல்லாம் பதில் எழுதி அக்கடிதத்தையும் தமது மறுமொழியையும் தமக்குச் சார்பாயிருக்கும் கமிட்டி காரியதரிசியிடம் கொண்டுபோய் கொடுத்தார். அக்காரியதரிசி அம்மறுமொழியை ஸர். பி. தியாகராஜ செட்டியாருக்கு அனுப்பிவிடல் வேண்டும். அப்படி அனுப்பாமல் பின்வருமாறு கடிதம் எழுதி ஆதிமூல முதலியாருக்கு 1917௵ டிசம்பர்மீ 15௳ அனுப்பினார்.

To, M. R. Ry., AUTHIMOOLA MUDALIAR,
Trustee of Sri Karpaga Vinayagar Temple,
Madras.

SIR,

I herewith forward to you for your remarks the reply of Mr. A. C. Shunmuga Mudaliar Avl., your Co-trustee which you are requested to submit at an early date. On the receipt of your reply the matter will be placed before the meeting for disposal.

Yours sincerely,
(Sd.) R. SUBRAMANIA IYER,
Secretary.

ஆதிமூல முதலியார் காரியதரிசி விரும்பியவாறே பதில் எழுதி 1918௵ ஜனவரிமீ 9௳ கடிதங்களை அவருக்கே திருப்பி அனுப்பினார்.

கமிட்டி காரியதரிசி தாம் முன் எழுதித் தெரிவித்தவாறு அக்கடிதங்களை கமிட்டியின் முன்பு வைத்து விசாரணை செய்விக்க மனமில்லாமல், ஆதிமூல முதலியாருக்கு 1918௵ மார்ச்மீ 9௳ பின்வருமாறு போஸ்ட் கார்ட் எழுதினார்.

Sir, Please go over to Mylapore to-morrow evening. I will try to settle disputes between you both. The matter has long been pending.

Yours very sincerely,
R. SUBRAMANIA IYER,
Secretary.

கமிட்டி காரியதரிசி தெரிவித்தவாறே மைலாப்பூரிலுள்ள அவர் வீட்டிற்கு அவர் குறித்த காலத்தில் ஆதிமூல முதலியார் சென்றார். ஐயர் இவரிடம் நெடுங்காலம் வேறு விஷயங்களைப்பேசிக் காலங்கழித்துக் கொண்டிருந்து, கடைசியில் அணைவை சண்முக முதலியார் அன்று காலையில் தம்மிடம்வந்து போய்விட்டாரென்றும், இவர்களிருவரும் சச்சரவு செய்துகொண்டிருந்தால் அதை நிவர்த்திசெய்யத் தம்மாலாகாதென்றும் சொல்லிவிட்டார். இவ்வாறு பல நாட்களாக ஆதிமூல முதலியார் தேவஸ்தான கமிட்டியாரிடத்தில் மதிப்புவைத்து அலைந்ததும், ஸர். பி. தியாகராஜ செட்டியார், திவான் பஹதூர் இராஜரத்தின முதலியார், ராவ் சாஹிப் பி. வி. துரைசாமி முதலியார் முதலிய பிராமணரல்லாதவர்கள் பேச்சில் மதிப்புவைத்து தேவஸ்தான கமிட்டிக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டதும், வைதிக பிராமணராகிய பிரமஸ்ரீ R. சுப்பிரமணிய ஐயர் B.A., B.L., சூழ்ச்சியால் பயன்படாதொழிந்தன. சண்முக முதலியார் தம் இஷ்டப்படியே எதையும் செய்து கோயிலைப் பாழாக்கினார். கோயிற் சொத்துக்கள் பலவும், முக்கியமான தஸ்தாவேசுகளும் இவர்வசமிருந்து காணாதொழிந்தன. சண்முக முதலியார் ஒருவரே கையொப்பமிட்டுத் தேவஸ்தான கமிட்டிக்கு வருடாந்தக் கணக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். ஆதிமூல முதலியாரும் சண்முக முதலியாரும் கோயில் ட்ரஸ்டிகளா யிருக்கவேண்டிய காலமும் 1921 வருடம் பிப்ரவரி மாதத்தோடு முடிந்தது.

அணைவை சண்முக முதலியார் பலகாலமாக வயோதிகத்தாலும், நோயாலும் பீடிக்கப்பட்டுப் பாயும் படுக்கையுமா யிருப்பதனால், மூன்றாவது ஐந்து வருடங்களுக்கு ஆதிமூல முதலியாரோடு வேறொருவரை நியமிக்குமாறு கோயில் அபிமானிகள் தேவஸ்தான கமிட்டிக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். அவ்விண்ணப்பமும் பயன்படவில்லை. சண்முக முதலியாரின் நெருங்கிய பந்துவாகிய அணைவை நாகேசலிங்க முதலியாரையும், சிநேகிதராகிய மாணிக்கவேலு முதலியாரையும் கமிட்டியார் கோயில் ட்ரஸ்டிகளாக நியமித்தார்கள். இவர்களிருவரும் கடவுளுக்குப் பயந்து நடப்பவர்களா யிருப்பதனால், அணைவை சண்முக முதலியார் செய்த அக்கிரமங்களுக்கு உடன்படாமல் காட்டூர் வெங்கடாசல முதலியார் மீது கோர்ட்டில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள்.



இவ்வாறு ஆதிமூல முதலியார் சைவ சமயாபிமான மிகுதியால் பல வழிகளிலும் துன்பப்பட்டும் சலியாமல் பல காலமாகத் தம்மாலியன்ற வழிகளிலெல்லாம் சைவ சமய பரிபாலனம் செய்து கொண்டிருக்கிறார். சென்னையில் சைவ உயர்தரப் பாடசாலை தாபிக்கவிரும்பித் தமது குடும்பப் பாதுகாப்பின் பொருட்டுள்ள சொத்துக்களை அடமானம் வைத்து திருக்கூட்டத்திற்குக் கடன்கொடுத்து அரசாங்கத்தார் மூலமாக நிலம் வாங்குவித்திருக்கிறார்.

சைவ சமயிகள் ஒவ்வொருவரும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற் சேர்ந்து தங்கள் சமயத்தைப் பரிபாலித்துவருதல் வேண்டுமென்று பெருமுயற்சி செய்து கொண்டிருக்கிறார். சுபம்.

## ஸ்ரீ கற்பக விநாயகராலய வியாச்சியத்தில் ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பு.

## IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS.

ORDINARY ORIGINAL CIVIL JURISDICTION.

Tuesday, the 13th day of September 1910.

THE HONOURABLE Mr. JUSTICE WALLIS.

No. 293 of 1909.

Between

1. I. Authimoola Mudaliar
2. A. C. Shunmuga Mudaliar

} ......Plaintiffs.

and

1. E. Vinayagasundaram by his mother and Guardian Ambhakannu Ammall.
2. Velu Pillai

} ......Defendants.

Claim for a declaration that the 1st plaintiff as Secretary of the Chennai Sivanadiar Thirukoottam is the Dharmakartha of Karpaga Vinayagar Temple in the plaint herein mentioned; and the defendants have no manner of right to the said temple; for delivery of

possession of the said temple and its properties described in the plaint schedules herein; in the alternative for a suitable scheme of management of the said temple, and for costs.

This suit coming on this day on reference in the presence of Mr. C. P. Ramaswami Aiyar, Vakil for the Plaintiffs and of Mr. C. Venkatasubbaramiah, Vakil for T. Velu Pillai, the 2nd defendant herein and E. Vinayagasundaram, the 1st defendant herein, not appearing in person or by pleader, and upon reading the orders made herein and respectively dated the 30th day of March 1910 and 17th day of August 1910, the draft scheme of the plaintiffs filed on the 17th day of August 1910 and the objections of the 2nd defendant to the said scheme filed herein on the 30th day of August 1910, this Court being of opinion that it will be better to place both the appointments in the hands of the Devasthanam Committee who will no doubt pay due regard to the wishes of prominent worshippers such as the members of the society and that the society should pay a monthly rent of annas eight (as. 8.) to the temple for the premises it is permitted to occupy and that the paragraphs 5 and 6 of the said report be expunged, It is ordered and decreed as follows:—

1. That the said scheme for the management of the temple of Karpaga Vinayagar in the plaint herein mentioned as varied as aforesaid, be confirmed;

2. That the management of the said temple be vested in two trustees;

3. That the said two trustees shall be nominated by the Madras Devasthanam Committee as and when vacancies arise;

4. That the said trustees thus nominated shall hold office for five years; but shall on the expiry of the said period be eligible for re-nomination;



5. That the whole of premises No 1, Mulla Sahib Lane known as "The Chennai Sivanadiar Thirukootta Sabha Mantapam" shall be declared to be the property of the said temple, but the Chennai Sivanadiar Thirukoottam shall be entitled to occupy the same so long as it is in existence on payment of monthly rent of annas eight (as 8) to the said temple for the first floor of the said premises;

6 That the Jewels and other properties of the said temple and the title deeds of the said temple shall be in the joint custody of the said two trustees;

7. That an account of receipts and expenses and a list of the temple properties moveable and immoveable shall be kept by the said trustees, and that an annual statement of accounts and report of the management of the said temple shall be printed and published in an English and Tamil newspaper and circulated in Madras and a copy shall be sent to the Madras Devasthanam Committee every year before the 30th April;

8. That the Archakas and servants of the said temple shall be appointed by and be under the control of the said trustees;

9. That all licenses shall be obtained in the Joint names of the said two trustees;

10. That any worshipper sball be entitled to inspection of the account books of the said temple on giving two days' notice;

11. That the said trustees shall be at liberty to apply to this Court for modification of this scheme and for directions in carrying out of this scheme;

12. That the costs of all parties of this suit when taxed and noted in the margin here of shall be paid from and out of the estate of the said temple.

(Sd) C. SIDNEY SMITH,
10—10—10. Ag Dy. Registrar.

ஆதிமூல முதலியார் திருக்கூட்டத்துச் சகிதமாகச் சென்று சிவாலய வழிபாடாதிகள் செய்த தலங்களும் தினங்களும் :—

| தலம். | தமிழ் தேதி. | | இங்கிலீஷ் தேதி. |
|---|---|---|---|
| | விளம்பி௵ | | |
| திருவொற்றியூர் | மார்கழி | 11-12 | (24, 25-12-98) |
| திருமுல்லைவாயில் | தை | 17 | (29-1-99) |
| திருவலிதாயம் | மாசி | 23 | (5-3-99) |
| திருவூறல் | பங்குனி | 19 | (31-8-99) |
| | விகாரி௵ | | |
| திருக்கழுக்குன்றம் | சித்திரை | 11-12 | (22, 23-4-99) |
| திருவிற்கோலம் | வைகாசி | 15,16 | (27, 28-5-99) |
| திருமாற்பேறு | ஆனி | 11,12 | (24, 25-6-99) |
| திருவேற்காடு | ஆடி | 15,16 | (29, 30-7-99) |
| செங்கற்பட்டு ஸ்ரீ ஏகாம்பர நாதர் திருக்கோயில் | ஆவணி | 12 | (26-8-99) |
| திரு இடைச்சுரம் | ” | 13 | (27-8-99) |
| திருக்கள்ளில் | புரட்டாசி | 3 | (17-9-99) |
| திரு அச்சிறுபாக்கம் | ஐப்பசி | 6,7 | (21, 22-10-99) |
| திருக்கச்சூ ராலக்கோயில் | கார்த்திகை | 11,12 | (25, 26-11-99) |
| புதுவை ஸ்ரீ வேதகிரீசுவரர் திருக்கோயில் | மார்கழி | 10 | (24-12-99) |
| திரு அரசிலி | ” | 11 | (25-12-99) |
| திரு இரும்பை மாகாளம் | ” | 11 | (25-12-99) |
| திருவக்கரை | ” | 12 | (26-12-99) |
| மைலம் | ” | 12 | ” |
| திருப்பாசூர் | தை | 15,16 | (27, 28-1-00) |
| திருமாகறல் | மாசி | 8 | (18-2-00) |
| திருவெண்பாக்கம் | பங்குனி | 6 | (18-3-00) |
| | சார்வரி௵ | | |
| திருக்காமக்கோட்டம் | சித்திரை | 1 | (13-4-00) |
| திருஓணகாந்தன்றளி | ” | 2 | (14-4-00) |
| திருவேகம்பம் | ” | 2 | ” |
| திருக்கச்சியனேகதங்காவதம் | ” | 2 | ” |
| திருக்கச்சபேசுரம் | ” | 3 | (15-4-00) |
| குமரகோட்டம் | ” | 3 | ” |



| தலம். | தமிழ் தேதி. | | இங்கிலீஷ் தேதி. |
|---|---|---|---|
| திருக்கச்சிநெறி காரைக்காடு | சித்திரை | 4 | (16-4-00) |
| திருமேற்றளி | ” | 4 | ” |
| திருக்கச்சிமயானம் | ” | 4 | ” |
| ஸ்ரீ கைலாய நாதர் திருக்கோயில் (காஞ்சி) | ” | 4 | ” |
| திரு இலம்பையங் கோட்டூர் | ” | 31 | (13-5-00) |
| திருவாலங்காடு | ஆனி | 4 | (17-6-00) |
| திருவல்லம் | ஆடி | 1 | (15-7-00) |
| திருக்காளத்தி | ” | 29 | (12-8-00) |
| திருவான்மியூர் | ஆவணி | 24,25 | (8, 9-9-00) |
| திருமயிலை | கார்த்திகை | 4 | (18-11-00) |
| திருவோத்தூர் | மார்கழி | 10 | (24-12-00) |
| திருக்குரங்கணின்முட்டம் | ” | 11 | (25-12-00) |
| திருவன்பார்த்தான் பனங்காட்டூர் | ” | 11 | (25-12-00) |
| திரு அகத்தீச்சுரம்(கொண்ணூர்) | மாசி | 12,13 | (23, 24-2-01) |
| திரு அறையணி நல்லூர் | பங்குனி | 24 | (5-4-01) |
| திருக்கோவல் வீரட்டம் | ” | ” | ” |
| திரு அண்ணாமலை | ” | 24,25 | (5, 6-4-01) |
| திருவிரிஞ்சிபுரம் | ” | 26 | (7-4-01) |
| | பிலவ௵ | | |
| திரு நாகேச்சுரம் | வைகாசி | 13 | (26-5-01) |
| குன்றத்தூர் | ” | ” | ” |
| நத்தம் | ” | ” | ” |
| கோவூர் | ” | ” | ” |
| திருநின்றவூர் | ஆனி | 9,10 | (22, 23-6-01) |
| திருமழிசை | ஆடி | 6,7 | (20, 21-7-01) |
| பொன்னேரி | ஆவணி | 16 | (1-9-01) |
| திருப்பாலைவனம் | ” | 17 | (2-9-01) |
| மல்லிகேச்சுரம் (திருமயிலை) | ஐப்பசி | 11 | (27-10-01) |
| சிதம்பரம் | மார்கழி | 11,12 | (25, 26-12-01) |
| திருவேட்களம் | ” | 11 | (25-12-01) |
| திருக்கழிப்பாலை | ” | ” | ” |
| திருநெல்வாயில் (சிவபுரி) | ” | ” | ” |
| சீகாழி | ” | 13 | (27-12-01) |
| திருக்கோலக்கா | ” | ” | ” |
| புள்ளிருக்குவேளூர் | ” | ” | ” |

| தலம். | தமிழ்த் தேதி. | இங்கிலீஷ்த்தேதி. |
|---|---|---|
| திருமயிலாடுதுறை | மார்கழி 14 | (28-12-01) |
| திருவாரூர் | ,, ,, | ,, |
| திருவாரூர் அரநெறி | ,, ,, | ,, |
| திருப்பாதிரிப்புலியூர் | ,, 15 | (29-12-01) |
| திருவதிகை வீரட்டானம் | ,, 15,16 | (29, 30-12-01) |
| திருப்போரூர் | பங்குனி 15 | (28-3-02) |

சுபகிருது௵

| தலம். | தமிழ்த் தேதி. | இங்கிலீஷ்த்தேதி. |
|---|---|---|
| காரணீச்சுரம் (சைதாப்பேட்) | சித்திரை 7,8 | (19, 20-4-02) |
| குளத்தூர் | வைகாசி 19 | (1-6-02) |
| ஆண்டார் குப்பம் | ஆடி 5 | (20-7-02) |
| மாடம்பாக்கம் | புரட்டாசி 6 | (21-9-02) |
| அபிமுத்தேச்சரம் | மார்கழி 11 | (25-12-02) |
| குடந்தைக்காரோணம் | ,, ,, | ,, |
| குடந்தைக்கீழ்க்கோட்டம் | ,, ,, | ,, |
| வியாழச்சுவாமிநாதர் திருக்கோயில் | ,, | ,, |
| திருக்குடமூக்கு (கும்பகோணம்) | ,, 11,12 | (25, 26-12-02) |
| கொட்டையூர் | ,, 11 | (25-12-02) |
| திருவேரகம் | ,, ,, | ,, |
| திருவலஞ்சுழி | ,, 12 | (26-12-02) |
| திருச்சத்திமுற்றம் | ,, ,, | ,, |
| திருப்பட்டீச்சுரம் | ,, ,, | ,, |
| முழையூர் | ,, ,, | ,, |
| திருவடதளி | ,, ,, | ,, |
| திருவிடை மருதூர் | ,, 13 | (27-12-02) |
| திருபுவனம் | ,, ,, | ,, |
| திருவையாறு | ,, 13,14 | (27, 28-12-02) |
| திருப்பழனம் | ,, 14 | (28-12-02) |
| திங்களூர் | ,, ,, | ,, |
| திருநெய்த்தானம் | ,, ,, | ,, |
| திருக்கண்டியூர் | ,, ,, | ,, |
| தஞ்சைராஜராஜேசுவரம் | ,, ,, | ,, |
| காஞ்சிபுரம் | பங்குனி 28 | (10-4-03) |

சோபகிருது௵

| தலம். | தமிழ்த் தேதி. | இங்கிலீஷ்த்தேதி. |
|---|---|---|
| திருமயிலை | சித்திரை 24 | (6-5-03) |
| திருவேற்காடு | ,, 27 | (9-5-03) |
| சோழம்பேடு | வைகாசி 24 | (6-6-03) |



| தலம். | தமிழ்த் தேதி. | இங்கிலீஷ்தேதி. |
|---|---|---|
| திருமுல்லைவாயில் மேலூர், திருவொற்றியூர் | வைகாசி 25 | (7-1-03) |
| திருமுல்லைவாயில் | ஆனி 12 | (26-6-03) |
| திருத்தணிகை | ஆடி 25 | (9-8-03) |
| திருவேட்டீச்சுரம் | ஐப்பசி 2 | (18-10-03) |
| கோயம்பேடு | மார்கழி 12 | (27-12-03) |
| ஞாயிறு | தை 25 | (7-2-04) |
| திருவாரூர் | பங்குனி 19,20 | ((31-3-04, 1-4-04) |
| அரநெறி | ,, ,, | ,, |
| பரவையுண்மண்டளி | ,, ,, | ,, |
| திருநாகைக்காரோணம் | ,, 20 | (1-4-04) |
| திருக்கீழ்வேளூர் | ,, 21 | (2-4-04) |
| திருமறைக்காடு (வேதாரணியம்) | ,, 22 | (3-4-04) |
| திரு அகத்தியான்பள்ளி | ,, ,, | ,, |
| திருப்பெருந்துறை | ,, 23 | (4-4-04) |
| திருநெல்லிக்கா திருக்கொள்ளிக்காடு திருத்தெங்கூர் திருநாட்டியத்தான்குடி சிதம்பரம் | ,, 24, 25, 26 | (5, 6, 7-4-04) |

குரோதி௵

| தலம். | தமிழ்த் தேதி. | இங்கிலீஷ்தேதி. |
|---|---|---|
| திருவலிதாயம் | வைகாசி 24 | (3-6-04) |
| வடதிருமுல்லைவாயில் | ஆடி 17 | (31-7.04) |
| திருநாகேச்சுரம் | புரட்டாசி ,, | (25-9-04) |
| குன்றத்தூர் | ,, ,, | ,, |
| திருக்கழுக்குன்றம் | மார்கழி 11 | (25-12-04) |
| திருக்காளத்தி | மாசி 21,22 | (4, 5-3-05) |

விசுவாவசு

| தலம். | தமிழ்த் தேதி. | இங்கிலீஷ்தேதி. |
|---|---|---|
| சைதாப்பேட்டை | சித்திரை 2 | (14-4-05) |
| திருவேற்காடு | ,, 6 | (18-4-05) |
| திருவச்சிறுபாக்கம் திரு இடைச்சுரம் திருக்கச்சூராலக்கோயில் செங்கல்பட்டு வேதகிரீச்சுரம் | ,, 9,10,11 | (21, 22, 23-4-05) |
| திரு முருகன்பூண்டி | ஆடி 13 | (28-7-05 |

162419

| தலம். | தமிழ் தேதி. | இங்கிலீஷ்தேதி. |
|---|---|---|
| அவிநாசி | ஆடி 18 | ,, |
| திருப்பாண்டிக்கொடுமுடி | ,, 14 | (29-7-05) |
| திருநணா | ,, ,, | ,, |
| திருச்செங்கோடு | ,, 15 | (30-7-05) |
| சேலம் | ,, 16 | (31-7-05) |

இதன் பின் ஆதிமூல முதலியார் கல்கத்தாவில் சில காலம் வசித்திருந்தார்.

| தலம். | தமிழ் தேதி. | இங்கிலீஷ்தேதி. |
|---|---|---|
| | கீலக௵ | |
| திருவிற்கோலம் | தை 26 | (7-2-09) |
| திரு இலம்பையங்கோட்டூர் | ,, ,, | ,, |
| | சௌமிய௵ | |
| திருமயிலை கபாலீச்சுரம்<br>,, தீர்த்தபாலீச்சுரம்<br>,, காரணீச்சுரம்<br>,, மல்லிகேச்சுரம்<br>,, வாலீச்சுரம்<br>,, வெள்ளீச்சுரம்<br>,, விருபாட்சீச்சரம் | சித்திரை 5,6 | (17, 18-4-09) |
| திருவலிதாயம் | சித்திரை 19 | (1-5-09) |
| திருவேற்காடு | சித்திரை 21 | (3.5 09) |
| திருப்பாசூர் | ஆனி 14 | (27-9-09) |
| குன்றத்தூர் | ,, 20 | (3-7-09) |
| நத்தம் | ,, 21 | (4-7-09) |
| திருநாகேச்சுரம் | ,, 21 | ,, |
| திருமயிலை | ஆவணி 13 | (28-8-09) |
| திருவொற்றியூர் | புரட்டாசி 11 | (26-9-09 |
| திருவருகத்துறை | ஐப்பசி 22 | (7-11-09) |
| திருவாலங்காடு | மார்கழி 12,13 | (26, 27-12-09) |
| | சாதாரண௵ | |
| திரு இடைச்சுரம் | ஆவணி 5 | (21-8-10) |
| திருத்தணிகை | தை 25 | (7-2-11) |
| | விரோதிகிருது௵ | |
| சிதம்பரம் | சித்திரை 20 | (2-5-11) |